மதுரை மாவட்டம்

சோமலெ

மதுரை மாவட்டம்

சோமலெ

வெளியிடுவோர் :
கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்

வெளியீட்டுப் பகுதி

குருகுல வெளியீட்டு எண் : 14

நூலின் பெயர்	:	மதுரை மாவட்டம்
ஆசிரியர்	:	சோமலெ
பொருள்	:	மாவட்ட வரலாறும் விளக்கமும்
வெளியிட்டோர்	:	கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், வெளியீட்டுப்பகுதி
அச்சிட்டோர்	:	குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம்.
பதிப்பு:	:	முதற்பதிப்பு டிசம்பர் 1980
பிரதிகள்	:	2000
விலை	:	ரூ. 25

Gurukulam Publication No: 14

TITLE	:	**Madurai Maavattam**
Author	:	**Somalay**
Subject	:	An Encyclopaedia of Madurai District.
Publishers	:	K. G. K. G. Publication Division
Printers	:	Gurukulam Printers, Vedaraniam
Edition	:	First, December 1980
Copies	:	2000
Price	:	Rs. 25

நூலகக் குறிப்பு எண்

U. 44134 N 6
K O
915. 482
L. 234 m

பொருளடக்கம்

பக்கம்		எண்.
1.	தோற்றுவாய்	1
2.	வரலாறு	19
3.	வாழும் மக்கள்	35
4.	வேளாண்மை	106
5.	போக்குவரத்து	119
6.	வாணிகம்	130
7.	தொழில் வளர்ச்சி	135
8.	தமிழ்ப் பணி	142
9.	இதழ்கள்	164
10	திரைப் படங்கள்	167
11	மருத்துவம்	169
12.	விடுதலைப் போர்	176
13.	கல்வி நிலை	186
14.	மதுரை மாநகர்	223
15.	பிற ஊர்களைப்பற்றிய விவரங்கள்	249

பதிப்புரை

தமிழகத்தில் உலகநாடுகளைப் பார்த்து பிரயாண நூல்கள் எழுதுவதில் வல்லவர்களாகத் திகழ்கின்றவர்கள் இருவர். ஒருவர் உலகம் சுற்றும் தமிழன் திரு. ஏ. கே. செட்டியார். மற்றவர் நம் நூலாசிரியர் திரு. சோமலெ அவர்கள்.

திரு. சோமலெ அவர்கள் உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று பரந்த அனுபவ அறிவு பெற்றவர். அவருடைய நுணுக்கமான அறிவு நமக்கு எந்த பிராந்தியத்தைப் பற்றிச் செய்திகள் வேண்டு மானாலும் அவற்றை ஒரு கலைக் களஞ்சியம் போல் தரக்கூடியது. நாம் தினமும் செல்லும் போது நம் கண்ணிற்குப் புலப்படாதவை அவர் கண்ணுக்கு புலப்படும். இத்தகைய சிறப்புக் குணங்கள்தான் அவர்களை நமக்கு சிறப்பித்துக் காட்டுகின்றது.

குருகுலத்தந்தை அவர்கள் காலத்திலேயே வேதாரண்யம் வந்து தங்கி தஞ்சை மாவட்டத்தைப்பற்றி நூல் வெளியிட வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள். நாம் உலகநாடுகளைப் பற்றி பெற்றிருக்கும் அளவு அறிவு நமது சொந்த ஊரைப்பற்றி, நமது சொந்த மாவட்டத்தைப்பற்றி, ஏன் நமது தமிழகத்தைப் பற்றியே கூட ஒன்றும் அறிந்திருப்பதில்லை. இதையே ஒரு எழுத்தாளன் எடுத்துக்காட்டும் போது நம் அருகில் இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த இடங்கள் இருக்கின்றனவா என்று எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய முயற்சியில்தான் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தைப்பற்றியும் பல நூல்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் தஞ்சை மாவட்டம் பற்றியும் ஒன்று.

இப் போது மதுரை மாவட்டம் பற்றி நன்கு ஆராய்ந்து நேற்று வரையுள்ள பல செய்திகளையும் சேகரித்து ஒரு அழகிய நூலாக ஆக்கித்தந்திருக்கின்றார்கள். உலகத் தமிழ் மகாநாடு மதுரையில்

நடக்கவிருக்கும் இந்த நேரத்தில் மதுரை மாவட்டம் பற்றிய இந்த நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானது. மதுரை மாவட்டத்தைப் பற்றி அங்கு கூடும் பெரியவர்கள் பூரணமாக அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும். நாட்டு நலன்கள் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் பலருக்கும் ஒரு பயனுள்ள நூலாகும் இது.

திரு. சோமலெ அவர்கள் நாங்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் நமது குருகுலத்தின்பால் அன்புகொண்டு இந்நூலை குருகுல வெளியீடாகவே கொண்டுவர அன்புடன் இசைந்தார்கள். குருகுலத்தின்பால் அன்புகொண்டு குருகுலத்தந்தையின் வரலாற்றைத் தொகுக்கும் பணியைச் செய்து முடித்திருக்கின்றார்கள். அந்நூலும் விரைவில் வெளிவர இருக்கிறது. அவர்களுக்கு நாம் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம்.

எப்போதும் போல் நமது குருகுல அச்சகப்பள்ளி பெண்கள் குருகுல வெளியீடுகளை மிகவும் சிரத்தையுடன் அச்சிட்டுக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கும் எங்களது உளம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலை அன்பர்கள் ஆதரித்து குருகுலப் பணியை மேலும் சிறக்க உதவ வேண்டிக் கொள்கிறேன். குருகுலம் ஒரு அறக்கட்டளை. இதன் தொண்டுகள் பொது நல நோக்கமுடையன. ஆகையால் நூலின் விலையை நிர்ணயிப்பதிலும்கூட பொது நோக்கைக் கொண்டே நமது இயல்பான போக்கில் நிதானமாகவே வைத்திருக்கிறோம். இத்தகைய பிரயாண நூல் எழுதுவதில் அதிக செலவும் உழைப்பும் தேவைப்படும். இருப்பினும் ஒரு தொண்டு உள்ளத்துடன் நடக்கும் நிறுவனமாகையால் அந்த கொள்கைப்பிடிப்பின்படியே நூல்கள் வெளியீட்டையும் செய்து வருவதை அன்பர்கள் உணர்ந்து தங்கள் ஆதரவைக் கொடுப்பார்கள் என்று பெரிதும் நம்புகிறேன்.

வேதாரண்யம்,
2—12—1980

வே. அப்பாக்குட்டி,
மானேஜிங் டிரஸ்டி,
கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்.

முன்னுரை

வாசகர்கள் பல்லாண்டுகளாக ஆவலுடன் எதிர் பார்த்த ''மதுரை மாவட்டம்'' இப்போது வெளிவருகிறது. ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலம் நான் கண்டும் கேட்டும் படித்தும் திரட்டிய குறிப்புகளின் தொகுப்பே இது.

இந்த நூலை ஆர்வமுடன் அச்சிட்டுத் தந்த குருகுலம் அச்சகத்தார்க்கும் விலை ஏற்றம், தாள் கிடையாமை ஆகிய சிக்கல்களைப் பொருட்படுத்தாமல் இவ்வளவு பெரிய நூலை வெளியிட முன்வந்த குருகுலத் தாருக்கும் என் நன்றி உரியது. தரமான நூல்களை, பயனுள்ள நூல்களை வெளியிட வேண்டும் என்பது திரு அப்பாக்குட்டி அவர்களுடைய விருப்பம். அவ்விருப்பம் மேன்மேலும் இனிது நிறைவேறுவதாக.

நூலை உருவாக்குங்கால், தகவல் தந்தும் செய்தி களைச் சரிபார்த்தும் எழுதியுதவியும் எனக்குத் துணை செய்த அன்பர்கள் அனைவர்க்கும் வணக்கம்.

சாஸ்திரி நகர் அஞ்சலகக் கட்டிடம்,
அடையாறு, சென்னை 600 020
தொலைபேசி: 413701
1—12—1980

சோமலெ.

மதுரை மாவட்டம்

1
தோற்றுவாய்

உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க – உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்.

– பரிபாடல் 6.

தமிழ்மொழி
தமிழர் நாகரிகம்
தமிழ்ப் பண்பு

– இவற்றின் நிலைக்களம் மதுரை.

மேலைநாட்டு நாகரிகத்தில் ஏதென்ஸ், கான்ஸ்டான்டி-நோபிள் போன்று தமிழர் நாகரிகத்தின் தாயகமாக இருந்து வருவது மதுரை மாநகர்,

இந்நகர் மிக்க தொன்மைச் சிறப்புடையது; தமிழோடு தொடர்புபடுத்திப் புகழப்பெறுகிறது.

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

– சிறுபாண். 66–67

மதுரை நகர அமைப்பு மிகவும் கவர்ச்சியுடையதாகும். கோயில் நடுநாயகமாக அமைய, நான்கு நான்கு வீதிகளாக முறையே ஆடிவீதி, சித்திரை வீதி, ஆவணிமூல வீதி, மாசி வீதி, வெளிவீதி போல்வன சதுரப்பட உள்ளன. இவ்வமைப்பு ஈராயிரம் ஆண்டுப் பழமையுடையதாகத் தெரிகின்றது. பரிபாடலில் ஆலவாய் அண்ணல் கோயில் தாமரைப் பொகுட்டாகவும் சுற்றியுள்ள தெருக்கள் தாமரை இதழ்களாகவும் உருவகம் செய்யப்பட்டிருப்பதிலிருந்து அந்நாளில் இந்நகர அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை உணரலாம்.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீருர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்;
தாதுண், பறவை அனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதுஎம் பேருர் துயிலே".

– பரிபாடல் 7.

இலண்டனிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபே என்னும் திருமடத்துக் கோயிலுடன் இங்கிலாந்தின் வரலாறு இணைந்து இருக்கிறது. பாரிஸ் மாநகரிலுள்ள நாட்ரிடாம் தேவாலயத்துடன் பிணைந்தது பிரெஞ்சு நாட்டு வரலாறு. உரோமாபுரியிலுள்ள தூய பீட்டர் பேராலயத்தை* ஒதுக்கிவிட்டு அந்நாட்டு வரலாறு, கலை, சிற்பம் எவற்றையும் எண்ணுவதற்கில்லை. தமிழ்நாட்டில்

*தேவாலயம் – சர்ச்சு. பேராலயம் – கதீட்ரல் (பாடல்பெற்ற கோயில் போன்றது.) அபே – தருமபுரம் அல்லது காஞ்சி காமகோடிபீடத்து மடத்திற்குள் உள்ள கோயில் போன்றது.

இத்தகு சிறப்புகளுடையது மீனாட்சியம்மன் கோயில். இந்த ஆலயம் நம்மையறியாமலே நமக்கு ஒரு பெருமித உணர்வை ஊட்டுகிறது.

இம்மாவட்டத்தின் எண்ணற்ற பெருமைகளையும் ஏனைத் தனித்தன்மைகளையும் இம் முதற் கட்டுரையில் சுட்டுவோம்.

இயற்கை அமைப்பு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தைப் பழந்தமிழர் ஐவகைப்படுத்தினர். நெய்தலும் பாலையும் இம் மாவட்டத்தில் கிடையாது. உள்நாட்டிற்குள் இருப்பதால் மதுரை மாவட்டத்திற்குக் கடற்கரை, காயல், தீவு, தருவை என்பன இல்லை. தேரி முதலிய மணற்பாங்கான பகுதிகளையும் மணல்மேடுகளையும் பாலைவனங்களையும் இம்மாவட்டத்தில் காண இயலாது. இங்கே இருக்கும் மணல் மேடெல்லாம் வைகை கொண்டுவந்து சேர்த்திருக்கும் மணற்பரப்பே. அதுவுங்கூட அதன் வெள்ளத்தோடு வெள்ளமாய் இராமநாதபுர மாவட்டத்திற்குச் சென்றுவிடுகின்றது.

குறிஞ்சி

இம்மாவட்டம் மலைத்தொடர்கள் பலவற்றை உடையது. குறிஞ்சி வளத்துக்குச் சான்றாகத் தமிழ்நாட்டில் கொங்குநாடு விளங்கிய போதிலும் மதுரை மாவட்டத்திலும் கோக்கோ, ஏலக்காய், வாழைப்பழம் முதலியன விளைந்து வருவாய் வளம் நிறைந்ததும் சமயத் தொடர்பாலும் கலைச்செல்வத்தாலும் வரலாற்றுப் புகழ் நிறைந்ததுமான மலைகளும் இவற்றைச் சார்ந்த செல்வம் செழிக்கும் காடுகளும் உள்ளன. உலகம் முழுவதும் அடர்ந்த மரங்களாக இருந்த காலத்தில் இந்தக் காடுகளில் மனிதனும் விலங்கோடு விலங்காக அலைந்து திரிந்தான் என்பதற்கு அடையாளமாக மதுரை மாவட்டத்தில் மலைகளும் மலைப்பகுதிகளும் ஊர்களும் பெயர்பெற்றுள்ளன.

யானைமலை*
பசுமலை (காளைமலை என்றும் கூறுவர்)

---

*கோவை மாவட்டம் பொள்ளாச்சிப் பகுதியில் இருப்பது ஆனைமலை; மதுரை மாவட்டத்தில் இருப்பது யானைமலை.

நாகமலை
சிம்மக்கல்*
கரடிப்பட்டி
துவரிமான்
சிலைமான்
எலியார்பத்தி } திருப்பரங்குன்றம் ஒன்றியம்
ஆனையூர் (மதுரை மேற்கு ஒன்றியம்)
புலிப்பட்டி (கொட்டாம்பட்டி ஒன்றியம்)
பன்றிக்குண்டு
கரடிக்கல் } திருமங்கலம் ஒன்றியம்
திண்டுக்கல்

முதிரைமலை என வழங்கும் பகுதியின் பழைய பெயர் குதிரைமலை என்பர்.

யானைமலையின் தொடர்ச்சியாகப் பல சிறு மலைகள் உண்டு. அவற்றில் ஒன்று மாங்குளம் என்னும் ஊரைச் சேர்ந்த கழுகுமலை. செங்குத்தான மலைச்சரிவில் மிகப் பழமையானதொரு தமிழ்க் கல்வெட்டு இருக்கிறது. தமிழ்நாட்டின் கல்வெட்டுச் செல்வமாகப் பேணவேண்டிய பகுதி இது.

அழகர்கோயில் என்னும் ஊரை அடிவாரமாகக் கொண்ட அழகர்மலை மதுரை மாவட்டத்தின் புகழ்மிக்க குறிஞ்சிப் பகுதிகளில் ஒன்று.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள பகுதியில் பெரும்பிரிவு பழனிமலை என்பதாகும். இது மேல் பழனிமலை, கீழ்ப் பழனிமலை என இரு பிரிவுகளை உடையது.

மேல் பழனிமலை 6,000 அடி முதல் 8,000 அடிவரை உளது. இதன் உயர்ந்தசிகரம் வெம்பாடிச்சோலை (ஷோலா) இளமரக்காடு மலை என்னும் பெயர்பெற்றது. 8,218 அடி உயரமானது, கேரள எல்லையில் உள்ளது. இம்மலையின் உயரம் 8,221 அடி என்றும் சொல்லுவர். இதைச் சார்ந்தது கோடைக்கானல். எண்ணற்ற இயற்கைக் காட்சிகளும் பூத்துக் குலுங்கும் புதுமலர்களும்

* இது மதுரை நகரில் ஓர் இடத்தின் பெயர்; இவ்வாறே யானைக்கல் என்னும் பெயருடைய பகுதியும் உளது.

இன்னிசை பாடும் அருவிகளும் சேர்ந்து புன்னகை புரிவது கோடைக்கானல் மலை. இது ஈடும் எடுப்பும் இன்றிப் பெருமிதத்தோடு நிமிர்ந்து நிற்கிறது. வரலாற்றுச் சிறப்பும் சங்க இலக்கியத் தொடர்பும் உடைய இந்த மலை முன்னாளில் பகைவரைக் கண்டு அஞ்சியவர்க்குப் புகலிடமாய்த் திகழ்ந்தது. இந்நாளில்பூந்தென்றலால் சாமரம்வீசி முதுவேனிலில் ஞாயிற்றின் வெம்மைக்கு அஞ்சினோர் புகலிடமாய், அவர்தம் உள்ளங்களில் களிப்பூட்டும் கவின் நகரமாய், அவர்களுடைய உடற்சோர்வை நீக்கும் வேனில் விடுதியாய், இன்பப் பொழுதுபோக்க விழைபவர் களின் அழகு நகராய் ஏற்றம் பெற்றிருக்கிறது. இதற்கு ஏற்ப, கோடை விழா அரசின் ஆதரவில் கொண்டாடப்படுகிறது.

பழனிமலை, பழனித் தலத்தால் தமிழ்நாட்டிலும் கேரளத் திலும் நன்கு தெரிந்த பெயராக இருந்து வருகிறது. இங்கு போகர் என்ற ஓர் இராஜ ரிஷி வாழ்ந்ததாக ஐதீகம். மருத்துவம் தூதுக்கலை, இராஜதந்திரம் ஐக்கியநாடுகள்அவை ஆகியவற்றைப் பற்றி எல்லாம் அவர் அறிந்திருந்தார் என்றும், கணிதநூல் வல்லோராய் விளங்கினார் என்றும் இந்நூற்றாண்டின் தொடக்கத் தில் புகழுடன் திகழ்ந்த கணிதமேதை இராமானுஜம் போன்று எண்கள் அல்லது இலக்கங்களில் பெருத்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்றும் கூறுவர். ஐரோப்பிய இனத்தின் முன்னோர் இவரே என்றும், தண்டாயுதபாணிக்குப் பழனிமலையில் கோயில் படைத்தவர் இவரே என்றும் பல நாடுகளுடன் தொடர்புடைய தக்கார் இந்நூலாசிரியரிடம் கூறியுள்ளனர்.

கீழ்ப் பழனிமலை என்பது 3,000 அடி முதல் 5,000 அடி வரை உயரமானது. இதில் தாண்டிக்குடி மலை, விருபாட்சி மலை, வருஷநாட்டு மலை போன்ற மலைகள் உள்ளன. இவைபற்றி வட்டவாரியாக இந்நூலின் பிற்பகுதியில் விவரமாகக் கூறுவோம்.

மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் ஏற்கெனவே நாம் குறிப்பிட்ட அழகர்மலை தவிர நத்தம் மலை, கரந்த மலை, சிறுமலை முதலியன உள்ளன. நத்தம் மலையின் தொடர்ச்சியே பறம்பு மலை. இது இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது.

கொட்டாம்பட்டிக்கும் மேலூருக்கும் இடையே கருங்காலக்குடிப் பகுதியில் அமைந்த மலைகளின் கற்கள், கோயில் கட்டவும் விக்கிரக வேலைப்பாட்டுக்கும் ஏற்றவை.

வனப்பும் எழிலும் நிறைந்த சிறுமலை இன்று வாழைப் பழத்தால் புகழ்பெற்று கோடைநாளில் ஒரு குடையாக இருக்கிறது. 'தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்' என்று மதுரைக்குச் செல்லும் வழிக்குறிப்பில் சிறுமலையைச் சிலப்பதிகாரம் சிறப்பிக்கிறது.

சுருளிமலை என்னும் வளமான மலையும் மதுரை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது.

பண்டாரத் துறையோரம்
பருமரத்துக் காட்டோரம்
நிக்கிறாராம் சுருளியாண்டி
நீலமுழி வாடாமே
மலையை மலைபொருதி
மண்டபத்தை யுண்டுபண்ணி
சிலையா முளைச்சாராம்
செல்வமுள்ள சுருளியாண்டி
பச்சை வனத்தழகும்
பண்டாரத் துறையழகும்
மேல்மெத்தைக் குகையழகும்
மேலவர்கொண் டாடலாகும்
இஞ்சி படருமலை
ஏலக்காய் காய்க்குமலை
மஞ்சி படருமலை
மகத்தான சுருளிமலை

சுருளி சுப்பிரமணியசுவாமி கோயிலில் மேலேயிருந்து கோயிலுக்குள்ளே விழும் நீர்த்துளிகள் உண்டு பண்ணும் 'Stallamite & Stallatite' வழியில் கிடக்கும் இலைகளும் தழைகளும் கல்லாக மாறியுள்ளன.

முல்லை

முல்லை நிலத்துக்கு மேற்கோளாக மதுரை மாவட்டத்தில் கோடைக்கானல் பழனி முதலிய வட்டங்களில் வளமான வனங்கள் உள்ளன. அமெரிக்க டாலர் முதலிய வெளிநாட்டு நாணயங்களை ஈட்டித்தரும் காடுகள் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் மட்டும் உள.

தோல் தொழிலில் பயன்படும் வாட்டில் பட்டை 1883-இல் பழனிமலைக் காடுகளில் பூம்பாறையில் முதல் தடவையாகப் பயிரிடப்பட்டது. மிகப் பெரிய அளவில் இது இப்போது

கோடைக்கானல்மலை எங்கும் பயிரிடப்படுகிறது. கம்பம் பள்ளத்தாக்கு வண்ணாத்திப் பாறையில் இந்தியாவிலேயே பெரிய அரக்குப்பண்ணை உள்ளது. குங்கிலியம், பூவம், இலந்தைச் செடிகளைக் கொண்டு அரக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்துக் தேன்கனிகோட்டையிலிருந்த அரக்குத் தொழிற்சாலை இங்கு மாற்றப்பட்டிருக்கிறது.

2,000 அடி முதல் 5,000 அடி வரையுள்ள மலைக்காடுகளில் ஏலக்காய்த் தோட்டங்களும், தேக்கு, வேங்கை, கருமரம், அகில், தேவதாரு என்னும் மர வகைகளும் உள்ளன. கண்டமநாயக்கனூர் என்னும் முன்னாள் குறுநிலமன்னர் பகுதியும் காட்டுவளம் மிகுந்தது. காட்டுவளம் மிகுதியால் மதுரை வடக்கு,மதுரை தெற்கு என்னும் இரு மாவட்டங்களாக இங்குள்ள காடுகள் தமிழக அரசினரால் பேணப்பட்டு வருகின்றன. இவற்றில் அடங்கியுள்ள காடுகளின் சிறப்புகளை உரிய இடங்களில் கூறுவோம். காடுகளைப் பேணும் துறையில் ஒரு பயிற்சிப் பள்ளியைத் தமிழக அரசு வைகை அணை அருகே நடத்திவருகிறது. காட்டுக் காவலர் முதியவர் 90 பேரும், இளநிலைக் காவலர் 60 பேரும் ஆண்டு தோறும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

பழனி மலைத்தொடரிலும் அய்யலூர் மலையிலும் உசில், உரசு, ஒடை, சீதை மரங்கள் உள்ளன. 5,000 அடி உயரப் பகுதிகளில் வேங்கை, மாமரம், சந்தனமரம், வேம்பு, தோதகத்தி மரங்கள் உள்ளன. பெரியகுளம், விருபாட்சிப் பகுதிகளில் மூங்கில் மரங்கள் மிகுதி.

பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஆறுகள் கொண்டு வந்து சேர்க்கும் பொருள்கள் உரமாக அமைந்து 80 அடி உயரத்திற்குத் தோதகத்தி, மஞ்சக்கடம்பை, வேங்கை, மருது, வாகை, வெண்தேக்கு, தடுசு, குசும் முதலிய மரங்கள் வளர்கின்றன.

காட்டெருமை, சாம்பர் என்னும் மான் இனம், புள்ளிமான், புலி,கரடி,சிறுத்தை, வரையாடு,யானை, காட்டுநாய், முள்ளம்பன்றி, முயல், காட்டுக் கோழி, புறு, வாத்து, நீண்ட அலகுகளுடன் கூடிய சில பறவைகள் ஆகியவற்றைக் கோடைக்கானல் மலையின் உயர்ந்த பகுதிகளில் காணலாம்.

மருதம்

இம்மாவட்டம் மருதநிலமும் உடையது. மாவட்டத்தின் பெரும்பகுதி நிலவளமும் நீர்வளமும் நிறைந்தது. வளத்திலும் வருவாயிலும் விளையிலும் தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சையை விஞ்சும் பகுதிகளும் ஆங்காங்கே உள்ளன. இவ்வகையில் சோழவந்தான் பகுதி நன்செய் நிலங்களும், கம்பம் பகுதிப் புன்செய் நிலங்களும், சிலைமான் அருகே வைகைக் கரையில் வெற்றிலைக் கொடிக்கால், தென்னந்தோப்புப் பகுதிகளும், அலங்காநல்லூர்ப் பகுதியில் கரும்பு பயிராகும் பகுதிகளும், திருமங்கலம், காந்திகிராமம், அம்பத்தூர்ப் பகுதிகளில் மல்லிகைப் பூவால் ஏக்கருக்கு ஆண்டுதோறும் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் வருவாய் தரும் நிலங்களும் குறிப்பிடத்தக்கன.

ஆகாய விமானங்களில் ஏற்றுமதியாகி மதுரை மாவட்ட மலர்கள் இந்தியாவெங்கும் செல்லுகின்றன; அயல்நாடுகட்கும் செல்லுகின்றன. மலர்களைப் பயிரிடுவதில் மதுரை மண் என்றுமே சிறந்து விளங்கியிருப்பதை,

மதுரையிலே பூவாங்கி
மல்லிகைப்பூ வாசங்கட்டி
அடிச்சானும் சின்னப்பயல்
ஆற்றுமணல் தூள்பறக்க

என்னும் நாட்டுப்பாடல் உணர்த்தும்.

சமயச் சிறப்பு

சைவசமய குரவர்கள்பாடிய கோயில்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவற்றின் பெருமை நூலில் விரித்துக் கூறப்படும். முருகன் படைவீடுகள் மூன்று இம் மாவட்டத்தில் உள்ளன. பழனி (திருஆவினன்குடி), திருப்பரங்குன்றம், அழகர்கோயில் (திருமாலிருஞ்சோலை) என்னும் இவை தவிர, குறிஞ்சி ஆண்டவர் கோயில் முதலிய சுப்பிரமணியர் தலங்களும் உள்ளன. வைணவர் போற்றும் தலங்களும் இருக்கின்றன. சமணசமயத் தொடர்பும் இம் மாவட்டத்திற்கு உண்டு. சமணர் படுக்கைகளை இம் மாவட்டத்து மலைகளில் இன்றும் காணலாம். குறிப்பாக, மதுரை நகரை அடுத்த எண்பெரும் குன்றங்கள் சமணசமயத் துறவிகளின் இருப்பிடமாகவும் விளங்கின. இவை சைவ-சமண சமயங்களின் வரலாற்றில் குறிக்கவேண்டிய சிறப்புடையன. இவற்றில் சமண முனிவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. பல சமயத்தின

ருக்கும் உரிய ஆதீனங்களும் மதுரையில் இயங்குகின்றன. தமிழ் நாட்டு ஆதீனங்களில் காலத்தால் பழமையான திருஞானசம்பந்தர் ஆதீனம் மதுரையிலேயே உளது.

புகழ்பெற்ற கிறித்தவத் தேவாலயங்கள் திருமலை நாயக்கர் காலந்தொட்டுத் தோன்றியுள்ளன. வீரமாமுனிவர் எனப் பெயர் கொண்ட ராபர்ட் டி நோபிலி என்னும் இத்தாலிய நாட்டுத் துறவி கிறித்தவம் பரப்பித் தமிழ்ப் பணியும் புரிந்தது இம் மாவட்டத்தில் தான்.

குறிப்பிடத்தக்க ஓரிரு மசூதிகளும் உள்ளன. திருப்பரங் குன்றம் மலை முஸ்லிம்களும் வழிபடும் தலமாக இருக்கிறது மதுரையில் சுல்தான்களின் ஆட்சி நடந்தபோது அந்நகரின் விளிம்பில் உள்ள, அதாவது வெளிவீதிகளுக்கு அப்பாற்பட்ட பகுதி மசூதிகளுக்கு வழங்கப்பெற்றது என்பர். அதையொட்டி அங்கு வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கும் முஸ்லிம் மத அறநிறுவனங் களைப் பேணும் 'வாக்ப்' வாரியத்துக்கும் இன்றும் நூற்றுக்கணக் கான வழக்குகள் நீதிமன்றங்களில் நடந்தவண்ணமாக உள்ளன. வெளி வீதிகளுக்கு உள்ளேயும் சிறப்புப்பெற்ற மசூதிகள் உண்டு. (விவரம்: வரலாறு என்னும் கட்டுரையில் காண்க)

பழமைப் பெருமை

மதுரையிலும் வேறு சில ஊர்களிலும் தொன்மையான தமிழ் நாகரிகத்தின் சின்னங்களாகப் பல பொருள்கள் அகழ்ந் தெடுக்கப்பட்டிருக்கின்றன. கலைத்துறையிலும் இம் மாவட்டம் தமிழ்நாட்டுக்கு நிலைத்த புகழ்தருகிறது.

அமைப்புச் சிறப்பு

மதுரை மாவட்டத்தின் தலைநகரான மதுரை மாநகர், இராமநாதபுர மாவட்டத்துக்கும் தலைநகராய் இருந்துவருகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களும் சில ஆட்சித் துறைகளுக்கு மதுரையிலுள்ள அரசு அலுவலகங்களுக்குஅடங்கியே உள்ளன. எனவே, பாண்டிய நாட்டுத் தலைநகராக இருந்த மதுரை மூதூர் இன்று தென்தமிழ்நாட்டின் தலைநகராய்த் திகழ் கிறது; மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் உரிய வழக்குகளை விசாரிக்க

உயர்நீதிமன்றத்தின் கிளையை மதுரையில் நிறுவலாம் என்னும் கருத்தும் நிலவுகிறது. இந்திய அரசின் பல்வேறு அலுவலகங்களும் மதுரை மாநகரில் இயங்கி வருகின்றன. அவற்றுள் சில:

மத்திய காவல் துறை
உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை
வருமான வரித் துறை
அஞ்சல் துறை
தொலைபேசித் துறை
இரயில்வேத் துறை (கோட்ட அலுவலகம்)
தேசிய சேமிப்புத் துறை
தொழிலாளர் நலப் பாதுகாப்புத் துறை
கள்ளக்கடத்தல், வரி ஏய்ப்பு-தடுப்புத் துறை
பிரசாரத் துறை
தொழிலாளர் நலம் பேணும் துறை
திட்டக்குழுவின் மதிப்பீட்டு அலுவலகம்
தொழிலாளர் கல்வித் துறை
ஜவுளிக் கழகம்-ஆய்வு அலுவலகம்

இம் மாநகர், மாநில அரசுகளின் தலைநகராக உள்ள சண்டிகர் (பஞ்சாப்), ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்), ஷில்லாங்(அசாம்) சிம்லா (இமாசலப் பிரதேசம்), திருவனந்தபுரம் (கேரளம்), புவனேசுவர் (ஒரிசா) ஆகியவற்றைவிடப் பெரிய நகரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடும் மொழியும்

நாட்டுணர்ச்சி இம் மாவட்டத்தில் பல்கிப் பெருகியிருக்கிறது. அதைத் தனிக் கட்டுரையில் தெரிவிப்போம். மொழி வளர்ச்சியிலும் மதுரை பெரும்பணி புரிந்திருக்கிறது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையுடையது மதுரை.

எல்லைகள்

வடக்கே கோவை-திருச்சி மாவட்டங்கள், கிழக்கே புதுக்கோட்டை இராமநாதபுர மாவட்டங்கள், தெற்கே திருநெல்வேலி மாவட்டம், மேற்கே கேரள மாநிலம் ஆகியவை மதுரை மாவட்டத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன. 1910-க்குப் பிறகு இம்மாவட்டத்தின் அமைப்பிலோ எல்லையிலோ எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

இம் மாவட்டம் குறுக்கே 9° 30'-க்கும் 10° 50'-க்கும் நெடுக்கே 77° 10'-க்கும் 78° 30'-க்கும் இடைப்பட்டது. பரப்பளவு 4,869 சதுர மைல். அதாவது 12,465 சதுர கிலோமீட்டர். பரப்பளவில் இது தமிழ்நாட்டின் மிகப்பெரிய மாவட்டங்களுள் ஒன்றாகும்.

ஆட்சிப் பிரிவுகள்

நில வருவாய்த் துறையின் ஆட்சி வசதிக்காக இம் மாவட்டம் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வட்ட ஆட்சியை மேற்பார்வையிடக் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. இவை இருக்கும் நகரங்களும் இந்தக் கோட்டங்களுக்கு உட்பட்ட வட்டங்களும் வருமாறு:

மதுரை – 1. மதுரை தெற்கு, 2. மதுரை வடக்கு, 3. மேலூர்.

திண்டுக்கல் – 4. திண்டுக்கல், 5. பழனி, 6. வேடசந்தூர்.

உசிலம்பட்டி – 7. உசிலம்பட்டி, 8. திருமங்கலம், 9. நிலக்கோட்டை.

பெரியகுளம் – 10. பெரியகுளம், 11. உத்தமபாளையம், 12. கோடைக்கானல்.

மேலூர் வட்டத்தில் நத்தம் உள்வட்டம் இருக்கிறது. வேறு எந்த வட்டத்திலும் உள்வட்டம் கிடையாது.

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற இம் மாவட்டம் இரண்டு வளர்ச்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகச் சமுதாய வளர்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைபற்றிய விவரங்களை நூலின் பிற்பகுதியில் தருவோம்.

ஊராட்சி ஒன்றியங்கள் (34)

மதுரை கிழக்கு வளர்ச்சி மாவட்டம்

வட்டம்	அந்த வட்டத்தில் அடங்கிய ஊராட்சி ஒன்றியங்கள்		
1. மதுரை தெற்கு*	1. மதுரை கிழக்கு	2. மதுரை மேற்கு	3. திருப்பரங்குன்றம்
2. மேலூர்	4. மேலூர் வடக்கு (கொட்டாம்பட்டி)	5. மேலூர் தெற்கு	6. நத்தம்
3. உசிலம்பட்டி	7. உசிலம்பட்டி	8. சேடம்பட்டி	9. செல்லம்பட்டி
4. திருமங்கலம்	10. திருமங்கலம்	11. கள்ளிக்குடி	12. கல்லுப்பட்டி
5. நிலக்கோட்டை	13. நிலக்கோட்டை	14. வத்தலக்குண்டு	15. அலங்காநல்லூர்
			16. வாடிப்பட்டி

மதுரை மேற்கு வளர்ச்சி மாவட்டம்

6. திண்டுக்கல்	17. திண்டுக்கல்	18. ஆத்தூர்	19. ரெட்டியார்சத்திரம்
			20. சாணார்பட்டி
7. வேடசந்தூர்	21. வேடசந்தூர்	22. வடமதுரை	23. பாளையம்
8. பழனி	24. பழனி	25. தொப்பம்பட்டி	26. ஒட்டன்சத்திரம்
9. பெரியகுளம்	27. பெரியகுளம்	28. ஆண்டிப்பட்டி	29. தேனி
10. உத்தமபாளையம்	30. உத்தமபாளையம்	31. சின்னமனூர்	32. கம்பம்
			33. போடி
11 கோடைக்கானல்	34. கோடைக்கானல்		

* மதுரை வடக்கு வட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் இல்லை. அது மாநகராட்சிப்பகுதி.

மதுரை வடக்கு வட்டத்தின் பெரும் பகுதி மதுரை மாநகரில் அடங்கியிருக்கிறது. சில பகுதிகள் மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம் ஒன்றியங்களில் உள்ளன.

ஊராட்சி ஒன்றியங்கள் தவிர எஞ்சிய பகுதிகள், நகராண்மைக் கழகங்களின் ஆட்சிக்கு உட்பட்டவை. அவையாவன,

மாநகராட்சி: மதுரை

முதல் நிலை நகராட்சி: திண்டுக்கல், பழனி

இரண்டாம் நிலை நகராட்சி: பெரியகுளம், போடிநாயக்கனூர், தேனி–அல்லிநகரம்

மூன்றும் நிலை நகராட்சி: கம்பம், உசிலம்பட்டி, மேலூர்

இம் மாவட்டத்திலுள்ள மூன்று நகரியங்களில் கோடைக்கானல் நகரியம், நகராண்மைக் கழகச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு நகராட்சி அந்தஸ்தும் பெற்றது. ஹைவேவ்ஸ் எஸ்டேட் நகரியமும் ஹார்விபட்டி நகரியமும் ஊராட்சிமன்றச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டவை.

ஆட்சி பிரிவுகளின் வரலாறு

1910-ஆம்ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளில் இராமநாதபுர மாவட்டம் புதிதாக ஏற்பட்டது. அதில் சேர்க்கப்பெற்ற இராமநாதபுரம், முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர் ஆகிய ஏழு வட்டங்களும் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டன. எஞ்சிய பகுதிகள் தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் இருந்துவருகின்றன.

மதுரை, திண்டுக்கல் என இரு மாவட்டங்களைப் புதிதாக அமைக்கவேண்டுமென்னும் எண்ணம் இடையிடையே தமிழ்நாடு சட்டப் பேரவையில் கூறப்பட்டு வருகிறது. விரிந்து வரும் மதுரை மாநகர், சுற்றியுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பகுதிகளை விழுங்கத் தொடங்கியுள்ளது.

ஆறுகள்

பழனிமலைத் தொடரில் பன்றியாறு (வராக நதி), மஞ்சளாறு, பாம்பாறு, ஐயம்பாளையம்ஆறு என்னும் ஆறுகள்தோன்றித் தெற்கு நோக்கிப் பாய்கின்றன. இவற்றுள் பன்றியாறு, பெரியகுளம் நகரின் நடுவே பாய்ந்து பாம்பாற்றில் கலக்கிறது. மஞ்சளாறு

என்பது வத்தலக்குண்டு வழியாகத் தெற்குநோக்கிப் பாய்ந்து, ஐயம்பாளையம் ஆற்றில் கலந்துவிடுகிறது. மஞ்சளாற்றின் குறுக்கே ஓர் அணை மதுரை-பெரியகுளம் சாலையிலுள்ள தேவதானப்பட்டி அருகே கட்டப்பெற்று உள்ளது.

பழனி மலைத்தொடரில் தோன்றும் வேறு சில ஆறுகள் குடகனாறு, நங்காஞ்சி ஆறு, நல்தங்கியாறு, சண்முக நதி என்பவை. இவை யாவும் காவிரியின் துணையாறான அமராவதியில் இணைந்து விடுகின்றன. சண்முகநதி பழனி நகர் அருகே ஓடுவதால் அங்குக் கோயில் கொண்டிருக்கும் சண்முகர் பெயரைப் பெற்றது. இச் சிற்றாறு வில்பட்டி, பூம்பாறைப் பள்ளத்தாக்குகளில் வழியும் நீரைப் பெற்றுப் பெருமழைக் காலங்களில் பேராறுபோலக் காட்சி தருகிறது.

சண்முகநதி என்னும் பெயருள்ள மற்றோர் ஆறு இந்நாளில் வறட்டாறு என வழங்குகிறது. தென்மேற்கு வடகிழக்குப் பருவக் காற்றுக் காலங்கள் தவிர ஏனைய நாள்களில் வறண்டிருப்பதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது. இந்த ஆறு கம்பம் வட்டம் காமயக்கவுண்டன்பட்டிக்கு அருகே இரு மலைகளுக்கு நடுவே அமைந்தது.

மாவட்டத்தின் நடுவே அமைந்தது, தமிழ் கண்டதோர் வைகை. இதன் சரியான பெயர் வையை என்பதாகும். சங்க காலத்தில் தமிழுடன் சேர்த்துப் புகழ் பெற்ற சிறப்புடையது இவ் வையை.

> "தமிழ்வையைத் தண்ணம்புனல்"
> "தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்
> பரிமா நிரையின் பரந்தன்று வையை"

எனப் பரிபாடல் வையை ஆற்றைப் புகழ்கின்றது. பரிபாடலில் மதுரை நகர் பற்றியும் வையை ஆறுபற்றியும் பல பாடல்கள் உள.

> "நாரியிடம் பாகருக்கு நஞ்சளித்த பாவியென்று
> வாரியிடம் போகாத வையையே –
> இடத்தும் வலத்தும் இருபுறத்தும்
> நடக்கும் பாண்டி வளநாடு"
>
> – பெருந்தொகை.

பல சிற்றாறுகள் சேர்ந்த வைகை தோன்றும் இடம் வருஷநாடு–ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் உளது, வானளாவிய மரங்களைக்கொண்ட காடுகள் செறிந்தது.

மேற்கு மலைத்தொடருக்கும் வருஷநாடு – ஆண்டிப்பட்டி மலைத்தொடருக்கும் இடைப்பட்ட கம்பம் பள்ளத்தாக்கில் வீரவனாறு பாய்கிறது. இந்த ஆறு தோன்றும் இடத்துக்கு அருகே பெரியாறு என வழங்கும் பேரியாறும் தோன்றுகிறது. அது கேரளத்தை வளமாக்கி மேற்கே அரபிக்கடலில் கலப்பது. மலையைக் குடைந்து, சுரங்க வழியாக 2 கி. மீ. தொலைவுக்குப் பெரியாற்றின் நீர் வீரவனாற்றில் விழுந்து கம்பம் பள்ளத்தாக்கைச் செழிப்படையச் செய்கின்றது. பெரியாற்று நீர்ப்பெருக்கால் வீரவனாறு பொலிவுபெற்று, சுருளியாற்றில் சேருகிறது. சுருளி யாற்றுடன் தேனியாறு கலக்கிறது. இந்த ஆறுகளின் நீர் அனைத்தும் வைகை ஆற்றில் சேருகிறது. இவ்வாறு நீர்ப் பெருக்கம் பெற்று, அணைப்பட்டி என்னும் இடத்தில் பெரியதோர் ஆறாகக் காட்சி தருகிறது. அங்கிருந்து அது சோழவந்தான், திருமங்கலம் பகுதிகளையும் பின்னர் மதுரையின் சுற்றுப்புறத்தை யும் வளப்படுத்தி இராமநாதபுர மாவட்டத்துக்குச் செல்கிறது

தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள பெரிய ஆறுகள் இருக்க தமிழ்நாட்டு ஆறுகளுள்ளும் சிறு ஆறு வைகை. எனினும் இது பாண்டியர்களின் திறமையாலும் அறிவுக்கூர்மையாலும் ஒரு சொட்டு நீரும் வீணாகாதபடி பாசனத்துக்குப் பயன்படுகிறது: கடலில் விழும்வரை ஆங்காங்குக் கால்கட்டி ஏரிகளுக்குப் பாய்ச்சி ஏரிகள் நிரம்பியதும் மீண்டும் பாசனத்துக்குப் பயன்படுமாறு பாண்டியர்கள் நீர்ப்பாசனத்திற்கு வகை செய்திருப்பதை வரலாற்று ஆசிரியர்கள் மிகவும் பாராட்டியுள்ளனர்.

மரஞ்செடி கொடிகள்

வஞ்சி காஞ்சி என்னும் நகரங்களின் பெயர்கள் நீர் ஓரமாக வளரும் மரங்களால் ஏற்பட்டன. கொன்றைப்பூவின் பெயரைத் தாங்குவது கொற்கை. இவ்வாறே மருதம் என்னும் மரத்தால் ஏற்பட்ட மருதை என்னும் பெயரே மதுரை என வழங்கி வருகிறது.

கடம்பவனம் என்ற பெயர் கடம்ப மரங்கள் மதுரையின் புறத்தில் இருந்ததற்குச் சான்று. கடம்ப மரமே ஆட்சியின் சின்னமாக விளங்கிற்று. கப்பல் செய்ய ஏற்ற இந்த மரத்தைக்

கடல் வாணிகத்தில் சிறந்த பாண்டியர் போற்றியதில் வியப்பு ஒன்றும் இல்லை மீனாட்சியம்மன் கோயிலில் சுந்தரேசுவரர் கோயிலின் உள்சுற்றில், கல்விருட்சமாகிய கடம்ப மரத்தின் பட்டுப்போன பகுதி வெள்ளிக் கவசம் போட்டுப் பேணப்பட்டிருப்பதைக் காணலாம். கடம்பனாறு என்னும் பெயரில் இலங்கையில் ஓர் ஆறு இருக்கிறது. கடம்பர் என்ற கூட்டத்தார் மதுரையிலிருந்து கேரளத்திலுள்ள கண்ணனூருக்குச் சென்றதாகவும் அவர்கள் குடியேறிய ஊர் கடம்பில்வாயில் என்று பெயர் பெற்றதாகவும் பதிற்றுப்பத்தில் கூறப்பெறுகிறது.

பழனிமலைத் தொடரிலுள்ள எண்ணற்ற மரம் செடி கொடிகள் நோய் நீக்கும் மருந்துகளை, எண்ணெய்களை, களிம்புகளை, லேகியங்களை, தைலங்களைச் செய்ய உதவுகின்றன. பழனியிலுள்ள மருத்துவச்சாலைகள் இவற்றைப் பயன்படுத்தி மூலநோய், பித்தம், வாய்க்கசப்பு, மூளைக்கொதிப்பு, உடல்வெப்பம், விரைவீக்கம், மலக்கட்டு ஆகியவற்றைக் குணப்படுத்தும் மருந்துகளைச் செய்கின்றன.

பூச்செடிகளின் பெயர்களைக்கொண்ட ஊர்களும் மதுரை மாவட்டத்திலுண்டு. சான்று: வஞ்சிநகரம், தும்பைப்பட்டி இரண்டும் மேலூர் வட்டத்தில், மதுரை – திருச்சிச் சாலையில் உள. பூலாம்பட்டி என்னும் சிற்றூர் பூலாஞ்செடியை நினைவூட்டுவது.

மதுரைமாவட்டத்துக் காடுகளில் தேக்கு, சந்தனம், மூங்கில், புளூ கம் (Blue gum), யூகலிப்டஸ் ஆகிய மரங்கள் பெரிய அளவில் வளர்கின்றன.

கானல் – காடு.

கோடைக்கானல் அருகே பிரம்புக்கானல் (பிரம்புக்காடு) உளது. இப்பகுதி கோடையிலிருந்து பெரியகுளத்துக் காட்டு வழியில் செல்லும் பழங்கால நடைபாதையில் இருக்கிறது.

இவ்வாறே கோடைக்கானலின் சரியான பெயர் கொடிக்கானல் என்பதாகும் (என்பர் சிலர்). கொடி – செடி கொடி (CREEPER). 1914-இல் வெளியான மதுரை மாவட்டக் கெஜட்டியரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோடைக்கானல் என்பது மரூஉ.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோடைக்கானல் மலையில் குறிஞ்சி பூக்கிறது. இதனால் தமிழ் இலக்கியங்கள் கோடைக்கானல் மலையைக் குறிஞ்சிமலை என்று குறிப்பிடுகின்றன. மலைமீது கோயில்கொண்ட இறைவனின் பெயர் குறிஞ்சி ஆண்டவர் என்பதாகும்.

குறிஞ்சிப் பூவுக்கு, தாவர இயலார் இட்டிருக்கும் பெயர் 'STROBI - LANTHES KUNTHIANUS' என்பதாகும். இது 1969–70-இல் கடைசியாகப் பூத்தது. அடுத்து 1981-ஆம் ஆண்டு அளவில் பூக்கும். இது பூக்கும் பருவம் செப்டம்பர் முதல் மார்ச்சு வரை. அக்காலத்தில் மூன்றடி உயரத்துக்கு வளரும் இந்தப் பூவால் கோடைக்கானல் மலைப்பகுதியே நீலக்கம்பளம் விரித்ததுபோல் காட்சி தரும். சிலசமயம் இந்தக் காட்சி எட்டு மாதங்களுக்கு இருக்கும். இது 4,500 அடி முதல் 6,000 அடி வரையுள்ள பகுதியில் பூக்கும். இந்தியாவெங்குமுள்ள தாவரவியல் அறிஞர்கள் குறிஞ்சி மலரைக் காணப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு வருகின்றனர்.

மழை

தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய இரு பருவக்காற்றுகளின் பயனைப் பெற்றுங்கூட மதுரை மாவட்டத்தின் சராசரி மழை 35 அங்குலம் (0·89 மீட்டர்)தான். கோடைக்கானலிலும் அதைச் சார்ந்த பகுதிகளிலும் இதைப்போல இருமடங்கு பெய்கிறது. இதனால் அங்குக் காடுகள் பெருகி, பலவகை மரங்களும் வளர்கின்றன. சென்னையிலுள்ள பெரிய தொழிற்சாலைகள் தங்கள் மூலப்பொருள்களைப் பெறப் பலவகைமரங்களைப் பயிரிடுகின்றனர். தொழிற்சாலைகளின் விற்பனைப் பொருள்களை அழகுற அடுக்கி அடைப்பதற்காகப் பெட்டிகள் செய்ய இங்குள்ள மரங்கள் வெட்டப்பட்ட வண்ணமாக இருக்கின்றன.

புவியியல் பொருள்கள்

மதுரை மாவட்டத்தில் புவியியல் பொருள்கள் இருப்பதைப் பற்றிய ஆராய்ச்சி 1962க்குப் பிறகே தொடங்கிற்று. பழனிமலைத் தொடரில் கோடைக்கானல் நகரிலிருந்து 30கி.மீ. தொலைவிலுள்ள பேரிஜம் ஏரிப் பகுதியிலும் பிற பகுதிகளிலும் 'பாக்ஸைட்' பெரிய அளவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அலுமினியப் பொருள்கள் செய்ய உதவும் இந்தப் புவியியல் பொருள் மேட்டூரில் உள்ள மெட்ராஸ் அலுமினியம்கம்பெனியால் பயன்படுத்தப்பெறுகிறது.

மன்னவனூர் கிராமத்தில் மட்டும் பாக்ஸைட் இருப்பு 10இலட்சம் டன் அளவிலுள்ளது. பழனிமலைச் சாரலிலுள்ள பலகனூற்று என்னுமிடத்தில் இரும்பு முதலிய உலோகங்கள் கிடைக்கின்றன.

மேலூர் வட்டம் கருங்காலக்குடிக்கு அருகேயுள்ள பஞ்சப்பட்டியில் நவரத்தினக் கற்கள் 1962-இல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

மேலூர் வட்டத்து அரசனூரில் கிராபைட் பாறைகள் உள்ளன. இது வண்ணங்கள் செய்யப் பயன்படும்.

மேலூர் - பூவந்திச்சாலையில் சுண்ணாம்பூர் அருகே இராமநாதபுர மாவட்ட எல்லையில் கிரிஸ்டலைன் சுண்ணாம்புக்கல் பத்து இலட்சம் டன் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. திருமங்கலம் பகுதியிலும் இது உள்ளது.

வைகைப் படுகையின் களிமண், சிறந்த செங்கல் செய்யப் பயன்படுகிறது. சேம்பர் பிரிக்ஸ் என்னும் பெரிய செங்கல் செய்யும் தொழிற்சாலைகள் வைகைக் கரையில் அமைந்துள்ளன. சேலம் இரும்பாலைக்கு வேண்டும் லைம்ஸ்டோன் டாலமைட் ஆகியவை இம் மாவட்டத்தில் நிறைய இருக்கின்றன.

இந்திய அரசின் அணு ஆராய்ச்சித் துறையின் அறிக்கைப் படி பின்வரும் புவியியல் பொருள்களும் மதுரை மாவட்டத்தில் உள்ளன.

(1) நெய்க்காரப்பட்டியில் 'MOLYBDENTIE WITH IRON PYRITES'

(2) அம்மைய நாயக்கனூருக்குத் தெற்கே 'GARNETI-FEROUS GREISS' என்னும் ஒரு வகைக் கல்:

(3) Uraniferous Allanite and Fergusonite Bearing Pegmattitis in Rangapalayam and Karupattavaanathi Villages.

கரடிக்கூட்டம் என்னும் ஊர் அருகே மாலிப்டினம் (MOLYBDENUM) என்னும் பொருள், 60 மீட்டர் ஆழத்தில் புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகாய விமானங்கள்; இரும்புக் கவசங்கள், டீயர்கள் முதலியவற்றின் உற்பத்திக்கு இது உதவும்.

2

வரலாறு

❁

நாட்டின் பழமை

மதுரை, பாண்டியர்களின் தலைநகர். பாண்டியர்குடி பழங்குடி.

பாண்டியர்கள் முத்தும் பொன்னும் இரத்தினங்களும் உடைய செல்வர்களாய்த் திகழ்ந்தனர்; கடல்வாணிகத்திலும் சிறந்திருந்தனர். நெல்லை மாவட்டத்திலுள்ள காயல் துறைமுகம் இவர்களுடைய வணிகத் தலைநகராய் விளங்கியது. தொழில், கலை, கோயில், தமிழ்மொழி ஆகியவற்றைப் பாண்டியர்கள் ஊக்குவித்தனர்.

பாண்டிய மன்னன் ஒருவன் பாண்டவர் படைக்குப் பாலும் சோறும் வரையாது கொடுத்ததாகப் பாரதம் குறிக்கிறது. அதற்கும் முற்பட்ட காவியமான இராமாயணத்திலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவ் இதிகாசங்கள் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டின.

சந்திரகுப்த மௌரிய மன்னனின் அவைக்குக் கிரேக்க நாட்டுத் தூதராக் வந்திருந்த (கி மு. 320) மெகஸ்தனீஸ், பாண்டிய நாட்டில் அரசி ஒருத்தி ஆட்சி செலுத்தியதைப்பற்றித் தமது

'இண்டிகா'வில் குறிப்பிடுகின்றார். "முன்பு பாண்டி நாட்டிலே பாண்டேய என்பவள் ஆண்டுவந்தாள். அப்பகுதி 365 கிராமங்கள் கொண்டது. அந்த நாடு தென் கடல்வரை பரந்திருந்தது. அவளிடம் 500 யானைகள், 4,000 குதிரைகள், 18,000 ஆள்கள் கொண்ட படை இருந்தது" என எழுதியுள்ளார்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட அசோகனின் கற்றூண்களில் பொறிக்கப் பெற்ற கட்டளைகளில் பாண்டியர்கள் குறிப்பிடப்பெற்றிருக்கின்றனர்.

இதேகாலத்தில் வாழ்ந்த கௌடில்யர், தாம் எழுதியுள்ள அர்த்தசாஸ்திரத்தில் பாண்டிய நாட்டு முத்துகளைக் குறிப்பிட்டுள்ளார்.

நகரின் தொன்மை

மதுரை மூதூர், பலர் ஆட்சிதனைக் கண்டது; மாட்சிதனைப் பெற்றது.

மதுரையை அடுத்த மலைகளில் மதுரையின் பழமையையும் பெருமையையும் குறிக்கும் கல்வெட்டுகள் உள்ளன. கிறிஸ்து காலத்துக்கு முந்நூறு ஆண்டுகட்கு முந்தையன என்பது மாங்குளத்தை அடுத்த மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த கழுகுமலைக் கல்வெட்டுகளைப்பற்றி ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இவை பாண்டியன் நெடுஞ்செழியனின் கல்வெட்டுகள்.

கூடல்

கபாடபுரம் கடலால் விழுங்கப்பட்ட பிறகு மதுரை பாண்டியர் தலைநகராயிற்று. சங்கம் கண்டு புலவர்கள் கூடித் தமிழாராய்ந்ததால் மதுரை 'கூடல்' என்று பெயர்பெற்றது.

பாண்டியன் முடத்திருமாறன் முதலாகஉக்கிரப்பெருவழுதி ஈறாகப் பாண்டியர்கள் மதுரையை ஆண்டுவந்தனர். பிளினீ (கி. பி. 77), தாலமி (கி. பி. 140) என்ற அயல்நாட்டினரும் மதுரையைப்பற்றித் தங்கள் நூல்களில் குறிக்கின்றனர். உரோமப் பேரரசுடன் கொண்ட வாணிபத் தொடர்பைக் குறிக்கும் பொன் நாணயங்கள் மதுரையில் கிடைத்துள்ளன.

இலங்கையின் பண்டை வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்னும் நூல், கி. மு. 475-இல் இலங்கையை ஆண்ட தமிழ் வேந்தனான விசயன், ஒரு பாண்டிய மன்னன் மகளை மணந்ததாகக் கூறுகிறது.

இக்காலத்தில்தான் மதுரையில் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் இவ் வீரமன்னனின் புகழைப் பாடுகின்றன. இவனது செய்யுள் புறநானூற்றிலும் காணப்படுகிறது. இவன் புலவரை மதிக்கும் திறனும் 'புலவர் புகழ்பெறாத புரவலன் பயனற்றவன்' என்ற கருத்தும் உடையவன்.

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்

பொற்கொல்லன் பேச்சை நம்பிக் குற்றமற்ற கோவலனைக் கொல்வித்தவன் இவனே. இவன் தன் தவறுகளை உணர்ந்தவுடன் பெரிதும் வருந்தினான். மானவுணர்ச்சி இவன் உயிரையே கொன்றது. மன்னன் இறந்தான் என்பதைக் கண்டதும், மனைவி கோப்பெருந்தேவியும் இறந்தாள்.

இடைக்காலப் பாண்டியர்
(பாண்டியப் பேரரசுக்காலம்)

சங்ககாலத்து இறுதியில் பாண்டியநாடு களப்பிரர் ஆட்சிக்குட்பட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுவரை பாண்டியர்கள் அடிக்கடி பல்லவர்களுடன் போரிட்டு வந்தனர்; சோழப் பேரரசுக்குப் பாண்டியர் அடிமையாயினர்.

பாண்டிய மன்னருள் ஒருவனான நெடுமாறன் திருஞானசம்பந்தர் காலத்தவன்; சோழன் மகளான மங்கையர்க்கரசியார் என்பவரை மணந்துகொண்டவன்; சம்பந்தரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டவன். மற்றொரு பாண்டியன் முதல்வரகுணன் என்பவன். இவன் பரம வைணவன்; சிறந்த போர்வீரன்; உயர்ந்த பக்திமான். இவனுக்குப் பிறகு, பாண்டிநாடு சோழப்பேரரசுக்குக் கட்டுப்பட்டிருந்தது.

மாணிக்கவாசகர் காலம் இரண்டாவது வரகுண பாண்டியன் காலம் என்பர்.

பிற்காலப் பாண்டியர்

13-ஆம் நூற்றாண்டில் பாண்டியர் மீண்டும் பேரரசர் ஆயினர். முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன், முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன். முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன் என்பவர் புகழ்மிக்கவர், இப் பாண்டியர்கள் சேரசோழரை வென்றனர்.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டிநாடு மிகவும் விரிவடைந்தது. இவன் பல போர்களில் வாகைசூடினுன்; சோழர்களையும் ஹொய்சாளரையும் அடக்கினுன்; நெல்லூர், கடப்பை மாவட்டங்களையும், இலங்கையையும் கேரளத்தையும் அடிமைப்படுத்தினுன்.

தில்லைக் கூத்தப்பெருமான் கோயிலையும் திருவரங்கம் பெரிய கோயிலையும் இவன் புதுப்பித்துப் பொன்வேய்ந்தான்.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1268–1311)காலத்தில் இத்தாலியிலிருந்து மார்க்கோபோலோ பாண்டிய நாட்டில் பல நகரங்களைப் பார்வையிட்டான். "அங்கு குலசேகர பாண்டியன் ஆட்சி நடந்தது. அவன் நாட்டை நடுவுநிலைமையுடன் ஆண்டுவந்தான். வாணிகம் செய்வோரிடத்தும் பிறநாட்டு மக்களிடத்தும் அவன் பேரன்புடன் நடந்து வந்தான்" என்று மார்க்கோபோலோ தன் நூலில் குறித்துள்ளான். இக்காலத்தோடு பாண்டியர் பேரரசு மறைந்தது.

மாலிக் காபூர்

14-ஆம் நூற்றாண்டில் மதுரைச்சீமை இஸ்லாமியர் ஆட்சியில் ஏறத்தாழ 50 ஆண்டுகள் இருந்தது. மீனுட்சி கோயிலும் அடைபட்டுக் கிடந்தது. மாலிக்காபூர் என்பவன் வடக்கேயிருந்து 1310-இல் படையெடுத்ததன் விளைவே இஸ்லாமிய ஆட்சி.

இஸ்லாமிய ஆட்சியில் மதுரை நகரில் பல மசூதிகள் ஏற்பட்டன. (1) நன்மை தருவார் கோயில் சந்நிதி எதிரே ஒரு மசூதி, (2) காமாத் தெரு மசூதி (கூடல் அழகப் பெருமாள்

கோயில் அருகே), (3) பிரசித்திபெற்ற கான்சாகிப் கமாந்தான் சாயபு (முகமது யூசுப்) நினைவாகக் காளவாசல் அருகே இருக்கும் மசூதி, (4) கோரிப்பாளையம் மசூதி.

மீனாட்சியம்மன் கோயிலுக்குள், யானை கட்டுமிடத்திற்கு எதிரே, தெற்கு ஆடிவீதி – கிழக்கு ஆடிவீதிச் சந்திப்பில் ஒரு மசூதி புதிதாக ஏற்பட்டது. பிற்காலத்தில் இது அகற்றப்பட்டது. மருது சகோதரர்கள் அந்த இடத்தில் ஒரு பிள்ளையார் கோயிலை நிறுவினர் என்றும், அவர்களுக்குப் பிறகு அங்கு (இப்போதுள்ள) புறக்காவல் நிலையம் இருந்து வருவதாகவும் தெரிகிறது.

விஜயநகர ஆட்சி

தென்னிந்தியாவில் இஸ்லாமியர் படையெடுப்பின் எதிரொலியாக இந்துக்களுடைய பெருமையை நிலைநாட்ட விஜயநகர அரசு ஏற்பட்டது. இந்தப் பேரரசைச் சேர்ந்த கம்பண்ண உடையார் மதுரையை இஸ்லாமிய ஆட்சியிலிருந்து விடுவித்தார். மூடிக்கிடந்த கோயில் சந்நிதி திறந்தது. கோயில் மாநகரான மதுரை மீண்டும் பொலிவுபெற்றது.

மீண்டும் பாண்டியர் ஆட்சி

தொடர்ந்து பாண்டிய நாட்டில் குழப்பமாக இருந்தது. இச் சூழ்நிலையில் 1314 முதல் 1359 வரை ஆண்ட பாண்டியர்கள் தங்கள நலங்கருதியே விஜயநகரப்பேரரசுக்கு உட்பட்டவர்களாக நடந்துகொண்டார்கள். பிறகு விஜயநகரின் பிரதிநிதிகளாக நாயக்க அரசர்கள் நேரடியாக ஆளத் தொடங்கியது இரண்டாம் ஹரிஹரர் ஆட்சியில், அதாவது 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இம்மன்னன் மதுரையில் ஓர் ஆளுநரை நியமித்து, இபபகுதியை ஆட்சிபுரியச் செய்தான். இதுபோலத் தஞ்சாவூர, செஞ்சி வேலூர் ஆகிய தமிழ்நாட்டு நகரங்களிலும் விஜயநகரப்பேரரசின் ஆளுநர்கள் நியமிக்கப்பெற்றனர்.

நாகம நாயக்கர்

விஜயநகரப் பேரரசுக்கு ஏற்றம் தந்த அரசர் கிருஷ்ணதேவராயர். ஏற்கெனவே, பல பொறுப்பான பதவிகளை வகித்து அனுபவம்பெற்ற நாகம நாயக்கரை மதுரையில் தம் பிரதிநிதியாய் – மண்டலேஸ்வரராய் – கிருஷ்ணதேவராயர் நியமித்தார். நாகமநாயக்கரைத் தொடர்ந்து அவர் மகன்

விசுவநாத நாயக்கர், விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாய்ப் பொறுப்பேற்ருர். இக்காலத்திலிருந்து விஜயநகரின் நேரடி ஆட்சி தமிழ்நாட்டில் தொடங்கியது. நாயக்கர் ஆட்சியை மதுரைச்சீமையில் வேரூன்றி நிலைக்கச் செய்தவர் விசுவநாத நாயக்கரே. அவருடைய தலைமை அமைச்சராய் (தளவாயாய்) அரியநாதமுதலியார் இருந்தார்.

வாணாதிராயர்

16-ஆம் நூற்ருண்டில் மதுரைமாவட்டத்தில் வாணாதிராயர் குறிப்பிடத்தக்கவர்கள். மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புப்பெற்ற வாணாதிராயர்கள் பாலாற்றுப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்கள் சங்ககாலத்துப் பாணர் [பெரும் பாணர், சிறு பாணர்] என்பவர்களின் வழித் தோன்றல்கள் என்று கல்வெட்டுச் சான்றுடன் சொல்லப்படு கிறது. சோழர்கள் வாணாதிராயர் சிலரைத் தங்கள் படைத் தளபதிகளாகச் சேர்த்து, பாண்டிநாட்டில் ஆங்காங்கே தம் ஆள்களாக நியமித்துத் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டினர் வாணாதிராயர்கள் பாண்டியர் என்று பட்டப்பெயர் போட்டுக் கொண்டனர்.

நாயக்கர் ஆட்சி

தமிழ்நாட்டில் நாயக்கர் ஆண்ட அரசாட்சிக்காலம் ஏறக்குறைய 200 ஆண்டுகளாகும். இக்காலத்தில் அவர்கள் தமிழ்நாடு முழுவதுக்குமே அரசர்களாக இருந்தனர் என்று சொல்லலாம்.

நாயக்க மன்னர்கள் தமிழ்நாட்டில் கட்டிய கோயில்கள் பலவாகும். மதுரை, ஸ்ரீரங்கம், பேரூர், அவிநாசி முதலிய இடங் களில் இவர்கள் கோயில்களை எழுப்பினார்கள். மதுரை, ஸ்ரீரங்கம் கோயில்களை நாம் பார்க்கும்போது நாயக்கர்களின் பெருமையை நன்ருகக் காண்கின்ருேம். போர்ச்சுகீசியரும், டச்சுக்காரரும், இன்னும் இயேசு சபைப் பாதிரிமார்களும் நாயக்கர் காலத்தி லேயே முதன்முதலில் தமிழ்நாட்டில் புகுந்தனர்.

இந்த இருநூறு ஆண்டுகளில் தெலுங்கர்களான கம்மவார் களும் நாயக்கர்களும் ரெட்டியார்களும் தேவாங்கர்களும் சாலியர் களும் நாவிதர்களும் சக்கிலியர்களும் வண்ணார்களும் ஒட்டர்களும்

பிராமணர்களும் பெருந்தொகையாக மதுரைச்சீமையெங்கும் குடியேறினர். இவர்களுள்ளும் நாயக்கர்களே மிகுதியாகக் குடியேறினார்கள்.

விசுவநாத நாயக்கர் (1529–64)

தெற்கே குமரிவரையும் மேற்கே கொங்குநாடுவரையும் பரவி, விசுவநாதர் ஆட்சி மதுரையின் வரலாற்றில் சிறப்பாக அமைந்தது.

மதுரையில் கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்தியும் புதிய கால்வாய்கள் வெட்டியும் வைகையில் பேரணை, சிற்றணை கட்டியும் தலயாத்திரை செய்வோர்க்குக் காதவழிக்கோர் அன்ன சத்திரம் நிறுவியும் நற்செயல்கள் பலவற்றை இவர் செய்தார்.

பாளையப்பட்டுகள்

நாயக்கர் ஆட்சியில் தமிழ்நாடு 72 பாளையப்பட்டுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இவை ஒன்பது பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றின் நான்காம் பாகம் திண்டுக்கல் பகுதியிலும், ஐந்தாம் பாகம் கம்பம்–கடலூர்ப் பகுதியிலும், ஆறும் பாகம் கோயம்புத்தூர்ப் பகுதியிலும், ஏழாம் பாகம் சேலம் பகுதியிலும் சேர்ந்திருந்தன. ஒவ்வொரு பகுதியிலும் பல பாளையப்பட்டுகள் இருந்தன.

அவற்றின் தலைவர்களான பாளையக்காரர்கள் மதுரை நாயக்கர் வேண்டியபோது படைகளனுப்பக் கடமையும், அதற்குப் பதிலாக அவரவர்கள் பிரதேசத்தில் வரி வசூலித்துக்கொள்ள உரிமையும் பெற்றிருந்தனர். வரி வசூலில் மூன்றிலொரு பகுதியை மதுரை நாயக்கர்க்கு அனுப்பிவந்தனர்.

பாளையக்காரர் காலத்துக்கு முன்னர், பாண்டிநாட்டுமக்கள் முஸ்லிம் படையெடுப்பால் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாயினர்; சிற்றூர்கள் பாழடைந்தன; கோட்டைகள் பழுது பட்டன; கொத்தளங்கள் இடிந்து கிடந்தன. பாசன வசதிகளைக் கவனிப்பார் ஒருவருமில்லை; கொள்ளையும் கொலையும் மலிந்திருந்தன. பயமும் பீதியும் மக்களை வாட்டின; தடி எடுத்தவன் தண்டல் காரன் ஆனான்.

இந்த நிலையிலிருந்து அமைதியை நிலைநாட்டியவர்கள் பாளையக்காரர்களும் அவர்களுடைய பாளையப்பட்டுகளை உருவாக்கிய நாயக்கமார்களும்தாம். பாளையக்காரர்களில் பலர் தெலுங்கர்.

மதுரை மாவட்டத்தில் கீழ்க்கண்ட பாளையப்பட்டுகள் இருந்தன:

நிலக்கோட்டை	கம்பம்
தேவாரம்	ஆய்குடி
இராமகிரி	பழனி
கல்போது	சமுத்தூர்
கன்னிவாடி	விருப்பாட்சி
தொட்டப்ப நாயக்கனூர்	படமாத்தூர்
கண்டம நாயக்கனூர்	வடகரை
காமநாயக்கனூர்	அம்மைய நாயக்கனூர்
தும்பிச்சி நாயக்கனூர்	போடி நாயக்கனூர்
நத்தம்	பெரியகுளம்
வெள்ளிக்குன்றம்	கோம்பை
மலையப்பட்டி	கூடலூர்

இவர்கள் தவிர, சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் சிற்றரசு செலுத்திய கட்டி முதலிகளும் மதுரை நாயக்கர்களுக்கு அடங்கியிருந்தனர்.

தளவாய் அரியநாதர் (1487 – 1601)

16 ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் பெரு வீரராக விளங்கியவர் அரியநாத முதலியார். இவர் காஞ்சிபுரத்தையடுத்த மெய்ப்பேடு ஊரினர். இளமையிலேயே விஜயநகரத்திற்குச் சென்று தம் திறமையால் அங்கு அரசவையில் இடம்பெற்று, பிறகு மதுரை மண்டலேசுவரராய் இருந்த நாகம நாயக்கரிடம் கணக்கப்பிள்ளையாய் அமர்ந்தவர். இவர் நான்கு நாயக்க மன்னர்களிடம் மதுரையில் தளவாய் (முதலமைச்சர்) பதவி வகித்தார். தளவாய் அரியநாத முதலியார் வரலாறு, இளைஞர் அனைவரும் படித்துப் பயனடையத்தக்கதாகும்.

பாளையப்பட்டுகளை ஏற்படுத்திப் பாண்டிய நாட்டில் நல்லாட்சி நிறுவியதில் அரியநாதருக்குப் பெரும் பங்கு உண்டு. மெய்ப்பேட்டிலிருந்து தம் உறவினர்களைப் பாண்டியநாட்டுக்கு வரவழைத்துச் சோழவந்தானில் குடியேற்றினார். இவ்வாறு வந்தவர்களின் வழியினரே இந்நாளில் தொண்டைமண்டல முதலியார் என்று மதுரை மாவட்டத்தில் குறிப்பிடப் படுகின்றனர். மதுரையில் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவர் அரியநாதரே. அம்மண்டபத்தின் முகப்பில் குதிரைமேல் இருப்பது இவருடைய உருவச்சிலை.

சமயப் பொதுநோக்கு

இந்நாளில் எம்மதமும் சம்மதம் (SECULAR STATE) என்னும் கொள்கை பெரிதும் பரவி மிகவும் போற்றப்படுகிறது. 17-ஆம் நூற்றுண்டிலேயே இதை நாயக்க மன்னர்கள் கடைப் பிடித்தனர். இந்து சமயத்தில் பற்றுமிக்கவராக இருந்தாலும் பிற சமயத்தாரிடம் அவர்கள் அன்பு பாராட்டினுர்கள். திருமலே நாயக்கர் மதுரைக்கு வந்த கிறித்தவப் பாதிரிமார்களுக்குப் பேராதரவு காட்டினுர். ராணி மங்கம்மாள் திருச்சிராப்பள்ளி அருகேயுள்ள சில ஊர்களே ஆந்திராவிலுள்ள பேணுகொண்டா தர்க்காவுக்குக் காணிக்கையாக வழங்கினுர்.

நாயக்க மன்னர்கள் சமயச் சார்பற்ற அரசாங்கத்தை மட்டும் நடத்தவில்லே, சமுதாய நல அரசையும் நிறுவினர்.

வீரப்ப நாயக்கர் (1572 - 1595)

இவர் திருச்சிக் கோட்டையைச் சீர்திருத்தினுர்; அருப்புக்கோட்டையில் புதிதாக ஒரு கோட்டையைக் கட்டினுர்; சிதம்பரம் கோயிலுக்குப் புதிய வெளிமதில் அமைத்தார்; அந்தணர்க்கு ஏராளமான நிலங்களே வழங்கினுர். இவருடைய வரலாறுகளும் கல்வெட்டுகளும் மீனுட்சி அம்மன் கோயிலுக்கு இவர் செய்த கொடைகளேக் கூறுகின்றன. தென்காசிப் பாண்டியர்களே இவர் அன்புடன் நடத்தினுர்.

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595 - 1601)

அரியநாத முதலியார் இறந்தபின் நாயக்கர் ஆட்சிக்கு ஏற்றமும் பெருமையும் கொடுத்துப் புகழ் பரப்பியவர் இவரே ஆவார்.

முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (1601 - 1609)

இவர் காலத்தில்தான் ராபர்ட் - டி - நோபிலி என்ற பாதிரியார் ரோமாபுரியிலிருந்து வந்து தமிழ் பரப்பினுர்; தம் சமயத்தையும் வளர்த்தார்.

முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் பல சமயங்கட்கு ஆதரவு அளித்ததோடு மத மாற்றத்துக்கும் இடம் கொடுத்தார்.

திருமலே நாயக்கர்

மதுரைக்குப் பெருமைதந்த நாயக்க மன்னர் இவரே.

திருமலை நாயக்கர் கட்டிடக்கலை ஆர்வலர்; தாஜ்மகால் கட்டப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்; மதுரையில் தம் பெயரால் ஒரு மகாலை இன்றும் மக்கள் பார்த்து மகிழும் அழகு மாளிகையைக் கட்டினார்; தெப்பக்குளத்தை வெட்டினார்; புது மண்டபத்தை எழுப்பினார். மதுரை மாநகர் 'தமிழ்நாட்டின் ஏதென்ஸ்' என்னும் பெருமையை இவர்காலத்தில் பெற்றது.

நாயக்கர்களின் தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றியவரும் திருமலை நாயக்கரே.

மதுரைக் கோயிலில் திருமலை நாயக்கர் பல திருப்பணிகள் செய்தார்; பல புதிய மண்டபங்களை அங்கு அமைத்தார். பழைய பகுதிகள் பலவற்றை அழகாகவும் அழுத்தமாகவும் புதுப்பித்தார்.

அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாற்றுடன் குழைத்துக் செங்கற்களைப் பரப்பிக் கடுக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றை இடித்துக் கடுக்காய் சாறுவிட்டு வச்சிரக்காரை இட்டுத் திருமலை நாயக்கர் தம் பெயரால் ஓர் அரண்மனை கட்டினார். அழகர் கோயில், திருப்பரங்குன்றம் கோயில்களைத் திருமலை நாயக்கர் திருத்தி அமைத்தார்; கோயில்களின் ஆட்சியில் ஒழுங்கான முறைகளை ஏற்படுத்தினார்; மாசி மாதத்தில் நடைபெற்ற பெரிய திருக் கல்யாண விழாவைச் சித்திரை மாதத்திற்கு மாற்றினார்; திருவிளையாடல் விழாக்களை நடத்தவும் மீனாட்சியம்மன் கோயிலில் நவராத்திரி விழா நடைபெறவும் ஏற்பாடுசெய்தார். வைகாசி வசந்த விழா இவர் காலத்திலேயே தொடங்கியது. விழாக்கள் மலிந்த நகரம் என்னும் பெருமையை மதுரை பெற்றது. விழாக்கள் நடத்துவதற்கு வசதியாகக் கோயில்களில் கல்யாண மண்டபங்களும் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் போன்ற மண்டபங்கள் கட்டுவது என்ற விஜயநகரப் பேரரசின் கொள்கையைத் திருமலைநாயக்கரும் நிறைவேற்றினார். சிவ தத்துவப்படி 14 கால் மண்டபங்களும், வைணவ தத்துவப்படி 100 கால் மண்டபங்களும், ஆகம தத்துவப்படி 1000 கால் மண்டபங்களும் கட்டப்பட்டன.

ஏராளமான சத்திரங்களுக்கும் அவர் தாராளமாகப் பணம் வழங்கினார்; கண்மாய்களை வெட்டுவித்தார்.

சரிகை வேலைப்பாடு அமைந்த துணிகளை உடுத்தத் திருமலை நாயக்கர் மிகவும் விரும்பினார். அவற்றை நெய்வதற்காக இன்றைய

குஜராத்திலுள்ள சௌராஷ்டிரப் பகுதியிலிருந்து சௌராஷ்டிரர்களை வரவழைத்துத் தம் அரண்மனையைச் சுற்றி அவர்களைக் குடிவைத்தார்.

மைசூரை ஆண்ட நரச நாயக்கர் திண்டுக்கல் வரை வந்து திருமலை நாயக்கரின் படைவீரர்களுடைய மூக்கை அறுத்தார். அதற்குப் பதிலடியாகத் திருமலையின் தளபதியான இரகுநாத நாயக்கர் 25,000 வீரர்களைத் திரட்டித் திண்டுக்கல்லுக்கு அனுப்பி மைசூர்ப் படையினரின் மூக்கை அறுத்தார். மூக்கை அறுப்பதற்குரிய இரும்புக்கருவியை ஏந்திமதுரை வீரர்கள் திண்டுக்கல்லுக்குச் சென்றனர். மூக்கை அறுத்துத் தாடியோடு கொண்டு வந்த வீரர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. இப்போர் "மூக்கறுப்புப் போர்" என்று வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

ஓயாது நடந்த பல போர்களுக்கு அவர் பெரும்பணம் செலவழித்தாலும் நாட்டின் பொருளாதாரம் சீர்கெடவில்லை. விலைகள் மலிவாய் இருந்தன. ஒரு ரூபாய்க்கு 64 படி நெல் விற்றது. ஆகையால், குடிமக்கள் தொல்லைப்படவே இல்லை.

மதுரை இருக்கும்வரை மன்னன் திருமலையின் புகழும் நிலைக்கும். அவர் இறந்தும் இறவாதவர். விஜயநகரப் பேரரசு நிலைகுலைந்த பின்பு, ஆந்திர நாட்டில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டன. ஏற்கெனவே செல்வாக்குடன் விளங்கிய வடுகத் தலைவர்கள் தம் பரிவாரங்களோடு தமிழ்நாட்டில் குடியேறினர். போடி நாயக்கனூரும் அம்மையநாயக்கனூரும் இவ்வாறு நாயக்கர் தலைவர்களால் உண்டாக்கப் பெற்று அவர்கள் பெயரால் விளங்குகின்றன.

திருமலைக்குப்பின்

1659-இல் மீண்டும் மதுரையை முஸ்லிம்கள் படையெடுத்தனர். இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர், அவர்களுடன் போரிட்டு நாயக்க மன்னரின் பெருமையை நிலைநாட்டினார்.

சொக்கநாத நாயக்கர் காலத்தில் (1659–82) சிவாஜி படைகள் செஞ்சிக்குத் தெற்கேயும் வந்தன. வேறு பல தொல்லைகளும் ஏற்பட்டன. அவற்றைச் சமாளிக்கக் கூடிய அறிவுக் கூர்மையோ தந்திரமோ சொக்கநாதநாயக்கர்க்கு இல்லை. அவர்காலத்திலிருந்து நாயக்கர் பரம்பரை அழியத் தொடங்கியது. சொக்கநாதர், கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்கு மானியம் வழங்கினார்.

ராணி மங்கம்மாள்

மங்கம்மாள் நாயக்க மரபில் வந்த பேரரசி. அவள் அமைத்த சாலைகளாலும் வெட்டிய குளங்களாலும் செப்பனிட்ட கால்வாய்களாலும் கட்டிய சத்திரங்களாலும் மங்கம்மாள் பெயர் இன்னும் மங்காமல் இருக்கிறது. சாதுரியமாக முகலாயப் பேரரசிடம் நடந்து தஞ்சை நாட்டை அவர்களுடைய படை உதவியால் மீட்டுக்கொண்டாள். திருவாங்கூரும் இவள் ஆட்சிக்கு வந்தது.

துர்க்கை கோயில் போன்ற சில கோயில்களில் இவள் பிராமணர் அல்லாதாரைக் குருக்களாக நியமித்தாள். தமுக்கம் என்ற பெயரில் ஒரு மாளிகையைக் கட்டிக் கொண்டாள். இது 'தமகமு' (கோடை இல்லம் என்னும் பொருளுடைய தெலுங்குச் சொல்) என்பதன் மரூஉ. பிராமணப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க சௌராஷ்டிரர்களுக்கு மங்கம்மாள் அனுமதி கொடுத்தாள் மதவெறி பிடித்த ஔரங்கசீப் வாழ்ந்த காலத்தில் ஆட்சி செய்த போதிலும், ராணி மங்கம்மாள், எம் மதமும் சம்மதம் என்ற சர்வ சமய சமரசக் கொள்கையைப் பின்பற்றினாள்

பாசனவசதிகளைப் பெருக்குவதிலும் குடிநீர் வழங்குவதிலும் மங்கம்மாள் அக்கறை காட்டினாள்.

55 ஆவது வயதில் இவளை, இவளுடைய அமைச்சர் சிறைப்படுத்தினார். ஏன் அவ்வாறு செய்தார் என்பது இன்னும் தெளிவுபடாத வரலாற்றுப் புதிராகும்.

திருமலை நாயக்கரைப் போலவே, மங்கம்மாளும் பல கட்டடங்களைக் கட்டினாள். மதுரையில் கீழ ஆவணி மூலவீதியும் வடக்குச் சித்திரை வீதியும் சந்திக்கும் இடத்தில் இவள் பெரியதொரு மாளிகையைக் கட்டினாள். அதில் இப்பொழுது பொதுப் பணித்துறையின் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் இயங்கிவருகிறது.

மீனாட்சி நாயக்கன் (1731-39)

இவனுடைய ஆட்சியில் நாயக்கர்கள் செல்வாக்கு இழந்தனர். அதன் காரணமாக இவன் நஞ்சுதின்று இறந்தான் என்பர். மாறுபட்ட கருத்துக்களும் நிலவுகின்றன. 1739-வரை இவன் பதவியில் இருந்ததாகக் கூறப்படுகிற போதிலும் 1736லேயே

நாயக்கர் ஆட்சி, முஸ்லிம்களுக்கு உட்பட்டுஇயங்க வேண்டிய தாயிற்று. மசூதிகளுக்கு நிலமானியம் வழங்கி மீனாட்சி நாயக்கன் தன் பதவியைக் காப்பாற்றிக் கொண்டான்.

முஸ்லிம் ஆட்சி

கி. பி. 1734-இல் மதுரை மாநகர் முகமதலியின் கையில் இருந்தது. சில ஆண்டுகள் சென்றபின் ஆலம்கான் மதுரையைப் பிடித்துக் கொண்டான்.

முகமது யூசுப்கான் என்ற கான்சாகிப் கும்மந்தான் (1756 - 1764)

மதுரையின் வரலாற்றில் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் குறிப்பிடத்தக்கவன் கான்சாகிப் கும்மந்தான்.

இவனுடைய இயற்பெயர், கான்சாகிபு என்பதாகும். பண்ணையூரில் பிறந்த இவன், ஓர் ஆங்கிலேயத் தளபதியிடம் வேலைக்குச் சேர்ந்தான். அப்போது ஆங்கிலம் கற்று, பின்னர் ஆர்க்காட்டு நவாபின் படையில் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, படைத் தலைவனாக 'கமாண்டர்' ஆனான். இந்தப் பதவிப்பெயரை நாட்டுப்பாடல்கள் கமாந்தான், கும்மாந்தன், கும்தான் என்றெல்லாம் சிதைத்துக் கூறுகின்றன.

கும்மந்தான் கான்சாகிபை, பிரிட்டிஷார் தங்கள் சேவகத்தில் அமர்த்திக் கொண்டனர் டச்சுக்காரர் பிரெஞ்சுக்காரர் ஆகியோர்க்கு எதிராகப் பிரிட்டிஷார் பறங்கிப்பேட்டையிலும் பிற ஊர்களிலும் போர் நடத்தி, இவன் துணையுடன் வெற்றி பெற்றனர். பறங்கிப் பெண் ஒருத்தியை இவன் மணந்து கொண்டான்.

கான்சாகிப் கும்மந்தானின் ஆற்றலை உணர்ந்த ஆர்க்காட்டு நவாபு முகமது அலி இவனைத் தென் மாவட்டங்களுக்கு அனுப்பி, தனக்கு வரவேண்டிய கப்பங்களை வசூலிக்க சுபேதாராக நியமித்தான். ஆனால் இவன் நவாபின் ஆட்சிக்கு ஆதரவாக இருந்த பாளையக்காரர்களோடு பகைமை கொண்டு அவற்றைத் தானே கைப்பற்ற முயன்றான். டச்சுக்காரர் உதவியோடு, போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதிலும் கான்சாகிபு ஈடுபட்ட தாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

எனவே, கான்சாகிபுவைச் சுபேதார் பதவியிலிருந்து நீக்கவும் மதுரைப் பகுதியின் ஆட்சியைத் தானே கைப்பற்றி நடத்தவும் ஆர்க்காட்டு நவாபு முடிவுசெய்து, ஒரு படைக்குத் தானே தலைமை தாங்கி, கம்பெனிப் படை ஒன்றையும் துணைக்கு அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான்.

திருப்புவனத்திற்கு அருகே, இவ்விரு படைகளையும் கான்சாகிபு தாக்கினான் இரவில் தாக்குவதும் பகலில் ஓடி மறைந்து கொள்ளுவதுமாக கான்சாகிப் இருந்தான். இரு படைகளும் கான்சாகிபுக்காகத் திருப்புவனத்தில் காத்திராமல் மதுரையை நோக்கிச் சென்றன. பல மாதங்கள் நவாபின் படையும் கம்பெனிப் படையும் மதுரைக் கோட்டையை முற்றுகையிட்டன. கோட்டைச்சுவரின் ஒரு பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. ஆனால் உடனே அது சீராக்கப்பட்டது. ஆறுமாதங்கள் முற்றுகை நீடித்தது.

போரால் சாதிக்க இயலாமற் போனமை. பொன்னால், சாதிக்க முடிவு செய்ய ஆர்க்காட்டு நவாபு உறுதி கொண்டான். மதுரைத் தளபதி சீனிவாச ராவுக்கும் மார்ச்சண்டுக்கும் லஞ்சம் கொடுத்து, கான்சாகிபுவைத் தந்திரமாகப் பிடித்து வந்து தூக்கிலிட்டனர்.

கான்சாகிபு, மதுரைப் பகுதியில் ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

மேலூரிலிருந்து அழகர்கோயிலுக்குச் செல்லும் சாலையில் உள்ள வெள்ளாளப்பட்டியில், இவன் ஒரு கோட்டை கட்டினான்.

அரசாடி நீர்த்தொட்டிப் பகுதியில் பென்னர் இந்தியா தொழிற்சாலை உள்ள கிரம்ஸ்புரத்தில் கம்மந்தான் கான்சாகிபு தூக்கிலிடப்பட்ட இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்கிறது.

கான்சாகிபு கம்மந்தான் என்ற பெயரைக் 'கான்சா' என்று சுருக்கி இவன் பெயரால் மதுரையில் கான்சா மேட்டுத்தெரு உள்ளது.

திப்புசுல்தான்

ஹைதரலி திண்டுக்கல்லில் கோட்டை கட்டினார். அவர் மகன் திப்புசுல்தான் திண்டுக்கல்லுக்கு கலிக்காபாத் என்று பெயரிட்டு அங்குஒரு நாணயச்சாலையை நிறுவினான் இரண்டாவது மைசூர்ப் போரின் விளைவாக 1890-இல் திண்டுக்கல் சீமை ஆங்கிலேயர் வசப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி

1801-இல் மதுரைச்சீமை சென்னை இராசதானியின் ஆங்கிலேய கவர்னரின் ஆட்சிக்கு உட்பட்டது.

1885-இல் நில அளவு, நிலவரி முதலியவற்றுக்குச் சென்னை இராசதானி யெங்கும் ஆங்கிலேயர் ஒரே முறையைக் கடைப் பிடித்தனர். இதனுல் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. நெடுங்காலம் திண்டுக்கல்லுக்கு ஒரு தனிக் கலெக்டர் இருந்து வந்தார்.

மதுரை, கோடைக்கானல் ஆகிய இரு நகரங்களின் வளர்ச்சியில் ஆங்கிலேயர் அக்கறை காட்டினர். இங்கு ஆங்கிலேயர் பலர் வாழ்ந்தனர். இதனுல் மதுரையில் கலெக்டர், நீதிபதி, போலீஸ் துறைத் தலைவர் போன்ற பெரும் பதவிகள் ஆங்கிலேயருக்கே வழங்கப் பெற்றன.

கிறித்தவ மதம் ஆங்கிலேயர் ஆட்சியில் பெரிதும் பரவியது. ஆனுல் இந்துக் கோயில்களின் நடைமுறையில் ஆங்கிலேயர் தலையிடவில்லை. ரூஸ் பீட்டர் முதலிய ஆங்கிலேயக் கலெக்டர் கள் மதுரை மீனுட்சியம்மனிடம் ஈடுபாடுடையவராய்ப் பல நகைகளை அந்த அம்மனுக்கு வழங்கினர்.

பெரியாற்று நீர் வரவழைக்கப்பட்டு இம் மாவட்டத்தில் வேளாண்மை பெருக்கப்பட்டது ஆசியாவிலேயே பெரிய நூலாலைகளுள் ஒன்முன மதுரை ஆலையை ஆங்கிலேய வணிகர் நிறுவினர். இவ்வாறே திண்டுக்கல்லில் ஆங்கிலேயர் சுருட்டுத் தொழிற்சாலையும் ஏற்படுத்தினர்.

விடுதலை இயக்கம்

இந்திய விடுதலைப் போரில் மதுரை முக்கிய இடம் பெற்றிருக்கிறது. இதைப் பற்றி, நூலின் பிறிதொரு பகுதியில் விரிவாகக் கூறுவோம். மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையில் மதுரைக்குச் சிறப்பிடம் உண்டு.

சுதந்தரத்திற்குப்பின்

1947-இல் இந்தியா சுதந்தரம் பெற்றது. அதன் பயனுக இந்திய அரசும் மாநில அரசும் மதுரையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உள்ளன. அரசியலில் மதுரையின் முக்கியத்துவத்தை

எல்லாக் கட்சிகளும் உணர்ந்து போட்டாபோட்டி மனப்பான்மையுடன் கூட்டங்களும் மாநாடுகளும் கூட்டுகின்றன. இன்று மதுரையில் நடப்பது நாளை தமிழ்நாட்டில் நடக்கும் என்பது அரசியல் தலைவர்களின் கருத்து.

சுதந்தர இந்தியாவில் மதுரை ஒரு மாநகர நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது ஒரு பல்கலைக்கழக நகராகவும் மிளிருகிறது. சுற்றுலா நகராகவும் இதை அரசினர் ஏற்றுள்ளனர். குறுநில மன்னர்கள் ஒழிக்கப்பெற்றிருக்கின்றனர். வேளாண்மையிலும் தொழிலிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மருத்துவ வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. கண்பார்வை குறைந்தவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து மீண்டும் ஒளி வழங்கும் அரிய பணியை மதுரை தொடங்கி, தமிழ்நாடெங்கும் இப்போது பரவி வருகிறது. ஆகாய விமானப் போக்குவரத்தும் விரிவடைந்திருக்கிறது. கோடைக்கானல் மலைநகரம் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. பழனித் தலம், அதன் ஆட்சி முறையிலும் அங்கு வருவோர்க்கு வசதி செய்வதிலும், கோயில் வருவாயைச் செலவிடுவதிலும், திருப்பதி வெங்கடாசலபதிக் கோயிலைப் பின்பற்றி வருகிறது. ஏலக்காய், கோக்கோ போன்றவற்றின் விளைவுகளும் பல மடங்காக்கப்பட்டிருக்கின்றன. எண்ணமுடியாத அளவுக்கு அரசாங்க அலுவலகங்கள் பெருகியுள்ளன. ஊராட்சி ஒன்றியத் திட்டத்திலும் கிராமதான இயக்கத்திலும் மதுரைதான் தமிழ்நாட்டின் முன்னோடியாக இருக்கிறது. இசைவளர்ச்சியிலும் நாடகவளர்ச்சியிலும் மதுரை முன்போல இன்றும் முதலிடம் வகிக்கிறது. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மதுரை ஒரு நாளும் பின்வாங்கவில்லை. இன்றும் அப்பணியை மதுரையில் இயங்கும் நான்காம் தமிழ்ச் சங்கமும், மதுரைப் பல்கலைக்கழகமும், திருவள்ளுவர் கழகம் போன்ற அமைப்புகளும், பல மன்றங்களும், அடாது மழைபெய்தாலும் விடாது நடத்தும் பட்டிமன்றங்களும் இனிது செய்துவருகின்றன.

"பாண்டிய நின்னுடைத்து நல்ல தமிழ்" என்ற ஔவை வாக்கு இன்றைய மதுரைக்கும் பொருந்தும்.

3

வாழும் மக்கள்

1971-ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற மக்கள்தொகைக் கணக்குப்படி மதுரை மாவட்டத்தில் வாழும் மக்கள் ஏறத்தாழ 40 இலட்சம்பேர் ஆவார்கள். இவர்களில் நான்கில் ஒரு பங்கினர் மதுரை மாநகரத்திலும் அதன் 15 கி. மீ. சுற்றளவிலும் உள்ளனர். மற்றும் நான்கில் ஒரு பங்கினர் பெரியாறு, வைகை ஆறுகளும் அவற்றின் கிளைகளும் கால்களும் உள்ளபகுதிகளில் வாழ்கின்றனர். திண்டுக்கல் நகரத்தைச் சுற்றிய பகுதியிலும் மக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனர். கோடைக்கானல் வட்டத்திலும் இராமநாதபுர மாவட்டத்தின் எல்லையிலுள்ள ஊர்களிலும் மக்கள் நெருக்கம் குறைவாக உள்ளது.

இம்மாவட்டத்தில் பல மதத்தினரும் வாழ்கின்றனர். பல்வேறு காரணங்களால் ஆங்காங்கே குறிப்பிட்ட சாதியினர் எண்ணிக்கையில் ஏற்றம் பெற்றும், பொருள்வளத்தால் சிறந்தும் காணப்படுகின்றனர். இவர்களைப் பற்றி, தெரிந்தவரை ஓரளவு கூறுவோம். இவ்வாறு கூறுவதால் சாதியும் பிற பாகுபாடுகளும் நிலைத்திருக்க வேண்டுமென்று நாம் விரும்பவில்லை. இன்று நிலவும் சமூக, அரசியல், பொருளாதாரச் சூழல்களைப் புரிந்துகொள்ள, இந்தப் பின்னணி அறிவு இன்றியமையாதது.

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' அரசியல் தலைவர்களும் ஏனையோரும் தத்தமது சாதிக்காகத்தான் வாழ்கின்றனர். அப்பாவி மக்கள்தாம் இதில் ஏமாறுகிறார்கள்.

பார்சிகளைப்பற்றித் தெரியாமல் மகாராட்டிர மாநிலத்தையோ, சீக்கியரைப்பற்றி அறியாமல் பஞ்சாபு மாநிலத்தைப் பற்றியோ, ரெட்டிகளைப்பற்றி விவரிக்காமல் ஆந்திர மாநிலத்தைப் பற்றியோ புரிந்துகொள்ள இயலாது. எனவே, இன்றைய மதுரை மாவட்டத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு இன்றியமையாத சில விவரங்களை மட்டும் கொடுப்போம்.

முதலாவதாக, மக்கள் பின்பற்றும் மதங்களைக் கூறுவோம்.

சைவம்

தொன்றுதொட்டுச் சைவ மணம் கமழும் மாவட்டம் மதுரை. சமணத்தோடு நடந்த ஏராளமான போட்டிகளிலும் பூசல்களிலும் வாகை சூடி, சைவ சமயம் தமிழ்நாடெங்கும் மறுமலர்ச்சி பெறக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் மதுரை மாவட்டத்திலேயே நடைபெற்றன.

இம் மாவட்டத்துத் திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசகர், 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற சிறப்பை உடைய திருவாசகத்தை அருளியவர், எந்நாட்டார்க்கும் இறைவனான சிவபெருமான் தென்னாடுடையவன் என்று முழக்கமிட்டவர்.

சைவசமயத்துக்குப் பெருமைதரும் செயல்கள் பலவற்றின் நிகழிடம் மதுரையே. சம்பந்தருடைய தேவாரப் பதிக ஏடுகளை நெருப்பிலும் நீரிலும் இட்டு மெய்ப்பித்துச் சைவசமயமும் திருநீற்றின் ஒளியும் இங்கு விளங்கி எங்கும் பரவியுள. 64 திருவிளையாடல்களைச் சிவபெருமான் இங்குச் செய்து காட்டினார் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். திருநீறு, கண்மணி (உருத்திராக்கமணி), சடைமுடி அணிந்து மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனார் போன்ற பெரியோர்கள் வாழ்ந்த திருத்தலம் மதுரை.

சக்தி வழிபாட்டுக்குச் சிறப்பானது என்று சைவர்கள் கருதும் தலங்களுள் ஒன்றாகவும் மதுரை அமைந்துள்ளது. பாடல் பெற்ற பதிகள் இந்த மாவட்டத்தில் உள. முருகனின் அறுபடை வீடுகளில் மூன்றை உடைய சிறப்பும் மதுரை மாவட்டத்தைச் சாரும்.

கண்ணகி வழிபாடும், கருப்பண்ணசாமி, மதுரைவீரன், மற்றும் சடாமுனி போன்ற சிறு தெய்வவழிபாடும் மொட்டைக் கோபுரத்து முனி முதலிய முனிவர்களையும் வழிபடும் வழக்கமும் நெடுங்காலமாக மதுரையில் இருந்துவந்திருக்கிறது; இன்றும் நின்று நிலவுகிறது.

மதுரையில் சொக்கநாதரராய், சோமசுந்தரராய்க் கோயில் கொண்டிருக்கும் சிவலிங்கம், சுயம்புலிங்கங்களுக்குள் முதன்மை யானது என்பார் அப்பர். மதுரைக் கோயிலில் சைவசமயம் உயிர்த்துடிப்புடன் காட்சி தருகிறது.

சைவம் பரப்பும் திருமடங்களில் மூன்று மடங்கள் மதுரைத் தொடர்பை உடையன. பரசமய கோளரியான திருஞானசம்பந்தர், வாகீச முனிவரைத் தலைவராக நியமித்து நிறுவியது மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம். தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்த குருஞான சம்பந்தர் இறையருள் பெற்ற தலம் மதுரை. காசியில் குமாரசாமி மடம் கண்ட குமரகுருபரர் வாழ்க்கையில் பெரியதொரு திருப்பம் ஏற்பட்டதும் மதுரை மாநகரிலேயே ஆகும்.

திருமடங்கள்

பழங்காலத்திலிருந்து தமிழகத்தின் சிறப்பான தலங்களில் திரு மடங்கள் இருந்து வந்துள்ளன. அவை சமயத்தையும் தமிழையும் வளர்ப்பதில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தன. சில தலங்களில் நூற்றுக்கணக்கான சிறு மடங்கள் இருந்திருக் கின்றன.

கல்வெட்டுகள் நூற்றுக்கணக்கான மடங்கள் இருந்தன என்பதைக் குறிக்கின்றன. இம் மடங்கள் மக்களிடையே கல்வியையும் ஒழுக்கத்தையும் வளர்த்தன பொதுமக்களுக்கு நற்பணி பல ஆற்றின. புலவர்களும் சான்றோர்களும் துறவிகளும் பெருக இவை நிலைக்களங்களாகத் திகழ்ந்தன.

இப்போது மதுரை மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க ஆதீனமாக இருப்பது, தெற்கு ஆவணி மூல வீதியிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனம் மட்டுமே ஆகும்.

திருஞானசம்பந்தர் சமணர்களை ஒழித்துச் சைவத்தை நிலைநாட்டியபோது, தம் பணியைத் தொடர்ந்து செய்துவர நிறுவனமொன்று தேவை என்பதை உணர்ந்தார். அதன் விளைவாக இந்தத் திருமடத்தை நிறுவினார்.

திருஞானசம்பந்தர் காலத்துக்குப் பிறகு அவருடைய சீடர் வாகீச முனிவர் இந் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்ருர். அவர் சொக்கலிங்கப்பெருமானின் கோயிலை விரிவுபடுத்திஞர் என்றும், வைகாசி மூலத்தில் திருஞானசம்பந்தருக்குக் குருபூசை செய்யும் ஏற்பாட்டைத் தொடங்கிஞர் என்றும் கூறுவர்.

மதுரை மீஞட்சியம்மன் கோயில், பல நூற்ருண்டுகளாக இந்த ஆதீன ஆட்சியில் இருந்து வந்தது. இராமேசுவரம் கோயிலும் 19-ஆம் நூற்ருண்டில் சில காலம் இந்த ஆதீனத்தாரின் ஆட்சியில் இருந்தது. அந்தக்காலம் ஆறுமுக தேசிகர் என்பவர் பட்டத்திலிருந்து சேதுபதிகளுக்கு ஆச்சாரியராகவும் விளங்கிஞர்.

இந்த ஆதீனத்துக்கு உட்பட்ட சில கோயில்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ளன. அவையாவன.

(1) திருத்தருப்பூண்டி வட்டம் 26-ஆம் எண் பன்னதெரு கிராமத்தில் திருமுகத்தலைக்கோயில் (ஸ்ரீ பன்னகா பரமேசுவர சுவாமி தேவஸ்தானம்). இது, கருவூர்த் தேவர் பாடல்பெற்றது.

(2) திருத்தருப்பூண்டி வட்டம் – கச்சனம் (பாடல் பெற்றது)

(3) கும்பகோணம் அருகேயுள்ள திருப்புறம்பயம் (பாடல் பெற்றது)

(4) நரசிங்கம்பேட்டை அருகேயுள்ள துயில்கஞ்சனூர்.

இந்த ஆதீனத்தில் இப்போது 291-ஆவது பட்டமாக திருவருள் தவயோக ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் இருந்து வருகிருர்கள்.

இளவரசாக ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் இருந்து வருகிருர்கள்.

291-ஆவது பட்டம் ஆதீனகர்த்தர் அவர்கள் பதவிக்கு வந்ததுமுதல் பிற மதத்தினரிடம் சைவ சமயத்தின் சிறப்புகளை ஆணித்தரமாக எடுத்துக் கூறி மனமாற்றம் செய்து வருகிருர்கள். நூல்களை வெளியிட்டும் மேடைகளில் முழங்கியும் சைவ சமயத்துக்குப் புத்துயிரூட்டி வருகிருர்கள்.

ஆவணி மூல விழா மதுரையில் நடைபெறும் சிறப்பான விழாவாகும். சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலை நினைவூட்டுவது. இவ்விழாவின் இறுதியில் இறைவனும் இறைவியும் வீதிவலம் செல்லும் வீதியே ஆவணி மூல வீதியாகும். அந்நாளில் இந்த மடத்துத் திருவாயிலில் சிறப்பான மண்டகப்படிகளை ஆதீனகர்த்தர் நடத்துவது மரபு.

மேல மாசி வீதியிலுள்ள திருஞானசம்பந்தர் தெரு இப்போதுகல்லறைச் சந்து என வழங்குவது மீண்டும் பெயர் மாற்றப் பெற வேண்டும்.

பிற நகரங்களில் கோழி கூவிப் பொழுது புலர்வது வழக்கம். ஆனால், மறைகளின் பண் முழக்கம் கேட்டுத்தான் மதுரையில் பொழுது புலரும் என்று பரிபாடல் என்னும் பழமையான நூல் கூறுகிறது.

இச் சிறப்புக்கு ஏற்ப, தமிழ்நாட்டு மடாலயங்களிலேயே காலத்தால் பழமையான திருஞானசம்பந்தர் ஆதீனம் இந்த நகரத்தில் உள்ளது.

திருஞானசம்பந்தர் திருமேனி, இங்குப் பூசையில் இருந்து வருகிறது.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர் சிலர் சைவசமயத்தினராக இல்லாவிட்டாலும், அவர்கள் இச் சமயத்துக்கு ஆக்கம் கொடுக்கத் தவறியதில்லை. சான்றாக, முத்துவீரப்ப நாயக்கர் (1609 – 1623), திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஈசானத் தம்பிரானை வரவழைத்துத் தலயாத்திரை செய்யச் சொல்லி, பாபநாசம், திருப்புடைமருதூர், செவ்வல், திருநெல்வேலி, முரப்பநாடு, வள்ளியூர் ஆகிய ஆறு ஊர்களில் கிளை மடங்கள் நிறுவச்செய்து அவற்றுக்குத் தேவையான நிலங்களை முற்றூட்டாக வழங்கினார்.

பிரம்மானந்த சுவாமிகள் மடம், தெற்கு வாசலுக்கு அருகே இரயில் பாதையைக் கடக்கும் இடத்தில் உள்ளது. தெற்கு வெளி வீதியில் 164-ஆம் கதவு இலக்கம்கொண்டு குட்டையைய சுவாமிகள் மடாலயம் உள்ளது. இன்னும் பல மடங்களும் உள்ளன.

குட்டையைய சுவாமிகள், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார். சுவாமி சந்நிதியில் கொடிமரத்தைச் சூழச் சிற்பக்கலை எழிலுடன் அமைந்துள்ள

க்ப்பத்தடி மண்டபம் என்ற நந்தி மண்டபத்தை எட்டுத் தூண்களுடன் அமைத்தவர் இவரே. சிவரகசியம் என்னும் நூலில் கூறப்பெற்றவாறு 25 மூர்த்திகள் இந்த எட்டுத் தூண்களிலும் வடிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

'தென்னாடு உடைய சிவனே போற்றி' என்று சைவர்கள் பெருமை கொண்டாடுவது, மதுரை மாவட்டத்திற்கு முற்றிலும் பொருந்தும்.

ஆதிசைவர் (என்ற தமிழர்கள்), ஆரியர்களின் சமயக் கோட்பாடுகள், ஆசாரங்கள், சமூகப் பழக்கவழக்கங்கள், இலக்கியப் பண்புகள் ஆகியவற்றைப் பின்பற்றியதையும் மதுரையில் பார்க்கிறோம். ஆரியர் வருகைக்குமுன் மதுரைவீரன், கண்ணகி, செல்லத்தம்மன், மொட்டைக்கோபுரத்து முனி, பிடாரி, சடாமுனி ஆகிய தெய்வங்களையே திராவிடர் சிறப்பாக வழிபட்டனர். ஆரியர் வந்தபிறகு, 'ஓண்டவந்த பிடாரி, ஊர்ப் பிடாரியை விரட்டிற்று' என்னும் பழமொழி ஏற்பட்டது. எனவே, இத் தெய்வங்கள், முன்னர் முக்கியமான பெரிய கோயில்களுக்குள் கருவறையில் இருந்திருக்கவேண்டும்.

மொழியியலில் ஆரியர்கள் உரையாசிரியர்களாகச் சிறந்து விளங்கினர். தமிழ் வடிவம் பெற்ற வடசொற்கள் தமிழில் புகுந்தன. அகத்தியரைப் பற்றிய பல கதைகளும் பரப்பப்பட்டன

நாலடி நானூறு என்னும் தமிழ் நீதிநூல் தோன்றிய காலத்தில் சமண முனிவர் எண்ணாயிரம்பேர் வடக்கே தம் நாடுகளில் பஞ்சம் நிலவியதால் பாண்டிநாட்டிற்கு வந்தனர் என்றும், பாண்டிய அரசர்களின் ஆதரவு பெற்றனர் என்றும் தெரிகிறது. இவர்கள் இங்கு வேரூன்றியிருந்த சைவசமயத்திற்குச் சவால் விட்டுத் தோல்வியடைந்தனர்.

வைணவம்

பாண்டிய நாட்டில் வைணவம் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. எனினும் முதன்மை சைவசமயத்துக்கே இருந்தது.

பாண்டிய மன்னர்கள் அனைவரும் சைவநெறியைப் பின்பற்றினர். எனினும், அவர்கள் வைணவத்தை வெறுத்தார்கள் இல்லை. சங்ககாலப் பாண்டிய மன்னருள் ஒருவனான கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, அழகர்கோயில் இறைவனின் பரம பக்தனாக இருந்தான். கி. பி. 765 முதல் 790 வரை ஆட்சிபுரிந்த

நெடுஞ்சடையப் பராந்தகன் என்னும் வரகுண பாண்டியன் 'பரம வைஷ்ணவநாம தனிக' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொண்டான். அவன் திருமாலுக்குக் கோயில் கட்டிய செய்தி சீவரமங்கலச் செப்பேடுகளில்,

> காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
> திருமாலுக்கு அமர்ந்துறையக்
> குன்ற மன்னதோர் கோயிலாக்கியும்

என்னும் வரிகளால் தெரிகிறது. இவன் காலத்தில் ஆனைமலையில் நரசிங்கப்பெருமாள் குடைவரைக் கோயில் கட்டிமுடிக்கப் பெற்றது. பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரும் பாண்டியநாட்டினரும், இவன்காலத்தில் வாழ்ந்தவருமான பெரியாழ்வாரை, இவன் தன்னுடைய ஞானகுருவாக ஏற்றுக்கொண்டிருந்தான்.

பிற சமயத்தவருடன் வாதிட்டுச் சைவசமயத்தைத் திருஞானசம்பந்தர் நிலைநாட்டியது போன்று பெரியாழ்வாரும் பிற சமயத்தாருடன் வாதிட்டு வைணவத்தை நிலைநிறுத்தினார். வைணவர்களின் திராவிட வேதமாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் தொடக்கப் பாசுரங்கள் மதுரை மாநகரில் பிறந்தவையே. பெரியாழ்வாருக்கு முன்னால் தோன்றிய ஆழ்வார் பலர் அருளிய பாசுரங்கள் பல இருந்தும், இந்த ஆழ்வார், பாண்டிய மன்னனுடைய அவையில் திருமாலின் பெருமையை நிலைநாட்டி, பாண்டியனிடமிருந்து பொற்கிழி பெற்றார் என்பதைச் சான்றோர் அறிவர்.

ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபனும் அவன்பேரன் வீரநாராயணனும், வைணவத்தைத் தழுவினர். இவர்கட்கு இடைப்பட்ட இரண்டாம் வரகுணன், சைவனாக இருந்தான். பாண்டிய நாட்டில் சைவ வைணவச் சச்சரவுகள் முன்னாளில் இல்லை; இந்நாளிலும் இல்லை என்பது நம் கவனத்திற்கு உரியது.

13-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட மாவீரன் சடாவர்மன் சுந்தர பாண்டியன் பொன்வேய்ந்த கோயில்கள், சைவர், வைணவர் ஆகிய இரு சமயத்தார்க்கும் முறையே முதன்மையான தலங்களாக விளங்கும் தில்லையும் திருவரங்கமும் ஆகும்.

பாண்டியர்கள் இந்துக்களின் ஆறு சமயங்களையும் ஆதரித்தனர் என்பது,

'.......... அறுசமயத்து அறநெறியுந்
திருத்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்க'

என்னும் சடாவர்மன் சுந்தர பாண்டியனின் மெய்க்கீர்த்தியால் உணரப்படும்.

நாயக்க மன்னர்களின் ஆட்சியில் மதுரை மீனுட்சியம்மன் திருக்கோயிலின் முதன்மைக்கு முரண்படாத வகையில் வைணவம் ஏற்றம்பெற்றது. பிற்காலப்பாண்டியர் ஆட்சியிலும் நாயக்கர் ஆட்சியிலும் ஏற்பட்ட வைணவக் கோயில்களை மாவட்டம் முழுவதும் காணுகிரோம். ஆனால் மதுரை, அழகர்கோயில், திண்டுக்கல் ஆகிய நகர்ப் பகுதிகளில் மட்டுமே வைணவக் கோயில்கள் புகழுடன் திகழ்கின்றன. சைவ வைணவக் கோயில்களை இணைக்கும் விழாவாகச் சித்திரைப் பெருவிழா கொண்டாடப் பெறும் சிறப்பும் மதுரைமாவட்டத்திற்கு உரியது.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருமோகூர்த் திருக்கோயிலும் பாண்டியமன்னர்களின் வைணவப் பற்றுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இது 1978-இல் புதுப்பிக்கப் பெற்றது

வைணவ ஆச்சாரியார்களுள் பெரும்புகழ் பெற்ற மணவாள மாமுனிகள் அவதரித்த கொந்தகை, இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த ஊராயினும், மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதியிலுள்ளது.

வைணவ சமயத் துறவிகள் பரமபதம் அடைந்தபின்பு அவர்களுடைய உடல் புதைக்கப்பட்ட இடத்தில் கோயில் எழுப்புவது மரபு. அவர்கள் பள்ளிப்படுத்தப்பட்ட இடத்தில் அவர்களுடைய 'இஷ்ட தெய்வம்' அமைத்து, பக்தர்கள் வழிபடுவர்.

மதுரைமாவட்டத்தில் இரண்டுபிருந்தாவனங்கள் உள்ளன. துவரிமானில் அகோபில மடத்தின் 40-ஆவது பட்டத்துச் சுவாமிகளின் பிருந்தாவனம் இருக்கிறது. ஸ்ரீமத் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்திர மகாதேசிகன் அழகிய சிங்கர் என்று இச் சுவாமிகளைக் குறிப்பர். இந்தச் சுவாமிகளின் இஷ்ட தெய்வமான ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர், இப் பிருந்தாவனத்தில் வழிபடப் பெறுகிருர்.

ஸ்ரீமத் நடன்கோபாலநாயகி சுவாமிகளின் பிருந்தாவனம் என்பது இரண்டாவது. இந்தச் சுவாமிகள் 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தார்கள். மஞ்சள் அரைத்துப் பூசி, பெண்களைப்போன்று புடவையும் நகைகளும் அணிந்து, திருமாலைத் தம் நாயகன் என்று பாடி, இந்தச் சுவாமிகள் வைணவத்தை வளர்த்தார்கள். சுவாமி களின் பிருந்தாவனம், அழகர்கோயில் சாலையில் காதக்கிணறு என்னும் இடத்தில் உள்ளது. அங்கு வேணுகோபாலன் வழிபாடு நிகழ்கிறது.

கூடலழகர் கோயில்

மதுரை மாநகரின் நிலையாய வைணவக் கோயில் இதுவே. இக்கோயில் உள்ள பகுதி 'இருந்தையூர்' என்று பெயர் பெற்றிருக்கலாம் என்று பெரும்புலவர் ஆ. கார்மேகக் கோனூர் தெரிவித்துள்ளார். பரிபாடல் குறிக்கும் இருந்தையூர், இதுவாக இருத்தல் கூடும். 'இருந்தவளமுடையார் இருக்கும் ஊர்' இருந்தவூர் என்று பெயர்பெற்று, பின்னர் இருந்தையூர் எனத் திரிந்தும் மருவியும் இருக்கலாம். இருந்தையூர் கருங்கோழி மோசியார் என்னும் புலவர் இவ்வூரினர் போலும்.

வெற்றிலைப்பேட்டைக்கு அருகே முனிச்சாலை என்னும் இடத்தில் அந்தரவானம் தண்ணீர்ப் பந்தல் தெரு என்று ஒரு தெரு உள்ளது. இது கூடல் அழகப் பெருமானுக்கு அந்தரவானத் தெம்பெருமான் என்னும் பெயர் அமைந்திருந்ததற்குச் சான்று பகருகிறது.

கூடல் அழகர் கோயில், மேலமாசி வீதி, தெற்குமாசிவீதி ஆகிய இரு வீதிகளும் சந்திக்கும் இடத்திற்கு அருகே மதுரை அகநகரின் தென்மேற்கு மூலையில் உள்ளது. இங்கே கோயில் கொண்டுள்ள திருமால் (1) இருந்த கோலம், (2) நின்ற கோலம், (3) கிடந்த கோலம் ஆகிய மூவகை நிலைகளிலும் காட்சி தந்து கூடலழகர் என்னும் பெயருடன் ஸ்ரீ தேவி, பூமாதேவி இருவருடனும் எழுந்தருளியுள்ளார்.

மூலவர் கோயிலின் மீது அஷ்டாங்க விமானம் கட்டப் பட்டிருக்கிறது. முதல் மாடியில் நெடுமாலின் நின்ற கோலத்தை யும் இரண்டாம் மாடியில் பள்ளிகொண்ட திருக்கோலத்தையும் காணலாம்.

இப்பெருமாள் திருமுன்புக்குத் தென்பால் மதுரவல்லித் தாயார் திருமுன்பும், வடபால் ஆண்டாள் திருமுன்பும் அமைந்துள்ளன.

இக்கோயிலை (1) திருமங்கை ஆழ்வார், (2) பெரியாழ்வார், (3) திருமழிசை ஆழ்வார் ஆகியோர் பாடியுள்ளனர். சிறப்புச் சிறப்பும் இக்கோயிலுக்கு உரியது.

குரவைக் கூத்தின் இறுதியில் மாதரி நெடுமாலை வழிபடச் சென்றதாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. அவள் அவ்வாறு வழிபட்ட நெடுமாலின் திருப்பெயரை, ஸ்ரீ இருந்தவளமுடையார் என்று அரும்பதவுரை ஆசிரியரும் அந்தரவானத் தெம்பெருமான் என்று அடியார்க்கு நல்லாரும் கூறுவர். இருந்த கோலத்தில் காணப்பெறும் பெருமான் ஸ்ரீ இருந்தவளமுடையார்; விமானத்தில் காணப்பெறும் பெருமான் அந்தரவானத்தெம் பெருமான். எனவே இவ்விரு பெயர்களும் கூடல் அழகரையே குறிப்பன.

இம் மாவட்டத்தில் வைணவத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அழகர் கோயிலைப் பற்றியும் திருமோகூரைப் பற்றியும் சொல்ல வேண்டும். இவைபற்றி, இந்நூலின் பிற பகுதிகளில் விரிவாகக் கூறுவோம்.

இம் மாவட்டத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தைப் போல, சைவ—வைணவச் சண்டை இல்லை என்பதும் இங்கு நிகழும் சித்திரைத் திருவிழா, கள்ளழகரும் பங்கு கொள்ளும் சிறப்புடையது என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கன.

பெரியாழ்வாருக்கு மகாவிஷ்ணு காட்சி கொடுத்த 'மெய்காட்டு பொட்டல்' என்னும் இடம் இந்நாளில் 'மேங்காட்டுப் பொட்டல்' எனவும் 'Main Guard Square' எனவும் பேர் பெற்றிருக்கிறது. தமக்கு இறைவன் காட்சி கொடுத்ததற்காகப் பெரியாழ்வார் இறைவனுக்கே பல்லாண்டு பாடினார். ஓராண்டுக்கு ஒரு முறை கூடலழகர் கோயிலிலிருந்து உற்சவரை இங்குக் கொண்டுவந்து விழா நடத்துகின்றனர்.

சமணம்

இம்மதம் ஜைனம் என்றும் சைனம் என்றும் பெயர் பெறும். இச் சமயத்தினர் வழிபடும் கடவுள் அருகன் எனப்படுவார். சமணர் என்னும் சொல் உடையற்றவர், பற்றற்றவர் எனப் பொருள்படும்.

சமணத்தின் வருகை

வட இந்தியாவிலிருந்து வந்த சமணத் துறவிகள் இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள "சிரவணபெலகோலா" என்னும் இடத்தில் மையம்கொண்டு தென்னிந்தியாவில் சமணத்தைப் பரப்பினர். சில ஆயிரம் சமணத் துறவிகள் சிரவணபெலகோலாவிலிருந்து மதுரைக்கு வந்து திகம்பர சைன மதத்தைப் பரப்பினர் என்பது பாலி மொழியிலுள்ள நூல்களாலும் தமிழ் நூல்களாலும் உறுதிப்படுகிறது

சங்ககாலத்தில் சமணம்

பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் மதுரையில் சமணம் பரவியிருந்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மதுரையில் சைனப்பள்ளி இருந்தது "அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளி" என்று இக்கோயிலைச் சிலம்பு (14:12) குறிப்பிடுகிறது. மதுரை சைனப்பள்ளியைப்பற்றி மதுரைக்காஞ்சியும் (வரி 475 – 487) கூறுகிறது.

சமணத்துறவிகள் தங்கியிருந்த குகைகளும் படுக்கைகளும் மதுரையைச் சுற்றியுள்ள ஆனைமலை, மேலக்குயில்குடி முதலிய மலைகள் பலவற்றிலும், கீழவளவுக்கு அருகேயுள்ள பஞ்சபாண்டவர் மலையிலும், திண்டுக்கல்லுக்கு அருகே கரூர்ச் சாலையில் சுக்கலியூர் என்னும் ஊர்க்குன்றிலும் கி. மு. 2-ஆம் நூற்றாண்டு முதலே இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

இயேசு பிறப்பதற்கு முன்னரே சமணர் மதுரைநகர்க்கு வந்தனர் என்றும், கூடல் என்னும் பெயருக்கு மாறாக மதுரை என்னும் பெயரைச் சமணரே இட்டனர் என்றும் ஆராய்ச்சியாளர் டாக்டர் க. ப. அறவாணன் கருதுகிறார்.

சமணர் வாழ்ந்த குகைகள்

சமணத் துறவிகள், மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தங்கினர். அவை எளிதில் அடையமுடியாத இடத்திலும் இயற்கையாக அமைந்த சுனைகளின் அருகிலும் உள்ளன. மன அமைதியுடன் இருக்க இத்தகைய சூழ்நிலைகளை விரும்பி அவர்கள் அங்கு வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு அரசர்களும் வணிகர்களும் குகைகளின் உட்புறத்தைத் தங்குவதற்கு ஏற்ப மழமழப்பாக்கியும், கல்லிலேயே தலையணைபோன்ற அமைப்பினைச் செய்தும் அளித்தனர். அவ்வாறு அளித்ததைக் குறிப்பதற்காக

அப்படுக்கைகளின் மேலும், குகையின் முகப்பிலும் கல்வெட்டுகளாகப் பொறித்தனர். இப் படுக்கைகள் "பாழி" என்றும் "பஞ்சபாண்டவர் படுக்கைகள்" என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தகைய படுக்கைகள் தமிழகத்தின் பல குன்றுகளில் காணப் படுகின்றன.

சமணர் தங்கிய மலைகளும் குன்றுகளும் எங்கு ஏராளமாக இருக்கின்றன என்று பார்க்கும்பொழுது ஓர் உண்மையும் வெளிப் படுகிறது. முடியுடை மூவேந்தர் தலைநகர்களைச் சுற்றியே இவை பெரும்பாலும் காணப்படுகின்றன. சங்கம் வைத்துச் சிறந்த தமிழ்மதுரை, சேரர் தலைநகராம் கருவூர், சோழர் உறைவிடமாம் உறையூர், பல்லவர் தலைநகரான காஞ்சி ஆகிய நகர்களின் அருகே இக் கல்வெட்டுகள் மிகுதியாக இருக்கின்றன. நாடாண்ட அரசர்களும், பொருள் ஈட்டுவதிலே முனைந்திருந்த வணிகர்களும் தானங்கள் கொடுத்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பதிலிருந்து அரசியல் செல்வாக்கும், வணிகப் பெருமக்களுடைய போற்றுதலும் இச் சமயத்தார்க்கு முழுமையாகக் கிட்டின என்று தெரிகிறது.

இவ்வாறு கிடைத்துள்ள கல்வெட்டுகளில் காலத்தால் தொன்மையானது, பாண்டியப் பெருமன்னன் "பணவன், கடலன், வழுதி" என்று பட்டம் ஏற்ற நெடுஞ்செழியனுடையது என்று அவன் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். மதுரையிலிருந்து ஏறத்தாழ 20 கி. மீ. தொலைவில் மீனாட்சிபுரம் என்னும் சிற்றூரில் அவன் கொடுத்த சமணப்பாழி இருக்கிறது.

திருமாலிருஞ்சோலை என்றும் பழமுதிர்சோலை என்றும் புகழ்ப்பெறும் அழகர்மலையிலும் கி மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் இருக்கைகளும்இருக்கின்றன. அழகர்மலை ஊரிலிருந்து மலையோரமாகச் செல்லும் நெடுஞ்சாலையில் ஏழு கி. மீ. தொலைவில் கரடிப்பட்டி என்னும் சிற்றூர் இருக்கிறது இங்கிருந்து 3 கி மீ. தூரத்தில் புதர்மண்டிக் கிடக்கும் பாதையில் சென்று நெட்டுக்குத்தலாக உள்ள மலைமீது ஏறிச் சமணர் தங்கியிருந்த பகுதியை அடையலாம். மதுரையில் இருந்த வணிகர்கள் பலர் அங்குப் பாழி அமைக்க, பெரும் பொருள் வழங்கியிருக்கிறார்கள். உப்பு வணிகன், பொன் வணிகன், கூலவணிகன் முதலிய பல்துறை வணிகர்களும் பொருள் கொடுத்ததைப் பத்துமீட்டர் உயரத்திற்கும் மேலே பாறை முகட்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் காணலாம்,

மணிவாசகப் பெருமான் பிறந்த திருவாதவூரிலும் கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே சமணப்பெரியார்கள் வாழ்ந்த தடயங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இதுபோல் கருங்காலக்குடி, கீழவளவு, கொங்கர்புளியங்குளம், முத்துப்பட்டி, மேட்டுப்பட்டி, வரிச்சியூர் ஆகிய இடங்களில் சமணப்பெரியார்கள் வாழ்ந்த இடங்களும் கல்வெட்டுகளும் அன்று எவ்வளவு மேன்மை யான நிலையில் இச்சமயம் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

சமணர்கள் பழங்காலத்தில் மிகுதியும் தங்கிவாழ்ந்த எட்டு மலைகள்,

"பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை- இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

என்று பெருந்தொகை வெண்பா கூறுகிறது. இருங்குன்றம் என்ற மாலிருஞ்சோலையில் சமணர்களும் பௌத்தர்களும் வாழ்ந்து வந்தனர் என்று மேற்கண்ட வெண்பாவை ஆதரித்து, அடியிற் காணும் திருமங்கை மன்னன் பாசுரம் [பெரிய திருமொழி] கூறுவது காணலாம்.

"புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவும் உகந்திட்டு
எந்தை பெம்மானு ரிமையவர் தலைவர்
எண்ணிமுன் னிடங்கொண்ட கோயில்."

இந்த மலைகளில் மட்டும் சமணப் பெரியார்கள் வாழ்ந்தார்கள் என்று நினைத்துவிடவேண்டாம். மதுரையைச் சுற்றியுள்ள எல்லா மலைக்குன்றுகளிலும் சமணப்பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் இருக்கின்றன. சற்றேறக்குறைய கிறிஸ்துவின் சமகாலத்துச் சமணக் கல்வெட்டுகள் ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் உள்ளன. "ஆனைமாமலை ஆதியாய இடங்களில்" என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றாரே அந்த மலையினுடைய பெயர் 'இவகுன்றம்' என்று [இவம்-யானை: யானைக்குன்று] 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக் கூறுகின்றது. அப்பொழுதிருந்தே இம்மலை 'யானைமலை' என்று பெயர் பெற்றுள்ளது என்பதற்கு இது சான்று.

திருப்பரங்குன்றத்தில் அந்துவன் என்ற ஒருவர் கற்படுக்கை கொடுத்துள்ளார். சங்க இலக்கியத்தில் நல்லந்துவன் என ஒரு புலவர் குறிக்கப்படுகிறார்.

திருப்பரங்குன்றம், ஆனைமலை, கீழக்குயில்குடி முதலிய இடங்களில் சமண தீர்த்தங்கரர் உருவங்கள் செதுக்கப்பெற்று, வழிபாட்டுக்காகப் பொருள்களும் நிலங்களும் கொடுக்கப் பெற்றன.

மதுரைக் காஞ்சி என்னும் நூலில் மாங்குடிமருதனார் மதுரையில் சமணசமயம் பரவியிருந்ததை, பின்வரும் கருத்துப் படப் பாடியிருக்கிறார். "அருக சமயத்தினர் முக்காலமும் உணரத்தக்க அறிவைப் பெற்றவர். அவர்களுக்குத் தேவருலகத் திலும் பிறஇடங்களிலும் நடைபெறும் செய்திகளைத் தாமிருந்த இடத்திலிருந்தே அறியும் ஆற்றலுண்டு. கல்விகளெல்லாம் நிறைந்து களிப்பின்றியடங்கின. அறிஞர்களாகிய அவர்கள் தாங்குதற்கரிய பல விரதங்களைத் தாங்கியும் உடல் இளைக்கப் பெறுதவர்களாயிருந்தனர். கல்லைப் பொளிந்தாற் போன்ற சிறிய வாயையுடைய குண்டிகையைப் பல கயிறுகளாலமைந்த உறியிலே கட்டித் தொங்க விட்டிருந்தனர். அவர்களின் இல்லங்கள் குளிர்ந்த குளங்களைப் போலத் தண்ணென்றிருந்தன. சுவர்கள் செம்பாற் செய்தனபோல விளங்கின. அவற்றிலே பலவகைச் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. மேல்நிலம் பார்ப்பவர் கண்களைத் தகைக்கும்படி உயர்ந்திருந்தது. மலைகள் பல ஒருங்கே திரண்டு நின்றனவோவென அவ்வில்லங்கள் தோன்றின. அவற்றைச் சூழ்ந்து பூஞ்சோலைகள் மணம் வீசின. அங்கிருந்து கொண்டு சமணர்கள் தங்களுக்குரிய அந்திப் பூசைகளைச் செவ்வனே செய்தனர்"

மேலூரிலிருந்து 16. கி. மீ. தொலைவில் கொட்டாம்பட்டிச் சாலையில் உள்ள கருங்காலக்குடிக்கு அப்பால் 2 கி. மீ. தூரத்தில் ஒரு மலை உள்ளது. பஞ்சபாண்டவர் மலையென்று தவறாகக் குறிப்பிடப்படும் இப்பகுதி, சமணர் வாழ்ந்த மலையே ஆகும்.

திருவாதவூர்ப் புறத்தேயுள்ள சிறுகுன்று ஒன்றில் இயற்கை யான குகைத்தளத்தில் கல்வெட்டுகள் உள்ளன. இல்வாழ்க்கை வாழ்ந்து சமயநெறியில் நிற்பவர்களைக் குறிக்கச் சமணர் பயன்படுத்தும் "உபாசம்", "பரசு" என்னும் சொற்கள் இக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. எனவே, சமணக் குடும்பங்கள் இங்கு வாழ்ந்தன என்று கொள்ளலாம்.

மேலூரிலிருந்து 8 கி. மீ தொலைவில் திருப்புத்தூர்ச் சாலையில் கீழவளவுக்குச் சற்று மேற்கே ஒரு மலை உளது. பஞ்சபாண்டவர் மலையென்று இதுவும் தவறாகச் சுட்டப்படுகிறது. இங்கும் சமணதீர்த்தங்கரர்களின் உருவங்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. ஆனைமலையைப் போல இங்கேயும் ஓவியங்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன. சின்னஞ்சிறு பகுதிகளே எஞ்சியுள்ளன.

அண்டை மாவட்டங்களில் சமண ஓவியம்

இவ்வாறு சமணர் படைத்த ஓவியங்கள் அனைத்திலும் தலைசிறந்தது புதுக்கோட்டை மாவட்டம் சித்தண்ணவாசலில் [சித்றண்ணவாசல்] உள்ள கவினுறு ஓவியமாகும். இந்த ஓவியம் 'ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன்' என்ற பாண்டிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்டது என்றும், மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் என்ற ஓவியப் புலவன் எழில்மிக்க இந்த ஓவியத்தை அமைத்தான் என்றும் கல்வெட்டுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

சமணம் பரவியிருந்த ஊர்கள்

மதுரையில் கால்கொண்ட சமணம் இங்கிருந்து இராமநாதபுர மாவட்டத்தில் (1) தேவகோட்டை–வட்டாணம் சாலையிலுள்ள அநுமந்தக்குடிப் பகுதியிலும், (2) திருச்சுழிக்கு அருகேயுள்ள பள்ளிமடம் பகுதியிலும், (3) காளையார் கோயில் சமீபமுள்ள பள்ளித்தம்பம், சண்முகநாத பட்டணம் என இப்போது பெயர் மாற்றப்பட்டுள்ள கோயில் இல்லாப்பட்டி, சீனமங்கலம் என வழங்கும் ஜீனமங்கலம் முதலிய ஊர்களிலும் (4) திருப்புத்தூர் வட்டம் மகிபாலன் பட்டியிலும், (5) பரமக்குடி வட்டம் இளையான்குடியிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்றண்ணவாசல், தேனிமலை முதலிய ஊர்களிலும் பரவியிருந்தது.

பாண்டியநாட்டில் இவ்வாறு ஏற்றம் பெற்று அரசு ஆதரவும் பெற்றிருந்த சமணர்கள் தங்கள் தீர்த்தங்கரர்களின் உருவங்களை கருநாடகத்தில் ஆசன் மாவட்டத்திலும் தென் கன்னட மாவட்டத்திலும், மலைகள் பலவற்றில் நீண்டுயர்ந்த அமணத் திருமேனியாக நிலைநாட்டியிருப்பது போல மதுரைப் பகுதியிலும் நிறுவித்தான் இருப்பார்கள் என்று கருதலாம். அவ்வாறு நிறுவியிருந்தால் அவை திருஞானசம்பந்தர் வருகைக்குப்

பிறகு ஜைன சமயக் கோட்பாடுகளைத் தகர்ப்பதைக் குறிக் கோளாகக் கொண்டு ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியின் விளைவாக அகற்றப்பட்டனவா? அத்தகைய திருமேனிகளை இங்கு நிலை நாட்டவில்லை எனின், காரணம் என்ன? என்பவை ஆராய்ச்சிக்கு உரியன.

களப்பிரர் காலத்தில் சமணம்

களப்பிரர் காலத்தில் கி. பி. 470-இல் வச்சிரநந்தி என்ற சமண அறிஞர் மதுரையில் திராவிட சங்கம் என்ற பெயரில் சமண அமைப்பு ஒன்றை நிறுவினர். இதன் வாயிலாக (1) சீவகசிந்தாமணி, (2) வளையாபதி, (3) குண்டலகேசி, (4) சூளாமணி, (5) பெருங்கதை முதலிய நூல்கள் இயற்றப் பெற்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி உட்படப் பல நூல்கள் சமணப் பேரறிஞர்களால் இயற்றப் பெற்றன. இவை இலக்கியச்சுவை யுடனும், படிப்பார் மனத்தை ஈர்க்கும் வகையில் உவமை நயத்துடனும் விளங்குகின்றன. இன்னும் இலக்கண நூல்களும் நிகண்டுகளும் ஏராளமாகப் படைக்கப்பெற்றன.

பூங்குன்றனார், உலோச்சனார், அகம்பன், அறிவுடைநம்பி, ஆதிமந்தி, பதுமனார், காப்பியஞ் சேந்தனார் முதலிய சங்ககாலப் புலவர்கள் சமண சமயத்தினர் என்று கூறப்படுகிறது. திருவள்ளுவர் சமணர் என்ற கருத்தை ஏற்பாரும் உள்ளனர்; மறுப்பாரும் உள்ளனர்.

சமணர் தொகுத்த தமிழ் இலக்கியங்களும் இலக்கணங் களும் ஏராளமாக உள்ளன என்றும், அவற்றைத் தொகுத்த வேதசமயத்தார் வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டனர் என்றும் சமணத் தமிழ் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

முற்காலப் பாண்டியர் ஆட்சியில் அனல்வாதம் புனல்வாதம்

ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர் ஆட்சி முடிவுக்குவந்து, மீண்டும் பாண்டியர் செல்வாக்குப் பெற்றனர். அரிகேசரி மாறவர்மன் நெடுமாறன் என்ற கூன்பாண்டியன் (670–710) பல போர்களில் வெற்றி பெற்று, பாண்டியர்புகழை

நிலை நாட்டினுன் அவன் சமணனுக இருந்ததால், ஏழாம் நூற்ருண்டில் மன்னராலும் மக்களாலும் பேராதரவு பெற்றுச் சமணத்துறவியர் ஆயிரக்கணக்கில் மதுரையைச் சுற்றியுள்ள குன்றுகளில் தங்கித் தமிழ்நூல்களை இயற்றியும் ஆய்ந்தும் வந்தனர். அரசு நிலங்கள் பள்ளிச்சந்தமாக அருகன் பள்ளிகளுக்கு வழங்கப்பெற்றன.

சைவம் நிலையிழந்து கிடந்ததைக் கண்டு (அரசியாரும் மணிமுடிச் சோழன் மகளுமான) மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மனம் வருந்தினர். இச்சூழலைப் போக்க வல்லவர் நாளும் தமிழ்இசையால் சைவம் பரப்பும் திருஞானசம்பந்தர் என்பதைக் கேள்வியுற்று அவரை மதுரைக்கு வருமாறு அவ்விருவரும் அழைத்தனர். அவரும் அதை ஏற்ருர்.

சம்பந்தர் மதுரையின் எல்லையை அடைந்த செய்தி கேட்டுச் சமணரும் மன்னரும் கலங்கினர். ஆனுல் மங்கையர்க்கரசியாரும் அமைச்சரும் மகிழ்ந்தனர்.

கலங்கிய சமணர், சில கொடுமைகளை இழைத்தனர்.

மதுரையம்பதியில் அடியார்களோடு சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் சமணர்கள் தீ வைத்தனர். அத்தீ பற்ருதிருக்கவும் தீயின் வெப்பம் பாண்டிய மன்னனைச் சாரவும் சம்பந்தர் பதிகம் பாடி அருளினுர்.

பாண்டிய மன்னனின் வெப்புநோய் சமணர்களால் தீர்க்க முடியாமல் நீடிக்க, அது அவனைவிட்டு நீங்கும்படி, பதிகம் பாடி திருநீறு பூசி அருளினுர் சம்பந்தர்.

சமணர்களோடு சம்பந்தர் செய்த வாதத்தில் சமணர்களுடைய மந்திரம் எழுதப் பெற்று நெருப்பிலிடப்பட்ட அவர்களுடைய ஏடு, எரிந்து சாம்பலாயிற்று. ஆனுல் சம்பந்தர் தேவாரப்பதிகம் எழுதிய ஏடு நெருப்பில் வேகாமல் பச்சையாக விளங்கிற்று.

வைகையாற்றில் இட்ட சமண ஏடு ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்ல, தேவாரப் பதிகம் பொறித்த ஏடோ எதிரேறிக் கரை சேர்ந்தது.

சம்பந்தர் அருளால் மன்னன் கூன்பாண்டியன் வெப்ப நோயும், நீங்கப்பெற்றுச் சைவன் ஆனான். மக்களும் சைவ நெறியைப் பின்பற்றினர். பாண்டிய நாட்டில் சைவம் மறு மலர்ச்சி பெற்று, மங்கையர்க்கரசியால் நிலைத்த புகழுடன் திகழ்ந்தது.

இந்நிகழ்ச்சிகளைப் பொருது, சமணர் பலவாறு இடையூறு செய்தனர். வேற்றரசர்களின் உதவியால் மாய வேள்விகளை நடத்தி, பெரியதொரு யானையை ஏவி மதுரையை அழிக்க முயன்றனர். பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்க இறைவன் சமணர் விடுத்த யானையை அம்பால் எய்தார். யானை இறந்து ஒரு மலையாக மாறியது. அதுவே மதுரை மேலூர்ச் சாலையி லுள்ள யானைமலையாகும்.

தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாது, சமணர் மற்று மொரு வேள்வி நடத்தினர். பெரியதொரு நாகத்தை ஏவினர். பாண்டியன் அந்த நாகத்தைக் கொன்று மதுரையைக் காத்தான். இறந்துபோன நாகமே இன்றைய மதுரைப் பல்கலைக்கழக வட்டாரத்திலுள்ள 'நாகமலை' ஆகக் காட்சியளிக்கிறது.

தொடர்ந்து சமணர் செய்த சூழ்ச்சிகளின் விளைவாகச் சிவபெருமான் திருவிளையாடல்களால் பசுமலை, அழகர் கோயில் முதலிய மலைகள் உண்டாயின என்று "திருவிளையாடற்புராணம்" கூறும்.

பலமுறை தோல்வியடைந்த சமணர் மீது மக்கள் கொதித்து எழுந்தனர். அரசனின் எதிர்ப்பும் இருந்தது. எண்ணாயிரம் சமணர் கழுவேற்றப்பட்டனர். அதனால் சமணர் பலர் சைவசமயத்துக்கு மாறினர். எஞ்சியவர்கள் மதுரைப் பகுதியை விட்டு ஓட்டம் பிடித்தனர். திருச்சி, திருக்காட்டுப்பள்ளி, கருந்தட்டான்குடி, பள்ளி அக்கிரகாரம் (தஞ்சாவூர்) பகுதிகட்குச் சென்றனர். தீபங்குடி, வேதாரண்யம் முதலிய ஊர்கட்குச் சென்ற சிலர் இன்றளவும் சமணராக வாழ்கின்றனர். சமணம் பாண்டிய நாட்டில் கடுமையாக ஒடுக்கப்பட்டதால், தங்கள் முன்னோர்கள் மதுரையிலிருந்து துரத்தப்பட்டவர்கள் என்று கர்ண பரம்பரையாகக் கூறப்படுவதை அவர்கள் இந்நூல் ஆசிரியரிடம் தெரிவித்தனர்.

சமணர் சிலர் மதுரையிலிருந்து சிரவணபெலகோலாவிற்கே திரும்பிச் சென்றனர் என்றும் தெரிகிறது. 12-ஆம் நூற்றாண்டு

வ்ரை, சமணர் சில ஆயிரம் பேர் மதுரைப் பகுதியில் இருந்த தாக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் டாக்டர் சம்பகலட்சுமி அவர்கள் கருதுகிறார்.

இன்றைய மதுரை மாவட்டத்தில் சமணர் சில நூறுபேரே உள்ளனர். இவர்களும் வியாபாரிகளாகத் தமிழ் நாட்டுக்குக் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் வந்தவர்களே ஆவர்.

சமணமுனிவர்கள் காலத்திய கல்வெட்டுகள் மதுரை மாவட்டத்தில் பின்வரும் ஊர்களில் உள்ளன.

(1) ஆனைமலை
(2) மேட்டுப்பட்டி [சித்தர்மலை]
(3) திருப்பரங்குன்றம்
(4) அழகர்மலை
(5) கொங்கர் புலியன்குளம் (அம்மண மலைக்குகை)
(6) முத்துப்பட்டி
(7) கீழவளவு
(8) விக்கிரமங்கலம் [நாகமலையில் உள்ள]
(9) கருங்காலக்குடி
(10) ஐயம்பாளையம் [அயிரைமலை]
(11) திருவாதவூர்
(12) குன்னத்தூர்
(13) மீனாட்சிபுரம்
(14) அரிட்டாபட்டி

உத்தமபாளையத்திலிருந்து வடமேற்கே ஒரு கி. மீ. தொலைவில் 21 சமண தீர்த்தங்கரர்களின் உருவங்கள் ஒரு பெரிய பாறையில் உள்ளன. இவற்றைச் செதுக்கியவர்கள் பெயரும் பொறிக்கப் பெற்றுள்ளன. இவை நீர்ச்சுனை அருகே உள்ளன.

மதுரை மாநகரின் மேற்கு எல்லையில் நாகமலைக்கு அருகில் கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி உள்ளன. இவற்றுக்குச் சமணர் மலை என்று பெயர்.

சமணர் கழுவேற்றப்பட்ட இடங்கள் பல அவற்றுள் ஒன்றான "கொற்றவன் கழுமேடு" கோச்சடை அருகே உள்ளது.

வேதசமயத்தைப் பரப்பியவர்கள் வடமொழி வாயிலாகவே அந்தச் சமயத்தின் பெருமையை எடுத்துரைத்தார்கள். ஆனால், சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பிய இடங்களில் எல்லாம் அவ்வப்பகுதி வாழ் மக்களின் தாய் மொழியை நன்கு பயின்று அதில் புலமைபெற்று அந்த மொழிகளிலேயே தங்கள் கொள்கைகளை விளக்கினர். மதுரைப் பகுதியில் இவ்வாறு அவர்கள் தமிழிலேயே எழுதியும் பேசியும் தங்கள் கருத்துகளைப் பரப்பினார்கள். இதன் விளைவாகச் சமணத்துக்கு ஆதரவு பெருகியது.

இதை உணர்ந்த ஞானசம்பந்தர் தாமும் தமிழில்-நல்ல தமிழில்-தமது சமயக் கொள்கைகளை வலியுறுத்தினார். சமணர்களை விட ஒரு படி மேலே சென்று இசையையும் பரப்பினார்.

ஞானசம்பந்தரின் நன்முயற்சியால் நாளும் தமிழ் பாடி நற்றமிழோடு சைவசமயத்தையும் வளர்க்கும் முயற்சியும், அந்தக் கொள்கைகளுக்கு இலக்கணம் படைக்கும் முயற்சியும் தோன்றின. இதுவே பிற்காலத்தில் தென்னிந்தியச் சைவ சித்தாந்தமாக மலர்ந்தது.

சமயத்தை மையமாக வைத்து அன்றாட வாழ்க்கை நெறியை வளர்த்த தமிழ்ப்பண்பாட்டுக்குச் சமணரால் இடையூறு ஏற்பட்டது. எனவே, மீண்டும் தமிழ்நெறியை நிலைக்கச் செய்ய வேண்டுமென்று நாயன்மார்களும் ஆழ்வார்களும் முயன்றனர். அம்முயற்சி தேவாரமாகவும், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமாகவும் வெளிப்பட்டது. வழக்கத்தில் இருந்து வந்த தெய்வ நெறிக் கொள்கைகள் மறைந்து விடக்கூடும் என்ற அச்சம் இருந்தது. ஆனால் அவ்வாறு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. மாறாக அந்தக் கொள்கைகள் உயிர்பெற்று ஏற்றம் அடைந்தன. சைவ சித்தாந்தம் என்பது இன்னது என்பது தெளிவாக வரையறுக்கப் பட்டது.

சைவசமய குரவர்கள், சமண சமயத் தலைவர்களுடனும் பண்டிதர்களுடனும் அடிக்கடி வாதம் செய்து தங்களுடைய தெய்வத்தன்மையையும், சிவபெருமானின் மகிமையையும் விளக்கினர். இந்த வாதங்களில் வெற்றி அடைந்ததன் பயனாகவே அரசர் உள்பட பலர் வைதீக மதங்களைத் தழுவினர். இந்த வாதங்கள் எல்லாம் மதுரையில் நடந்தன.

புறச்சமயங்களின் வலிகுறைந்தபின்பு சைவ, வைண்வ மதங்களைப் பின்பற்றுபவரிடம் அபிப்பிராய பேதங்கள் தோன்றின. இவை நாளடைவில் வலுப்பட்டு விரோதத்தில் முடிந்தன. ஒவ்வொரு சமயத்திற்கும், பக்கபலமாக வெவ்வேறு வழிபாட்டு முறைகளும், தத்துவஞானக் கோட்பாடுகளும் எழுந்தன. சமயச் சண்டைகளும், தத்துவவாதப் போர்களும் அடிக்கடி நேர்ந்தன. திருஞானசம்பந்தர் பாண்டியன் முன்பு சமணருடன் வாதம் செய்து சைவத்தின் மகிமையை நிலை நாட்டினார். பெரியாழ்வார் மற்றொரு பாண்டியன் சபையில் வாதம் செய்து பொற்பரிசு பெற்று, வைணவத்தின் பெருமையை நிலைநாட்டினார்.

இந்த நிகழ்ச்சிகளின் விளைவாக இன்றும்கூட மதுரை மாநகரில் பட்டிமண்டபங்கள் நடந்த வண்ணமாக உள்ளன. இவற்றில் கலந்துகொள்ளும் அறிஞர்கள் தலைமுறை தலைமுறையாக இலக்கியங்களையும் தத்துவங்களையும் விளக்கித் தங்களுடைய பேச்சுத் திறமையால் அவர்களுக்குக் கல்வி புகட்டி வந்திருக்கிறார்கள். நாவன்மைமிக்க பலர் இன்றும் இப் பணிகளைச் செய்து புகழும் பொருளும் ஈட்டி வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் குறிப்பாக மேலூர்வட்டத்தில் மலைகளில் சமணமுனிவர்கள் தங்கியிருந்ததால் அந்த மலைகளுக்குப் புனிதம் ஏற்பட்டது. அதனால் மதுரை, மேலூர், நத்தம் ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட முக்கோணப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தம் குழந்தைகளுக்கு மலைச்சாமி, மலையாண்டி என்ற பெயர்களை இட்டனர். இப்பழக்கம் இன்றும் நிலவுகிறது.

இயற்கையான காற்றுவரவும் குளிர்சாதன வசதிபெறவும் சமண முனிவர்கள், தாங்கள் தங்கியிருந்த குகைகளுக்குள் மழைநீர் உள்ளே வந்தால் அது ஓடிப்போய் விடாதபடி நீர்த்தாரை அணி அமைத்திருப்பதையும் பார்க்கலாம்.

பௌத்தம்

மதுரையில் பௌத்தர்களுக்கு உரிய சிந்தாதேவி (கலைமகள்) கோயில் இருந்ததாக மணிமேகலை கூறுகிறது.

மதுரையை ஆண்ட களப்பிரர் பௌத்த மதத்தினர் என்றும் உறுதியாகத் தெரியவருகிறது.

கி. மு. மூன்றும் நூற்றுண்டில், அசோகன் மைந்தன் மகேந்திரன் தன் உடன்பிறப்பினள் சங்கமித்திரையின் தலைமையில் இலங்கைக்கு அனுப்பிய குழு தமிழகத்தில் பௌத்தத்தை முதன் முதல் பரப்பியது எனலாம்.

கி. மு. இரண்டாம் நூற்றுண்டு முதல் கிடைக்கும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் சில பௌத்தச் சார்பினவாய் உள்ளன. மேலூர் வட்டத்திலுள்ள மாங்குளம் கல்வெட்டுகள் நெடுஞ்செழியனும் அவன் உறவினனும் கணிநந்தன் என்ற பிட்சுவுக்குக் கல் படுக்கை வழங்கிய செய்தியைக் குறிக்கின்றன. இந்தப் பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட மதுரைக்காஞ்சியில் பௌத்தப் பள்ளிக்குக் குடும்பத்துடன் சென்று மக்கள் வழிபட்ட செய்தியைக் காணுகிறும்.

அழகர்மலையில் பௌத்த சமயத்தினர் தங்கினர் என்பது அப்பகுதியில் உள்ள புத்தநத்தம் என்னும் ஊர்ப் பெயராலும்

"அருகரொடு புத்தரும் அமர்ந்தருளும் சோலை
மருகனொடு மாமனும் மகிழ்ந்துறையும் சோலை
கருமையோடு வெள்ளையும கலந்திலங்கும் சோலை
அருமையான சோலைஎங்கள் அழகர்பெருஞ் சோலை"

என்ற பழம் பாடலாலும் புலனுகும்.

சங்கநூல்களுள் ஒன்றுன மலைபடுகடாஅம் என்னும் இலக்கியத்தில் பாடப்பட்ட நன்னனது செங்கைமா பல்குன்றக் கோட்டம் பற்றிய பழங்குறிப்பில் சுட்டப்படும் இரணியமுட்டம் அழகர்மலைப் பகுதியே ஆகும்.

பௌத்தசமயம் ஏற்றம் பெற்றிருந்தபோது, பிராமி லிபி தமிழ் நாட்டில் புகுந்தது. அந்நாளில் மதுரை (1) பொற்குளம் (2) மாடக்குளம் என்ற இரு பகுதிகளாக இருந்ததைக் குறிக்கும் பிராமிக் கல்வெட்டைப் பொறித்தபோது ஏற்பட்ட மருஉவால், மதுரை மதிரை ஆகி ஒரு குழப்பத்தை உண்டாக்கியுள்ளது. மதுரை என்பதே பழமையான சொல்லாட்சி ஆகும்.

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1310) என்ற அரசன் இலங்கை மன்னனை வென்று, புத்தர் பெருமானின் பல் அங்கு இருந்ததைக் கைப்பற்றி வந்தான். இலங்கை மன்னனுகிய பராக்கிரமபாகு பாண்டியனைப் பகைத்துக் கொள்ள விரும்பாமல், நட்புப்பூண்டு, புனிதமான பல்லைத் தன்நாட்டிற்குத்

திரும்பப் பெற்றுச் சென்முன். இப் பல்லினைக் கருப்பொருளாகக் கொண்டு கட்டப் பெற்ற கோயிலே, இலங்கையின் பழம்பெரும் தலைநகராகிய கண்டிக்குப் புகழ்தருகிறது.

இசுலாம்

மதுரை மாவட்டத்தில் முஸ்லிம்கள் எட்டாம் நூற்றுண்டு முதல் இருந்து வருவதாகக் கருதலாம். அந்த நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படும் மாணிக்கவாசகர், முஸ்லிம் குதிரைவணிகர் உருவில் பாண்டிய மன்னரின்முன் சிவபெருமான் தோற்றம் வழங்கியதாகத் திருவாசகத்தில் அன்னைப்பத்திலுள்ள (வெள்ளைக் கலி என்று தொடங்கும்) ஏழாவது செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்.

குதிரை வீரராக வந்த ராவுத்தருக்கு வரிசை வழங்க வேண்டுமென்று எண்ணி ஓர் அழகிய ஆடையைப் பாண்டியன் அளித்தான் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

இன்றுகூட ஆவணிமூலத் திருவிழாவின்போது, ஒரு முஸ்லிம், குதிரை வணிகர் வேடத்தில் குதிரைமீதேறி பவனி வருகிருர். அவருக்கு இப்பணிக்காகக் பாரம்பரியமாக மீனுட்சியம்மன் கோயிலிலிருந்து மானியம் வழங்கப்பெற்று வருகிறது.

மீனுட்சியம்மனுக்கு மூக்குத்தி அணிவிக்கும் வழக்கத்தை முஸ்லிம்கள்தாம் புகுத்தினர் என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் மூன்ரும் தொகுதியில் திரு. எம். ஆர். அப்துற் றஹீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் ஆட்சி

14-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மதுரையில் ஆட்சி செய்துகொண்டிருந்த சுந்தரபாண்டியனின் குடும்பத்துக்குள் ஏற்பட்ட பூசலால் அவன் டில்லி சுல்தானுக இருந்த அல்லாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக் காபூரின் உதவியை நாடினுன்.

இத்தகைய வாய்ப்பை எதிர்பார்த்திருந்த மாலிக் காபூர், கி. பி. 1334-இல் பாண்டிய நாட்டைக் கொள்ளையடித்து, கோயில்களை இடித்து மக்களுக்கு இன்னல் விளைவித்தான் என்று வரலாற்றில் படிக்கிருேம்.

டில்லி சுல்தான்களின் ஆட்சி 44 ஆண்டுக்காலம் மதுரையில் நடைபெற்றது. இக்காலத்தைப்பற்றி 'History of Madurai Sultanate' என்னும் நூலை டாக்டர் ராஜய்யன் எழுதியுள்ளார்.

ஆட்சி செய்த 8 சுல்தான்களின் விவரம் வருமாறு:

1.	ஜலாலுதீன் அஹ்சன் ஷா	1335–1340
2.	அல்லாவுதீன் கில்ஜி	1340–41
3.	குத்புதீன் பெரோஸ் ஷா	(50 நாள்கள்)
4.	கியாசுதீன் தமகான் ஷா	1340–1342
5.	நசீருதீன்	1342–1356
6.	அதில் ஷா	1356–1360
7.	பஹ்ருதீன் முபாரக் ஷா	1368–1372
8.	அல்லாவுதீன் சிக்கந்தர் ஷா	1372–1378

இக்காலம் முழுவதும், அவசரகால நெருக்கடி ஆட்சிபோல இருந்தது; இந்துக்கள், ஆட்சியாளரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி வாழ்ந்தனர்; வேதம் ஓதுவதையும் கைவிட்டனர்; அக்கிரகாரப் பகுதிகளுக்கு அருகே ஆட்டு இறைச்சிக் கடைகள் ஏற்பட்டன (என்கிறார் மதுரைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறை அறிஞர் திரு. செல்வக்குமார்). ஆப்கானிஸ்தான் நாட்டில் சிறப்பாக விளங்கும் கட்டடக்கலையின் சின்னமாக வைகைக் கரையில் கோரிப்பாளையத்தில் அழகியதொரு தர்கா கட்டப் பட்டது. சுல்தான்கள், ஹொய்சாளருடன் போர்புரிந்த போர் வீரர்கள், ஏனைய பெரியவர்கள் ஆகியோர் பலர் இங்கு நல்லடக்கம் செய்யப்பெற்றுள்ளனர்.

ஜலாலுதீன் அஹசன் ஷா, மதுரை வீதிகளை, டில்லி வீதிகளைப்போல அகலப்படுத்தினான் என்றும் தெரிகிறது.

ஆர்க்காட்டு நவாபாக இருந்த சந்தா சாஹிப் 1736-இல் திண்டுக்கல்லைத் தனது ஆட்சிக்குக் கொண்டுவந்தான்.

மைசூரை ஆண்ட முஸ்லிம் ஆட்சியாளர்கள் 1742 முதல் திண்டுக்கல் பகுதியில் ஊடுருவினர். அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து, திண்டுக்கல் சீமை 18 ஆட்சிப் பகுதிகளாக நிர்வகிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஹைதர் அலி திண்டுக்கல் கோட்டையைக் கைப்பற்றி 1755 முதல் அதன் 'பாஜ்தார்' என்ற சிறப்புப் பெயருடன் தன்னுடைய பிரதிநிதிகள் மூலம் இவ் வட்டாரத்தை ஆட்சி செய்ததோடு இங்குப் பெரியதொரு காலாட்படையையும்

லவத்திருந்தான். ஹைதரின் மைத்துனன் மிர் ராஜலிக்கர் மனைவி (பேகம்) அடக்கம் செய்யப்பட்ட இடத்தைச் சுற்றி ஏற்பட்ட ஊரே பேகம்பூர் ஆகும்.

அவனுடைய பிரதிநிதியாக இருந்த சையது சாஹிப் 1784 முதல் 1790 வரை அக்கோட்டையை விரிவுபடுத்தினன். 1797 வரை ஹைதர் அலியின் மகனுன திப்புசுல்தானின் ஆட்சி திண்டுக்கல் சீமையில் நிலவிற்று.

மேற்கண்ட காரணங்களால், மதுரை மாநகரிலும் திண்டுக்கல் நகரிலும் இன்றளவும் ஏராளமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். உத்தமபாளையம், பெரியகுளம், கம்பம், போடிநாயக்கனூர், வத்தலக்குண்டு, நத்தம், கொட்டாம்பட்டிப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் தொகுப்பாக உள்ளனர்.

உத்தமபாளையத்தில், பெரும்பான்மையான மக்கள் முஸ்லிம்களே ஆவர். இவர்கள் அனைவரும் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிலவியபோது இங்குவந்து குடியேறினர் என்று தெரிகிறது. இவர்களும் கம்பம், பெரியகுளம், போடிப்பகுதி களில் வாழும் முஸ்லிம்களும் கேரளத்திலுள்ள ஏலக்காய், காப்பி, மிளகு, ரப்பர், தேயிலைத் தோட்டங்களைப் பயிரிட்டு வாழ்கின்றனர்.

உத்தமபாளையத்தில் பிறந்த பெருவள்ளல் கருத்தா ராவுத்தர், இந்நகரில் ஒரு கல்லூரியை நிறுவியுள்ளார். வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் பல்லாண்டுகள் முதல்வராக இருந்த அபூபக்கர், திருக்குரானுக்கு ஏழு தொகுதிகள் விளக்க உரை எழுதிய மௌல்வி அப்துல் காதர் பாகா, சிறந்த எழுத்தாளரான பி. எஸ். கே. முகமது இப்ராஹீம் மற்றும் ஆசுகவிகளை ஈன்றெடுத்த பெருமை உத்தமபாளையத்துக்கு உரியது. இங்கு எட்டுப் பள்ளிவாசல்கள் உள்ளன.

கம்பம் நகரில் 15000 முஸ்லிம்கள் உள்ளனர். (1) ஜாமி ஆ மஸ்ஜித். (2) மஸ்ஜிதுல் இலாஹி என்னும் பள்ளிவாசல்களும் இரு மதரஸாக்களும் அரபிப்பள்ளியும் முஹம்மதியா யதீம்கானு என்னும் அநாதை இல்லமும் இந்நகரில் இருக்கின்றன.

பேகம்பூர் முஸ்லிம்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல்வியாபாரத்தில் பெரிய அளவில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மதுரை மாநகரில் நுகர்பொருள்கள் விற்பனையில், இராமநாதபுர மாவட்டத்து முஸ்லிம்கள் (பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்த பின்னர்) ஈடுபட்டுள்ளனர்.

கேரளத்திலிருந்து (மதுரை மாவட்டத்தில்)குடியேறியுள்ள முஸ்லிம்கள், உணவுக் கடைகளை நடத்துகின்றனர். மதுரை மாவட்டத்து முஸ்லிம்கள் கடல்சார்ந்த நாடுகளுக்குச் செல்லுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வழக்கம் கடலோர மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களிடம் மட்டுமே நிலவுகிறது.

மசூதிகள்

முஸ்லிம் ஆட்சியின்போது மதுரை மாநகரில் பல மசூதிகள் தோன்றின.

இவற்றுள் பழமையானது 14-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டது. அப்போது ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் தம் கோடை அரண்மனையை ஒரு முஸ்லிம் துறவிக்கு வழங்கினுர். அந்த இடத்தில் காஜிமார் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது.

வைகையின் வடகரையில் அமைந்துள்ள கோரிப்பாளையம் மசூதி மொகலாயக் கட்டட அமைப்பைக் கொண்டது. தொழுகைக்காக ஏராளமானவர் இங்குக் கூடுகின்றனர். 16-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டு இங்குள்ளது.

நபிகள் நாயகத்தின் 42-ஆவது வாரிசான ஒருவர் 1811-இல் பள்ளிவாசல் ஒன்றை மீனுட்சி கோயிலுக்கு அருகில் கட்டினுர். அவர் தாசில்தார் பணிபுரிந்து வந்தமையால், தாசில்தார் பள்ளி வாசல் என வழங்கிவருகிறது.

முனிச்சாலையில் ஒரு பள்ளிவாசலும், வைகைக் கரையில் சுங்கம் பள்ளிவாசலும் உள்ளன.

புலவர்கள்

மதுரை மாவட்ட முஸ்லிம்களில் தமிழ்ப் புலவராகப் பலர் திகழ்ந்திருக்கின்றனர். இப்போது உள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் 'புலவராற்றுப்படை' குலாம் காதிறு நாவலரால் செய்யப்பட்ட சிறந்த நூல்களிலொன்று. இதற்குப் புரசை

அட்டாவதானம் சபாபதி முதலியார் அவர்கள் மாணுக்கரும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவருமாகிய திரு. மயிலை சண்முகம் பிள்ளையவர்கள் சிறப்புப்பாயிரம் அளித்திருக்கிறார்கள். இந்நூலில் தமிழ் நாட்டின் பழமையும் மதுரையம்பதியின் பெருமையும், மதுரைக்குச் செல்லும் வழியும் இடையே கிடைக்கும் வாகனங்களும், தமிழ்ச் சங்கத்தின் சிறப்பும் அங்கமரும் புலவர் களின் புகழும், பாண்டித்துரைத் தேவரின் கீர்த்தியும் கற்பனை நயத்துடன் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இது மிகப் பெருமைவாய்ந்த நூல்.

மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் என்பவர் மதுரை மீசலைச் சேர்ந்தவர். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். குத்பு நாயகம் என்னும் முகியத்தின் புராணம், இவருடைய நூல்களுள் தலையாயது.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களின் விளைவாக அந்த நாட்டில் தொழில் செய்துவந்த திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த முஸ்லிம்கள் மதுரையில் பலவகைத் தொழில்களைத் தொடங்கியுள்ளனர்.

இசுலாமிய சமய நிறுவனங்கள் அறக்கட்டளைகள் ஆகிய வற்றுக்குச் சொந்தமான சொத்துகள் மதுரை மாநகரின் வெளிப் பகுதிகளில், ஏராளமாக உள்ளன. இவற்றை மேற்பார்த்துவரும் வாக்ப்போர்டு என்னும் (அரசினரால் நியமிக்கப்படும்) வாரியம் மதுரையில் ஒரு கல்லூரியை நடத்தி வருகிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இசுலாமியத் தமிழ் ஆராய்ச்சிக்காக ஒரு பேராசிரியக் கட்டில் ஒன்றைத் தமிழகஅரசு அமைத்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அழகர் வர்ணிப்பு என்ற பாடலிலும் இதைப் பற்றிய குறிப்பு உள்ளது. அழகர் வைகைக்கு வந்து திரும்பும் நாளில் வாணவேடிக்கை ஏற்பாடு செய்வது முஸ்லிம்களின் தனி உரிமையாக இருந்துவருகிறது.

கிறித்தவர்கள்

மதுரை மாவட்டத்தில் பல நூறாயிரம் - கிறித்தவர்கள்—கத்தோலிக்கரும், தென்னிந்தியத் திருச்சபையினரும் - வாழ்

கின்றனர். குறிப்பாக மதுரை, திண்டுக்கல் நகர்களிலும் கோடைக்கானல் மலைப் பகுதிகளிலும் இவர்கள் தொகையாக உள்ளனர். இவர்களுக்குள் நிலவிவந்த வேறுபாடு நீங்கிவருகிறது.

கிறித்தவத் தேவாலயங்கள்

16-ஆம் நூற்றுண்டின் இறுதியில் கிறித்தவத் துறவிகள் இம் மாவட்டத்திற்கு வந்தனர். அவர்கள் முதலில் எழுப்பிய தேவாலயம் டவுன்ஹால் சாலையில் உள்ளது.

1830-இல் கட்டப்பெற்ற தேவாலயம் ஒன்று புதூரில் உள்ளது.

திருமலைநாயக்கர் மகாலை அடுத்து விளங்கும் தூய மேரியன்னை ஆலயம் 1841-இல் கட்டப்பெற்றது.

தென்னிந்தியத் திருச்சபையினர் மதுரை நகரில் பசுமலையிலும் அரசரடியிலும் கால்கொண்டனர். அமெரிக்கன் மிசன் தொடங்கிய மருத்துவமனையும் அமெரிக்கன் கல்லூரியும் இயங்குகின்றன. ஒட்டன்சத்திரம், பழனி, பெரியகுளம் ஆகியவற்றில் இச்சபையினரின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது.

மாவட்டத்தின் பலவகை வளர்ச்சிகளுக்கு இவர்கள் ஆற்றியிருக்கும் பணி, வரலாற்றில் இடம்பெறத்தக்கது.

கத்தோலிக்கம் தமிழ்நாட்டில் பரவுவதற்கு மதுரை வாய்ப்பளித்தது நாயக்க அரசர்கள் மதுரையை ஆண்டபோது வெளிநாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர் போன்ற கிறித்தவப் பாதிரிமார்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள்; பாதுகாப்பும் நல்கினூர்கள். அதன் விளைவாக இன்றும் மதுரை மாநகர், கத்தோலிக்கர்கள் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. மதுரை, திண்டுக்கல், கோடைக்கானல் நகர்களின் வளர்ச்சியில் கத்தோலிக்கருக்குப் பெரும் பங்கு உண்டு.

கருமாத்தூரில் ஆடவர்களுக்கு டி சாலா கல்லூரியும் விளாங்குடியில் மகளிருக்குப் பாத்திமா கல்லூரியும் கத்தோலிக்கரால் நடத்தப் படுகின்றன. இவை இரண்டும் மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ளன.

கத்தோலிக்கப் பாதிரிமார்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு கல்லூரி கோடைக்கானலில் செண்பகனூரில் நடைபெற்று வரு

கிறது. ஏராளமான உயர்நிலைப்பள்ளிகள் மாவட்டமெங்கும் கத்தோலிக்கர்களால் நடத்தப் பெறுகின்றன. அவற்றில் படிப்பதைத் தலைமுறை தலைமுறையாகப் பல குடும்பங்கள் ஒரு பேருகக் கருதுகின்றன. மதுரைப்பகுதியில் மகளிர் கல்வி வளர்த்த பெருமைக்குரியவர் சிஸ்டர் ரோஸ் என்ற பிரெஞ்சு அம்மையார் ஆவார்.

மருத்துவத் துறையில் திண்டுக்கல்லில் Missionary Sisters of Immaculate Heart of Mary என்னும் அமைப்பு நடத்தும் புனிதஜோசப் மருத்துவமனையும், தேனியிலுள்ள 'Holy Redeemers Hospital'-ம் குறிப்பிடத்தக்கன.

தமிழ்நாட்டிலேயே பெரிய அச்சகங்களுள் ஒன்றுன 'டி. நோபிளி பிரஸ்' மதுரையில் பல ஆண்டுகளாகப் புகழுடன் விளங்குகிறது.

'கத்தோலிக்கர் சேவை' என்னும் மாத மும்முறை இதழும், 'பொய்யா விளக்கு' என்னும் திங்கள் ஏடும் கத்தோலிக்கரால் வெளியிடப்படுகின்றன.

மாவட்டத்தின் பெரும்பகுதி, மதுரை ஆர்ச்பிஷப் அவர் களின் அதிகாரத்திற்கு உட்பட்டது. திண்டுக்கல் பகுதி திருச்சி ஆர்ச்பிஷப் அவர்களின் அருள் ஆணைக்கும் அதிகார வரம்புக்கும் அடங்கியது.

நாகமலையருகே 120 ஏக்கர் பரப்பிலுள்ள 'பாய்ஸ் டவுனில்' பள்ளிக்கூடம், உணவு விடுதி, மருத்துவமனை, பூங்கா, பன்றிப் பண்ணை, கோழிப்பண்ணை ஆகியவை உள்ளன. ஸ்பெயின் முதல் நியூசிலந்து வரை பல நாட்டுக் "கிறித்தவ சகோதரர்கள்" இதை நடத்திவருகின்றனர். வீடு வாசல் இல்லாத மாணவர்களுக்கு இது உடுக்கை இழந்தவன் கை போல உதவுகிறது.

விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்ட ஜார்ஜ் ஜோசப், இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலிய நாளிதழ்களின் ஆசிரிய ராக இருந்தார். மதுரை மாவட்டக் கழகத் தலைவராயிருந்த சிங்கராயர், கல்விப் பணியில் தம் நீண்ட வாழ்நாளை அர்ப்பணித்த சைமன் பாதிரியார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

மாவட்டத்திலுள்ள முக்கியமான தேவாலயங்களைப் பற்றி இந்நூலின் பிறிதொரு பகுதியில் கூறுவோம்,

மாவட்டத்தின் அன்றாட வாழ்க்கையையும் அரசியல் நிலைமைகளையும் ஆட்டிப் படைக்கும் சாதியார் சிலரைப்பற்றி இனிக் கூறுவோம்.

முக்குலத்தோர்

இம்மாவட்டத்தில் எண்ணிக்கையில் மிகுதியானவர் தேவர், கள்ளர், அகம்படியர் என்றழைக்கப்பெறும் மூன்றுகுலங் களும் சேர்ந்த முக்குலத்தோர் ஆவர். தனிப்பாடல் ஒன்று இவர்களைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும். வரலாற்றுக் காலந் தொட்டு இவர்கள் வீரர்களாக விளங்கியிருக்கின்றனர். சிறுபாணாற்றுப்படை முதலிய சங்க இலக்கியங்கள் முக்குலத்தோர் புகழ்பாடுகின்றன.

தமிழ் நாட்டில் தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் முக்குலத்தோர் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளனர்.

மதுரை, மேலூர், உசிலம்பட்டி, கம்பம், கூடலூர்ப் பகுதிகளில் முக்குலத்தோர் பெரும்பான்மை மிக்கவராக விளங்கு கின்றனர். இவர்களுடைய வாக்குகளைப் பொறுத்துத் தேர்தலில் ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதும், வெற்றி வாய்ப்பை இழப்பதும் உண்டு. போர்த் தொழிலில் தனியிடம் பெற்றவர் எனலாம். கிராம தேவதைகள் வழிபாட்டிலும், அழகரிடத்திலும் பெரும் பக்தி கொண்டவர்கள்; சித்திரைத் திருவிழாவைச் சிறப்புறக் கொண்டாடுவதற்கு உறுதுணையாக அமைபவர்கள். பழந்தமிழரின் இயல்புகளைப் பேணுவதில் ஆர்வம் மிக்கவர்கள்.

அரசியல் போராட்டங்களில் குறிப்பாக நாட்டு விடுதலை இயக்கங்களில் பலர் ஈடுபட்டனர். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தது இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்றாலும், மதுரைதான் இவருடைய அரசியல் வாழ்விற்கு அடித்தளமாக விளங்கியது.

உசிலம்பட்டியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் ஒரு கல்லூரி உளது. இவருடைய திருவுருவச்சிலை மதுரையில் வைகைப் பாலத்திற்கு வடக்கே நாற்சந்தி கூடுமிடத்தில் மிக உயர்ந்த பீடத்தின்மீது வைக்கப்பட்டுள்ளது. முக்குலத்தோர் இவரைத் தெய்வமாக வணங்கி வருகிறார்கள்,

எத்தேர்தலிலும் இவர் தோற்றதேயில்லை. இவருடைய அரசியல் வாரிசு உசிலம்பட்டி திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் ஆவார். மூக்கையாத் தேவர் 1979-இல் மறைந்தார்.

நாடாளுமன்றத் தொகுதிகள், சட்டமன்றத் தொகுதிகள் ஆகியவற்றில் முக்குலத்தோர் பல இடங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

கள்ளர் சமூகத்தார் கள்ளழகரை வழிபடுதெய்வமாகக் கொண்டு, அழகர்கோயிலைச் சுற்றியுள்ள மதுரை, மேலூர் வட்டங்களில் மிகுதியாகவும், ஏனைய வட்டங்களில் குறைந்த அளவிலும் உள்ளனர்.

பிறமலைக்கள்ளர் எனப்படுபவர் இராமநாதபுரம் மாவட்டம் பிரான்மலையிலிருந்து மதுரைப் பகுதிக்குக் குடிவந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் ஆங்கிலேயர் ஆட்சி இப்பகுதியில் கால் கொள்ள விடாது தடுத்து வந்தனர். எனவே, இவர்களை அடக்க ஆங்கிலேயர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்தனர். குற்றப்பரம்பரையினர் என்று இவர்கள் அறிவிக்கப்பட்டு அரசினரின் கண்காணிப்பில் இருந்தனர். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பெருமுயற்சியால் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டனர். இவர்களைத் திருத்துவதற்காக கள்ளர் சீர்திருத்தத் திட்டம் ஒன்றை அரசினர் நிறுவி, கல்வி முதலிய துறைகளில் இவர்கள் முன்னேற்றமடைய ஆவன செய்தனர். அதன் விளைவாக இவர்கள் இப்போது மேம்பட்ட நிலையில் உள்ளனர்.

சேர்வைக்காரர் எனப்படும் அகம்படியர்களின் தாயகம், சோழவந்தான் எனலாம். இவர்கள் வேளாண்மையிலும் பிற துறைகளிலும் நல்லமுறையில் ஈடுபட்டுள்ளனர்.

மறவர்களே முக்குலத்தோரில் மதுரை மாவட்டத்தில் மிகுதியாக உள்ளனர். இவர்களுக்குப் பெருமைதந்தவர்கள், பாண்டித்துரைத் தேவர் அவர்களும் பாஸ்கர சேதுபதி அவர்களும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் ஆவார்கள் மாவட்டத்தின் பலபகுதிகளிலும் உள்ளனர் எனினும் உசிலம்பட்டி இவர்களுடைய தாயகம் என்று கூறுவது தவறாகாது. கள்ளர்களுக்கு அரசு செய்ததைப் போல மறவர்களுக்கும், சீர்திருத்தத் திட்டம் அமலுக்குக் கொண்டுவரப்படுமானால், இவர்கள் மேம்படுவதற்கு வழி பிறக்குமென்று சிலர் கருதுகின்றனர்.

பயிர்த்தொழிலில் முக்குலத்தோர் ஈடுபட்டுள்ளனர். வைகை, பெரியாறு பாசனப் பகுதிகளில் இரண்டு, மூன்று போகங்கள் நெல்லும் சிறுதானியமும் விளைவித்து முன்னிலும் வளமாக வாழ்கின்றனர். அரசுப் பதவியில் சிலரும் போர்ப் படையில் சிலரும் உள்ளனர் எனினும் இவர்கள் பலதுறைகளில் பின்தங்கியவராகவே உள்ளனர்.

இவர்கள் நெற்றிவியர்வை நிலத்தில் விழ ஈட்டுகின்ற வருமானம் அனைத்தும், குடும்பத்தில் நிகழும் சடங்குகளிலும் வம்பு வழக்குகளிலும் செலவாகின்றது என்று பொதுப்படை யாகச் சொல்லலாம்.

மதுரை மாவட்டத்தில் தெலுங்கு பேசும் சமூகங்களைப் போன்று, புத்தம் புதிய வேளாண்மை முறைகளைக் கையாளவும் பழத்தோட்டங்கள் நடத்தவும் இவர்கள் முன்வரவேண்டும்.

கிராமதேவதை வழிபாட்டில் இவர்களுக்கு ஈடுபாடு மிகுதி. தேசிய இயக்கத்துக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருந்திருக் கிறார்கள். அனைத்திந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்குப்பிறகு சசிவர்ணத் தேவரும் மூக்கையாத்தேவரும் முக்குலத்தோரின் தலைவர்களாகத் திகழ்ந்து வந்தனர். இப்போது முக்குலத்தோர் தலைவர்களுள் திரு. மாயத்தேவரும் திரு. ஆண்டித்தேவரும் திரு. ஏ. ஆர். பெருமாள்தேவரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

சிலம்பம், கத்தி, மஞ்சுவிரட்டு போன்ற வீரவிளையாட்டு களில் ஆர்வம் காட்டுவர். உசிலம்பட்டி, மேலூர், அலங்காநல்லூர் ஆகிய ஊர்களில் நடைபெறும் மஞ்சுவிரட்டு மிகவும் புகழ் பெற்றது.

இவர்களுள் கணவனோ மனைவியோ எளிதில் மணவிலக்குப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவுகிறது. சமூகப் பஞ்சாயத்தில் நடுவர்கள் இவ்வழக்குகளை விசாரித்து மனிதாபிமானத்துடன் தீர்ப்பு வழங்குவர். மீண்டும் கணவனும் மனைவியும் ஒத்துப்போவதற்கு வாய்ப்பு அளிப்பதும் உண்டு.

கணவன் தன் மனைவியைப் புறக்கணித்தால் அவளுக்கு வாழ்க்கைச் செலவு கொடுக்கவேண்டும். பெண் தரப்பில் மண விலக்கு கேட்கப்பட்டிருந்தால் அந்தப் பெண்ணுக்கு ஆண் கொடுத்திருந்த சீதனத்தைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்,

தீர்த்துவைக்கும் முறை சுவாரசியமானது. பஞ்சாயத்தார் முன்னிலையில் மாப்பிள்ளை வீட்டார் வெற்றிலை, பாக்கு முதலியனவை வைத்து, அவற்றோடு கூரையிலிருந்து உருவி எடுத்த ஒரு துரும்பையோ, புல்லையோ முறித்து வைத்துப் பெண்வீட்டாரிடம் கொடுப்பார்கள். துரும்பை முறிப்பது ஏற்கெனவே செய்து கொண்ட வாழ்க்கை ஒப்பந்தம் முறிந்துவிட்டதற்கு அடையாளம்.

குழந்தைகள் பிறந்திருந்தால் அவர்கள் கணவனைச் சாருவர். தீர்த்துக் கொண்டபின் முன்னாள் கணவனும் மனைவியும் பக்கத்து வீடுகளிலேயே புதிய குடும்பங்களுடன் வாழ்ந்து பகையின்றிப் பழகிவருவது இயல்பு.

மாவட்டம் எங்கும் ஒவ்வோர் ஊரிலும் ஓர் அம்பலகாரர் இருப்பார். ஆட்சிகளும் ஆளும் கட்சிகளும் மாறினாலும், அம்பலகாரரின் செல்வாக்கு நிலையானது. அவர்கள் வகுக்கும் சட்டங்களும், வழங்கும் தீர்ப்புகளும் வாய்மொழியாக இருப்பினும், நீதிமன்றங்களால் எழுதி வரையறுக்கப்படும் முடிவுகளைவிட ஆற்றல் மிக்கன.

முக்குலத்தோரின் தனியரசு புதுக்கோட்டையில் இயங்கியது. அந்த இனத்தவர் இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் அரசர்களாகவும், சேத்தூரிலும் ஏழாயிரம் பண்ணையிலும் குறுநில மன்னராகவும் இருந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தில், நெற்கட்டுஞ்செவ்வல், ஊத்துமலை, மணியாச்சி, சிவகிரி, சொக்கன்பட்டி ஆகியவை முக்குலத்தோரின் குறுநில ஆட்சியில் அடங்கியிருந்தன. இவ்வாறு குறிப்பிடத்தக்க முக்குலத்தோர் அரசோ, சிற்றரசோ, குறுநில மன்னரோ, மதுரை மாவட்டத்தில் இல்லாவிட்டாலும், இவ்வினத்தவரின் செல்வாக்கையோ, முக்கியத்துவத்தையோ குறைத்து மதிப்பிடக்கூடாது.

தமிழ்ப்பேச்சில் பிறமொழிக் கலப்பு ஏற்படாது பாதுகாத்துவந்துள்ள ஒரு சில இனத்தவருள் முதன்மையானவர் முக்குலத்தோர் ஆவர். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் பாண்டித்துரைத்தேவர்; சென்னையில் தமிழ்வட்டம் என்னும் இலக்கிய அமைப்பை உருவாக்கியவர் இம்மாவட்டத்து வி. கே. சி. நடராசன், ஐ. ஏ. எஸ். ஆவார்.

யாதவர்

மதுரை மாவட்டத்தின் வாழ்விலும், மதுரை மாநகரின் வரலாற்றிலும் இடம்பெற்றவர்கள் யாதவர். சிலப்பதிகாரக் காலத்தில் யாதவர் புகழுடன் விளங்கினர் என்பது, யாதவர்

வாழ்ந்த ஒரு சேரியில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்தனர் என்று சிலம்பு கூறுவதிலிருந்து அறியப் பெறும். எனவே சிலப்பதிகாரம் எழுந்ததற்குச் சில நூற்றுண்டுகளுக்கு முன்னரே இவ்வினத்தவர் மதுரைப்பகுதியில் ஏற்றம் பெற்றிருக்கவேண்டும்.

"மதிச்சியத்திலே குடியிருக்கிறது" என்று மாதரி கூறுவதாகக் கோவலன் கண்ணகி நாடகத்தில் ஒரு நாட்டுப் பாடல் பாடப்பெறுகிறது.

இம் மாவட்டத்து யாதவர் சென்ற நூற்றுண்டிலிருந்து இன்றளவும் தங்களைக் "கோன்" என்று குறிப்பிடுவர். ஆர் விகுதி சேர்த்து கோனர் என்று அழைப்பது இன்றைய நிலை. ஒரு சில ஊர்களில் யாதவர்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் சேர்வை மணியக்காரர் என்னும் பட்டப் பெயர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றனர்.

மதுரைமாநகரில் யாதவர்களின் தாயகமாக விளங்குவது வடக்கு மாசிவீதி இங்கு இவர்களுடைய கிருஷ்ணன் கோயிலும் யாதவர் பள்ளியும் இராமாயணச் சாவடியும் உள்ளன. இவர்கள் "ஆயிரம் வீட்டு யாதவர்" என்றழைக்கப்படுவர். சில நூற்றுண்டுகளுக்கு முன் இவர்களிடம் உறவின் முறை இருந்தது. ஆடு, மாடு வாங்கி விற்றும் திருமண வீடு சாவு வீடுகளில் மகமை வசூலித்தும் ஆயிரம் வீட்டு யாதவர்களுக்குப் பாத்தியமான கிருஷ்ணன்கோயில் முதலியன கட்டினர்.

ஆயிரம் வீட்டு யாதவர்கள் தங்களுக்குள் மட்டுமே மண உறவு வைத்துக் கொள்ளுகின்றனர். ஆட்டு மந்தை பராமரிப்பதிலும், ஆடுகளையொட்டிய வியாபாரம் செய்வதிலும், மதுரை மாநகரைச் சுற்றியுள்ள ஊர்களில் நெல், வாழை, கரும்பு பயிரிடுவதிலும், வேளாண்மைப் பொருள் கொண்டு கமிஷன்கடை நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர். பால், தயிர், வெண்ணெய் வியாபாரம் செய்பவர்களும் உள்ளனர். மாடு விற்பனை, மாட்டு வியாபாரத்தில் தரகுவேலை, வீடுகளில் போய்ப் பால் கறந்து கொடுப்பது முதலிய பணிகளால் இவர்களில் பல்லாயிரம்பேர் வாழ்கின்றனர்.

கழக்குடி யாதவர் என்பவர் மற்றொரு வகை இவ்வினத்துப் பெண்கள், தங்கள் கணவன்மார் இறந்தபின்பும், வண்ணப்புடவை உடுத்தி, நகைகளை அணிந்து கொள்வர். இவர்கள் கம்பம், பெரியகுளம் பகுதிகளில் பால், தயிர் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

யாதவர்களில் 100-க்கு 90 பேர் வைணவர் ஆவர்; கிருஷ்ணன் கோயிலுக்கும், கூடலழகர் கோயிலுக்கும், அழகர் கோயிலுக்கும் செல்லுவர். இளைஞர்களிடம் சமரச மனப்பான்மை நிலவுவதை அவர்கள் திருநீறு பூசுவதால் உணரலாம். பொதுவாக மதுரையில் வாழும் யாதவர்கள் வடஇந்தியாவில் உள்ள மதுரை (மதுரா) என்னும் ஊரையே தங்கள் புனித நகரமாகக் கருதுவர்.

தேனிக்கு அருகில் கோனார்பட்டி, உசிலம்பட்டிக்கு அருகே இடையபட்டி, ஒத்தக்கடை அருகே இடையபட்டி, பழனியில், உள்ள யாதவமடம், மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள இடையன் மடம், இடையன் சத்திரம் என்பன இவர்கள் புகழைக் கூறுவன.

'யாதவமித்திரன்' என்னும் இதழ், சமூகச் செய்திகளை வெளியிடுகிறது.

மதுரை மாவட்டத்தில் யாதவர்களுடைய எழுச்சிக்குக் காரணமானவர்களாக நூல் வெளியீடு, வணிகத் துறையில் புகழ் பெற்ற திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார், தமிழ்ப் பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனார், மதுரை திரு. பொன்னையாகோனார் ஆகிய பெருமக்களைக் குறிப்பிடலாம். மதுரையில் ஆடவர்க்கு யாதவர் கல்லூரியும், மகளிர்க்கு இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் யாதவ மகளிர் கல்லூரியும் தொடங்கப்பெற்றுள்ளன. இந்தியாவெங்கும் உள்ள யாதவர்களின் தலைவர்கள் இடையிடையே மதுரைக்கு வருகைபுரிவதும் வழக்கமாக உள்ளது.

யாதவர் கல்லூரியில் பால்பண்ணை பற்றிய படிப்பு அமைக்க அரசினர் வழிகாண வேண்டும்.

அரசினர் நடத்தும் பால்பண்ணை நிறுவனங்களில் தலைமுறை தலைமுறையாக இத்துறையில் அனுபவம் பெற்றுள்ள யாதவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அரசினரின் கால்நடைத் துறையிலும், கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் யாதவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது பொருத்தமாகும்.

மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் கொடுக்கும்போது கவுந்தியடிகள்,

"ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை".

என்று கூறியது யாதவர் பெருமைக்குச் சான்று பகரும்.

நாடார்கள்

மதுரை மாவட்டத்தில் வணிகத் துறையில் தலைசிறந்து விளங்குபவர்கள் நாடார்கள்.

இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்தாம் இவர்களுடைய தாயகம்.

மேற்கண்ட மூன்று மாவட்டங்களில் இருப்பதைப்போல மதுரை மாவட்டத்தில் நாடார்கள் எண்ணிக்கையில் மிகுதியாக இல்லை. எனினும் இம்மாவட்டத்தின் வாழ்வில் இவர்கள் அச்சாணி போல் விளங்கிப் பெரும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனர்.

பிறக்கும்போது மருத்துவச்சி பயன்படுத்தும் நாட்டு மருந்து வகைகள், கத்திகள், வாழ்வதற்கு வேண்டிய உணவுப்பொருள்கள் முதல் ஈமச்சடங்கிற்கு வேண்டிய பொருள்கள் வரை விற்பனை செய்து வருகிறார்கள்.

சென்ற நூற்றாண்டுவரை மதுரை மாவட்டத்தில் பட்டிவீரன்பட்டி, திருமங்கலம் என்னும் இரு ஊர்களும் அவற்றைச் சுற்றிய பகுதியும் மட்டுமே மதுரை மாவட்டத்தில் நாடார்களின் தாயகமாக இருந்தது. தாதுவருடப் பஞ்சம் ஏற்பட்ட போது, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களின் நீர்வளம் இல்லாத பகுதிகளிலிருந்து சில ஆயிரம் நாடார்கள், தேனி-பெரியகுளம் பகுதிக்குக் குடியேறினர். இதே சமயத்தில் திருமங்கலத்திலிருந்து சில நாடார்கள் திண்டுக்கல்லுக்குக் குடியேறினர். சிவகாசியில் ஏற்பட்ட கலகங்களின் போது அங்கிருந்து நாடார்கள் கூட்டம் கூட்டமாக மதுரைக்கு வந்ததாகவும் தெரிகிறது.

மதுரை மாநகரில் கீழமாசி வீதியும், அதன் சுற்றுப்புறமும் இவர்களுடைய கோட்டை எனலாம். உணவுப்பொருள்களை விற்பதில் இவர்கள் தனித்திறமை பெற்றிருப்பது கண்கூடு.

வண்ணப் பொருள்கள், இரும்புப் பொருள்கள் ஆகியவற்றைவிற்பது, அச்சகங்கள் நடத்துவது, நாளிதழ்கள் நடத்துவது போன்ற பலவகைத் துறைகளிலும் இவர்கள் முன்னணியில் காணப்பெறுகின்றனர். மதுரை-இராமநாதபுரம் வணிகச்சபையும் உணவுப்பொருள்கள் வியாபாரிகள் சங்கமும் இவர்களுடைய ஆதிக்கத்திற்குள் அடங்கியனவே.

சிவகாசியில் சிறப்பாக இவர்கள் நடத்திவரும் அச்சுத் தொழில், தீப்பெட்டி உற்பத்தி ஆகியவற்றுக்கு உறுதுணையான தொழில்களை மதுரை மாவட்டத்தில் நடத்திவருகின்றனர். மதுரை மாவட்டத்தின் எல்லையில் உள்ள கேரளப் பகுதிகளில் விளையும் ஏலக்காய், காப்பிமுதலிய தோட்டப் பயிர்களை மதுரை, தேனி, பெரியகுளம், நகர்களில் இவர்கள் விற்பனை செய்கிறார்கள்.

பட்டிவீரன்பட்டியில் இவர்கள் காப்பி ஏலக்காய் ஆகியவற்றைப் பெரிய அளவில் பயிரிடுகின்றனர்; தேனி, சின்னமனூர், பெரியகுளம், நிலக்கோட்டை ஆகிய நகரங்களில் கமிஷன் வணிகத்தில் சிறந்து விளங்குகின்றனர். பெரியகுளத்தை அடுத்தகாமாட்சிபுரம், திருமங்கலம், சாத்தங்குடி, பாலமேடு, மல்லபுரம், கல்லுப்பட்டி என்ற எம். கல்லுப்பட்டி ஆகிய ஊர்களில் வேளாண்மையில் இவ்வினத்தார் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். திருமங்கலத்தில் சிறுதொழில் களும், உசிலம்பட்டியில் ரொட்டித் தொழிற்சாலையையும், பாலமேடு, உசிலம்பட்டி, திண்டுக்கல் போன்ற நகர்களில் பெரிய அளவில் பலவகைப் பொருள்கள் விற்பனை செய்யும் கடைகளையும் நடத்தி வருகின்றனர்.

நிலக்கோட்டைப் பகுதியில் நாடார் பலர் பயிர்த்தொழிலை நனிசிறக்கச் செய்கின்றனர்.

நாடார்களின் சிறப்பியல்புகள் சில.

முதலாவதாகத் தொலைபேசியின் பயனை நன்கு உணர்ந்து அக்கருவியை மிகுதியான அளவில் பயன்படுத்துகின்றனர். இரண்டாவதாகக் கல்வியின் தேவையை முற்றிலும் புரிந்து கொண்டு, கல்வி நிலையங்களை நிறுவியும் தங்கள் ஆண், பெண் மக்களை உயர்கல்வி பயிலச் செய்தும், வருகின்றனர். மூன்றாவதாக உறவின் முறை வாயிலாக இவர்கள் மகமை வசூலித்து ஏராளமான அறச்செயல்களையும், நந்தவனங்களையும் கல்வி நிலையங்களையும் மகாஜனம் என்னும் இதழையும் நடத்தி வருகின்றனர். நாடார் மகாஜனசபை இம்மாவட்டத்தின் வலுவான அமைப்புகளில் ஒன்று. ஆண்டுதோறும் இச் சபையினர் பொதுமாநாடும், மாதர் மாநாடும், கல்வி மாநாடும் கூட்டுகின்றனர். திருமங்கலத்தில் நாடார்களுக்குப் பாத்தியமான "பத்தரகாளி அம்மன்" கோயில் இருக்கிறது.

மதுரை மாவட்டத்தின் பொது வாழ்வில் புகழ்பெற்ற நாடார்கள் வருமாறு:

திரு. **W. P. A.** சௌந்திர பாண்டிய நாடார்	ஜஸ்டிஸ் கட்சியின் பெருந் தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர்.
திரு. **W. P. A. R.** சந்திரசேகரன்	தேசியத்திலும், பூதான இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டவர்.
திரு. **S. G.** ஜெயராஜ் நாடார்	பஸ்அதிபர், கோடைக்கானல் மலையில் எஸ்டேட், ஹோட்டல்கள், தியேட்டர்கள், அச்சகங்கள் உடையவர்.
திரு. **P. R.** கருப்பையா நாடார் பட்டிவீரன்பட்டி	வணிகப் பிரமுகர்.
திரு. பா. ரா. முத்துசாமி நாடார்	மகாஜன சங்கத் தலைவர்.
திரு. கணேச நாடார்-மதுரை	பிரபல வணிகர்.
திரு. **A. R. A. S.** செண்பக நாடார்	தொழில் அதிபர்.
திரு. **P. V. P. V.** வாலசுப்பிரமணிய நாடார்	அம்பாசிடர்கார், டிராக்டர் ஏஜன்சிஸ்
திரு. P. P. P. சிதம்பர நாடார் திருமங்கலம்	தொழில் அதிபர்.
திரு. S. V. P. V. தங்கராஜ்	மந்தித்தோப்பு மணிக்கட்டி சுவாமிகள், சஞ்சீவித்தைல உற்பத்தியாளர் திரு. வடிவேல் நாடார் அவர்களின் மகன்.

திரு. W. P. A. S. நாகராஜன் (கோடைக்கானல்)	எஸ்டேட் அதிபர், படகு சங்கத் தலைவர்.
திரு. M. S. P. சோலை நாடார் (திண்டுக்கல்)	பிரபல வர்த்தகர்.
திரு. V. P. R. கெங்காராம்துரைராஜ்	வர்த்தக சங்கப் பிரமுகர்.
திரு. பு. மனோகரன்	தமிழ்நாடு சிமெண்டு வணிகர் சங்கத்தலைவர், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவர், எழுத்தாளர் மன்றத்தின் தலைவர், வண்ணப்பொருள் வணிகர் சங்கம், மதுரைத் தமிழ் இசைச் சங்கத்தின் அறங்காவலர்.
திரு. தனசேகரப்பாண்டியன் திரு. ராஜசபை	வர்த்தகசங்கப்பிரமுகர்கள்.
திரு. வா. மு. க. ரத்தின நாடார்	இரும்பு வணிகர்
திரு. காத்த நாடார்	பிரபல வெல்ல வியாபாரி.
திரு. K. T. K. K. T. கூளிய நாடார் திருமங்கலம்	”
திரு. K. T. K. தங்கமணி பார்-அட்-லா	அரசியல், கம்யூனிஸ்ட் பிரமுகர்.

புகழ்பெற்ற மருத்துவர் பலரையும் மதுரை மாவட்டத்து நாடார் சமூகம் தந்திருக்கிறது.

டாக்டர் திரு. P. வடமலையான்

டாக்டர் திரு. S. V. K. S. தங்கராஜ்

டாக்டர் திரு. S. காளியப்பன்

எலும்பு சிகிச்சை நிபுணர்களான,

டாக்டர் திரு. அண்ணாமலை

டாக்டர் திரு. ராமலிங்கம்

டாக்டர் திரு. தேவதாஸ்

டாக்டர் திரு. காளிதாஸ் (அறுவைச் சிகிச்சை நிபுணர்)

டாக்டர் திரு. காசிராஜன் [இதய நோய் நிபுணர்] ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்.

நகரத்தார்

மதுரை மாவட்டத்தில் நகரத்தார் எனப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சில ஆயிரம் பேர் மட்டுமே வாழ்கின்றனர். எனினும் மதுரை நகரின் வளர்ச்சியில் இவர்களுடைய பங்கு குறிப்பிடத்தக்கது.

அயலவர் ஆட்சியில் தேடுவார் இன்றியிருந்த மீனாட்சியம்மன் கோயிலைப் புதுப்பித்து அழகுபடுத்தியவர்கள் அமராவதி புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியார், நாகப்ப செட்டியார் ஆகியோர் ஆவர். 1926-இல் மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ திவான் பகதூர் (பிற்காலத்தில் இராஜா) சர் அண்ணாமலைச் செட்டியார் முன் வந்தார். அந்த முயற்சியை மதுரை மக்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறியதால் வெள்ளியம்பலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டிய பல்கலைக்கழகம் பொன்னம்பலத்திற்குச் சென்றது.

1920-ஆம் ஆண்டு அளவில் மதுரைக்கு வந்து சேர்ந்த கருமுத்து. தியாகராசச்செட்டியார் பஞ்சாலைத் தொழில் ஆங்கிலேயரின் தனி உரிமை என்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து மீனாட்சி ஆலையைத் தொடங்கினார். பின்னர் மதுரை நகரின் புறப் பகுதிகளிலெல்லாம் நூல் ஆலைகள் பலவற்றைத் தொடங்கி, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கினார். தொழில்துறையில் மதுரையும் அவரால் சிறப்புப் பெற்றது. பேங்க், இன்சூரன்ஸ் கம்பெனி ஆகியவற்றைத் தொடங்கி அவற்றின் பெயரிலேயே மதுரையையும் இணைத்து, கூடல் மாநகருக்குப் பெருமை சேர்த்தார். ஏராளமான கல்வி நிலையங்களைக் கண்டு, மதுரையில் பல்கலைக்கழகம் உண்டாவதற்கான அடித்தளத்தை அமைத்தார்.

கலைத்தந்தை கருமுத்து தியாகராசரைத் தொடர்ந்து நகரத்தார் பலர் நூல் ஆலைகளை நிறுவியுள்ளனர். நூல் விற்பனை, துணி வியாபாரம், நூல் ஆலைகளுக்கு வேண்டிய கருவிகளை விற்பனை செய்தல் ஆகிய துறைகளிலும் நகரத்தார் சிலர் உள்ளனர். கல்லூரிகளும் நிறுவியுள்ளனர்.

1942-இல் தென்கிழக்கு ஆசியாவில் போர் ஏற்பட்டதன் விளைவாக இந்தியாவிலேயே தங்கள் தொழில்களை விரித்துள்ள நகரத்தார்களில் ஒரு பகுதியினர் மதுரையையே நிலைக்களமாகக் கொண்டுள்ளனர். காகித வியாபாரம், மருந்து வியாபாரம் ஆகியவற்றில் பலர் ஈடுபட்டுள்ளனர்; பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலும் செய்கின்றனர். ஆங்கில மருத்துவரான டாக்டர் சண்முகம் செட்டியார், டாக்டர் முத்தையா, டாக்டர். ஏ. டி. தியாகராசன் ஆகியோர் பெரும்புகழ் ஈட்டியுள்ளனர்.

தமிழிசைச் சங்கம், மதுரைக்குப் பெருமை சேர்க்கும் இராஜா முத்தையா மன்றம் ஆகியவற்றைப்பற்றிப் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

தமிழ் வளர்ச்சியில் இவர்களுடைய ஆர்வம் மிகுதியாகும். 'நகர மலர்' என்னும் இதழ் இவ்வினத்தைப் பற்றிய செய்திகளுடன் மதுரையிலிருந்து வெளிவருகிறது.

பிராமணர்

மதுரை மாவட்டத்தில் ஸ்மார்த்த அய்யர், அய்யங்கார் என்னும் இருவகையினரும் நெடுங்காலமாக உள்ளனர். தமிழ் பேசும் பிராமணர்கள் கிராமப்புறங்களில் பாண்டிய, நாயக்க அரசர்கள் வழங்கிய நிலங்களை விற்றுவிட்டு, மதுரை நகரில் குடியேறி, பிறகு அங்கு இருந்த வீடுகளையும் விற்றுச் சென்னை முதலிய பெருநகர்களுக்கு வடக்குநோக்கிச் சென்றுவிட்டனர். இதற்கான காரணங்கள் பல; இக்காரணங்களை இங்கு ஆய வேண்டுவதில்லை.

சான்றாக எழுகடல் அக்கிரகாரம் என்னும் தெருவில் மருந்துக்குக்கூட ஒரு பிராமணர் இல்லை!

தெலுங்கு, கன்னட மொழிகளைப் பேசும் பிராமணர்கள் முறையே நாயக்கர், ஆங்கிலேயர் ஆட்சியில் மதுரையில் ஓரளவு குடியேறினர்.

வடகலை, தென்கலைச் சண்டைகள் மதுரையில் இல்லை; ஆனால் சிருங்கேரிக் கூட்டம், காஞ்சிக் கூட்டம் என்ற உட்பகை சிலசமயம் பெரும்புயலாக வீசுகிறது.

பாங்குகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய அரசின் அனைத்துத் துறைகளிலும் மற்றும் உயர் கல்வி நிலையங்கள், வணிக நிலையங்களிலும் பிராமணர்கள் உள்ளனர். தொழில்மேதை திரு. டி. வி. சுந்தரம் அய்யங்கார் அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு, இப்போது பிராமணர் சிலர் மோட்டார்க் காரின் உறுப்புப் பொருள்களை விற்பனை செய்வது முதல் ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வரை அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல் வாழ்வில் ஏ. வைத்தியநாத ஐயரையும், தமிழ் வளர்ச்சியில் பரிதிமாற்கலைஞர் போன்ற பல பெரிய புலவர்களையும் இந்தச் சமூகம் தமிழ் நாட்டுக்கு வழங்கியுளது. சென்னை அடையாற்றிலுள்ள தியோசாபிகல் சொசைட்டி எனப்பெறும் உலகப் புகழ்பெற்ற பிரமஞான சபையின் துணைத் தலைவராகவும் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும் இருந்த சர் எஸ். சுப்பிரமணிய அய்யர் மதுரை மூதூரினரே. இவர் முதலாவது உலகப்போர்க் காலத்தில் (1914 – 1918) அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சனுக்குக் கடிதம் எழுதி இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்க வேண்டுமென்று ஆங்கிலேய அரசாங்கத்தை அமெரிக்க அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மகாத்மா காந்தியடிகளின் செயலராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய ரெங்கசாமி அய்யங்காரும் புகழ் பெற்ற நாவலாசிரியர் வத்தலக்குண்டு ராஜம் அய்யரும் இம் மாவட்டத்தினரே ஆவர்.

மதுரை மாவட்டத்துப் பிராமணர்கள் நாயக்கர் ஆட்சியில் பெரு வீரர்களாகத் திகழ்ந்து படையில் சேர்ந்தனர். ராமப்ப அய்யன் போன்ற படைத் தளபதிகளும் இருந்தனர்; அரசியலில் பல பொறுப்புகளில் இருந்தனர்; நிலச்சுவான்தார்களாகவும் விளங்கினர். எனவே அவர்கள் குருக்கள்மாராக மட்டும் இன்றி ஏனைய மக்களால் மதிக்கப்பட்ட நிலையிலும் அஞ்சப்பட்ட நிலையிலும் இருந்து வந்தனர்.

ஹரிஜனங்கள்

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப் பட்ட முதற்கோயில் மதுரை மீனாட்சிஅம்மன் கோயில் ஆகும்.

அந்த ஏற்பாட்டை எதிர்த்துச் சநாதனிகள், வைதீகர்கள் ஆகியோர் வழக்குத்தொடர முயன்றனர். அவ்வாறு வழக்குத் தொடருவது சட்டவிரோதமான செயல் என்று 21—10—1937-இல் இராஜாஜி அமைச்சரவை ஓர் அவசரச்சட்டம் வகுத்தது. அன்று முதல் இம்மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை மேம்பட்டு வருவது கண்கூடு.

மதுரை மாவட்டத்தின் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஹரிஜனங்கள் ஆவர். திரு. ஏ. வைத்தியநாத ஐயர் திரு. ந. ம. ரா, சுப்பராமன் ஆகியோர் தலைமையில் ஹரிஜனங்கள் விழிப்பும் ஊக்கமும் பெற்றுள்ளனர். கோயில்களுக்குள் ஹரிஜனங்களை விடுவது என்ற இயக்கம் மதுரையில் வெற்றிபெற்று, தமிழ் நாட்டுக்கே வழிகாட்டிற்று.

மதுரை மாவட்டத்தில் வாழும் ஹரிஜனங்களில் பெரும்பாலோருக்கு ஒரு சிறிதளவாவது சொந்த நிலம் இருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் அமல் செய்யப்பட்டதன் விளைவாக சுதந்தரத்திற்குப் பிறகு இவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ளனர். ஹரிஜனசேவாசங்க மாணவ விடுதிகளில் இவர்கள் தங்கள் குழந்தைகளை – இருபாலாரையும் – படிக்க வைக்கத் துணிந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதியான எண்ணிக்கையாக டாக்டர் படிப்புப் படித்து இன்று பணிபுரிபவர்கள் மதுரை மாவட்டத்தாரே என்பது குறிப்பிடத் தக்கது.

டாக்டர் அம்பேத்காரின் இயக்கம் இம்மாவட்டத்திலும் ஊடுருவி வருகிறது. இதனால் சில ஊர்களில் காந்திய வழியில் இயங்கும் ஹரிஜனசேவா சங்கத்தாருக்கும் புதிய இயக்கத்தாருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டு அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த திரு. கக்கன் (காங்கிரஸ்), திரு. ஓ. பி. இராமன் (தி. மு. க) என்ற ஹரிஜனத் தலைவர்கள் இம் மாவட்டத்தினர் ஆவர். பத்தாண்டுகள் அமைச்சராக இருந்தும் அதற்குமுன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும் அப்பழுக்கில்லாத அரசியல் தலைவர் என்று அனைவராலும் புகழப்பெற்று, திங்கள்தோறும் 500 ரூபாய் அரசினரின் ஓய்வு ஊதியம் பெற்று வாழும் தலைவர் இந்தியப் பெருநாட்டில் திரு. கக்கன் ஒருவரே ஆவார்.

சௌராஷ்டிரர்

அரசர்கள் வாழ்கின்ற அல்லது, அரசாங்கங்கள் இயங்குகின்ற நகர்களில் மொழிபெயர் தேயத்தினர் பலர் வந்து குடியேறுவது உலக இயல்பு.

இவ்வகையில் மதுரை மாநகரில் குடியேறியுள்ள பிறமொழியாளருள் எண்ணிக்கைப் பெருக்கத்தால் குறிப்பிடத்தக்க இனத்தார் சௌராஷ்டிரர் ஆவர். இவர்கள் மதுரை மாநகரில் மட்டுமன்றி இம்மாவட்டத்தில் திண்டுக்கல், பெரியகுளம், பழனி, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஆகிய நகர்களிலும் மதுரை மாநகரைச் சுற்றிய சிற்றூர்களிலும் பெருவாரியாக வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள சௌராஷ்டிரர் தொகை 4½ லட்சம் இருக்கலாம். இதில் சரிபாதிப்பேர் மதுரை மாவட்டத்தில் உள்ளனர். மதுரை நகரில் இவர்கள் ஒன்றரை இலட்சம் பேர் ஆவர். மதுரை மாவட்டத்துச் சௌராஷ்டிரர் ஏனைய மாவட்டத்தினரான தம் இனத்தவரைவிட உயர்ந்தவர்கள் என்று தங்களைக் கருதுகின்றனர். கூடுமானவரை மதுரை மாவட்டத்திலேயே மண உறவு வைத்துக் கொள்கின்றனர்.

மதுரை மாநகர், தமிழ்நாட்டுச் சௌராஷ்டிரர்களின் தலைநகராக விளங்குகிறது. இவ்வினத்தவர்க்கு உரிய மத்திய சபை மதுரையில் உள்ளது.

சௌராஷ்டிரர் என்பார் குஜராத் மாநிலத்தின் தென் பகுதியான சௌராஷ்டிரத்தினின்றும் வந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள் என்பதை அவர்களுடைய பெயரே தெளிவாகத் தெரிவிக்கிறது. 13-ஆம் நூற்றுண்டில் அலாவுதீன், சௌராஷ்டிரத்தைப் படையெடுத்தபோது ஒரு போர் மூண்டது. அப்போது இவர்கள் மகாராஷ்டிரத்திற்குச் சென்று தஞ்சம் அடைந்தனர். பின்னர் ஆந்திர நாட்டுக்குக் குடியேறி, விஜயநகர அரசர்களின் ஆதரவைப் பெற்றனர். விஜயநகரப் பேரரசின் துணையோடு மதுரையை ஆண்டுவந்த திருமலைநாயக்க மன்னர், தம் அரண்மனைக்குத் தேவையான சரிகை வேலைப்பாடு அமைந்த ஆடைகளை நெய்து வழங்கிவர வேண்டுமென்று இவர்களைக் கேட்டுக்கொண்டதாகவும் அரண்மனையைச் சுற்றியுள்ள தெருக்களை இவர்கள் வாழ்ந்து வருவதற்காக ஒதுக்கினர் என்றும் கூறப்படுகிறது.

இன்றைய சௌராஷ்டிரர், சௌராஷ்டிரத்தைப் பார்த்த தில்லை. இவர்களுக்கும் சௌராஷ்டிர நாட்டில் உள்ள மக்களுக்கும் திருமண உறவோ வியாபாரத் தொடர்போ இல்லை. இவர்கள் தமிழ் மண்ணுடனும் தமிழ் மக்களுடனும் இரண்டறக் கலந்து விட்டனர்; நல்ல தமிழில் எழுதியும் பேசியும் வருகின்றனர்; தமிழைத் தங்களுடைய இரண்டாவது தாய்மொழியாகக் கருது கின்றனர். இவர்கள், தங்கள் இல்லங்களில் பேசும் (தாய்) மொழி சௌராஷ்டிர மொழி.

தமிழ் எழுத்துகளிலேயே சௌராஷ்டிர மொழியை எழுதிப் பயிலும் வழக்கம் 1930 வரை இவர்களிடம் நிலவியது. பின்னர் படிப்படியாக மொழி உணர்ச்சி ஏற்பட்டு, பல நூல்கள் உருவாகி, சௌராஷ்டிர மொழிக்கு உரிய தனி வரி வடிவம் (லிபி) இவர் களிடம் வேரூன்றியிருக்கிறது.

சௌராஷ்டிர மொழியானது, பிராகிருத மொழிகளுள் ஒன்றான ஸௌரஸேனியின் திரிபு ஆகும். இது குஜராத் மொழியினின்றும் வேறுபட்டது. சௌராஷ்டிர மொழிக்குச் சிறந்த இலக்கணம் உண்டு. செய்யுள், உரைநடை ஆகிய இரு வடிவங்களிலும் அமைந்த இலக்கியங்களும் இருக்கின்றன. அவற்றிலுள்ள பெரும்பாலான சொற்கள் வழக்கு அழிந்து விட்டதால் இன்றைய சௌராஷ்டிரருக்கு அவற்றின் பொருள் புரியவில்லை. மராத்தி, தெலுங்கு, கன்னட மொழிச் சொற்கள் இன்றைய சௌராஷ்டிர மொழியில் பெரிதும் கலந்துவிட்டன. ‘தோட்டத்தில் பள்ளம் தோண்டிச் செடியை நடுகிறார்கள்’ என்று தமிழில் கூறுவதை சௌராஷ்டிரக் குழந்தைகள் ‘தோட்டமும் பள்ளம் தோண்டி செடி நடராஸ்’ என்று தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள் என்பதாகச் சௌராஷ்டிர எழுத்தாளர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

சௌராஷ்டிர மொழியில் நூல்களை அச்சிடும் அச்சகங்கள் மதுரையில் இயங்குகின்றன. சமூக இதழில், ஓரிரு பக்கங்களில் இந்த மொழிப் பாடம் அச்சிடப்படுகிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறை சௌராஷ்டிரமொழிப் பேச்சு, பாட்டு ஆகியவற்றை ஒலிப்பதிவு செய்து ஆராய்ந்து வருகிறது.

சௌராஷ்டிரர் சிலர் தங்கள் பெயர்களின் இறுதிச் சொல்லாக ஐயர், பாகவதர் என்பனவற்றை வைத்துக் கொள்ளு

கின்றனர். எனினும் இவர்களிலும் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பிரிவுகள் இருப்பதாக இச் சமூகத்தார் 1891-இல் வெளியிட்ட ஒரு நூலிலிருந்து தெரிகிறது.

இவர்களுக்குள் கோத்திரங்களும் பிரவரங்களும் உண்டு

திருமணத்தை உறுதிசெய்யும் நிச்சயதாம்பூல நிகழ்ச்சியின் போது, சம்பந்திகள் தாங்கள் எந்த ஊரிலிருந்து மதுரைக்கு வந்தவர்கள் என்பதை அறிமுகப்படுத்திக் கொள்ள 'பகுல்வாஸ்' என்னும் சடங்கு நடத்துவர். கேள்வியும் பதிலுமாக அமைந்த இச்சடங்கில் தங்கள் முன்னோர்கள் பெயர்களையும் அவர்கள் சௌராஷ்டிரத்தில் வாழ்ந்த ஊரையும் குறிப்பிடுவது மரபு.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பட்டப் பெயர் உண்டு. மல்லி, ஜீட்டு, குப்பா, தேவந்திரியா, அப்பியா, விஞ்சு, கெருடம். புளியடி, நாட்டாண்மை, ஓபுளா, லகுடுவா, ஒண்டிவில்லு, மோர்கொண்டா, கன்னிவாடி என்பன இவ்வகையில் குறிப்பிடத் தக்கன. நாட்டாண்மைக்காரராக விசயநகர அரசர்களால் நியமிக்கப்பெற்று மதுரைக்கு வந்தவர்கள் திரு ந. ம ரா. சுப்பராமன் அவர்களின் முன்னோர்கள்.

எந்த ஊரிலும் தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளிலேயே வாழும் பழக்கமும் இவர்களிடம் நிலவுகிறது.

சூரிய வழிபாடு இவர்களுக்கு மிகவும் சிறப்பாக உரியது என்பர்.

பட்டிமன்றங்களை நடத்துவதிலும் கேட்பதிலும் இவர்களுக்கு உள்ள ஆர்வம் அளவுகடந்தது.

சௌராஷ்டிரர் குடியேறி நிலைத்த ஊர்களிலெல்லாம் கிருஷ்ணன் கோயில்களைக் காணலாம். மதுரையிலுள்ள சௌராஷ்டிர கிருஷ்ணன் கோயில் மிகவும் புகழ்பெற்றது. இது, வடகலை பாஞ்சராத்ர ஆகமப்படி இயங்குகிறது. ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் சந்நிதி இங்குப் பிற்காலத்தில் ஏற்பட்டு முதன்மை பெற்றதால் இக்கோயில் ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமாள்கோயில் என்று குறிப்பிடப்படுகிறது. ஆசார அனுஷ்டான சம்பிரதாய முறையில் இக்கோயில் ஒரு போற்றத் தக்க சாதனையாகும்.

சௌராஷ்டிரத்தில் சோமநாதபுர வாசிகளை முன்னோர்களாகக் கொண்ட இவ்வினத்தினர், மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சோமசுந்தரர் – மீனாட்சி கோயிலுக்குச் சென்று அங்கு வழிபடுவதைக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

திண்டுக்கல் – நாகல்நகரில் தென்கலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் சௌராஷ்டிர சபையினருக்குரியதாய் இருக்கிறது. திண்டுக்கல் நகரில் இவர்கட்கு உரிய ரேணுகாம்பாள் கோயில் அதைவிடப் பழமையானது.

இச்சமூகத்தார் மதுரையில் நடத்தும் கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகள், சௌராஷ்டிரா கிளப் என்னும் பொழுதுபோக்கு மன்றம், கூட்டுறவு வங்கி ஆகிய எல்லாவற்றிலும் ஏனையோரும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

சௌராஷ்டிரக் கல்லூரியைப் பற்றி இந்நூலில் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். சௌராஷ்டிர உயர்நிலைப்பள்ளி, தமிழ்நாட்டின் சிறந்த உயர்நிலைப்பள்ளிகளுள் ஒன்று. இங்குத் தலைமை ஆசிரியராக இருந்த திரு. எஸ். கே. குப்புசாமி, நல்லாசிரியர்க்கான தேசிய விருது பெற்றிருக்கிறார்.

சௌராஷ்டிரர்களைக் குறிக்க, பட்டுநூல்காரர் என்னும் சொற்றொடரை, மற்றவர்கள் பயன்படுத்துகின்றனர். சௌராஷ்டிரர், பட்டுநூல் நெசவாளர் மட்டும் அல்லர்; பல்லாயிரம் பேர், பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். மதுரையில் கல்வி, கலைத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்; வேளாண்மையை ஆர்வமுடன் செய்வாரும் உள்ளனர்.

ஆவணக் களரிகளில் பத்திரம் எழுதுவதில் மதுரைச் சௌராஷ்டிரர்கள் திறமையானவர்கள். கையெழுத்துத் தெளிவும் வாசக அமைப்பில் சட்ட நுட்பமும் இவர்களுக்குச் சிறப்பாக அமைந்துள்ளன.

இரும்புப் பெட்டி, பூட்டு ஆகியவற்றின் உற்பத்தியிலும், சரிகை, புகையிலை வியாபாரங்களிலும் ஈடுபட்டுச் சௌராஷ்டிரர் பலர் திண்டுக்கல்லில் செல்வர்களாக உள்ளனர். திரைப்பட அரங்குகளை நடத்தியும், பேருந்துகளை இயக்கியும், பேருந்து முதலியவற்றுக்கு வேண்டிய உறுப்புப் பொருள்களை விற்பனை செய்தும் திண்டுக்கல் என். வி. ஜி. பி. குடும்பத்தார் பெரும் புகழும் பொருளும் ஈட்டியுள்ளனர்.

இனி நெசவாளராக உள்ள சௌராஷ்டிரரைக் காண்போம். இவர்கள் பருத்தி நூல் நூற்றும், பருத்தி ஆடைகளை நெய்தும் மதுரையை ஆடைத் தொழில் நகரமாக ஆக்கியுள்ளனர். சாயம் தோய்த்து, சுங்குடி கட்டுதல், சாயச் சரக்குகளை விற்பனை செய்தல், அச்சுப் போடுதல், நூல் வியாபாரம் செய்தல், துணி (ஜவுளி) விற்பனை செய்தல் ஆகிய தொழில்களைச் சௌராஷ்டிரர் செய்து வருகின்றனர்.

மதுரைச் சாயம், மதுரைச் சுங்குடிப் புடைவை, மதுரைத் தாவணி, மதுரைத் துப்பட்டா என்பன எங்கும் புகழ்பெற்றவை. சௌராஷ்டிர நெசவாளர்கள் மென்மையானதும் மூன்று மீட்டர் நீளமுள்ளதுமான சேலைகளையும் இரட்டை நூலின் உதவியால் இரு பக்கங்களிலும் இடைவிட்ட டாக்கர் துண்டுகளையும் நெய்கின்றனர்.

மதுரை இரசாயன சாயச்சாலை 1950 வரை மிகப் பெரிய அளவில் இயங்கிவந்தது. சௌராஷ்டிரர்கள், சாயம் செய்யும் முறையைப் பிறர்க்குத் தெரியாதபடி மறைவாக வைத்திருந்தனர். 'இண்டாந்திரின்', 'நெப்தால்' என்னும் சாயங்கள் வந்தபிறகு, சௌராஷ்டிரர்களின் சாயத்தொழில் பாதிக்கப்பெற்றிருக்கிறது.

மதுரைச் சிவப்புச் சாயம் (டர்க்கி ரெட்) பெரும் புகழ் பெற்றது. சௌராஷ்டிரர்களுடைய சாயத் தொழிலுக்கு, தொடக்க நாள் முதல் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களுடைய மீனாட்சி ஆலையும், பின்னர் ஹார்வி குடும்பத்தாருடைய மதுரை ஆலையும் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துள்ளன.

சௌராஷ்டிர சமூகத்தினரும் மீனாட்சி ஆலையின் செயலாளராகப் பல்லாண்டுகள் திறம்படப் பணியாற்றியவருமான திரு. சி. எஸ். இராமாச்சாரி (இ. 1977) தமிழ்நாட்டில் புதிய நூல் ஆலைகள் பலவற்றை 1960-க்குப் பிறகு நிறுவினார்; மேலும், புதுச்சேரி ஆங்கிலோ-பிரெஞ்சு டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலையைப் புதுக்கினார்; பெரிதும் விரிவடையச் செய்தார்; இந்திய நூல் ஆலைத் தொழிலில் ஒரு நிபுணராக விளங்கினார். அறக்கட்டளைகள் நிறுவி, சௌராஷ்டிரரும் ஏனையோரும் பயனடைய வகை செய்தார்.

நெசவாளராக உள்ள சௌராஷ்டிரர்களில் கூலிக்கு வேலை செய்து பிழைக்க வேண்டியவர்களாக இருப்பவர்களின் பொருளாதார நிலை அடிக்கடி பாதிக்கப்படுகிறது. நகரப்

பகுதிக்குள் சிறு வீடுகளில் வாழ்வதாலும் அந்த வீடுகளின் ஒரு பகுதியையே தொழிற்சாலையாகப் பயன்படுத்த வேண்டியிருப்பதாலும் இவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பல இடர்ப்பாடுகள் உள்ளன.

1947 வரை மதுரை நகரின் மக்கள் தொகையில் இவர்கள் கணிசமாக இருந்தனர்; அதனால் நகராட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அடிக்கடி இவ்வினத்தவரே நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பின்னர், மதுரையில் பல சமூகத்தினரும் குடியேறலாயினர். மாநகராட்சியின் எல்லையும் விரிவடைந்தது. இவற்றின் விளைவாக, சௌராஷ்டிரரின் செல்வாக்குக் குன்றியுள்ளது.

அரசியல் கட்சி அடிப்படையில் பார்த்தால், சௌராஷ்டிரர் தேசியக் கட்சிகளை ஆதரித்து வந்திருக்கின்றனர். சிலர் ஜனசங்கத்தின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

சௌராஷ்டிர சமூகத்துக்குப் பெருமை தந்தவர் பலர். பஜனை, நாம சங்கீர்த்தனத்தில் புகழ்பெற்ற ஸ்ரீமத் நடனகோபால நாயகி சுவாமிகள் (1843 – 1914) என்னும் அருளாளர், இசைப் புலமை பெற்றிருந்ததோடு, திருடர்களையும் திருந்த வைத்துப் பல திருவிளையாடல்கள் புரிந்தார். ஆடியும் பாடியும் ஆண்டவனைப் பரவி, அவன் அடியாருள் ஒருவராய்க் கலந்த மதுரையின் ஜோதியாகிய இவரது சமாதி அழகர்கோயிலுக்குச் செல்லும் வழியிலுள்ள காதக்கிணறு என்னும் இடத்தில் உள்ளது.

கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பாடல்களைப் பாடுவதற்கு ஆங்கிலேய அரசினர் விதித்திருந்த தடையை நீக்க, சென்னைச் சட்டசபையிலேயே பாரதியார் பாடல்களைப் பாடி விளக்கம் தந்து போராடி வெற்றி பெற்றவர், மதுரை ராஷ்டிரபந்து எல். கே. துளசிராம், பி. ஏ., பி. எல். ஆவார்.

மதுரைக் காந்தி திரு. ந. ம. ரா. சுப்பராமன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் மதுரையைப் பற்றி எழுத இயலாது; இந்த வயிரத்தை, மதுரைச் சௌராஷ்டிர சமூகம் தமிழ் நாட்டுக்கு வழங்கியுள்ளது. 1906-இல் செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர், தம் மனைவியுடன் பல முறை சிறை சென்றவர். மதுரையைத் தேசியக் கோட்டையாக்கிய சீலர். தமது வளமான நிலங்களைப் பூமிதானமாகக் கொடுத்த சர்வோதயத் தொண்டர்,

ஏனைய சொத்துகளைப் பெண்களின் கல்விக்காக ஈந்தவர். தமது அரிய நூலகத்தை சௌராஷ்டிரக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கிய வள்ளல்.

அப்பழுக்கு இல்லாத இந்த தியாகச் செம்மல் தம் எழுபதாம் ஆண்டு விழா மலரைத் தம்மைப் பற்றிய கட்டுரைகளோ படங்களோ இல்லாமல் பக்திப் பாடல்கள் கொண்ட ஆன்மிக மலராக வெளிவரச் செய்தது, இவருடைய அடக்கத்துக்கும் எளிமைக்கும் இனிமைக்கும் சான்று.

காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம், கோவை பெரிய நாயக்கன்பாளையம் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் என்னும் பெயரில் திரு. அவிநாசிலிங்கம் அவர்கள் தொடங்கி நடத்திவரும் ஏராளமான உயர்கல்வி நிறுவனங்கள், கல்லுப்பட்டி காந்தி நிகேதன், வேதாரண்யத்தில் சர்தார் வேதரத்தினம் அவர்கள் நிறுவிய கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், வடலூரில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தொடங்கிய வள்ளலார் குருகுலம் போன்ற ஏராளமான கல்வி நிலையங்களின் ஆட்சிக் குழுவில் தலைவராகவோ பொறுப்பு மிக்க உறுப்பின ராகவோ இருந்து அந்த நிறுவனங்கள் நன்முக இயங்க, தம்மாலான அனைத்தும் செய்து வரும் கல்வியாளர், திரு. ந. ம. ரா. சுப்பராமன் அவர்களே ஆவார்கள்.

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கம், மாநில ஆதாரக் கல்வி நிறுவனங்களின் அமைப்பு ஆகியவற்றிலும் இவர் தலைவராக இருந்திருக்கிறார்.

மதுரையில் காந்தி மியூசியம் ஏற்படக் காரணமாக இருந்தவர் இவரே ஆவார்.

பதவியும் விளம்பரமும் விரும்பாத இவர் காங்கிரஸ் கட்சியின் நலனுக்காகவே மதுரை மாநகராட்சித் தலைவராக இரு முறையும் சட்டமன்ற உறுப்பினராய்ப் பலமுறையும் நாடாளுமன்ற உறுப்பினராக ஒரு முறையும் இருக்க இசைந்தார்.

கலைத்துறையில், மதுரைச் சௌராஷ்டிரர்களில் கீழ்க் கண்டவர்கள் புகழ் பெற்றுள்ளனர்.

இசைக்கலைஞர்கள் – திரு. தொப்பே கிருஷ்ண பாகவதர், திரு. பாணி பிரதர்ஸ் என்ற சகோதரர்கள், மதுரை ஸத்குரு சங்கீத சமாஜம் நிறுவிய ஸ்வரஜோதி டி. ஏ. நாகசாமி பாகவதர்,

ஹரிகதர் காலட்சேபக் கலைஞர் – திரு. ஆர் ஆர். சுப்பையர் பாகவதர்

திரைப்பட நடிகை – திருமதி எம். என். ராஜம்

இசையமைப்பாளரும் பாடகரும் – திரு. டி. எம். சௌந்தரராஜன்.

டாக்டர் மு. வ. நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுள்ள தமிழ் அறிஞர் டாக்டர் இரா. மோகன்.

வேளாளர்

தெய்வப் புலவர் சேக்கிழார் வழியில் தோன்றிப் பேரும் புகழும் பெற்ற தொண்டை மண்டல முதன்மை வேளாளர் (முதலியார்) பலர் மதுரை மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். வேளாண்மைத் தொழிலில் தொன்றுதொட்டுச் சிறந்தவர்கள் ஆதலால், மாவட்டத்தின் வளமான பகுதிகளில் மட்டுமே இவர்கள் வாழ்கின்றனர். இந்நாளில், இவர்கள் ஏனைய துறைகளிலும் புகழ் ஈட்டியுள்ளனர்; பிறர்க்கு உதவும் பெற்றியும் விருந்து பேணும் இயல்பும் உடையவர்கள் என்று புலவர்கள் இவர்களைப் போற்றுவர். இவர்கள் சில தலைமுறைகளுக்குமுன் தலைமயிரைக் கொண்டை மாதிரி முடிந்து கொண்டிருந்த காரணத்தால் கொண்டை கட்டி (கொண்டங்கட்டி) முதலியார்கள் என்றும் பெயர் நிலவுகிறது. கிழக்குத் திக்கிலிருந்து வீசும் காற்றைக் கட்டுப்படுத்தி மழை வரவழைக்க வல்லவர் என்பது இதன் பொருள்.

தளவாய் அரியநாயக முதலியார், காஞ்சிபுரம் பகுதியிலிருந்து இவர்களைச் சோழவந்தானிலே குடியேற்றினர். சோழவந்தானில் முதலியார் கோட்டை உள்ளது. சோழவந்தான், உத்தமபாளையம் ஆகிய ஊர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது இவர்களைப்பற்றி மேலும் விவரங்கள் கூறுவோம். 20-ஆம் நூற்றுண்டில் இவ்வினத்தவருள் தலைசிறந்து திகழ்ந்தவர் நீதிக் கட்சித் தலைவராகவும் அமைச்சராகவும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் இருந்த சர் பி. டி. ராஜன் ஆவார். இவர் வெளியிட்டுள்ள நீதிக்கட்சியின் பொன்விழா மலரில் இவ்வினத்தைப் பற்றிய சில விவரங்கள் உள்ளன.

செங்குந்த முதலியார்களும் மதுரை மாவட்டத்தில் உள்ளனர். இவர்களே நெசவுத் தொழிலில் நெடுங்காலமாக

சேர்ந்தவர்கள். 16-ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்த சௌராஷ்டிரர்கள் இவர்களுக்குப் பெரும்போட்டியாக அமைந்தனர்.

இந்நாளில் எத்தனையோ சாதியினர், நெசவுத் தொழிலில் உள்ளனர். இன்ன தொழில் இன்ன சாதியார்க்கு என்ற நிலையும் இன்ன சாதியார் இன்ன தொழில்தான் செய்ய வேண்டும் என்ற வரையறையும் கல்விப் பெருக்கத்தாலும் மக்கள் பெருக்கத்தாலும் மாறி வருவது வரவேற்கத்தக்கது.

பிள்ளைமார்

மதுரை மாவட்டத்தில் சைவ உணவை மட்டுமே உட்கொள்ளும் திருநெல்வேலிச் சைவப்பிள்ளைமார்களும் இறைச்சியையும் உண்ணும் அசைவப் பிள்ளைமாரும் உள்ளனர். பின்னவர் அரசுப் பணிகளிலும் கணக்குப் பிள்ளைகளாகவும் இருக்கின்றனர்.

திருநெல்வேலிச் சைவர்கள் கார்காத்த வேளாளர்; சிவ வழிபாட்டில் வேட்கை உடையவர்கள்; தனிச் சிறப்பான உணவு முறைகளைப் பின்பற்றுபவர்கள். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இவர்களுடைய மண்பானைச் சமையலும் இவர்கள் நடத்திய உணவுக் கடைகளும் மதுரை மாநகரில் பெரும் புகழ்பெற்றிருந்தன.

பழங்குடியினர்

பளியர்

பழங்குடியினருள் ஒருவரான பளியர்கள், (1) பழனிமலைத் தொடரின் உயர்ந்த பகுதிகளில் தாண்டிக்குடியிலும் அதைச் சுற்றிய ஊர்களிலும், (2) வருஷநாட்டுப் பள்ளத்தாக்கிலும், (3) மஞ்சம்பட்டிக் காடுகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் தொகை 10,000 என்பர்.

இவர்கள் சிதைந்த தமிழைப் பேசுகின்றனர். நாம் புரிந்து கொள்ள முடியாதவாறு உச்சரிக்கின்றனர்.

பழனிமலையின் மிகப் பழங்குடியினர் இவர்களே என்றும், பழனியர் என்பது பளியர் என மருவிற்று என்றும் சிலர் கூறுகின்றனர். காட்டுப்பளியர், புதைப்பளியர் என்னும் பிரிவுகள் உண்டு.

மரங்களின்மீது பரண்களை அமைத்தும், பாறை இடுக்கு களிலும் குகைகளிலும் பளியர் வாழ்கின்றனர். வட்டமான குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர்.

மிகக் குறைந்த ஆடை, குட்டையான சுருண்ட முடி, தடித்த உதடு, கறுப்புநிறம் ஆகியவற்றால் பளியர்களை அடையாளம் தெரிந்துகொள்ளலாம். கூர்மையான மரக்கம்புகளை எப்போதும் வைத்திருப்பார்கள்.

தேனடைகளை எடுக்க, பயங்கரமான பாறைகளில் ஏறுவது இவர்களுடைய இயல்பு.

விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடுவர். காய், கனி, தேன், தானியங்களையும் உண்பர்.

இவர்கள் அடர்ந்த காடுகளில் நிலைகொள்ளாது திரிந்தவர் கள்; காடுகள் அழிந்து மலைநகரங்களில் மக்கள் பெருகி நாகரிக வயப்பட்டு அரசின் ஊடுருவலும் ஏற்பட்டிருப்பதால், ஆங்காங்கே நிலையாகத் தங்கத் தொடங்கியுள்ளனர்.

முதுவர்

ஏலக்காய் மலையிலும் அதையடுத்துள்ள கோவை மாவட்டத்திலும் கேரளத்து இடுக்கி மாவட்டத்திலும் முதுவர் வாழ்கின்றனர். சமதரையில் வாழும் மக்கள், முதுவரைத் தகப்பன்மார் என்று குறிப்பிடுவர்.

முதுவரின் தாயகம் மதுரை மாநகர் என்பர். 14-ஆம் நூற்றாண்டில் ஒரு போர் மூண்டதும், இவர்கள் மதுரையினின்று வெளியேறிமேற்குத்தொடர்ச்சிமலைப்பகுதிகளுக்குக் குழந்தைகளை முதுகில் சுமந்து சென்றதால் முதுவர் எனப் பெயர் பெற்ற தாயும் கூறப்படுகிறது. மலைவாழ் மக்களில் முன்னோர் (முதியர்) என்ற கருத்தும் நிலவுகிறது. இவர்களுடைய வழிபடு கடவுள் மீனாட்சியம்மை.

காடுகளுக்கு ஊடே வாழ்வது முதுவர் இயல்பு. கம்பு, கேழ்வரகு, ஏலக்காய் ஆகியவற்றைப் பயிர் செய்வதிலும் வேட்டையாடுவதிலும் இவர்கள் வல்லவர்கள். கருங்குரங்கின் இறைச்சியை உண்டால் மலடியும் மகப்பேறு பெறுவாள் என்பது இவர்களுடைய நம்பிக்கை. தனித்தும் பிறரை எதிர்பாராமலும் வாழ்வது இவர்களுடைய குறிக்கோள்.

பருவம் வந்த ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் ஒவ்வொரு சிற்றூரிலும் தனித்தனியே இளந்தாரிமடம் குமரிமடம் என்னும் தங்கும் இடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஊருக்கு வரும் ஆண், பெண் விருந்தினரும் அங்கே தங்குகின்றனர். இதனுல் சிறு வீடுகளில், தங்கும் இடப்பற்ருக்குறைப் பிரச்சினை தீர்க்கப் படுகிறது. ஒரே வயதினரான காளையர்கள் சேர்ந்து பழகவும் இரவு ஊர்க்காவல் பணிபுரியவும் சில வேளாண்மை வேலைகளில் ஈடுபடவும் சமுதாயக் கடமைகள் சிலவற்றைச் செய்யவும் இந்த ஏற்பாடு பெரிதும் வாய்ப்பளிக்கின்றது.

முதுவர் பேச்சு, தமிழின் கிளை மொழிகளுள் ஒன்ருகும். மலையாள மக்களுடன் வாழ நேர்ந்திருப்பதால் மலையாளச் சொற்கள் சிலவும் மலையாள ஒலியும் இவர்களுடைய பேச்சில் இடம் பெற்றுள. தங்கள் தமிழைப் "பாண்டிநாட்டுப்பேச்சு" என்று இவர்கள் பெருமிதத்துடன் கூறிக்கொள்கின்றனர். இவர்களுடைய பேச்சு மொழியை டாக்டர் எஸ். சக்திவேல் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

புலையர்

பழனிமலைத் தொடரில் மரம், இலை, புல் ஆகியவற்ருல் வேய்ந்த குடிசைகளில் புலையர் வாழ்கின்றனர்; காய், கிழங்கு, கனி வகைகளையும் வேட்டையாடிக் கிடைத்த இறைச்சியையும் உண்பர்.

புலையர்களது தலைவனுக்குக் கணியன் என்று பெயர். புலையர்களிடம் 'குடும்பி, குள்ளன், மல்லன், குடியன்' முதலான பல பிரிவுகள் உள்ளன. இவர்கள் கரக நாச்சி, பூவாடை, பூம்பா பாறைநாதன், மாயாண்டி, கருமலையான் முதலான பல தெய்வங் களைச் சித்திரை மாத முழு நிலவு நாளில் சண்முக மலர், எலுமிச்சம்பழம், மஞ்சள் முதலியன கொண்டு வணங்குகின்றனர்; உயிர்ப்பலியும் செய்கின்றனர். விடியும் நேரம் வரையில் இரவெல்லாம் ஆடிப்பாடி மகிழ்வதில் பெருவிருப்பங் காட்டு கின்றனர்.

மனமொத்த பின் ஆணும் பெண்ணும் மிக நெருங்கிப் பெற்ருேரின் இசைவைப் பெரிதாகக் கருதாது வாழத் தொடங்கு கின்றனர். மணவிழாவில் 'கற்பூரவல்லி' என்னும் மணமுள்ள செடிக்கொத் தொன்று மணமகள் கழுத்தில் அணிவிக்கப்படுகிறது.

பச்சைத்தழைகளை மணமகள் தலையில் சூடிக்கொள்கிருள். பனை ஓலையினுல் ஆன காதணியை அணிகின்றனர். பித்தளை மோதிரம், கண்ணுடி வளையல்கள் இவர்களிடம் பரவியுள்ளன.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தி, கரவும் கள்ளமும் அறியாது இயற்கையின் குழந்தைகளாக, நாகரிகத்தின் தொட்டில் பருவத்திலேயே வாழும் இப் பழங்குடி மக்களின் வாழ்க்கையும் வரலாறும் தனிச்சுவை உடையவை. நெஞ்சில் வஞ்சமில்லாது வாழும் இவர்களது பழக்கவழக்கங்களும் பேச்சும் பாட்டும், குழந்தையின் மழலை போன்று இனிமையும் இன்பமும் பயப்பனவாகும். இன்றும் விண்ணையும் மண்ணையும் நம்பி, விலங்குகள் பறவைகளுடன் ஆடிப்பாடி, மலர்களைப் போற்றி மரத்தடியில் வழிபாடு செய்து, உள்ளத் தூய்மையுடன் கவலையற்று வாழும் இப் பழங்குடி மக்களின் எளிய வாழ்க்கை முறை எவரையுமே கவரவல்லது.

தொழிலால் சிறப்புப்பெற்றுள்ள இனங்கள்

கல்தச்சர், மரத்தச்சர்

மலை மிகுந்த மதுரை மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியிலும், கருங்காலக்குடிப் பகுதியிலும் விக்கிரகம் செய்வதற்கு ஏற்ற கற்கள் கிடைக்கின்றன. எல்லா வகையான கல்வேலைகளிலும் கோயில் வேலைகளிலும் புகழ்பெற்றவர்களான மதுரை மாவட்டத்துக் கல்தச்சர்கள் இந்தத் தலைமுறையில் அரசினர் கட்டும் அணைக்கட்டுகளைத் தமிழ்நாடெங்கும் கட்டியுள்ளனர்.

கேரளத்துக் காடுகளிலிருந்து மதுரை மாவட்டத்திற்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான லாரிகளில் மாபெரும் மரக்கட்டைகள் வருகின்றன. இவற்றைப் பல அளவுகளில் அறுத்துக் கொடுக்கும் மர அறுவை ஆலைகள் மதுரைமாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ளன. அவற்றைக்கொண்டு மரத்தால் செய்யப்படும் பொருள்களைக் கலையழகுடன் படைக்கும் மரத்தச்சர் பல்லாயிரவர் – தமிழரும் மலையாளிகளும் –மதுரை மாவட்டத்தில் இருக்கின்றனர். இவ்வகையில் கல்லுப்பட்டி காந்திநிகேதனம் குறிப்பிடத்தக்கது. மீனுட்சி திருக்கல்யாணக் காட்சியின் மர வடிவமும், யானைக்கால்களைக் கொண்ட மேசைகளைச் செய்யும் தொழிலும் மதுரைக்குப் பெரும்புகழ் தந்து, உலகத்துநாட்டவர் உள்ளங்களையெல்லாம் ஈர்த்துள்ளன.

பொற்கொல்லர்

மதுரை, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே தங்கம், பொன் வாணிபத்தில் சிறந்திருந்தது என்பது வெளிநாட்டுத் தொடர்புகளால் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியின் சிலம்பை விற்க மதுரைக்குத்தான் வந்தான் என்பதால், விலைமிக்க அணிகலன்களை விற்கவும் வாங்கவும் கூடிய சிறப்புடன் மதுரை திகழ்ந்தது என்பது உறுதிப்படுகிறது. முத்துச் செல்வம் நிறைந்த பாண்டி நாட்டில் அணிகலன்கள் செய்யும் தொழில் ஏற்றம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலை தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. விசுவநாத நாயக்க மன்னன் காலத்தில், தங்கத்தில் 45 செ. மீ. உயரமான சுந்தரேசுவரர் திருவுருவமும் 35 செ. மீ உயரமான அம்மன் திருவுருவமும் செய்யப் பெற்று, இவை மீனாட்சி கோயிலில் வெள்ளிக் கிழமைதோறும் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருளச் செய்யப்படுகின்றன. இவற்றைக் காணும்போது 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பொற்கொல்லரின் கைவண்ணம் இன்றும் நமக்குத் தெரியவருகிறது.

இவ்வாறே ஆங்கிலேயர் ஆட்சியில் கலெக்டராக இருந்த 'துரை' மார்கள் மீனாட்சி கோயிலுக்கு வழங்கிய ஆபரணங்களும் மற்றும் முத்துத் தலைப்பாகையும் நவரத்தின முடியும் அவ்வக் காலத்து நிலையை உணர்த்துகின்றன.

மதுரை மாநகரில் இன்றளவும் கைதேர்ந்த பொற்கொல்லர்கள் வாழ்கின்றனர். பொன் நகை முதலியவற்றின் வாணிகம் ஒரு தொகுப்பாகத் தெற்கு ஆவணிமூல வீதியில் விளங்கிச் செல்வம் கொழிக்கிறது.

மதுரைப் பொற்கொல்லர்கள் மலேசியா போன்ற நாடுகளிலும் தங்கள் கைத்திறனை நிலைநாட்டியுள்ளனர்.

ஆயிர வைசியர்

இன்றும் தெற்கு ஆவணிமூலவீதி, பொன் நகை வாணிபத்தில் ஏற்றம் பெற்றிருக்கிறது. மதுரை மாநகரில் புகழ் வாய்ந்த இத்தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் பரமக்குடியைத் தாயகமாகக் கொண்ட ஆயிர வைசியர் ஆவர்.

கவுண்டர்கள்

மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியான கொங்குநாட்டுப் பழனி, ஒட்டன்சத்திரம் வட்டங்களில் உழைப்புக்கு இலக்கியமாக விளங்கும் வேளாண்மைத் தொழிலில் வல்ல கவுண்டர்கள் உள்ளனர். இவர்களுடைய கொள்வினை கொடுப்பினை மற்றும் ஏனைய தொடர்புகள் கோவை மாவட்டத்துடன் அமைந்துள்ளன.

தெலுங்கு பேசும் மக்கள்

ஆந்திர மாநிலத்திலிருந்து வந்து தமிழ்நாட்டில் குடியேறிய கம்மவர், ரெட்டியார், கம்பளத்தார், தெலுங்குச் செட்டியார், தெலுங்குப்பிராமணர், மற்றும் பொற்கொல்லர், சக்கிலியர் ஆகியோர் பல நூறாயிரம் பேர் ஆவர். இவர்கள் வேறு மாவட்டங்களைவிட, மதுரை மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறத்திலுமே மிகுதியாகக் காணப்படுகின்றனர்.

இவர்கள் ஆந்திரத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. விஜயநகரப் பேரரசுடன் இணைந்த நாயக்க மன்னர்கள் மதுரையில் ஆட்சி செய்ததுதான் முக்கியமான காரணம். ஆந்திர நாட்டில் அரசியல் அல்லோல கல்லோலப்பட்டபோது, வேளாண்மைத் தொழில் பாதிக்கப் பட்டுப் பஞ்சம் ஏற்பட்டதால் எங்கேயாவது ஓடிப்போய்ப் பிழைப்போம் என்று தெற்குநோக்கி வந்தவர்களும் உண்டு. முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டதால் அஞ்சி ஆந்திர நாட்டை விட்டு, பல நூறாயிரம் பேராக வெளியேறியவரும் உண்டு.

இவர்களுக்கு இந்நாளில் தெலுங்கு மொழியை எழுதவோ படிக்கவோ தெரியாது. எனவே தெலுங்கு இவர்களுடைய தாய் மொழி என்று சொல்லுவது பொருந்தாது.

இவர்களுக்குத் தெரிந்த தெலுங்கு, மேலை நாட்டு முறையில் இயங்கும் உணவு விடுதிகளில் உணவு படைக்கும் பட்லர் சிலருக்குத் தெரிந்த ஆங்கில மொழி அறிவு அளவினதே. இவர் களில் பலர் சிறந்த தமிழ்ப்புலவர்களாக உள்ளனர்.

மதுரை மாவட்டம் பெரும்பகுதி காடாக இருந்தது. தெலுங்கு பேசும் மக்கள் குடியேறிய பிறகே காடுவெட்டி, பயிர் செய்யப்பட்டது. பயிர்த்தொழிலைத் திருத்தியமைத்த பெருமை

இவர்களுக்கு உரியது. ஏற்றம் வாயிலாக மட்டுமே கிணற்று நீரை எடுக்கும் பழக்கம் மதுரை மாவட்டத்தில் தொன்றுதொட்டு இருந்தது. தெலுங்கு பேசும் மக்கள்தாம் கபிலை போட்டுத் தண்ணீர் இறைக்கும் முறையை இங்குப் பரப்பினர். கபிலையின் தோலைத் தைப்பதற்காகச் சக்கிலியரை வரவழைத்தனர்.

தெலுங்கு பேசுவோரில் 'குலாலர்' என்னும் இனத்தவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பண்ணைக்காடு, பெரியகுளம், ஐயம்பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள தெலுங்குச் செட்டியார்கள் மலைத்தோட்டங்களில் பயிரிடுவதிலும், துணிவியாபாரத்திலும் புகழ் பெற்றுள்ளனர்.

பயிர்த்தொழிலும், பருத்திப்பஞ்சு வியாபாரத்திலும், மாவட்டத்தின் சில பகுதிகளில் ரெட்டியார்கள் ஏற்றம் பெற்று உள்ளனர். ரெட்டியாப்பட்டி, ரெட்டிபாளையம் என்னும் ஊர்கள் இவர்கள் புகழைப் பாடுகின்றன.

கவரிநாயக்கர் என்னும் இனத்தவர் பெரியகுளம் வடகரையில் உள்ளனர். இவர்கள் நீதிமன்றங்களில் அமீனு, டபேதார் போன்ற பதவிகளை வகிக்கின்றனர்.

நாயக்கர்

நாயக்கமாரைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் மதுரை மாவட்டத்தைப் புரிந்துகொள்ள இயலாது. எனவே வரலாற்றைச் சிறிது கூறுவோம்.

திண்டுக்கல், மதுரை என்னும் இரு சீமைகளாக இன்றைய மதுரை மாவட்டம் 18-ஆம் நூற்றாண்டில் இருந்தது. மைசூரின் பகுதியாக இருந்த திண்டுக்கல் சீமையை 1790-இல் ஆங்கிலேயர் கைப்பற்றினர். அப்போது இந்தஇரு சீமைகளிலும் பல பாளையங்கள் இருந்தன. அவையாவன:

திண்டுக்கல் சீமை: 26 பாளையங்கள்

1.	இடைய கோட்டை	(கம்பளத்தார்)
2.	கோம்பை	(கன்னடம் பேசும்கவுடர்)
3.	மாம்பாறை	(கம்பளத்தார்)
4	சந்தையூர்	(கம்பளத்தார்)
5.	எரியோடு	(”)
6.	மருர்	(”)
7.	ஆயக்குடி ரெட்டையம்பாடி உள்ளிட்ட பழனி	(”)
8.	கக்காம்பட்டி	(”)
9.	கூடலூர்	(”)
10.	கம்பம்	(”)
11.	வடகரை	(பாலிஜா)
12.	தேவதானப்பட்டி	(கம்பளத்தார்)
13.	அம்பாத்துறை	(”)
14.	அம்மையநாயக்கனூர்	(”)
15.	போடிநாயக்கனூர்	(தொட்டியர்)
16.	ஏமக்காபுரம்	(கம்பளத்தார்)
17.	எரசக்க நாயக்கனூர்	(”)
18.	கண்டமநாயக்கனூர்	(”)
19.	கன்னிவாடி	(”)
20.	மருனூத்து	(”)
21.	நிலக்கோட்டை	(”)
22.	கூவக்காப்பட்டி	(”)
23.	தவசிமடை	(”)
24.	தேவாரம்	(பலிஜா)
25.	தொட்டியன்கோட்டை	(”)
26.	விருப்பாட்சி	(”)

மதுரைச் சீமைப் பாளையங்கள்

1. மேலக்கோட்டை
2. நடுக்கோட்டை
3. புளியங்குளம்
4. சிறுபாலை
5. உத்தப்ப நாயக்கனூர்
6. வெள்ளிக்குன்றம்

திருநெல்வேலிச் சீமையிலிருந்து மதுரைச்சீமைக்கு மாற்றப்பட்டவை

1. பேரையூர்
2. சாப்டூர்
3. சந்தையூர்

திண்டுக்கல் ஒரு மாவட்டமாக இருந்தது. ஆங்கிலேயர்களே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த 1790-ஆம் ஆண்டில், வேலையிலிருந்து ஒருவர் விலகி மற்றொருவர் பதவியேற்பதற்கு இடைப்பட்ட காலத்தில், வெங்கடப்ப நாயக்கர் என்பவர் அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டதாக வரலாறு பறை சாற்றுகிறது.

நாயக்கர் ஆட்சியில் இவர்களில் பலர் குறுநில மன்னர்களாக நியமிக்கப் பெற்றுச் செல்வத்துடனும் செல்வாக்குடனும் விளங்கினர். அதன் தொடர்ச்சியையே இன்று காணுகிறோம். சில பாளையங்களைப் பற்றி இப்போது கூறுவோம்.

மதுரை மாவட்டத்திலேயே பெரியதும் பழமையானதுமான ஜமீன், போடிநாயக்கனூர். இந்த ஜமீனை நிறுவிய சக்கு நாயக்கர் 15-ஆம் நூற்றாண்டு அளவில் அனந்தப்பூரிலிருந்து வந்தவர். 1487-இல் சில்ல போடிநாயக்கர், மல்லாகான் என்ற விசயநகர வீரரைப் போட்டியில் வென்று புகழ்பெற்றார். பெரிய கரடி ஒன்றுடன் போரிட்டு அதை உயிருடன் பிடித்து வந்து திருவிதாங்கூர் அரசரிடம் இவர் சேர்ப்பித்தார். புதிய வரிசு பட்ட மேற்கும் ஒவ்வொரு முறையும் 100 பொன் கழஞ்சுகளைத் திருவிதாங்கூர் அரசவையிலிருந்து போடிநாயக்கனூர் அரண்மனைக்கு வழங்கும் முறை 1949 வரை நிலவிவந்தது.

பேரையூர் ஜமீன் உள்ள ஊர், தும்பிச்சி நாயக்கன் என்ற அந்த ஜமீன்தார் பெயரைப் பெற்றது. அவருடைய பெயரைச் சொல்ல அஞ்சி, பெயரே ஊர் என்றாகி, பேரையூர் என வழங்குகிறது.

பெரும்பாலான ஜமீன்கள் கம்பளத்து நாயக்கர்களின் உரிமையாக இருக்க, வடகரை ஜமீன், பாலிஜா இனத்தாருக்கு உரியது. நாகம நாயக்கருடன் விசயநகரத்திலிருந்து வந்த ராமபத்திர நாயக்கர் இந்தப் பாளையத்தை நிறுவினர். மாச்சி நாயக்கர் என்பவர் மதுரையில் ஒரு தெப்பக்குளத்தின் குறுக்கே வெற்றிகரமாக அம்பு எய்து திருமலை நாயக்கரிடம் பரிசு பெற்றாராம். இப்போதும் இந்த விழா மாச்சி நாயக்கர் வேட்டை என்னும் பெயரில் ஆண்டுதோறும் வடகரையில் கொண்டாடப் பெறுகிறது.

சாப்டூர் பாளையக்காரராக 1800-இல் இருந்த நாயக்கர் ஆங்கிலேயருக்கு விரோதமாக இருந்ததற்காக விசாரிக்கப்பட்டுக் கொள்ளை, கொடுமை முதலியவற்றைத் தூண்டிவிட்டதாகத் தூக்கிலிடப்பட்டார். 1803-இல் அவர் மகனுக்கு, பாளையக்காரப் பட்டம் கட்டப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் நாயக்கமார் பலர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர், மாவட்டக் கழகத் தலைவர், நகராண்மைக் கழகத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத் தலைவர் பதவிகளிலும் இருந்திருக்கின்றனர், இருந்து வருகின்றனர். தொழிலாளர் தலைவராகவும் உள்ளனர். திரு. எஸ். ஆர். வரதராசுலு நாயுடு (இ. 1969) மதுரைப் பஞ்சாலைத் தொழிலாளர் இயக்கத்தின் தந்தையாக இருந்து தொழிற்சங்கத் தலைவராகக் கொடிகட்டிப் பறந்தவர்.

நாயக்கமார் சைவ-வைணவ வேறுபாடு கருதாது மதுரை, பழனி முதலிய கோயில்களில் அறங்காவலர்களாக இருந்து வந்திருக்கின்றனர். மீனாட்சியம்மன் கோயிலில் செயல் அலுவலராக இருந்தவர்களுள் பெரிதும் போற்றப்பெற்ற திரு. ஆர். எஸ். நாயுடு, குறிப்பிடத்தக்கவர்.

கண் மருத்துவ மேதையும் இலவசமாகச் சிகிச்சை முகாம்களை நடத்தி ஆயிரக்கணக்கானவர்கட்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திவருபவரும் அருளாளரும் அரவிந்தரின் சீடருமானதாமரைச்செல்வர்(பத்மஸ்ரீ)டாக்டர் ஜி.வேங்கடசாமி, நம்நாட்டின் மருத்துவ வரலாற்றில் சிறப்பிடம்பெறுபவர்ஆவார்.

அச்சகரும் பாடநூல் வணிகருமான திரு. இராமவிலாஸ் அழகிரிசாமி நாயுடுவின் கொடை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி ஏற்படப் பெரிதும் உதவியாக இருந்திருக்கிறது.

திண்டுக்கல்லில் தம் தந்தையார் பெயரால் ஜி. டி. என். கலைக் கல்லூரி நிறுவியுள்ள நூலாலை அதிபர் திரு. சவுந்தரராசன், நாட்டுப் பாதுகாப்புக்காகத் தம் சொந்த விமானத்தை வழங்கிய சிறப்புக்கு உரியவர்.

இவ்வினத்தவரின் உட்பிரிவுகளை இனி ஆராய்வோம்.

கம்மவ நாயக்கர்

விசயநகர வேந்தர்களின் ஆட்சிக்காலத்தில் அந்நகரத்திலிருந்து வந்த தெலுங்கு இனத்தவர் பலரில் 'நாயக்கர்' என்றும் 'கம்மவர் நாயுடு' என்றும் அழைக்கப் பெறுபவர் குறிப்பிடத்தக்கவர்கள். இம் மரபினர் இன்றும் இம்மாவட்டத்தின் பல இடங்களில் வாழ்கின்றனர்.

பெரியகுளம், பழனி. திருமங்கலம் வட்டங்களிலும் மதுரை மாநகரின் தென்கிழக்குப் பகுதியிலும் இந்த இனத்தவர் தொகையாக இருக்கின்றனர். திண்டுக்கல், பழனி, தேனி, தே. கல்லுப்பட்டி ஆகிய நகர்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள எல்லாச் சிற்றூர்களிலும் கம்மவர் நாயக்கரின் ஆதிக்கத்தைக் காணலாம்.

மதுரைச்சீமை பல பாளையங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அப் பாளையங்களின் ஆட்சி நாயக்கர்களிடம் ஒப்படைக்கப் பெற்றது. இவர்கள் மதுரை நாயக்கர் காலத்தில் பாளையக்காரர்கள் எனவும், ஆங்கிலேயர் ஆட்சியில் ஜமீன்தார் எனவும் அழைக்கப் பெற்றனர்.

கம்மவர் எனப்படுபவர் இந்நாளில் நாயக்கர் என்று தங்கள் பெயர்க்குப்பின் சாதிப் பெயராகப் போட்டுக்கொள்ளுகின்றனர். காது வளர்த்து, ஆடவர் பெண்டிர் இருபாலாரும் பாம்படம் போன்று காதில் ஓர் அணிகலனைத் தொங்கவிட்டுக் கொள்வதால் இப் பெயர் வந்தது என்பர். இவ்வினத்துப் பெண்கள் வீரகண்டை, திருக்கல்யாண முடி, ரத்தினக் கொண்டை. நீலநாயகப் பதக்கம், இருதலைப்பட்சிப் பதக்கம், ரத்தின வெண்டயம், நாகர் ஒட்டியாணம், சூசாந்திரப் பதக்கம், சங்கு சக்கரப் பதக்கம், பவளக்கொடி மாலை முதலியவற்றை அணிவர் இவை அனைத்தையும் மீனாட்சியம்மனுக்குத் திருமலை நாயக்கர் வழங்கியுள்ளார்.

இருபாலாருமே, முன்கோபக்காரர்க்கு அறிகுறியான மூக்கும், மீசைக்குக் கீழே (வெற்றிலை போட்டதால்) சாறு படிந்த சிவந்த ஈர்க்கு உதடுகளும், அகன்ற மார்பும், கடினமான வேலைகளைச் செய்து காய்ப்பு ஏறிய கனமான கரங்களும், அகலமான நெஞ்சும் அகன்ற கால்களும் உடையவர்கள்.

இவர்களுடைய வலிமையான உடற்கட்டுக்கு, வரகு உண்ணும் பழக்கத்தை இவர்கள் கைவிடாமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கக்கூடும். வரகு திரிக்கும் திரிகைகள் இவர்கள் வீடுகளில் இயங்கிய வண்ணமாக இருக்கும். வரகரிசிச் சோற்றுக்குத் துணையாக இருப்பது முளைத்தயிர்.

மதுரை மாவட்டத்தின் பெரும்பகுதி 15-ஆம் நூற்றாண்டு வரை காடாக இருந்தது. அந்தக் காடுகளை வெட்டி நாடாக்கியதில் கம்மவர் பங்கு மிகுதி என்பதை ஊர்ப்பெயர்கள் உணர்த்தும். சப்பாத்திக் கள்ளி புதர்புதராக மண்டிக் கிடந்த பள்ளங்களைத் திருத்தி, செய்நேர்த்தி செய்து, கண்மாய் (ஏரி) வெட்டி அதைச்

சுற்றி நாவல், வேம்பு, புளி, வாகை முதலிய பலவகை மரங்களை உண்டாக்கினர். இம்முயற்சியில் சேடா, நட்டுவக்காலி, தேள், பூரான் போன்ற கொடிய உயிரினங்களையும், கொப்புளங்களை உண்டாக்கக்கூடிய வண்டுகளையும், உடும்புகளையும், பாம்புகளையும் இவர்கள் சந்தித்தனர். பாம்புகளைக் குத்திக் கொல்வதற்கென்றே குத்துத்தரம் என்று ஓர் ஆயுதத்தையும் எப்போதும் உடன் வைத்திருக்கின்றனர். இக் கருவியின் நுனி, மீன் தூண்டிலின் நுனியை ஒத்தது.

நாயக்கமார் சிறந்த போர்வீரர்கள் ஆவர். தோற்றப் பொலிவும், உழைப்பும் இவர்களுடைய தனித்தன்மைகள். படையில் பணிபுரிவதிலும் வேட்டையாடுவதிலும் இவர்கள் வல்லவர்கள். போர்மங்கலம்போல ஏர் மங்கலமும் – குறிப்பாகப் பருத்தி போன்ற புன்செய் பயிரிடுதல் – இவர்களுக்குக் கைவந்த கலை.

நாய், வான்கோழி, புனுகு பூனை முதலியன வளர்ப்பவர்கள் இவர்களில் உள்ளனர். எனினும் எருமை மாடுகளை, யானைக் குட்டிகளைப் போன்று பொலி கடாவாகப் பேணி வளர்ப்பதில் தான் இவர்கள் இன்பம் காணுவர்.

எருமை மாட்டுப் பண்ணைகளை நடத்துவதில் இவர்கட்கு ஈடும் இணையும் எவரும் இல்லை. (சான்று: ஆயக்குடி) மாநில அரசின் கால்நடைத் துறை இவர்களுடைய பல நூற்றாண்டு அனுபவத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டது.

கம்மவரின் பண்ணைகளில் நாட்டு எருமைகளும் நாட்டுப் பசுக்களும் உழவு ஜோடிக் காளைகளும் வெண்கலமணி ஓசையிட அசைபோட்டுக் கூளம் தின்னும். இவை தண்ணீர் குடிக்க, மூன்று மீட்டர் நீளம் உடைய கல்தொட்டிகளைக் கட்டியிருப்பார்கள். பருத்திக்கொட்டை ஆட்டும் கல்உரல்களும்கூட மிக உயரமாகவும் அகலமாகவும் இருப்பது புதிதாகப் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும்.

கம்மவர் பெண்கள் பலரின் கூந்தல் மிக நீளமாக இருக்கும். வசதியாக உட்கார்ந்துகொண்டு ஆறுதலாக ஈரத்தலையை உலர்த்திக்கொள்ள அவர்கள் ஏணி நாற்காலி வைத்திருப்பார்கள். உயரமாக அமைந்த இந்த இருக்கைகளில் ஏறி உட்கார ஏணிப்படிகள் இருக்கும்.

காது குடைவது கம்மவர்களுக்குத் தொட்டில் பழக்கம். இதைப்பற்றி, எழுத்தாளர் கி. ராஜநாராயணன் சுவைபடச் சொல்லுவதாவது:

"வீட்டில் எந்த இடத்தில் கவனித்துப் பார்த்தாலும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலும் காது குடையக் கோழிமயிர் அங்கங்கே சொருகி வைக்கப்பட்டிருக்கும். அடுப்பங்கூடத்தில் சாப்பிடுகிற இடத்தில் நாலைந்து, சாப்பிட்டுவிட்டு உள் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை போடும் இடத்தில் நாலைந்து, தார்சாவில் நாலு பேரோடு உட்கார்ந்து பேசுமிடத்தில் நாலைந்து, தொழுவில் மாட்டுக்குக் கூளம் போடுகிற இடத்தில், பட்டகசாலையில், ஆளோடியில், அரங்கு வீட்டுக்குள், படுக்கை அறையில், இப்படி அங்கெங்கெனாதபடி எங்கும் பலவிதங்களில் பல நிறங்களில் கோழிமயிர்கள் தயாராக் உரித்து இடுக்குகளில் சொருகி வைக்கப்பட்டிருக்கும், தேடாமல் எடுக்கும் படியாக."

நாயக்கமாரைப் பற்றிப் பின்வரும் பழமொழி உண்டு :- "ஆதவன் உதிப்பது கிழக்கு. அக்கமநாயக்கர் சொல்லுவது வழக்கு. அதைக் கேட்டு நடத்தல் மினுக்கு. எதிர்த்துப் பேசினால் தொழுக்கு"

நெய்க்காரப்பட்டி எஸ்டேட், கம்மவர் நாயக்க இனத்தவருக்கு உரியது. ஜமீன் என்று இது பெயர் பெறாவிட்டாலும், ஒரு ஜமீனுக்கு இணையாக ஏராளமான சிற்றூர்களையும், சில ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள பண்ணை நிலங்களையும் உடைமையாகக் கொண்டிருந்தது. இந்த எஸ்டேட் பழனிக்கு அருகேயுள்ள நெய்க்காரப்பட்டியில் ஓர் அரண்மனையை உடையது. இவர்கள் பழனியில் சத்திரங்கள், திருமணமண்டபங்கள் முதலியவற்றையும், தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திருப்பணிகளையும் செய்திருக்கின்றனர். குள்ளம நாயக்கர் என்ற பட்டப் பெயருடைய இக்குடும்பத்தார் சிறந்த ஒரு கால்நடைப் பண்ணையை உருவாக்கிப் பராமரித்து வந்தனர்.

மன்னர் திருமலை நாயக்கர் பெயரால், நாயக்கமார் மதுரையில் ஒரு கல்லூரியை நடத்திவருகின்றனர்.

அரசியல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் தேனி திரு. என் ஆர். தியாகராசன், முன்னாள் அமைச்சர் திருமங்கலம் திரு. இராசாராம், மற்றும் திரு. கோ. வேங்கடாசலபதி இவ்வினத்தவரே ஆவர்.

திரு. என். ஆர். தியாகராசன் (இ. 1969) மதுரை மாவட்டக் கழகத்தின் தலைவராகவும் சென்னைச் சட்ட மேலவையில் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்தார்.

திருமங்கலம் வட்டம் கோபிநாயக்கன்பட்டி திரு கோ. வேங்கடாசலபதி, கல்லுப்பட்டியில் காந்தி நிகேதனம் நிறுவியவர் என்ற காரணத்தால் அவரைப்பற்றி இந்நூலில் பிற இடங்களிலும் கூறுவோம்.

திரு. இராசாராம் நாயுடு, எதிர்க்கட்சித் தலைவராகவும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் அமைச்சராகவும் இருந்திருக் கிறார்.

இம் மூவரும் பெருந்தலைவர் காமராசரின் வலக்கரமாக விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலிஜா நாயுடுகள்

நாயக்கமன்னர்கள் மதுரைச் சீமையைப் பிடித்துக்கொண்ட போது, நாயுடு என்ற சாதிப்பெயர் கொண்ட பல இனத்தவர் மதுரை மாவட்டத்தில் குடியேறினர். இவர்களுள் ஒரு பிரிவினர் பாலிஜா நாயுடு என்றும், கவர நாயுடு என்றும் கூறப்பெறு கின்றனர்.

திருமலை நாயக்கர் காலந்தொட்டு இன்றளவும் இவர்கள் இராணுவத்திலும், காவல் படையிலும் உள்ளனர். இரயில் போக்குவரத்து, அஞ்சல்துறை முதலியவற்றில் பணிபுரிபவரும் உள்ளனர். வியாபாரத்திலும் சிலர் ஈடுபட்டு, செட்டியார் என்னும் இறுதிச் சொல்லைத் தம் பெயருடன் பயன்படுத்து கின்றனர். வளையல் வியாபாரத்தில் இவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இராணுவத்திற் சேர்ந்த சிலர் புதுக்கோட்டை முதலிய அரசர்களால், ரவுத் என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றிருக்கின்றனர். இந்நாளில் இராணுவத்தில் சேர்ந்த இவ் வினத்தவரில் சிலர் இராணுவக் கணக்குகள் எழுதுவதில் தலையாய பதவிகளைப் பெற்றுள்ளனர்.

கோயில்களில் சித்திரங்கள் வரைவதில் இவர்கள் மிகவும் வல்லவராக விளங்குகின்றனர். இவர்களுடைய படைப்புகளே நாயக்கர் ஓவியம் என்று பெயர் பெற்றிருக்கின்றன.

பெரியகுளம், வடகரை, வடுகபட்டி, அல்லிநகரம், கருப்பட்டி, திண்டுக்கல், தேவாரம், மதுரை நகரம் ஆகிய பகுதிகளில் பாலிஜா நாயுடுகள் தொகையாக உள்ளனர்.

இவர்கள் வைணவர். தென்கலையினரும் உள்ளனர்; வடகலையினரும் உள்ளனர்; கூடல் அழகரை வழிபடுகின்றனர். பஜனை மடங்கள் நடத்தி அவற்றில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும், திருப்பாவையையும் ஓதுகின்றனர்.

திரு ஆர் எஸ். நாயுடு, திரு. பி. ரெங்கசாமி நாயுடு ஆகியோர் மதுரை நகரசபையின் தலைவராகவும், திருமங்கலம் திரு. இராசாராம் நாயுடு சென்னை மாகாண அரசின் அமைச்சராகவும் இருந்திருக்கின்றனர்.

சித்திரம் வரைவோர் வாழும் சித்திரக்காரத் தெரு, கீழமாசி வீதிக்கும் கீழவெளி வீதிக்கும் இடையில் உள்ளது.

இந்த இனத்தைச் சேர்ந்த ஒருவர் பெரியகுளம் வடகரையில் குறுநில மன்னராக இருந்தார்.

வளையல் வியாபாரம் செய்பவர்கள் 'கௌரவ காஜூல தேசாயி'கள் என்று தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டும் தங்கள் பெயரின் இறுதியில் 'செட்டியார்' என்பதைப் பயன்படுத்திக் கொண்டும் வருகின்றனர். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை அடுத்த வளையல்காரத் தெருவிலும் ஏனைய வீதிகளிலும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆண்டுதோறும் ஆவணிமூலவிழாவின் ஏழாம் நாளில், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வளையல் விற்ற லீலையை இவர்கள் கொண்டாடுகிறார்கள். கோயிலிலிருந்து, இவர்கள் வாழும் பகுதிக்கு யானையும் மேள வாத்தியங்களும் அனுப்பப் பெறும். இச் சமூகத்து மிராசுதாருக்குக் காப்புக்கட்டி யானைமீது அவர் அமர்த்தப் பெறுவார். கோயில் மரியாதைகள் பெற்று அவர் மீனாட்சிஅம்மன் கோயிலிலுள்ள அனைத்துக் கடவுளருக்குமாக ஓராயிரத்துக்கும் மேற்பட்ட வளையல்களைச் சாத்துப்படி செய்வார். சமூகத்தாரின் பகல் விருந்துக்குப் பிறகு பல வீதிகள் வழியாகச் சென்று, பொதுமக்களுக்கு வளையல் வியாபாரிகள் வளையல் தானம் செய்வார்கள். அன்றிரவு இச்

சமூகத்துக்கு உரிய சித்தி விநாயகர் கோயிலில், இவர்கள் குடும்பங்கள் அனைத்துக்கும் வளையல் தாம்பூல மரியாதை நடை பெறும்.

கம்பளத்து நாயக்கர்கள்

கம்பளத்தை விரித்து அதன்மீது அமர்ந்து நீதிவழங்கியதால் இந்த இனத்தவர் கம்பளத்தார் என்று பெயர் பெற்றனர்.

விசுவநாதநாயக்கர் மதுரையை ஆண்டபோது பாண்டிய நாட்டை 72 பாளையப்பட்டுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஒரு பாளையக்காரரை நியமித்தார். சொக்கநாத நாயக்கரின் மனைவி மீனாட்சி காலத்தில் மதுரைப் பேரரசு பலம் இழந்தது. அப்போது பாளையக்காரர்கள் தங்களுக்கென்று கோட்டைகள் அமைத்துக்கொண்டு சுதந்தரமாக ஆட்சிசெய்யத் தொடங்கினர். ஆங்கிலேயர்கள் இவர்களுக்குக் குறுநிலமன்னர்கள் என்று பட்டம் வழங்கி, சில பொறுப்புகளைக் கொடுத்து இவர்களைத் தம் வயப் படுத்திக் கொண்டனர்.

கம்பளத்து நாயக்கமார்க்கு உரியனவாக இருந்த ஜமீன்கள் வருமாறு :

போடிநாயக்கனூர்,
பேரையூர்,
சாப்டூர்,
தேவாரம்,
தொட்டப்ப நாயக்கனூர்,
எரசக்க நாயக்கனூர்,
ஆயக்குடி,
கண்டம நாயக்கனூர்,
அம்மைய நாயக்கனூர்,
இடையகோட்டை,
செங்குறிச்சி.

பேரையூர் ஜமீன், கட்டபொம்மனுக்குத் தஞ்சம்கொடுத்த தால் புகழ்பெற்றது. அங்குள்ள கோட்டை கட்டபொம்மன் கோட்டை என்று பெயர் பெற்றிருக்கிறது.

கொடுமுடி தும்பிச்சி நாயக்கர் 1744 அளவில் பேரையூர்ப் பகுதியை ஆண்டுவந்தபோது அவ்வூர் தும்பிச்சி நாயக்கனூர் என்று பெயர் பெற்றது. அவருடைய செல்வாக்கின் காரணமாக

மக்கள் அவருடைய பெயரைச் சொல்ல அஞ்சினர். தும்பிச்சி நாயக்கர் பெயர்தான் ஊர்ப்பெயர் என்பதைக் குறிக்கப் பெயரே ஊர், பேரேஊர் என்று சொல்லிவந்தனர். இந்தப் பேச்சு வழக்கின் வாயிலாக ஊர்ப்பெயர் பேரையூர் ஆயிற்று.

தொட்டப்ப நாயக்கன், எரசக்கநாயக்கன், அம்மைய நாயக்கன், போடிநாயக்கன், கண்டமநாயக்கன், எருமைநாயக்கன், பாப்பா நாயக்கன் ஆகியோர் அமைத்த ஊர்கள் அவரவர் பெயரால் நிலவுகின்றன.

சில ஜமீன்தார்கள் தங்கள் பெயருடன் சேர்த்துப் போட்டுக் கொள்ளும் பட்டப்பெயர்களும் குறிப்பிடத்தக்கன.

போடிநாயக்கனூர்	–	காமைய நாயக்கர் காமுலு அம்மாள்
தேவாரம்	–	பாண்டியர்
அம்மையநாயக்கனூர்	–	பாண்டியர்
இடையகோட்டை	–	இலட்சுமிபதி

இடையகோட்டை, செங்குறிச்சி குறுநில மன்னர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர். இம் மரபினர் சிறந்த கால்நடைப் பண்ணை ஒன்றினைப் பராமரித்து வருகின்றனர்.

பேரையூர் 28 பெரிய கிராமங்களைக் கொண்டது. பெருந் தொகையை ஆங்கிலேய அரசுக்கு ஆண்டுதோறும் செலுத்தி வந்தது. இந்த ஊரில் குறுநில மன்னராக வீற்றிருந்தவர்களில் கொடுமுடி தும்பிச்சி நாயக்கர், திருப்புகழ்சாமி என்ற முத்துக்குமாரசாமி, தும்பிச்சிநாயக்கர் ஆகியோர் பெரும்புகழ் பெற்றிருந்தனர்.

சாப்டூர் என்றும், மருதூர் என்றும் வழங்கப்பெற்ற குறுநிலப் பகுதியும் புகழ்பெற்றது. அங்கு ஆட்சிசெய்தவர்களுள் சதுரகிரி கட்டாரி நாகைய காமராஜேந்திர ராமசாமி காமைய நாயக்கர், இராமலிங்கக் கவிராயருக்கு நிலமும் பொருளும் சதாவதானிப் பட்டமும் வழங்கினர்.

கம்பளத்து நாயக்கர் இனத்தில் தமிழிலக்கிய மேதையாக விளங்கியவர் ஜகவீரராம பாண்டியர். இவர் 20-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் மதுரை மூதூரில் வாழ்ந்து வீரபாண்டியக் கட்டபொம்முவின் வரலாற்றை விரிவாக எழுதி அவர் புகழை நிலைநாட்டினர்.

இப்புலவர் பெருமான் வாழ்ந்த நாளில் தமிழுக்கு அரசினர் உதவி எள்ளளவும் இல்லை கொடையாளர்களை நாடிச்செல்லும் பண்பு இவருக்குக் கிடையாது. பெருநூல்களைத் தாமே எழுதியதோடன்றி, இவரே அச்சுக்கோத்தும் வந்தார். பிறர் பயப்படக்கூடிய இலக்கியப் பணிகளைத் தன்னம்பிக்கையுடன் ஏற்று, இடையூறுகளையெல்லாம் களைந்து வெற்றி கண்டவர் ஜகவீரராம பாண்டியர்.

போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில், சில ஊர்களில் வாழும் இராஜ கம்பள நாயக்கமார் போடிநாயக்கனூர், எட்டயபுரம், கண்டம நாயக்கனூர், பேரையூர் ஆகிய ஜமீன்தார் களின் இனத்தினர். தோகலவார், மேகலவார், பாலவார், பெல்லவார், சில்லவார், கொல்லவார், மல்லவார் என அழைக்கப் படும் ஒன்பது கம்பள இனங்களில் இவர்கள் சில்லவார் என்னும் பிரிவைச் சார்ந்தவர்கள்.

சில்லவார் என்பதற்கு மாடு கன்றுகளை உடையவர்கள் என்பது பொருள். இவர்கள் ஊரைச் சுற்றி வேலி அமைத்துக் கொண்டு வாழுகிறார்கள். இவர்களுடைய தொழில் வேளாண்மை வேட்டையாடுதல், மாடு மேய்த்தல் போன்றவை; கடும் உழைப்பாளிகள்; மண்சுவர் கொண்டு கட்டப்பட்ட குடிசைகளில் தாம் வாழுகிறார்கள்; வட்டவடிவ அமைப்பில் மண்சுவர் எடுக்கப் பட்டு, மேலே கூம்புபோன்று கூரை அமைத்துக்கொள்கிறார்கள்; செருப்பு அணிவதும், குடைபிடிப்பதும் கிடையாது; வெளியூர் சென்றால், உணவு விடுதிகளிலோ ஏனைய இடங்களிலோ உணவு அருந்துவதில்லை. இவர்கள் எருமைகளை வளர்ப்பதில்லை. பசும் பாலை விலைக்கு விற்பது பாவம் என்று கருதுகிறார்கள். பாலைத் தயிராக்கி, மோராக்கி மிகுதியாக உட்கொள்வதால் உடல்நலம் சிறந்து விளங்குகிறார்கள். பெற்றோர் பார்க்கும் மணமகளைத் தவிர வேறு திருமணங்கள் நடைபெறுவதில்லை

கம்பளத்து நாயக்கமாரின் குலதெய்வம் "ஜக்கம்மாள்."

6) வெலமா நாயக்கர்கள்

இவர்கள் வேளாண்மையிலும் சமையல் கலையிலும் வல்லவர் கள். இந்நாளில் தமிழ்நாடெங்கும் பரவி மதுரை முனியாண்டி விலாஸ், குண்டத்தூர் என்னும் பெயர்களால் நிலவும் இறைச்சி உணவுக் கடைகள் இவர்களால் நடத்தப் பெறுகின்றன.

இம் மாவட்டத்தில் குண்டத்தூர், செங்கற்படை, வடக்கம்பட்டி, சோலைப்பட்டி, அச்சம்பட்டி, புதுப்பட்டி, திருமங்கலம், ரெங்க சமுத்திரம், குன்னூரர், காரைக்கேணி என்பன இவர்களுடைய தாயகம்.

தெலுங்கு பேசும் ஏனைய இனத்தவர்

ஏற்றம் வைத்து நீர் இறைத்து வந்த தமிழ்நாட்டில் கபிலை மாடுகள் கொண்டு நீர் இறைக்கும் பழக்கத்தைத் தெலுங்கர் ஆந்திராவிலிருந்து வந்து பரப்பினர். எனவே தோல் தொழிலாளரான சக்கிலியர்களும் (மாகாரிகள்) தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

மற்றும் குலாலர்களும், ஆந்திராவிலிருந்து இம் மாவட்டத்தில் குடியேறினர்.

தெலுங்குச் செட்டியார்கள்

'சாது செட்டியார்கள்'

'24-மனை தெலுங்குச் செட்டியார்கள்' என்னும் சொற்றொடர் இந்த இனத்தைக் குறிப்பதே. இவர்கள் திண்டுக்கல் நகரில் கமிஷன் வாணிகத்திலும், மதுரை நகரில் வியாபாரத் துறையிலும், பண்ணைக்காட்டில் வாழை, மற்றும் மலைவிளை பொருள்களைப் பெரிய அளவில் பயிர் செய்வதிலும் ஈடுபட்டு உள்ளனர். தாண்டிக்குடி, வடுகபட்டி போன்ற ஊர்களிலும் வியாபாரியாக இருக்கின்றனர்.

வைசியச் செட்டியார்கள்

பலசரக்கு, பல்பொருள் அங்காடி, நகை வியாபாரம் ஆகியவற்றில் மதுரையிலும், தேனீயிலும் தேவாரத்திலும் தெலுங்கு பேசும் வைசியச் செட்டியார்கள் உள்ளனர்.

ஒட்டர்கள்

வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்காகப் பெரிய கிணறுகளைப் பாறைப்பகுதிகளில் வெட்டுவதற்கு, தெலுங்கு பேசிய மக்கள் ஆந்திரநாட்டிலிருந்து ஒட்டர்களை அழைத்தனர். பொது மக்கள் இவர்களை ஒட்டர்கள் என்றும், ஒட்டநாயக்கர் என்றும் குறிப்பிடுகின்றூர்கள். இவர்கள் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளனர். ஒட்டன்சத்திரம் என்னும் ஊர் இவர்களின் புகழைப் பாடுகிறது.

ரெட்டியார்கள்

கரிசல் மண் பூமியில் பயிரிடுவதில் வல்லவர்களான ரெட்டியார்கள் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைப் போல மதுரை மாவட்டத்தில் காணப்படவில்லை. கள்ளிக்குடி, ஆத்தூர் ஆகிய ஊர்கள் மட்டுமே குறிப்பிடத் தக்கன.

ராஜுக்கள்

இவர்கள் அலங்காநல்லூர், ராஜக்காபட்டி போன்ற ஓரிரு ஊர்களில் பயிர்த்தொழிலில் உள்ளனர்.

தெலுங்கினைத் தங்கள் வீட்டு மொழியாகக் கருதும் இந்த வடுகர்கள் மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் 30 சதமாக உள்ளனர்.

ராஜாக்கள்

இராஜபாளையம் ராஜாக்கள் வணிகராய் மதுரை மாவட்டத்தில் தேனீயில் பஞ்சு வியாபாரத்திலும் மர அறுவை ஆலை நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் எவ்வளவோ இனங்கள் இம்மாவட்டத்தில் உண்டு. விவரங்கள் கிடைத்தஇனங்களைப் பற்றி மட்டும் இங்கு எழுத நேர்ந்தது.

4

வேளாண்மை

❋

தொன்று தொட்டு, பயிர்த்தொழிலே, மதுரை மாவட்டத்தில் தலையாய தொழிலாக இருந்துவந்திருக்கிறது.

திருந்திய வேளாண்மை முறைகள் கையாளப் பெறும் இந்நாளுடன் ஒப்பிட்டுப் பார்க்க, பாண்டியர் காலத்தில் நெல் விளைச்சல் மிகுதி என்பது,

> ''கட்டுக் கலங்காணும் கதிர்உழக்கு நெல்காணும்
> அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
> அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்
> காளைகட்டிப் போரடித்து மாளாது செந்நெல் என்று,
> ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை''

என்னும் நாட்டுப்பாடலால் தெரியவருகிறது.

மாவட்டத்தின் சில பகுதிகள் வேளாண்மைத்துறையில் மிக வளமாகவும் வேறு சில பகுதிகள் ஒரு சிறு அளவே வளமாகவும் உள்ளன. வளம் குறைவான பகுதிகளில் தெலுங்கு பேசும் மக்கள் மிகவும் குறைவாக வாழ்கின்றனர். தெலுங்கு பேசும் மக்களின் பெரு முயற்சியாலேயே மதுரை மாவட்டத்தின் சில பகுதிகள் வேளாண்மைத்துறையில் சிறந்து விளங்குகின்றன.

நீர் நிலைகள்

கண்மாய், ஏரி என்ற நீர் நிலைகள் இம்மாவட்டத்தில் இராமநாதபுர மாவட்டத்து எல்லைப்பகுதிகளில் மட்டுமே உள்ளன. வைகை, பெரியாறு ஆகியவற்றின் இயற்கையான போக்கு உள்ள ஆற்றுப்படுகைப் பகுதிகளிலும் அரசினரால் அவற்றிலிருந்து அமைக்கப் பெற்ற கால்வாய்ப் பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பாசன வசதிகளாலேயே இம்மாவட்டத்தில் நெல், பருத்தி, கரும்பு, மணிலாக்கடலை, சூரியகாந்தி, எள் ஆகியவை உற்பத்தியாகின்றன.

நீர் நிலைகள்

மதுரை – காமராசர் பல்கலைக் கழகத்தின் உயிரியல் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் அமெரிக்க நாட்டு மிச்சிகன், ஹார்வர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் சேர்ந்து நீர்நிலைகளுள் ஒன்றான 'குட்டை'களின் தனி இயல்புகளைப் பற்றி ஆய்வு நடத்தி வருகிறார். இந்த ஆராய்ச்சி வேளாண்மை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கலாம்.

வளமான பகுதிகள்

இம்மாவட்டத்தில் நன்செய் நிலத்தைவிட, புன்செய் நிலம், கம்பம், கூடலூர்ப் பகுதியில் கூடுதலான வருவாய் தருகிறது. அத்தகைய பள்ளத்தாக்குகளில் மணிலாக்கடலையும் எள்ளும் போட்டுச் செல்வத்தில் புரளுகின்றனர். எள் பயிர் ஒன்றரை ஆள் உயரத்திற்கு வளருகிறது.

கம்பம், உத்தமபாளையம், போடிநாயக்கனூர் பகுதிகளில் மணிலாக்கடலை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. இங்கு ஓர் ஏக்கருக்கு 35 கலம் நெல் விளைகிறது.

சோழவந்தான், தேவாரம் பகுதிகளும் செழிப்பானவை.

சுருளிப் பள்ளத்தாக்கில் நெல்லும் புகையிலையும் வெற்றிலையும் பயிரிடுகிறார்கள்.

பழத்தோட்டங்கள்

நத்தம் பகுதியின் செம்மண்ணிலும் கோடைக்கானல் மலையெங்கும் பலவகையான பழத்தோட்டங்கள் உண்டாக்கப் பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டின் மாம்பழ உற்பத்தியில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு மதுரை மாவட்டத்திற்கு உரியது. இவ்வகையில் பெரியகுளம் வட்டாரம் சிறப்புப் பெற்றிருக்கிறது. இதற்கு 'வருஷ நாடு' என்று பெயர். மழை மிகுதியாகப் பெய்யும் பகுதி என்பது இச்சொற்றொடரின் பொருள். இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு, ஓர் அளவு நல்ல வளர்ச்சி பெற்றுள்ள பகுதிகளில் இதுவும் ஒன்று.

ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை இராசதானி பல மொழி பேசும் மாவட்டங்களை அடக்கியதாக இருந்தது. கோடூர் (ஆந்திரா), அம்பலவாயில், தாளிபரம்பா (இரண்டும் கேரளம்) என்னும் ஊர்களில் மட்டுமே சென்னை இராசதானிக்குரிய பழ ஆராய்ச்சிப் பண்ணைகள் இருந்தன.

1948-இல் மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு அடிகோலப் பெற்றது. எதிர்காலத்தில் தமிழ்நாட்டுக்கு ஒரு பழ ஆராய்ச்சிப் பண்ணை தேவை என்பதை அன்றைய முதலமைச்சரும் பழத் தோட்ட ஆர்வலருமான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் உணர்ந்தார். அதற்கு ஏற்றது நீர்வளம் நிரம்பிய பெரியகுளமே என்று தேர்ந்தெடுத்து, ஆராய்ச்சிப் பண்ணைக்குத் தேவையான இடங்களை விலைக்கு வாங்கவும் ஒதுக்கவும் நடவடிக்கை எடுத்தார்.

பெரியகுளத்திலிருந்து 6 கி. மீ. தொலைவில் பழ ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று 1957-இல் தொடங்கப்பட்டுள்ளது.

மா, சப்போட்டா, கொய்யா, வாழை, இலந்தை, மாதுளை, நெல்லி, நாவல், பப்பாளி, எலுமிச்சை போன்ற பழவகைகளும் கத்தரி, தக்காளி, மிளகாய், கோஸ், பீட்ரூட், முள்ளங்கி மரவள்ளிக்கிழங்கு போன்ற காய்கறி வகைகளும் ஆராயப்பட்டு வருகின்றன.

இந்தப் பண்ணை 1973 முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்டக்கலை ஆராய்ச்சிப் பண்ணையாகத் திகழ்ந்து வருகிறது.

பழனிமலைத் தொடரையொட்டி அமைந்திருப்பதே பெரியகுளத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும். பழனிமலைத் தொடர் என்பது 86 கி. மீ. நீளமும் 25 கி. மீ. அகலமும் கொண்டது.

ஆறுகள்

பழனிமலைக்கு மேற்கே தமிழ்நாடு – கேரள மாநிலங்களின் எல்லையில் தோன்றும் பெரியாறு, கம்பம் பள்ளத்தாக்கில் ஏறத்தாழ 1515 அடி (450 மீட்டர்) உயரத்திலிருந்து வந்து விழுகிறது. பிறகு சுருளிப்பட்டி அருகே சுருளியாற்றில் சேர்ந்து விடுகிறது.

பெரியாறு தோன்றும் மலையின் கேரளப்பகுதியில் பெய்யும் மழை தமிழ்நாட்டுப்பகுதியில் பெய்வதைப்போல மூன்றுபங்காகும். அது அரபிக் கடலில் போய் விழுந்து வீணுவதைத் தடுக்க, பெரியாறு நீர்த்தேக்கம் 1887-ஆம் ஆண்டு முதல் எட்டு ஆண்டு களில் கட்டப்பட்டது. இந்தத் தேக்கம் 1241 அடி உயரமும் 141 அடி அகலமும் கொண்டது. இவ்வாறு கட்டப்பட்ட அணை யாலும் நீர்த்தேக்கத்தாலும் மதுரை மாவட்டம் கடந்த 75 ஆண்டுகளாக வளம் பெற்றுள்ளது.

மதுரை மாவட்டத்தை வளப்படுத்தும் மற்றும் ஓர் ஆறு, வைகை. பெரியாற்றின் உபரி நீர் ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகையாற்றில் சேருகிறது. பெரியாறு, வைகை முதலியவற்ருல் மதுரை மாவட்டத்தில் இரண்டு இலட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங் கள் பாசனம் பெற்றுவருகின்றன.

வேளாண்மைக் கல்லூரி

வேளாண்மை ஆராய்ச்சியும், கல்வியும், கால்நடை வளர்ச்சி யும், இயற்கையான உரங்களும், புதுவகைக் கலப்பைகளும் மதுரை மாவட்டத்தின் வேளாண்மை வளத்துக்குத் துணையாக உள்ளன.

ஒத்தக்கடை என்னும் ஊர்அருகே யானைமலையின் அடிவாரத் தில் மதுரை வேளாண்மைக் கல்லூரி பெருந்தலைவர் காமராசர் முதல் அமைச்சராகவும் திரு. கக்கன் வேளாண்மை அமைச்சராக வும் இருந்தபோது ஏற்பட்டது. இது, இப்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையமாக இருந்துவருகிறது. இந்த நிலையை இக்கல்லூரி அடைந்ததற்கு இந் நூலாசிரியரும் ஓரளவு உதவி யுள்ளார்.

கல்லூரிக் கட்டடங்கள் மாணவர் விடுதிகள், நூலகம் ஆய்வுக்கூடங்கள், கால்நடை மருத்துவப்பண்ணை, கோழிப்

பண்ணை, பெரியாற்றுப் பாசனத்து மாதிரிப் பண்ணைகள், மண் சோதனை நிலையம், நெற்பயிர் மற்றும் திராட்சைப் பயிர் ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவை 400 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளன.

பால்வளம்

மதுரை மாநகரத்தை அடுத்த பரவையில், ஐக்கியநாடுகள் அவை மற்றும் உலக உணவு – வேளாண்மை நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு சென்னை மாதவரம் பண்ணை போன்ற பெரியதொரு பால்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

தனியார்துறையில்நெய்க்காரப்பட்டி,இடையக்கோட்டை, திண்டுக்கல் அங்குவிலாஸ் பண்ணைகள் குறிப்பிடத்தக்கன.

நெய்க்காரப்பட்டி குறுநிலமன்னர்கள் தலைமுறைதலைமுறையாகப் பெரிய பண்ணைகள் வைத்து மாட்டு இனப்பெருக்கத்திற்குத் துணை புரிந்திருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் காணப்பெறும் கால்நடை வளர்ச்சிக்கு, நாயக்கமாரும் யாதவர்களும் பாராட்டுக்கு உரியவர்கள் ஆவர்.

உரம்

இந்தியா முழுவதும் பசுமைப் புரட்சி ஏற்படுவதற்காகச் செயற்கை உரம் பெரிய அளவில் நன்செய் நிலங்களில் பயன்படுத்தப்பெற்று வருகிறது. மதுரை மாவட்டத்திலும் இந்த நிலையே நிலவுகிறது.

சோழவந்தான் பகுதியில் பன்றி உரத்தையும் நத்தம் பகுதியில் பறம்பு மலையில் கிடைக்கும் தழைகளையும் குழைகளையும் மார்க்கயன்கோட்டைப்பகுதியில் சணம்புவையும் உழவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். சணம்பு என்பது குறிப்பிட்ட ஒரு சில நிலங்களில் மட்டும் பயிராகக்கூடிய ஒரு செடி. இயற்கையான உரம் பெறுவதற்காக இதைப் பயிரிடுகிறார்கள். பசுமையாகத் தழைத்ததும் அதை அப்படியே வேரோடும் தழையோடும் உழுது சேற்றில் கலந்துவிடுகிறார்கள்.

வேளாண்மைக் கருவிகள்

மேலூரில் புதியவகைக் கலப்பைகள் 1955 அளவில் செய்யப்பட்டுத் தமிழ்நாடெங்கும் பரவியுள்ளன. இவை அரசாங்க

வேளாண்மைத்துறையின் பேராதரவைப் பெற்றுள. போஸ் கலப்பை, ஜான் கலப்பை, ஸ்டார் கலப்பை, மணி மார்க் கலப்பை என்பன பெரிய தொழிற்சாலைகளால் செய்யப்படுகின்றன.

மலைத்தோட்டப் பொருள்கள்

நீலகிரி, சேலம், கோவை மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக, எல்லா வகையான மலைத்தோட்டப் பொருள்களும் மதுரை மாவட்டத்தில் விளைகின்றன.

காப்பி

பழனிமலைத் தொடரில் பழனி, போடி, பட்டிவீரன்பட்டி, சுருளிமலை, சிறுமலை போன்ற மலைகளில் ஏறத்தாழ 50,000 ஏக்கர்ப் பரப்பில் காப்பிச்செடி பயிரிடப்படுகிறது. கானல்காடு என்னும் இடத்தில் இந்தியக் காப்பிக் கழகத்தார் ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவி உள்ளனர். காப்பிச் செடிகளுக்கு உரமிடவும் நோய்கள் வாராது தடுக்கவும் இந்த ஆராய்ச்சி நிலையம் உதவுகிறது இந்த நிலையத்தின் முயற்சிகளால் இப்பகுதியில் விளையும் காப்பியின் தரம் மேம்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் காப்பிச் செடி பயிரிடுவோர் தொகை 5,000 ஆகும். இவர்களில், பட்டிவீரன்பட்டி முதலிய பகுதிகளில் 25 பேர் மிகப் பெரிய உற்பத்தியாளராக உள்ளனர். இங்கு ஓர் ஏக்கருக்கு 1,000 கிலோவுக்குக் கூடுதலாக, காப்பி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் சராசரி உற்பத்தி ஓர் ஏக்கருக்கு 400 கிலோதான். ஹாவாய்த் தீவுகளில் 50 கிலோ. எனவே கீழ்ப்பழனி மலையின் சராசரி ஏக்கர் காப்பி உற்பத்தி ஈவு உலகப் பெரும் சாதனையாகும்.

தேயிலையும் மதுரை மாவட்டத்தில் ஓரளவு உற்பத்தியாகிறது.

கோக்கோ

காப்பியைப்போலப் பானமாகக் குடிப்பதற்கும் சாக்லேட் போன்ற உணவுப் பொருள்களில் சேர்ப்பதற்கும் வெளிநாடுகளிலிருந்து கோக்கோவை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. 1968-க்குப் பின்னரே கோக்கோ உற்பத்தியில் இந்தியா கவனம் செலுத்தி வருகிறது. கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள சில பகுதிகள் மட்டுமே இதற்கு ஏற்றவையாக இருக்கின்றன.

தமிழ்நாட்டில் கோக்கோ பயிரிடப்படும் நான்கு மாவட்டங்களில் மதுரை மாவட்டமும் ஒன்றாகும்.

கோடைக்கானல் மலையில் அரசின் ஆதரவோடு 100 ஏக்கர்ப் பரப்பில் கோக்கோ பயிரிடப்படுகிறது. கோக்கோ ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மேலும் கோக்கோ பயிரிட விரும்புபவர்களுக்கு அரசு, நிலம் வழங்கியும் கடன் கொடுத்தும் ஊக்குவிக்கிறது.

ஏலக்காய்

இந்தியாவிற்கு அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் நறுமணப் பொருள்களில் ஏலக்காய்க்குச் சிறப்பான இடம் உண்டு. ஏலக்காய் உற்பத்தியில் கேரளம் தலைசிறந்து விளங்குகிறது. கேரளத்துக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் பல இடங்களில் (மேற்குத் தொடர்ச்சி மலையில்) ஏலக்காய் விளைகிறது.

தமிழ்நாட்டில் ஏலக்காய் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது மதுரை மாவட்டமே. கம்பம் பள்ளத்தாக்கிற்கு அப்பால் பல கிலோமீட்டர்த் தொலைவு சென்றால் ஏல மலைகளைக் காணலாம். இம் மலைகளில் ஏலக்காய் மட்டுமன்றி இலவங்கம், சாத்துக்குடி திராட்சை ஆகியவையும் விளைகின்றன.

பழனிமலையின் தொடர்ச்சியே ஏலமலை எனப்படும் ஏலக்காய் மலை. இந்த மலையில் வடக்கேயிருந்து தெற்கே வர வர உயரம் குறைகிறது.*

பலத்த காற்று, மிகுதியான சூரிய வெப்பம் ஆகியவை இல்லாதும் நிழல் தரும் மரங்கள் உடையதும் நல்ல மழை பெய்வதுமான பகுதிகள் ஏலக்காய் விளைச்சலுக்கு ஏற்றவை தமிழ்நாட்டில் ஏலக்காய் பயிரிடும் பரப்பளவில் பாதிக்குமேல் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது.

---

*தேவாரத்திற்கு அருகே மலையின் உயரம் 4615 அடி (1400 மீட்டர்). கேரள எல்லையில் 4215 அடி (1250 மீட்டர்); உத்தமபாளையத்திற்கு அருகே 3205 அடி (1050 மீட்டர்) மலையில் துளைக்கப்பெற்ற சுரங்கவழிக்கு மேற்கே 3250 அடி (870 மீட்டர்).

சமையலுக்கு ஏலக்காய் சிறிதளவுதான் தேவைப்படுகிறது. மருந்து, ரொட்டி, மிட்டாய் ஆகியவற்றின் உற்பத்திக்குத்தான் அது பெரிய அளவில் செலவாகிறது. டிஞ்சர் மருந்து செய்யவும் உபயோகப்படுகிறது.

பல ஆண்டுகளுக்குமுன் இம்மாவட்டத்தில் ஏலக்காயைப் பற்றி ஓர் இதழும் வெளியிடப்பெற்றது.

இந்த மாவட்டத்தில் ஏலத்தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு, கேரள மாநிலத்திலும் தோட்டங்கள் உள்ளன. இந்த மாநிலத்தில் விளையும் ஏலக்காயும் மதுரை மாவட்டத்தில் விளையும் ஏலக்காயும் தேவிபுரம், பண்ணைப்புரம், உத்தமபாளையம் போடிநாயக்கனூர், கம்பம், கோம்பை ஆகிய ஊர்களில் உள்ள விற்பனைக் கடைகள் மூலமே அதாவது தமிழ்நாட்டிலேயே விற்பனை ஆகின்றன.

சில ஆண்டுகளுக்குமுன் இந்திய அரசு ஏற்படுத்தியுள்ள ஏலக்காய் வாரியம், ஏற்றுமதிக்கும் உற்பத்திக்கும் பல நெறிமுறைகளை வகுத்துள்ளது. போடிநாயக்கனூரில் ஏலக்காய் ஆராய்ச்சிக்கு ஒரு கிளை நிலையம் உருவாகி வருகிறது.

ஏலக்காய் காய்க்கும் சமயம் சிலர் அதைத் திருடிக் குழி தோண்டிப் புதைத்து வைத்திருந்து பிறகு எடுத்துச் செல்லுகின்றனர். இதனால் காய்ப்புக் காலத்தில் காவல்காக்கும் வழக்கம் இருக்கிறது.

மதுரை மாவட்டத்தின் ஒருபகுதியின் செல்வச் செழிப்புக்கு ஏலக்காய் வேளாண்மை, ஒரு முக்கிய காரணமாகும்.

ஏலக்காயிலிருந்து எண்ணெய் பிழிவதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

புகையிலை

மதுரை மாவட்டத்தில் புகையிலை உற்பத்தி வேடசந்தூர் வட்டத்தில் பெரிதும் பரவியிருக்கிறது. சுருட்டுப் புகையிலை ஆராய்ச்சிக்காக 1949-இலிருந்து ஓர் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

வேடசந்தூர்ப் புகையிலையைக் கொண்டு திண்டுக்கல்லில் ஸ்பென்சர் கம்பெனியார் 1850 முதல் செய்து வரும் பெரிய அளவுச் சுருட்டு 'திண்டுக்கல் சிகார்' என்று இங்கிலாந்தில் பெயர் பெற்று, அந்த நாட்டு மக்கள் உபயோகித்து வருகிறார்கள்.

நம் நாட்டினரால் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருபவற்றுள் திண்டுக்கல் அங்கு விலாஸ் புகையிலைத் தொழிற்சாலை புகழ் பெற்றது.

பஞ்சு (பருத்தி)

திருமங்கலம் வட்டத்தில் கருங்கண்ணிப் பஞ்சு விளைகிறது. பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை, மேலூர், நத்தம் வட்டங்களில் கம்போடியாப் பஞ்சு விளைகிறது. இவற்றின் உற்பத்தி போதிய அளவு இல்லாததால் மதுரை மாநகரத்துப் பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரவழைக்கப்படுகிறது.

திருமங்கலம் பகுதியில் உப்பம் பஞ்சு விளைகிறது. வெள்ளையாகவும் நீளமாகவும் இருப்பதால் இந்தப் பஞ்சு விரும்பி வாங்கப்படுகிறது.

எகிப்திய நீண்ட இழைப் பருத்தியை விளைவிக்க மதுரை மாவட்டத்தில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. அம் முயற்சி பலிக்கவில்லை.

பஞ்சு வியாபாரத்தில் மதுரையும் தேனியும் சிறந்து விளங்குகின்றன.

வளமனைகளில் பயன்படுத்தப்படும் சொகுசு நாற்காலிகளுக்கும் மோட்டார்க் கார் இருக்கைகளுக்கும் தேவையான பட்டுப்பருத்தி போடிநாயக்கனூரில் உற்பத்தியாகிறது.

கரும்பு

கரும்பு உற்பத்தி சிறிதளவு உள்ளது. பழனி வட்டமும் அலங்காநல்லூர்ப் பகுதியும் மதுரை-சிலைமான் சாலையில் வைகைப் பகுதியும் குறிப்பிடத்தக்கவை.

காய்கறி

கோடைக்கானல் மலையில் பலவகையான காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. உருளைக்கிழங்கு உற்பத்தியாகிறது. ஆனால் உருளைக்கிழங்கு உற்பத்தியில் நீலகிரி மாவட்டம் அடைந்துள்ள வியக்கத்தக்க முன்னேற்றத்தை உலகத்திலுள்ள எப்பகுதியாலும் அடைய முடியவில்லை.

கோடைக்கானல், நிலக்கோட்டை, பெரியகுளம், திண்டுக்கல் வட்டங்களில் பெரிய அளவில் தக்காளி பயிரிடப்படுகிறது தமிழ்நாட்டின் காய்கறி உற்பத்தியில் 12 சதமும் வெங்காய உற்பத்தியில் 50 சதமும், வெள்ளைப்பூண்டு உற்பத்தியில் 80 சதமும் மதுரை மாவட்டத்தில் உற்பத்தியாகின்றன.

வெற்றிலை

தமிழ்நாட்டில் வெற்றிலை பயிரிடுவதில் மதுரை மாவட்டம் குறிப்பிடத்தக்கது. சோழவந்தான், பொன்மேனி, சிந்தாமணி, ஐயனூர்புரம், பனையூர் ஆகிய ஊர்களில் பலர் சொந்தமாகவும் குத்தகைக்கும் வெற்றிலைக்கொடிக்கால் போடுகின்றனர். வெற்றிலை, நெல், கரும்பு ஆகிய மூன்று பயிர்களையும் ஒரே நிலத்தில் மாறி மாறி ஒன்றன்பின் ஒன்றாகப் பயிரிடுகிறார்கள். தொன்றுதொட்டு வெற்றிலை பயிரிடப்பட்டு வந்த நிலம் வெற்றிலைக்குண்டு என்று பெயர் பெற்றுப் பிற்காலத்தில் வத்தலக்குண்டு என்று மாறியும் மருவியும் வழங்கி வருகிறது.

பாண்டியர் ஆட்சியில் வெற்றிலைப் பயிருக்கு வரி விதிக்கப்பட்டது. ஆகவே, வெற்றிலை பயிரிடுவது பெரிய அளவில் நிகழ்ந்திருக்க வேண்டும். சேனையார் என்ற இனத்தார்கள் (சேடர்கள்), தாங்கள் முதல் போகத்தில் விளைவித்த வெற்றிலையை அரண்மனைக்குக் கொடுத்து அந்தப் போகத்துக்கு வரி விலக்குப் பெற்றதாக மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

பொன்மேனியில் கொடிக்கால் பிள்ளைமார் சங்கம் இயங்கி வருகிறது.

பூ

மதுரை மாவட்டத்தின் புகழ்மிக்க உற்பத்திகளில் பூ முக்கியமான இடம் பெறுகிறது. பூ வகைகளில், மல்லிகைப்பூ முதலிடம் வகிக்கிறது. திருமங்கலம், கோடைரோடு, அம்பாத்துறை

ஆகியவை குறிப்பிடத்தக்கன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான கூடைகளில் இரயில்கள் மூலமாகவும் ஆகாய விமானங்கள் வாயிலாகவும் இந்தியாவெங்கும் மதுரையின் மணம்செல்லுகிறது.

மிகப் பழங்காலத்திலிருந்தே மதுரை மாவட்டத்தில் மல்லிகைப்பூ பயிரிடப்பட்டிருக்கின்றது. என்றும் மாடுகளுக்கும் குதிரைகளுக்கும்கூட நாள் தவறாது மல்லிகை மாலை கட்டி அலங்கரிக்கப்பட்டது என்றும் இந்த மாவட்டத்து நாட்டுப் பாடல்கள் வாயிலாகத் தெரியவருகிறது.

மதுரை மாவட்டத்தின் சில பகுதிகள் பூந்தோட்டத் தொழிலால் செழிப்படைந்து ஆயிரக்கணக்கான ஆடவருக்கும் பெண்டிருக்கும் வேலைவாய்ப்பை நல்குகின்றன.

திராட்சை

தருமபுரி, கோவை மாவட்டங்களுக்கு அடுத்தபடிதிராட்சை உற்பத்தியில் மதுரை மாவட்டம் ஏற்றம் பெற்றிருக்கிறது.

பட்டிவீரன்பட்டியிலிருந்தும் (உத்தமபாளையம் பகுதி) காமயக்கவுண்டன் பட்டியிலிருந்தும் (பெரியகுளம் பகுதி) கங்குவார்ப்பட்டியிலிருந்தும் திராட்சைப் பழங்களும் பதியன் களும் ஏராளமாக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பெறு கின்றன.

கோடைக்கானல் மலையின் அடிவாரத்திலுள்ள பட்டிவீரன்பட்டி முதலிய ஊர்களில் பன்னீர்த் திராட்சையும் பலவகையான புதிய திராட்சை வகைகளும் பயிரிடப்பட்டு $5\frac{1}{4}$ கிலோ எடை உள்ள பானைகளில் அடைத்துச் சீல் வைத்து விற்பனைக்கு அனுப்பப்பெறுகின்றன.

ஆப்பிள்

1961 ஆம் ஆண்டு முதல் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் முயற்சியால் கோடைக்கானல் மலைப்பகுதியில் சிறு அளவில் ஆப்பிள் பயிரிடப் பெற்று வருகிறது. ஆப்பிள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கிவருகிறது.

வாழை

தமிழர்களுடைய முக்கனிகளில் ஒன்று வாழை தமிழ் நாட்டிலேயே பெரிய அளவில் வாழைத்தோட்டங்கள் உள்ள மாவட்டம் மதுரையே.

இம் மாவட்டத்தில் வாழைத்தோட்டங்கள் மிகுதியாக உள்ள பகுதி சிறுமலை. இம் மாவட்டத்தில் (1) மலை வாழை, (2) நாமரி, (3) செவ்வாழை, (4) பூவாழை, (5) ரொபஸ்டா (6) குள்ளவாழை என்ற வாழை வகைகள் உற்பத்தியாகின்றன. சிறுமலை வாழைப்பழத்தைத் தொட்டால் குளிர்சாதனப்பெட்டியிலிருந்து அதை எடுக்கும்போது உண்டாகும் உணர்ச்சி நமக்கு ஏற்படும்.

பட்டிவீரன்பட்டியிலிருந்து எட்டுக் கி. மீ. தொலைவில் இருக்கும் ஐயம்பாளையத்திற்கு அருகேயுள்ள பில்லாவளி என்னுமிடத்திலும் மற்றும் சின்னமனூரிலும் வாழைத்தோட்டங்கள் பெரியஅளவில் போடப்பட்டிருக்கின்றன:

தேனிப்பகுதியில் உற்பத்தியாகும் வாழைப்பழம் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது. வாழைச் சாகுபடி செய்ததும் அடுத்த போகத்திற்குக் கடலையைப் பயிரிட்டு மூன்றாவது போகத்திற்குத் தக்காளி போடுவர். பிறகு மீண்டும் வாழையைப் பயிரிடுவர்.

பழனிமலையின் கீழ்ப்பகுதியில் பல இடங்களில் வாழை பயிரிடப்படுகிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களைப் போலச் சமதரையில் பயிரிடப்பெறாது மலைப் பகுதியில் பயிரிடப்பெறுவதால் மதுரை மாவட்டத்து வாழைப்பழத்தை மலைப் பழம் என்று சொல்லுவது மரபு.

மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உற்பத்தியாகும் வாழைப் பழவகைகள் தமிழ்நாடெங்கும் விற்பனையான போதிலும் சிறுமலைப் பழம்தான் மிகவும் புகழ்பெற்றது. இது சுவையாகவும் இனிப்பாகவும் கூடுதலான உணவுச்சத்து உடையதாகவும் வழவழப்புத்தன்மை உடையதாகவும் இருக்கிறது. சில நாள்களுக்குக் கெடாமல் இருப்பதற்கு உரிய தன்மையும் பெற்றுள்ளது.

துணைத் தொழில்கள்

கல்லுப்பட்டி, தல்லாகுளம், பெரியகுளம், கோடைக்கானல் ஆகிய ஊர்களில் பெரிய அளவில் கோழிப் பண்ணைகள் இயங்குகின்றன.

பாண்டியரின் கொடியிலும் முத்திரையிலும் இடம் பெற்றுள்ள மீன், அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே பாண்டிய நாட்டில் மீன்பிடி தொழில் சிறப்பாக இருந்தமைக்குச் சான்று பகர்கிறது.

கடற்கரையின்றி உள் மாவட்டமாக இருப்பினும் இன்று இம் மாவட்டத்தின் நீர் நிலைகளில் மீன் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. திலேபியா போன்ற மேலைநாட்டு மீன் வகைகளை வளர்ப்பதில் தமிழ்நாட்டில் முதலிடம் வகிப்பது இம் மாவட்டமே.

5

போக்குவரத்து

முன்னுரை

வரலாற்றுக் காலம்தொட்டு மதுரை மூதூர் யாத்திரைத் தலமாக இருந்துவருகிறது. இராமேசுவரம் அல்லது கன்னியாகுமரிக்குச் செல்லுபவர்கள் மதுரையையும் காணத் தவறுவதில்லை. அவ்வக்காலத்திற்கு உரிய வாணிபமும் தொழிலும் மதுரை மாநகரில் சிறந்து விளங்கி உள்ளன. முத்து வாணிபத்திற்காக, மேலை நாட்டார் மதுரைக்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்திருக்கின்றனர்.

நெடுஞ்சாலைகள்

பாண்டிய நாட்டின் தலைநகராக மதுரை இருந்ததால் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் மற்றும் சேர, சோழ நாடுகளுக்கும் அவற்றின் துறைமுகங்களுக்கும் மதுரையை இணைக்கும் சாலைகள் இருந்துவந்தன. ஓயாது போர்கள் நிகழ்ந்ததால் இச்சாலைகள், நெடுஞ்சாலைகளாகவே இருந்திருக்கும். வழி நெடுக அமைக்கப்பட்ட சத்திரங்கள், இதற்குச் சான்றாகவிளங்குகின்றன. சத்திரங்களை ஒட்டி ஊர்கள் உண்டாகியிருப்பதை ஊர்ப்பெயர்களால் அறிகிறோம்.

அரசி மங்கம்மாள் காலத்தில் சாலைகளைப் புதுப்பிக்கவும், புதிய சாலைகள் போடவும் பெரும் பணம் செலவிடப்பட்டது. மங்கம்மாள் சாலை என்ற பெயரால் அவை மக்கள் நாவில் வழங்குகின்றன.

மங்கம்மாளும் மதுரையை ஆண்ட ஏனையோரும் பல சத்திரங்களைக் கட்டினார்கள். இவை யாவும் மங்கம்மாள் சத்திரம் என்று குறிப்பிடப்பெறுகின்றன. மங்கம்மாளின் புகழ் மங்காதபடி நின்று நிலவுவனவற்றுள் மதுரையில் உள்ள மங்கம்மாள் சத்திரம் நம் கவனத்திற்கு உரியது. இந் நகரில் குறைந்த கட்டணம் செலுத்தித் தங்குவதற்கு வசதியான விடுதி இதுவே. வழிப் பயணிகள் மட்டுமே இதைப் பயன்படுத்தலாம் என்று இச் சத்திரத்தை அமைத்த இராணி மங்கம்மாள் தரும சாசனத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

மதுரை மாவட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளில், அண்டை மாநிலமான கேரளத்தை இணைக்கும் இரண்டு நெடுஞ்சாலைகள் மலைப்பகுதியில் அமைந்துள்ளன. ஒன்று போடிநாயக்கனூரில் இருந்து கேரள எல்லையிலுள்ள போடிமேடு வரை 19 கி. மீ. தொலைவினது. இந்த நெடுஞ்சாலையின் மிக உயர்ந்த பகுதி 4,500 அடி (அதாவது குன்னூர் மலைநகரத்தின் உயரம்). இங்கிருந்து தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களின் அழகையும் கண்டு களிக்கலாம். மதுரையிலிருந்து மூணாறு, கொச்சி ஆகியவற்றுக்குச் செல்ல இதுவே குறுக்குப் பாதை. கோடைக்கானல் மலையிலிருந்து டாம் ஸ்டேஷன் (TOM STATION) என்னும் இடத்திற்கும் மலைச் சாலை உள்ளது.

காசியிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை இம் மாவட்டத்தின் வழியாகப் போடப்பட்டிருக்கிறது.

வைகை அணை கட்டப்பட்டதன் விளைவாக ஆண்டிப்பட்டி பெரியகுளம் நகரங்களை இணைக்கும் சாலை உருவாக்கப்பட்டது. தேவதானப்பட்டி – ஜெயமங்களம் – வைகை அணை வழியாகத் தேனி நகரத்தைக் கோடைக்கானலுடன் இணைக்கும் சாலையும் வைகை அணையால் ஏற்பட்டுள்ளது.

திருச்சியிலிருந்து மதுரைக்கு வர கேழுக்குறிச்சி, சின்னமுளையூர், நத்தம் வழி குறுக்குப் பாதையாகும். இந்தச் சாலையின் தரத்தை மேம்படுத்தவும் இவ்வழியாகப் பேருந்துகளை இயக்கவும் அரசின் உரிய துறைகள் ஆவன செய்ய வேண்டும்.

இம் மாவட்டத்திற்குப் பின்வரும் சாலைகள் தேவை:

(1) மதுரையைக் கொச்சித் துறைமுகத்துடன் இணைக்கத் தேனி, குமுளி, கோட்டயம் வழியாகத் தேசிய நெடுஞ் சாலை.

(2) வருஷநாட்டுப் பகுதியில் மயிலாடும்பாறை எம். கல்லுப்பட்டி இணைப்புச்சாலை.

(3) வருஷநாட்டுப் பகுதியை இராமநாதபுர மாவட்டத்தி லுள்ள வத்திராயிருப்புடன் இணைக்கும் மலைச்சாலை.

(4) கும்பக்கரையைப் பெரியகுளத்துடன் இணைக்கும் மலைச்சாலை.

ஐக்கிய நாடுகள் அவையின் ஆதரவில் உலகெங்கும் புதிய சாலைகள் போடப்பெற்று வருகின்றன. இவற்றிற்கு 'INTERNATIONAL HIGHWAYS' என்று பெயர். இதில் ஒரு பகுதி 'THE PAN ASIA HIGHWAY' என்பது. இது ஈரானிலுள்ள டெகரானில் தொடங்கிச் சிங்கப்பூர் வரை செல்லும். 31,200 மைல் நீளமுள்ள இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையைவிடத் தரம் சிறந்ததாக இருக்கும். ஆசிய நாடுகள் பலவற்றை இணைப்பதே இந்தச் சாலையின் நோக்கம். எனவே இது பெங்களூரி லிருந்து மதுரை வழியாக இராமேசுவரம் வரை போடப்படும். இந்தச் சாலையைப் பயன்படுத்துபவர்கள், இராமேசுவரத்திலிருந்து கப்பலில் இலங்கைக்குச் செல்வர்.

பேருந்துப் போக்குவரத்து

1905-ஆம் ஆண்டு அளவில் இம்மாவட்டத்தில் பேருந்து வசதி ஏற்பட்டது.

மிகச்சிறந்த முறையில் இம்மாவட்டத்தில் பேருந்துப் போக்குவரத்தை அமைத்து, குறித்தநேரத்தில் நடத்திய பெருமை தனியார்துறையைச் சேரும். டி. வி. எஸ். கம்பெனியார் இவ் வகையில் திறமையாக வழிகாட்டினர். அவர்களைப் பார்த்தும் அவர்களிடம் பேருந்துகளை வாங்கியும் அவர்களிடம் கடன் உதவி பெற்றும் பல சிறிய கம்பெனிகள் பேருந்துப் போக்குவரத்துத் தொழிலை நன்கு நடத்தி வருகின்றன.

சிறந்த நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக டி. வி. எஸ். போக்குவரத்து நிறுவனம் இயங்கிவந்தது. சட்டதிட்டங்களைப் பின்பற்றியும், எவ்வித விதிவிலக்கும் யாருக்கும் கொடுக்காமலும், தொழிலாளர் நலனைப் பேணியும், பயணிகளின் நலத்தைக் கருதியும் இந்த அமைப்பு செயல்பட்டது. டி. வி. எஸ். பேருந்து, குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தது. அதைப் பார்த்து, தங்கள் கடிகாரங்களைத் திருப்பி வைத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவியது.

சாலையில் கிடக்கும் லாடம், ஆணி ஆகியவை பேருந்தின் சக்கரத்தில் குத்தி, காற்று இறங்கிவிடும். சாலைகளில் உள்ள இரும்புப் பொருள்களைப் பொறுக்கும் காந்த சக்தி இயந்திரங்களை டி. வி. எஸ். கம்பெனியார் அமெரிக்காவிலிருந்து வரவழைத்து, தங்கள் பேருந்துகளில் பொருத்தினார்கள். இதனால் பேருந்துச் சக்கரத்திற்கு ஏற்படும் அபாயத்தைத் தடுத்தனர்.

ஒவ்வொரு பேருந்தும் எவ்வளவு வேகத்தில் ஓடியது, எங்கெல்லாம் நின்றது என்பதைப் பதிவு செய்யும் 'டெக்கோகிராப்' என்ற கருவியையும் டி. வி. எஸ். கம்பெனியார் ஒவ்வொரு பேருந்திலும் பொருத்தினர்.

தமிழ்நாட்டுப் பொது மக்களுக்குச் செய்த பணிகளுக்காகவும், தனியார் துறையில் பேருந்துகள் செம்மையாக இயங்குவதற்குப் பலரை ஊக்குவித்ததற்காகவும் டி. வி. எஸ். நிறுவனத்தைத் தொடங்கிய திரு சுந்தரம் ஐயங்கார் அவர்கள் அவருக்குப்பின் அப்பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றிய திரு. டி. எஸ். கிருஷ்ணா அவர்கள், மற்றும் அலுவலர்கள், டி. வி. எஸ் தொழிலாளர்கள் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். டி. வி. எஸ். கம்பெனியாரின் தொண்டு இந்தியாவில் போக்குவரத்துத் துறையின் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்கது.

சில ஆண்டுகளுக்குமுன் டி. வி. எஸ். பேருந்துகள் தமிழக அரசின் உடைமை ஆக்கப்பெற்று, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்னும் பெயரால் இயக்கப்பெறுகின்றன தமிழ்நாட்டில் தேசியமயமாக்கப் பெற்றுள்ள ஏனைய போக்குவரத்துக் கழகங்களை நோக்க, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நன்றாக நடைபெறுகிறது. இதற்கு அடிகோலியது டி. வி. எஸ். நிறுவனமே.

தமிழ்நாட்டின் பிற நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இன்றும் மதுரையில் உள்ளூர்ப் போக்குவரத்து ஓரளவு சீராகவே இயங்குகிறது. இப்பெருமையும் டி. வி. எஸ்.க்கு உரியது.

லாரிப் போக்குவரத்து

லாரிப் போக்குவரத்து இம் மாவட்டத்தில் பெருகி இருக்கிறது. தூத்துக்குடி, கொச்சித் துறைமுகங்களுக்கும், கேரளத்தின் பல பகுதிகளுக்கும் இம் மாவட்டத்தின் வழியாகவே லாரிகள் செல்கின்றன. இந்தியாவின் தலைசிறந்த லாரி நிறுவனங்கள் யாவும் மதுரையில் அலுவலகங்கள் வைத்துள்ளன.

துறைமுகங்கள்

உள்நாட்டு மாவட்டமாக இருப்பதால் இங்குத் துறைமுகங்கள் இல்லை. பாண்டியர் காலத்தில் கொற்கையும் தொண்டியும் மதுரைச் சீமையின் புகழ்மிக்க துறைமுகங்களாக இருந்தன. இப்போது மதுரை மாவட்டத்திற்குப் பயன்படும் துறைமுகங்களாகத் தூத்துக்குடியும், கொச்சியும், இராமேசுவரமும் திகழ்கின்றன. தூத்துக்குடியையும், கொச்சியையும் மதுரை வழியாக இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையையும், அகல இரயில் பாதையையும் போடவேண்டும்.

சேதுசமுத்திரத் திட்டம் (பார்க்க இந்நூலாசிரியர் எழுதிய இராமநாதபுர மாவட்டம் 1972-ஆம் ஆண்டுப் பதிப்பு பக்கம் 114 - 121) நிறைவேற்றப்படுமானால் மதுரை மாவட்டத்தின் வளம் ஓங்கும்.

இரயில் போக்குவரத்து

மதுரை மாவட்டத்தில் 1875-ஆம் ஆண்டு இரயில் போக்குவரத்து ஏற்பட்டது. மொத்தம் 310 கி. மீ. தொலைவிற்கு இரயில் பாதைகள் உள்ளன. இவை யாவும் மீட்டர் கேஜ் பாதைகளே. அதாவது இவற்றின் அகலம் 3″ 3⅜″.

இரயில் பாதைகள்

(யாவும் மீட்டர் கேஜ் - அகலம் 3′ $3\frac{3}{8}$″)

	பிரிவு	கி. மீ.	திறக்கப்பட்ட தேதி	மதுரை மாவட்டத்தில் இயங்கும் தொலைவு கி. மீ.
1.	திருச்சி - மதுரை	155	1— 9—1875	97
2.	மதுரை - மண்டபம்	146	1— 8—1902	13
3.	மதுரை - தூத்துக்குடி	158	1— 1—1876	30
4.	திண்டுக்கல் - பொள்ளாச்சி	120	19—11—1928	80
5.	மதுரை - போடிநாயக்கனூர்	90	20—11—1928	90

மதுரை - போடிநாயக்கனூர் பாதை $2\frac{1}{2}$ அடி அகலமுள்ள குறுகலான பாதையாக 1928-இல் போடப் பெற்றது. 1941-இல் இரண்டாம் உலகப்போர் நடந்த பகுதிகளில் படைகளையும் போர்க்கருவிகளையும் அனுப்புவதற்காகத் திடீரென்று இரயில் பாதைகள் அமைக்க ஆங்கில அரசு முடிவு செய்தது, அதற்காக இந்தத் தண்டவாளங்கள் பிரித்து எடுத்துப் பயன்படுத்தப்பட்டன. மக்கள் கிளர்ச்சியின் விளைவாக 1953-இல் மீண்டும்இப்பாதை அமைக்கப்பட்டு 24—7—1954-இல் திறக்கப்பட்டது. இப்போது உள்ள பாதையின் அகலம் 3″, $3\frac{3}{8}$″ அங்குலம்.

மதுரை ஹார்வி ஆலைத் தொழிலாளர்களுக்காக அந்த ஆலையிலிருந்து தொழிலாளர் குடியிருப்பு உள்ள ஹார்விப்பட்டி வரை 8 கி மீ. தொலைவிற்கு நாள்தோறும் தனி இரயில்களை ஓட்டு கின்றனர் இந்த இரயில்கள் எந்த இரயில் நிலையத்திலும் நிற்ப தில்லை. இந்த வண்டிகளுக்கு பயணச் சீட்டுகளும் கிடையாது.

மதுரையைத் தலைநகரமாக கொண்ட கோட்ட அலுவலகத்தை இரயில் துறையினர் ஏற்படுத்தியுள்ளனர். மதுரை திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள இரயில் பாதை களும் செங்கோட்டை – கொல்லம் இரயில் பாதையும் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள சில இரயில் பாதைகளும் இந்தக் கோட்ட ஆட்சிக்கு அடங்கின.

இம் மாவட்டத்திற்குக் கீழ்க்கண்ட புதிய இரயில் பாதைகள் தேவை:

(1) கரூர் – குஜிலியம்பாறை – திண்டுக்கல்

(2) போடிநாயக்கனூர் – கோட்டயம்

(3) திண்டுக்கல் – வத்தலக்குண்டு – பெரியகுளம் – தேனி – சின்னமனூர் – உத்தமபாளையம் – கம்பம்

புதிய பாதைகள் போடுவதைவிட அவசரமாகச் செய்ய வேண்டியது ஏற்கெனவே உள்ள பாதைகளை அகலப்பாதையாக மாற்றுவதாகும். இந்தியா முழுவதும் ஒரே அளவுள்ள அகலமான இரயில் பாதைகள் (BROAD GAUGE) போடப்பட வேண்டும். தமிழ்நாட்டின் தென்பகுதியில் தொழில்கள் பெருகாமைக்கு ஒரு காரணம் அகலமான இரயில் பாதை இன்மையே.

கம்பி இரயில்

கம்பத்துக்கு அருகே சுருளி நீர் மின்சார நிலையம் உளது இதன் உயர்ந்த பகுதிகளுக்கு 'கேபிள் கார்' என்ற (மின்சாரத்தால் இயங்கும்) பெட்டியில் பயணம் செய்யலாம்.

போடிநாயக்கனூர்ப் பகுதியில் தோட்டக்காரர்கள் அங்கு விளையும் தேயிலையையும் பிற பொருள்களையும் விரைவாக அனுப்பு வதற்காக டாம் ஸ்டேஷனுக்கும் மூணாறுக்கும் இடையே 50 கி. மீ. தொலைவிற்குக் கம்பி இரயில் நடத்திவருகிறார்கள்.

பழனி – கோடைக்கானல் மலைகள் இணைப்பு

இப்போது பழனியிலிருந்து செம்பட்டு வத்தலக்குண்டு வழியாகக் கோடைக்கானலை அடைய 80 மைல் செல்லவேண்டும், இதற்கு 7 மணி நேரம் பிடிக்கும். இதனால் போக்குவரத்து இடர்ப்பாடும் செலவும் மிகுதியாக ஏற்படுகின்றன. பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருள்களின் விலை ஏற ஏறப் பயணச் செலவும் கூடுதலாகும்.

இதனைப் பெருமளவில் குறைக்கப் பழனிமலையையும் கோடைக்கானல் மலையையும் ஆகாய இரயில்பாதை வாயிலாக இணைப்பதே அறிவுடைமை. திரு மனோகரன் அவர்கள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்தபோது, இதற்கான ஒரு திட்டம் தீட்டப் பெற்றது. அதை நிறைவேற்றுவது இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்கும் இன்றியமையாதது.

இத்தகைய பாதை ஏற்பட்டால் கோவையிலிருந்து கோடைக்கானலை இரண்டுமணி நேரத்தில் அடையலாம்.

மின்வெட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஜெனரேட்டரால் மின்சாரம் உற்பத்தி செய்து இத்திட்டத்தை நிறைவேற்றுவது எளிது.

கோயில் நிலங்கள் பாதிக்கப்பட்டும், கோயில் சொத்துகள் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களாலும் கொள்கைகளாலும் புறக்கணிக்கப்பட்டும் வருகின்றன. இச் சூழலில் கோயில் வருமானத்தைப் பெருக்க புதிய முறைகளைக் கையாளுதல் ஏற்புடையது.

துணிச்சலான இத்திட்டத்தை நிறைவேற்றினால் பழனிக் கோயிலின் செல்வம் பெருகும்; பழனிக்கும் கோடைக்கானலுக்கும் சுற்றுலாச் செல்வோரின் தொகை பன் மடங்காகும்.

இந்தத் திட்டத்தால் சுற்றுலா பெருகி, வெளிநாட்டாரையும் ஈர்க்கும் நிலை உருவாகும்; அந்நியச் செலாவணி கிடைக்க வகையேற்படும். கோடைக்கானல் நகரியமும் பழனி தேவஸ்தானமும் நிறைந்த வருவாய் பெறும்.

நீலகிரியைப் போலக் கோடைக்கானலும் சிறந்த தொழில் பகுதியாகும்.

இமயமலை முசௌரியில் இத்தகைய போக்குவரத்து உள்ளது. பீகார் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புத்த சமணப் புனிதத் தலங்களுக்கு ஆகாய இரயில் பாதை அமைக்கப் பட்டிருக்கிறது. இதனை அமைத்துக் கொடுத்தவர்கள் தென்னாட்டுப் பொறியாளர்களே.

மலைகளின் இடைவெளிகளில் தூண்கள் எழுப்பி அந்தத் தூண்கள் தாங்கும் மின்சாரக் கம்பிகளைக் கொண்டு மலைகளை இணைப்பதே இத்திட்டம். மின் கம்பிகள் வழியாகச் சிறு அளவிலான ரயில் பெட்டிகள் தொங்கிக்கொண்டு செல்லும். ஏரியல் ரோப் வே என்னும் இந்தப் போக்குவரத்து வசதி கவர்ச்சியானது; புதுமையானது; வரவேற்கத்தக்கது; பகலில் பயணிகளையும் இரவில் சரக்குகளையும் இந்த ரோப் வே ஏற்றிச் செல்லும். கோடைக்கானல் மலையில் விளையும் பழங்கள், உருளைக் கிழங்கு முதலியவற்றையும் பாக்ஸைட் போன்ற மூலப் பொருள்களையும் சிக்கனமாகவும் விரைவாகவும் ஏற்றிச் செல்ல இது உதவும். வேறு எந்த வகையான போக்குவரத்தும் கோடைக்கானல் மலையின் அமைப்பிற்கு ஏற்றதன்று. 25 நிமிடங்களில் பழனியிலிருந்து கோடைக்கானலுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக இத்தகைய திட்டங்களை உடனயாக மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமை.

குறிப்பு: பழனிக்கோயிலின் அடிவாரம், கடல்மட்டத்திற்கு மேல் 1100 அடி உயரம் உள்ளது.

மலைப்பகுதியில் பள்ளத்தாக்குகளினூடே எழுப்பப் பட வேண்டிய சிமிண்டுக் காங்கிரீட்டுத் தூணும், அதன் மீது பொருத்தப்பட்டுள்ள மின் கம்பிகளில் தொங்கிக் கொண்டு கோடைக்கானலுக்கும் பழனிக்கும் செல்லுகின்ற தொங்கு பெட்டிகளும் அடுத்த பக்கத்தில் கற்பனையாகக் காட்டப்பட்டுள்ளன.

இந்தக் கனவு என்று நனவாகும் ...?





விமானப் போக்குவரத்து

மதுரையில் மட்டும் விமானநிலையம் இருக்கிறது. இது அருப்புக்கோட்டைச் சாலையில் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது, 1942-இல் இராயல் ஏர் போர்ஸ் (ROYAL AIR FORCE) என்னும் பிரிட்டிஷ் விமானப் படையினர் இந்தத் தளத்தை உண்டாக்கினர். 1948 வரை அவர்களே இதைப் பயன்படுத்தினர். அதன் பின்னர் இந்திய அரசின் உள்நாட்டு விமானத்துறை இதை ஒப்புக்கொண்டது. 1956-ஆம் ஆண்டு முதல், முறையான விமானப் போக்கு இயங்கி வருகிறது.

1963-இல் மதுரையிலிருந்து கொழும்புக்கு விமானப் போக்குவரத்து நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் அத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. கொழும்பு – மதுரை – கோயமுத்தூர் – பெங்களூர் விமானப் போக்குவரத்துத் தொடங்கப்பெற வேண்டும். போயிங்கு விமானங்கள் பயன் படுத்தத் தக்கவாறு இந்த விமான நிலையத்தை விரிவாக்கவும் வேண்டும்.

பொழுதுபோக்குக்காக விமானத்தில் ஏறி மதுரை மாநகரைப் பார்ப்பதற்கு, சித்திரைத் திருவிழாக் காலத்தில் ஆண்டு தோறும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

சுற்றுலா வசதிகள்

இந்திய அரசின் சுற்றுலாத்துறை தமிழகஅரசின் சுற்றுலாத் துறை ஆகியவற்றுக்கு மதுரையில் கிளை அலுவலகங்கள் உண்டு.

சுற்றுலா வருபவர்க்கு வசதியான பல விடுதிகள் மதுரையில் இருக்கின்றன தமிழக அரசின் சுற்றுலா வாரியத்தின் மாளிகை, டாட்டா நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தனியார் துறையில் இயங்கும் பாண்டியன் ஹோட்டல், இந்திய அரசின் சுற்றுலா வாரியத்தைச் சேர்ந்த அசோகா ஹோட்டல், மீனாட்சி கோயிலைச் சேர்ந்த பிர்லா விடுதி, இரயில் சந்திப்பிலுள்ள அறைகள் ஆகியவை மதுரையில் குறிப்பிடத்தக்கன கோடைக்கானல் மலையில் சுற்றுலா வாரியத்தின் மாளிகைகளும் தனியார் ஹோட்டல்களும் இருக்கின்றன. வைகை அணையிலும் நல்ல தங்குமிடங்கள் உள்ளன. பழனியில் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலார் நூற்றுக்கணக்கான அறைகளைத் தரவாரியாகக் கட்டியுள்ளனர். அழகர் கோயிலில் அறநிலையத் துறையினரின் இல்லங்கள், எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருப்பினும் வசதி யாக உள்ளன.

6

வாணிகம்

பாண்டியநாடு பண்டைக்காலத்தில் உள்நாட்டு வாணிகத்திலும் வெளிநாட்டு வாணிகத்திலும் சிறந்து விளங்கியது.

சங்க இலக்கியம், வெளிநாட்டார் குறிப்புகள், அர்த்தசாஸ்திரம், கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் ஆகியவை இதனை உறுதிப்படுத்துகின்றன.

சங்கப்புலவர் சிலர் வணிகர் என்பது மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுத்தாராயத்தனார், மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் போன்ற பெயர்களால் தெரிகிறது. அக்காலத்தில் வணிகர் பலர் இருந்தனர் என்பதை இப் பெயர்கள் வலியுறுத்துகின்றன.

பரிபாடல் காட்டும் மதுரை

"மதுரையில் ஒருபால் உண்ணத்தகும் பொருள்களும், சந்தனக் குழம்பு, குங்குமக் குழம்பு, கத்தூரிக் குழம்பு முதலிய பொருள்களும், அணிகலன்களும், ஆடை முதலிய பொருள்களும், நறுமணப் பொருள்களும், மணி, பொன், பவளம், முத்து என்னும் பொருள்களும் ஆகிய இவைகளை விற்கும் அங்காடித் தெருக்களும்,

இப் பொருள்களை விற்பனை செய்யும் வணிகர் வாழும் தெருக்களும் அமைந்திருந்தன. மற்றொருபால், ஆடைகளை நெய்து விற்கும் காருகவாணிகர் தெருக்களும் பிறிதொருபால், களமரும் உழவரும் கூடிவாழுந் தெருக்களும் இருந்தன. இதனை,

"ஆங்கொருசார், உண்ணுவ பூசுவ பூண்ப உடுப்பவை
மண்ணுவ மணிபொன் மலைய கடல்
பண்ணிய மாசறு பயந்தரு காருகப்
புண்ணிய வணிகர் புனைமறுகு ஒருசார்
விளைவதை வினையெவன் மென்புலவன்புலக்
களமர் உழவர் கடிமறுகு ஒருசார்"

என பரிபாடல் தெரிவிக்கிறது.

தெருப் பெயர்கள்

தொழிலால் பெயர்பெற்ற தெருக்களும் மதுரையில் உள்ளன. எழுத்தாணிக்காரத் தெரு, தென்னோலைக்காரத் தெரு, கொட்டுக்கன்னார் தெரு, வார்ப்புக்கன்னார் தெரு, மேட்டுக்கம்மாளத் தெரு, பச்சரிசிக்காரத் தெரு, அளவுக்காரத் தெரு, கொத்தன் தெரு, கறிவேப்பிலைத் தெரு, சுண்ணும்புக்காரத் தெரு. ஓதுவார் தெரு, சோத்துக்கடைத் தெரு, அந்திக்கடைப் பொட்டல், வெண்கலக்கடைத் தெரு, கீரைக்காரத் தெரு பூக்காரத் தெரு என்பன சில.

செம்பியன் கிணற்றுச் சந்து, பாப்பான் கிணற்றுச் சந்து. தொட்டியன் கிணற்றுச் சந்து, வாணியன் கிணற்றுச் சந்து என்பனவும் மதுரையில் உள்ளன.

அக்கசாலைப் பிள்ளையார் கோயில் தெரு என்பது, ஒரு காலத்தில் மதுரையில் நாணயம் அச்சிடும் நிறுவனம் இருந்ததை நினைவூட்டுகிறது. குடந்தையில் 'கம்பட்ட' விசுவநாதர் கோயில் இருப்பது இங்கு ஒப்புநோக்கத் தக்கது. அது 'கண் வட்டம்' என்னும் சொற்றொடரின் மரூஉ.

'கழுதை அக்ரகாரம்' என்னும் தெருவும் மதுரையில் உண்டு. இது 'கைதை' என்னும் சொல்லின் திரிபாகும் (கைதை = தாழை) பாண்டியன் அகழ் தெரு என்னும் பெயரும் இதற்கு உண்டு. அகழி இருந்ததால் தாழை இருந்திருக்க வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் தொகுப்பாக வாழும் காட்சியை மதுரை நகரில் காண்கின்றோம். தெற்கு ஆவணி மூலவீதியில் அடுத்தடுத்து நகைக் கடைகளும், அந்த வீதி

யில் மற்றுமொரு பகுதியில் வரிசை, வரிசையாக இரும்புச் சட்ட வேலைகளைச் செய்யும் கடைகளும், தெற்கு மாசி வீதியில் துணிக் கடைகளும், கீழை மாசி வீதியில் பலசரக்குக் கடைகளும். புதுமண்டபத்தில் ஒரு பகுதியில் வரிசையாகப் புத்தகக் கடைகளும் இருக்கின்றன.

மீனாட்சியம்மன் கோயிலுக்குள் பூக்கடைகள், வளையல்கடைகள், பொம்மைக் கடைகள், பாத்திரக்கடைகள் ஏராளமாக உள்ளன.

இத்தகைய சிறப்புகளுடன் அமைந்துள்ள கடைத்தெருக்களை தமிழகத்தில் வேறு எங்கும் காண்பது அரிது.

ஆடைக் கலை

பருத்தியாடைக்கும் பட்டாடைக்கும் பாண்டியநாடு பெயர் பெற்றது.

'பாலாவி அன்ன நூலாடை'
'கொட்டை கரைய பட்டுடை'

என்றெல்லாம் இலக்கியம் புகழும் ஆடைகளைப் பாண்டிய நாட்டு மக்கள் அணிந்தனர்.

காலத்துக்கேற்றவாறு மகளிர் உடையணிந்து வாழ்ந்தனர்.

'இரவிற்கோர் கோலம் கொடியிடையார் தாம்கொள்ள'

எனச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

இன்றும் மதுரை மாநகரம் ஆடை உற்பத்தியில் மட்டுமன்றித் தையல் தொழிலிலும் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. புதுமண்டபத்தில் 200 தையற்கடைகள் ஓரிடத்திலேயே வரிசையாக உள்ளன. இத்தகைய அமைப்பு இங்குமட்டுமே உண்டு.

பஞ்சாபில் லூதியானாவில் போல, தையல் பொறியைத் (கை மிஷின்) தலையில் தூக்கிக்கொண்டு நம் வீட்டுக்குத் தொழிலாளர் வருகின்றனர்.

சாயத் தொழில் இங்குப் பெரிய அளவில் நடைபெறுகிறது. துணிகளுக்குச் சாயம் ஏற்ற வைகைத் தண்ணீர் மிகவும் பயன்படுகிறது. நாட்டுச் சாயம் இப்போது அருகிவருகிறது. இந்தியாவின் மிகப் பெரிய சாய உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களை விற்பதற்கு மதுரையை மையமாகக் கொண்டுள்ளனர்.

சுங்கடிச் சேலை மதுரைக்குத் தனிப் பெருமை தருகிறது. இதில் ஏராளமான முடிச்சுகள் இருக்கும். இந்த முடிச்சுகளைப் போடுவதில் சௌராஷ்டிர சமூகத்துப் பெண்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவம் பெற்றுள்ளனர். ஓராயிரம் முடிச்சுக்கு இவ்வளவு என்ற கணக்கில் கூலி பெறுகின்றனர்.

சரிகை வேட்டி, பட்டுச்சேலை உற்பத்தியிலும் மதுரை புகழ் பெற்றிருக்கிறது.

சமூகங்கள்

பட்டுநூல்காரரான சௌராஷ்டிரர்களும் உள்நாட்டு வாணிபத்தில் இணையற்றவர்களான நாடார்களும் திரைகடல் ஓடித் திரவியம் தேடும் நகரத்தார்களும் முஸ்லிம்களும் ஆகிய வணிக இனத்தார் பெருந்தொகையாக வாழ்ந்து மதுரை மாநகரை வணிகக்கேந்திரமாக ஆக்கியுள்ளனர். துணி விற்பனையில் அனுபவம் பெற்ற குஜராத்தியர் சிந்தியர் பலரும் இருக்கின்றனர்

சந்தைகள்

வாரச்சந்தை, ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரையில் கூடு கிறது. வியாழக்கிழமையிலும் சந்தை உண்டு. இது மாட்டுச் சந்தை; இதனை மாட்டுத் தாவணி என்றும் கூறுவர்.

அத்திக்கோம்பை, தேவதானப்பட்டி ஆகிய ஊர்களில் மாட்டுத் தாவணியோடு குதிரைத் தாவணியும் உண்டு.

அழகர், வைகையாற்றில் இறங்கும் நாளில் மதுரை மாவட்டமும் அதன் சுற்றுப்புறமும் அங்குக் கூடியிருக்கும். மக்கள் வெள்ளம் மதுரையைப் பொலிவு பெறச் செய்யும் இந்நாளில் வணிகப் பெருக்கம் ஏற்படுகிறது. இதனையொட்டி இளவேனிற் காலத்தில் ஆண்டுதோறும் சித்திரைப் பொருட்காட்சி நடைபெறு கிறது.

சித்திரைத் திருவிழாவின்போது மதுரையில் பெரியதொரு மாட்டுத்தாவணியும் கூடுகிறது.

தேனியில் வியாழன், ஞாயிறு ஆகிய இரு நாள்களிலும் பஞ்சு விற்பனைக்காகச் சந்தை கூடுகிறது. திருப்பூர்போல இந்த ஊரும் துணி வியாபாரத்தில் அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. எகிப்திய நீண்ட இழைப் பஞ்சு போன்ற பஞ்சு, இச் சந்தையில் கிடைப்பதால் உயர் எண் நூல் உற்பத்தி யாளர்கள் இங்கு வந்து பஞ்சு வாங்குகிறார்கள்.

பாங்குகள்

மதுரை மாநகரில் இந்தியாவிலுள்ள அனைத்து பாங்குகளும் ஏராளமான கிளைகளை நிறுவியுள்ளன. மதுரையின் பெயரைப் பறைசாற்றும் 'மதுரை பாங்கு' கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களால் தொடங்கப்பெற்றது. இப்போது இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது.

கூட்டுறவு பாங்குகளும் இம் மாவட்டத்தில் உண்டு. ஏலக்காய்த் தோட்டக்காரர்களின் கூட்டுறவு பாங்கு நன்முறையில் இயங்கி வருகிறது.

காப்பீட்டுக் கழகங்கள்

இந்திய அரசுடைமையான ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கோட்ட அலுவலகமும், தீ முதலியவற்றால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்யும் பொதுக் காப்பீட்டுக் கழகங்களின் அலுவலகங்களும் மதுரையில் உள்ளன.

7

தொழில் வளர்ச்சி

ஆலைத்தொழில்

பாண்டியநாட்டில் பண்டுதொட்டே பருத்தி வேளாண்மை மிகுதியாக இருந்திருக்கிறது. ஆங்கிலேயரும் ஏனைய அயல் நாட்டினரும் இப்பகுதிக்கு வந்தபோது பருத்திக்கொட்டையை நீக்கிப் பஞ்சைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்களை நிறுவி, அந்தப் பஞ்சைத் தங்கள் நாடுகளிலுள்ள ஆலைகளுக்கு மூலப்பொருளாக அனுப்பினர். அடுத்த கட்டமாக இங்கேயே நூல் ஆலைகளையும் நெசவு ஆலைகளையும் அமைத்தனர். இன்றும் மதுரை மாவட்டத்தில் ஆலைத்தொழிலே, பல்லாயிரம் தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் பெரிய தொழிலாகும்.

மதுரை ஆலை

இம்மாவட்டத்திலுள்ள ஆலைகளில் பெரியது, மதுரை ஆலை. இதை நிறுவிய ஹார்வி சகோதரர்களின் பெயரால் இதை ஹார்வி ஆலை என்று பொதுமக்கள் குறிப்பிடுவர்.

1880-இல் ஆண்டிரு ஹார்வி, பிராங் ஹார்வி என்ற இரு சகோதரர்கள் அம்பாசமுத்திரத்தில் ஒரு நூல் ஆலையைத் தொடங்கினர். 1893-இல் அவர்கள் மதுரையில் ஓர் ஆலை

அமைத்தனர். அதன் பின்னர் இந்நகரில் மற்றுமோர் ஆலையையும் உண்டாக்கினர். அம்பாசமுத்திரத்திலும் தூத்துக்குடியிலும் உள்ள அவர்களுடைய ஆலைகளின் ஆட்சியும் மதுரை அலுவலகத்திற்கு மாற்றப்பெற்றது.

மதுரை ஆலைத் தொகுதியாக விளங்கும் இந்த ஆலைகளில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட கதிர்களும் சில ஆயிரம் இயந்திரத் தறிகளும் உள்ளன. 80-ஆம் எண் நூல்களும் நூற்கப்படுகின்றன. இந்த நூல்கள் 'மதுரை நூல்' 'ஹார்வி நூல்' என்ற பெயர்களால்உலகெங்கும் செல்வாக்குடன் விற்பனையாகின்றன. இப்போது இந்த ஆலைகள் மதுரை கோட்ஸ் என்னும் குழுவினரின் ஆட்சியில் இயங்கி வருகின்றன. சரியாக 100 ஆண்டுகள் ஆகிவிட்டதால் பழைய இயந்திரங்கள் அகற்றப்பட்டு, புதிய கதிர்கள் பொருத்தப் பட்டுள்ளன. நெசவுப் பகுதி விரிவாக்கப்பட்டுள்ளது நூல் உற்பத்தியில் போலவே கண்ணைக் கவரும் வண்ணத் துணிகளை பருத்தியிலும் டெரிகாட்டன், டெரிலின் முதலியவற்றிலும் உற்பத்தி செய்வதில் இந்த ஆலை ஈடுபட்டு அத்துறையில் பெரும் வெற்றி கண்டிருக்கிறது. உலகத்திலேயே குறிப்பிடத்தக்க ஓர் ஆலையாக இது விளங்கிவருகிறது. இந்த ஆலையில் 25,000 தொழிலாளர் உள்ளனர்.

ஏனைய ஆலைகள்

மதுரை ஆலையைத் தொடர்ந்து பல ஆலைகள் மதுரையைச் சுற்றிலும் தொடங்கப்பெற்றன. இவ்வகையில் வழிகாட்டியவர் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச்செட்டியார் ஆவார். திறமையும் முயற்சியும் ஆலைத் தொழிலில் நுண்மாண் புலமையும் மிக்க இந்தத் தொழில் வல்லுநர் மீனாட்சி ஆலையை 1921-இல் தொடங்கி அதைப் படிப்படியாக விரிவுபடுத்தினார். மணப்பாறையிலும் பரவையிலும் மீனாட்சி ஆலையின் கிளைகளைத் தொடங்கினார்.

பரவையில் தியாகராசச் செட்டியார் அவர்கள் நிறுவிய ஆலை, இந்தியாவிலேயே புதுமையானது; உற்பத்தித் திறன் மிக்கது என்று 1958 ஆம் ஆண்டில் ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வெளியிட்ட 'SOUTH INDIAN TEXTILE INDUSTRY' என்னும் நூலில் பலபடப் பாராட்டப்பட்டிருக்கிறது.

கப்பலூர் தியாகராசர் ஆலை, தேனூர் ஸ்ரீ சிவகாமி ஆலை, சிலைமான் ருக்மணி ஆலை என்பனவும் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் தொடங்கியவையே. இவர்களுடன் இருந்து

மீனாட்சி ஆலை ஆட்சியில் பழுத்த அனுபவம் பெற்ற திரு. சி. எஸ். இராமாச்சாரி அவர்கள் திருநகரில் சீதாலெட்சுமி ஆலையைத் தொடங்கினார். இந்த ஆலையில் செயற்கை நார்ப்பட்டு நூல் உற்பத்தி ஆகிறது.

திரு. தியாகராசச் செட்டியார், திரு இராமாச்சாரி ஆகிய இருவரும் தமிழ்நாட்டில் நலிந்த ஆலைகள் பலவற்றின் ஆட்சியை ஏற்று, அவற்றைப் புதுப்பித்து நன்னிலைக்குக் கொண்டுவந்தனர் கேரளத்தில் அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் சொந்தமாக இருந்த ஆலைகள் பலவற்றை ஒப்புக்கொண்டு, அவற்றையும் தியாகராசச் செட்டியார் திறம்பட நடத்திக்காட்டினார்.

மீனாட்சி ஆலைத்தொகுதி உற்பத்தி செய்யும் நூல்களும் ஆடைகளும் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன.

மதுரை மாவட்டத்தில் பின்கண்ட ஆலைகளும் உள்ளன:

பாண்டியன் ஆலை, மதுரை.
மகாலெட்சுமி ஆலை, பசுமலை.
ஸ்ரீ விசாலாட்சி ஆலை, விளாங்குடி.
பாலகிருஷ்ணா ஆலை, மதுரை.
ராஜா ஆலை, மதுரை.
அண்ணாமலையார் ஆலை, திண்டுக்கல்.
சௌந்தரராஜா ஆலை, திண்டுக்கல்.
ஸ்ரீ கோதண்டராம ஆலை, மதுரை (நெசவு).
ஸ்ரீ கோதண்டராம ஆலை, மதுரை (நூல்).
இராஜேஸ்வரி ஆலை, மதுரை (நெசவு).
போஜ்ராஜ் ஆலை, போடிநாயக்கனூர்.
கூட்டுறவு நூல் ஆலை, மேலூர்.
விஜயகுமார் ஆலை, பழனி

சமக்காளம், மாட்டுக்கயிறு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு 20-ஆம் எண்ணுக்குக் குறைந்த நூல் தேவைப் படுகிறது. இதை நூற்க, கழிவுப் பஞ்சாலைகள் புதிதாகத் தோன்றியுள்ளன.

சுருங்கச் சொன்னால், இந்தியாவில் நூல் ஆலைத் துறையில் மதுரை முக்கியமான இடம் வகிக்கிறது. தமிழ்நாடு நூல் ஆலை அதிபர் சங்கம், மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டது. திரு. கருமுத்து மாணிக்கம்வாசகம் அவர்கள் தலைமையில் இது

பல்லாண்டுகளாக இயங்கிவருகிறது. பஞ்சாலைத்தொழில் தவிர மதுரை மாவட்டத்தில் வேறு தொழில் இல்லை என்ற கருத்திற்கு ஏற்றாற்போல், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டமன்றத்தில் பேசினார். பெரம்பூரில் இருப்பது போன்ற (இரயில்) கோச்சு பேக்டரி ஆரம்பிக்கா விட்டாலும் மேச்சு (தீப்பெட்டி) தொழிற்சாலையையாவது அரசாங்கம் மதுரை மாவட்டத்தில் ஆரம்பித்தால் என்ன? என்றும், குண்டா (குந்தா நீர் மின்சாரத்) திட்டம் தொடங்கா விட்டாலும் மதுரை மாவட்டத்தில் ஓர் அண்டாத் திட்டம் தொடங்கலாகாதா? என்றும் திரு.என்.ஆர் தியாகராசன் கேட்டார்.

மதுரை மாவட்டத்தில் பல கல்லூரிகள் உருவாகியிருப்பதும் ஓரளவு சிறு தொழில்கள் தொடங்கப் பெற்றிருப்பதும் ஆலைத் தொழில் வளர்ச்சியின் விளைவுகளே. பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், மதுரை மாநகரின் அரசியல் வாழ்வில் வலுவாக இருக்கிறது

மதுரைத் தொழிற்பேட்டையில் தமிழக அரசினர், பஞ்சாலைகளுக்கு வேண்டிய கியர், புல்லி, ஷாப்ட்டு, புஷ், ஆர்போர் முதலியன செய்கின்றனர். கியர் ஷேப்பிங், ஆர்க் வெல்டிங் ஆகிய வேலைகள் செய்து கொடுக்கப் படுகின்றன.

பருத்தியை ஆதாரமாகக் கொண்டு பருத்தி விதை எண்ணெய் ஆலை, பருத்தி நார் எடுத்தல் ஆகிய துணைத் தொழில்கள் நிகழ்கின்றன.

மதுரையிலும், திண்டுக்கல்லிலும் பருத்தி அறைக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.

ஆலைகளின் உற்பத்தியால் மதுரை மாநகரிலும் சின்னாளப்பட்டியிலும் கைத்தறித்தொழில் மாபெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆலைக் கழிவுகளிலிருந்து காகிதம் செய்யும் தொழிலும் ஏற்பட்டிருக்கிறது.

சர்க்கரை ஆலைகள்

வைகை பாயும் பகுதிகளில் கரும்பு பயிரிடப் பெறுகிறது. இதைப் பயன்படுத்திப் பாண்டியராஜபுரத்தில் மதுரைச் சர்க்கரை ஆலையும், அலங்காநல்லூர் அருகே உள்ள ஊர்சேரி,

வாவிடமருதூர் என்னும் சிற்றூர்களில் தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் இயங்கிவருகின்றன. மேலும் ஒரு சர்க்கரை ஆலைக்கு இம் மாவட்டத்தில் வாய்ப்பு இருக்கிறது.

தோல் பதனிடுந் தொழில்

திண்டுக்கல்லின் ஒரு பகுதியான பேகம்பூர், தோல் பதனிடுந் தொழிலில் ஏற்றம் பெற்றுளது.

அச்சுத் தொழில்

பொதுவாக அச்சுத் தொழிலிலும், சிறப்பாகக் கவின் அச்சுக் கலையிலும் சிவகாசி தலையாய நிலையை அடைந்திருக்கிறது. இத்தொடர்பால் மதுரையிலும் பல பெரிய அச்சகங்கள் செயல்படுகின்றன. இவை தவிர டி நோபிளி அச்சகம், கூட்டுறவு அச்சகம் ஆகியவை பெரிய அளவில் இயங்குவன. கல்லூரிகளின் மிகுதியாலும் தொழில்களின் மிகுதியாலும் தமிழ் வளர்ச்சியாலும் மதுரையில் அச்சுத் தொழில் பெருகி இருக்கிறது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அஞ்சல்வழிக் கல்வித் துறையும் மதுரையில் அச்சுத்தொழிலை ஊக்கி வருகிறது.

பிற தொழில்கள்

கதர் 'உற்பத்தி, வெல்லம் காய்ச்சுதல் ஆகிய சிறு தொழில்களும் மதுரை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்கன. கோழியூரிலும் கோம்பையிலும் கருப்பட்டி உற்பத்தியும், பாகநத்தத்தில் பனங்கற்கண்டு உற்பத்தியும் பரவியுள்ளன.

மதுரை மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளுக்குமுன் மண் பாண்டங்களும் பித்தளை வளையல்களும் இரும்புக் கருவிகளும் செய்யப் பெற்றன. கோடைக்கானல் மலையிலுள்ள செண்பகனூர் அருங்காட்சிக்கூடத்தில் அவற்றைக் காணலாம்.

திருமங்கலத்திற்கு அருகே உள்ள மறவங்குளத்தில் மேற்கு ஜெர்மனி நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் மெட்டல் பவுடர் கம்பெனி, அலுமினியத் தூள் செய்கிறது. இது பட்டாசுத் தொழிலுக்கும், பெயிண்டுத் தொழிலுக்கும் பயன்படுகிறது. வெண்கலத்தூள், மக்னிசியம் தூள் ஆகியவையும் செய்யப்படுகின்றன.

மதுரையில் (நத்தம் சாலையில் காவலர் குடியிருப்புக்கு அருகே உள்ள) மின் ரசாயனத் தொழிற் சாலையில் பெயிண்ட் செய்வதற்குத் தேவையான தூள் தயாரிக்கப்படுகிறது.

நிலக்கோட்டை வட்டத்தில் சோழவந்தானுக்கு அருகே உள்ள நகரி என்னும் ஊரில் கொத்தாரி பைட்டோ கெமிக்கல்ஸ் இண்டர்நேசனல் என்ற கம்பெனியார் சென்னு இலைகளையும் நிலாவாரையையும் ஊமெத்தம் இலைகளையும் பயன்படுத்தி இரசாயனப் பொருள்கள் பலவற்றைச் செய்து வருகிறார்கள்.

கப்பலூர் தொழில் பேட்டையில் கடல்பாசியைப் பயன் படுத்தி ஜெல்லி என்னும் உணவுப் பொருளை ஒரு கம்பெனியார் உருவாக்கி வருகின்றனர்.

திரு ஆவினன்குடி இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தார் பழனியில் பஞ்சாமிர்தம், ஜாம், பழச்சாறு ஆகியவற்றைச் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

பழனியின் மற்றொரு ஏற்றுமதி அரிக்கன் விளக்கு. இந்தியா வில் உத்திரப்பிரதேசத்திலும் வங்காளத்திலும் மகாராஷ்டிரத் திலும் பழனியிலும் அரிக்கன் விளக்குத் தொழிற்சாலைகள் உள்ளன.

கோடைக்கானலில் மரத்தூளிலிருந்து பலகைகளும் அட்டைகளும் செய்யும் தொழிற்சாலைகளும், வாட்டில் பட்டை யிலிருந்து மருந்துகள் எடுக்கும் தொழிற் சாலையும் உள்ளன.

திண்டுக்கல்லில் பல தலைமுறையாக வளர்ச்சியடைந்துள்ள திண்டுக்கல் இரும்புப்பெட்டித் தொழில் மிகவும் புகழ் பெற்றிருந்தது. எஃகு அலமாரிகள் செய்யும் காட்ரஜ் போன்ற கம்பெனிகள் ஏற்பட்ட பிறகு திண்டுக்கல் இரும்புப்பெட்டித் தொழிலுக்கு ஆதரவு குறைந்து பூட்டுகள் செய்யும் அளவில் மட்டும் இத்தொழில இருந்துவருகிறது. தமிழ்நாடு அரசினரும் திண்டுக்கல்லில் பூட்டுத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகின்றனர்.

மதுரையில் மேலூர்ச் சாலையில் 1959-இல் தொடங்கப் பெற்ற தொழில் பேட்டையில் நூற்றுக்கு மேற்பட்ட சிறு தொழில்கள் உள்ளன. மேலூர் வட்டத்தில் பொட்டாசியம் குளோரேடு செய்வதற்கு, பாண்டியன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தார் மூலம் சிவகாசியில் உள்ள தீப்பெட்டிக் கம்பெனிகளும் தமிழ்நாடு அரசும் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை நடத்திவருகின்றன.

மதுரை, கப்பலூர் தொழிற்பேட்டைகள் தவிர தேனி, திண்டுக்கல், வத்தலக்குண்டு ஆகிய ஊர்களிலும் தொழிற்பேட்டைகள் உள்ளன.

பெரும் தொழில்கள்

திருச்சி திருவெறும்பூரில் உள்ள பாரத ஹெவி எலக்ட்ரிகல்ஸ் போன்ற ஒரு பெரிய தொழிற்சாலை மதுரையில் இல்லை என்று மதுரை மக்கள் குறைப்படுகின்றனர்.

புவியியல் பொருள்களும் புதிய தொழில்களும்

கம்பம் பகுதியில் வெர்மிகுலேட்டு என்னும் பொருள் கிடைக்கிறது. இது மைக்கா போன்றது; பொன் நிறமானது. கான்கிரீட் போடவும், பிளாஸ்டிக், ரப்பர், பெயிண்டு தொழில்களுக்கும் இது பயன்படும்.

மேலூர், வேடசந்தூர் வட்டங்களில் கிடைக்கும் சுண்ணும்புக்கல்லைக் கொண்டு சிமெண்டு ஆலை அமைக்கலாம்.

வேடசந்தூரை அடுத்த வைரம்பட்டியில், வைரக்கற்களும், மரகதம், பச்சை சிவப்புக் கற்களும் கிடைக்கின்றன. பழனி வட்டம் பொன்னி மலையிலும், நத்தம் வட்டம் கொட்டாம்பட்டியிலும் தங்கப் படிவங்கள் உள்ளன.

8
தமிழ்ப் பணி

தனிச்சிறப்பு

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தது மதுரை. தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்கும் காரணமாகவுள்ள எண்ணிமுடியாத புலவர்களையும் புரவலர்களையும் தொன்று தொட்டுத் தந்திருப்பது இம்மாவட்டம். பழஞ்சிறப்பும் புதுவளமும் ஒருங்கே அமைந்த தமிழ் மொழியின் வரலாறு, மதுரையின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகும்

கல்வெட்டுகள்

ஏராளமான கல்வெட்டுகளை உடையது மதுரை மாவட்டம். மிகப் பழமையான கல்வெட்டுகளும் மிக முக்கியமான கல்வெட்டுகளும் வரலாற்றுச் சிறப்புடைய சின்னமனூர்ச் செப்பேடு, திருமலை நாயக்கர் காலத்தில் பழனி (மலைக்) கோயிலுக்கு அவருடைய அமைச்சர் கொடுத்த செப்பேடு, முதலியவற்றையும் உடையது இம் மாவட்டம்.

தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தான 'அ' என்ற எழுத்தின் வடிவம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் எவ்வாறு இருந்தது என்பது அரிட்டா பட்டி என்ற ஊரிலுள்ள கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

சோழவந்தானுக்கு அருகேயுள்ள மேட்டுப்பட்டிக் கல்வெட்டுகளும் மாங்குளம் கல்வெட்டுகளும் மிகவும் குறிப்பிடத் தக்கவை.

நல்லதமிழ்

''சோழன் வழிவந்த பாண்டியா நின் நாடுடைத்து நல்ல தமிழ்'' என்று பாராட்டப் பெற்ற நாடு பாண்டிய நாடு.

பாண்டியர்

பாண்டியர், வடநாட்டுப் பாண்டுவுடன் தொடர்பு கொண்டவர் என்று சமணக் கதைகள் கூறுகின்றன. இக்கருத்தைப் பெரும்பான்மையான தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 'பண்டு' என்ற சொல்லின் வளர்ச்சியே பாண்டியர் ஆயிற்று என்று கருதப் பெறுகிறது. படைப்புக்காலந்தொட்டு வந்த அரசரின் பெயர் இது என்பார் பரிமேலழகர்.

பண்டையோர் என்பதன் மரூஉ. பாண்டியர் என்று அறிஞர் கூறுவர். விவரம், தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டுள்ளதும் இராசசேகர தங்கமணி எழுதியதுமான பாண்டிய வரலாறு என்னும் நூலில் பக்கம் 70-இல் காண்க

பழையர் என்ற மக்கள் கொற்கைப் பகுதியில் வாழ்ந்தனர் என்று அகநானூறு கூறும். பழையர்—பண்டையோர்: பழையன் மாறன் என்ற ஓர் அரசனும் இருந்தான்.

பாண்டியர்களுக்குப் பின்வரும் குலப்பெயர்கள் வழங்கி வந்தன.

1. பாண்டியன்
2. செழியன்
3. கூடற்கோமான்
4. தென்னவன்
5. வழுதி
6. மீனவன்
7. பஞ்சவன்
8. மாறன்
9. கௌரியன்
10. வேம்பின் கண்ணியன்
11. கைதவன்
12. மலையப் பொருப்பன்
13. வையைத் துறைவன்
14. குமரிச் சேர்ப்பன்
15. பூழியன்
16. பூமியன்
17. பனவன்
18. கடலன்
19. தமிழ் காடன்
20. பொதிய வெற்பன்
21. தென்புலங்காவலன்

பாண்டியரும் பைந்தமிழும்

பாண்டியரின் தமிழ்ப் பற்றுக்கு ஒரு சான்று கூறலாம் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போது மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழ அரசரின் கட்டிடங்களை அழித்தான்; எனினும் கரிகாற் சோழன் மேல் உருத்திரங் கண்ணனார் பாடி அரங்கேற்றிய நினைவுக்காக அமைக்கப் பெற்றிருந்த 16 கல் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டு வைத்தான் என்ற செய்தி திருச்சி மாவட்டம் திருவெள்ளறையில் காணப்பெறும் சாசனச் செய்யுளால் தெரிகிறது.

பாண்டியரில் புலவர்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததோடு நில்லாது பைந்தமிழைப் பாங்குறப் பயின்ற பாவலராகவும் பாண்டியர் விளங்கினர் பூதபாண்டியன். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், இளம்பெருவழுதி, பாண்டியன் அறிவுடைநம்பி முதலிய பாண்டிய மன்னர்களின் பாடல்கள் சங்கத் தமிழ் இலக்கியங்களில் உள்ளன.

மதுரையில் இருந்த புலவர்கள்

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார். மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார், மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார், மதுரைக் கணக்காயனார். மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைத் தமிழ்க் கூத்தனார், மதுரைப் படைமங்க மன்னியார். மதுரை மருதனிள நாகனார், மதுரை வேளாஎன் மாங்குடி கிழார், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், கபிலர், பரணர் முதலிய புலவர் பெருமக்கள் சங்ககாலத்தில் மதுரையில் இருந்தனர்.

பூதபாண்டியனின் மனைவியார் பெருங்கோப்பெண்டு உள்பட பெண்பாற் புலவர் பலரும் இருந்தனர்.

நக்கீரர்

இவர் சங்கப் புலவர்தம் தலைவர். சொற்குற்றம் பொருட் குற்றம் முதலிய குறைகள் இல்லாமல் கவிபாடும் ஆற்றல்மிக்க இப்பெரும் புலவர், அஞ்சா நெஞ்சம் மிக்கவர். ‘நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே’ என்று சிவபெருமானை அஞ்சா

நெஞ்சத்துடன் நோக்கிக் கூறியவர். இவர் திருமுருகாற்றுப்படை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார் இவரைப்பற்றிய விரிவான வரலாறு திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. மேலை மாசி வீதியிலுள்ள நக்கீரர் மடம் இப்புலவர் இருந்த இடம் என்பர். பிசிராந்தையார் என்ற சங்க காலப் புலவர் பிறந்த பிசிர்குடி என்னும் ஊர் அலங்காநல்லூர் அருகே உள்ளது

சங்க நூல்கள்

பாண்டிய அரசர்களுள் சிறப்புடையவனாக விளங்கிய பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நம்பூதனார், மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார், மாங்குடி மருதனார் என்னும் மூன்று பெரும் புலவர்கள் முறையே முல்லைப் பாட்டு நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி என்னும் மூன்று நூல்களைப் பாடியுள்ளனர்

மதுரைக்காஞ்சியில் பாண்டியர் சிறப்பு, நெடுஞ்செழியனது போர்த்திறன், பாண்டியநாட்டுப்பெருமை, மதுரைமூதூரின் மாண்பு முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

நெடுநல்வாடை என்பது நெடுஞ்செழியன்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

பரிபாடலில் திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான், வைகைஆறு, திருமால் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள வைகை பெருக்கெடுத்து ஊர்களையும் வயல்களையும் அழித்தல், மதுரை மாநகரத்து மக்கள் மகிழ்வோடு புதுநீராடுதல், மார்கழி நோன்பு பற்றிய செய்திகள் உள்ளன.

நாயக்கர் காலம்

வீரமாமுனிவர் போன்ற ஐரோப்பிய அறிஞர் பலர் நாயக்கர் காலத்தில் மதுரையில் தங்கி, தமிழ் பயின்று தமிழுக்குத் தனிப் பெரும் தொண்டு ஆற்றினர்.

இன்றைய தமிழ்ச் சங்கம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சேது சமஸ்தானத்தைச் சேர்ந்தவரும் பாலவனத்தம் குறுநில மன்னருமான பாண்டித்துரைத் தேவர் என்பவரால் மதுரையில்

புதியதொரு தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. மிகச் சிறந்த நூல் நிலையம் உள்ளது. சங்கத்தின் சார்பில் செந்தமிழ் என்னும் திங்கள் இதழ் வெளிவருகிறது.

பிரவேசபண்டிதம், பாலபண்டிதம், பண்டிதம் என்ற வகுப்புகள் கைவிடப் பெற்று பல மாற்றங்களுடன் சங்கத்தின் சார்பில் இப்போது ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் தனித்தனிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

இருபதாம் நூற்றுண்டுப் புலவர்கள்

பாட்டுக்கு ஒரு புலவன் எனப் போற்றப்பெறும் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார், பெரும் புலவர் மதுரை சபாபதி முதலியார், அவருடைய மாணவரும் பரிதிமாற் கலைஞரெனத் தம் பெயரை மாற்றிக் கொண்டவருமான பேராசிரியர் - கவிஞர் வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார், திருக்குறள் தொண்டே தெய்வத் தொண்டெனக் கொண்ட சுப்பிரமணியதாசு, எவர்க்கும் அஞ்சாத செந்நாப் புலவர் கார்மேகக்கோனார், வீரபாண்டியக் கட்டப்பொம்மனைத் தமிழகம் அறியச் செய்த கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார், தொல்காப்பியத்திற்கு உரை கண்ட கணக்காயர் டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் சி. இலக்குவனார், இன்னோரன்ன அறிஞர்கள் வாழ்ந்த நகர் மதுரை. உரைவேந்தர் அவ்வை துரைசாமிப்பிள்ளை அவர்களும் இன்னும் பல பேரறிஞர்களும் இன்றும் நம்மிடையே இருந்து வரும் பெருமையை உடையது மதுரை.

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த புலவர்களுள் குறிப்பிடத்தக்க பெரும்புலவர் அரசன் சண்முகனார் (1868-1915) ஆவார்.

புரவலர்கள்

இருபதாம் நூற்றுண்டில் மதுரை மாவட்டத்தில் வாழ்ந்த புரவலர்களுள் பாண்டித்துரைத்தேவர், கலைத்தந்தை கருமுத்து தியாகராசர், தமிழவேள் பி. டி. ராசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் முதுபெரும்புலவர் இருவர்க்குத் தமிழ்ச் செம்மல் பட்டமும் பண முடிப்பும் வழங்கிச் சிறப்பிக்கிறது.

நூல்கள்

இம்மாவட்டத்தில் தஞ்சாக்கூர் என்று ஓர் ஊர் உளது இவ்வூருக்கும் தஞ்சை என்ற பெயர் உண்டு. இவ்வூரினராகிய தஞ்சைவாணன் என்பவர், பாண்டியரிடத்தில் அமைச்சராகவும் சேனைத் தலைவராகவும் இருந்தவர். இவர் பெயரால் ஏற்பட்டதே தஞ்சைவாணன்கோவை என்னும் நூல்.

தமிழுக்குச் சிறப்பாக உள்ள நாடி என்னும் சோதிடக் கலைச் சுவடிகள், மதுரைப் பகுதியில் மிகுதியாகக் கிடைக்கின்றன.

தமிழ் நூல்களை வெளியிடுவதிலும் சென்னைக்கு அடுத்த இடத்தை, மதுரை மாவட்டம் வகித்து வருகிறது.

தொலைபேசி அட்டவணை, 1962–இல் மதுரை மாநகரில் தமிழில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரைக்கும் தமிழுக்கும் நிலவும் தொடர்பை அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் சங்கப் புலவர்களுடைய திருவுருவங்கள் இடம் பெற்றிருப்பதிலிருந்து அறியலாம்.

இக் கோயிலில் பொற்றாமரைக் குளத்து மண்டபச் சுவரில் 1330 குறளும் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றிருப்பது கண்டு இன்புறத்தக்கது.

மீனாட்சியம்மன், ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் நக்கீரர் கோயிலுக்குச் சென்று, அப்புலவரைக் கோயிலுக்கு அழைத்து வரும் திருவிழா நடைபெறுகிறது.

தமிழ் மன்றங்கள்

தமிழ் வளர்க்கும் மன்றங்கள் மதுரையில் ஏராளமாக உள்ளன. இவற்றுள் பழமையானது திருவள்ளுவர் கழகம் இலக்கிய வகுப்புகள் நடத்தியும், நூலகம் வைத்தும், விழாக்களை ஏற்பாடு செய்தும் இக்கழகம் ஆற்றிவரும் பணிகள் போற்றத் தக்கவை. மகிபாலன்பட்டி சித்தாந்த மணிமொழிச் செல்வர் சி.இராமஇராமசாமிச்செட்டியார்நினைவாகஅவர்மகன் சிவநெறிச் செல்வர் திரு. நாகப்பன், தலைசிறந்த அறிஞர்களைக் கொண்டு ஆண்டுதோறும் சைவசித்தாந்தத் தொடர் சொற்பொழிவுகளை நடத்தி வருகிறார்.

மதுரை எழுத்தாளர் மன்றம் தெற்கு மாசிவீதி 1–ஆம் இலக்கம் உள்ள கட்டிடத்தில் இயங்கிவரும் இம்மன்றம் தனித் தமிழிலேயே எழுதவேண்டும் என்ற அடிப்படையில் பெரும் புலவர் கார்மேகக் கோனுர் முயற்சியால் 1957-இல் தொடங்கப் பெற்றது தனித் தமிழ்க் கொள்கையைப் பரப்ப. இம் மன்றத்தார் திங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தியும் ஆண்டுதொறும் மாநாடுகள், கருத்தரங்குகள், கட்டுரைப் போட்டிகள் முதலியன ஏற்பாடு செய்தும் 'தமிழ்ப்பாவை' என்ற திங்கள் இதழை நடத்தியும் வந்திருக்கின்றனர்

நல்ல தமிழைத்தான் எழுதுவேன் என்ற உறுதிப்பாடு உடைய எழுத்தாளர்களையே உறுப்பினராகக் கொண்டு இம் மன்றம் இயங்குகிறது. தேவநாகரி எழுத்துக்களை தென் இந்திய மொழிகளுக்குள் திணிக்க இந்திய அரசினர் முயன்ற போது, இம் மன்றம் தமிழ்ப் பேரறிஞர்களின் எண்ணங்களைத் திரட்டி அன்றைய தலைமை அமைச்சர் நேருவுக்கு அனுப்பிற்று

திரு அவ்வை துரைசாமி, திரு. அ. கி. பரந்தாமனுர், திரு. தேவநேயப் பாவாணர் ஆகிய தமிழ் அறிஞர்களுக்கு முறையே உரைவேந்தர், பைந்தமிழ்ப் பாவலர், மொழி நூலறிஞர் என்ற பட்டங்களை வழங்கிப் பொற் பதக்கமும் கொடுத்தது இம் மன்றமே தமிழ்த் தொடர்பாக ஆய்வு செய்து பண்டாரகர் பட்டம் பெற்றவர்களுக்கு இம்மன்றம் பாராட்டு விழா நடத்தியிருக்கிறது.

திரு பு. மனேகரன் இம் மன்றத்தின் புரவலராகவும் தமிழ்ப்பாவை ஆசிரியராகவும் இருந்து அரும்பணியாற்றி வருகிருர் திரு கருணை (செயலாளர்) மற்றும் ஏராளமான எழுத்தாளர்கள் இவருக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

1974-இல் ஏற்பட்ட கம்பன் கழகம் புதன் கிழமைகளில் கம்பராமாயண வகுப்பும் திங்கள் தொறும் சொற்பொழிவுகளும் மற்றும் ஆண்டு விழாக்களையும் நீதிபதி திரு முருகேசன், டாக்டர் சுப அண்ணுமலை, திரு மனேகரன் ஆகியோரின் முயற்சியால் நடத்தி வருகிறது.

பாண்டித்துரைசாமித் தேவர் பைந்தமிழ்ப் பேரவை, மூவேந்தர் பண்பாட்டுக் கழகம், திருக்குறட் பேரவை போன்ற அமைப்புகளும் உள்ளன.

தமிழ்விழா

இந்த மன்றங்களின் நிகழ்ச்சிகளாலும் மற்றும் நடைபெறும் கவியரங்கங்கள், பட்டி மன்றங்கள் ஆகியவற்றாலும் மதுரை மாநகர் எப்போதும் தமிழ் விழாக் கோலமாக உள்ளது.

இந்திய நாடு 1947-இல் உரிமை பெற்றதன் விளைவாக அவ்வாண்டில் மதுரையில் தமிழக அரசின் ஆதரவில் தமிழ் விழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து திருவாரூரிலும் கோவையிலும் சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் புதுதில்லியிலும் தமிழ் விழாக்கள் கொண்டாடப் பெற்றன. அவற்றின் விரிவாக உலகத் தமிழ் மாநாடு என்னும் கருத்து உருவாயிற்று. 1981-இல் உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்த ஏற்பாடு செய்யப் பெற்று வருகிறது.

நாள் இதழ்கள்

மதுரை மாநகரில் ஏராளமான இதழ்கள் வெளிவருகின்றன.

நாளிதழ்களாக தந்தி, தினமணி, மாலைமுரசு, தினகரன் முதலியன வெளிவருகின்றன. மற்றும் மதுரையிலிருந்து மட்டுமே வெளிவரும் மாலை இதழும் உளது. சில ஆண்டுகள் மட்டுமே வெளி வந்த இதழ்கள்; "தமிழ் நாடு" "தமிழ் முரசு", "செய்தி".

கலைத்தந்தை கருமுத்து தியாகசராசர் நடத்திய 'தமிழ் நாடு' சிறந்த தமிழ்த்தொண்டு புரிந்து, ஏனைய நாளிதழ்களின் தமிழ் நடையில் சில மாற்றங்கள் ஏற்படச் செய்தது.

ஏடுகள்

வார, திங்கள் ஏடுகள் பலவும் மதுரையிலிருந்து வருகின்றன. இவற்றுள் பல நெடுங்காலம் நீடிக்கவில்லை. எனினும், இதழ்களை நடத்துபவர்கள் ஆர்வத்தோடு நடத்தி வந்தது பாராட்டுக்கு உரியது.

இவற்றின் பட்டியல் தொகுக்கப்பட்டால் நூறுக்குக் குறையாது. செந்தமிழ், விவேகபானு, ஞானசித்தி, ஞானசேகரம் தமிழ்நாடு, குறிஞ்சி, ஏலவிவசாயி, விவேகோதயம், பாரதி நற்பண்பு முதலியன குறிப்பிடத்தக்கன.

நூலக இயக்கம்

மதுரையிலுள்ள நூலகங்களுள் டவுன்ஹால் நூலகமும் மீனாட்சியம்மன் கோயில் நூலகமும் பழமையானவை. இவை முறையே 75 ஆண்டுகளாகவும் 50 ஆண்டுகளாகவும் இயங்கி வருகின்றன.

மாவட்ட நூலக ஆணைக்குழு சிறந்த முறையில் இயங்குகிறது. மத்திய நூலகத்தில் ஏறத்தாழ 20,000 நூல்கள் உள்ளன. 100 கிளைகளும் 240 வழங்குமையங்களும் செயல்படுகின்றன. திரு. ஏ. அழகப்பன் இக்குழுத்தலைவராக இருந்து நூலக வளர்ச்சிக்குப் பணி புரிந்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் தொடங்கப் பெற்று மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகமாக இயங்கிவரும் நூலகத்தைப் பற்றிப் பிறிதோர் இடத்தில் கூறுவோம்.

தொழில் பேட்டையில் தொழில் துறை நூலகம் சிறந்த முறையில் இயங்கிவருகிறது.

பேச்சுத்தமிழ்

மதுரை மாவட்டத்தில் ஒலிக்கும் பேச்சுத்தமிழ், தமிழ் பேசப்படவேண்டும் முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

இடப் பெயர்களிலும் பழந்தமிழின் இனிமை தெரியவரும். அனுப்பானடி, அரசரடி என்பவை ஏற்கெனவே உழுநிலமாக இருந்ததை அடி(வயல்) என்ற சீர் குறிக்கும்.

ஒரு குழந்தை இறந்துவிட்டது என்பதைக் குறிக்க 'தடுமாறிவிட்டது' என்பர். இது 'தடம்மாறிவிட்டது' என்பதன் மரூஉ. 'இயல்பான தடத்தில் செல்லாது எமன் வரும் தடத்தில் எதிரில் சென்றுவிட்டது' என்பது பொருள்.

ஏறுதழுவுதல் என்று இலக்கியம் குறிப்பிடும் விழா மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு என்ற பெயர்களால் வழங்கிவருகிறது. சலசல என்று ஓசை கேட்குமாறு மணிகட்டி மாடுகளை விரட்டுவதால் ஏற்பட்ட பெயர்போலும்!

'ஏத்தனை வட்டம் வந்தாலும் பார்க்க முடிவில்லை' என்பர். வட்டம் – தடவை. வேறு வேலைகளை விடுத்து இவரைப் பார்ப்பதற்காகவே வட்டமிடுகின்றனராம்!

வீணுகப் போகிறது என்பதை லாதியாய்ப் போகிறது என்கின்றனர். (இவனுல் பாதிச் சொத்து லாதியாய்ப் போச்சு).

சுத்தமாக (ACCURATELY) என்பதைக் குறிக்க, 'பொடச்சிப்பிட்டு' என்பர். (மேலூரிலிருந்து நாவனிப்பட்டி பொடச்சிப்பிட்டு 1½ மைல் இருக்கும்)

முங்கினுன்–மூழ்கினுன்
விரசா–விரைவா
சூதானம்–ஜாக்கிரதை
எரு–விராட்டி (சென்னையில் வெருட்டி)
கடவா–வாளி
கணவாய்–கம்மாய் (கம் என்பது நீருக்குப் பெயர்; நீர் தங்கியிருக்கும் இடம் கம்வாய், கண்வாய். வட ஆர்க்காடு மாவட்டத்தில் இதனை ஏரி என்பர்.)
எக்கல்–சகதி, சேறு
கொடுவினை–கொடுமை
சர்க்கரைப் பூசணி–பரங்கிக்காய்
சீனிஅவரை–கொத்தவரை
கள்ளன் வந்தான்–திருடன் வந்தான்
முடுக்குதல்–ஓட்டுதல்
கோளாராசெய்தீங்க–நல்லாசெய்தீங்க
ஒருதுட்டு,இருதுட்டு–துட்டு என்பது '4 பைசா' (2 நயா பைசா) வைக்குறிக்கும்
கடுவா–புலி
குலுக்கை–குதிர்,குதிறு
கொரண்டி–(காய்ந்த) முள்ளிச்செடி
வாரியல்–விளக்குமாறு
தூறுதல்–கூட்டுதல்
நேக்கால்–நுகத்தடி
சுளகு–முறம்
தூளி–தொட்டி
காரைவீடு–மெத்தைவீடு, மாடிவீடு
சூத்தை–சொத்தை
வாணம்பறித்தல்–அஸ்திவாரம் தோண்டல்
ஒருகைபோடு–இரண்டு(பொருள்)போடு
லாகடம்–ஓட்டுதல்
தடுமன்–நீர்க்கோவை
ஊருணி–குளம்

பாட்டுபடிங்க-பாட்டைப் பாடுங்கள்
தள்ளுங்க-விலகுங்கள்
உறக்கம்-தூக்கம் (தஞ்சையில் தூக்கம் என்ற சொல் மட்டுமே உண்டு)
உசுப்புதல்-எழுப்புதல்
பத்துதல்-ஒட்டுதல்
மாவுதிரித்தல்-மாவுஅறைத்தல்
கிஸ்மிஸ்பழம்-திராட்சைப்பழம்
கருப்பட்டி-பனைவெல்லம், கறுப்புக்கட்டி
ஆத்தாள்-தாய்
அந்தலக்கிலே-அந்தஇடத்திலே
கவ்விச்சாப்பிடக்கூடாது-எச்சல்செய்யாதே
கவிதல்-குனிதல்

பழமொழிகள்

1. சொக்கர் காசு அக்கறைக்குப் போகாது.
2. மங்கையருள் மீனாட்சி மாப்பிள்ளைகளில் சொக்கலிங்கம்
3. காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி,மதுரை மீனாட்சி
4. அம்மனுக்குப் பூசை ஆகித்தான் சுவாமிக்கு பூசை ஆக வேண்டும்.
5. அழகர் கோயில் மாடு தலையாட்டினது போல
6. திண்டுக்கல் உப்பு இரண்டுக்கு ஒன்று
7. வெய்ய வெய்ய வைரக்கல் திட்டத் திட்ட திண்டுக்கல்
8. மங்கம்மாள் சாலை மலை மேலே சோலை
9. கம்புக்குக் களை பிடுங்க அழைத்துச் சென்று தம்பிக்குப் பெண் கேட்டாளாம்.

இசை

முத்தமிழில் ஒன்றான இசை வளர்ச்சியில் மதுரையின் பங்கு மிகப் பெரியது. தொன்று தொட்டு மதுரையில் இசை வளர்ச்சி பெற்றிருப்பதை இங்கு வாழ்ந்திருக்கிற இசைப் புலவர்களாலும் இங்கே காணப்பெறும் பலவகை இசைக்கருவி களாலும் அறிகிறோம்.

சாரங்கி என்ற இசைக்கருவியை வாசிக்க மதுரை மாவட்டத்தில் பலகோயில்களில் நிபந்தங்கள் ஏற்படுத்தப் பட்டு இருந்தன.

மதுரைக் கோயிலில் இசை நிகழ்ச்சிகள் நடந்த வண்ண மாக இருந்தன. இதை ஓவியத்தில் நெய்து காட்டப் பெற்றுள்ள திரைச்சேலை, லண்டனில் விக்டோரியா அண்டு ஆல்பர்ட் மியூசியத்தில் பேணிவைக்கப் பெற்றுள்ளது.

இசை ஒலிக்கும் தூண்கள்

மீனாட்சி அம்மன் கோயிலில் மொட்டைக் கோபுரம் எனப் படும் வடக்குக் கோபுரத்திற்கு அருகேயுள்ள ஐந்து தூண்கள் ஒவ்வொன்றிலும் 22 உருட்டுக் கம்பிகள் இணைக்கப் பெற்றிருக் கின்றன. ஒரு தூணில் எழும் சுரத்தின் கிளைச்சுரங்கள் பக்கத் திலுள்ள தூண்களிலிருந்து தாமே ஒலிக்கின்றன.

ஐரோப்பிய இசை அறிஞர்கள் இந்தத் தூண்களை பியானோ கம்பங்கள் என்று போற்றுகின்றனர். வடஇந்திய இசை வல்லுநர் இவற்றை 'ஜல தரங்கத் தம்பங்கள்' எனப் பாராட்டுகின்றனர்.

இக்கோயிலின் ஒரு பகுதியான சுவாமிகோயில் வடக்குச் சுற்றில் நடராசர் சந்நிதியில் தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டில் 35 வகையான தாளங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

சங்கீத விநாயகர் என்ற பெயரில் மதுரைக் கோயிலில் ஒரு விநாயகர் இருக்கிறது.

மதுரைக் கோயில் திருமுறை

தேவாரப் பாடல்களை நாள் தோறும் கேட்பதில் சொக்கநாதப் பெருமான் விருப்பம் உடையவர் என்பதை உணர்ந்த பழந்தமிழ் அரசர்கள் திருமுறை ஓதுவார் பலரை மதுரைககோயிலில் நியமித்துத் திருமுறை விண்ணப்பிக்கச் செய்தனர். இது குறித்து வித்துவான் திரு. தா. குருசாமி எழுதி யிருக்கும் ஒரு கட்டுரையின் பின்வரும் பகுதியை இங்கே தருகிறோம்.

மதுரைக்கோயிலில் ஓதுவார் பணி புரிந்த ஓதுவார்கள், விசேடநாள்களில் தலபுராணம் சொல்வதும், திருவிழாக் காலங் களில் திருப்பணிமாலை பாடுவதும், ஆண்டவன் அடியார் பெருமை பற்றிய விரிவுரை செய்வதும் வழக்கமாகும். அவ்வழக்கம் இன்றும் அப்படியே நிலவி வருகிறது. திருக்கோயிலின் புராதனச்சான்று ஏடுகளில் இவ்விவரங்கள் அடங்கியுள்ளன. செப்பேடு பெற்ற

தாண்டவ மூர்த்தி ஓதுவார் காலத்திற்குப் பின்பு தோன்றிய தாண்டவமூர்த்திக் கவிராய ஓதுவார், சொக்கநாத நாயக்கர் காலத்தில் (கி. பி. 1689-ல்) தோன்றி இராணிமங்கம்மாள் காலம் வரை வாழ்ந்தவர் ஆவார். மதுரைக் கோயிலின் வரலாற்றையும் திருப்பணி செய்தவர்கள் விவரத்தையும் செய்யுள் உருவில் பாடியவர் இவரே. 'சுந்தரர் வேடுபறி' என்ற கலிவெண்பாச் செய்யுளும் இவர் பாடியதாகக் கூறப்படுகிறது.

திருமுறை ஓதும் இடம்

விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் தொழிலட்டவணை தயார் செய்தபோது 'தேவாரம் அம்மன் சந்நிதிகளில், விநாயகர் சந்நிதிகளில் ஏன் ஓதப்படக்கூடாது, என்று கேட்டதற்கு அப்போது இருந்த சிவகுருநாத ஓதுவார், தேவார திருவாசகங்கள சிவ சந்நிதானத்தைத் தவிர, விநாயகர், முருகக்கடவுள், அம்பிகை முதலியோர் சந்நிதிகளில் ஓதி வரவேண்டும் என்பது சம்பிரதாய விரோதமட்டுமின்றி, உலக வழக்கத்திற்கே பொருத்தமின்றியும், நியாயமுறையிலும் இருந்து வராமையாலும் அந்தந்த தெய்வ சந்நிதிகளில அவரவர்க்குரிய பாடல்களை யாவரும் எப்பொழும் பாடிவந்தாலும சொக்கநாதர் மூலஸ்தான சந்நிதி ஒன்றும் வெள்ளியம்பல நடராசர் சந்நிதி ஒன்றும் ஆக இரண்டு சிவ சந்நிதானங்களே தேவார திருவாசகங்கள் ஓதுவதற்குரியன வாகும், என்று வாக்குமூலம் கொடுத்திருப்பதை மதுரஞ்சுந்தர பாண்டிய ஓதுவார் 29—8—1936-ல் எழுத்து மூலம் விளக்கம் செய் திருக்கின்றார்கள். இந்த வாக்குமூலப்படியே இன்றும் திருமுறை விண்ணப்பம் நடைபெற்று வருகின்றது.

நாடோறும் திருமுறை விண்ணப்பம்

நித்தியப்படி சுவாமி சந்நிதானத்தில் கொடிக்கம்பத்தின் முன்பு பள்ளியறைச் சொக்கர் எழுந்தருளுங்காலத்தில் 'தேவாரம் அருளிப்பாடுக' என்றவுடன் திருமுறைவிண்ணப்பிப்பது வழக்கம். அககாலத்திலிருந்து இன்றும் நித்தியப்படி நடந்து வரும் திரு முறைப்பணி இதுவாகுமு. இக்காலத்தில் ஒரே திருப்பாட்டு விண்ணப்பம் செய்யப்படுகிறது. கஸ்தூரிரங்கச் சொக்கநாதர் காலத்து வாக்குமூலத்தில் ஒரு பதிகம் விண்ணப்பிக்கப்பட்ட தாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்சபுராணம் என்பது பிற்கால வழக்கமாகும்.

பிரதோஷகாலத் திருமுறைப் பணி:

மாத விசேடமாகிய பிரதோஷ காலத்தில் பெருமானும் பெருமாட்டியும் இடபவாகனத்தில் கபாலிமதிற் பிராகாரத்தில் வலமாக வரும்போது அஷ்டதிக்குகளிலும் முறையே கீழ்க் கண்டவாறு திருமுறைப்பண் ஓதப்பட வேண்டும் என்பது கூறப் பட்டுள்ளது. 1. நட்டபாடை 2. காந்தாரம 3. பியந்தைக் காந்தரம் 4. சாதாரி 5. நட்டராகம 6. தக்கராகம் 7. சிகாமரம் 8. தாண்டகம் அல்லது செந்துருத்தி-என்ற பண்கள்.

சித்திரை விழாவில் திருமுறைப் பணி

முதல் திருநாளில் ஆடிவீதியின் அஷ்டதிக்குகளிலும் தேவாரம் விண்ணப்பிப்பது வழக்கம் எட்டுத் திக்குகளிலும் பகற்பண் நான்கும் இராப்பண் நான்கும் ஓதப்படவேண்டும். ஐந்தாம் திருநாளில் வேடர்பறிலீலை–சுந்தரர் வரலாற்றைவிரித்துக் கூறித் திருமுருகன் பூண்டி நிகழ்ச்சிகளை விவரித்து அத்தலப் பதிகத்தை ஓதுவதுண்டு. கள்ளர் வேடம் பூண்டு வந்து நிற்பவரை முன்னிலைப்படுத்தி, பொதுமக்களுக்கு நாடகபாணியில் விளக்கிக் கூறுதல் பண்டை வழக்கம். இவ்வரலாறு அழகிய கலி வெண்பாவால் பாடப்பெற்றுள்ளது. ஆறுந்திருநாள் கழுவேற்ற லீலை சொல்வது, சமணர் வேடம் போட்டவரை முன்னிலையில் வைத்து நாடகபாணியில் முன்பு நடந்தலீலை. இஃது இன்று 'சைவ சமயஸ்தாபனலீலை' என்ற பெயரில் நடத்தப்பட்டு வரு கிறது. எட்டாந்திருநாள் ஊடல் மாலை சொல்வது நிகழும். இதன் தொகுப்புப் பாடல்கள், கங்கை–உமை ஊடல் திருமுறைப் பாடல் களாக உள்ளன. அவையே இன்றும் சொல்லப்பட்டு வருகின்றன. பதினோராம் திருநாள் சப்தாவர்ணத்தில் திருப்பணி மாலையும் திரு முறையும் விண்ணப்பிக்கப்படும். பன்னிரண்டாம நாள் சூரண உற்சவத்தில் திருத்தெள்ளேணம் பாடுதல் மரபு. இப்படியே மற்ற உற்சவங்களிலும் பாடுதல் உண்டாம். மார்கழி மாதம் மாணிக்கவாசகர் திருவிழாவில் 10 நாளிலும் திருவெம்பாவை ஓதுதல் வழக்கம்.

திருவெம்பாவை காப்புக்கட்டும் போதும், காப்பு அவிழ்க்கும் போதும் பண்டைக்காலத்தில் அரசர்கள் முன்னிலையில் நடப்பதும், பரிவட்டம் ஓதுவா மூர்த்திகளுக்குக் கட்டிச் சிறப்புச் செய்தலும் நடந்து வந்தன. மாணிக்கவாசகரை எழுந்தருளப்பண்ணி அவர் சுவாமியின் திருமுன்பு பாடிவருவதாக வழக்கம். அதற்காக நாள்

பத்திற்கும் பட்டுவஸ்திரம் கட்டுவதுண்டு. இது பற்றி நாயக்க மன்னர் காலத்தில் பரிவட்ட மானிய வழக்கு நடைபெற்றதாக எழுத்துச் சான்றுகள் கூறுகின்றன.

வைகாசி, பங்குனி வசந்த உற்சவங்களில் சுவாமி முன்பு மேகராகக் குறிஞ்சித்திருப்பதிகம் பாடுதல் வேண்டும். ஆனி ஊஞ்சல் விழாவில் திருப்பொன்னூசல் பாட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

பழங்குடி மக்கள்

கோடைக்கானலிலும் மேல் பழனி மலை கீழ்ப் பழனிமலைப் பகுதிகளிலும் வாழும்பழங்குடி மக்கள் இசை ஆர்வம் மிக்கவர்கள். இவர்கள் வாழும் ஊர்களில் குறிப்பிடத்தக்கது தாண்டிக்குடி. உள்ளத்தையும் உடலையும்கவரும் இயற்கை நிலையைக் கொண்ட இக்குறிஞ்சிப் பகுதி, இன்றைய திரைப்பட இசையால் தாக்கப் படவில்லை. மேலும் சமதரைப் பகுதியில் பயன் படுத்தப்படாத பழமையான இசைச்சொற்கள் இங்கு பேச்சு வழக்கில் இடம் பெறுவதால் அச்சொற்களின் பொருளை நாம் அறியஇயலுகிறது. 'சிங்காரய' என்ற சொல் சிறிய நாதசுரங்களை வாசிக்கும் இருவரையும் அவர்களுக்குப் பக்கவாத்தியங்கள் வாசிக்கும் மூவரையும் உள்ளிட்ட ஐவர் குழுவைக் குறிக்கும். இவர்கள் பெரும்பாலும் திருமணங்களில் சிஙகாரமான இசையை ஒலிப்பதால் இவர்களுக்குச் சிங்காரம் என்ற பெயர் ஏற்பட்டது போலும்.

குமிழ் மரத்தில் செய்த நாதசுவரத்தையே இவர்கள்வாசிக்கிறார்கள். இந்தக் கருவி 15 அங்குல நீளமுடையது. பிற நாதசுவரஙகளைப போல இதில் எட்டுத்துவாரங்கள் இல்லை. ஆறு துவாரங்கள் மட்டுமே உள்ளன. ஒலியைக் கூட்டவும் குறைக்கவும் சில துவாரங்களையோ எல்லாத் துவாரங்களையுமோ அடைத்துக் கொண்டு வாசிக்கிறார்கள். சத்தக்குழல், மகுடி என்ற பெயர்களாலும் இந்தக் கருவியிலிருந்து குறிப்பிட்ட ஒலிகளை எழுப்புவர். பழங்குடிமக்கள் இசையில் ஏராளமான தாளங்களை கேட்கலாம்.

ஆடவர் பலர் சேர்ந்து குழுவாகப் பாடுவது என்பது பழங்குடி மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இது போலப் பெண்டிரும் வட்டமாக நின்று கூட்டாகப் பாடல்களைப் பாடுகிறார்கள். மத்தளமும் புல்லாங்குழலும் மிகுதியாகப் பயன் படுத்தப் பெறுகின்றன.

தாண்டிக்குடிக் காடுகளில் கானமயில் என்ற பறவை இனம் உண்டு. ஆண் பறவையும் பெண் பறவையும் எதிர்எதிரேயுள்ள மரக்கிளைகளில் உட்கார்ந்துகொண்டு குறிப்பிட்ட ராகங்களில் பாடல்களைப் பாடுகின்றன.

புலவர்கள்

சங்கரதாஸ் சுவாமிகள் ஏராளமான இசைப் பாடல்களை இயற்றியிருப்பதை அனைவரும் அறிவர். நடையின் எளிமையாலும் கருத்துகளின் விழுமையாலும் அவை புகழ் பெற்றவை. அவை பெரும்பாலும் மதுரையம்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் மீனாட்சியம்மனைப் பற்றியும் திருப்பரங்குன்றத்திலே திருமணக்கோலத்தோடு நிற்கும் தெய்வகுஞ்சரிநாதனைப்பற்றியும் பாடப் பெற்றவை. மதுரை மாநகரைச் சிறப்பித்து 'மதுரை நகர்க்கு வாருங்கள்' என்ற பாடல் உள்பட சுவாமிகள் சில பாடல்களை இயற்றியுள்ளார்.

இறைமணமும் தமிழ்மணமும் இசைமணமும் ஒன்ருக இசைந்த மதுரை மாநகரத்தில் பல தலைமுறைகளாகப் புகழ் பெற்ற இசைக்குடும்பம் ஒன்றில் 1916-இல் பிறந்தவர். உலகெங்கும் இன்று புகழ் பெற்றிருக்கும் இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள். இவர்களுடைய பெருமையையும் இசை வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றியுள்ள ஏராளமான பணிகளையும் விரித்துக்கூறத் தேவையில்லை. அவை அனைவருக்கும் தெரிந்தவை.

திருமதி சுப்புலட்சுமியின் அன்னையார் சண்முகவடிவு அம்மாள் வீணைவாசிப்பதில் வல்லவராக விளங்கினர். அவருடைய தாயாரும் திருமதி சுப்புலட்சுமியின் பாட்டியுமான அக்கம்மாள், வயலின் வாத்தியத்தில் ஈடும் இணையும் இல்லாதவராகத் திகழ்ந்தார். கருவிகள் வாயிலாக இசையை வாரிவழங்கிய குடும்பத்தில் தோன்றிய திருமதி சுப்புலட்சுமி அவர்கள் வாத்தியங்களுக்கு எட்டாத நுட்பதிட்பங்களைத் தம் குரல் வாயிலாக உலகெங்கும் ஒலித்து வருகிருர். தெம்மாங்குப் பாடல்களையும் தேவார திருவாசகப் பாடல்களையும் பிறந்தநாள் முதல் கேட்கும் வாய்ப்பை இவருக்கு வழங்கியது மதுரைச்சீமையே.

நாதசுவரப் பெரும் புலவர்களும் பழமை முதல் மதுரையில் இருந்திருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. 19-ஆம் நூற்ருண்டில் சங்கீத கலாநிதி பொன்னுசாமி பிள்ளை மதுரையில் தோன்றினுர். இவர் காலம் 1877 முதல் 1929 வரை. சென்னை 'மியூசிக் அகடமி'

முதல் தடவையாக இசை மாநாடு நடத்தியதுபோது அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் இவரே ஆவார். இந்த நாதசுவரமேதை "பூர்வீக சங்கீத உண்மை" என்ற அரிய இசை இலக்கண நூலை இயற்றியுள்ளார். மைசூர் அரண்மனைப் புலவராகவும் விளங்கினார் இராமநாதபுரம் சேதுபதி இவருக்கு ஓராயிரம் வெள்ளிக்காசு சன்மானம் வழங்கினார். அந்தப் பணத்தைக் கொண்டு திரு பொன்னுசாமி பிள்ளை சங்கீத இரத்தின விநாயகர் கோயில் ஒன்றைக் கட்டியுள்ளார். இக்கோயில் இன்றும் மதுரை நகரில் உள்ளது.

முன்காலத்தில் பெரும்பாலும் நாதசுர வித்வான்கள் கையாண்டு வந்தது "திமிரி நாதசுரமே" ஆகும் அதாவது மிக மிக உயர்ந்த சுருதியை வைத்துக்கொண்டு வாசிப்பதே வழக்கம். திரு பொன்னுசாமி பிள்ளை திமிரி நாதசுரத்தின் ஓசையையும் பாரிநாதசுரத்தின் ஓசையையும் தமது அறிவுத்திறனாலும் அனுபவத்தாலும் தெளிவாக ஆராய்ச்சி செய்து திமிரி சுருதியாக இல்லாமலும் பாரி சுருதியாக இல்லாமலும் நடுநிலைமையான இடபாரி நாதசுரத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்தார்.

முன்காலத்தில் வெள்ளியினாலும் தங்கத்தினாலும் செய்யப் பட்ட நாதசுரத்தை வாசிக்கக்கூடிய வித்துவான்களுக்குத்தான் பெருமையும் பண வருவாயும் கிடைத்தன. நல்ல ஓசை வெள்ளி யிலும் தங்கத்திலும் இல்லை என நினைந்து, முற்றிய மரமாகப் பார்த்து அந்த மரத்தினாலேயே செய்யப்பெற்ற நாதசுரத்தை திரு பொன்னுசாமி பிள்ளை தனக்கென அமைத்துக் கொண்டார் அவர் வாயிலாக மரத்தினால் செய்யப்பெற்ற நாதசுர வாத்தியமே, இன்று நாடெங்கும் பழக்கத்தில் வந்துவிட்டது.

பாட்டனாரின் அரிய இசைச் செல்வத்தைக் காத்து வளர்த்து வரும் பணியில் நாதசுவரப் புலவர்களான மதுரை திரு. பி. என். சேதுராமன், அவர் தம்பி மதுரை திரு பி என். பொன்னுசாமி ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இவர் களுடைய முயற்சியால் சங்கீத கலாநிதி மதுரை பொன்னுசாமி பிள்ளை நூற்றாண்டுவிழா 1980 பிப்ரவரியில் கொண்டாடப் பெற்றது.

மதுரை பொன்னுத்தாயி அம்மாள் என்ற பெண்மணியும் நாதசுவரம் வாசிப்பதில் மிக உயர்ந்த நிலையை எய்தி மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ளார்.

குறிப்பிடத்தக்க பிற இசைவாணர் வருமாறு:

பதங்கள் இயற்றியவர்: கவிகுஞ்சரபாரதியார்

கீர்த்தனைகள் இயற்றியவர்: மதுரை மாரியப்ப சுவாமிகள்

வாய்ப்பாட்டுப் பாடுநர்: மதுரை மணி ஐயர் அவர் தகப்பனார் புஷ்பவனம் ஐயர், டாக்டர் மதுரை சோமசுந்தரம் பாலமுரளிகிருஷ்ணாவின் மாணவர் மதுரை எம் பாலசுப்பிரமணியம்

மிருதங்கப் புலவர்கள்: பழநி முத்தையா பிள்ளை, அவர் மகன் சுப்பையா பிள்ளை.

கடம்வாசித்தவர்: கடம் கிருஷ்ண அய்யர்.

முகவீணைக் கலைஞர்: நாதசுர வித்துவான் பொன்னுசாமிபிள்ளையின் தகப்பனாரான முத்துக்கருப்ப பிள்ளை

இசைக் கல்லூரி

மதுரை சின்னச்சொக்கிகுளத்தில் லட்சுமிசுந்தரம் மண்டபத்தில் ஸ்ரீ சத்குரு சங்கீத வித்தியாலயம் என்ற பெயரில் ஓர் இசைக்கல்லூரி 1966-முதல் நடைபெற்று வருகிறது. இது மதுரை – காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது. பி. மியூசிக் என்ற இசைப் பட்டத்திற்கு இங்கு வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், இசை நுணுக்கம் ஆகிய பாடங்கள் தமிழில் கற்பிக்கப் பெறுகின்றன. 13 ஆசிரியர்களும் ஏறத்தாழ 100 மாணவ மாணவியர்களும் உள்ளனர். நூலகத்தில் ஈராயிரம் நூல்கள் உள்ளன.

நாதசுரக் கல்லூரி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தார் 1957 முதல் நாதசுரக் கல்லூரி நடத்தி, தாங்கள் வகுத்த பாடத் திட்டப்படி நாதசுரமும் தவிலும் நான்கு ஆண்டுகளுக்குக் கற்பித்து வருகிறார்கள். படிப்பு முடித்ததும் தேவஸ்தானத்தாரே மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குகின்றனர் படிப்புக் காலம் முழுவதும் மாணவர்களுக்கு உறையுளும் உடையும் உணவும் மருந்தும் தேவஸ்தானத்தார் செலவில் வழங்கப்படுகின்றன. கீவளூர்கணேசன் பந்தணைநல்லூர் லெட்சுமிகாந்தன், பழனி கிட்டு போன்ற வித்துவான்கள் இங்கு பயின்றவர்களே.

தமிழ் இசைச்சங்கம்

மதுரை நீதிமன்றக் கட்டிடங்களுக்கு எதிரில் மதுரை மாநகரின் காட்சிப் பொருள்களில் ஒன்றாக 50 லட்சம் ரூபாய்ச் செலவில் வனப்பு மிக்க மாளிகையாகக் கட்டப் பெற்றுள்ள இராஜா முத்தையா மன்றம் உள்ளது இங்கு மதுரைத் தமிழ் இசைச்சங்கம் செயல்படுகிறது. திங்கள்தோறும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் ஆண்டுவிழா மிகச் சிறப்பான முறையில் கலைவிழாவாகக் கொண்டாடப் பெறுகிறது தமிழ் இசை பற்றிய நூலகமும் தமிழ் இசைக் கல்லூரியும் உருவாகிவருகின்றன. இக்கட்டிடம் தமிழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக மிளிர்கிறது

ஆண்டுதொறும் இச்சங்கத்தார் வெளியிடும் மலர்களில் இசை ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன

காந்திகிராம கான கோஷ்டி

கிராம மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது கலைப் பண்பு. இதை உணர்ந்து காந்திகிராம கான கோஷ்டி ஏற்பட்டிருக்கிறது.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைத் தலைவரே கான கோஷ்டியின் கௌரவ அமைப்பாளர் உதவி அமைப்பாளர்களும் மாணவ உறுப்பினர்களும் உள்ளனர் ஆலோசனைக் குழுவும் இருக்கிறது கலையை வாழ்க்கையோடு ஒன்றிய அம்சமாக்க கானகோஷ்டி செய்துவரும் வேலைகளாவன

(1) பழமையான இசையிலும் கிராமியக் கலைகளிலும் ஆராய்ச்சி (2) பொறுக்கிய சாவியப் பாடல்களுக்கு இசையமைத்துப் பாடுதல் (3) இசைப் பயிற்சி வகுப்புகளும் நிகழ்ச்சிகளுக்கான ஒத்திகைகளும் (4) கிராமங்களிலும் நகரங்களிலும் இலவசமாகக் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல் (5) மார்கழிமாத பஜனை (6) வருஷ முழுவதுமே வெள்ளிக்கிழமைதோறும் அதிகாலை பஜனை (7) கிராம மக்களுக்கென்று பாட்டுப் போட்டிகள் (8) பஜனைப் பாடல்கள், குறவஞ்சிப் பாடல்கள் போன்றவற்றை இசைத்தட்டில் பதிவு செய்தல் (9) எளிமையான, தூய்மையான பாடல்களை சுரத்துடன் அச்சிடுதல் (10) ஆங்காங்கு கான கோஷ்டிகள் ஏற்பட உதவி செய்தல்.

கலையனுபவம் இரண்டு வகைப்படும். கலைவல்லுநரின் கலையைக் கண்டு கேட்டு ரசிப்பது ஒன்று; மற்றொன்று, நாமே நமது கலையுணர்ச்சி வெளிப்பட வாய்ப்பளித்து மகிழ்ச்சியுறுவது,

இந்த இரு தேவைகளையும் பூர்த்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு கானகோஷ்டி பணியாற்றி வருகிறது.

தெருப் பெயரில் இசை

திருமலை நாயக்கர் காலத்தில் நவ்பத் கானா வாத்தியம்என்ற பெயர் பெறும் 18 இசைக் கருவிகள் காலையிலும் மாலையிலும் அரண்மனை அருகே வாசிக்கப் பெற்றன. இந்த இசை வாசிக்கப்பட்ட இடமே இன்றைய நவ்பத்கானா தெரு. இத்தெரு, இந்த இசை வாணர் குடியிருக்க ஒதுக்கப்பட்டிருந்தது.

நாடகம்

நாடகத் தமிழுக்கு மதுரையே தலைமை தாங்குகிறது. தமிழகத்தின் தலைசிறந்த நாடகக்குழுக்கள் அனைத்தும் மதுரையிலிருந்தே தோன்றியவை. மதுரையையே தாயகமாகக் கொண்டவை. தமிழ் நாடகத் தலைமையாசிரியராக விளங்கிய தவத்திரு. சங்கரதாஸ்சுவாமிகள் தம்வாழ்நாளில் பெரும்பகுதியை மதுரையிலேயே கழித்தார்கள். மீனாட்சிஅம்மனின் அருட் செல்வராக இருந்தே பணிபுரிந்தார்கள். நாடகத் தமிழை வளர்த்த அப் பெரியாரின் திருவுருவச்சிலையினை மதுரை மாநகரில் தமுக்கத்தில் நிறுவியிருப்பதே இதற்குச் சான்று.

சொந்தக் குரலுடன் பாடும் நடிகர்கள் மதுரை மாவட்டத்தில்தான் மிகுதியாக இருக்கின்றனர். சிற்றூர்களில் தலைமுறை தலைமுறையாகக் குரல் இனிமையுடைய நடிகர்கள் தோன்றிய வண்ணமாக உள்ளனர். பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி, கோவலன், வள்ளிதிருமணம் போன்ற நாடகங்கள் மதுரை மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இன்றும் அடிக்கடி நடிக்கப் பெறுகின்றன.

ஏராளமான நாடகக்குழுக்கள் மதுரையில் தோன்றியிருக்கின்றன. வெளியூர்களில் தோன்றிய குழுக்களும் தங்கள் பெயரில் மதுரையின் பெயரைச் சேர்த்திருக்கின்றன. டி. கே. எஸ். சகோதரர்கள், ஜகந்நாதஐயர் ஆகியோரும் மதுரையில் நடித்துத்தான் புகழ்பெற்றனர். திரைப்பட நடிகராகப் பெரும் புகழும் அதன் தொடர்பாக முதலமைச்சர் பதவியும் பெற்ற திரு. எம். ஜி. இராமச்சந்திரன், மதுரை ஒரிஜினல்பாய்ஸ் கம்பெனியில்தான் முதல்தடவையாக நடித்துப் பழகினார். திரு.

எம். கே. இராதா, திரு காளி, என் இரத்தினம், திரு. பக்கிரிசுவாமி பிள்ளை. திரு பி. யூ சின்னப்பா போன்ற பலரும் இந்தக் குழுவில் சேர்ந்துதான் நடித்துப்பழகினர். நாடகம் போட ஏற்பட்ட கொட்டகைகள் தான் மதுரையில் திரைப்படமாளிகைகளாக மாறின.

நாடகக்குழுக்கள் நலிவுஅடைந்தபோது பொருட்காட்சிகள் நடத்தி, திறந்தவெளி அரங்கில் சிறப்பு நாடகம் போடும் பழக்கம் ஏற்பட்டது.

மதுரை பாலமீனரஞ்சனி சங்கீத சபா, மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி, மதுரை தத்துவமீன லோசனி வித்துவ பால சபா முதலிய சபைகள் குறிப்பிடத்தக்கவை. இந்தச் சபைகள் எல்லாம் பெரும்பாலும் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களை யும் பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகரா போன்ற நாடகங் களையும் நடித்து வந்தன.

மதுரை பால மீனரஞ்சனி சங்கீத சபையில் திருவாளர்கள் நகைச்சுவைநடிகர் கே சாரங்கபாணி, நவாப் இராஜமாணிக்கம் பிள்ளை, பி. டி. சம்பந்தம், எம். எஸ். முத்துக்கிருஷ்ணன், டி. பி. பொன்னுசாமிப்பிள்ளை, டி. பாலசுப்பிரமணியம் எம். ஆர். இராதா, சிதம்பரம் ஜெயராமன், ஏ எம். மருதப்பா முதலிய பல நடிகர்கள் தயாராயினர்.

குஞ்சர பாரதியார் (1810—1896) கந்தபுராணக்கீர்த்தனை கள், பேரின்பக் கீர்த்தனைகள், அழகர் குறவஞ்சி என்பவற்றின் வாயிலாக அரும் பெருந் தொண்டாற்றியுள்ளார். இவற்றுள் அழகர் குறவஞ்சி என்னும் நாட்டியநாடகம், அழகர் கோயிலில் வீற்றிருக்கும் சுந்தரராசப் பெருமானைத் தலைவராகக் கொண்டு எழுதப் பெற்றது.

மதுரை காமராச பல்கலைக் கழகத்தில் சங்கரதாஸ் சுவாமி கள் பெயரால் டி. கே. எஸ் சகோதரர்கள் ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தி நாடகத்துறை பற்றிய சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான நாடக நூல்களை இப் பல்கலைக் கழகத்திற்கு அன்பளித்துள்ளனர்.

கலை விழாக்கள்

சித்திரைத் திருவிழாவின் போது நடைபெறும் பொருட்காட்சி, கோடைக்கானலில் சுற்றுலா வாரியம் நடத்தும் கோடை விழா, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் விழாக்கள், பழனிக் கோயிலில் தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்த சஷ்டி வைகாசி விசாகம், தமிழ்ப்புத்தாண்டு, திருக்கார்த்திகை ஆகிய விழாக்களை ஒட்டியும் முத்தமிழ் விழாக்கள் நடத்தப் பெறுகின்றன.

மதுரை மாநகரில் பல இசைக் கழகங்கள் இயங்குகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'சங்கீதா' என்பது. இதன்அலுவலகம் தானப்ப முதலி தெரு, 36-ஆம் கதவு இலக்கத்தில் உள்ளது. இக்கழகத்தின்ஆதரவிலும் முத்தமிழ்விழாக்கள் பெருஞ்சிறப்புடன் நடத்தப் பெற்றுவருகின்றன.

9

இதழ்கள்

மதுரையிலிருந்து 100 ஆண்டுகளாகப்பல இதழ்கள்-மொழி, சமயம், சாதி, அரசியல் அடிப்படைகளில் வெளிவந்துள்ளன.

நாள் இதழாக மதுரையிலிருந்து முதல் தடவையாக வெளி வந்தது என்ற பெருமை 'தினத்தந்தி'க்கு உரியது. 1943-இல் இந்த ஏடு மதுரையில் தொடங்கப் பெற்றுப் பின்னரே சென்னைமுதலிய நகர்களுக்கும் பரவி ஆல்போல தழைத்து அருகுபோல் வேரூடி இருக்கிறது.

மதுரையிலிருந்து வெளிவந்து நின்று போனநாள் இதழ்கள்:

கருமுத்து தியாகராசச் செட்டியார் தொடங்கி நடத்திய 'தமிழ் நாடு'; செ. மாதவன் அமைச்சராக இருந்தபோது அவருடைய ஆதரவுடன் வெளிவந்த 'தமிழ் முரசு'; நெடுமாறன் வெளியிட்ட "செய்தி"

மதுரையில் 1980 இல் வெளிவந்து கொண்டிருக்கும் நாள் இதழ்கள் வருமாறு:

1. தினத்தந்தி
2. மாலைமுரசு
3 தினமணி
4. தினகரன்
5. மக்கள் குரல்

6. மதுரைமணி
7. தீக்கதிர்
8. முரசொலி

ஆங்கிலத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் மதுரைப் பதிப்பு பல ஆண்டுகளாக வெளிவருகிறது.

நல்ல தமிழில் வெளிவந்த இதழ்களாவன:

1. தமிழ்நாடு
2. செந்தமிழ் (மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு)
3. தமிழ்ப் பாவை (தமிழ் எழுத்தாளர் மன்றத்துவெளியீடு)

சாதி இதழ்கள்:

1. சௌராஷ்டிர ஜோதி
2. மகா ஜனம்
3. நகரத்தார் மலர்
4. சேவை
5. குர்ஆனின் குரல்
6. யாதவ மித்திரன்
7. செம்மலர்
8 நாயுடு சமுதாயம்

பிற இதழ்கள்:

1 கிராம ராஜ்யம் (சர்வோதய இயக்க ஏடு)
2. சிவில் சர்வண்ட்
3. சமாதான வழி
4. வைகை
5. தோழன்
6. தீச்சுடர்
7. சமூக ஜோதி
8. சமய ஜோதி
9. மின் கதிர்
10. கடைசி எக்காளம்
11. நற்பண்பு
12. வீரசேகரி
13. சாரணியர்
14. யுகப் புரட்சி

15. தமிழ் நாடு
16 பாரதி
17. மதுரைக்கூட்டுறவு
18. சதயவர்த்தமானி
19. கைகாட்டி
20. பொய்யாவிளக்கு
21. டி. வி. எஸ். செய்தி

மதுரையிலுள்ள கல்லூரிகள் வெளியிடும் ஆண்டு மலர்களில் பயனுள்ள கட்டுரைகள் உள்ளன. தியாகராசர் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி, யாதவர் கல்லூரி முதலியவற்றின் இதழ்கள் குறிப்பிடத்தக்கவை.

மதுரை மருத்துவக் கல்லூரி ஆண்டு மலர்களில் இடம்பெற்றுள்ள மருத்துவ அறிவியல் கட்டுரைகளைப் படித்துப் பார்த்தால், மருத்துவ மாணவர்களின் தமிழ் ஆர்வமும் திறனும் தெளிவாக விளங்கும். இதன் விளைவாகத் தமிழில் மருத்துவ நூல்கள் அரும்பியுள்ளன.

"கண்ணகி" என்ற வார இதழ் 1952 முதல் 1976 வரை நடைபெற்று நேத்தாஜியின் புகழ் பரப்பியது.

வைகை, மகாநதி, ஷெல்லி, ஜன்னல், விழிகள், சிடி வாய்ஸ் என்ற இதழ்களும் மதுரையிலிருந்து வெளிவருகின்றன.

சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' இதழ் அங்குஅச்சிடப் பெற்று விமானத்தில் மதுரை பகுதிக்கு அனுப்பப் பெற்று வந்தது. மதுரைப் பதிப்பு என்று தனியாக நாள் தோறும் சென்னையிலேயே உருவாக்கி FASCIMILE என்ற போட்டோக் கருவியின் மூலம் ஒவ்வொரு பக்கமும் சென்னையில் உருவாக்கியவுடன் மதுரையில் அச்சிடப்படுகிறது. இதற்காக கட்டடங்கள், மதுரை நீதி மன்றத்திற்கு எதிரில் கட்டப் பெற்று இயந்திரங்களும் பொருத்தப் பட்டு, மதுரைப்பதிப்பு 1979 முதல் மதுரையிலிருந்தே வெளி வருகிறது

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழிலேயே இதழியல் கல்வி புகட்ட ஒரு துறை 1980-இல் தொடங்கப் பெற்றுள்ளது.

10

திரைப்படங்கள்

தமிழ்த் திரைப்படத் தொழிலில் மதுரை ஒரு முக்கியமான இடம் வகிக்கிறது.

சென்னைக்கு அடுத்தபடியாக, மதுரை மாநகரில்தான் திரைப்பட மாளிகைகள் மிகுதியாக உள்ளன. மாவட்டத்திலுள்ள மொத்த திரைப்பட மாளிகைகளில் முக்கால்வாசி மாநகரிலேயே உள்ளன.

மதுரையில் மல்லி குடும்பத்தார் 1930 அளவில் 'சிடி சினிமா' ஆரம்பித்து ஊமைப்படங்கள் (Movies) காட்டினர். படத்திற்கு அருகே ஓர் ஆள் நின்றுகொண்டு, நீண்ட குச்சியைப் படத்தை நோக்கிக் காட்டி, திரைப்படத்துக்குரிய கதையைச் சொல்லுவார்.

1933 அளவில் 'டாக்கி' என்ற பேசும்படம் வந்தது. 'படமே பேசும்! ஆள் கதை சொல்லுவது கிடையாது. இந்த அதிசயத்தை இன்றே சிடி சினிமாவில் பாருங்கள்' என்று தண்டோரா போட்டும் துண்டு பிரசுரம் வழங்கியும் அறிவித்தனர். இப்போது மதுரையில் 1000 பேர்வரை உட்கார்ந்து படம் பார்க்கும் வசதி கொண்ட குளிர்சாதன அரங்குகளும் இருக்கின்றன.

மதுரையிலும் கோடைக்கானலிலும் ஆங்கிலத் திரைப் படங்களும் காட்டப்படுகின்றன.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 தென் மாவட்டங்களிலும் தமிழ்ப் படங்களைக் காட்டுவதற்கு உரிமைபெற்ற பட விநியோகஸ்தர்கள் 30 பேர்வரை மதுரையில் உள்ளனர். இவர்கள் முன்பணமாக வழங்கும் தொகையைப் பொறுத்தே படப்பிடிப்பு சென்னையில் விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

திரைப்படம் எடுக்க சித்திரலேகா என்ற ஸ்டுடியோ மதுரையில் உள்ளது. இதில் எடுக்கப்பட்ட படங்களில் புகழ் பெற்றது 'தாய்நாடு' என்ற படம்.

சென்னை, சேலம், கோவை முதலிய ஸ்டுடியோக்களில் எடுக்கப்பெறும் படங்களிலும் மதுரைமாவட்டத்தில் வெளிப்புறக் காட்சிகள் பிடிக்கப்படுகின்றன. இவ்வகையில் கோடைக்கானலும் வைகைஅணையும், மீனாட்சிகோயிலும், திருமலைநாயக்கர் மகாலும், தேக்கடியும், மஞ்சி விரட்டும், சித்திரைத் திருவிழாவும் பல படங்களில் காட்டப்பட்டிருக்கின்றன.

மதுரை மாவட்டத்தில் தெருக்கூத்து, கிராமிய நாடகங்கள் ஆகியவற்றில் நடித்த பலர் திரைப்படங்களில் நடிகர்களாகவும், பின்பாட்டுப் பாடகர்களாகவும் தமிழ்த் திரையுலகில் புகழ் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்ட நடிகர்கள் பெயரால் இயங்கும் ரசிகர் மன்றங்களும் மதுரையில் செயல்படுகின்றன.

திரைப்படங்களைக் கூர்ந்து கவனித்து அவற்றின் தரத்தை எடைபோடுவதில் வல்லுநர்கள் மதுரையில் உள்ளனர்.

நடிகர் டி. எம். சௌந்தரராஜன், மதுரையைச் சேர்ந்தவர். இராஜராஜசோழன் நாடகப் புகழ் ஹேமலதா, மதுரைக்காரர். கதைவசனகர்த்தா பாலமுருகன் மதுரையில் பிறந்தவர். 'தில்லானா மோகனம்பாள்' புகழ் நாதசுரக்கலைஞர்கள் சேதுராமன், பொன்னுசாமி ஆகியோர் மதுரைவாசிகளே ஆவர்.

11

மருத்துவம்

❋

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக மருத்துவ முறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. பழைய முறைகள் மதுரை மாவட்டத்தில் இன்றும் நிலவுகின்றன.

இயற்கை மருத்துவம்

தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம், மதுரை காந்தி மியூசியம் கட்டிடத்தில் இயங்கி இயற்கை மருத்துவ முறைகளைப் பரப்பிவருகிறது. ஏராளமான நூல்களை இச்சங்கம் வெளியிட்டிருக்கிறது. தேன் முதலிய இயற்கை மருந்துகளையும் இங்கு விற்பனை செய்கிறார்கள்

மனிதனின் உடல் இயல்பையும் மன இயல்பையும் அறிந்த மகான்கள் நோய்க்கான காரணங்களையும் அதைத் தீர்க்கும் வழிமுறைகளையும் தனி வாழ்விலும் பொதுவாழ்விலும் ஆராய்ந்தனர். 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்ற தத்துவத்தைக் கொண்ட இயற்கை மருத்துவமுறையை அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். காந்தியடிகளும் இந்த மருத்துவமுறையில் சில புதுமைகளைப் படைத்துள்ளார். அவர் எழுதிய நூல் தமிழில் 'ஆரோக்கியத் திறவுகோல்' என்ற பெயரில் வெளிவந்திருக்கிறது.

இந்த உண்மைகளை உணர்ந்து தமிழ்நாடு அரசு 1975-ஆம் ஆண்டில் இயற்கை மருத்துவத்தை, மருத்துவ முறைகளில் ஒன்றாக ஏற்றுள்ளது.

குறிப்பிட்ட சில இயற்கை மருத்துவ முறைகளைப் பரப்ப தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக டாக்டர் மு. வரதராசனார் பொறுப்பு வகித்தார். கதர்த்துறைக்கும் பிற காந்திய ஆக்கப்பணிகளுக்கும் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் தம்மை ஆளாக்கிக் கொண்டுள்ள திரு. க. அருணாசலம் செயலராகப் பணியாற்றினார்.

டாக்டர் மு. வ. இயற்கை எய்தியதைத் தொடர்ந்து, திரு. க. அருணாசலம் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கத்தின் நோக்கம் நாட்டு மக்கள் அனைவரையும் தங்களுக்குத் தாங்களே வைத்தியராக மாற்றிவிடத்தக்க மருத்துவப் பயிற்சி கொடுப்பதாகும். இயற்கை மருத்துவ முறைகளில் பயிற்சிபெற விருப்பமுள்ளவர்கள் குறைந்தது நாற்பது அன்பர்கள் சேர்ந்து தங்களின் விருப்பத்தை தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கத்திற்குத் தெரிவித்தால், சங்கம் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யும்.

பயிற்சிபெற விரும்பும் அன்பர்களின் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்ப பயிற்சியின் தன்மை நீண்டதாகவும் குறுகியதாகவும் இருக்கும். வகுப்பில் 1. உடலியல் 2. நோயியல் 3. தத்துவம் 4. மருந்தியல் 5. சிகிச்சை 6. செய்முறைகள் பற்றிய போதனைகளும் செய்முறைச் சாதனைகளும் இடம் பெறும். இந்த வகுப்பு நடக்கும் நாள்களில் காலையிலும் மதியத்திலும் இயற்கை உணவு கொடுப்பதுடன் அதை ஆக்கும் பயிற்சியும் கற்பிக்கப்படும். இந்தப் பயிற்சிகளில் கொடுக்கும் உணவு வகைக்காகவும் வகுப்பு நடத்தவரும் போதகர்களின் போக்குவரத்துச் செலவுகளுக்கு ஏற்படும் தொகைகளையும் பயிற்சியாளர்கள் ஏற்கவேண்டும்.

இச்சங்கத்தார் அருகம்புல்லைப்பற்றி ஒரு குறிப்பு வெளியிட்டுள்ளனர். இந்தப் புல்லைச் சாறுபிழிந்து தண்ணீர் அல்லது இளநீருடன் பருகி பல நோய்களை குணப்படுத்த இயலும் என்கின்றனர். மலச்சிக்கலைப் போக்கலாம். தூக்கமின்மைக்கு இது நல்ல மருந்து. பற்கள் வெண்மையும் உறுதியும் பெறும்.

வாய் துர்நாற்றம் நீங்கும். காலிலுள்ள வெடிப்புகளைப் போக்கும். தாய்ப்பால் இல்லாத தாய்மார்களுக்கு தாய்ப்பால் உண்டாகவும், குறைவாக உள்ளவர்களுக்கு அதை மிகுதியாக்கவும் உதவுகிறது. சளி, நீரிழிவு, உடம்பில் அரிப்பு, சொரி, சிரங்கு ஆகியவற்றை நீக்குகிறது.

நோயின்றி வாழவும், மலச்சிக்கலை நீக்கவும், சளியைப் போக்கவும், எனிமா எடுத்துக் கொள்ளவும் இச்சங்கத்தார் சில முறைகளைப் பரப்பி வருகின்றனர்.

தானியங்கள், மாவுச்சத்துள்ள காய்கறிகள், பருப்பு வகைகள், கொழுப்பு வகைகள், புளிப்பான பழங்கள், இறைச்சி வகைகள், கொட்டைகள், இனிப்புப் பழங்கள், பால் பொருள்கள் ஆகியவற்றுள் ஒன்றோடொன்று பொருந்துவன எவை, பொருந்தாதவை எவை என்ற விளக்கப் படங்களும் அறுசுவை உணவுகளால் ஏற்படும் நோய்கள் இன்னவை என்று அடையாளம் காண உதவும் ஆருதாரக் கண்ணாடியையும் இச்சங்கத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

கருணானந்த முனிவர்

சுருளிமலையில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில கருணானந்தமுனிவர் என்ற பெரியவர் இருந்தார். அவர் சிறந்த சித்தர். இறையருள் பெற்றவர். அவரை ஆபிரகாம்பண்டிதர் சந்தித்தார். இந்தச் சந்திப்பு 1872-ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்றிருக்க வேண்டும்.

'உனக்கு என்ன வேண்டும்?' என்று கருணானந்தமுனிவர் ஆபிரகாம் பண்டிதரைக் கேட்டார்.

'உலகிலுள்ள மக்கள் பல வியாதிகளால் துன்பப்படுகிறார்கள். அந்த நோய்களைத் தீர்க்க மருந்து தருக' என்று ஆபிரகாம் பண்டிதர் வேண்டினார்.

உடனே மூலிகைகள் பற்றிய விவரங்களைக் கருணானந்த முனிவர் அவருக்கு விளக்கினார். அதன் பயனாகவே பல மூலிகைகள் கொண்ட தோட்டத்தை ஆபிரகாம் பண்டிதர் தஞ்சாவூரில் அமைத்தார். கருணானந்தர் லேகியம், கருணானந்தர் மாத்திரைகள் முதலியவற்றைச் செய்தார்; மருத்துவத் துறையில் பல புதிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு தமிழ் மருத்துவத் துறைக்கு அழியாப் புகழ் தேடினார்.

மலைவலம்

பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் போகர் என்ற பேரறிஞர் வாழ்ந்த பகுதியே பழனி ஆண்டவர் கோயில் அமைந்துள்ள மலையாகும். இந்த மலையில் சஞ்சீவி போன்ற மூலிகைகளைப் போகர் பயிரிட்டார். அவற்றின் காற்றுப்பட்டால் பல நோய்கள் குணமாகும். எனவே சித்திரை மாதத்தின் கடைசி ஏழுநாட்களிலும் வைகாசி மாதத்தின் முதல் ஏழு நாட்களிலும் ஆக 14 நாட்களில் நள்ளிரவுக்குப்பின் அதாவது காலை ஒரு மணி முதல் 10 மணி வரையிலும் மாலையில் நான்கு மணிமுதல் இரவு பத்து மணி வரையிலும் நூறுயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் கிரிவீதியில் நடந்து சென்று மலைவலம் வந்து நோய் நீங்கப் பெறுவது கண்கூடு. இந்த வீதியின் இருமருங்கிலும் அழகிய கடம்ப மரங்கள் உள்ளன. இவை இளவேனிற் காலத்தில் நல்ல பருவமடைந்து நடந்து செல்வோருக்கு உடல்நலம் ஊட்டு கின்றன.

சித்தமருத்துவம்

பழநிமலைப்பகுதி, சித்தர்கள் வாழ்ந்து சிறப்புப்பெற்றது. இங்கு இயற்கையாக மலையில் கிடைக்கும் செடிகளையும் அவற்றின் வேர்களையும் இலைகளையும் ஆய்ந்த சித்தர்கள் பல வகையான மருந்துகள் செய்தனர். அவர்தம் மருத்துவம் 'சித்த மருத்துவம்' என்ற பெயரால் இன்றும் வழங்கிவருகிறது. ஏனைய மருத்துவ முறைகளில் நீங்காத நோய்களை இது நீக்குகிறது. இந்த மருத்துவ முறைக்கு ஒரு கேந்திரமான இடம் பழனி. பழனியாண்டவரின் விக்கிரகம் நவபாஷாணக் (ஒன்பது வகை யான மருந்துச்சரக்குகளின்) கலவை என்பர். அவருக்குச் சாத்தப்பட்ட பிறகு சந்தனம், தேன், பால், இளநீர் ஆகிய அபிடேகப் பொருள்கள் மருந்தாகப் பயன்படுகின்றன.

பழநியில் ஏராளமான சித்த மருத்துவர்கள் உள்ளனர். அவர்கள் கீழ்க்கண்ட மருந்துகளைச் செய்கின்றனர்

கருணைக்கிழங்கு லேகியம்
மூலமேல் பூச்சுக் களிம்பு
நெல்லிக்காய் லேகியம்
பவள பற்பம்
கூழ்ப்பாண்ட லேகியம்
அயத் திராவகம்

சிட்டுக்குருவி லேகியம்
பெருங்காய லேகியம்
இஞ்சி லேகியம்
வில்வாதி லேகியம்
ஆரோக்கிய லேகியம்
சந்தனாதித் தைலம்
பொன்னாங்காணித் தைலம்
தலைவலித் தைலம்
சபரிமலை சஞ்சீவித் தைலம்
விரைவாத எண்ணெய்.

நாயக்கர் ஆட்சியில் அழகர் கோயிலில் சித்தமருத்துவக் கல்லூரி ஒன்று இருந்து வந்தது.

சித்த மருத்துவ நூல்கள்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலார் சித்த மருத்துவ நிலையங்களை நடத்திவருகின்றனர்.

சித்தமருத்துவ நூல்களை வெளியிட இக்கோயிலின் அறங் காவலர் குழுவின் தலைவராக இருந்த திரு மனோகரனின் ஆர்வத் தாலும் அப்போது (1974) தமிழ்நாடு அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த பேராசிரியர் அன்பழகனின் ஒத்துழைப் பாலும் பழனிக்கோயிலிலிருந்து வழங்கப் பெற்ற இரண்டு லட்சம் ரூபாய் நிதி உதவியுடன் சென்னை அண்ணா நகரிலுள்ள பேரறிஞர் அண்ணா சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட சித்த மருத்துவ நூல்கள் அச்சிடப் பெற்றிருக்கின்றன

சித்த மருத்துவ ஆராய்ச்சி

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையின் ஒரு பிரிவாக சித்த மருத்துவ ஆராய்ச்சியும் சித்தர் நூலாராய்ச்சி யும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொறுப்புக்களை, ஒய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியரும் தமிழ் மருத்துவப் புலமை மிக்காருமான டாக்டர் ந. சேது ரகுநாதன் அவர்கள் செய்து வருகிறார்கள்.

1978-இல் ஏற்பட்ட இப்பிரிவில்

1. உயிர்காக்கும் பயன் மிக்க கை கண்ட மருத்துவம் 300 (ஏட்டுச் சுவடியிலிருந்து எழுதப் பெறுகிறது)

2 யூகி முனிவர் பிடிவாதம் 1000

மருத்துவம், பொன்மாற்றுக் கலை இவற்றின் கைபாகம் செய்பாகம் முற்றும்தெளிவாக உரையுடன்வெளியிடப் பெறும் இது, இதுவரை வெளிவராத நூல்

3. யூகி முனிவர் வாதகாண்டம் 1,000

4. யூகி முனிவர் வாதகாண்டம் 2,000

5. யூகி முனிவர் உலா 1,000

ஆகிய நூல்கள் உரையுடன் வெளியிடப் பெறும்.

பார்வை இழந்தோர்க்கு மறு வாழ்வு

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கண்பார்வை இழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க தமிழ்நாட்டில் பெரிய அளவில் முயற்சி தொடங்கப் பெற்றுத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத்திட்டத்தின் நெறியாளராக இருப்பவர் புகழ் பெற்ற கண் மருத்துவரும் சமுதாயத் தொண்டருமான டாக்டர் ஜி. வேங்கடசாமி ஆவார். இவருடைய மருத்துவப் புலமையாலும் பண்பாலும் மதுரை மாவட்டத்தில் கண் மருத்துவத் துறையில் பல முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப் பெற்று வருகின்றன.

மருத்துவ மனைகள்

மதுரை மாநகரில் கிறிஸ்துவ மிசன் மருத்துவமனை எழுபது ஆண்டுகளாக மிகச் சிறப்பாகவும் பெரிய அளவிலும் நடைபெற்று வருகிறது ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் போன்ற பலநகர்களில் கிறிஸ்துவர்கள் மருத்துவ மனைகளை நன்முறையில் நடத்தி வருகிறார்கள்.

காந்தி கிராமத்தில் உள்ள மருத்துவமனை தொடக்கத்தில் அமெரிக்க ராக்பெல்லர் நிறுவனத்தின் வாயிலாக ஏராளமான கருவிகளைப் பெற்றது. மாவட்டத்தில் பல நகரங்களில் அரசினர் மருத்துவ மனைகள் உள்ளன. இவற்றுள் தலைமையானது மதுரை எர்ஸ்சின் மருத்துவமனை. 1978–ஆம் ஆண்டில் இதன் பெயர் இராஜாஜி மருத்துவமனை என்று மாற்றப் பெற்றுள்ளது.

சென்னையிலுள்ள பொது மருத்துவமனைக்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில் இதுவே பெரிய மருத்துவ மனையாகும், மதுரைப் புறநகர்ப் பகுதியிலுள்ள ஆஸ்டின்பட்டியில் நுரையீரல் மருத்துவ

மனையை அரசாங்கத்தார் நடத்தி வருகின்றனர். மனநோய் மருத்துவ மனை ஒன்றையும் தமிழ்நாடு அரசாங்கத்தார் மதுரையில் நடத்தி வருகின்றனர்.

மருத்துவக் கல்வி :
மதுரை மருத்துவக் கல்லூரி

இது 1954-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசினரால் தொடங்கப் பெற்றது. இங்கு ஏறத்தாழ 350 ஆசிரியர்களும் 2,200 மாணவ மாணவியர்களும் இருக்கின்றனர் எம். பி. பி. எஸ் பட்டப்படிப்பும் அதற்குமேல் சான்றிதழ் பெறவும் உயர் பட்டங்கள் பெறவும் பல வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. நூலகத்தில் 25,000 நூல்கள் உள்ளன.

தென் மாவட்டங்கள் எல்லாவற்றிலிருந்தும் நோயாளிகள் மதுரை மருத்துவ மனைக்கு வருவதால் இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள், நோயாளிகளுக்கு மருத்துவம் செய்து அனுபவ வாயிலாகப் பலவகை நோய்களை ஆராய்ந்து படிப்பதற்கு இங்கு வாய்ப்பு நிலவுகிறது

காந்தி கிராம் கிராமப்புறச் சுகாதார மற்றும் குடும்பநலத் திட்ட கல்வி நிலையம்

இது காந்தி கிராமத்தை அடுத்த அம்பாத்துறையில் 1964-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. 22 ஆசிரியர்களும் 37 மாணவர்களும் உள்ளனர். 7,000 நூல்கள் கொண்ட நூலகம் இயங்குகிறது.

ஏதாவது ஒரு பட்டம் பெற்றவர்கள் (1) உடல் நலக் கல்வி அல்லது (2) சத்துணவு மற்றும் பொது மருத்துவக் கல்வி பயின்று சான்றிதழ் பெற இங்கு வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. இங்கு பயின்றவர்கள் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றும் வேலைகளில் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர்.

12
விடுதலைப் போர்

இந்திய விடுதலைப் போரில் மதுரை பெரும்பங்கு பெற்றது

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தனிப் பெருந்தலைவராக விளங்கியவர் பாலகங்காதர திலகர். அவர் மதுரைக்கு வந்திருந்தார். டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரின் ஹோம்ரூல் (உள்நாட்டு மக்களின் ஆட்சியே நடைபெற வேண்டும்) என்ற இயக்கத்துக்கும் மதுரை மாநகரில் ஆதரவு இருந்தது.

மகாத்மாவும் மதுரையும்

இந்திய அரசியலில் மகாத்மா காந்தி கால்கொண்டது முதல் அவருக்கும் மதுரைக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது விரிவான ஆடைகளைக் களைந்து அடிகள் அரை நிர்வாண பக்கிரிக் கோலம் கொண்டது மதுரைமாநகரில்தான். மதுரை மாவட்டத்து மக்களின் ஏழ்மை அவர் மனத்தை அந்த அளவிற்கு உருக்கிற்று இந்நிகழ்ச்சி 1921–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் காந்தியடிகள் கருமுத்து தியாகராசர் இல்லத்தில் தங்கியிருந்த போது நடைபெற்றது.

> "அந்நிய நாட்டுத் துணியை மக்கள் கொளுத்தி விட்டனர். ஆனால் அதற்குப் பதிலாகக் கதர்த் துணிவாங்கப் பணம்இல்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள். இனி அவர்கள் கோவணத்துணியுடன் மட்டும் வாழ்ந்து திருப்தி

அடையட்டும் அவர்களுக்கு வழி காட்டியாக நானே இன்று முதல் என்னுடைய வேட்டியையும் தொப்பியையும் உள் சட்டையையும் கூடக் கைவிட்டு விடுகிறேன். ஒரு சிறு துணிமட்டுமே இனி என் ஆடையாக இருக்கும். தேவையான போது உடலைக் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, ஒரு துண்டு உபயோகிப்பேன்''

என்று காந்தியடிகள் மதுரையில்தான் அறிவித்தார்.

காந்தியடிகளின் நம்பிக்கைக்கு உரிய சீடரும் காந்தியப் பொருளாதார கொள்கைகளை அவருடன் விவாதித்துத் தெளிவு பெற்று அவற்றுக்கு விளக்கம் கொடுத்த மேதையுமான திரு. ஜே. சி குமரப்பா மதுரைக்காரர். இவருடைய முழுப்பெயர் (செல்லத்துரை என்ற) ஜோசப் கொர்னிலியஸ் குமரப்பா (1892-1970) இவர் மதுரைக் கீழவாசல் பிராடஸ்டண்டுதேவாலயத்தைச் சேர்ந்த பாதிரியார் ஜான் கொர்னிலியஸ் என்பவரின் பேரன். திரு. குமரப்பா. அகில பாரத கிராமக்கைத்தொழில் சங்கத்தின் நிர்வாகியாகவும், ''யங் இந்தியா'' வார இதழின் ஆசிரியராகவும் இருந்தார். கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இவர் ஆங்கிலமொழியில் நிகரற்ற புலவராக விளங்கினர் காந்தியடிகளுடன் தொடர்பு கொண்ட பிறகு ஆங்கிலத்தைப் போல இந்தியிலும் இவர் நாவன்மை பெற்று, நினைத்த மாத்திரத்தில் இந்தியாவெங்கும் அனல் கக்கச் செய்து வந்தார்

இவருடைய சகோதரர்களும் குறிப்பிடத் தக்கவர்கள் ❋ திரு. பரதன் குமரப்பா (1896 1957) சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்தார். மேலை நாடுகளில் பெரும் பட்டங்களைப் பெற்ற இவர் காந்தியடிகளின் கட்டுரைகளைத் தொகுத்துத் தனித்தனி நூல்களாக உருவாக்கினர்.

குறிப்பிடத் தக்க மற்றொரு மதுரைக்காரர் எழுத்தாற்றலால் இந்தியாவெங்கும் தேசிய இயக்கத்திற்கு உறு துணையாக இருந்த பாரிஸ்டர் திரு ஜார்ஜ் ஜோசப் ஆவார். இவர், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' முதலிய பல நாளிதழ்களின் ஆசிரியராக இருந்தவர்.

❋ ஜே சி. குமரப்பாவின் அண்ணன் டாக்டர் ஜே. எம். குமரப்பா (1886—1957) நாடாளுமன்ற உறுப்பினராகவும் டாட்டா சமூக இயல் கல்லூரியில் பேராசியராகவும் இருந்தார்.

முக்கியமான மற்றொருவர் ஹாஜி முகம்மது மௌலானா சாயபு.

ஆலயப் பிரவேசம்

தமிழ் நாட்டுக் கோயில் ஒன்றில் முதல் தடவையாக அரிசனங்கள் சென்று வழிபட்ட பெருமை மதுரையைச் சாரும். இவ்வகையில் பாராட்டுக்குரியவர் திரு. வைத்தியநாத ஐயர். அரசினர் அவருக்கு ஒருமுறை அபராதம் விதித்தனர். அவர் அந்தத் தொகையைக் கட்டவில்லை. எனவே அதிகாரிகள் வைத்தியநாத ஐயருடைய காரை ஏலம் போட்டனர். ஒருவர் அதை ஏலத்தில் எடுத்தார். மதுரை மக்கள் கொதித்து எழுந்து ஏலம் எடுத்தவரிடமிருந்து காரைப் பறித்து வைத்தியநாத ஐயரிடம் ஒப்படைத்தனர்!

தியாகிகள்

விடுதலை இயக்கம் நடைபெற்ற காலத்தில் மதுரையிலே பெருஞ் செல்வராக விளங்கியவர், திரு. ந. ம. ரா. சுப்பராமன். இவருடைய தியாகம் மிகப் பெரிது. இவரைப் பற்றி ஏற்கெனவே இந்நூலில் குறிப்பிட்டிருக்கிறோம்.

சோழவந்தான் முனகால எஸ். பட்டாபிராமய்யா (1885–1979) 1919–ஆம் ஆண்டிலேயே காந்தியடிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் 1942–இல் இவர் மதுரை மாவட்டக் கழகத்தின் தலைவராக இருந்தார். அந்தக் கழகத்தின் அலுவலர்களையும் பள்ளி ஆசிரியர்களையும் சட்ட மறுப்பில் கலந்து கொள்ளும்படி அறிக்கை வெளியிட்டார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்க மாவட்டக் கழகத்திற்கு ஒரு நாள் விடுமுறை அறிவித்து அலுவலகத்தையும் பூட்டிவிட்டார். மாவட்டக் கலெக்டர்கேட்டும் அலுவலகச் சாவியைக் கொடுக்க மறுத்தார். இந்தியாவில் வேறு எந்த மாவட்டக் கழகத் தலைவரும் இவ்வாறு ஆங்கிலேய ஆட்சியை எதிர்க்கவில்லை.

'மட்டப்பாறைச் சிங்கம்' என்று பெயர் பெற்ற வெங்கட்டராம ஐயர் (1886– 1957) வீரக்கனல் பொறியும் பேச்சுக்களாலும் கள்ளுக்கடை மறியல், சீமைத்துணிக்கடை மறியல், உப்புச்சத்தியாக்கிரகம் ஆகிய இயக்கங்களில் கொண்ட பங்காலும் புகழ் பெற்றவர். இவர் பெயரைக் கேட்டாலே

ஆங்கிலேய கலெக்டர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். இவர் மீது அரசினர் தொடர்ந்த கொள்ளை வழக்கு இம் மாவட்டத்தில் தேசிய இயக்கத்தை பரப்ப, வித்தாக அமைந்தது. இவரோடு சேர்த்துக் குறிப்பிடத்தக்க தேச பக்தர் சோழவந்தான் திரு. தி. வெங்கிடசாமி ஐயா (1901-1936).

மட்டப்பாறை ஐயரின் வலதுகரமாக விளங்கிய எம். சுப்பிரமணிய முதலியார் தேசிய இயக்சத்தில் முன்னணி வீரராக விளங்கினர்

சோழவந்தான் எம். சின்னச்சாமிப்பிள்ளை (பி 1902) சிறந்த தியாகி. தமிழறிஞர். பாரதிபாடல்களைமனனம்செய்து பரப்பியவர்.

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் அரசியல்வாழ்க்கைக்குத் தளமாக இருந்தது, மதுரை மாநகரே ஆகும்.

மதுரை டாக்டர் பிச்சமுத்து அம்மா, திரு. என். ஆர். தியாகராசன். திரு. கல்லுப்பட்டி குருசாமி, டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரன் முதலிய நூற்றுக்கணக்கான பேர் மதுரை மாவட்டத்தின் தியாக வரலாற்றில் இடம் பெறுகின்றனர். 1930 முதல் 1932 வரை விருதுநகரில் நடைபெற்ற கிளர்ச்சிகளில் கைதானவர் பலர், மதுரை மாவட்டத்தினர் என்பதும் மதுரை மாநகரை மையமாக வைத்தே தலைவர் காமராசரின் பெருமித மான அரசியல் வாழ்க்கை அமைந்தது என்பதும் வரலாற்று உண்மைகள்.

சுதந்தரப் போராட்டத்தில் மதுரை திண்டுக்கல், தேனி, கம்பம், பெரியகுளம், வத்தலக்குண்டு, திருமங்கலம் சோழவந்தான் ஆகிய ஊர்கள் சிறப்பிடம் வகித்தன.

வெள்ளையனே வெளியேறு! இயக்கம்

1942-ஆம் ஆண்டு இயக்கத்தின்போது மதுரை, திண்டுக்கல், பழனி நகராண்மைக் கழகங்கள் கலைக்கப் பெற்றன. சில இடங்களில் அரசுக்கு உடைமையான பொருள்கள் தீக்கிரையாக்கப் பட்டன.

திருப்பரங்குன்றம் மாநாடு

1945-ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குத்

திருச்செங்கோடு தொகுதியிலிருந்து உறுப்பினராக இராஜாஜி தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். அந்தத் தேர்தல் செல்லாது என்று திருப்பரங்குன்றம் மாநாடு முடிவு செய்தது. அப்போது "கோடு தாழ்ந்தது குன்றம் உயர்ந்தது" என்று அறிஞர் அண்ணாதுரை எழுதினார். 'குன்றம் தாழ்ந்தது கோடு உயர்ந்தது' என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி மறுப்புக் கட்டுரை எழுதினார். திருப்பரங்குன்றம் மாநாட்டைத் தொடர்ந்து காமராசரும் இராஜாஜியும் தமிழ் நாட்டு அரசியலில் இருவேறுதுருவங்களாயினர்.

ஆக்கப் பணிகள்

காந்தியடிகளின் ஆக்கப்பணிகள் மதுரை மாவட்டத்தில் வேரூன்றியுள்ளன. இப்பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தும் நிறுவனங்களைக் குறிப்பிடுவோம்.

காந்தி நிகேதன் ஆசிரமம், தே. கல்லுப்பட்டி

நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் நாட்டு நலத்தில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அடிக்கடி கூடித் தங்கள் திட்டங்களை வகுத்து வந்தனர். அதன் தொடர்பாக 1940-ஆம் ஆண்டில், கல்லுப்பட்டியைச் சேர்ந்த கிராமங்களில், நிர்மாணத்திட்ட வேலைகள் செயல்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு திரு. கோ. வேங்கடாசலபதி ஆரம்பித்த அமைப்புத்தான் காந்தி நிகேதன் ஆசிரமம். இதை நிறுவ, மதுரை திரு வைத்யநாதய்யர் அவர்களும் திரு. ந ம ரா. சுப்பராமன் அவர்களும் பேருதவியாக இருந்தனர்.

கல்லுப்பட்டி ஆசிரமம், அதைச் சுற்றியுள்ள கிராமங்களுடன் தொடர்புகொண்டு ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. ஆசிரமத்தில் உள்ள பயிற்சியாளர்கள் கிராமங்களுக்கு அடிக்கடி சென்று தங்களாலியன்ற பணி செய்கின்றனர். இதையொட்டி காந்திநிகேதன் ஆசிரமம், கல்லுப்பட்டிவட்டாரம் முழுவதையுமே 13 பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் கிராம முழு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

காந்திகிராம நிறுவனங்கள்

காந்தியடிகளின் ஆக்கப்பணிகள் செயல் படுத்தப்படும் மற்றொரு இடம் காந்திகிராமம். இது, மாபெரும் கல்வி நிலைய

மாகவும் கிராமப்புறப் பல்கலைக் கழகமாகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த நிறுவனத்தைப் பற்றி வேறொரு இடத்தில் குறிப்பிடுவோம்.

சாந்தி நிலையம்

இது பழனி வட்டம் சத்திரப்பட்டியில் ஆதரவு இல்லாத ஏழைப் பெண் குழந்தைகளுக்கு கல்வியும் தொழிலும் கற்பித்து வருகிறது.

காந்தி சேவா சங்கம்

இறை உணர்வைத் தூண்டி, ஏற்றத் தாழ்வில்லாத சமுதாய அமைப்பு உருவாகப் பணிபுரிய வேண்டும் என்ற இலட்சியத்துடன் இச்சங்கம் 1958–இல் பழனிவட்டம் சத்திரப்பட்டியில் தொடங்கப் பெற்றது. 20 குடும்பங்கள் கொண்ட அன்புச் சமுதாயமாக வளர்ச்சியடைந்து அமைதியாகச் செயலாற்றி வருகிறது. அருள் பாலர் பள்ளி, திருவள்ளுவர் நூலகம், சர்வோதயா சோப்புத் தொழில் நிறுவனம் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

சர்வோதய ஆசிரமம்

காந்தி மகானின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட தவத்திரு டாக்டர் ஆர். ஆர். கெய்த்தான் என்ற அமெரிக்கப் பாதிரியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நினைவாக அன்னாரைத் தலைவராகக் கொண்டு சர்வோதய ஆசிரமம் 1956-இல் வத்தலக்குண்டுக்கு அருகேயுள்ள கணவாய்ப்பட்டியில் தொடங்கப் பெற்றது. வத்தலக்குண்டு திரு. சுலைமான் என்பவர் பூமிதானமாக வழங்கிய நிலத்தில் உள்ளூர் மக்கள் சுற்றுப்புறத்திலுள்ள மலைப் பகுதிகளுக்குச் சென்று, ஆசிரமக் கட்டிடத்தின் கூரைக்கும், தளத்திற்கும் மதில் சுவர்களுக்கும் வேண்டிய பொருள்களைக் கொண்டுவந்து எவ்விதக் கூலியும் பெறுமல் கட்டி முடித்தனர்.

தமிழ்நாடு பூதான இயக்கத் தலைமை அலுவலகமான தமிழ்நாடு சர்வோதய மண்டலம் அக்காலத்தில் வத்தலக்குண்டில் தான் இருந்தது. எனவே இங்கு அனைத்திந்திய சர்வோதயத் தலைவர்கள் அனைவரும் வருகை புரிந்துள்ளனர். 'தமிழ்நாடு கிராமராஜ்ய நிர்மாண சங்கம்' என்ற அமைப்பு இங்கு உருவாக்கப் பட்டது. சர்வோதய சங்க கதர் விற்பனை நிலையமும், 6 ஊர்களில்

கிராமதான் சர்வோதய கூட்டுறவுச் சங்கங்களும் 30 சிற்றூர்களில் சர்வோதய கிராம சபைகளும் அமைக்கப்பட்டன. ஆசிரமம், இவ்வட்டாரத்தில் பல ஊர்களில் பாலர் பள்ளிகள், மாதர் சங்கங்கள், இளைஞர் மன்றங்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது.

சர்வோதயத் தலைவர், இரண்டாவது மகாத்மா திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் 1958-இல் அடிக்கல் நாட்டி உருவாகிய சர்வோதய விவசாயத் தொழிற்கூடத்தில் (1978 ஜூலை வரை) 158 பையன்களும் 340 பெண்களும் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் பல இடங்களில் ஆசிரியர்களாகவும் பாலசேவிகைகளாகவும் பணிபுரிந்து வருகின்றனர்.

சுகாதார நிலையம் ஒன்றும் ஆசிரமத்தில் செயல்பட்டு வருகிறது. சர்வோதய ஊழியர்கட்கு, இந்த ஆசிரமத்தில் மறு பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. திரு கெய்த்தான் அவர்களுடைய கருத்துக்கு இணங்க, திரு. அவையன், செயலாளராகப் பொறுப்பேற்று ஆசிரமத்துப் பணிகளைச் செய்து வருகிறார்.

பூமிதானம்

வினோபா அடிகள் தமிழ்நாட்டில் 1956 மே முதல் 1957 ஏப்ரல் 16 வரை பாதயாத்திரை செய்ததன் பலனாக மதுரை மாவட்டத்தில் 3613 ஏக்கர் நிலம பூமிதானமாகக் கிடைத்தது.

தமிழ் நாடு சர்வோதய மண்டலும் பூதானபோர்டும் இந்த நிலங்களைப்பயிர்செய்ய "சர்வசேவாப் பண்ணை"களை 1977 அளவில் சர்வோதயத்தில் நம்பிக்கை கொண்டுள்ள வெளிநாட்டு அன்பர்களின் பணஉதவியைக் கொண்டு அமைத்தனர்.

இத்திட்டத்தின்படி பூமிதான நிலங்களில் ஒரே இடத்தில் மொத்தமாக 10 ஏக்கருக்கு மேலாக உள்ள நிலங்களை பண்படுத்தி கிணறுகள் வெட்டியும் வாய்க்கால் அமைத்தும், இறைவை இயந்திரங்கள் பொருத்தியும் விவசாயத்திற்குக் கொண்டுவரப் பட்டன. இந்த வேலைகளுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறார்கள். அவர்களுக்கு நடைமுறைக் கூலி கொடுக்கப்படுகிறது. நிலத்தில் முதலீடு செய்த தொகைக்காக, விவசாய வருமானத்தில் செலவுபோக மீதமுள்ள தொகை வரவு வைக்கப்படுகிறது. இதன்படி முதலீடு செய்த தொகை சுமார் ஐந்து ஆண்டுகளில் திரும்ப எடுக்கப்பட்டு

விடும். பின்னர், இந்த நிலங்கள் கிணறுடனும், நல்ல பண்பட்டுள்ள நிலமாகவும் நல்ல நிலையில், முன்பிருந்த நிலத்தில் வேலைசெய்த ஏழை நிலமற்றோர்க்குத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன.

இப்பணியில் பூமிதானபோர்டு தலைவர் திரு. என் ஆர். பூபதி, தமிழ்நாடு சர்வோதய மண்டல் தலைவர் திரு. எஸ். ஜெகந்நாதன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

உச்சப்பட்டி
எத்திலோடு
நூத்துலாபுரம்
சங்கரரெட்டி கோட்டை
செல்லப்பநாயக்கன்பட்டி
சின்னமநாயக்கன்பேட்டை
காந்திகிராமம்
பேரையூர்
சின்னப்பூலாம்பட்டி
வேப்படைப்பு
ஆட்டுக்குளம்
கேதையிருப்பு

என்ற ஊர்களில் சர்வசேவாப் பண்ணைகள் இயங்குகின்றன.

கிராமதானம்

கிராமதான இயக்கத்திற்கும் மதுரை மாவட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. விநோபாஜி முதன் முதலாக கிராமதானத்தை ஏற்படுத்தியது இம்மாவட்டத்தில்தான். பூமிதான கிராமதான யாத்திரைக்காக அவர் அதிக நாட்கள் கழித்ததும் மதுரை மாவட்டத்தில்தான்.

கிராமதான இயக்கம் மதுரை மாவட்டத்தில் குறிப்பாக நத்தம், சாணார்பட்டி பகுதியில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

விநோபாஜியின் யாத்திரையின்போது கிராமதானங்கள் பெறுவதில் மிகுதியான கவனம் செலுத்தப்பட்டது. அப்போது மதுரை மாவட்டத்தில் 250 கிராமதானங்கள் அறிவிக்கப்பட்டன. தமிழ் நாட்டில் மொத்தம் 22,030 கிராமதானப் பத்திரங்கள்

பெறப்பட்டதில் மதுரை மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற பத்திரங்களின் எண்ணிக்கை 2,647. மதுரை மாவட்டம். சாணர்பட்டி வட்டாரத்தில் உள்ள (அனைத்து) 161 கிராமங்களுமே கிராமதானமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதைப்போன்றே நத்தம் வட்டாரத்தில் 130 கிராமங்கள் கிராமதானமாக அறிவிக்கப் பட்டிருக்கின்றன. இவை தவிர மதுரை மாவட்டத்தில் பல இடங் களில் 18 கிராமங்கள் தானமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போது தமிழ் நாட்டில் உள்ள கிராமதான கிராமங்களில் சிலவற்றில் கிராம முழுவளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற அரசியல் கட்சிகள்

ஜஸ்டிஸ் கட்சி, மதுரை மாவட்டத்தில் சர் பி. டி. ராஜன், பட்டிவீரன்பட்டி திரு. சவுந்தர பாண்டியன், சில குறு நில மன்னர்கள் ஆகியோருடைய தனிப்பட்ட செல்வாக்கை மட்டும் நம்பியிருந்தது

திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் திருச்சிக்குத் தெற்கே பரவ, பல ஆண்டுகள் ஆயிற்று. மதுரை மாவட்டத்தில் தி. மு. க. ஏற்றம்பெறக் காரணமாக இருந்தவர் இப்போது மதுரை மேயராக இருக்கும் திரு. முத்து ஆவார். அவருடைய நண்பர் பலரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

அனைத்து இந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகமும் திரு. முத்துவின் செல்வாக்கைப் பயன்படுத்தி, மதுரை மாவட்டத் தில் விரைவாக ஆதரவு பெற்றிருக்கிறது. 1974–ஆம் ஆண்டில் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. க. பெற்ற வெற்றி, தமிழ்நாட்டு அரசியலில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கிற்று. 1963-இல் திருவண்ணாமலைத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வியும் தி. மு. க. வுக்குக்கிடைத்த வெற்றியும் அந்தக் கட்சி, 1967-இல் அமைச்சரவை அமைக்க அடிகோலியதுபோல, திண்டுக்கல்லில் 1947-இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் தி. மு க. வுக்கு ஏற்பட்ட தோல்வி 1977-இல் அ. இ. அ. தி. மு க. அரசு அமைய அடிகோலிற்று.

தொழிலாளர்கள் மிகுதியாக வாழும் மதுரை, திண்டுக்கல் நகரங்களின் சில பகுதிகளில் இரு கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளுக்கும்

பிடிப்பு இருக்கிறது. இவ்வாறே முக்குலத்தோர் மிகுதியாக உள்ள தொகுதிகளில் முன்னேற்றக் கட்சிக்கு ஆதரவு இருந்துவருகிறது.

தலைவர் காமராசரைப் பின்பற்றி திரு. எம். ஜி. இராமச்சந்திரன், மதுரை மாநகரையே தளமாகக் கொண்டு தம் கட்சியைப் பரப்பி 1977இலும் 1980 இலும் பொதுத்தேர்தல்களில் பெரு வெற்றி பெற்று, இருதடவைகளிலும் தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

மதுரை திரு. ப. நெடுமாறனைத் தலைவராகக்கொண்டு காமராஜ் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி 1980-இல் உருவாகி, சட்டமன்றத்தில் சில இடங்களைப் பெற்றுள்ளது.

13

கல்வி நிலை

மதுரை தோன்றிய நாள் முதல் கல்வியை வளர்த்து வந்திருக்கிறது என்பது தமிழ்ச் சங்கங்களும் சமணர் சங்கங்களும் இருந்ததாலும் கோயிலிலேயே சங்கப் புலவர்களுடைய திருவுருவங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருப்பதாலும் அறியப்படும்.

தொன்றுதொட்டு இங்கு அறிஞர்கள் வாழ்ந்து வந்து மக்கள்–அரசு ஆகிய இருதிறத்தாரின் பாராட்டையும் பரிசிலையும் பெற்று வந்திருக்கின்றனர். வெளி நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் இங்கு வந்து சென்றிருக்கின்றனர்.

எனினும், கல்வி நிலையங்கள் பல நூற்றாண்டுகளாக மதுரை மாவட்டத்தில் செயல்பட்ட விவரங்களோ வரலாறோ நமக்கு கிடைக்கவில்லை. இன்றைய நிலையை மட்டும் கூறுவோம்.

தொடக்கக் கல்வி

சில ஆயிரம் தொடக்கப் பள்ளிகள் இம் மாவட்டத்தில் தனியாராலும், மாவட்டக் கழகத்தாராலும் நகராண்மைக் கழகங்களாலும், ஊராட்சிஒன்றியங்களாலும் தொடங்கப்பெற்று அரசு ஆதரவுடன் இப்போது இயங்கிவருகின்றன.

உயர் நிலைப்பள்ளிகள்

உயர் நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. எனினும் மதுரையிலும் திண்டுக்கல்லிலும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் – அவற்றிலும் குறிப்பாக கத்தோலிக்கர் நடத்தும் பள்ளிகளும் மதுரை சௌராஷ்டிர உயர்நிலைப் பள்ளியும் தியாகராசர் நன்முறை உயர்நிலைப் பள்ளியும் ஓ. சி. பி. எம். உயர்நிலைப் பள்ளியும் புகழ் பெற்றுள்ளன.

மேல் நிலைப்பள்ளிகள்

பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்குப் பதிலாக ஈராண்டுக் கல்வித் திட்டம் 1978-இல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டதை யொட்டி +2 என்ற படிப்பு உள்ள மேல் நிலைப்பள்ளிகள் நூறுக்கும் அதிகமாக மதுரை மாவட்டத்தில் தொடங்கப பெற்றுள்ளன.

புது தில்லியிலுள்ள மத்திய கல்விக் கழகத்துத் தேர்வு களுக்காக மாணவர்களை உருவாக்கும் மும்மொழிப் பள்ளிகள் மதுரை, திண்டுக்கல், கோடைக்கானல் நகர்களில் இயங்குகின்றன

தொழிற் படிப்புக்கான பாலிடெக்னிக்குகள்

மதுரையில் தமிழக அரசு ஐ. டி. ஐ என்ற தொழிற் பயிற்சிப் பள்ளிகளை மதுரையிலும் திண்டுக்கல்லிலும் நடத்தி வருகிறது. பொறியியல் தொழில் கல்வியின் வெவ்வேறு பிரிவு களில் மூன்றாண்டுகளுக்குப் பயின்று டிப்ளமா (சான்றிதழ்) பெறும் வாய்ப்பு வழங்கும் பாலிடெக்னிக்குகளை ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியே நடத்திவருகிறது. (ஆடவர்க்கான) தமிழ்நாடு பாலிடெக்னிக்குடன் இணைந்த இளநிலைத் தொழில் நுணுக்கப் பள்ளியும் தனியார் துறையில் பசுமலையில் தொழில் பழகும் பள்ளியும் மற்றும் லயோலா டெக்னிகல் இன்ஸ்டிட்டியூட்டும் இயங்கிவருகின்றன.

உயர் கல்வி

உயர் கல்வியில் மதுரை மாவட்டம் பெரிய அளவில் முன்னேறியிருக்கிறது. முதற்கண், பல்கலைக் கழகத்தைப் பற்றி விரிவாகக் கூறுவோம். அதன் பிறகு அதைச் சேர்ந்த கல்லூரிகள் பலவற்றையும் பற்றித் தனித் தனியே சில விவரங்களைத் தெரிவிப்போம்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

1926-ஆம் ஆண்டில் விசாகபட்டினம் வால்ட்டேரில் ஆந்திரப் பல்கலைக் கழகம் தொடங்கப் பெற்றது. அப்போதே, தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றைத் தமிழ் நாட்டில் தொடங்க வேண்டும் அது மதுரையில் அமைய வேண்டும் என்ற கிளர்ச்சி பிறந்தது. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் மதுரையில் பல்கலைக் கழகம் காண விரும்பி (இப்போது மதுரைக் கல்லூரி இருக்கும்) இடங்களை 1917-ஆம் ஆண்டு அளவில் விலைக்கு வாங்கியிருந்தார். ஆனால் பல்வேறு சூழ்நிலைகளும் சிக்கல்களும் உருவாயின. எனவே, அவர் பல்கலைக் கழகத்தை இன்றைய அண்ணாமலை நகரில் நிறுவினார். தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப் பெற்ற சர் பி. டி ராசன் குழுவும் அவ்வாறு தான் பரிந்துரைத்தது.

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு, மதுரையில் உயர் கல்விக்கு ஒரு தேக்கம் ஏற்பட்டது. 1947-இல் நாடு சுதந்தரம் பெற்றது அதன் விளைவாக, கல்வித் துறையிலும் நாடெங்கும் எழுச்சி ஏற்பட்டது. கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் கலைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழில் நிர்வாகத் துறைக் கல்லூரி ஆகியவற்றை அடுத்தடுத்தும் மிகச் சிறந்த முறையிலும் பெருஞ் செலவிலும் அமைத்து, மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப் படுவதற்கான அடித்தளத்தை உறுதியாக அமைத்தார். இதைத் தொடர்ந்து மதுரையில் பல்கலைக்கழகம் அமைக்கும் யோசனை இடையிடையே அரசு வட்டாரங்களில் இருந்துவந்தது. திரு.கருமுத்து தியாகராசச் செட்டியார் மதுரையில் பல்கலைக் கழகம் நிறுவ, பெரும்பொருள் வழங்கவும் தயாராக இருந்தார். அது குறித்த பேச்சுக்களும் நடந்தன ஆயினும் அவை, இனிது நிறைவேறாததால் மதுரையில் பல்கலைக் கழகம் ஏற்படுவது தடைப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் மையம் ஒன்றை மதுரையில் தொடங்க அப் பல்கலைக் கழகம் 1957-இல் முடிவு செய்தது முதற்கண், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கிளை நூலகம் 15—12—1957-இல் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் ‘பிளின்ட் ஹவுஸ்’ மாளிகையில் தொடங்கப் பெற்றது ந.ம ரா. சுப்பராமன் பூங்காவில் நூலகத்துக்கென்று கட்டிடம் 1961-இல் கட்டி முடிக்கப் பட்டது. அடுத்த கட்டமாக, பட்ட மேற்படிப்புத் துறைகளைச்

சென்னைப் பல்கலைக் கழகமே மதுரையில் நடத்துவதற்கு வசதியாக, மேற்கண்ட நூலகத்துக்கு அருகே இங்கிலீஷ் கிளப்புக்குச் சொந்தமாக இருந்த இடங்களை வாங்கி சென்னைப் பல்கலைக் கழகத்தார் கட்டிடங்களைக் கட்டினர் இவ்விரு கட்டிடங்களிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளைச் சென்னைப் பல்கலைக் கழகமே நடத்திற்று.

மதுரைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு உரிய சட்டம் தமிழகச் சட்டப் பேரவையிலும் மேலவையிலும் 1965-இல் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக் கழகத்திற்கு மீனாட்சியம்மன் பெயரிட வேண்டுமென்று சிலரும் பாண்டியர் பெயரிட வேண்டுமென்று வேறு சிலரும் விரும்பினர் 'தனிப்பட்ட எந்தப் பெயரும் வேண்டாம்; மதுரை என்றாலே போதும்; அது உலகம் எங்கும் தெரிந்த பெயர்' என்று தலைவர் காமராசர் முடிந்த முடிபாகச் சொல்லிவிட்டார். அக் கருத்தையே அன்றைய முதல்வர் திரு. பக்தவத்சலமும் கொண்டிருந்தார்.

அழகர்கோயில் சாலையிலுள்ள மேற்கண்ட கட்டிடங்களில் மதுரைப் பல்கலைக் கழகம் 1966 பிப்ரவரி ஆறாம் நாளில் 'பிறந்தது'.

1968 இல் மதுரை—தேனிச் சாலையிலுள்ள நாகமலையின் அடிவாரத்தில் 745 ஏக்கர்ப்பரப்பில் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டிடங்களுக்கு அடிகோலப் பெற்று, பல்கலைநகர் எனப் பெயரிடப்பட்டிருக்கும் அப்பகுதியில் மாடமாளிகைகளில், 1973 முதல் இப் பல்கலைக் கழகம் செயல்பட்டு வருகிறது.

1977-இல் சென்னை மாநகரில் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைப் புதிதாக அமைக்க முடிவு செய்தபோது, பேரறிஞர் அண்ணா பெயரை அந்த நிறுவனத்துக்கு இட, தமிழக அரசு முடிவு செய்தது. அதன் எதிரொலியாக, மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு, 'காமராசர் பல்கலைக் கழகம்' என்று பெயர் சூட்டி அவசரச் சட்டம் ஒன்று, காமராசர் பிறந்த நாளில் பிறப்பிக்கப் பட்டது. சில நாட்களில் மீண்டும் ஒரு பெயர் மாற்றம் அறிவிக்கப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் என்னும் பெயரால் இப்போது இப்பல்கலைக் கழகம் இயங்கிவருகிறது.

பேராசிரியர்கள் தெ பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசன், திரு. சை. வே. சிட்டிபாபு, டாக்டர் வா. செ. குழந்தைசாமி ஆகியோர் துணைவேந்தர்களாக

இருந்திருக்கின்றனர் 1979-இல் இப் பொறுப்புக்கு டாக்டர் வ. சுப. மாணிக்கம் நியமிக்கப்பெற்றார்.

பின் தங்கியிருந்த மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்ட மக்கள் உயர் கல்வி பெறவும் ஆராய்ச்சியில் ஈடுபடவும் தொழில் துறைகளில் முன்னேறவும் இப்பல்கலைக் கழகம் அரும்பணி புரிந்து, புகழ் பெற்றுள்ளது.

பாளையங்கோட்டையில், பல்கலைக் கழகத்தின் மையம் ஒன்று இயங்கி வருகிறது

இனி, இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு கல்விப் பகுதிகளைப் பற்றிக் கூறுவோம்.

பல்கலைக் கழக நூலகம்

1,20,000க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன 500 இதழ்கள் வரவழைக்கப் பெறுகின்றன

நூலகக் கல்வி கற்பிக்கப் பெறுகிறது. சான்றிதழ், பட்டப் படிப்புகள் உள்ளன.

சமூக இயல் பள்ளி

எம் எஸ். சி (கணிதப் பொருளாதாரம்) என்ற புதுவகைப் படிப்பு தென் இந்தியாவில் முதல் தடவையாக இங்கு 1968-இல் தொடங்கப் பெற்றது. மதுரை, இராமநாதபுர மாவட்டங்களின் தொழில், பொருளாதார நிலைகளைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

வரலாற்றுப் பள்ளி

இப்பள்ளியின் ஆதரவில் தென் இந்தியவரலாறு குறித்து ஆய்வுகள் நடத்த ஓர் அமைப்பு உருவாகி 1980-இல் முதல் மாநாடு நடத்தப்பெற்றிருக்கிறது. பாண்டியர் வரலாறு குறித்து 1971-இல் ஒரு கருத்தரங்கம் நடத்தப் பெற்றது. இத்துறையின் ஒத்துழைப்புடன் ஜப்பானியப் பேராசிரியர் கரஷிமா, சோழர் கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் குறித்து அரியதொரு ஆராய்ச்சி செய்து, தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் பள்ளி

ஆங்கில மொழி இலக்கியம் குறித்த முதுநிலை வகுப்புகளை நடத்துவதோடு தமிழ் இலக்கியத்தைப் பிற மொழிகளின் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆயும் பணியையும் இப்பள்ளி செய்துவருகிறது.

ரஷ்ய மொழியும் இங்கு கற்பிக்கப்பெறுகிறது

பிரெஞ்சு மொழியைக் கற்பிக்க வல்ல ஆசிரியர்களை இப் பள்ளி உருவாக்கிவருகிறது.

தமிழ் மற்றும் இந்திய மொழிகள் பள்ளி

இப் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்ற நாளிலிருந்து இங்கு தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், படிப்புகள் ஏற்றம் பெற்றுள்ளன அவற்றைத் தொடர்ந்து திருக்குறள் ஆய்வு, மரபுவழிப் பண்பாடு, இதழியல், ஒப்புமை இலக்கியம், பழஞ்சுவடிகளை அச்சிடுவது, வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பது ஆகிய துறைகளில் இப்பள்ளி ஈடுபட்டுள்ளது சித்த மருத்துவ முறைபற்றிய ஆய்வும் அது குறித்த பனையோலைச் சுவடிகளை நூலாக அச்சிடுவதும் மேற்கொள்ளப்பட்டுள. மேற்கண்ட பாடங்களை எடுத்து முதுநிலை வகுப்பில் பயிலவும் ஆராயவும் வாய்ப்பு வழங்கப் பெறுகிறது.

இசுலாமியத் தமிழ் இலக்கியத்துக்கெனத் தமிழக அரசு இங்கு ஒரு பேராசிரியக் கட்டிலை நிறுவியுள்ளது.

1968 முதல் 1974 வரை அமெரிக்காவிலுள்ள கிரேட்லேக் காலேஜைச் சேர்ந்தவர்கள் தொகுப்பாக வந்து, தமிழ் மொழி, தமிழ்நாட்டு வரலாறு, சமூக இயல், பண்பாடு ஆகியவைகுறித்துப் படித்துவந்தனர். இவ்வாறே 1976 முதல் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்து மாணவர்கள் இங்கு வருகைபுரிகின்றனர்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக, தமிழக அரசு இப்பல்கலைக் கழகத்துக்கு மூன்று லட்சம் ரூபாய் வழங்கி, திருக்குறளுக்கு ஒரு பேராசிரியக் கட்டிலை அமைத்துள்ளது. திருக்குறள் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன இத்துறையின் ஆராய்ச்சிகள் வெளியிடப் பெறுகின்றன.

இப் பல்கலைக் கழகத்தின் நிலையிலிருந்தே 1980-இல் தொல்காப்பியத்துக்கு ஒரு பேராசிரியக் கட்டில் நிறுவப்பெற்றுளது.

பல்வேறு பொருள்களைப்பற்றி அவ்வப்போது நடத்தப் பெறும் கருத்தரங்குகளின் விவரங்கள் 'வையை' என்ற ஏட்டின் வாயிலாக வெளியிடப் பெறுகின்றன.

இக்காலத்து எழுத்தாளர்களின் படைப்புகளை அலசி ஆராய்ந்து வருவது இப்பள்ளியின் பாராட்டத்தக்க பணிகளுள் ஒன்றாகும்.

இங்கு பயின்று பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சிகளை நடத்திய பலருக்கும் 'டாக்டர்' பட்டங்கள் வழங்கப் பெற்றுள்ளன.

நாவலர் இரா. நெடுஞ்செழியன், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ விசுவநாதன் ஆகியோர்க்கு இப்பல்கலைக் கழகம் 'முனைவர்' (டாக்டர்) என்னும் சிறப்புப் பட்டம் நல்கியுள்ளது.

மலையாளம் கன்னடம், தெலுங்கு வடமொழித் துறைகளும் உள்ளன இத்துறைகளில் மொழி பெயர்ப்புப் பணிகள் ஒப்பியல் ஆய்வு வேலைகளும் நிகழ்கின்றன. தமிழ்-கன்னடம், தமிழ்-தெலுங்கு அகராதிகளும் உருவாக்கப்பெற்று வருகின்றன.

காந்தியடிகள், இராமலிங்கர் கொள்கைகள் பற்றிய துறை

பொள்ளாச்சி வள்ளல், அருட்செல்வர் நா. மகாலிங்கம். அவர்கள் கொடையால் இந்தத் துறை ஏற்பட்டிருக்கிறது. இரு பெரியவர்களும் புகட்டிய தத்துவங்கள் குறித்து கருத்தரங்குகள் நடத்திவருவதோடு ஆய்வுகளை மேற்கொண்டும் நூல்களை வெளியிட்டும் இந்தத் துறை பணிபுரிந்துவருகிறது.

சைவசித்தாந்தத் துறை

முதுகலை (தத்துவம்)வகுப்பில் சைவசித்தாந்தமும் கற்பிக்கப் படுகிறது சிவஞான போத அறிமுகம், சிவஞான போத வசன அலங்கார தீபம் (உரையுடன்) திருவருட்பயன்-நிரம்பி அழகிய தேசிகர் உரை முதலியன வெளியிடப்பட உள.

நில இயல் துறை

எம் எஸ்சி (பூகோளம்) படிப்பு 1975 முதல் நடைபெற்று வருகிறது. குறிப்பிட்ட சில சிற்றூர்களின் நில அமைப்பு, மழை வளம் முதலியவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றுள.

வேதியல் துறை

வேதியல் எம். எஸ். சி. படிப்பும், குறிப்பிட்ட சில ஆராய்ச்சிகளும் இத்துறையில் மேற்கொள்ளப் பெறுகின்றன.

பௌதிகத் துறை

பல்வேறு நிறுவனங்களுக்கான ஆராய்ச்சியையும் இந்தத் துறை செய்துவருகிறது. இப்பல்கலைக் கழகத்தின் குறிப்பிடத் தக்க ஒரு துறையாக இது வளர்ச்சி அடைந்திருக்கிறது.

உயிரின அறிவியல் பள்ளி

தாவர இயல், விலங்கியல், மீன் இயல் ஆகியவற்றை அடக்கிய ஆய்வுகளில் இப்பள்ளி ஈடுபட்டு, மிகவும் போற்றத்தக்க ஆராய்ச்சிகளைச் செய்து இந்தியாவிலேயே சிறந்த ஒரு பள்ளியாக விளங்குகிறது. இப்பல்கலைக் கழகத்திற்கு, இப்பள்ளி, பல்லாண்டுகளாகப் பெருமை தந்துவருகிறது.

உலகமெங்கும் உள்ள பல்கலைக் கழகங்கள் இந்தப் பள்ளியின் பணிகளை நேரில் அறிந்து பாராட்டி வருகின்றனர். பல்கலைக் கழக மானியக் குழுவும் வேறு பல நிறுவனங்களும் இப்பள்ளிக்கு எல்லா வகையிலும் ஊக்கமளித்து வருகின்றனர்.

இப்பள்ளியின் தலைவர், ஜவஹர்லால் நேரு விருது பெற்ற டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஆவார்.

கணிதப் பள்ளி

இப்பள்ளியும் சிறப்பாக இயங்குகிறது. ஆராய்ச்சியிலும், கல்லூரி ஆசிரியர்களுக்குக் கோடைகால வகுப்புகள் நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

எரி பொருள் பள்ளி

இப்பல்கலைக் கழகம் 1980-இல் இப்பள்ளியைத் தொடங்க, முன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. வருங்காலத்தில், குறிப்பிடத் தக்க ஒரு பள்ளியாக இது வளர்ச்சிபெற வாய்ப்பு உள்ளது.

மாலை நேரக் கல்லூரி

வேலை பார்ப்பவர்கள் தங்கள் அலுவலக நேரத்திற்குப் பிறகு பி. ஏ., பி. காம்,, வகுப்புகள் படிப்பதற்கு வசதியாக,

பல்கலைக் கழகமே அழகர்கோயில் சாலையிலுள்ள பல்கலைக் கழகக் கட்டிடத்தில் இக்கல்லூரியை நடத்திவருகிறது.

பள்ளிகளும் துறைகளும்

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் துறைகள் மட்டுமே உள்ளன. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எட்டுப் பள்ளிகளும் நான்கு துறைகளும் உள்ளன.

ஒவ்வொரு பள்ளியிலும் பல துறைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் பல பேராசிரியர்கள், மாறி மாறி, அதன் தலைவர்களாக இருப்பார்கள்

1 ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் பள்ளியில் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்ய மொழிகளுக்குத் துறைகள் உள்ளன.

2 சமூக அறிவியல் பள்ளியில் பொருளாதாரம், பொருளாதாரக் கணிதம், சமூக இயல், அரசியல் சாத்திரம் ஆகிய துறைகள் உள்ளன.

3. தமிழ் மற்றும் இந்திய மொழிகள் பள்ளியில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழித் துறைகள் உள்ளன. தமிழ்த்துறையில் பல்வேறு பகுதிகளுக்குத் தனித்தனிப் பேராசிரியர்கள் உள்ளனர்.

4. வரலாற்று இயல் பள்ளியில் பழங்கால வரலாறு, இடைக்கால வரலாறு, இக்கால வரலாறு என்ற மூன்று துறைகள் உள்ளன.

5. பௌதிகப் பள்ளியில் பௌதிகத் துறையும், ஆகம அறிவு கொண்டே நிரூபிக்கும் பௌதிகத் துறையும் அடங்கியிருக்கின்றன.

6. கணித அறிவியல் பள்ளியில் கணிதத் துறையும், அனுபவத்தில் மனத்தைச்செலுத்தும் கணிதத் துறையும் உள்ளன.

7. வேதியியல் பள்ளியில்

(அ) National Products Chemistry

(ஆ) Physical Chemistry

(இ) Organic and Inorganic Chemistry

என்ற துறைகள் உள்ளன.

8. உயிர் இன அறிவியல் பள்ளியில் கீழ்க்கண்ட துறைகள் உள்ளன.

(அ) Environmental Biology
(ஆ) Animal Physiology
(இ) Plant Physiology
(ஈ) Immuno-Biology
(உ) Micro Biology
(ஊ) Bio-Chemistry
(எ) Molecular Biology

மேற்கண்ட எட்டுப் பள்ளிகள் நீங்கலாக, கீழ்க்கண்ட தனித் துறைகளும் இயங்கி வருகின்றன.

1 தத்துவத் துறை
2. நூலக இயல் துறை
3. பூகோளம் அல்லது நில இயல்துறை
4. கல்வித் துறை.

இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களின் வேதியல், மற்றும் பௌதிக வேதியல்துறை

மூலிகைகள், வண்ணங்கள் ஆகியவற்றின் வேதியல்தன்மை ஆராயப்படுகிறது.

தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு

பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் பயனுள்ள நேரடிப் படிப்பைப் பெறவும் தென் மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்கள் பல்கலைக்கழகத்தின் வசதிகளையும் தொழில் நுட்ப அறிவையும் பயன்படுத்திக் கொள்ளவும், ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது.

அஞ்சல் வழி தொடர் கல்வி நிலையம்

இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் அஞ்சல் வழிக் கல்வியை, இப் பல்கலைக் கழகம் புகட்டி வருகிறது. இதன் பயனாக, பல்லாயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் மேற்படிப்புப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

பி. ஏ., பி. காம், பி. ஜி. எல்., பி. ஈ. டி., படிப்புகள் உண்டு.

முதுநிலை வகுப்பில் வரலாறு, பொருளாதாரம், வாணிகம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றை எடுத்துப் படிக்க வசதி செய்யப் பட்டிருக்கிறது.

இந்த நிலையத்துக்காக ஏராளமான கட்டிடங்களும் பெரிய நூலகமும் உள. பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பலர் உள்ளனர். பல நகரங்களில் குறிப்பிட்ட சில நாளில் மட்டும் அவர்களே போய்ப் பாடம் நடத்துகின்றனர். அச்சிட்ட பாடங்கள் மாணவர்களுக்கு அஞ்சல்வழி அனுப்பப் பெறுகின்றன. வானொலி வாயிலாகவும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப் பெறுகின்றன. இதற்காக, பல்கலைக் கழகமே ஒரு வானொலி நிலையம் நடத்துவதற்குத் திட்டமிட்டு இந்திய அரசின் இசைவை வேண்டி யிருக்கிறது.

சென்னைத் தலைமைச் செயலகத்திலுள்ள உயர் அலுவலர் களும், வீட்டுவேலை பார்க்கும் அரிவை, தெரிவை, பேரிளம் பெண்களும்கூட இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திச் சாந்துணை யும் கல்வி பயில விழைகின்றனர்.

திறந்தவெளிப் பல்கலைக் கழகத் திட்டம்

அஞ்சல்வழிக் கல்வியை, ஏற்கெனவே புகுமுக வகுப்புப் படித்துத் தேர்ச்சியடைந்தவர்கள் மட்டுமே பெறஇயலும். ஆனால் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின்கீழ், முறையாகப் படிக்காதவர் களும் இளங்கலைப் பட்டம்பெற இயலும். வயது 25க்குக் குறையக் கூடாது. தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் வாழ்பவராக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் மட்டும் உண்டு.

அஞ்சல் வழியாக, வீட்டிலிருந்தவாறே

1 தொடக்க நிலை (மூன்று மாதங்கள்)
2. அடிப்படை நிலை (ஈராண்டுகள்)
3. இளங்கலைப் பட்டப் படிப்பு (மூன்று ஆண்டுகள்)

படித்துத் தேர்வு எழுதிப் பட்டம் பெறலாம். இதற்கான தலப் பயிற்சி நிலையங்களும் தொடங்கப் பெற்று வருகின்றன.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

வி. டி. சி. நிறுவனர் திரு. செகதீசன் போன்ற பலர், அறக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளனர். டி. கே. எஸ். குழுவினர் கொடையால் சங்கரதாஸ் சுவாமிகள் பெயரால் நாடகத்துறை பற்றியும் கோட்டையூர் வள்ளல் அழ. சிதம்பரம் செட்டியார் கொடையால் தமிழ்க்கடல் ராயசொ நினைவாக தேவாரத்தைப் பற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளும் நிகழ்கின்றன.

உலகத் தமிழ் மாநாடு

1981 சனவரித் திங்களில் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும். அதை முன்னிட்டு, இதுவரை தமிழில் வெளிவராத பல துறைகளில், நூல்களைக் கொணர, ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

செம்மல்கள் பேரவை

'கண்ணுதற் பெரும் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த' பழம்பதியே மதுரையாகும். இவ்வாறு சங்கமிருந்து தமிழாய்ந்த மாமதுரையில் தோன்றிய பல்கலைக் கழகம், இத்தொன்மையான மரபிற்கேற்பத் தமிழ்ச் செம்மல்கள் பேரவையைத் தோற்றுவித்துள்ளது.

முன்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'சங்கப் பலகை' இருந்ததையும் நிகரற்ற புலமையுடையார்க்கே அதில் இடமளித்ததையும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அத்தொன்மைக் காலத்திலேயே கிரேக்கர்கள் கண்ட 'அகடமி'கள் உலகப் புகழுடையவை. இன்றும் இங்கிலாந்திலும் பிரான்சிலும் 'தேசிய மதிப்புள்ள கலைஇலக்கியக் கழகச் செம்மல்' என்னும் தகுதிகள் அங்கு சிறந்து மிளிர்கின்றன. தமிழ் மரபும் மேனாட்டு முறையும் கலந்த பேரமைப்பாகத் 'தமிழ்ச் செம்மல்கள் பேரவை' உருவாக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இருபெரும் தமிழ்ச் சான்றோர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைப் பாராட்டுவது என்பது இதன் முதன்மையான குறிக்கோளாகும். அடுத்துக் கல்வித்துறைகள் அனைத்திலும் பயன்படும் வளமார்ந்த மொழியாகத் தமிழை வளர்ப்பது இதன் உட்கிடையாகும்.

தமிழில் படைப்பிலக்கியம், இலக்கணம், மொழியியல் இலக்கியத் திறனாய்வு ஆகிய துறைகளில் ஆக்கப்பணியாற்றியவர்களைப் போற்றும் வகையில், அத்தகைய பணிபுரிந்தவர்களுள் தலைசிறந்தவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். தமிழில் அறிவியல், கலையியல், நுண்கலைகள் என்ற பிற துறைகளின் வளர்ச்சிக்கு ஆக்கப்பணி புரிந்தவர்களுள்ளும் தலைசிறந்த சான்றோர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவ்வாறு ஆண்டுதோறும் இருவரைத் தேர்ந்தெடுத்து, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்கள்' ஆக்குவது திட்டம்.

இருபெரும் சான்றோர்களும் இத் தமிழ்ப் பேரவையின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றனர். அவர்களுக்குத் தனி நிகழ்ச்சி ஒன்றில், அறிமுகப் பாராட்டுரை படிக்கப்பட்டுச் 'செம்மல்' (Fellow) பட்டமும் வழங்கப்பெறுகிறது. பொன்னாடை போர்த்து, தங்கப் பதக்கம் அளித்து, நான்காயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியும் நல்கப்படுகின்றது.

இதுவரை செம்மல்களாகச் சிறப்பிக்கப் பெற்றவர்கள் வருமாறு:

டாக்டர் **தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்**. அறிவியல் அறிஞர் **பெ. நா. அப்புசாமி**. இலக்கணத் தாத்தா மகாவித்துவான் **மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை**. கலைக்களஞ்சியப் பதிப்பாசிரியர் **ம. ப. பெரியசாமித் தூரன்**. ஆராய்ச்சி அறிஞர் **மயிலை சீனி வேங்கடசாமி**. உரைவேந்தர் **அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை**.

கருத்தரங்கு

ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சி கருதி, மிகச் சிறந்த தமிழறிஞர்களைக் கொண்டு, இப் பாராட்டுவிழாவை ஒட்டிக் கருத்தரங்கு நடத்தப்பெறுகின்றது. கருத்தரங்கக் கட்டுரைகள் அச்சிட்டு நூல்களாக வெளியிடப்பெறுகின்றன.

டிஷ்யூ டைப்பிங் லாபரேட்டரி

உயிரியல் அறிவியல் பள்ளியினர் தொடங்கியுள்ள இந்த ஆய்வுக்கூடம் மருத்துவ ஆராய்ச்சிக்கு உதவ தென் இந்தியாவில் இயங்கும் ஒரே நிறுவனமாகும்

இணைக்கப்பெற்ற கல்லூரிகள்

இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள் 103. இவற்றில் 41 கல்லூரிகள் மதுரை மாவட்டத்தில் உள்ளன. ஏனைய திருநெல்வேலி (29), இராமநாதபுரம் (21), கன்னியாகுமரி (12) ஆகிய மாவட்டங்களில் உள்ளன.

மதுரை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளின் விவரம்:

கலை – அறிவியல் கல்லூரிகள்	29
இறு கல்லூரிகள்	3
இசைக் கல்லூரிகள்	2
நிர்வாகப் பயிற்சிக் கல்லூரி	1
பொறியியல் கல்லூரி	1
மருத்துவக் கல்லூரி	1
ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள்	3
சட்டக் கல்லூரி	1

இவற்றுள் மிகப் பெரும்பாலான கல்லூரிகள் மதுரை மாநகரிலேயே உள்ளன. பழனியிலும் திண்டுக்கல்லிலும் சில கல்லூரிகள் இயங்குகின்றன.

I தன் ஆதிக்கம் பெற்ற கல்லூரிகள்

நன்முறையிலும் நெடுங்காலமாகவும் நடைபெற்றுவரும் கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குத் தன் ஆதிக்க உரிமை வழங்கும் முறை, அண்மையில் ஏற்பட்டுள்ளது. இக்கல்லூரிகள் தாங்களாகவே, பாடத்திட்டங்களை வகுத்துக் கொள்ளவும், வினாத் தாள்களை உருவாக்கவும், விடைத் தாள்களைத் திருத்தி மதிப்புஎண் போட்டுப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவித்து, பட்டம் வழங்குமாறு பரிந்துரைக்கவும் உரிமை பெற்றுள்ளன.

இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழுவும் தமிழக அரசும் பரிந்துரைத்ததற்கு இணங்க, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட மூன்று கல்லூரிகளுக்கு 1978–79 முதல் தன் ஆதிக்க உரிமையை வழங்கியுள்ளது.

அமெரிக்கன் கல்லூரி
மதுரைக் கல்லூரி
டோக் சீமாட்டி கல்லூரி

1. அமெரிக்கன் கல்லூரி, மதுரை

கிறித்தவ சமயத்தைப் பரப்ப மதுரை மாவட்டத்துக்கு வந்த அமெரிக்கர்கள் 1842-ஆம் ஆண்டு அளவில் தொடங்கிய தொடக்கப்பள்ளி 1881-இல் கல்லூரியாயிற்று, 1981-இல் அந்த நிகழ்ச்சியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உள்ளனர்.

வைகைக்கு வடக்கே அமைந்த முதல் கல்லூரி இதுவே; ஏராளமான கல்லூரிகள் தல்லாகுளம் பகுதியில் ஏற்பட இக் கல்லூரி வழிகாட்டியுள்ளது. அந்தக் காலத்திலேயே 40 ஏக்கர் பரப்பிலும் விரிவான வசதியான கட்டிடங்களுடனும் இக்கல்லூரி ஏற்பட்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைவதற்குத் தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் இருந்தது.

60,000 நூல்கள் கொண்ட நூலகமும், சிறியதொரு கம்பியூட்டரும் (இயந்திரக் கணிப்பான்) வசதியான விடுதிகளும் உள்ளன. சில துறைகளில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுடன் இக்கல்லூரிக்கு ஓரளவு தொடர்பு உள்ளது.

இளங்கலைப் பட்டப்படிப்புகள் தவிர, பௌதிகம், வேதியல், உயிரியல் துறைகளில் முதுநிலை வகுப்பு உள்ளது.

2. மதுரைக் கல்லூரி, மதுரை

1880-இல் தொடக்கப் பள்ளியாக ஏற்பட்டு 1915-இல் கல்லூரி நிலைக்கு உயர்த்தப்பட்டது. இப்போது இக்கல்லூரி உள்ள இடங்கள், அண்ணாமலை அரசரால் விலைக்கு வாங்கப்பெற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப் பெற்ற பிறகு, மதுரைக் கல்லூரிக்கு அன்பளிக்கப் பெற்றன. கடந்த 30 ஆண்டுகளில் டி. வி. எஸ். குடும்பத்தாரும் பல்கலைக்கழக மானியக் குழுவினரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர்.

கணிதம், பௌதிகம், வேதியல் துறைகளில் முதுகலைப் படிப்பும் பல்வேறு பாடங்களில் இளங்கலைப் பட்டப் படிப்பும் உள்ளன.

3. டோக் சீமாட்டி கல்லூரி, மதுரை

இது மகளிர்க்கு மட்டும் உரியது. கேட்டி வில்காக்ஸ் என்ற அமெரிக்க அம்மையாரின் முயற்சியால், மதுரை ஆலையின் இயக்குநராக இருந்த டோக் துரையின் மனைவியார் பெயரால்

1948-இல் ஆரவாரமின்றித் தொடங்கப்பெற்று, சீருடனும் சிறப்புடனும் செம்மையாகவும் இயங்கி வருகிறது.

முதுகலை வகுப்பில் ஆங்கில இலக்கியமும் தமிழ்இலக்கியமும் கற்பிக்கப்படுகின்றன.

இளங்கலைப் பட்டப் படிப்பில் பல பாடங்கள் பயிற்றுவிக்கப் படுகின்றன. ஆனால், இவை பிற கல்லூரிகளினின்றும் மாறுபட்டு ஒவ்வொரு பாடத்திலும் சிறப்பான அறிவுபெறுவதற்கு ஏற்றவாறு பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள. கணிதம், வேதியல், தாவர இயல், பொருளாதாரம், வரலாறு போன்ற ஒவ்வொரு துறையிலும் இக்கல்லூரியினர் செய்துள்ள ஆராய்ச்சிகளால் இது ஒரு குட்டிப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. எனவே இவர்களே பட்டமளிப்புவிழா நடத்தி வருவது சாலப் பொருத்தமாகும் மாணுக்கியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் தனித்தனியே சஞ்சிகைகள் வெளியிடப் பெறுகின்றன.

உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோவிலுள்ள இசபெல்லா கல்லூரியை ஓரளவு பின்பற்றி இக்கல்லூரி தன் தொடக்க காலத்தில் வளர்ச்சி பெற்றது.

தன் ஆதிக்கம் பெற்றுள்ள இக்கல்லூரி இந்த நிலையை அடைவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஒவ்வொரு துறைக்கும் தன் ஆட்சி வழங்கியுள்ளது. எந்த ஒரு துறையிலும் முதல்வர் தலையீடு என்பது இக்கல்லூரியில் இல்லை. மேலும், அவ்வத் துறையிலும் அனைத்து ஆசிரியைகளையும் கலந்து கொண்டும், கல்லூரியின் புகழ், அதில் பயின்றுவரும் மாணுக்கியர் களுடைய நலம் ஆகியன கருதியும் மட்டுமே எல்லாச் செயல் களும் மேற்கொள்ளப்படுகின்றன. பல் குழுக்களும் பாழ்செய்யும் உட் குழுக்களும் இங்கு இல்லை. கல்வித் துறையில் ஒரு சோசலிச சமுதாயமாகவும் தமிழ் நாட்டிலுள்ள 250 கல்லூரிகளுக்கும் எடுத்துக்காட்டாகவும் இக்கல்லூரி திகழ்கிறது.

II. பட்ட மேற்படிப்புக் கல்லூரிகள்

4. தியாகராசர் கல்லூரி, மதுரை-9

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பெரிய கல்லூரிகளுள் இது குறிப்பிடத்தக்கது. தொடக்கத்திலேயே சிறந்த முறையில் திட்டமிட்டு இக்கல்லூரியை, கலைத்தந்தை

கருமுத்து தியாகராசச் செட்டியார் 1949-இல் நிறுவினார். இக் கல்லூரி, தமிழ் உணர்ச்சிக்கும் தமிழ்ப் புலமைக்கும் நிலைக்களனாக இருந்து வந்திருக்கிறது. தென் மாவட்டங்களில் இன்று நிலவும் தமிழ் ஆர்வத்திற்கு இக்கல்லூரி ஆற்றியுள்ள பங்கு பெரிது.

சென்னை மாநகருக்குச் சென்றால்தான் முதுகலைப் பட்டக் கல்வி பெற இயலும் என்ற நிலையை மாற்றி, தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம், கணிதம், உயிரினஇயல் என்னும் ஐந்து துறைகளில் முதுகலைப் பட்டக் கல்வியை இக்கல்லூரி (மதுரையில் பல்கலைக்கழகம் ஏற்படுவதற்கு முன்னர் இருந்தே) வழங்கி வருகிறது.

பல பாடங்களில் இளங்கலை வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. பி.பி.ஏ. என்ற தொழில் நிர்வாகப் படிப்பும் கற்பிக்கப் பெறுகிறது. சிறந்த நூலகம் உள்ளது.

வைகைக்கும் தெப்பக்குளத்திற்கும் இடையே சேதுபதிகள் வாழ்ந்த மாளிகையைக் கவினுறப் புதுப்பித்தும் புதிதாகக் கட்டிடங்கள் கட்டியும் இக்கல்லூரி அமைக்கப் பெற்றது.

5. பாத்திமா கல்லூரி, மதுரை

'சிஸ்டர்ஸ் ஆப் லயன்ஸ்' என்ற பிரெஞ்சுக் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பெண் துறவிகளால் இந்த மகளிர் கல்லூரி 1953-இல் தொடங்கப் பெற்றது. விளாங்குடியில் கட்டப்பெற்ற கட்டிடங்களைத் திறந்துவைத்தபோது, 'சென்னைப் பல்கலைக் கழகத்துக்குப் பெருமை தரும் கல்லூரி' என்று டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியார் குறிப்பிட்டார்.

பொருளாதாரம், தமிழ் ஆகிய பாடங்களில் பட்டமேற் படிப்பும் ஏராளமான பாடங்களில் இளங்கலைப் பட்டப்படிப்பும் உள்ளன.

6. அரசினர் ஸ்ரீ மீனாட்சி மகளிர் கல்லூரி, மதுரை

1965-இல் தமிழக அரசு இக்கல்லூரியை வைகைக் கரையிலுள்ள மாவட்ட கழகக் கட்டிடத்தில் தொடங்கிற்று. மதுரை மாவட்டத்தில் அரசு நிறுவிய முதல் கலைக்கல்லூரி இதுவே ஆகும்.

வரலாறு, பொருளாதாரம், புவியியல் பாடங்களில் முதுகலை வகுப்புகளும் ஏராளமான பாடங்களில் இளங்கலைப் பட்டப் படிப்பு வகுப்புகளும் உள்ளன.

7. மதுரை இன்ஸ்டிடியூட் ஆப் சோசல்வர்க், அழகர்கோயில் சாலை, மதுரை–2

சமூகப்பணி குறித்த முதுகலைப் பட்டம் பெறவும் சமூகப் புனர்வாழ்வு பற்றிய சான்றிதழ் பெறவும் இங்கு பயிற்றுவிக்கப் படுகிறது.

இப்போது காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உள்ள டாக்டர் அறம் அவர்களின் கருத்துக்கு இணங்க காப்டன் டி. வி. பி ராஜா என்பவர் மதுரைப் பகுதியில் தொழிலாளர்நிலை, சேரிகளின் பிரச்னைகள், பிச்சைக்காரர்கள். உடல் உறுப்புக் குறைபாடுகள் உள்ளவர்களின்நிலை ஆகியவை குறித்து ஆராய்வதற்காக இக்கல்லூரியை அமைத்தார். மதுரை கோட்சின் நிர்வாக இயக்குனர் திரு. எம். பி. எஸ். ஹென்றி, இக்கல்லூரியின் ஆட்சிக்குழுக்குத் தலைவராக உள்ளார்.

8. தமிழ்நாடு மறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை–10

தத்துவம், சமயம் ஆகியவை பற்றிய முதுகலைப் பட்டம் பெறவும் ஜெர்மன்மொழி பயின்று சான்றிதழ், உயர்சான்றிதழ் முதலியன பெறவும இக்கல்லூரி பயிற்றுவிக்கிறது. ஏறத்தாழ 30,000 நூல்கள் இக்கல்லூரி நூலகத்தில் உள்ளன.

இக்கல்லூரி, இளங்கலைப்பட்டப்படிப்புக்கு, கல்கத்தாவுக்கு அருகேயுள்ள செராம்பூர்ப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

9. அருள்மிகு பழனி ஆண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தினர் 1960-இல் இக்கல்லூரியைத் தொடங்கினர். இந்தியாவில் இத்தகைய கல்லூரி இங்கேதான் முதல்தடவையாக அமைந்தது இதைப்பின்பற்றி, தஞ்சை மாவட்டம் (மேலையூரில்) பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி ஏற்பட்டது

இளங்கலைப் பட்டப்படிப்பில் பின்கண்ட பாடங்கள் கற்பிக்கப் பெறுகின்றன.

1. வேதம், உபநிடதம், இந்திய தத்துவ முறைகள்.
2. சைவ, வைணவ ஆகமங்களின் குறிக்கோள்கள்.
3. இந்தியப் பண்பாட்டின் வரலாறு.
4. கோயில் சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், இசை, விக்கிரகங்கள்.
5. மனித இன வரலாறு.
6. நிலநூல்
7. தமிழ், ஆங்கிலம், வடமொழி.

முதுகலைப் பட்டப்படிப்பு 1971-இல் தொடங்கப்பெற்றது. இப்படிப்பில் இந்திய அரசியல், பண்பாட்டு வரலாறுகளும் சைவ சித்தாந்தக் கொள்கைகளின் வளர்ச்சி வரலாறும், அத்வைத, விசிஷ்ட அத்வைத, துவைதக் கொள்கைகளும், இந்திய வாழ்க்கை நெறி முறைகளும் கட்டிடக்கலையும் இடம் பெறுகின்றன. 20,000க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன.

பல்வேறு விக்கிரகங்களைப் பற்றியும் தலங்களைப் பற்றியும் இங்கு பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சி நூல்களைச் சிறுஅளவில் எழுதுகின்றனர். இங்கே படித்து முடித்தபிறகு, இவர்கள் பெரும்பாலும் கோயில்நிர்வாக அலுவலர்களாகவும் அறநிலையத் துறை அலுவலர்களாகவும் நியமிக்கத் தகுதி பெறுகின்றனர்.

நிர்வாகிகள் மேலும் கவனம் செலுத்தினால், வெளிநாடுகளில் இந்தியப் பண்பாட்டிலும் சமயக்கருத்துகளிலும் ஈடுபாடு காட்டுபவர்களையும் ஈர்க்கவல்லவாறு, இக்கல்லூரி வளர்ச்சிபெறச் செய்யலாம்.

10. அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி

1963-இல் இக்கல்லூரி தொடங்கப் பெற்றது. பி. ஏ, பி. எஸ். சி, பி. காம். போன்ற இளங்கலைப் பட்டப் படிப்புகளும் முதுகலைப் பட்டத்துக்குத் தாவரஇயல், உயிரினஇயல் படிப்புகளும் உள்ளன.

சிவகிரி மலையின் அடிவாரத்தில் தாவரத் தோட்டம் உள்ளது.

இக்கல்லூரிக்குப் புகழ்தருவது இதன் உயிரின இயல்துறை. இங்கு 'டாக்டர்' பட்டத்திற்கு ஆராய்ச்சிசெய்ய, மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக்கான இந்தியக் கழகத்துக்காக இந்தத்துறை சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக்கழகத்தைப் போன்று, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் வருவாயைப் பயன்படுத்தியும் இந்திய அரசின் உதவி பெற்றும் இந்நகரில் ஒரு பல்கலைக்கழகம் அமைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

11 நாடார் மஹாஜன சங்கம் எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை

இக்கல்லூரி நாடார் மஹாஜன சங்கத்தாரால், வள்ளல் வெள்ளைச்சாமி நாடார் பெயரில் 1965-இல் தொடங்கப் பெற்றது. பி ஏ., பி. எஸ். சி., பி. காம்., இளங்கலைப் பட்டப் படிப்புகளும் எம். காம், முதுகலைப் பட்டப் படிப்பும் உள்ளன.

12. அரசினர் கலைக்கல்லூரி, மேலூர்

இக்கல்லூரி 1969-இல் தொடங்கப் பெற்றது. பி. ஏ, பி. எஸ். சி, பி காம்., வகுப்புகளும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வரலாறு முதுகலைப் படிப்பும் உள்ளன.

III இளங்கலைப் பட்டப் படிப்பு உள்ள கல்லூரிகள்

(அ) மதுரை மாநகர்

13. செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

1901-இல் பாண்டித்துரைத் தேவரால் தொடங்கப்பெற்ற தமிழ்ச் சங்கத்தார் 1957-இல் வித்துவான் (தமிழ்ப்புலவர்) பட்டம் பெறுவதற்குப் பயிலுபவர்க்காக இக்கல்லூரியைத் தொடங்கினர். 1976 முதல் இங்கு அப் படிப்புக்குப் பதிலாக ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கொண்ட பி. லிட்., படிப்பு தொடங்கப் பெற்றுள்ளது. பெண்களும் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர். காந்திய சிந்தனைகள் பற்றிய சான்றிதழ் படிப்பும் உள்ளது

14. சரசுவதி நாராயணன் கல்லூரி, பெருங்குடி, மதுரை-12

ஆலை அதிபர் திரு லெ. நாராயணன் செட்டியாரும் அவர் மனைவி திருமதி சுரசுவதியும் 1966-இல், மதுரை ஆகாயவிமான நிலையத்திற்கு அருகே இக்கல்லூரியை நிறுவியுள்ளனர் மதுரை மாவட்டத்தில் ஏற்பட்ட புதிய கல்லூரிகளுள் இக்கல்லூரிக்குத் தான் விரிவான நிலப்பரப்பும் சிறந்த நூலகமும் உள்ளன. பி ஏ., பி. எஸ்சி , பி காம் , படிப்புகள் உள்ளன

15 சௌராஷ்டிரக் கல்லூரி, பசுமலை, மதுரை-24

மதுரை சௌராஷ்டிர சமூகத்தாரால் 1967-இல் தொடங்கப் பெற்ற இக்கல்லூரி, தமிழக அரசு அன்புடன் வழங்கிய விரிவான நிலப்பரப்பில் நிர்வாகத்தார் கட்டியுள்ள பெரிய கட்டிடங்களில் 1972 முதல் இயங்கி, ஆலை அதிபர் திரு. சி எஸ் இராமாச்சாரியின் பேராதரவால் பெருவளர்ச்சியடைந்து உள்ளது.

பி. ஏ , பி. எஸ்சி , பி காம்., பி. பி. ஏ., வகுப்புகள் உள்ளன. காந்திய சிந்தனைகள் பற்றிய சான்றிதழ், டிப்ளமா படிப்புகளும் உள்ளன.

16. எம். எஸ். எஸ். வாக்ஃப் வாரியக் கல்லூரி, மதுரை-20

நீதிமன்றக் கட்டிடங்களுக்கு அருகே இக்கல்லூரியின் கட்டிடங்கள் உள்ளன. கல்லூரி 1968-இல் தமிழ்நாடு வாக்ஃப் வாரியத்தால் தொடங்கப் பெற்றது. எம். எஸ் எஸ். என்ற எழுத்துக்கள், ஒரு முஸ்லிம் பெரியவரைக் குறிப்பன உயர் நீதிமன்றத்து ஆணையின்படி, கல்லூரிப்பெயர் அவ்வாறு இடம் பெற்றது.

அரபு, உருது மொழிகள் இக்கல்லூரியில் சிறப்பாகக் கற்பிக்கப் பெறுகின்றன. பி. ஏ., பி. காம்., வகுப்புகள் உள்ளன.

17. யாதவர் கல்லூரி, திருப்பாலை, மதுரை-14

மதுரை யாதவ சமூகத்தார் 1969-இல் இக்கல்லூரியைத் தொடங்கினர். திருப்பாலையில் இக்கல்லூரியின் விரிவான கட்டிடங்கள் விசாலமான இடப்பரப்பில் அமைந்துள்ளன. இளங்கலைப் பட்டப்படிப்பில் பி ஏ , பி. எஸ். சி., பி. காம் , படிப்புகளும் காந்திய சிந்தனை குறித்த சான்றிதழ் படிப்பும் உள்ளன.

18. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை-2

புகழ்பெற்ற புத்தக வியாபாரி இ. மா. கோ. நினைவாக அவர் குடும்பத்தார் 1974-இல் இக்கல்லூரியை, புகுமுக வகுப்புக் கல்லூரியாகத் தொடங்கினர். கல்லூரிக் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களால் 1979 முதல் இங்கு இளங்கலைப் பட்டப் படிப்பு நடைபெற்று வருகிறது. திருப்பாலையில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள.

19. மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

மன்னர் திருமலை நாயக்கர் கல்விக்குழு 1974-இல் ஏற்படுத்திய புகுமுக வகுப்புக் கல்லூரி இப்போது இளங்கலைப் பட்டப் படிப்புக் கல்லூரியாக இயங்கி வருகிறது.

(ஆ) வெளியூர்களிலுள்ள கல்லூரிகள்

20. ஹாஜி கருத்தா ராவுத்தர் ஹௌடியா கல்லூரி, உத்தமபாளையம்

கொடைவள்ளல் ஹாஜி கருத்தா ராவத்தரால் 1956-இல் நிறுவப்பெற்று அவர் மக்களால் நடத்தப்பெறுகிறது. கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் பெரியகுளம் வட்டத்து மக்களுக்கு இது பெரிதும் பயன்படுகிறது. பி ஏ, பி எஸ். சி, பி. காம், வகுப்புகள் உள்ளன. அரபு மொழியும் இங்கு கற்பிக்கப் படுகிறது.

21. ஜி. டி. என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்

ஜி. டி. நாராயணசாமி நாயுடு அறக்கட்டளைக் குழுவினர் 1964-இல் இக்கல்லூரியைத் தொடங்கி நன்முறையில் நடத்தி வருகின்றனர் இப்பெருநகரில் அமைந்த முதல் கல்லூரி இதுவே ஆகும். பி. ஏ. பி. எஸ்சி., பி. காம்., படிப்புகளும் காந்திய சிந்தனை பற்றிய சான்றிதழ் படிப்பும் உள்ளன.

22. எம். வி. முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கல்லூரி, திண்டுக்கல்

அங்கு விலாஸ் எம். வி. முத்தையாபிள்ளை குடும்பத்தாரின் ஆரம்ப நன்கொடையுடன் 1966-இல் தொடங்கப்பெற்ற இந்த மகளிர் கல்லூரியைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. பி ஏ, பி. எஸ்சி, பட்டங்களுக்குப் பல்வேறு பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன.

23. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, உசிலம்பட்டி

தேவர் பெயரால் நிலவும் கல்லூரிகளுள் இது முதன்மை யானது. 1968-இல் கள்ளர் கல்விக் கழகத்தாரால் நிறுவப் பெற்றது. பின்தங்கிய பகுதியில் வாழ்பவர்கட்குப் பெரிதும் பயன்படுகிறது. பி. ஏ., பொருளாதாரம், சமூக இயல் படிப்பு களும் பி. எஸ். சி, கணிதப் படிப்பும் உள்ளன.

24. அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர் 626514

மதுரை ஆர்ச்பிஷப் வணக்கத்துக்குரிய டாக்டர் ஜஸ்டின் திரவியம் அவர்களால் 1970-இல் டி. லா. சாலே கல்லூரி என்னும் பெயரில் தொடங்கப்பெற்ற இக்கல்லூரி 1972 முதல் இயேசு சபைப் பாதிரிமார்களால் அருள் ஆனந்தர் கல்லூரி என்னும் பெயரில் நடத்தப்பெற்று விரிவான இடத்தில் இயங்கிவருகிறது பி. ஏ., (பொருளாதாரம்), (தத்துவம்), பி எஸ் சி, (கணிதம்) (கிராமப்புற வளர்ச்சி), காந்திய சிந்தனை குறித்த படிப்புகள் உள்ளன. வீரமாமுனிவர் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் சிறந்த பணிபுரிந்து வருகிறது

25. அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி

இக்கல்லூரி 1970 - இல் தொடங்கப்பெற்றது தமிழ் இலக்கியம், வரலாறு, தாவரஇயல், உயிரினஇயல், கணிதம் ஆகிய பாடங்கள் இளங்கலைப் பட்டத்திற்குக் கற்பிக்கப் பெறு கின்றன.

26. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க் கல்லூரி, பழனி

தமிழ் இலக்கியப் பட்டப்படிப்பு மட்டும் உள்ளது இக் கல்லூரி 1970-இல் தொடங்கப் பெற்றது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் தேவஸ்தானத்தார் தொடங்கியுள்ள நான்கு கல்லூரிகளும் அறநிலையத்துறை ஆணையரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினரால் நடத்தப்பட்டு வருகின்றன

27. விவேகானந்தா கல்லூரி, திருவேடகம் மேற்கு 624217

சுவாமி சித்பவானந்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பராய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தாரால்,

குருகுல முறைப்படியும் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் சுவாமி விவேகானந்தருடைய கொள்கைகளைப் பரப்ப இக்கல்லூரி 1971-இல் தொடங்கப் பெற்றது பி. ஏ, பி எஸ். சி, பி காம் வகுப்புகள் உள்ளன. வடமொழியும் ஆசனப் பயிற்சிகளும் கற்பிக்கப் படுகின்றன

28 ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம்

ஜெயராஜ்நாடார் குடும்பத்தார் வழங்கிய நன்கொடையையும் தமிழக அரசு அன்புடன் அளித்த விரிந்த நிலப்பரப்பையும் பயன்படுத்தி, சிஸ்டர்ஸ் ஆப் செண்ட் ஆன் காங்கிரகேசன் என்ற கிறித்துவ சகோதரிகளின் அமைப்பு இக் கல்லூரியை நடத்தி வருகிறது. பி. ஏ, பி. எஸ் சி. வகுப்புகள் நடைபெறுகின்றன.

29. ஏலக்காய்த் தோட்டக்காரர்கள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர் 625613

போடிநாயக்கனூர், ஏலக்காய்த் தோட்டக்காரர் சங்கம் 1974-இல்இக்கல்லூரியைத்தொடங்கிற்று போடி-போடிமெட்டுச் சாலையில் விரிவான இடப்பரப்பில், கவினுறு சூழலில் அழகிய கட்டிடங்கள் கட்டப்பெற்றுள்ளன. இருபாலரும் இக்கல்லூரியில் பயிலுகின்றனர். பி. ஏ, பி. எஸ். ஸி., பி. காம் வகுப்புகள் உள்ளன.

ஏலக்காயின் பச்சை நிறம் மாறாமல் இருக்கச் செய்வதற்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் உயிரியல் அறிவியல் பள்ளியின் தாவர இயல் துறையினருடன் சேர்ந்து இக்கல்லூரியில் ஆராய்ச்சி நடைபெறுகிறது.

IV. சான்றிதழ், டிப்ளமா படிப்புக் கல்லூரிகள்

30. காந்திய சிந்தனைக் கல்லூரி, மதுரை-20

தமிழ்நாடு காந்தி நினைவுநிதி 1974-முதல் காந்திய சிந்தனை குறித்த் சான்றிதழ், டிப்ளமா வகுப்புகளை நடத்தி வருகிறது. 150 மாணவர்கள் உள்ளனர்.

31. காந்திய சிந்தனைக் கல்லூரி, காந்திநிகேதன் ஆசிரமம், தே. கல்லுப்பட்டி 626702

இங்கு காந்திய சிந்தனை குறித்த சான்றிதழ், டிப்ளமா படிப்புகள் நடைபெறுகின்றன.

32. காந்தி கிராமம் கிராமப்புற சுகாதார மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டுக் கல்வி நிலையம், காந்தி கிராமம்

இங்கு, பட்டம் பெற்ற ஆடவரும் பெண்டிரும்
1. நல்வாழ்வுத் துறைக்கல்வி
2. சத்துணவு மற்றும் பொது சுகாதாரம்

ஆகிய டிப்ளமா படிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பெறுகின்றனர். 1964-முதல் இக்கல்வி நிலையம் இயங்கி வருகிறது. இங்குபயின்ற பலர் குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

V. இசைக் கல்லூரிகள்

33. ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், மதுரை-2

1959-இல் ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்தால் தொடங்கப் பட்ட இக்கல்வி நிலையம் 1969முதல் (பி. மியூசிக் என்னும்) இசைத்துறையில் இளங்கலைப் பட்டத்திற்குப் பயிற்சி அளிக்கிறது கோகலே சாலையிலுள்ள சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

34. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை-20

1979-இல் இக்கல்லூரி தொடங்கப் பெற்றது. சங்கீத வித்துவான் பட்டத்திற்கு (ஈராண்டுப்படிப்பு) வாய்ப்பாட்டும் வீணையும் வயலினும் கற்பிக்கப் படுகின்றன. வாத்யவிசாரதா சான்றிதழ் படிப்புக்கு மூன்றாண்டுகளுக்கு புல்லாங்குழலும் மிருதங்கமும் கற்பிக்கப் படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்குப் பரதநாட்டியம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

VI வணிகத்துறை நிருவாகம்

35 தியாகராசர் நிருவாகப் படிப்பு நிலையம், ஆண்டாள்புரம், திருப்பரங்குன்றம்சாலை, மதுரை-3

கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் 1962-இல் இக்கல்விக் கூடத்தை நிறுவினார். இங்கு பி. பி. ஏ (மூன்றாண்டுப் படிப்பு), எம் பி. ஏ (ஈராண்டுப்படிப்பு) ஆகிய இருபகுதிநேரப் படிப்புகள் உண்டு. பட்டம் பெற்றவர்கள்தான் இவற்றில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். மேலும் அவர்கள் ஏதாவது ஒருவணிக நிறுவனத்திலோ தொழிலிலோ அல்லது ஏற்கப்பட்ட

அமைப்பிலோ மேற்பார்வை அல்லது நிருவாகப் பணியில் தொடர்ந்து ஈராண்டுகளாவது அனுபவம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். இந்திய அரசும் தொழில் நுட்பக் கல்விக்கான அனைத்திந்தியக் கழகமும் இப்படிப்பை ஏற்றுள்ளன.

VII. பொறியியல்

36 தியாகராசர் பொறியியல் கல்லூரி, மதுரை-15

56 ஹெக்டேர் பரப்பளவில், மலைச்சரிவில் அழகாக அமைந்த கட்டிடங்களைக் கட்டி 1958-இல் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் இந்தக் கல்லூரியை நிறுவினார். சட்டிடத்துறை, இயந்திரத்துறை, மின்சாரம் மற்றும் மின்அணுத் துறை, மின்அணு மற்றும் போக்குவரத்துத் துறையில் பொறியியல் பட்டம்பெற முழுநேர மாணவர்களும் பகுதிநேர மாணவர்களும் இங்கு சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். அப்ளைடு சயன்ஸ் பாடம், இளம் அறிவியல் பட்டம், முதுஅறிவியல் பட்டம் ஆகிய இரண்டுக்கும் கற்பிக்கப் படுகிறது.

கட்டிடப் பொறியியலிலும் மின்சாரப் பொறியியலிலும் பட்ட மேற்படிப்பு உள்ளது.

மாணாக்கியரும் இக்கல்வி பயிலுகின்றனர்.

கணிதம், பௌதிகம், வேதியியல் துறைகளிலும் கட்டிடப் பொறியியலிலும் மின்சாரப் பொறியியலிலும் டாக்டர் பட்டம் பெற இங்கு ஆராய்ச்சி மாணவர்கள் ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றனர்.

VIII. மருத்துவம்

37. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை-20

தமிழ்நாடு அரசு இக்கல்லூரியை 1954-இல் நிறுவியது. எம். பி. பி. எஸ், பி. பார்மசி ஆகிய பட்டப் படிப்புகளும், எம். டி. எம் எஸ், எம். சி எச், எம். பார்ம்., ஆகிய உயர்பட்டப் படிப்புகளும் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்றவர்கள் படிப்பதற்கு உரிய 10 வகையான டிப்ளமா படிப்புகளும் உள்ளன. 2,500 மாணவர்கள் (இருபாலரும்) கல்வி பயிலுகின்றனர்.

சிறந்ததொரு பொது மருத்துவமனை, தொத்து நோய் மருத்துவமனை, நுரையீரல் மருத்துவமனை ஆகியவை இந்தக் கல்லூரியுடன் இணைந்திருப்பதாலும் அவற்றில் பலவகை அறுவை சிகிச்சைகள், நோய்கள் ஆகியவற்றுக்குச் சிறப்பு நிபுணர்கள் இருப்பதாலும் எல்லாவகை நோயாளிகளும் வருவதாலும், இக் கல்லூரியில் படிப்பவர்கள் நிறைந்த அனுபவம் பெறுகின்றனர். தமிழ்நாட்டின் தலைசிறந்த மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்றாக இது திகழ்கிறது. இங்கு பயின்ற பலர், இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் சிறந்த மருத்துவர்களாக மதிக்கப் படுகின்றனர்.

IX ஆசிரியப் பயிற்சி

38. தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, மதுரை–9

இக்கல்லூரி 1956-இல் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாரால் தொடங்கப் பெற்றது. மதுரை மாவட்டத்தில் ஏற்பட்ட முதலாவது ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி இதுவேயாகும். பி. ஈ. டி., பட்டம் பெறுவதற்கு இக்கல்லூரி பயிற்சி அளிக்கிறது. இதைச்சேர்ந்த தியாகராசர் நன்முறை உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெற உதவுகிறது.

39. மகளிருக்கான தூய ஜஸ்டின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, மதுரை-9

இம்மாகுலேட் கன்செப்சன் கல்விச் சங்கம் 1968-இல் இக்கல்லூரியை நிறுவி, மகளிர் பி. ஈ டி., பட்டம் பெற வழி வகுத்துள்ளது

40. லெட்சுமி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, காந்திகிராமம் 624302

டாக்டர் திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன், தம் தாயார் நினைவாக 1967-இல் இந்த உடனுறைக் கல்லூரியை இரு பாலாருக்குமாக நிறுவினார்கள் பயிற்சி பெறுவதற்கு உதவும் உயர்நிலைப் பள்ளி, அருகேயுள்ள தம்பித்தோட்டத்தில் இயங்கு கிறது. கிராமப்புறப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பணி புரிபவர்களுக்கு பி. ஈ டி., மற்றும் எம். ஈ. டி, வகுப்புகள் இங்கு நடத்தப் படுகின்றன. ஆசிரியப் பயிற்சிக்கான உயர் பட்டப் படிப்பு மதுரை மாவட்டத்தில் இங்கு மட்டுமே உள்ளது

X சட்டம்

41. மதுரைச் சட்டக் கல்லூரி, மதுரை-2

1974-இல் தமிழக அரசு இக்கல்லூரியை நிறுவியது. பி. ஜி. எல்., பி. எல்., ஆகிய இரு பட்டப் படிப்புகளும் உள்ளன. இவ்விரண்டு படிப்புகளிலும் பகுதி நேர மாணவரும் முழு நேர மாணவர்களும் பயிலுகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

மதுரையில் 1960-ஆம் ஆண்டு அளவில் தமிழக அரசு ஒரு வேளாண்மைக் கல்லூரியை, ஒத்தக்கடை அருகே யானைமலையின் அடிவாரத்தில் நிறுவிற்று. 1970-ஆம் ஆண்டு அளவில் மேற்படிப்புக் கல்லூரியாகவும் ஆராய்ச்சி நிலையமாகவும் இது உயர்த்தப்பட்டது.

ஒன்றரைக் கோடி ரூபாய் வரை தமிழக அரசு இக் கல்லூரிக்காகச் செலவிட்டுள்ளது.

சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப் பட்டிருந்த இக்கல்லூரி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்பட்டது முதல் அதன் உறுப்பாக ஆகி, பெரு வளர்ச்சியடைந்து வருகிறது.

மனை இயல் கல்லூரியை மதுரையில் தொடங்க தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் முடிவுசெய்துள்ளது.

காந்திகிராமம் கிராமியப் பல்கலைக் கழகம்

காந்தியடிகளின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் பரப்பி கிராமப்புறத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபடக் கூடியவர்களை உருவாக்குவதற்காக, இந்திய அரசு கிராமப்புற உயர் கல்வி நிலையங்களை, இந்தியாவில் 14 சிற்றூர்களில் அமைவதற்கு ஆதரவு நல்கியது. அந்தத் திட்டத்தின்படி, மதுரை பஸ் தொழிலதிபர் திரு. டி. வி. எஸ். மகள் திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் 1947-இல் திண்டுக்கல்லுக்கு 10 கி. மீ. தொலைவில், சின்னாளப்பட்டிக்கு அருகே தரிசாகக் கிடந்த நிலப் பரப்பில் காடு வெட்டி, காந்திகிராமம் என்னும் ஊரை உருவாக்கி அதில் கலைக்கோயில்கள் பலவற்றை அடுத்தடுத்து அமைத்தார்,

சிறுமலைக்கும் கோடைக்கானல் மலைப்பகுதிக்கும் இடையே அமைந்திருப்பதால் நல்ல காற்றும் இனிய தட்பவெப்ப நிலையும் இங்கு நிலவுகின்றன. எழில் மிக்க காட்சிகளைக் காண இயலுகிறது. நெடுஞ்சாலைக்கு ஓரத்திலும் அம்பாத்துறை இரயில் நிலையத்திற்கு அருகேயும் இந்தக் கல்வி வளாகம் அமைந்திருக்கிறது. இரயில் பாதை இவ் வளாகத்துக்குள் சென்று, இதை இரு கூருகப் பிரிக்கிறது.

படிப்படியாக முன்னேறியுள்ள காந்திகிராமம் நிறுவனங்களில் பெரும்பாலானவை 1956 முதல் இந்திய அரசின் பேராதரவு பெற்ற கிராமப்புற உயர் கல்வி நிலையம் என்ற பெயரில் இயங்கி வரலாயின. திருமதி சௌந்தரம், அவர் கணவர் டாக்டர் இராமச்சந்திரன் ஆகிய இருவருடைய விடாமுயற்சியால் 1976 ஆகஸ்டு மூன்றும் நாள் முதல், இக்கல்வி நிலையம் ஒரு பல்கலைக் கழகமாக அறிவிக்கப்பட்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவி பெற்று வருகிறது.

பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக டாக்டர் ஜி. இராமச்சந்திரன் 1976 முதல் 1980 ஜனவரி வரை பதவி வகித்தார். 1980 மே மாதம் முதல், சர்வோதயத்தில் ஈடுபாடு உடையவரும் நாகாலாந்து சமாதானக் குழுவில் பெரும் பணி புரிந்தவரும் கல்வியாளருமான டாக்டர் அறம், இப்பொறுப்பை ஏற்று இனிது நடத்திவருகிறுர்.

பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்ட பிறகு, இங்கு ஆறு புலங்கள் உள்ளன. புலங்களும் அவற்றைச் சார்ந்த துறைகளும் வருமாறு :

1. தமிழ், இந்திய மொழிகள், நாட்டுப்புறக் கலைகள்	தமிழ், மலையாளம், ஹிந்தி, நுண்கலைகள்
2. ஆங்கிலம், மற்றும் அயல்நாட்டு மொழிகள்	ஆங்கிலம்

3.	கிராமப்புற சமுதாய அறிவியல்	அரசியல் சாத்திரம், பொது நிர்வாகம், பொருளாதாரம், கூட்டுறவு, கிராமப்புறத் தொழில்களும் அவற்றின் மேற் பார்வையும், சமுதாய இயல்
4.	வேளாண்மை மற்றும் கால்நடை நலம் பற்றிய கல்வி	உழவியல், பழத் தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல்; வேளாண்மை விரிவுப் பணி, கால்நடை வளர்ச்சி
5.	கிராமப்புறத்தை மையமாகக் கொண்ட அறிவியல்	வேதியல், பௌதிகம், கணிதம், உயிரியல், மனையியல்.
6.	கிராமப்புற நல்வாழ்வு மற்றும் துப்புரவு	நல்வாழ்வு பற்றிய கல்வி, பொதுசுகாதார நிர்வாகம்
7.	கிராமப்புறக் கலைகள்	இசை, நடனம், மரபு வழிக் கலைகள்

ஆராய்ச்சிக் கேந்திரம்

ஆராய்ச்சி விரிவுப் பணி மற்றும் ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சிக்கான கேந்திரம்	ஆராய்ச்சி, விரிவு மற்றும் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி

கீழ்க்கண்ட வகுப்புகள் நடைபெறுகின்றன —

1. கிராமப்புறப் பணிகளில் மூன்றாண்டு பி. ஏ., பி. எஸ்., பட்டப்படிப்பு இப்படிப்பில் (1) தமிழ் அல்லது மலையாளம் (2) ஆங்கிலம் (3) ஹிந்தி ஆகிய மொழி களும் (1) காந்திய சிந்தனையும் உலக நாகரிகத்தின் வரலாறும் (2) சமுதாய வளர்ச்சி மற்றும் விரிவுப் பணிகள் (3) கிராமப்புற நுண்கலைகள் (4) அரசியல் (5) கூட்டுறவு (6) கிராமப்புறத் தொழில்கள் (7) பொருளாதாரம் (8) சமுதாய இயல் ஆகிய பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன.

2. பி. எஸ்சி., மனையியல் படிப்பு (பெண்களுக்கு மட்டும்)
3. எம். ஏ., (கிராமப்புறப் பணிகள்)
4. வேளாண்மை தொடர்பான ஈராண்டுப் படிப்பு (சான்றிதழ்)
5. கிராமப்புற நல்வாழ்வு மற்றும் துப்புரவு பற்றிய ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு. (துப்புரவு ஆய்வாளர்க்கு மட்டும்)
6. முதுநிலைத் துப்புரவாளர்க்கு ஓராண்டு டிப்ளமா படிப்பு
7. எம். ஏ., (கிராமப்புற பொருளாதாரமும் விரிவுப் பணியும்)
8. பி. ஏ., (ஆங்கில இலக்கியம்)
9. பி. ஏ., (தமிழ் இலக்கியம்)
10. பி. எஸ்சி, (உயிரியல்)
11. ஜெர்மன், ரஷ்ய, கன்னட, தெலுங்கு மொழிகளில் சான்றிதழ் படிப்பு.

ஆண்டுதோறும் புதிய படிப்புகள் தொடங்கப் பெறுகின்றன. அவ்வப்போது விசாரித்துத் தெரிந்து கொள்வது நன்று.

இனி, இப்பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்புகளைக் கூறுவோம்.

1. ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களில் 52 சிற்றூர்களின் மருத்துவ வசதி, பள்ளிக்குச் செல்லும் வயது அடைவதற்கு முந்திய கல்வி, கறவை மாடு வழங்குவது, குடி தண்ணீர்த் திட்டம், நெசவு மற்றும் நூற்பு மையங்கள் ஆகியவை வாயிலாக இப்பல்கலைக் கழகம் விரிவுப்பணி புரிகிறது. 1000க்கு மேற்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்க இப்பல்கலைக்கழகம் உதவியாக இருந்திருக்கிறது. 16 ஊர்களில் முதியோர்க்குக் கல்வி புகட்டப்பட்டு வருகிறது.

2. பல்கலைக்கழக எல்லைக்குள்ளேயே எல்லா மாணவர்களும் ஒரே சமுதாயமாக வாழ்கின்றனர்.

3. மாலையில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்கிறது.

4. காந்திசேனை என்ற அமைப்பில் மாணவர் அனைவரும் பங்கு கொள்கின்றனர்.

5. ஓராண்டில் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒவ்வொரு மாணவரும் கிராமப்புறத்தில் இருந்து சமுதாயப் பணி புரிய வேண்டும்.

6. ஆம் சபை என்ற பெயரில் மாணவர்களுக்கு ஒரு சட்டப்பேரவை இயங்குகிறது.

7. பட்டப்படிப்பு மாணவர் ஒவ்வொருவரும் ஓர் ஆராய்ச்சிக்கட்டுரை எழுதவேண்டும்.

8. சமையல் கூடத்தின் மேற்பார்வைப் பொறுப்பு மாணவர்களிடமே உள்ளது.

9. துப்புரவு வேலைக்கு என்று தனி ஊழியர்கள் இல்லை. மாணவர்களே தங்கள் கழிவறைகளையும் குளியல் அறைகளையும் தூய்மைப் படுத்திக் கொள்கின்றனர்.

10. ஹிந்தி, ஆங்கிலம், தாய்மொழி ஆகிய மும்மொழி களை ஒவ்வொருவரும் கற்றுக வேண்டும்.

11. கலைகளை அனுபவித்து மகிழ்வது, ஒரு கட்டாயமான பாடமாக உள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறை உளது. நாடகம், அதன் கூறுகள், வசனம் எழுதுவது, நடிகரின் தகுதிகள், உடல் அமைப்பு, குரல், கூர்ந்துகவனித்தல், நினைவாற்றல், சமிக்ஞைகள், மேடை அமைப்பு, திரை அலங்காரம், உடை, ஒப்பனை, வண்ணங் கள் ஆகியவை குறித்து இத்துறை அறிவுரை கூறியும் பயிற்சி யளித்தும் வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் இருபாலாருமாக 100 ஆசிரியர்களும் ஏறத்தாழ 700 மாணவர்களும் உள்ளனர். நூலகத்தில் 30,000 நூல்கள் இருக்கின்றன. 150 இதழ்கள் வரவழைக்கப் பெறு கின்றன.

ஓராண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வரை இப்பல்கலைக் கழகத்துக்குச் செலவாகிறது. ஆறுவது திட்டகாலத்தில் புதிய கட்டிடங்கள் கட்டவும் புதிய பாடவகுப்புகள் தொடங்கவும் ரூபாய் 1·86 கோடி செலவில் திட்டமிடப் பட்டுள்ளது. முதியோர் கல்வி, வளர்ச்சி நிர்வாகம் போன்ற துறைகளில் எம். ஏ., (பட்ட

மேற்படிப்பு) வகுப்புகள் தொடங்கப் பெறும். கைத்தறித் தொழில் நுட்பம், தோல் தொழில் நுட்பம் பற்றிய டிப்ளமா படிப்புகளும் தொடங்கப்பெறும்.

ரெட்டியார் சத்திரத்தைத் தலைமையான ஊராகக் கொண்டு சுற்றுவட்டத்திலுள்ள 30 ஊர்களில் இப்பல்கலைக்கழகம் தேசிய முதியோர் கல்வித் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

60 ஏக்கர் பரப்பு உள்ள வேளாண்மைப் பண்ணையும் 7 ஏக்கர் பரப்பு உள்ள பழத்தோட்டங்களும் 5 ஏக்கர் பரப்பு உள்ள பால்பண்ணையும் கிராமத் தொழிற் கூடமும் ரொட்டி முதலிய தின்பண்டங்கள் செய்யும் நிறுவனமும், பழப் பதனிடு நிலையமும் கையால் காகிதம் செய்யும் ஆலையும் உள்ளன. குமரப்பா கிராமத் தொழிற் பேட்டையில், உணவுக்கு உதவாத எண்ணெய் களைக்கொண்டு கணி எண்ணெய்யும் சவுக்காரமும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்குள்ள உயிரியல் காட்சிக் கூடம் காணத்தக்கது.

ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பல ஊர்களின் தொழில் நிலை பொருளாதாரப் பிரச்சினைகள் ஆகியவற்றை இப்பல்கலைக் கழகத்தார் மிகவும் நுணுகி ஆய்ந்து ஏராளமான வெளியீடுகளை அச்சிட்டுள்ளனர். இப்பகுதி உழவர்களுக்கு உதவும் வகையில் புதிய வேளாண்மை முறைகளைப் பற்றிய சிறு பிரசுரங்களையும் அச்சிட்டுவழங்கி வருகின்றனர். சமுதாயத்திலுள்ள மக்களுடன் ஒன்றி வாழ்ந்து அவர்களுடைய வாழ்வு சிறக்கவும் உடல் நலம் ஓங்கவும் இப்பல்கலைக் கழகம் உதவி வருகிறது.

காந்திகிராமத்திலுள்ள பிற கல்வி நிறுவனங்கள்

காந்தி கிராமத்திலுள்ள கிராமியப் பல்கலைக்கழகத்தைப் (ஜி. ஆர். ஐ. என்ற டீம்டு யுனிவர்சிடி) பற்றி மேலே குறிப்பிட்டோம். காந்திகிராமத்திலுள்ள எல்லா நிறுவனங்களும் இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவை அன்று. அங்கு உள்ள சில நிறுவனங்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தவை. அவற்றைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். மற்றும் சில நிறுவனங்கள் காந்தி கிராமம் பொதுச்சபையாலும் காந்தி கிராமச் செயற்குழுவாலும் நடத்தப்படுகின்றன.

திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன், அவர் கணவர் டாக்டர் ஜி. இராமச்சந்திரன் ஆகியோருடைய பெரு முயற்சியாலும் அவர்களுடைய அளவுகடந்த செல்வாக்கால் இந்திய அரசிடமிருந்து பெற்ற உதவியாலும் கட்டாந்தரையாகவும் திருடர் பயம் நிறைந்த பகுதியாகவும் 1947 அக்டோபர் ஏழாம் நாள் வரை இருந்த ஓர் இடம் இப்போது கல்வி வளாகமாக மாறியிருக்கிறது

இங்கு உள்ள நிறுவனங்கள் வருமாறு:

1. குழந்தைகள் விடுதி

கவனிப்பாரின்றித் தெருவில் விடப்பட்ட குழந்தைகளை இங்கு வளர்த்து அவர்களுக்குக் கைத்தொழிலும் வேளாண்மையும் நன்னடத்தையும் கற்பிக்கப்படுகின்றன

2 பூர்வாதாரப் பள்ளி

இந்துஸ்தானி தாலிமி சங்கம் வகுத்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் இப்பள்ளி தொடங்கப்பெற்றது.

3. உயர் ஆதாரப்பள்ளி

இங்கு பயிலும் மாணவ மாணவியர்க்கு பருத்தி சாகுபடி செய்வதிலிருந்து துணி நெசவு செய்யும் கட்டம் வரையிலுமான துணித் தொழிலும் வேளாண்மையும் சிறப்பாகக் கற்பிக்கப் படுகின்றன.

4. சேவிகாசிரமம்

விதவைகள், கணவன்மாரால் கைவிடப்பட்ட பெண்மணிகள் ஆகியோருக்குக் கல்விப்பயிற்சியளித்து சமுதாய வேலைகளில் அவர்களுக்கு வாய்ப்பு நல்குகிறது.

5. ஔவை கிராம வைத்திய ஊழிய சங்கம்

இச் சங்கம் தாய் சேய் நல விடுதி நடத்துகிறது. சிற்றூர்களுக்குத் தேவையான மருத்துவிச்சிகளை உருவாக்குகிறது.

6. கிராமிய விரிவுப் பயிற்சி நிலையங்கள்

கிராமங்களின் சுய தேவையை நிறைவேற்றிக் கொள்ளவும் சமுதாய வாழ்வைச் சீராக அமைக்கவும் பயிற்சி கொடுக்கப் படுகிறது.

7. சமூகக் கல்வி அமைப்பாளர் பயிற்சி நிலையம்

8. நிர்மாண ஊழியர் அகம்

9. கதர் உற்பத்தித் துறை

10. கிராமக் கைத்தொழிற்கூடம்

முக்கிய குறிப்புகள்

கல்வித்திட்ட மாறுதல்கள், அரசின் கொள்கைகள், சமூகச் சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப மேற்கண்ட நிறுவனங்களில் அவ்வப்போது பல மாறுதல்கள் செய்யப்படுகின்றன.

சிப்பந்தி என்று சிலரால் இழிவாகக் கருதப்படும் எத்தகைய "கீழ்த்தர" ஊழியரும் காந்தி கிராமத்தில் இல்லை. இங்கு ஆண் களும், பெண்களும், குழந்தைகளுமாகச் சேர்த்து ஈராயிரம் பேர் வாழ்கின்றனர். எனினும் காந்தி கிராம எல்லைக்குள் "தெருக் கூட்டும் சிப்பந்தி" என்றோ, "கக்கூஸ் அலம்பும் சிப்பந்தி" என்றோ பெயர் கொண்டு இங்கு ஒருவரும் கிடையாது. அப்படியிருந்தும் காந்தி கிராமம் முழுவதும் எப்பொழுதும் துப்புரவாகவும் அழகாகவும் வைத்துக் கொள்ளப் படுகிறது. இங்கு சமூகச் சமையல் அறைகள் உள்ளன. சமையல் வேலையில் மாணவர் களும் ஆசிரியர்களும் பங்கு கொண்டு சமையல் செய்தல், இடச் சுத்தம் செய்தல், பாத்திரங்கள் கழுவுதல், சமையலுக்கான பொருள்கள் வாங்குதல், பரிமாறுதல், சமையல் சம்பந்தப்பட்ட கணக்குகள் வைத்துக் கொள்ளுதல் போன்ற எல்லா வேலைகளை யும் செய்கிறார்கள்.

நாள்தோறும் மாலை ஏழு மணிக்கு சர்வ சமய வழிபாடு மிகவும் அழகாக நடத்தப் படுகிறது. இதில் கலந்து கொள்ளுபவர் களுக்கு, உள்ள அமைதி ஏற்படுகிறது. உள்ளத்தை ஒருமைப் படுத்தும் பாடல்கள் தனிப்பட்டவராலும், எல்லோராலும் பாடப் படுகின்றன. பல்வேறு சமய நூல்களிலிருந்தும் பொன்மொழி கள் வாசிக்கப்படுகின்றன.

பிற நிறுவனங்கள்

தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் யோகாசனப்பள்ளி

இங்கு ஒவ்வொரு திங்களிலும் கடைசி ஐந்து நாட்களில் காலை 6.30 முதல் 7·30 வரை, 18 ஆசனங்களில் பயிற்சி கொடுக்கப் படுகிறது.

இதுதவிர, ஒவ்வொரு திங்களிலும் முதல் ஆறு நாட்களுக்கு நாடி சுத்தி, பஸ்திரிகா உஜ்ஜை முதலியவற்றைப் படிப்படியாகக் கற்பிக்கும் பிராணுயாமப் பயிற்சி கொடுக்கப் படுகின்றது. இப் பயிற்சியின் கால அளவு மூன்று மாதமாகும்.

ஒவ்வோர் ஆண்டும் வேனிற்காலத்தில் ஆறு நாட்களுக்கு முதுநிலைப்பயிற்சி நடைபெறுகிறது.

மேற்கண்ட யாவும் மதுரையில் காந்திநினைவு மண்டபத்தில் நிகழ்வன. முப்பது பேர் சேர்ந்து பயிற்சிபெற விரும்பி செலவை ஏற்றுக் கொள்ள முன்வந்தால், ஆசிரியர் ஒருவரைத் தமிழ் நாட்டிலுள்ள எந்த ஊருக்கும் அனுப்ப இந்தப் பள்ளி முன் வருகிறது.

மகரிஷி ஆக்க அறிவு நிலையம்

ஆழ்நிலைத் தியானம் ஓர் எளிய மனப்பயிற்சி. யாவரும் செய்யத் தகுந்த விஞ்ஞான முறைப்பட்ட ஒரு நெறி ஆழ்நிலை தியானப் பயிற்சியால் நம்முடைய கவனம், உணர்வு முதலியன நம் மனத்தின் அடித்தளத்திற்குச் செல்கின்றன. மிக நுண்ணிய நிலையிலுள்ள மனத்தின் அடித்தளத்திற்கு நம் மனம் இந்த ஆழ்நிலை தியானம் பயிலும்போது செல்வதினுல் நம் உணர்வும் நுண்ணியதாகின்றது, நுண்ணியவைகளை எல்லாம் உணர்கின்ற திறன் பெருகுகின்றது. நுண்ணிய நிலையில் மனம் செயல்படுவதால் அமைதியும் பெருகுகின்றது.

மேலும் நம் உணர்வு நுண்ணியதாகி மனத்தின் அடித் தளத்திற்குச் செல்லும்போது நம் உடலுக்கும் ஆழ்ந்த ஒய்வு கிடைக்கின்றது. உடலுக்கு ஆழ்ந்த ஓய்வு கிடைப்பதால் களைப்பு. சோர்வு, நோய் முதலியன நீங்கி உடல் நலம் பேணப்படு கின்றது. இதைப் பல அறிவியல் ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன,

உடலில் ஏற்படும் பலநோய்களுக்கு மனநிலையே அடிப்படை என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். ஆழ்நிலை தியானப் பயிற்சியால் இரத்த அழுத்தம் குறைகிறது. கோபம் முதலிய உணர்ச்சிக் கொந்தளிப்புகள் நீங்குகின்றன

பதட்டம் குறைகிறது. மன எரிச்சல் மறைகிறது. ஊக்கம் மிகுகிறது. தன்னம்பிக்கை வளருகிறது. அன்புணர்ச்சி பொங்குகிறது. நிதானம் உண்டாகிறது. செயலாற்றல் மிகுகிறது. வாழ்வில் சலிப்பு நீங்கி மகிழ்ச்சி பொங்குகிறது.

அறிவுக்கு அடிப்படையாவது தெளிந்த மனமேயாகும். ஆழ்நிலைத் தியானப் பயிற்சியால் மனம் தெளிவடைவதால் மாணவர்களின் நினைவாற்றலில் வளர்ச்சி, தன் காலில் நிற்கும் திறமை, படிப்பதைத் தனக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பயன்படுத்தும் வழிவகை, அறியும் திறமை, தேர்வில் வெற்றி எங்கும் எல்லாவற்றிலும் வெற்றி கிட்டுவதை விஞ்ஞானச் சோதனைகள் நிரூபிக்கின்றன.

இப்பயிற்சியைச் செய்வதால் தொழிலில் ஊக்கம் மிகுகிறது. மனநிறைவுடன் தொழிலில் ஈடுபட இயலுகிறது. அதனால் திறமை வளருகிறது.

இப்பயிற்சி மதுரை காந்தி மியூசியத்தில் கொடுக்கப்படுகிறது.

14

மதுரை மாநகர்

வரலாற்றுச் சிறப்புப் பெற்றிருப்பதோடு வாழும் மாநகராயுந் திகழ்வது மதுரைமூதூர். இது தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களமாகவும் திராவிட நாகரிகத்தின் தொட்டிலாகவும் விளங்குகிறது.

மதுரை என்னும் பெயரால் விளங்கிய ஒரு நகரம் அழிந்தபின், புதிதாக அப் பெயரில் ஏற்பட்டது இன்றைய மதுரை என்று கூறுவாரும் உளர். மதுரை எப்போது தோன்றிற்று என்பதை யாராலும் தெளிவாகக் கூற இயலவில்லை.

பெயர்

1) 'மருத நிலங்களால் சூழப் பெற்ற ஊர் மதுரை' என்றும் (2) 'இறைவன் அமுத கிரணங்களைத் தெளித்துப் புனிதப் படுத்தியதால்' மதுரை என்ற பெயர் ஏற்பட்டது என்றும் (3) 'மதுரம் செறிந்து நிலைத்த ஊர் மதுரை' என்றும் கூறுவர் மது என்ற சொல் தனிமையையும் எளிமையையும் குறிக்கிறது. மதுரையைச் சுற்றி மல்லிகைப்பூ பூப்பதை நாட்டுப் பாடல் படித்தவர்கள் முதல் நாளும் விமானத்தில் பறப்பவர்கள் வரை அறிவர். இதுவும் 'மது' என்னும் சொல்லின் வளத்துக்குச் சான்று பகருகிறது,

மதுரையின் மறுபெயர்கள் ஆலவாய், நான்மாடக் கூடல், கடம்ப வனம், சிவராசதானி, தென்மதுரை முதலிய பலவாகும்.

மதுரையைச் சுற்றி எத்துணையோ மதுரைகள் உள்ளன. மதுரைக்குக் கிழக்கே கீழ் மதுரை; அப்பால் மானாமதுரை; திண்டுக்கல்லுக்கும் வடக்கே வடமதுரை; அருப்புக்கோட்டைச் சாலையில் நெடுமதுரை (திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில்.)

தென் ஆர்க்காடு மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 'சிறுமதுரை' இருக்கிறது. வடக்கே உத்தரப் பிரதேசத்தில் 'மத்ரா' என வழங்கும் மதுரையும் இந்தோனேசிய நாட்டில் ஒரு மதுரையும் உள்ளன.

இத் தென்மதுரையின் நினைவே, 'மத்ரா'வின் தோற்றத் திற்கும் காரணம் என்பாரும் உளர். இந்தோனேசியாவிலுள்ள மதுரை என்ற சிறு தீவு, மறைந்த குமரிக் கண்டம் எனப்படும் இலமூரியாவில் தமிழர் நாகரிகம் பரவியிருந்தபோது ஏற்பட்ட ஒரு பகுதியாக இருக்கக்கூடும். கம்போடியா நாட்டிலுள்ள அங்கோர் வாட் கோயிலின் அமைப்பு மதுரைக் கோயிலை முழுக்க முழுக்கப் பின்பற்றியதாகும்.

இருப்பிடம்

யானை மலைக்கும் நாகமலைச்சும் இடைப்பட்டு மதுரை அமைந்திருக்கிறது எனினும் வைகை ஆற்றின் கரையில் அமைந் தது என்ற சிறப்பே, தொன்று தொட்டு மதுரைக்கு இருந்து வந்திருக்கிறது.(பார்க்க-ப 14). இந்த ஆற்றில் இறங்கு துறைகள் பல அமைந்திருந்ததாக இலக்கியங்கள் இயம்புகின்றன. பேச்சி யம்மன் படித்துறை என இப்போது வழங்கும் திருமருத முன்று றையில் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், நீர் விளையாட்டுகள், மாதரி முதலாயினோரின் குரவைக்கூத்து ஆகியன நிகழ்ந்தனவாம்.

மாநகராட்சி

மாநகராட்சியாக மதுரை அறிவிக்கப்பட்ட பிறகு, 1974-இல் விளாங்குடி, செல்லூர், தத்தனேரி பீபிகுளம், தல்லாகுளம், மாநகரி, சாத்தமங்கலம், வில்லாபுரம், மாடக்குளம், ஆரப்பாளையம், பொன்மேனி, கொக்களப்பி, கோச்சடை ஆகியவை மதுரை மாநகரில் இணைக்கப்பெற்றன.

அடைமொழிகள்

'தமிழ்கெழு கூடல்' என்று மதுரையைப் புறநானூறு புகழ்கிறது. சிறுபாணாற்றுப்படையோ, 'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மதுரை' என்று சிறப்பிக்கிறது. பழம் பாடல் ஒன்று, 'பாடுதமிழ் வளர்த்த கூடல்' என்று பாராட்டுகிறது. சிலப்பதிகாரமோ, 'மதுரை மூதூர்', 'மாட மதுரை', 'ஓங்குசீர் மதுரை,' 'மதுரை மூதூர் மாநகர்', 'தென்தமிழ்', 'நன்னாட்டுத் தீது தீர்மதுரை', 'மாண்புடை மரபின் மதுரை' 'வானவர் உறையும் மதுரை,' 'மாட மதுரை மாநகர்', 'மணி மதுரை' என்று பற்பல சொற்றொடர்களால் சிறப்பித்துப் புகழ்கிறது. மதுரைக் காஞ்சி, 'புத்தேள் உலகம் கவினிக் காண்வர, மிக்குப்புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை' என்று மாண்புறப் பாடுகிறது. மணிவாசகப் பெருமான், 'மதுரைப் பெருநன் மாநகர்' என்று திருவாசகத்தில் பாராட்டியுள்ளார். பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம், 'திக்கெலாம் புகழ் மதுரை' என்று அடைமொழி சூட்டுகிறது.

வெளி நாட்டார் இந்நகரத்தைக் 'கோயில் மாநகர்' (The temple city) என்றும் 'விழாமலிந்த நகர்' (The city of festivals) என்றும் தென் இந்தியாவின் ஏதன்ஸ் (Athens of South India) என்றும் புகழ்ந்திருக்கின்றனர்.

நகரின் அமைப்பு

மதுரை மாநகரின் கவர்ச்சியான அமைப்பைப் பற்றி இந்நூலில் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளோம். தாமரை மலர் போன்ற இந்நகரத்தின் அமைப்பு, இன்றும் என்றும் மக்கள் உள்ளங்களை ஈர்க்கவல்லது.

ஆடிவீதி, சித்திரைவீதி, ஆவணி மூலவீதி, மாசிவீதி என்ற ஒவ்வொரு பெயராலும் கோயிலை மையமாக வைத்து அதன் கிழக்கேயும் தெற்கேயும் மேற்கேயும் வடக்கேயும் திக்கின் பெயரால் நான்கு நான்கு வீதிகள் உள்ளன. ஆடிவீதி என்பது கோயிலுக்குள் உள்ளது. நான்குதிக்கிலும் பரவிய வீதிகள் ஒவ்வொன்றும் ஒரு தன்னச் சதுரமாகும். இவ்வாறு தமிழ்த் திங்கள்களின் பெயர்களை நகர் வீதிகள் இயம்பும் மாட்சி மதுரைக்கு மட்டுமேஉரித்தானது.

சித்திரை வீதிகள் நான்கிலும் சித்திரைத் திங்களில் நடைபெறும் திருவிழாவிலும், ஆவணி மூல வீதிகளில் ஆவணித் திங்களில் மூல நட்சத்திரத்தில் நிகழும் திருவிழாவிலும், மாசி வீதிகளில் மாசி மக விழாவிலும் உற்சவத் திருமேனிகள் உலாவருவது பண்டு தொட்டு வழக்கமாக இருந்திருக்க வேண்டும். திருமலை நாயக்கர் ஆட்சியில் இதில் சில மாற்றங்கள் ஏற்பட்டதால் இப்போது வீதிப் பெயருக்கும் திருவிழாவுக்கும் தொடர்பு அறுந்து விட்டது. கோயில் மண்டபத்துக்குள் நடந்துவந்த, மீனாட்சியம்மன் திருக்கல்யாண விழா 1980முதல் ஆடிவீதியில் நடைபெற்றுவருகிறது.

வரலாறு

மதுரை மாநகரின் வரலாறு கூறும் நூல், திருவிளையாடற் புராணம். அதில் குறிக்கப்பெறும் கதைகளுக்கு ஏற்ற சின்னங் களை நகரெங்கும் காணுகிறோம்.

தடாதகைப் பிராட்டியாரின் அன்னை காஞ்சனமாலைக்காக ஏழு கடல்களையும் மதுரைக்கு அழைத்த திருவிளையாடலின் சின்னமாக விளங்குவதே ஏழுகடல் தெருவிலுள்ள குளமாகும்.

தமிழ்ப்புலவர் இடைக்காடரைப் பாண்டியன் அவமதிக்க, அதைப் பொருத சோமசுந்தரப் பெருமான், அன்னை மீனாட்சி யுடன் கோயிலைவிட்டு வெளியேறித் தங்கிய இடமே பழைய சொக்கநாதர் கோயிலாகும். இடைக்காடரின் பிணக்குத் தீர்த்த திருவிளையாடலின் சின்னமாக இது விளங்குகிறது.

குண்டோதரனின் தாகத்தைப் போக்க அழைத்த ஆறு, வைகையாக நகரின் வடக்கே ஓடுகிறது.

மதுரையைச் சுற்றி இன்று நாம் காணும் மலைகளையெல்லாம் திருவிளையாடற்புராணம் சுட்டுகிறது. சமணர் மதுரையை அழிக்க அவ்வப்பொழுது அனுப்பிய பசு, நாகம், யானை மூன்றும் மூன்று மலைகளாகி, அந்தந்த இடங்களில் தோற்றம் தருகின்றன. பசுவை வெல்வதற்காக அனுப்பப் பெற்ற இடபமும் ஒரு மலையாகி, அழகர் மலை என்று பெயர் பெற்றிருக்கிறது. இன்றும் அழகர் மாடு, அழகர் கோயில் மாடு என்று திருவிழாக் காலங்களில் அலங்கரிக்கப் பெற்ற காளைகளைச் சிலர் கொண்டுவருவதற்கு இத் திருவிளையாடலே அடிப்படையாகும்.

மாணிக்கவாசகப் பெருமானுக்காக அருளிய திருவிளையாடல்களில் நரிகளைக் குதிரைகளாக்கியது ஒன்றாகும். சொக்கநாதர் அவ்வாறு நரிகளைக் குதிரைகளாக்கிய இடம் நரிக்குடி என்று வழங்குகின்றது. குதிரைகள் பின்னர் அவ் வடிவத்தை விட்டு நரிகளாகிச் சென்ற ஊரே, மதுரையின் வடபுறத்தேயுள்ள செல்லூர் என்பது. அந்நரிகள் கத்திச் சென்ற இடம் கத்துநரி என்பது இப்பொழுது தத்தனேரி என்று வழங்கு கின்றது அந்நரிகள் ஒன்றையொன்று தொடர்ந்து சென்றவிடம் தோடனேரி என்று வழங்குகின்றது மண்டியூர் என்பதையே இன்று வண்டியூர் என்று குறிப்பிடுகின்றோம். குதிரைகள் வரும் பொழுது இங்குப் புழுதி மண்டியதால் இப்பெயர் பெற்றது. 'மதிச்சயம்' என்ற இடம் பாண்டியன் குதிரைகளை விலைமதித்த இடமாகும். 'மாநகரி' பாண்டியர்களின் அரண்மனை முதலியன இருந்த இடமாகும். குதிரைகளை இடசாரி வலசாரியாக நடத்து வித்துப் பார்த்த இடம்.

இதுபோன்று மதுரையைச் சுற்றி கணபதி ஏந்தல் பூதங்கண்டகுளம், கூடைத்தட்டிப்பாறை, ஐராவதநல்லூர் முதலிய இடங்களும் திருவிளையாடற் சின்னங்களாக இருந்து வருகின்றன.

'கடம்பவனத்தில் பாண்டியனொருவன் மதுரைக்கோயிலை யும் நகரத்தையும் உண்டாக்கினான்' என்று திருவிளையாடல் புராணம் கூறும். இன்றும் மதுரைக் கோயிலின் தலவிருட்சம் கடம்பு. கடம்பவனபுராணம் என்ற நூலும் உள்ளது.

பொற்றாமரைக் குளத்துப் படிக்கட்டின் வடபுறத் தூண் களில் நின்ற கோலத்தில் உள்ள குலசேகரன், தனஞ்சயன் வடிவங் கள் நகரத்தை ஆதியில் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர்கள் இவர்களே என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றன.

கபாடபுரக் கடல்கோளுக்குப் பின், பாண்டியன் முடத்திருமாறன் வடக்கே வந்து மணலூரில் தங்கியிருந்து, பின் மதுரையைத் தலைநகராக்கினான் என்பது இறையனாரகப்பொருள் களவியல் உரை கூறும் செய்தி.

மணலூரில் குலசேகர பாண்டியன் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது, அவ்வூர் வணிகன் தனஞ்சயன் என்பான், கடம்பவனத்தில் ஒரு விமானமும் ஓர் இலிங்கமும் இருந்ததைக்

கண்டு, அரசனிடம் போய்ச் சொன்னான். அரசனும் அவ்விடத்தில் ஒரு கோயிலையும் நகரத்தையும் அமைத்தான். நகரத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு காவல் தெய்வங்களை நிறுத்தினான். அவை: தெற்கே கன்னியர்; மேற்கே கரியமால்; வடக்கே காளி; கிழக்கே கரிய சாத்தன் (ஆலவாய்த் தர்மமூர்த்தி) என்பது நம்பிக்கை.

மதுரை மாவட்டத்தின் வரலாற்றை, தனிக் கட்டுரையாக இந்நூலில் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். இவ்வரலாறு மதுரை மாநகரை மையமாக வைத்து அமைந்ததேயாகும்.

இன்றைய மதுரைக்குக் கீழே, ஒரு பழைய நகரம் புதைந்து கிடக்கிறது என்ற கருத்து உண்டு. நகரின் சில பகுதிகளில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டபோது இந்த உண்மை வெளிப் பட்டது.

சிவபெருமானின் திருவிளையாடல்களை நினைவூட்டும் தெருக் களையும் மதுரையில் காணலாம். அவர் கால்மாறி ஆடியதைக் குறிப்பது வெள்ளியம்பலத் தெரு அவர் மீன் பிடித்த திருவிளையாடல் தொடர்புடையது, இரயில் நிலையத்திற்கு அருகே யுள்ள வலைவீசுத் தெப்பக்குளம். அவர் வளையல் விற்ற திருவிளையாடலால் பெயர் பெற்றது வளையல்காரத் தெரு. கல்யானைக்கு அவர் கரும்பு கொடுத்த திருவிளையாடலின் சின்னமாய் கோயிலுக்குள் ஒரு கல்யானை இருக்கிறது. அவர் பிட்டு விற்ற இடம் பிட்டுத் தோப்பு அவர் குண்டோதரனுக்குச் சோறு எடுத்த இடம் மேலைச்சித்திரைவீதியில் இருந்த அன்னக்குழி மண்டபம்.

பழங்காநத்தம்—கோவலன்பொட்டல்

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் மதுரை மாநகரில் பாண்டிய மன்னனால் கள்வன் என்று குற்றம் சாற்றப் பெற்று கொலைக்களத்தில் கொலையுண்டான் என்பது சிலம்பு கூறும் செய்தி.

இன்றுமதுரையின் புறப்பகுதியான பழங்காநத்தம் என்னும் சிற்றூரிலுள்ள இடுகாடு ஒன்று இப்போது கோவலன் பொட்டல் என்று குறிப்பிடப்பட்டு வருகிறது. இவ்விடத்தில்தான் கோவலன் கொலையுண்டான் என்பது செவிவழிச் செய்தி.

இங்கு தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் அகழ்வாய்வினை மேற்கொண்டது. இவ்வாராய்ச்சியின்போது கற்கால மனிதன் பயன்படுத்திய நுண்கற் கருவிகளும் கிடைத்திருக்கின்றன. இவை தவிர விலையுயர்ந்த வெண்மணி சுட்ட மண்ணாலான காதணி, கயலும் களிறும் பொறித்த சங்ககாலக் காசு ஆகியவை கிடைத்துள்ளன.

மேலும் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று பெரிய முதுமக்கள் தாழிகள் இவ்வாராய்ச்சியின்போது வெளிப்பட்டன. இத்தாழிகளுள் மனிதரின் மண்டையோடு, எலும்புத் துண்டுகள் கிடைத்துள்ளன. இவ்விடம் அன்று தொட்டு இன்றுவரை இறந்தோரைப் புதைக்கும் இடமாக இருந்து வருகிறது.

புதிய வீதிகள்

அண்மை வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாக மூன்று வீதிகள் உள்ளன. அவையாவன: பெருமாள் மேஸ்திரி வீதி, மாரட்டு வீதி, வெளிவீதி ஆகியவை. மதுரையில் இருந்த பழைய அகழிகளைத் தூர்த்து, மக்களுக்கு வீடு கட்ட இடம் அளிக்க ஆங்கிலேயக் கலெக்டர்கள் முனைந்தனர். அதற்கு ஆகும் செலவினைக் கண்டு அவர்கள் அஞ்சினர். ஆனால் மாரட்டு என்ற கலெக்டர் புதுத்திட்டம் ஒன்றைத் தீட்டினார். அந்த அகழிகளை நிரப்புகிறவர்கள், அவரவர்கள் நிரப்பிய பகுதிகளுக்கு உடைமையும் உரிமையும் பெறுவர் என முரசொலி மூலம் அறிவித்தார். அவர் திட்டம் செம்மையாக நிறைவேறியது. பெருவாரியான மக்கள் அகழிகளை நிரப்பி வீடுகளை அமைத்துக் கொண்டனர். இத்திட்டங்கள் வெற்றிபெற முன்னோடியாக இருந்து மராமத்து வேலைகளைச் செய்த பெருமாள் மேஸ்திரி பெயரால் நான்கு தெருக்களும் தங்களுக்கு இடம் நல்கிய கலெக்டர் மாரட்டு பெயரால் நான்கு வீதிகளும் அமைந்துள்ளன. இவை கீழ மாரட்டு, தெற்கு மாரட்டு, மேல மாரட்டு, வடக்கு மாரட்டு. கோட்டையை இடித்து மதுரையை அகலப்படுத்தி உருவானவையே நான்கு வெளி வீதிகளாகும்.

கோயில்கள்

மதுரை மாநகரில் பலகோயில்கள் இருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க கோயில்களைப்பற்றிச் சில விவரங்கள் இப்போது கூறுவோம். இக்கோயில்களிலெல்லாம் தலையாயது மீனாட்சி அம்மன் திருக்கோயில்; இதனை அங்கயற்கண்ணி கோயில் என்றும்

கூறுவர். இன்றைய மதுரை இக்கோயிலைச்சுற்றி அமைந்து இருப்பதாலும் வளர்ச்சியடைந்திருப்பதாலும், விரிவாகக் கூறுவோம்.

ஆரிய நாகரிகத்தால் மீனாட்சியம்மன் கோயில் தோன்றியது என்றும் அதற்கு முன்னரே இந்நகரில் பெண் தெய்வத்திற்கு ஒரு சிறப்பான கோயில் இருந்தது என்றும் ஒரு கருத்து உண்டு 'ஒண்ட வந்த பிடாரி, ஊர்ப் பிடாரியை விரட்டிற்று' என்று ஒரு பழமொழியை இதற்குச் சான்று கூறுவர்.

பழந்தமிழ் நாட்டில் ஒவ்வொரு பெருநகர்க்கும் நகரமக்கள் போற்றும் தெய்வம் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்திற்கு சம்பாபதி என்ற தெய்வம் இருந்தது. அதன் விவரமும் அமைப்பும் மணிமேகலையில் படம் பிடித்துக் காட்டப் பெற்றிருக்கின்றன. இவ்வாறே மதுரைக்கு மதுராபுரி தெய்வம் இருந்தது. இத் தெய்வத்தைப் பற்றிச் சிலப்பதிகாரம் கட்டுரைக்காதை (வரி 1-13) கூறுகிறது. இதில் கூறப்பெற்றுள்ளவாறும் பாண்டி நாட்டு வரலாறு, வளம் ஆகியவற்றிற்கேற்பவும் இத்தெய்வத்திற்கு தமிழ் நாடு அரசின் தொல்பொருள் துறைத் தலைவர் டாக்டர் இரா. நாகசாமி படம் வரைந்துள்ளார்.

மதுரையின் பழமையான கடவுளருள் மதுரை வீரன் என்ற தெய்வமும் குறிப்பிடத்தக்கது.

மீனாட்சி அம்மன் கோயில்

கிறிஸ்தவ அன்பர்களும் இசுலாமிய சகோதரர்களும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் கம்பராமாயணத்தில் இன்பம் காணுகிறார்கள். ஆண்டுதொறும் காரைக்குடியில் நடைபெறும் கம்பன் விழாவில் இது கண்கூடாகத் தெரியும். அவர்கள் கம்பன் காவியத்தைக் கன்னித் தமிழ்ச் சுவைப் பிழம்பாகக் காணுகிறார்கள்.

இதுபோல எந்த மதத்தவராயினும் கடவுள் நம்பிக்கையில்லாதவராயினும் மீனாட்சியம்மன் கோயிலில் கூர்ந்து கவனிக்கத் தக்கன எவ்வளவோ உள்ளன.

பக்தர்களுக்கும் புராணங்களில் ஈடுபாடு உடையவர்க்கும் திருவிளையாடல்களைப் பற்றி அறிய விழைவார்க்கும் இக்கோயில் ஒப்பற்ற ஒரு கருவூலம்; இறைவன் திருமேனிகளையும் அரசர்கள்

அமைச்சர்கள், துறவிகள் ஆகியோரின் உருவங்களையும் கல்லிலும் வெண்கலத்திலும் வடிக்கும் கலை தமிழ் நாட்டில் அடைந்த வளர்ச்சிகளை இங்கு அறியலாம்.

பல்வேறு அரச வம்சங்களின் காலத்தில் கட்டிடக் கலையில் ஏற்பட்ட மாறுதல்களை இந்தக் கோயிலிலே ஆராயலாம். அந்த அரசர்களின் உருவங்களை மட்டுமின்றி அவ்வககாலத்து ஆடைகளையும் அணிகலன்களையும் பழக்கவழக்கங்களையும் கூட இந்தக் கோயிலிலும் புதுமண்டபத்திலும் உள்ள தூண்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

கோயிலிலுள்ள நகைகளைப் பார்த்தால் அவற்றை வழங்கிய பல்வேறு மதத்தினரின் ஈடுபாடு புலனுகும்; அணிகலன்களைச் செய்யும் வேலைப்பாடு காலந்தொறும் எவ்வாறு இருந்தது என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

மொழி ஆர்வலர்கள் சங்ககாலத்துப் புலவர்களின் உருவங்கள் உள்ள பகுதியைப் பார்க்கலாம்; திருக்குறளும் தேவாரமும் திருவாசகமும் பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டு இன்புறலாம்.

வரலாற்று அறிஞர்கள், கோயிலின் பல பகுதிகளிலும் உள்ள கல்வெட்டுக்களையும் கோயிலில் பேணி வைக்கப்பட்டுள்ள பழங்காலத்து நாணயங்களையும் பார்வையிடலாம்.

தாவர இயலில் ஈடுபாடு உடையவர்கள் கடம்ப மரத்தின் எஞ்சிய பகுதி வெள்ளித்தகடு போர்த்திப் பேணப்பட்டிருப்பதையும் நறுமணமுள்ள பலவகை மலர்கள் கோயில் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவதையும், குளத்திற்குள் வைக்கப் பட்டிருக்கும் பொற்ருமரையையும் பார்க்கலாம்.

மாபெரும் ஊருவமாகப் படைக்கப்பட்டுள்ள முக்குறுணி விநாயகர் திருவுருவம், கால் மாறி ஆடிய நடராசர் முதலிய ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும்.

மொட்டைக் கோபுரத்தின் அடியில் உள்ள தூண்கள் இசை ஒலிக்கும்.

ஆயிரக்கால் மண்டபத்துக்குள் சென்ருல், காட்சிப் பொருள்களைமட்டுமின்றி தூண்களில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களிலிருந்தும் எவ்வளவோ தெரிந்துகொள்ளலாம்.

இல்லற வாழ்வில் உள்ளவர்கள் இக்கோயிலில் 'சக்தி'க்குத் தான் முதன்மை இருந்து வருவதை அறியலாம்.

இக்கோயிலின் சிறந்த பகுதிகள், முந்தைய நூற்றுண்டுகளில் செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் என வாழ்ந்த துறவிகளின் கைவண்ணம் என்பதும் கவனத்திற்கு உரியது.

உணவுச் சுவைமிக்கார், கோயில் மடைப்பள்ளியில் நாளும் செய்யப் பெற்று விற்பனைக்குக் கிடைக்கும் பலவகை உணவுகளையும் ஆவணி மூல நாளில் கிடைக்கும் 'பிட்டு' வையும் சுவைக்கலாம்.

உயிரினங்களில் அக்கறை உள்ளவர்கள் உயிருடன் உள்ள கிளி முதல் யானை வரை பலவகை உயிரினங்களைக் காணலாம் கல்லில் உயிரினங்களின் வடிவங்கள் சித்திரிக்கப்பெற்றிருக்கும் திறனைக் கண்டு வியக்கலாம்; வாகனங்களாக இவற்றை உருவாக்கியுள்ளதையும் பார்த்து மகிழலாம்.

இன்றைய தேவைகளையும் இன்னும் சில நாட்களில் வரக் கூடிய தேர்தல்களையும் மட்டுமே எண்ணும் இக்கால மக்களைப் போலன்றி, எதிர்காலத் தேவைகளைப்பற்றிச் சிந்தித்துப் பெரிய அளவில் திட்டமிட்டு விரிவான கோயிலைக் கட்டிய நம் முன்னோர்களுக்கு இருந்த தாராளமான மனத்தையும் உயர்ந்த நோக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

கோயில் என்ற அமைப்பின் வாயிலாக மக்களின் பொருளாதாரச் செறிவு வளர வழிகண்டிருப்பதை, கோயிலுக்குள் உள்ள கடைகளைச் சுற்றிப் பாாத்துப் புரிந்து கொள்ளலாம்.

இசை முதல் ஓவியம் வரை, பல்கலைகளையும் வளர்க்கக் கோயிலைப் பயன்படுத்தியதால் அன்றே 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி உண்டாயிற்று என்பதையும் சிந்திக்கலாம்.

கலை ஆர்வம் உடையவர்கள் குறிப்பாகவும் சிறப்பாகவும் இக்கோயிலில் பார்க்கத் தக்கவை வருமாறு;

1. கோபுரங்களில் சுதை வேலை.

2. திருமண மண்டபம் (இது அமராவதிபுதூர் வயிநாகரம் வெங்கடாசலம் செட்டியார் நாகப்ப செட்டியார் குடும்பத்தார் மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்துக்காகக் கட்டியது)

3. கம்பத்தடி மண்டபம்.

கோயிலின் காலம்

பொற்றாமரைக்குளம் போன்ற சில பகுதிகள் மிகப் பழமையானவை.

ஆனால் இன்றைய கோயிலின் பொதுவான அமைப்பு 15-ஆம் நூற்றாண்டுக்குப்பின் உருவானதே.

விசுவநாத நாயக்கர் கி.பி. 1560-இல் கோயில் திருப்பணிக்கு ஒரு திட்டம் வகுத்து மதில்களையும் கட்ட ஆரம்பித்தார். அவரைத் தொடர்ந்து, பின் வந்த மன்னர்கள் திருப்பணியை நிறைவேற்றினர். இதுமுடிவடைய 120 ஆண்டுகள் ஆயிற்றென்றும் அதற்குச் செலவு அக்காலத்தில் ஒரு கோடியே இருபதுலட்சம் ரூபாய் மதிப்பிடலாம் என்றும் அறிஞர் கருதுகின்றனர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் என்ற நகரத்தார்கள் அக்காலத்தில் 25-இலட்சம் ரூபாய் செலவிட்டனர். 1960-ஆம் ஆண்டில் தமிழக அரசின் ஆதரவுடன் திரு. பி. டி. இராசனைத் தலைவராகக் கொண்ட குழு இக்கோயிலைப் புதுப்பித்தது. திரு. லெ. நாராயணன் செட்டியார், அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்தபோது 1974-இல் மீண்டும் பழுதடைந்த பகுதிகள் புதுப்பிக்கப் பெற்று நந்தவனக் காப்புச்சுவர் எழுப்பப்பெற்றது.

கீழ்க் கோபுரத்தின் நடுவிலிருந்து மேல் கோபுரத்துக்கு ஒரு கோடு கிழித்தால் அது சரியாகச் சிவலிங்கப் பெருமான் வழியாகப் போகும். அதேபோல் வடக்கு தெற்குக் கோபுரங்களுக்குக் கோடிட்டுப் பார்த்தால் சுந்தரேசர் திருக்கோயிலை இரண்டாகப் பகிர்ந்து செல்லும். இதனால் தமிழகத்துச் சிற்பிகளின் திறன் தெரியவரும்.

கோயில் நகைகள்

பல நூற்றாண்டுகளாக நம் நாட்டில் நகைகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பதை அறிய விரும்புவோர் "20 ரூபாய்" செலுத்தி மீனாட்சியம்மன் கோயில் நகைகளைப் பார்க்கலாம்.

விக்டோரியா அரசியார் பார்ப்பதற்காக இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்று ஆறுமாதம் வைத்திருந்தபின் அனுப்பப்பட்ட முத்துவிதானம், நீலமேகப் பதக்கம், ரூஸ் பீட்டர் என்ற மதுரைக் கலெக்டர் ஒருவர் செய்து கொடுத்த தங்க அங்கவடி மற்றும் நளமஹாராஜாவும், பாண்டிய, நாயக்க மன்னர்களும் அளித்த விலை உயர்ந்த நகைகள், முத்து, நவரத்ன கிரீடங்கள் கிழக்கு இந்தியக் கம்பெனிக் காசுகளாலும் ரோமன் நாணயங்களாலும் செய்த காசுமாலைகள், நற்பவளக்கொடி ஆகியவை குறிப்பிடத்தக்கன.

470காரட் எடையுள்ள வைரக்கிரீடம் மீனாட்சியம்மனுக்குச் சூட்டப்பெறுகிறது. இத்தகைய சிறப்பு திருப்பதி வேங்கடேசுவரர் கோயிலுக்கு மட்டுமே 1972 வரை இருந்தது. மீனாட்சிஅம்மனுக்கு 6.கிலோ கிராம் எடையுள்ள தங்கக் கவசமும் செய்யப்பட்டிருக்கிறது.

காந்தியின் கனவு

காந்தியடிகள் பல முறை மதுரைக்கு வந்திருந்தும், இக் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப் பெற்ற பிறகே, மீனாட்சி கோயிலுக்குச் சென்றார். "என்வாழ்வில் நான் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் இன்று தான் கை கூடிற்று" என்று பார்வையாளர் பதிவேட்டில் எழுதியுள்ளார்.

சிவனடியார்கள்

மதுரையில் 48,000 சிவனடியார் இருந்து சிவத்தொண்டு செய்து வந்ததாக நம்பி திருவிளையாடல் கூறும். 48,000 என்பது திருப்பெருந்துறை முந்நூறு, திருவீழிமிழலை ஐந்நூறு, திருவாக்கூர்ஆயிரம், தில்லை மூவாயிரம் என்றாற் போல ஒரு கூட்டத்தின் பெயராகும். இவர்கள் தில்லை, திருவானைக்கா, திருப்பூவணம் போன்ற தலங்களிலும் இருந்து சிவத்தொண்டு செய்ததாகத் தக்கயாகப் பரணி (கண்ணி 219, உரை) கூறுகிறது.

இந்த நாற்பத்தெண்ணாயிரம்தொண்டரிடம் கொண்டிருந்த பெருமதிப்பால், சிலர் தம் மக்களுக்கு '**நாற்பத் தெண்ணாயிர மாணிக்கம்**' என்று பெயரிட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில்

டெக்சாஸ் இராச்சியத்து ஊஸ்டனில் மீனாட்சி அம்மனுக்குக் கோயில்கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிற சிறப்புகள்

மதுரைக் கோயிலில் 125 சேவகர்கள் உள்ளனர். தமிழ் நாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் இவ்வளவு சேவகர்கள் இல்லை

மீனாட்சி அம்மன் சந்நிதிக்குள் நுழையும் வாயிற் கதவுகள், முக்குறுணிப் பிள்ளையார்க்கு அருகேயுள்ள கதவுகள், தெற்குக் கோபுரத்துக்குக் கீழேயுள்ள கல்லாலான தூண்கள் ஆகியவற்றில் கல்லிலும் மரத்திலும் நடனக் கலைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள,

கிழக்கு, மேற்குக் கோபுரங்களில் புராணக் கதைகள் பல சுதைச் சிற்பங்களாக உள்ளன.

கம்பத்தடி மண்டபத் தூண் ஒன்றில் யானைத் தலை பெண் உடல் புலிக்கால் ஆகியவற்றைக் கொண்ட சிற்பம் காணத்தக்கது.

தனிச்சிறப்புகள்

மதுரைக் கோயிலில் அம்மனுக்கே முதன்மை உண்டு. அம்மனை வழிபட்ட பிறகே இறைவனை வழிபடுவது மரபு. கோயிலும் அம்மன் பெயராலேயே வழங்கிவருகிறது.

பெரும்பாலான சிவன் கோயில்களில் இறைவன் கிழக்கு நோக்கியும் இறைவி தெற்கு நோக்கியும் கோயில்கொண்டிருப்பர். ஆனால் மதுரைக்கோயிலில் இறைவி, இறைவன் இருவருமே கிழக்கு நோக்கிக் காணப்படுகின்றனர்.

சொக்கநாதர் கருவறை இந்திரனின் கட்டளைப்படி மயன் என்ற தேவதச்சனால் அமைக்கப் பெற்றது என்று திருவியாடற் புராணம் கூறுகிறது.

சுவாமி கோயில் விமானத்தை எட்டுயானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும், அறுபத்துநான்கு கணங்களும் தாங்குவது போன்று காட்சியளிக்கின்றது. இது, பிற்காலத்தில் கட்டப்பெற்றதாயினும் புராணக்கதையில் கூறியபடி அமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோயில்களிலெல்லாம் நடராசப்பெருமானின் உருவங்கள் வலக்காலையூன்றி இடக்காலைத்தூக்கி ஆடுவது போன்றிருக்கின்றன. ஆனால் மதுரைக்கோயிலிலுள்ள நடராசப் பெருமான் இடக்காலையூன்றி வலக்காலைத்தூக்கி ஆடும் காட்சியளிக்கிறார். திருவிளையாடலில் கால் மாறியாடின படலத்திற் குறிப்பிட்டுள்ளதை நினைவுபடுத்தும் வகையில் இது இவ்வாறு அமைக்கப் பெற்றுள்ளது.

திருவிழாக்கள்

நடராசருக்குரிய அபிடேக விழாக்கள், அறுபத்துமூன்று நாயன்மார்களின் விழாக்கள் என்றெல்லாம் நாள்தொறும் மதுரையில் ஒரு திருவிழா நடைபெறுகிறது என்று கூறினாலும் தவறு ஆகாது. மிகப் பெரிய திருவிழாக்கள் சித்திரையிலும் மாசியிலும் நிகழ்கின்றன.

குறிப்பிடத்தக்க விழாக்கள் வருமாறு :

சித்திரை	-	சித்திரைத் திருவிழா (மீனாட்சி திருமணம்)
வைகாசி	-	வசந்த விழா (வைகாசி விசாக விழா)
ஆனி	-	ஊஞ்சல் விழா
ஆடி	-	முளைக் கொட்டுவிழா
ஆவணி	-	பிட்டுத் திருவிழா
புரட்டாசி	-	நவராத்திரி விழா
ஐப்பசி	-	கோலாட்ட விழா
கார்த்திகை	-	தீப விழா (6-ஆம் நாளும் 10-ஆம் நாளும் இடப வாகனக் காட்சி சிறப்பு)
மார்கழி	-	திருவாதிரை
தை	-	தைப்பூசத்தன்று தெப்பத் திருவிழா
மாசி	-	தை மாத மக நட்சத்திரத்தில் தொடங்கும் 40 நாள் விழா
பங்குனி	-	பங்குனி உத்தர விழா

தமிழக அமைச்சரவை பதவியேற்பு நெடுங்காலம் ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. பின்னர் அரசியல் கட்சிக்காரர்களின் முன்னிலையில் நடைபெறுவதற்காக, விழா நிகழிடம் இராஜாஜி மண்டபத்திற்கும் அதன் பிறகு கலைவாணர் அரங்கத்திற்கும மாற்றப்பட்டது. இவ்வாறே திருமலை நாயக்கர், தம் காலத்தில் வைணவத்திற்கு ஏற்றம கொடுப்பதற்காக, அழகரை மதுரைக்குக் கொண்டுவந்து, மாசிமாத உற்சவத்தின் பெருமையைச் சித்திரைப்

பவுர்ணமியில் நிகழும் திருவிழாவுக்கு வழங்கி. சித்திரைத் திருவிழாவை மாசி வீதிக்கும் மாசி விழாவைச் சித்திரை வீதிக்கும் திருப்பிவிட்டார்!

ஆயிரக்கால் மண்டபம்

'கால் ஆயிரம் உள்ள இம் மண்டபத்தைக் காண, கண் ஆயிரம் வேண்டும்' என்பது பழமொழி.

நாயக்க மன்னர்களின் தளவாயாக இருந்த அரியநாத முதலியார் காலத்தில் இம்மண்டபம் கட்டப்பெற்றது. நுழைவாயிலின் இரு புறங்களிலும் கண்ணப்பர், அரியநாதர், அரிச்சந்திரன், குறவன்-குறத்தி உருவச் சிலைகள் உள்ளன.

இம் மண்டபத்தில் கோயில் கலைக்கூடம் அமைக்கப் பட்டுள்ளது இதன் பிரிவுகளாவன :—

1. கட்டிடக்கலை மற்றும் கோயில் சிற்பங்கள்
2. சிலை இயல்-படிம வகைகள்
3 ஆகமங்களும் பூசை முறைகளும்
4. கோயில் அலங்காரம்
5. கவின் கலைகள்
6 நாட்டுப்புறக் கலைகள்
7 கல்வெட்டு முதலியன
8. தல விருட்சங்கள்—விலங்குகள்
9. சுவரோவியங்கள்
10. சந்தனக்கட்டையில் செய்த சாமரங்கள், தந்தத்தால் ஆன மஞ்சத்தின் வேலைப்பாடுகளின் மாதிரிகள் மற்றும் பனையோலையில் எழுதப்பட்ட பழங்காலத்துக் கோயில் கணக்குகள் முதலியன.

பிற கோயில்கள்

நுதல்விழி நாட்டத்திறையோன் கோயில், உவணச் சேவலுயர்த்தோன் கோயில், மேழிவலனுயர்த்தோன் (பலதேவர்) கோயில், கோழிச்சேவற்கொடியோன் கோயில் (ஊர்காண்காதை) ஐயை கோயில், கொற்றவை கோயில் (கட்டுரை காதை) முதலியன மதுரையில் இருந்தனவாகச் சிலப்பதிகாரம் கூறும்.

சிந்தாதேவி(கலைமகள்)யின் செழுங்கலை நியமம் (கோயில்) மதுரையில் இருந்ததாக மணிமேகலை அறிவிக்கிறது. மழுவாள் நெடியோன் (சிவபெருமான்) தலைவனாக ஏனைய கடவுளர்களின் கோயில்களும் கூடற்கண் இருந்தனவாக மதுரைக்காஞ்சி தெரிவிக்கும். ஏனைய கடவுளராக மாயோன், முருகன் முதலான தெய்வங்களை நச்சினார்க்கினியரும் சுட்டிக் கூறியுள்ளார். 41ஆம், 59-ஆம் பாடல்களில் கல்லாடமும் இவற்றைக் குறிப்பிடுகிறது.

சிம்மக்கல்லுக்குத் தெற்கேயுள்ள செல்லத்தம்மன் கோயிலில் ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தியவாறு கண்ணகியின் உருவம் உள்ளதால், அது கண்ணகி கோயிலாகக் கருதப் பெறுகிறது. அக்கோயிலைச் சூழ்ந்து பெரும்பாலும் ஆயர் குலத்தினரே வாழ்ந்து வருவதும் ஒப்புநோக்கத்தக்கது. கண்ணகியை அடைக்கலமாகக் கொண்ட மாதரி இங்கு வாழ்ந்திருக்க கூடும் என்றும் அறிஞர் சிலர் கருதுவர்.

மதுரையில் வேறு சில இடங்களிலுள்ள கோயில்களும் கண்ணகி கோயில்களாக இருக்கும் என்று அண்மையில் பலர் கருத்துக் கூறிவருகின்றனர். முடிந்த முடிவாக ஒன்றும் சொல்லுதற்கில்லை

வண்டியூரிலுள்ள மாரியம்மன் கோயில் கண்ணகி கோயிலாக இருத்தல் வேண்டும் என்பர் சிலர். மாரியம்மன் என்றால் மழை அளிக்கும் அம்மன் எனப் பொருளாகும். கண்ணகி மழைவளம் சுரக்கச் செய்ததால் கண்ணகியை மாரியம்மன் என்றனர் போலும். கோவலன் மதுரையில் ஆடித்திங்களில் கொலையுண்டான். கண்ணகி அத்திங்களில் தெய்வநிலை எய்தினாள். ஆடித்திங்களில் மாரியம்மன் விழாக்கள் நடப்பதாலும், அவ்விழாக் களில் சிலம்பைக் கொண்டு ஆட்டம் நடத்தலாலும், வணிகக் குலத்தினரே பெரும்பான்மை மாரியம்மன் விழாக்களில் ஈடுபடுவதாலும், மாரியம்மனைக் கண்ணகி என்றே ஐயமறக் கூறலாம். கண்ணகி மதுரைக்குக் கிழக்கு வாயிலாக வந்து மேற்கு வாயிலாக தனித்துச் சென்றதாகச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. கண்ணகி கணவனுடன் வையை ஆற்றைக் கடந்து வந்த இடத்தின் அறிகுறியாக வண்டியூர் மாரியம்மன் கோயில் ஏற்பட்டிருக்கும் போலும். ஆடி மாதத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் பெண்கள் பெருங்கூட்டமாக இக்கோயிலுக்கு வருவதைக் காண்கிறோம்.

தெப்பக்குளத்திற்கு மேற்கே தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரிக்குப் பக்கத்தில் பாழடைந்த கோயில் ஒன்றுண்டு. இது திருமலை நாயக்கரின் தமையனாரான முதலாம் முத்துவீரப்பர் (1609—23) கட்டியது. இதனை ஐராவதேஸ்வரர்கோயில் என்றும், முத்தீஸ்வரர் ஆலயம் என்றும் கூறுவர். இக்கோயில் தோன்றிய பின்னரே திருமலைநாயக்கர் மண்டபத்தோடு கூடிய தெப்பக் குளத்தை அமைத்தார்.

இம்மையில் நன்மை தருவார் கோயில் முதலிய பல கோயில்கள் மதுரையில் உள்ளன. அனைத்துக் கோயில்களின் பட்டியலையும் தர இந்நூல் இடம் தராது. அவ்வாறு நாம் தராமையால் அக்கோயில்களின் முக்கியத்துவத்தை நாம் குறைப்பதாகக் கருதக்கூடாது.

பாண்டி பதினான்கு தலங்களில் மீனாட்சியம்மன் கோயில் நீங்கலாக, மதுரை மாநகரிலேயே மற்றொரு தலம் உள்ளது. வைகையின் வடகரையில் கோரிப்பாளையத்துக்குச் சற்று மேற்கே, செல்லூர்ப் பகுதியில் சம்பந்தர் பாடல்பெற்ற திருஆப்பனூர்க் கோயில் இருக்கிறது. வைகையின் வெள்ளத்தால் தடைப்பட்ட சோழாந்தகன் என்னும் மன்னன் ஆப்பு ஒன்றை நிறுத்தி வழிபட அது சிவலிங்கமாக உருவெடுத்தது என்பது புராணம். இறைவன்—ஆப்பேசர், திரு ஆப்புடையார், இறைவி—குரவம் கமழ்குழலம்மை.

புகழ்பெற்ற வைணவக் கோயில்களும் மதுரையில் உள்ளன. கூடலழகர் கோயிலைப் பற்றி 43-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இக்கோயிலில் கருவறைக் கடவுளர் ஸ்ரீ இருந்த வளமுடையார் என்றும் அட்டாங்க விமானத்தில் காட்சி தரும் பெருமான் அந்தரவானத்தெம்பெருமான் என்றும் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். இக்கோயிலுள்ள பகுதி சங்ககாலத்தில் இருந்தையூர் என்று பெயர் பெற்றிருந்தது. இருந்தையூர் கருங்கோழி மோசியூர் இவ்வூரினராக இருக்கவேண்டும்.

இன்று முனிச்சாலை என வழங்கப்பெறும் இடத்திற்கு அருகே 'அண்டர்வானம் தண்ணீர்ப் பந்தல் தெரு' என்று ஒரு தெரு இருக்கிறது. 'அந்தரவானத்தெம்பெருமான் தண்ணீர்ப் பந்தல் தெரு' என்னும் பெயரே இவ்வாறு சிதைந்திருக்க வேண்டும். கோடைகாலத்தில் திருவிழாவுக்கு அந்தரவானத்தெம்பெருமான் வையைக்கரைக்கு எழுந்தருளிய நாளில் ஒரு தண்ணீர்ப் பந்தலை, அவ்விறைவன் திருப்பெயரால் நடத்தியிருப்பார்கள்.

தல்லாகுளத்திலுள்ள சீனிவாசப்பெருமாள் கோயில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேபுகழ்பெற்றது.

தெற்கு, மேற்கு மாசி வீதிகள் கூடுமிடத்தில் உள்ள மதனகோபாலசாமி கோயில், நாயக்கர் ஆட்சியில் கட்டப் பெற்றது. இதில் இருந்த 16 கால் மண்டபத்தை 1912-இல் ஓர் அமெரிக்கர் நூறுரூபாய்க்கு விலைக்கு வாங்கி அமெரிக்காவிலுள்ள பிலடல்பியா மியூசியத்துக்கு அன்பளித்தார். அதைப்பார்த்த பேரறிஞர் நார்மன் பிரவுன் மதுரைக்குவந்து, இந்தக் கோயில், மற்றும் குறிப்பிட்ட மண்டபம் ஆகியவற்றின் வரலாற்றை ஆராய்ந்து நூலாக எழுதியுள்ளார்.

மதுரையில் கிறித்தவ தேவாலயங்களும் முஸ்லிம்களின் மசூதிகளும் பல உள்ளன. இவற்றைப்பற்றி இந்நூலின் முற் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறோம்.

காணத்தக்க இடங்கள்

புது மண்டபம்

இது, சுவாமி சந்நிதிக்கு எதிரே கீழைச்சித்திரை வீதிக்கும் கீழ ஆவணி மூல விதிக்கும் இடைப்பட்டது. திருமலைநாயக்கரால் அமைக்கப்பட்டது. 300 ஆண்டுகள் ஆகியும் இன்னும் 'புது' மண்டபம் என்றே குறிப்பிடப்படுகிறது.

110மீட்டர் நீளம்; 35மீட்டர் அகலம். 8மீட்டர் உயரம் உள்ள 124தூண்கள் நான்கு வரிசைகளாக அமைக்கப்பட்டுள்ளன. இம் மண்டபத்தைச் சுற்றிலும் திருவிழாக் காலத்தில் தண்ணீர் தேக்குவதற்காக சிறிய அகழிகள் உள்ளன. அந்த அகழிகளுக்கு 'திரு அடிவாரம்' என்று பெயர் மண்டபத்தைச் சுற்றிலும் விளாமிச்சை வேர்த் தட்டிகளைத் தொங்க விடுவதற்காக, மேல் கொடுங்கைகளில் துவாரங்கள் காணப்படுகின்றன. கடுமையான கோடையிலும், திரு அடிவாரத்தில் நீரைத் தேக்கி, தண்ணீர் நனைக்கப்பட்ட விளாமிச்சை வேர் தட்டிகளைக்கட்டி உள்ளே அமர்ந்தால் இன்றைய குளிர்சாதன வசதியையும் விஞ்சும்.

இம்மண்டபத்தின் நடுப்பகுதியில் திருமலை நாயக்கர் உள்பட நாயக்க மன்னர் பலரின் உருவச்சிலைகள் உள்ளன. மீனாட்சி அம்மனின் திருமணக் கோலம், பத்திரகாளி, நடராசர்,

இராவணன் கயிலாய மலையைத் தூக்கிய காட்சி, சூரிய சந்திரர்கல் யானைக்குக் கரும்பு வழங்கியது முதலிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன.

இன்றும் வசந்த விழா நடைபெறும் கருங்கல் மண்டபம், உள்பகுதியில் இருக்கிறது.

திருமலை நாயக்கர் மனைவி ஒருத்தியின் உருவச்சிலை புது மண்டபத்தில் செதுக்கப்பட்டிருப்பதைப் பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. அதைச் செதுக்கிய சிற்பியின் உளி, அவளுடைய தொடைக்கு அருகே ஒரு புள்ளியை வைத்துவிட்டது. அதே இடத்தில் அவளுக்கு ஒரு மச்சம் இருந்ததால், திருமலை நாயக்கர் அவளுடைய நடத்தையில் ஐயம் கொண்டு அவளைக் கொன்று சிற்பியைத் தண்டித்தார் என்பர்.

நடுத்தரக் குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றும் எல்லாவகையான கடைகளும் புது மண்டபத்தில் உள்ளன. எனவே இது சாதாரண மக்களின் பேரங்காடியாக விளங்குகிறது.

ராய கோபுரம்

புது மண்டபத்திற்குக் கிழக்கே மிகப் பெரிய கோபுரம் ஒன்றைக் கட்ட 1654-இல் திருமலைநாயக்கர் அடித்தளம் போட்டிருக்கிறார். இதன் நீளம் 58மீட்டர் அகலம் 39மீட்டர். இந்தக் கோபுர நிலையின் உயரம் மட்டும் 19மீட்டர். இது கட்டி முடிக்கப் பட்டிருந்தால் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தையும் திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்தையும் விட உயரமாக இருந்திருக்கும்.

விட்ட வாசல்

சுவாமி சந்நிதிக்கு நேரே ராயகோபுரம் இருப்பதுபோல, அம்மன் சந்நிதிக்கு நேரே விட்டவாசல் என்ற கட்டிடம் உள்ளது. இதைப்பற்றி வேறுபட்ட இரு கருத்துகள் உண்டு.

முதல் கருத்து: பாண்டிய மன்னர்களின் பழைய கோட்டையின் ஒரு பகுதியே இது நகரம் விரிவாக்கப் பட்ட போது கோட்டைச் சுவர்கள் இடிக்கப்பட்டன. அப்போது இவ்வாயில் பகுதிமட்டும் இடிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டது அதனால் இது விட்ட வாசல் என்று பெயர்பெற்றது.

இரண்டாவது கருத்து: விசயநகர அரச வம்சத்தைச் சேர்ந்த விட்டாளன் தென் திருவாங்கூர்ச் சீமையில் பெற்ற வெற்றியின் நினைவாக இந்த வாயில் கட்டப்பட்டது.

விட்டவாசல், இந்திய அரசின் தொல் பொருள் துறையினரால் வரலாற்றுச் சின்னமாகப் பேணப்பட்டுவருகிறது.

திருமலை நாயக்கர் மகால்

ஆக்ராவில் தாஜ்மகாலையும் டில்லியில் செங்கோட்டையையும் ஜீம்மா மசூதியையும் கட்டி மொகலாய மன்னர்களுள் அழியாப் புகழ் பெற்றவனாக ஷாஜஹான் விளங்குகிறான். இவ்வாறே தெப்பக்குளத்தையும் மீனாட்சியம்மன் கோயில் கோபுரங்கள் மண்டபங்கள் ஆகியவற்றையும் புதுமண்டபத்தையும் மகாலையும் அமைத்து நாயக்க மன்னர்களுள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என வரலாறு புகழ் பாடச் செய்து இன்றும் என்றும் வாழ்பவர் திருமலைநாயக்கர்.

திருமலை நாயக்கர் இறந்து 300 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும், இப்போதுதான் அவருக்கு யோகம் அடித்திருக்கிறது. அவர் பெயரால் மதுரையில் ஒரு கல்லூரி தோன்றியிருக்கிறது அழி வழக்குகளின் விசாரணையும் வழக்கறிஞர்களின் பொய்யான வாதங்களும் ஒலித்த அவருடைய மண்டபத்திலிருந்து நீதி மன்றங்கள் அகற்றப்பட்டு, மண்டபம் புதுப்பிக்கப்பெற்று புதுமணப்பெண் போன்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. தமிழ்நாடு அரசின் தொல்பொருள்துறையின் கண்காணிப்பில் புதிதாக அருங்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது; இது தென் மாவட்டங்களுக்குப் பெருமை தரக்கூடிய வகையில் உருவாக்கப் பட்டிருக்கிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த அரண்மனையுள் நுழைந்ததும், தூண்கள் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. மூக்கின் மேல் கை வைக்கிறோம். நம் பணப்பையின்மீது கண் வைத்தபடி, பல பகுதிகளையும் காட்டுகிறார் அப்பணியில் ஈடுபட்ட வழிகாட்டி.

"என்ன பாக்கறீக? உயரம் அம்பத்தெட்டு அடி; சுத்தளவு பதினாறு அடி . மூணு பேர் சேர்ந்து கை கோத்து அணைச்சாத்தான் தூணை வளைச்சுப் பிடிக்க முடியும். கட்டடத்தைப் பார்த்தீகளா? கடுக்காச் சாறு, கரும்புச் சாறு...அரபி நாட்டுச் சுண்ணம்பு ..

பதனி இவ்வளவும் சேர்த்து சாந்து கூட்டிக் கட்டப்பட்டதாச்சே! தூணுக்கு மட்டும்தான் சுண்ணும்பு அடிப்பாக. கூரையிலே சுண்ணும்பு புடிக்காது....''

''முன்னூறு வருசத்துக்கு மேலே ஆகுது ...அஸ்திவாரம் போட்டுக் கட்டடத்தை முடிக்க முப்பத்தாறு வருசம் ஆச்சு .. கடம்ப வனமாயிருந்த இந்த இடத்தை அழிச்சு வண்டியூர் தெப்பக் குளத்திலேருந்து மண் எடுத்து வந்து கட்டினுக. அப்பத்தான் முக்குறுணிப் பிள்ளையார் கிடைச்சாரு. அவரைக் கோயில்லே பாத்திருப்பீகளே. மண் வெட்டின இடம் பள்ளமாப் போனதும் அதைத் தெப்பக் குளமா மாத்திட்டாரு திருமலை நாயக்க மகாராஜா!''

நாளோலக்க இருக்கை, அந்தப்புரம் முதலியனவும் மகாலில் காணத்தக்கன.

மகாலுக்குச் சற்று வடக்கே பத்துத்தூண் சந்தில் கருங்கல்லால் ஆனதும் 20 மீட்டர் உயரமுள்ளதுமான பெரிய தூண்கள் உள்ளன. யானைகளைக் கட்டுவதற்காகத் திருமலை நாயக்கர் இவற்றை நிறுத்தியதாகக் கூறப்படுகிறது.

காந்தி மியூசியம்

காந்தி மியூசியம் உள்ள பகுதி தமுக்கம் எனப்படும். 'தமுகமு' என்ற தெலுங்குச் சொல்லின் சிதைவே தமுக்கம். தூண்களின் இடையே அமைந்த வளைவு மண்டபம் என்று இச் சொல் பொருள்படும். யானைகளிடையே போட்டி முதலியன நடைபெற்ற விளையாட்டு மைதானத்தின் நடுவே இத்தகைய மண்டபத்தை அரசி மங்கம்மாள் கட்டினுளாம். இந்நாளில் அனைத்து இந்தியக் கால் பந்துப் போட்டி முதல் அரசியல் கட்சி கள் நடத்தும் மாநாடுகளின் போட்டி வரை நடைபெறும் இடமாகத் தமுக்கம் உள்ளது.

காந்தியடிகள் வாழ்ந்த குடிசையின் வடிவமும் அவர் பயன் படுத்திய பொருள்களும் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் படங்களும் ஓவியங்களும் இங்கு காணத்தக்கன. இந்திய விடுதலை இயக்கத்தின் வரலாற்றை அறிய இக் காட்சிக் கூடம் உதவுகிறது.

பழமையான நூலகங்கள்

சௌராஷ்டிர நூலகம், எம். டி. சி. சி. பாங்கு நூலகம், விக்டோரியா எட்வர்டு ஹால் நூலகம், மேலச்சந்தைப்பேட்டைத் தெரு பிரம்மஞான சபை நூல் நிலையம், தமிழ்ச் சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலை ஆகியவை பழமையானவை.

காந்தி மியூசியம் நூலகம் 1959-இல் ஏற்பட்டது.

தெருப்பெயர்கள் சில

சங்கீத விநாயகர் தெரு, சித்திரக்காரத் தெரு, தென்னோலைக்காரத்தெரு, இராமாயணச் சாவடி தெரு, மறவர் சாவடித் தெரு, செம்பியன் கிணற்றுத் தெரு, பாண்டியவேளாளர் தெரு, அளவுக்காரத் தெரு, அரிசிக்காரத் தெரு, பச்சரிசிக்காரத் தெரு, எழுத்தாணிக்காரத் தெரு.

தொழில் வளர்ச்சி

பிற நகரங்கள் தொழில் வளர்ச்சியால் ஏற்றம் பெற்று விரிவடைந்துள்ளன மதுரை மாநகரோ அதன் மக்கள் தொகைக்கும் பெருமைக்கும் ஏற்றவாறு தொழில் துறையில் வளர்ச்சியடையவில்லை. அரசினர் இந்நகரில் பெருந் தொழில் தொடங்க மூலதனம் போட முன்வரவில்லை.

ஆலைத் தொழில் மட்டுமே இந்நகரின் உயிர்நாடியாக இருப்பதை ஏழாவது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறோம். இவ்வகையில் தலைமை வகிக்கும் மதுரை கோட்ஸ் நிறுவனம், ஓராண்டுக்கு நூறு கோடிரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தும் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உலகெங்கும் ஏற்றுமதி செய்தும் வருகிறது. புதிய புதிய பொருள்கள் பலவற்றை உற்பத்தி செய்தபோதிலும் இந்நிறுவனத்தின் உற்பத்திக் கூடங்கள் தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், செரம்பூர் போன்ற ஊர்களில் உள்ளன. ஆட்சி அலுவலகங்களும் மதுரையிலிருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டுள.

தூத்துக்குடியையும் கொச்சியையும் இணைக்கும் அகலமான இரயில் பாதையும், கொச்சியிலிருந்து மதுரைக்கு பெட்ரோல் வரவழைக்க எண்ணெய்க் குழாயும் தேவை.

மதுரையின் பிற தேவைகள்:

உயர்நீதி மன்றத்தின் கிளை, இலங்கைக்கு ஆகாய விமானப் போக்குவரத்து.

மதுரையில் வானொலி நிலையமும் கோடைக்கானலில் தொலைக்காட்சி நிலையமும் அமைக்க இந்திய அரசு முன்வந்திருக்கிறது.

அறிஞர்களின் மதிப்பீடு

மதுரையைப் பற்றி ஏராளமாக எழுதப்பெற்றிருக்கிறது. பிளினி, தாலமி, மெகஸ்தனிஸ் போன்ற கிரேக்க மேதைகள் மதுரையின் புகழை வரைந்துள்ளனர். இந்நாளில் ஆங்கில எழுத்தாளர்களுள் தலைசிறந்தவராக விளங்கும் சாமர்சட் மாம் என்ற நாவலாசிரியர் தமது Razor's Edge என்னும் இணையற்ற படைப்பில் 'மதுரைக் கோயில் இந்து மதத்தின் உயிர் நாடியான கொள்கைகளை உணர்த்தவல்லது' என்று தம் மதுரைப் பயணத்தினை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருக்கிறார்.

''உலகத்திலேயே தொன்மை வரலாறு உடைய ஒரு சில நகரங்களுள் மதுரை ஒன்று. மதுரைக்கு உள்ள வேறு பல சிறப்புகளுள், புலவர் பலர்கூடி ஆய்ந்து செந்தமிழை வளர்த்த தலைநகராக விளங்கியது ஒன்று; பழம்பெருங்கோயிலாகிய மீனாட்சியம்மன் திருக்கோயிலைக் கொண்டு விளங்குவது மற்றொன்று; பாண்டியர் வளர்த்த பண்பாட்டை இன்றுவரையில் போற்றி வளர்த்து வருதல் இன்னொன்று'' என்றார் டாக்டர் மு. வ.

வாழும் எழுத்தாளர் இருவரின் படைப்புக்களிலிருந்து மேற்கோள்களைத் தருவோம்:

தீபம் திரு. நா. பார்த்தசாரதி

மேங்காட்டுப் பொட்டலில் மாலை வேளைகளில் கூடும் பறவைகளின் ஒலிகளையும், அம்மன் சந்நிதி முகப்பின் சந்தனம் பூ வாசனைகளையும் டவுன்ஹால் ரோடில் ஓடும் ஜட்காக் குதிரைகளின் மணி சலங்கை ஓசைகளையும், ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் போனாலும் நான் நினைத்து மகிழப் பழகியிருக்கிறேன். மல்லிகைப்பூ மதுரையிலிருந்து ''பறந்து'' வந்து கொஞ்ச காலமாகப் பட்டினத்தைக் கூட இப்போழுது மணக்கச்

செய்கிறது. திருப்பரங்குன்றம் வெட்டிவேரின் வாசனையும் கப்பலூர் மல்லிகையின் கிறங்க வைக்கிற மணமும், அழகர் கோவில் மாவடுவின் சுவையும் மதுரையின் பெருமைக் கணக்கில் தான் சேரும்.

சித்திரைத் திருவிழாவின்போது ஆற்றில் அழகர் இறங்குகிற தினத்தன்று எங்கள் மதுரைக்கு மணப்பெண்ணின் அழகு வந்து விடும். "ஆற்றைக் கண்டாயோ அழகரைப் பார்த்தாயோ?" என்று பழமொழியையே உண்டாக்கிவிட்ட பெருமை இது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து டவுன்ஹால் ரோடு வழியாக மேலக் கோபுர வாசல் வரை உள்ள தெருவைப் பார்த்தாலோ இரவு பகலென்றில்லாமல் எந்நேரமும் சித்திரைத் திருவிழாப் போலத்தானிருக்கும். இந்த ரோடில் இரவு ஒரு மணிக்குக்கூட மல்லிகைப் பூப்போல் சுடச்சுட இட்லியும், அருமையான பசுவின் பாலும், நல்ல மலைப்பழமும் கிடைக்கும். மதுரையின் "கூடல்" என்ற பெயரை இன்று இந்தச் சாலைதான் நிரூபித்துக் கொண்டு இருக்கிறது. ரயிலிலும், பஸ்ஸிலும் எந்த ஊரிலிருந்து மதுரைக்கு வந்தாலும் இங்கேதான் கூட வேண்டும்.

எங்கள் மதுரையிலேயே அமைதியான பசுமலையிலும், கொஞ்சம் சந்தடியுள்ள வசந்த நகரிலும், அதிகம் பரபரப்பான பெருமாள் கோவில் தெருவிலும், எதிரே வைகை நதி தெரிகிற வெங்கடசாமி நாயுடு தெருவிலும் (இதற்கு "ஐயோ அப்பா தெரு" என்றும் நாட்டு வழக்கமாக ஒரு பெயர் உண்டு), புதிதாக உண்டான சோமசுந்தரபுரம் குடியிருப்பிலும், சந்து பொந்துகள் நிறைந்த வீரராகவப் பெருமாள் சந்நிதியிலும், அகலமான தமிழ்ச் சங்கம் வீதியிலும், மாறி மாறி நான் வசித்திருக்கிறேன். மதுரையின் அமைதியும் எனக்குப் பிடிக்கும். ஆரவாரமும் எனக்குப் பிடிக்கும். ஏனென்றால் அந்த அமைதி, ஆரவாரம் இரண்டுமே எங்கள் ஊரினுடையவை. என் மனம் பிறந்த மண்ணினுடையவை.

எங்கள் ஊரில் கடற்கரைக்குப் பதில் காற்றுவாங்க ரயில்வே மேம்பாலம் உண்டு. இந்தப் பாலத்தை "வேட்ஸ்வொர்த்" பாடிய "வெஸ்ட்மின்ஸ்டர் பிரிட்ஜ்" உடன் ஒப்பிட்டு என்னுடைய "பொன்விலங்கு" நாவலில் எழுதியிருக்கிறேன். இந்தப் பாலத்துக்கும் இதன் கீழே உள்ள "வலைவீசு தெப்பக்குளம்" என்ற குளத்திற்கும், வயல்களுக்கும், சாயங்கால வேளையில் ஒரு

மோகினியின் அழகு வந்துவிடுவதுண்டு. குதிரைகள் ஓடாத ரேஸ் கோர்ஸ் ஒன்றும் வைகைக்கு வடக்கே எங்களூரில் உண்டு. அது வசதியுள்ளவர்கள் காற்று வாங்கப் போகுமிடம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு

மதுரை மாநகரம் வெகு பழமை வாய்ந்தது. இன்று அது தூங்காத நகரம் என்ற புகழையும் பெற்றிருக்கிறது. மதுரை நகரத்தில் எந்த நேரத்திலும் எந்தப் பொருளையும் வாங்கி விடலாம். இந்தியாவில் வேறு எந்த நகரத்திற்கும் இந்தப் பெருமை இல்லை. இரவு 12 மணிக்குத் திருமணத்தைப் பேசி முடித்து காலை நான்கு மணிக்குள் தாலி உட்பட எல்லாப் பொருள்களையும் வாங்கிவிடக்கூடிய நகரம் மதுரை நகரம் ஒன்றுதான்.

இரவு நேர இட்லி மதுரையில் பிரசித்தி பெற்றது. அதைப் போலவே 'நைட்மட்டன் ஸ்டால்'களும் மதுரையில் தான் மிகுதி.

சலவைக் கடைகள், க்ஷவரக் கடைகள், ஜவுளிக் கடைகள்-டவுன் ஹால் ரோடில் இவைகளுக்கு அடைப்பு என்பதே இல்லை.

ரோமாபுரியைப் போல பழைய காலச் சின்னங்களும், புதிய மோஸ்தர் மாளிகைகளும் நிறைந்த பட்டணம் மதுரைப் பட்டணம்.

பூர்வீக மதுரை வைகை நதிக்குத் தெற்கே உள்ளது தான். இன்று அது வைகைக்கு வடக்கேயும் செழித்து வளர்ந்து நிற்கிறது.

இந்நகரத்தின் எல்லையைக் குறிக்கும்படி சிவபெருமானால் ஏவப்பட்ட சர்ப்பம் ஊரைச்சுற்றி வேகமாக வரும் போது அதன் விஷம் பல இடங்களிலும் பரவி அதனால் நகர மக்கள் அனைவரும் துன்புற உடனே சிவபெருமான் அவர் தன் சடா பாரத்திலிருந்த சந்திரனிடத்திலுள்ள மதுவைத் தெளித்து நகரைச் சுத்தம் செய்தமையால் 'மதுரை' என்று பெயர் வந்தது என்பது கதை.

இன்றைய மதுரை ஒளிமயமாகத் திகழ்கிறது. வைகைக்குத் தென்கரைதான் புராதன மதுரை. ஆனால் இப்போழுது புராதன மதுரையை விட வைகையின் வடகரைதான் எல்லா வகையிலும் மேலோங்கி வளர்ந்திருக்கிறது. அரசு அலுவலகங்கள், கலைக் கல்லூரிகள், சட்டக்கல்லூரி, மருத்துவக்கல்லூரி, நீதிமன்றங்கள் பொது மருத்துவமனை, கலைஞர்கருணாநிதி ஸ்டேடியம், அறிஞர் அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா மாநகராட்சி மாளிகை, தமிழிசைச்சங்கம் எல்லாமே மதுரை வடகரையில் தான் அமையப் பெற்றிருக்கின்றன, ஹைதராபாத் செகந்தராபாத் என்று இரு நகரங்கள் ஒன்றாக இருப்பது போல இன்று மதுரை தென் பகுதியும் வட பகுதியும் இருபெரு நகரங்களாகிவிட்டன.

இலக்கியம், வரலாறு, அரசியல் என்ற முத்துறையிலும் தனக்கென ஒருமுத்திரையைப் பதித்துக்கொண்ட நகரம் மதுரை.

மதுரை மேலும் வளர அதிலும் தொழில் துறையில் வளர மதுரை மக்கள் பெரிதும் ஆவலுற்றுள்ளனர்.

மதுரையில் கடற்கரை இல்லையே என்ற குறை இல்லை. மீனாட்சி அம்மன் கோயில் உருவாகும் போதே கடற்கரை போல் காற்று வரக்கூடிய வகையில் நிர்மாணித்திருக்கிறார்கள்.

இதற்குச் சான்று இன்றும் கோயிலுக்குள் இருக்கும் ஆடி வீதிக்குப் போய்ப் பார்த்தால் தெரியும். மெரீனா பீச்சுக்கு வருவது போல மக்கள் அங்கே குழுமியிருப்பார்கள்; காற்றும் அப்படி வீசும்.

15

பிற ஊர்களைப் பற்றிய விவரங்கள்

※

மதுரைக் கோட்டம்

I மதுரை வடக்கு வட்டம்

இது மதுரை மாநகராட்சிப் பகுதியாக உள்ளது. இவ் வட்டத்தின் மக்கள் தொகை ஏழு இலட்சம்.

II மதுரை தெற்கு வட்டம்

இவ்வட்டம் மூன்று ஊராட்சி ஒன்றியங்களையும் ஒரு நகரியத்தையும் கொண்டது.

1. மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்

இந்த ஒன்றியம் மதுரை மாவட்டத்து 34 ஒன்றியங்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படும். இன்னுமொரு பெருஞ் சிறப்பும் இந்த ஒன்றியத்துக்கு உண்டு. தமிழ் நாட்டில் ஏற்பட்ட முதல் ஊராட்சி ஒன்றியம் இதுவே. ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும் ஏற்பாடு இங்கேதான் முதலில் அமல் செய்யப் பட்டது.

இந்த ஒன்றியத்தின் அலுவலகங்கள் மதுரையில் உள்ளன. 38 சிற்றூர்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

மதுரை மாநகரின் ஒரு பகுதியும் மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், மேலூர், இராமநாதபுர மாவட்டத்துத் திருப்பூவணம் ஆகிய ஒன்றியங்களும் இதன் எல்லையில் உள்ளன. ஒன்றியத்தின் ஊர்கள் மதுரை நகருக்குக் கிழக்கேயும் வைகை ஆற்றுக்குத் தெற்கேயும் உள்ளன. அந்தமான், செங்கோட்டை, காதக்கிணறு என்னும் ஊர்ப் பெயர்கள் குறிப்பிடத்தக்கன.

இது ஒரு வளமான பகுதி. தமிழ் நாட்டுக்கே எடுத்துக் காட்டான முறையில் இந்த ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. பாசனவசதியால் நெல் வேளாண்மை ஏற்றம் பெற்று உத்தங்குடி, ஒத்தக்கடை, கள்ளஞ்சி, மாங்குளம், கிழமங்கலம், சக்குடி, வண்டியூர், வரிச்சியூர், ராஜாக்கூர் என்னும் ஊர்கள் மிகச் செழிப்பாக உள்ளன.

ஆனைமலை

இவ்வொன்றியத்தில் முக்கியமாகக் கண்ணில் படுவது ஆனைமலை. மதுரை மாநகருக்குக் கிழக்கே 10. கி. மீ. தொலைவில ஒரு யானை படுத்திருப்பது போன்று அமைந்தது.

சிறப்புமிக்க பொய்கைகளும் கோயில்களும் இம்மலைப் பகுதியில் உள்ளன. மதுரை நகரை அடுத்த எண்பெருங்குன்றங்கள் சமணசமயத் துறவிகளின் இருப்பிடமாக விளங்கின என்பது இலக்கியத்தில் கூறப்படும் செய்தி. மலையின் அமைப்பும் அங்குக் காணப்படும் படுக்கைகளும் இதை உறுதி செய்கின்றன. சமணர் இங்கு இருந்ததைத் திருஞானசம்பந்தர் "ஆனைமாமலை யாதியாய இடங்களில் பல அல்லல் சேர் ஈனர்கட்கு எளியேனலேன்" என்று திருவாலவாய்த் தேவாரத்தில் கூறுகிறார்.

இம்மலையருகே வேளாண்மைக்கல்லூரி அமைந்திருக்கிறது.

நரசிங்கம்

ஆனைமலையின் மேற்குக் கோடியில் அதன் அடிவாரத்தில் அமைந்த இவ்வூர் கி. பி. 8,9-ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புடன் விளங்கிற்று. இவ்வூரின் பழைய பெயர் இரணியமுட்டம். பத்துப் பாட்டில் ஒன்றாகிய மலைபடுகடாம் என்னும் நூலின் ஆசிரியர் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

என்பவர் இவ்வூரினர். இன்று இங்கு பல இனத்தவர் உள்ளனர். சௌராட்டிரர் சிலரும் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் இங்கு சமணத்தோடு பௌத்தமும் நிலவியிருக்கக்கூடும். பௌத்தத் துறவிகள் உடுத்தும் உடைகளைச் சில சாதியார் நேர்த்திக் கடனுகச் சில நாள்களுக்கு உடுத்துகின்றனர். காரணம் என்ன என்று யான் (இந்நூலாசிரியர்) வினவியபோது அவர்களால் விடைகூற இயல வில்லை. அவர்களுடைய முன்னேர் பௌத்தராக இருந்திருக்கக் கூடும் என்பது என் கருத்து.

இங்குள்ள பொய்கை புவியியல் சத்து நிறைந்த நீரை உடையது. இப்பொய்கை அருகே கீழே கிடக்கும் கற்களுக்கு ஒரு விளக்கம் கூறலாம். 20 மேடுகள் உள்ளன. இவை கடவுளின் சின்னமாக அமைந்திருக்கக்கூடும். 24 தீர்த்தங்கரரை நினைவூட்டி 24 மேடுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் நான்கு உடைந்திருக்கக் கூடும். மூர்த்திக்குப் பதிலாகப் பீடங்களை வழிபடுவது மரபு.

இங்குள்ள நரசிம்மர் கோயிலின் அமைப்பு வியப்பானது. ஆனைமலையின் ஒரு பக்கத்தையே குடைந்து, குடைவரைக் கோயிலாக அமைத்திருக்கின்றனர் பாறையைக் கருவறையாகவும் பாறையின் ஒரு பகுதியை நரசிம்மர் யோகாசனத்தில் அமர்ந்த உருவமாகவும் செதுக்கியிருக்கிறார்கள். பாண்டிய மன்னன் சடையவர்மன் பராந்தகனின் அமைச்சனான மாறன் காரி என்பவன் இக்கோயிலைக் கட்டியதாகத் தெரிகிறது.

குகைக் கோயிலின் கருவறைச் சுவரின் இரு புறமும் பாண்டியர் வரலாற்றை வரையறுத்துக் கூறும் கல்வெட்டுகள் உள்ளன. இந்நாளில் ஒரே அறிக்கை ஆங்கிலத்திலும் இந்தியிலும் அல்லது ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப் பெறுவதைப் போல, இங்கு ஒரு கல்வெட்டு தமிழ் எழுத்திலும் மற்றொன்று கிரந்த எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. செய்தி ஒன்றே இவ்விரு கல்வெட்டுகளுமே 'ஆனைமலைக் கல்வெட்டுகள்' என்று கூறப்படுவன.

இதை அடுத்து, முன் மண்டபத்துக்கு வந்தால் வட்டெழுத்தில் பெரியதொரு கல்வெட்டுக் காணப்படுகிறது. வட்டெழுத்து என்பது பாண்டி நாட்டில் மட்டுமே காணப்படும் தமிழ் எழுத்தாகும். இக்கல்வெட்டு பராந்தகன் காலத்தது எனத் தெரிகிறது. கோயிலின் மற்றப் பகுதிகளிலும் கற்சுவர்களில் பண்டைக்காலம் முதல் அண்மைக்காலம் வரை செதுக்கப்பட்ட பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கோயிலின் மறுபக்கத்தில் மற்ெருரு குடைவரைக் கோயில் இருக்கிறது. இதனுள் ஆணும் பெண்ணுமாக அமர்ந்த இரு உருவங்கள் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. கருவறையின் வெளிச்சுவரில் ஒருபுறம் மயிலும் மற்ெருருபுறம் சேவலும் செதுக்கப்பட்டுள்ளதைக் கொண்டு இது முருகன் கோயில் என்று கருதுகின்ருர்கள். இக்கோயிலை உள்ளூரார் லாடன் கோயில் என்று கூறுவர். நாகபுரிக்கும் ஜபல்பூருக்கும் இடையேயுள்ள லாடநாட்டிலிருந்து வந்த துறவிகள் இங்கு தங்கியிருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும். வட்டக்குறிச்சி நம்பிரான் பட்டசோமாஜி பரிவிராஜகர் என்பவர் இக்கோயிலைப் ('புதுக்கி') திருப்பணி செய்து முடித்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டு இங்கு உள்ளது. முருகன் தம் தேவியோடு அமர்ந்த நிலையில் உள்ளார்.

முருகன் (இருபுறப் பூணூல் போன்ற) வீரச்சங்கிலி அணிந்துள்ளார். மண்டபத்தின் இருபுறமும் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று தவம் செய் முனிவர்களின் உருவங்கள் வடிக்கப் பெற்றுள்ளன.

தெற்கில் நரசிங்கம் கிராமத்தில், 16மீட்டர் உயரத்தில் ஒரு தனிப் பாறையின் முகப்பில் வரிசையாக ஏராளமான சமண தீர்த்தங்கரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் கீழே வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன.

பாரசநாதர், மாவீரர் உருவங்களும் பாண்டிய மன்னன் அவர்களை வணங்கும் கோலமும் சித்திரிக்கப்பெற்றுள்ளன. எனவே இவை சம்பந்தர் காலத்துக்கு முற்பட்டன என்றும் பாண்டி நாட்டில் சமணம் ஏற்றம் பெற்றிருந்தபோது செதுக்கப் பெற்றன என்றும் கொள்ளலாம்.

திருமோகூர்

நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடிய வைணவத் தலம். திருவாதவூர்ச் சாலையில் ஒத்தக்கடையிலிருந்து மூன்று கி. மீ. தொலைவிலுள்ளது.

இவ்வூர் ஒரு போர்க்களமாக இருந்தது என்று இலக்கிய வாயிலாக அறிகிரேும். மோகூர் என்ற பெயருடன் பரமக்குடி அருகே ஓர் ஊர் உளது. அங்கே பழமைச் சின்னங்கள் இல்லை ஆனைமலை வரை தென்பறம்பு நாடு பரவியிருந்தது. எனவே

இது தென்பறம்புநாட்டு மோகூர் என்றும் கூறப்பட்டது. திருமோகூர் என்னும் சிறப்புக்கேற்ப இங்குப் பெருமாள்கோயில் இருக்கிறது. அரண்மனையருகே கோயில்கட்டும் பழக்கம் பழந் தமிழ்நாட்டில் பரவலாக வந்தது. பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்கள் குறிப்பிடும் வள்ளலான பழையன் என்ற குறுநில மன்னன் வாழ்ந்த மோகூர் இதுவே. ஆதலால், இங்கே கோயில் இருப்பது இயல்பே.

வளவயல் சூழ் திருமோகூர் என்றும் 'எண் திசையும் ஈன் கரும்பொடு பெருஞ் செந்நெல் விளையக் கொண்ட கோயில்' என்றும் நம்மாழ்வார் பாடியிருப்பதற்கேற்ப, பசுமையான வயல்கள் சூழ, ஏரிக்கரையில் கட்டப்பட்டுப் பெருமாள் கோயில் சோலையாகக் காட்சி தருகிறது, திருமால்–காளமேகப் பெருமாள். தாயார் – திருமோகூர் வல்லி. சிவனுக்குரிய வில்வம் இத்தல மரமாக இருக்கிறது.

யாளித்தூண் மண்டபத்தில் ரதி மன்மதச் சிலைகளும் இக் கோயிலைப் பெரிய அளவில் கட்டிய திருமலைநாயக்கர், புதுப்பித்த பெரிய மருது, சின்ன மருது சிலைகளும் கலை நுட்பத்துடன் செதுக்கப்பெற்றுள்ளன. திருப்பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளி கொண்ட கோலத்தில் பெருமாள் காணப்படுகிறார்.

இக்கோயிலில் உற்சவர், கையில் கதையுடன் உள்ளார். பெருமாள் நிற்க, தாயார் அமர்ந்திருக்கிறார்.

74 சிம்மா சேனாபதிகளுள் ஒருவரான ஆழ்வரன் என்ற பெரியவர் வாழ்ந்து வைணவம் வளர்த்த தலம்.

கொடிக்குளம்

ஆனைமலையின் ஒரு கோடியில் அமைந்துள்ள கொடிக் குளத்தை அடுத்துச் சிறப்பு மிக்க பொய்கைகள் பலவும் வேதநாராயணன் கோயில் என்னும் பழமையான கோயிலும் உள்ளன.

தாமரைப் பட்டி

இவ்வூராட்சிக்கு உட்பட்டது சிட்டம்பட்டி. கிராமத்துக் குலதெய்வமுள்ள கண்மாயில் தாமரை மலர்ந்திருப்பதால் தாமரைப்பட்டி என்னும் பெயர் ஏற்பட்டது சிட்டம்பட்டியில் சிட்டன், வடவன், மொண்டி என்ற மூன்று சகோதரர்கள் இருந்தனர்.

அவர்களுள் மூத்தவன் பெயரால் ஊர் அமைந்ததாகச் சிலரும், சித்தர்கள் வாழ்ந்ததால் சித்தம்பட்டி என்ற பெயர் ஏற்பட்டுப் பிறகு மருவியதாகச் சிலரும் கூறுவர்.

மாங்குளத்துக்குப் பிரியும் சாலை ஓரத்தில் பெரியாற்றுக் கால்வாயைப் பேணும் பொதுப்பணித்துறை அலுவலகங்கள் உள்ளன.

ஆயத்தப்பட்டி

அழகர் கோயில் திருவிழாவில் தேர் இழுக்கிற நான்கு கிராமத்தார் இங்குக் கூடித் தேர் இழுப்பதற்கு ஆயத்தம் செய்வர். கவுண்டர் மரபினரான பாளையப் பட்டியாரும், தெற்குத்தெரு, வடக்குத்தெரு, மேலத்தெரு என்னும் மூன்று ஊர்க்கள்ளர்களும் இங்குக் கூடுவர். தெற்குத்தெரு என்பது நான்கு ஊர்களில் வாழும் பத்துக் கரைகாரரைக் குறிக்கும். வடக்குத்தெருவில் அடங்கியன வல்லாளப்பட்டி, கிடாரிப்பட்டி மாங்குளம் மேலத்தெருவுக்கு நடுவளவு என்னும் பெயரும் உண்டு. நரசிங்கம்பட்டி, வெள்ளரிப்பட்டி, கத்தப்பட்டு மூன்றும் இதில் சேர்ந்தவை.

கருப்பாயி ஊரணி

மதுரையிலிருந்து சிவகங்கைச் சாலையில் 6 கி. மீ. தொலைவில் உள்ளது. கலெக்டர் அலுவலகத்திலிருந்து இந்த ஊர் 3 கி. மீ. தொலைவு. இங்குள்ள பாண்டிக்கோயில் புகழ் பெற்றது. இறைவன்: பாண்டி. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெருங் கூட்டம் கூடுகிறது. ஆயிரக்கணக்கான பேர் நடந்து செல்கிறார் கள். தேவர் சமூகத்தினர் பலர் இங்கு விரதம் இருக்கிறார்கள்.

மதிச்சியம்

இது ஒரு காலத்தில் இடையர் வாழ்ந்த சேரி. பாண்டியன், குதிரைகளை விலை மதித்த இடமாதலால் இப்பெயர் ஏற்பட்ட தாகக் கூறுவர்.

> "மதிச்சியத்திலே நானு வாழுறது மாடு
> கண்ணு காத்து வளக்கிறது"

என்று கோவலன் நாடகத்தில் பாடப்படுகிறது. 'மதிச்சியத்திலே குடியிருக்கிறது மதுரையில் மோர் விற்கிறது' எனவும் பாடுவார்கள்.

ஆண்டார்கொட்டாரம்

இவ்வூர் தல்லாகுளம் கலெக்டர் அலுவலகத்துக்கு அருகில் வரிச்சியூர்ச் சாலையில் உள்ளது. பாண்டியர்களின் அரண்மனை இருந்த இடம்.

வெள்ளியங்குன்றம்

மதுரைக்கு வடகிழக்கே 13 கி. மீ. தொலைவு. ஈராயிரம் மக்கள் வாழும் ஊர். அழகர்கோயிலுக்கும் மதுரைக்கும் இடைப்பட்ட பகுதி. அப்பன்திருப்பதிக்கு அருகில் 13 சிற்றூர்களுடைய ஒரு பாளையத்தின் தலைநகராய் இருந்தது; தொன்றுதொட்டு இப்பாளையத்தின் தலைவர்கள் புகழ்பெற்று விளங்கினர். அண்மையில் வெள்ளியங்குன்றம் ஜமீன்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருப்பது அழகர்கோயிலின் வெளிக்காவலராக இன்றளவும் இருந்து வருவதிலிருந்து புலனாகும். இவர்களுக்கு அழகர்கோயில் திருவிழாக்களில் பெரிய மரியாதை உண்டு.

மலையாளத்தான்பட்டி

19-ஆம் நூற்றாண்டில் ஆனைமலைப் பகுதிக்கு வந்த மலையாள வைத்தியர் ஒருவர் 200 ஏக்கருக்குமேல் இங்கு நிலம் வாங்கினார். அதனால் அப்பகுதியை மலையாளத்தான்பட்டி என்று மக்கள் குறிப்பிட்டனர்.

வௌவால்தோட்டம்

ஆனைமலைக்குள் வௌவால் போன்ற ஒரு குகை இருக்கிறது. இது வௌவால் தோட்டம் என்று குறிப்பிடப்படுகிறது.

இராஜகம்பீரம்

ஒத்தக்கடைக்கும் திருமோகூர்க்கும் இடையே உள்ள சிற்றூர். ஊர்ப் பெயர் ஆராய்ச்சிக்குரியது. இராமநாதபுரம் முதலிய பிற மாவட்டங்களிலும் இதே பெயரில் ஊர்கள் உள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் மதுரையில் ஆட்சி புரிந்த குலசேகர பாண்டியனின் விருதுப்பெயர்களுள் இராஜகம்பீரம் என்பது ஒன்று—

காதக்கிணறு

கடச்சனேந்தலுக்கு வடக்கே உள்ளது. அழகர், சித்திரைத் திருவிழாவுக்குப் புறப்படும் போது, காவல் மாறும் இடம். காதக்கிணறுக்கும் மறவர் மண்டபத்துக்கும் இடையே செம்பியனேந்தல் என்று ஓர் ஊர் உளது.

சிவலிங்கம்

புதுத்தாமரைப்பட்டியிலிருந்து ராஜாக்கூர் போகும்வழியில் அமைந்த சிற்றூர். அடர்த்தியான மரங்களுடன் கூடிய சோலைகள் மிக்கது.

வண்டியூர்

மதுரையின் புறப்பகுதியில் இராமநாதபுரம் செல்லும் சாலையில், திருமலைநாயக்கர் வெட்டிய தெப்பக்குளத்தைச் சுற்றிய ஊர். வையைக்கரையிலமைந்து, தியாகராசர் கல்விநிலையங்களைப் பெற்று விளங்குவது.

தைப்பூச நாளில் இங்குத் தெப்பத் திருவிழா பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

மாணிக்கவாசகர் வாங்கிய குதிரைகள் வரும் பொழுது, புழுதி மண்டிய இடம் ஆதலால் மண்டியூர் என்று பெயர்பெற்று அப்பெயர் வண்டியூர் ஆக மருவிற்று என்பர்.

ஒத்தக்கடை (ஒற்றைக்கடை)

மதுரை–மேலூர்ச் சாலையில் ஆனைமலையின் அடிவாரத் தருகே அமைந்து இன்று பல கடைகளுடன் விளங்கும் ஊர். பெரியாற்று வாய்க்கால்களால் வளமடைந்துள்ள பகுதி. இங்கிருந்து திருவாதவூர்க்கு ஒரு சாலை பிரிகிறது. ஒத்தக்கடைக்கு அருகே அரும்பனூரர் என்னும் ஊர் உளது. இப்பெயர் சமணர் இங்கு வாழ்ந்ததற்குச் சான்று.

மாங்குளம்

(ம. தொ. 3,000) மதுரைக்கு வடகிழக்கே 19 கி. மீ. வல்லாளப்பட்டிக்கும் சிட்டம்பட்டிக்கும் இடைப்பட்டது. இப் பகுதியில் மீனாட்சிபுரத்தில் மிகப் பழமையான தமிழ்–பிராமி வரி வடிவக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அருகேயுள்ள கழுகுமலையில் குகைக்கோயில் உளது.

மா = பெரிய, மாங்குளம் = பெரிய ஏரியை உடைய ஊர்.

உத்தங்குடி

ஒத்தக்கடைக்கும் தல்லாகுளத்திற்கும் இடையே அமைந்தது. இவ்வூரருகே தொழிற்பேட்டை உளது,

மீனாட்சிபுரம்

இவ்வூர் மலைக்கு ஓவாமலை என்றும் கழுகுமலை என்றும் பெயர் உண்டு. இம்மலைமீது மயிலாடுஞ்செடிகள் (Ferns) உள்ளன.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் பாண்டியன் நெடுஞ்செழியன் வெட்டிய கல்வெட்டு இங்கு உள்ளது. தமிழ் நாட்டிலேயே மிகப் பழமையான கல்வெட்டு இதுவே. சமண முனிவர்க்கு இப்பாறையைப் பாண்டியன் நெடுஞ்செழியன் வழங்கியதை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

இம்மலைக்கு எதிரில் பெருமாள் மலை உள்ளது. இரண்டு மலைகளுக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கில், விழாக்காலத்தில் மக்கள் நின்று ஓவாமலைமீது நின்றவாறு காட்சி கொடுக்கும் சமண முனிவர்களை வழிபட்டனர் என்று இவ்வூரார் 1966-இல் என்னிடம் (இந்நூலாசிரியரிடம்) கூறினர். புதுச்சேரிக்குச் சென்று அரவிந்தரும் அன்னையாரும் காட்சி (தர்ஷன்) கொடுத்ததைக் கண்ணால் கண்ட போதுதான், மீனாட்சிபுரத்தார் கூறியதை முற்றிலும் புரிந்துகொள்ள முடிந்தது.

இங்கிருந்து பசுமலை முதலிய 8 குன்றுகளும் மீனாட்சியம்மன் கோயில் கோபுரங்களும் மேலவளவைச் சேர்ந்த உலக்கை குத்திப் பாறையும் தெரிகின்றன. சுவையான குடிநீருக்கு இவ்வூர் புகழ் பெற்றது. நடைபாதையில் அழகர்கோயில் 5 கி. மீ.

கழுகுகளின் எச்சம் இருந்ததால் ஓவாமலை, கழுகுமலை என்ற பெயரையும் பெற்றதாம். மீனாட்சிபுரத்திலிருந்து சொக்கர்பட்டி, ஒரு கி. மீ. தொலைவு. அருகேயுள்ள தருமத்து மலையில் குடைவரை கோயிலும், அழகாபுரியில் பஞ்சபாண்டவர் படுக்கையும் மீனாட்சிபுரத்தில் பொழுதுமுகம்காணு ஊற்றும் உள்ளன.

2. மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் ஏற்பட்ட முதல் சோதனை ஒன்றியம் 1957-இல் வடக்கு மதுரைப் பஞ்சாயத்து யூனியன் என்னும்

பெயரில் தொடங்கப்பெற்றது. அதில் இந்த ஒன்றியத்தின் ஒரு பகுதியும் சேர்ந்திருந்தது. 1958-இல் மாநிலச் சட்டப்பேரவை சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தை நிறைவேற்றியது. அதன் பின்னரே தமிழ் நாடெங்கும் ஒன்றியங்கள் ஏற்பட்டன. 1959-இல் வடக்கு மதுரை யூனியன், (1)மதுரை கிழக்கு (2)மதுரை மேற்கு என்னும் இரு ஒன்றியங்களாகப் பிரிக்கப் பெற்றது.

சமயநல்லூர், கூழப்பாண்டி என்னும் இரு பிர்க்காக்களைச் சேர்ந்த 72 ரெவின்யூ கிராமங்களைக் கொண்டது இந்த ஒன்றியம். மக்கள் தொகை 80,000 பரப்பு 61.84 சதுர மைல். பெரியாற்றுப் பாசனத்தால் பயன்படும் நிலங்களால் இந்த ஒன்றியம் வளமாக உள்ளது.

பரவை, தல்லாகுளம் என்னும் இரு பேரூராட்சி மன்றங்களும் 36 ஊராட்சி மன்றங்களும் உள்ளன.

பரவை

மதுரை–திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ளது. தொழிற் சாலைகள், சிறப்பாகப் பஞ்சாலைகள், நிரம்பிய பகுதி. இப் பகுதிக்குப் பெருமை தருவது சிறந்த முறையில் இயங்கும் மீனாட்சி ஆலையின் ஒரு கூறு.

பரவையின் ஒரு பகுதி ஊமச்சி குளம். இது ஊர் மெச்சி குளம் என்பதன் திரிபு.

தல்லாகுளம்

மதுரை நகரில் வைகையாற்றுக்கு வடக்கே உள்ள பகுதி இங்கு எண்ணிறந்த அரசாங்க அலுவலகங்களும் செல்வர் மனைகளும் ஏராளமான கல்லூரிகளும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக அலுவலகங்கள் சிலவும், நட்சத்திர ஹோட்டல்களும்-மதுரை இராமநாதபுர மாவட்ட நீதி மன்றங்களும் மங்கம்மாள் கட்டிய அரண்மனையில் காந்தி மியூசியமும், இராஜாஜி பொது மருத்துவமனையும் மதுரை மாநகராட்சி அலுவலகமும் தமிழ் இசை மன்றமும் உள்ளன.

அம்பலத்தாடி

ஊர்ப் பெயர் சிந்தனைக்குரியது. மதுரைக்கு வெள்ளியம் பலம் என்னும் பெயர் உண்டு.

ஆனையூர்

இதைச் சேர்ந்த ஒரு சிற்றூர் சம்பந்தர் ஆலங்குளம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது.

குலமங்கலம்

இதைச் சேர்ந்த உட்கடை ஊர் ஒன்று, எழும்பூர் என்ற பெயரைக் கொண்டிருக்கிறது.

சமயநல்லூர்

மதுரைக்கும் சோழவந்தானுக்கும் இடையே அமைந்து இரயில், சாலை வசதிகள் நிறைந்திருப்பதோடு வேளாண்மை, தொழில் சிறப்புகளும் உடைய ஊர். இங்கு உரோமன் கத்தோலிக்கருடைய பெரிய தேவாலயமும். கல்விநிலையமும் உள்ளன.

அரசாங்கத்தாரின் அனல் மின்சார நிலையம் இவ்வூரில் இருந்தது. தி.மு.க. ஆட்சியின்போது இது பிரித்து விற்பனை செய்யப்பட்டது. டி.வி.எஸ். தொழிற் கூடமும், தொழிலாளர் குடியிருப்புகளும் உள்ளன.

திருமங்கலத்தில் போல, இப்பகுதியிலும் மாலைகள் மலர்ச் செண்டுகள் கட்டுவதற்கு வேண்டிய ரோஜா முதலிய மலர்கள் ஏராளமாய்ப் பூக்கின்றன. மதுரையிலும் மதுரை விமான நிலையம் வழியாய்ச் சென்னையிலும் விற்பனைக்குச் செல்லும் பூக்கள் யாவும் பூத்துக் குலுங்கும் பகுதி இதுவே.

இவ்வூரருகேயுள்ள டபேதார் என்னும் சிற்றூரில் திங்கட்கிழமைகளில் சந்தை கூடுகிறது; இச் சந்தையில் தோல் வாணிபம் மிகுதி.

சிறுவாலை

மதுரைக்கு வடமேற்கே 13 கி. மீ. தொலைவிலுள்ள ஒரு சிற்றூர். ஊர்ப்பெயரைச் சிறுபாலை என்றும் சொல்லுவர். இது ஒரு சிறு ஜமீனின் தலைநகராயிருந்தது. சிறுபாலை ஜமீன்தார்கள் பல நூற்றாண்டுகளாகப் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருப்பது, அழகர்கோயிலில் கள்ளழகர் தெய்வத்தின் திருமேனி காவலராக இவர்கள் இருந்துவருவதிலிருந்து தெரியவரும்.

தத்துநரி

இவ்வூர், மாணிக்கவாசகர்க்காக நரிகளைக் குதிரைகளாக்கிய வரலாற்றுத் தொடர்புடையது. மீண்டும் அவை நரிகளாகிக் கத்திச் சென்ற இடம் தத்துநரி; தவறுகத் தத்தனேரி என ஊர்ப் பெயர் வழங்குகிறது.

தேனூர்

ஒன்றியத்தின் வடஎல்லையில் அமைந்த சிற்றூர். நூல் ஆலை, அருகேயுள்ள திருவேடகம் கோயில், புகழ் பெற்றடபேதார் சந்தை இவை தேனூருக்கும் சிறப்புத்தருவன.

தோட்டனேரி

சமயநல்லூரையடுத்த சிற்றூர். நரிகள் (பார்க்க தத்துநரி) ஒன்றையொன்று தொடர்ந்து சென்ற இடம் தொடர்நரி. தொடர்நரி, தோடனேரியாக மருவியுள்ளது.

புதுப்பட்டி

மதுரை – அழகர்கோயில் சாலையில் மதுரையிலிருந்து 11 கி. மீ. தொலைவில் உள்ள சிற்றூர். மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய ஹிந்த் குஷ்ட நிவாரண சங்கத்தின் மதுரைக் கிளை இங்கு வாங்கியுள்ள 30 ஏக்கர் பரப்புள்ள இடத்தில், தமிழக அரசு (அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்களின் 48-ஆவது பிறந்த நாளையொட்டி) இங்குத் தொழுநோய் பிச்சைக்காரர் புது வாழ்வு இல்லம் 1971-இல் தொடங்கியுள்ளது. அறுவைச்சிகிச்சை வசதிகளும் தொழிற்பயிற்சிக் கூடங்களும் இங்கு உள்ளன.

பொதும்பு

இலக்கியத்தில் இவ்வூர்ப் பெயர் பொதும்பில் என்று குறிப்பிடப்பெற்றிருக்கிறது. வெண்கண்ணனார், புல்லாளங்கண்ணியர், பொதும்பில்கிழார், பொதும்பிற்கிழார் மகனார் வெண்கண்ணியார் ஆகிய சங்ககாலப் புலவர் பலர் வாழ்ந்த சிற்றூர் இது. இவர்களில் சிலருடையபாடல்கள் நற்றிணையில் காணப்படுகின்றன. பொதும்பு என்பது சோலை; சோலையினூடே உண்டான ஊர் பொதும்பில் எனப்பட்டது போலும்.

விளாங்குடி

பாத்திமாக் கல்லூரி, நூல் ஆலை, மைதா மா ஆலை முதலியன உள்ளன. மதுரை—திண்டுக்கல் சாலையில் இரயில் வசதியுடன் சிறப்பாக அமைந்தது; புறமதுரையின் ஒரு பகுதி.

விசாலாட்சி ஆலைக்குத் தென்கிழக்கே வயல்களுக்கு நடுவே இடிந்த கோட்டைச்சுவர்களினூடே பாழடைந்த நிலையில் இரு கோயில்களும் மண்ணால்மூடப்பெற்ற தெப்பக்குளம் பகுதிகளும் காணப்படுகின்றன. இதை இப்போது கோனேரி மண்டபம் என்று குறிப்பிடுகின்றனர். கோனேரின்மைகொண்டான் என்ற விக்கிரம பாண்டியன் பெயரால் விளாங்குடி நாயனார் ஒரு கோயில் கட்டினார் என்றும், அதற்கு நன்றி கூறும் வகையில் அப்பாண்டியன் அங்கு விளாங்குடிநாயனார்க்குக் கோயில் எடுத்து வழிபாட்டுச் செலவுக்குக் கட்டளை ஏற்படுத்தினான் என்றும் மதுரைச் சோமசுந்தரர் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. விளாங்குடியில்இருந்த கோயில் மீனாட்சிசுந்தரேசர்கோயில்என்று பெயர்பெற்றிருந்ததாயும்,வைணவ எழுச்சியின்போது இங்கிருந்த இறையுருவங்கள் மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாயும், கள்ளழகர் திருவேடகம் வழியாய் மதுரைக்கு வரும்போது இக் கோயிலை மண்டகப்படியாகப் பயன்படுத்தியதாயும், திருமலை நாயக்கர் ஆட்சியில் கள்ளழகர் வரும் வழி அப்பன் திருப்பதி வழியாய் மாற்றப்பட்டதாயும் ஊரார் கூறுகின்றனர்.

திருப்பாலை

மதுரை—நத்தம் சாலையில் உள்ள இவ்வூர், யாதவர் கல்லூரியால் புகழ் பெற்றது. இவ்வூரிலும் சுற்றுவட்டத்திலும் யாதவர்கள் மிகுதியாக உள்ளனர். வடக்கு மாசிவீதி கிருஷ்ணன் கோயிலின் உற்சவர் மாசி மாதம் நடைபெறும் விழாவிற்கு இவ்வூருக்கு எழுந்தருளுகிறார்.

பால் விற்கும் இடைச்சியரை நோக்கி, பெயர் தெரியாப் புலவர் ஒருவர் இவ்வூரில் பின்வரும் தனிப்பாடலைப் பாடியுள்ளார்.

கரும்பாலே பரம்படித்துப் பனிநீர் தேக்கிக்
கதலிபலா கனியதனால் வரம்பு கட்டும்
திருப்பாலை வாழீசர் பவனியாடும் தெருவில்
பாலை விலைபகர்சிற் றிடைச்சி யாரே

அருட்பாலோ பொருட்பாலோ காமப் பாலோ
ஆழிதனை கடைந்தெடுத்த அமுதப் பாலோ
இரும்பாலே மனம்படைத்தீர் நின்னீர் சொல்வீர்
எந்தப்பால் விற்கவந்தீர் இயம்பு வீரே!

3. திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்

இது மதுரை மாநகரருகே அமைந்த வளமான ஒன்றியம். ஒன்றியத்தின் அலுவலகம், மதுரை–குமரிச் சாலையில் திருநகரில் கட்டப் பெற்றிருக்கிறது.

திருப்பரங்குன்றம், அவனியாபுரம் பிர்க்காக்களில் அடங்கிய ஊர்களும் மதுரை கஸ்பா பிர்க்காவில் வைகை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள ஊர்களும் இதில் அடங்கியவை. இந்த 13 ஊர்களில் 74 ரெவினியூ கிராமங்களாகவும் 49 உட்கடைக் கிராமங்களாகவும் இருக்கின்றன. இவற்றில் 48 ஊராட்சி மன்றங்களும் (1) திருபரங்குன்றம், (2) அவனியாபுரம், (3) கோச்சடை, (4) பொன்மேனி (5) மாடக்குளம் என்ற பேரூராட்சிகளும் இயங்குகின்றன.

வடக்கே – மதுரை கிழக்கு, மதுரை மேற்கு; தெற்கே – திருமங்கலம், கள்ளிக்குடி, கிழக்கே – திருப்பூவணம்; மேற்கே – உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய ஒன்றியங்கள் இவ்வொன்றியத்து எல்லையில் அமைந்துள்ளன.

இவ்வொன்றியத்தில் திருப்பரங்குன்றம், நாகமலை, பசுமலை, காளைமலை என்னும் மலைகள் உள்ளன. மதுரையை அழிக்கவந்த அரக்கர் (சமணர்) நாகம், பசு, காளை போன்ற உருவெடுத்ததாக அல்லது அவற்றை ஏவிவிட்டதாகத் திருவிளையாடற்புராணம் கூறுதற்கேற்ப இம்மலைகள் காட்சி தருகின்றன. கொடிமங்கலத்தில் ரிசர்வ்காடுகள் உள்ளன. கிருதிமால் ஆறு இவ்வொன்றியத்தின் வழியேபாய்கிறது. வைகை ஆறு இவ்வொன்றியத்தின் வழியாய்ச் செல்லும் சில சிற்றூர்களுக்குப் பயன் தருகிறது. இவ்வூர்கள் தென்னை முதலிய பல்வகை வளங்களைப் பெற்றுள்ளன. வைகைத் திட்டத்தின்படி வேறு ஊர்களுக்கு நிலையூர்க் கால்வாய் பயன் தருகிறது. இவ்வாறு வேளாண்மை சிறக்கும் இவ்வொன்றியத்தில் டி. கே. எம். 6. கோ. 13, கோ. 19 என்னும் நெல் வகைகளும், புன்செய்ப் பயிராக மணிலாக் கடலையும் பயிரிடப்படுகின்றன. பங்குனி உத்தரவிழாவையொட்டித் பரங்குன்றத்தில் மாட்டுச் சந்தை கூடுகிறது.

நாளும் விரிந்து வரும் மதுரை மாநகரின் தேவையால், வளமான வயல்களும் பாசனம் நல்கும் மாடக்குளம் போன்ற ஏரிகளும் மனைகளாக மாறுகின்றன. இதனால் இப்பகுதியில் சென்ட் 80 ரூபாய் முதல் (மதுரை நகர் அருகே) சென்ட் 2,000 ரூபாய் வரை நிலத்தின் விலை வேறுபடுகிறது. உணவு உற்பத்திக்குரிய நிலங்கள் வீடுகட்டவும், தொழிற்சாலை, அரசாங்க அலுவலகம், கல்வி நிலையம் முதலியன அமைக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வலையன்குளம் பகுதியில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது, இவ்வொன்றியத்தில் வேறு புவியியல் வளம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

15 கி. மீ. தொலைவுக்கு (கன்னியாகுமரி வரை செல்லும்) தேசிய நெடுஞ்சாலையும், திருப்பரங்குன்றம், பசுமலை, கப்பலூர், நாகமலை – புதுக்கோட்டை, சிலைமான் இரயில் நிலையங்களும் ஆகாய விமான நிலையமும் இவ்வொன்றியத்திலுள்ளன.

மதுரை மாநகரின் வளர்ச்சியால் பலவகை மக்களும் இவ்வொன்றியத்தில் வாழ்ந்து வருகின்றனர் எனினும் தொன்மையாலும் தொகையாலும் குறிபபிடத்தக்கவர் கள்ளரே ஆவர், அவர்கள் வழிபடும் ஐயனார் கோயில்களும், அவர்களுக்காக ஏற்பட்ட கள்ளர் சீர்திருத்தக் கல்வி நிலையங்களும் பல இடங்களில் உள்ளன.

பசுமலையில் மகாலெட்சுமி ஆலை, தனக்கன் குளத்தில் சீதாலெட்சுமி ஆலை என்னும் இரு நூலாலைகளும், பல ஊர்களில் செங்கல் காளவாய் முதலிய தொழிற்சாலைகளும் நடைபெறுகின்றன. தொழிலாளர் குடியிருப்புகளாக ஹார்விபட்டி, தியாகராசர் குடியிருப்பு, டி. வி. எஸ். நகர், சாய்பாபா நகர், ஜெய்ஹிந்த்நகர் என்பன இவ்வொன்றியத்தில் தோன்றியுள்ளன. திருப்பரங்குன்றத்தில் ஒன்றியத்தின் அடிப்படைச் சுகாதார நிலையமும் திருநகரில் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டப்படி அரசினர் நடத்தும் மருத்துவமனையும் உள்ளன.

திருப்பரங்குன்றம்

முருகனுக்கு உகந்த படைவீடுகள் ஆறினுள், முதலாவதாக வைத்து நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் போற்றியிருக்கும் தலம் இது. கலையாலும் கடவுள் தன்மையாலும் சிறந்தது. மதுரைக்குத்

தென்மேற்கே எட்டு கி. மீ. தொலைவில் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் சிறுநகராய் மிளிர்வது. இன்னும் பல்லாயிரம் மக்கள் நேர்த்திக் கடனுக்கு ஏற்பச் செலவு செய்து வழிபட வரும் சிறப்புடையது.

திருப்பரங்குன்றம் என்னும் பெயர்க்குச் சிவபெருமானுக்கு உரிய மலை என்று பொருள். இத்தலத்துக்கு தேவாரமும் உண்டு. முருகனே இங்கு வந்து சிவபெருமானை வழிபட்டுப் பயனெய்திய பெருமை இத்தலத்துக்கு உரியது. இங்குள்ள சரவணப் பொய்கையும் பிரமகூவமும் புனிதத் தீர்த்தங்களாகப் போற்றப்பெறுவன.

"ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்"

என்று மதுரையுடன் சேர்த்து இத்தலம் புகழப்பெற்றுளது. திருமால் முதலிய எல்லாத் தேவர்களும் முருகப் பெருமானைக் காண்பதற்கு உறைதலின் இமயம் போல்வது என்றும் இம்மலை சிறப்பிக்கப் பெற்றுளது.

இராசேந்திரப் பாண்டியனைக் காடு வெட்டிய சோழன் என்பான் எதிர்த்துப் போரிடச் சோழப்படைகள் வேனிற் கொடுமை நீங்கப் பெற, சோமசுந்தரக் கடவுள் நன்னீர்ச் சேவகனாகி இவ்வூரில் தண்ணீர்ப்பந்தல் அமைத்ததாகவும் வரலாறு உண்டு. இதை நினைவூட்டும் வண்ணம் இப்போது பங்குனி உத்தரம் தொடங்கி இரண்டு மாதங்களுக்குத் திருப்பனந்தாள் ஆதீனத்தார் இத்தருமத்தைச் செய்துவருகின்றனர்.

இங்குள்ள கோயில்கள் பாண்டிய அரசர்களாலும் நாயக்க மன்னர்களாலும் நகரத்தார்களாலும் அண்மையில் அரசினர் ஆதரவு பெற்றுப் பொதுமக்களாலும் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

பரங்குன்றத்து முருகன் கோயில் ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி கோயில் எனப்படும். இதன் சிறப்புகள் பல. சங்கநூல்கள் பலவற்றில் குறிக்கப்படுவதிலிருந்து இதன் தொன்மை தெளிவாகும். வயல்களும் பொழில்களும் சூழ்ந்த மலையைக் குடைந்து 150 அடி உயரமுள்ள எழுநிலை மாடக் கோபுரத்துடன் விளங்குவது இதன் அமைப்பின் அருமையைப் புலப்படுத்தும்.

தெய்வானையை முருகன் மணந்த பதி பரங்குன்றம். இதனால் தேவசேனையை இந்திரனும் தேவர்களும் சேர்ந்து அளிக்க முருகன் கற்புமணம் புரிந்ததுபோல நிகழும் திருமணங்கள் பலவும், அடுப்பாரும் கொடுப்பாருமின்றி நிகழும் களவு மணங்கள் (முருகன் வள்ளியம்மையை ஏற்றது போல) சிலவும் இன்றளவும் இங்கு முருகன் சந்நிதியில் நிகழ்கின்றன. 'சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை, சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை' என்று நம்பும் மக்களில் மணமாகாதோர் தக்க மணமகன் அல்லது மணமகளைப் பெறவும், ஊடலால் பிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் கூடவும், கூடி வாழ்வோர் நன்மக்களைப் பெறவும் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

முருகன்உருவத்துக்கு இக்கோயிலில் அபிடேகம்கிடையாது அபிடேகப் பொருள்கள், முருகன் கைவேலுக்கே பயன்படுத்தப் படுகின்றன.

மணவிழாக் கோலத்தில் முருகன் இங்கே கோயில் கொண்டு இருப்பதால், விநாயகர் கனியும் கரும்பும் கரங்களிலேந்தி மண விருந்தினைச் சுவைக்கின்ற காட்சியையும் இங்கே காணலாம்.

கலைக்கண் கொண்டு நோக்கின், தெய்வானை திருமணக் காட்சி, சுதைவேலையுடனுள்ள தலபுராணக் காட்சிகள், இராணி மங்கம்மாள் மீனாட்சி நாயக்கர் உருவங்கள், பசுப்பூசை செய்யும் உமையம்மை, இசையொலி எழுப்பும் பூத கணங்கள், பாற்கடலில் துயிலும் பெருமாள் போன்ற பல சிற்பங்கள் கலைத்துறையில் தலைசிறந்த பெருமக்களான ஆனந்த குமாரசாமி பெர்கூசன் ஆகியோரால் பாராட்டப்பெற்றுள்ளன. துளசி அறையிலுள்ள சிற்பங்களும் சிறப்பாகக் கருதப்படுகின்றன.

பரங்குன்றத்தின் தென்பகுதியில் உமையாண்டவன்கோயில் இருக்கிறது. இது குகைக் கோயில். இங்கு உமையொருபாகன், பஞ்சமுக கணபதி, ஆறுமுகன், வயிரவர், நடராசர் திருவுருவங்கள் கல்லில் குடையப்பெற்றிருக்கின்றன. இது பல்லவர் குகை என்று பலரும் எழுதியுள்ளனர். பல்லவர் குகைக்கோயில் கலையைப் பின்பற்றிப் பாண்டியர் அமைத்த குகைக்கோயில் என்பதே பொருந்தும் என்று இந்நாள் ஆராய்ச்சியாளர் முடிந்த முடிவாகச் சொல்லுகின்றனர்; பாண்டியநாடு ஒருபோதும் பல்லவர் ஆட்சியில் இருந்ததில்லை என்பது இங்குச் சிந்திக்கத்தக்கது.

மலையுச்சியில் காசி விசுவநாதர் கோயில் கட்டப் பெற்றிருக்கிறது. அடிவாரத்திலிருந்து முருகனின் திருக் கைவேல் ஆண்டு தோறும் இக்கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இக் கோயிலின் அருகே காசிச்சுனை என்னும் சுனை இருக்கிறது. இறைவன்–பரங்கிரிநாதர்; இறைவி–ஆவுடையநாயகி.

இக்கோயிலுக்கும் மேலே, பள்ளிவாசல் ஒன்று உளது. டில்லி சுல்தான்கள் தென்னிந்தியாவை நோக்கிப் படையெடுத்த போது, மாலிக்காபூர், அல்லாவுதீன் ஆகியோரும் இவர்களுக்குப் பின்வந்த இவ்விருவரது பிரதிநிதியான பல சுல்தான்களும் மதுரையிலிருந்து 1380 வரை 48 ஆண்டுக்காலம் ஆண்டனர். அக்காலத்தில் ஏற்பட்டதே இப்பள்ளிவாசல். கந்தன் பெயரால் ஸ்கந்தன்மலை என்று இந்துக்கள் குறிப்பிடும் திருப்பரங்குன்றம் மலையை முஸ்லிம்கள் சிக்கந்தர் மலை என்று கூறுகின்றனர். மலை மீதுள்ள பள்ளிவாசலில் சிக்கந்தர் என்ற முஸ்லிம் பெரியவர் அடங்கியுள்ளார் என்பர். இங்கு இந்துக்களும் செல்லுகின்றனர்

பரங்குன்றம் சம்பந்தர் – சுந்தரர் தேவாரங்களையும், அருணகிரியார் திருப்புகழையும் உடையது; திருமுருகாற்றுப் படையில் சிறப்பிக்கப்பட்டது; அகநானூறு, பரிபாடல், கல்லாடம் ஆகியவற்றிலும் குறிப்பிடப்படுவது. திருப்பரங்கிரிப்புராணம், திருப்பரங்குன்றத் தலபுராணம் என்னும் நூல்களும் இத் தலத்தைப்பற்றியன. நக்கீரர் பூசைசெய்த பதியாதலால், அர்த்த மண்டபத்தில் அவரது திருவுருவம் காணப்படுகிறது. பங்குனி உத்திர விழாவின் ஐந்தாம் நாளில் நக்கீரர் உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மலையிலே இயற்கையோடு ஒன்றிய முருகனையோ கோயிலையோ இப்போது காணக்கூடவில்லை. மலையிலே தங்கள் இருக்கைக்காக இடம் தேடி அலைந்த சமண முனிவர்கள் முருகன் கோயிலினைத் தங்கள் இருக்கைகளாக ஆக்கிக்கொண்டு, சிறுகச் சிறுக மலைக்குவரும் மக்களின் மனப்பாங்கினை மாற்றி தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பி இருக்கக்கூடும். முருகனை, பரங்குன்றத்து இரு குகைகளிலும் துணைக் கடவுளராகத்தான் காண்கின்றோம். வடக்கே உள்ள குகையில் உள்ள முருகன்தான் இப்போது வழிபடப்பட்டு வரும் மூர்த்தி. அந்தக் குகையில் துர்க்கைக்கும் சிவலிங்கத் திருமேனிக்கும் மால் விடங்கனுக்கும் தனித்தனிக்கோயில் குடைந்திருக்க, முருகனை சுதை வடிவத்தில் துணைக்கடவுளாகப் பார்க்கின்றோம்.

தெற்கே உள்ள கோயிலில், முருகன் வள்ளி தெய்வயானை யுடைசூழ நின்ற திருமேனியாக விளங்குகின்றான். இரண்டு குகை களும் 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் குடையப்பெற்றிருக்கக்கூடும் ஆகவே எட்டாம் நூற்றாண்டிற்கு முன் விளங்கிய தனி முருகன் கோயில் எங்கே என்பது ஆய்விற்குரியது.

"திருமலையன் திருப்பரங்குன்றத்தை மாற்றி வைத்தான்" என்ற பழமொழி இப்போதைய கோயிலில் முருகனுக்குச் சிறப்புப் பூசனைகள் திருமலை மன்னன் காலத்திலிருந்து ஏற்பட்டிருக்ககூடும் என்பதைக் குறிப்பிடுகிறது· திருப்பரங்குன்றத்துக் கோயில் கட்டிட அமைப்பு முற்றிலும் (குகைக் கோயிலைத் தவிர) நாயக்கர் பாணியில் உள்ளது, இக்கருத்தினை வலியுறுத்துகின்றது.

அவனியாபுரம்

மதுரை நகரிலிருந்து தெற்கே எட்டு கி. மீ. தொலைவில் அமைந்தது. வேளாண்மையில் செழிக்கும் ஊர். எருமைமாடு மிகுதி. கலப்புரத் தொழிற்சாலையும் கைத்தறி ஆலைகளும் உள்ளன. நகராண்மைக் கழகத்தார் கழிவு நீர் கொண்டு பெரியதொரு புல் (கினியாப் புல்) பண்ணை நடத்திவருகின்றனர். மதுரை விமான நிலையம் இவ்வூரருகே அமைந்திருக்கிறது.

கோச்சடை

மதுரையிலிருந்து மேலக்கால் செல்லும் வழியில் 5 கி. மீ தொலைவிலுள்ளது. மதுரை மாநகர்க்குக் குடிநீர் இங்குத் தேக்கி வைக்கப்படுகிறது. நெல் அரைவை ஆலைகளும் பென்னல் போல்ட் தொழிற்சாலையும் உள்ளன. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை நெடுமாறன் என்பவன் அரசாண்டான். அவன் மகன் கோச்சடையன்இரணதீரன்என்பவன். அவன்பெயரால்மதுரைக்கு அண்மையில் கோச்சடையன்புரம், கோச்சடையன்ஊர், கோச்சடையன்நல்லூர் என்ற ஏதாவது ஒரு பெயரால் உண்டான ஊர். வரலாறு தெரியாத காரணத்தால் மக்களால் இப்பொழுது கோச்சடை என்று மட்டும் குறிப்பிடப்படுகிறது என்பது ஒரு கருத்து. மாறுபட்ட கருத்தையும் பின்னர்க் கூறுவோம்.

படைவீரர்களுக்காக ஏற்பட்ட இவ்வூரில் இன்றும் படை மறவர் இனத்தவர்கள் பெரிதும் வாழ்கின்றனர் பூதத்தின் சிலை ஒன்று பருமனாக இருக்கிறது. கனத்த ஆள்களை, 'கோச்சடை பூதம்' எனக் கூறுவது வழக்கு.

வைகை ஆற்றின் எதிர்க்கரையில் இரணதீரபுரம் என்ற பெயரில் ஊர் உண்டாக்கி, அந்தணர்களைக் கோச்சடையன் இரணதீரன் குடிவைத்ததாயும் கோயில் ஒன்றைக் கட்டியதாயும் தெரிகிறது.

இவ்வூர் மக்கள் கர்ணபரம்பரையாக இவ்வூருடன் திருவிளையாடற்புராணக் கதையைத் தொடர்புபடுத்துகின்றனர். சிவபெருமான் பிட்டு வணிகச்சியின் வீட்டிற்காக வைகையாற்றின் வெள்ளத்தை அடைக்கும் பணியில் ஈடுபட்டபோது பாண்டியனுடைய சாட்டையடியால் துன்பமடைந்து கோலிச்ச அடைத்த இடம் கோச்சடை ஆயிற்று என்கின்றனர்.

இவ்வூரின் நடுவே ஓடிக்கொண்டிருந்த வைகையாறு வெள்ளப்பெருக்கால் வடக்கு நோக்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. இவ்வூர் நீர்த்தேக்கத்துக் கிணற்றுக்கு அருகே ஐந்து மீட்டர்ஆழத்தில் மருதமரம் உள்ளதாகக் கூறுகின்றனர். இவ்வூரில் எப்பகுதியில் தோண்டினாலும் மூன்று மீட்டர் ஆழத்தில் ஆற்று மணல் கிடைக்கின்றது.

இவ்வூரின் பழைமை, இங்குள்ள கோயில்களால் உணரப்படும். மதுரையில் கிராமதேவதை வழிபாடு எவ்வளவு அழுத்தமாக உள்ளது என்பது இக்கோயில்களால் தெரியவரும். (பின்வரும் விவரங்களைச் சேகரித்தவர் திரு. மா. சந்திரமூர்த்தி)

1. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்

கருவறையின் தெற்கே உள்ள அறையில் மீனாட்சி அம்மன் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளாள்.

கருவறையில் லிங்கம் வழிபாட்டிலுள்ளது. லிங்கத்தின் கந்துழிப் பகுதி மட்டும் பழமையானது. ஆவுடையார் பிற்காலத்தில் செய்து பொருத்தப்பட்டுள்ளது. இந்த லிங்கத்திற்குரிய பழைய ஆவுடையார், இக்கோயில் வாயிலில் பின்னத்துடன் காணப்படுகிறது

முக மண்டபத்தில் மூன்று இடம்புரி விநாயகர் விக்கிரகங்களும் சுப்பிரமணியர், நந்தி ஆகியவற்றின் உருவங்களும் காணப்படுகின்றன.

இவற்றுள் நந்தியே பழமை வாய்ந்தது. இவ்வூர் வைகைத் தென்கரையில் ஒரு மேட்டில் சுமார் 1900–ஆம் ஆண்டு அளவில் இது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனவே இந்நந்தி புதைந்திருந்த இடத்தில் இவ்வூர் பழைய சிவாலயம் இருந்திருக்கலாம். இந்த நந்தி கால்களை மடக்கி முகத்தை இடப் பக்கம் திருப்பி செங்கொம்புகளுடன் கொம்புகளை ஒட்டிய இலைபோன்ற காதுகளுடனும் வடிக்கப்பட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. சிறந்த கலையுடன் விளங்குகிறது. நந்தியின் கழுத்தில் இரட்டைக் கயிறும், சங்கிலி கோத்த சதங்கையும், ஒற்றை மணியும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன, நந்தியின் கால்களிலுள்ள குளம்பின் பிரிவும், பின் இடக்கால் வழியே சென்று முன் இடக்காலின்கீழ் கிடக்கும் வாலும்கூட சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. நந்தியின் கொண்டை சரிந்த நிலையில் காணப்படுகிறது.

இந்த நந்தியின் காலம் 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டு என்பர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்.

2. அம்மாட்சி அம்மன் கோயில்

கருவறையில் சங்கும் சக்கரமும் ஏந்திய துர்கை விக்கிரகம் (17–ஆம் நூற்றாண்டு) உளது.

3. மாரியம்மன் கோயில்

4. காளான் என்ற முத்தையா கோயில்

சேரி வாழ்நர் இங்கு வழிபடுகின்றனர். சுடுமண் சிற்பமாக உள்ள முத்தையா என்ற காளான் நின்ற நிலையில் கையில் அரிவாளும் கதையும் ஏந்தியிருக்கிறார்.

5. விநாயகர் கோயில்

6. முனியாண்டி கோயில்

7. தட்டார் கோயில்

மதுரை எழுத்தாணிக்காரர் தெருவில் வாழும் பொற்கொல்லர் (பொன் செய் தட்டார்) குடும்பங்கள் ஐம்பதுக்கு உரிய தலையாய தெய்வமாக, சதுர பீடங்களின் மீதுள்ள நாக உருவம் இங்கு வழிபடப் பெறுகிறது.

8. நாகர் கோயில்

வைகைக் கரையில் நாகர் கோயில் அமைந்தது. முக மண்டபத்தில் நாகர் உருவங்கள் எண்ணி முடியாதவாறு உள்ளன. மக்கட்செல்வம் இல்லாதோர் அச்செல்வத்தை வேண்டி, குழந்தை பிறந்த பிறகு நாகர் உருவத்தைப் பிரதிட்டை செய்வது மரபு. மதுரைப் பகுதியில் அந்தணர்களும் இம்மரபைப் பின்பற்றி இங்கு வந்து வழிபடுகின்றனர்.

9. பிட்டு வாணிச்சியம்மன் கோயில்

திருவிளையாடற்புராணத்தில் சிவபெருமானுக்குப் பிட்டு அளித்த வாணிச்சியின் கதை கூறப்படுகிறது. அவ்வாணிச்சி இப்பகுதியில் பிட்டு விற்றதாகவும் அதைச் சிவபெருமான் வாங்கித் தின்றதாகவும் இவ்வூரார் கூறுகின்றனர். எனவே இங்கு வழிபடப் பெறும் சப்த மாதர்களுக்கு இவ்வூரார் பிட்டு வாணிச்சியம்மன் என்ற பெயர் சூட்டியிருக்கின்றனர். பூசை செய்பவர், வாணியச்செட்டி வம்சத்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இப்போது மதுரையில் கொண்டாடப்பெறும் பிட்டுத் திருவிழா திருமலைநாயக்கர் காலத்திற்கு முன் இவ்வூரில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இன்றும் மதுரையில் நடை பெறும் இவ்விழாவின்போது அமைக்கப்படும் மண்டபத்தின் ஒரு கால், கோச்சடை மக்களுக்கு உரியது. கோச்சடை நாட்டாண்மைக்காரர்க்கு அவ்விழாவின்போது பரிவட்டம் கட்டப்படுகிறது. தேங்காய், இலை, காய்கறிகள், பழங்கள் முதலியவற்றினால் அலங்கரிக்கப்பட்ட தூண்களில்ஒன்று அவருக்கு வழங்கப்பெறுகிறது. இவ்விழாவை ஒட்டி வைகை ஆற்றில் சிவபெருமான் குளிக்க ஊற்று வெட்டும் உரிமை, கோச்சடை வெட்டியார்களுக்கே உரியது.

10. முத்தண்ணன் கோயில்

ஊரில் வேம்பு, அரசு ஆகிய மரங்களின் கீழ் முத்தண்ண சுவாமி என்ற கடவுளரின் வடிவத்தை இராமநாதபுர மாவட்டம் கிழக்குச் சீமை மண்டலமாணிக்கம் கிராமத்திலிருந்து இங்கு நாயக்கர் காலத்தில் குடியேறிய மறவர்கள் வழிபடுகின்றனர்.

முத்தையா கோயில் திருச்சுற்றில் சன்னாசி, ஆதிபூசாரி, பேச்சியம்மன், முத்துக்கருப்பணசாமி, இருளப்பசாமி,

வீரண்ணன்சாமி, இராக்காயிஅம்மன், இருளாயிஅம்மன், சப்பாணிசாமி, சோணைச்சாமி முதலிய தேவதைகள் சுடுமண்ணால் செய்து வண்ணம் பூசப்பட்டு வழிபடப்பெறுகின்றன. அய்யனார் பூரணி புஷ்கலை, முத்தையா, கருப்பையா, மதுரைவீரன் ஆகிய உருவங்கள் உள்ளன.

வேளாளரால் வடித்த வனப்புமிகு சுடுமண் சிற்பங்களை, இக்கோயிலில் கண்டு இன்புறலாம்.

இக்கோயிலுக்குத் தெற்கே மூன்று மீட்டர் உயரமுள்ள நீண்ட குதிரை உருவத்தின்மீது கடிவாளத்தைப் பிடித்தபடி கடுஞ்சீற்றத்துடன் முத்தையாவின் உருவம் காணப்படுகிறது குதிரையின் பின்புறத்தில் மகரவாய் உள்ள அம்பரா பையில் அம்புகளும் அதன் அருகே வில்லும் வேட்டைக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன. பாயும் குதிரையின் முன்கால்களின்கீழ் இரண்டு ஆண் பூத கணங்கள் கையிலே தடி ஏந்தியவாறு காட்டப் பட்டுள்ளன.

இவை கிராம தெய்வங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு களாக விளங்குகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வாரியம் தமிழ் நாட்டு கிராம தெய்வ வழிபாட்டின் சின்னமாக இச் சுதையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இக்கோயிலுக்குரிய நிலங்கள் சந்தா சாகிப் காலத்தில் பட்டா போட்டு அளிக்கப்பட்டன.

ஊருக்கு மேற்கே 35 ஏக்கர் பரப்பளவில் கோச்சடைக் கண்மாய் அமைந்துள்ளது. இந்த ஏரி, பாண்டியன் அரிகேசரிமாரவர்மன் மகன் கோச்சடையனால் வெட்டப்பெற்றது. வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு உரிய சிவன் தோப்பு இவ்வூரில் உள்ளது. இது 'சிவனித் தோப்பு' என மருவி வழங்கி வருகிறது.

கொற்றவன் கழுகுமேடு

இது கோச்சடைக் கண்மாய்க்கு மேற்கே உள்ள பகுதி யாகும். கொற்றவன் கழுகுமேடு என்பது மருவி கொற்றரைமேடு என வழங்கப்படுகிறது. பாண்டியன் சமணர்களையும் அரசு குற்றவாளிகளையும் கழுவேற்றிய இடங்களில் இதுவும் ஒன்று

எனக் கூறப்படுகிறது. இப்பகுதியில் கி. பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைக்கின்றன. இம்மேட்டின் மேற்பகுதியில்தான் முனியாண்டி கோயில் உள்ளது.

பொன்மேனி

சிவபெருமான் வலைவீசிய வேடராக வந்து தன் முழு உருவத்தைப் பொன்மேனியாகக் காட்டிய ஊர்.

இங்கு டி. வி. எஸ். சிங்கர் தையல் இயந்திர ஊசி செய்யும் தொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது.

மாடக்குளம்

மதுரைக்கு மேற்கு 6 கி. மீ. இவ்வூர்ப் பெயரால் அமைந்த மாடக்குளம் வட்டம் என்பதே இப்போது மதுரை வட்டம் என்று குறிப்பிடப்பட்டு வருகிறது. இவ்வூர் ஐயனார் கோயிலிலுள்ள ஐயனார் திருவுருவம் மிகப்பெரிது. பழங்காநத்தத்தில் எவர்சில்வர் பொருள்கள், பிளாஸ்டிக் பொம்மைகள், எஃகுக் கட்டில்கள் செய்யும் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

அச்சம்பத்து

இவ்வூர் மதுரையிலிருந்து நாகமலை புதுக்கோட்டைக்குச் செல்லும் வழியில் அமைந்தது. 'சாதலுக்கு அஞ்சேன்' என மாணிக்கவாசகர் பாடிய இடம். அதனால் ஏற்பட்ட பெயரே இது. இவ்வூரையடுத்த விராட்டிபத்து என்பது தடாதகைப் பிராட்டியார் பெயரால் அமைந்தது. பிராட்டிபத்து என்பதே விராட்டிபத்து ஆயிற்று. சிவபெருமானுடைய பிராட்டியார் ஆதலால் 11-ஆம் நூற்றாண்டுவரை பிராட்டியார் என்ற பெயரே மீனாட்சியம்மனுக்கு விளங்கியதாகக் கூறுவர்.

ஐராவதநல்லூர்

வண்டியூருக்கும் சிலைமானுக்கும் இடையேயுள்ள ஊர். திருவிளையாடல் புராண நிகழ்ச்சித் தொடர்புடையது இவ்வூரருகேயுள்ள மணலூர் (மணவூர்) பாண்டியர் தலைநகராய் இருந்தது.

கரடிப்பட்டி

இயற்கையான குகையும் வட்டெழுத்துக் கல்வெட்டும் சமணத் தீர்த்தங்கரர் உருவமும் இவ்வூரில் உள்ளன. மதுரையி லிருந்து 11 கி. மீ.

கீழ்க்குயில்குடி

கீழக்குடி என்றும் இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. மதுரைக்கு மேற்கே எட்டு கி மீ. தொலைவில் சமணமலையின் கீழைக்கோடியில் அமைந்தது. இது அமணமலை என்றும் வழங்கப்படும். மலையில் 200 அடி உயரத்தில், நின்ற நிலையில் ஐந்தும் உட்கார்ந்த நிலையில் மூன்றுமாக எட்டுச் சமண உருவங்கள் காணப்படுகின்றன.

கூத்தியார்கூண்டு

அரசாங்கக் கணக்குகளில் இவ்வூர் இன்று ‘நிலையூர் Bit 1’ என்று குறிப்பிடப்படுகிறது.

இவ்வூர் திருப்பரங்குன்றத்துக்கு மேற்கேயுள்ளது. கப்பலூர் இரயில் நிலையம் இருப்பது இவ்வூராட்சி மன்ற எல்லைக்குள்ளேயே ஆகும் இவ்வூரின் முன்னைப் பெயர் சதுர்வேதி மங்கலம் என்பது. நாயக்க மன்னர் ஆட்சிக்காலத்தில் இவ்வூர்ப் பெயர் "கூத்தியார் கூண்டு" ஆயிற்று. மதுரையில் நாயக்கர் வம்சத்தில் ஆண்ட திருமலைநாயக்கருடைய முதல் அமைச்சராயும் தளவாயுமாக இருந்த "இராமப்பையன்" இவ்வூரில் பிறந்தவர் ஆவார். இவர் இவ்வூரில் ஒரு சிவன்கோயிலைக் கட்டியதோடு நாயக்கருக்காக மைசூர் மன்னருடனும் சேதுபதியுடனும் போர் புரிந்தார். இந்தப் போரால் எழுந்தது "இராமப்பையன் அம்மானை" என்னும் நூல். நாயக்க மன்னர்கள் கட்டுவித்த மீனாட்சி அம்மன்கோயிலும் அகத்தியமுனிவர் மணலினைக் கொண்டு வடித்த விநாயகர் கோயிலும் இவ்வட்டத்திற்கே பெரிய ஏரியும் இவ்வூரின் கண் திகழ்கின்றன. சோழவந்தான் பகுதியில் தொடங்கும் 20 கி. மீ. நீளமுள்ள நிலையூர்க் கால்வாய் இவ்வூருடன் முடிகிறது.

கொடிமங்கலம்

நாகமலைக்கும் வைகைஆற்றுக்கும் இடையே, மதுரைக்கு வடமேற்கே 11 கி. மீ. தொலைவிலுளது. இவ்வூர்ச் சிவன்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. காமட்சியம்மன் கோயிலில் மாசி மாதம் சிவனுர் இரவு விழா கொண்டாடப்படுகிறது. இவ்வூரருகே

நாகதீர்த்தம் என்னும் சிற்றருவி இருக்கிறது. நாகமலையில் மேலக்கால் என்னும் சிற்றூரருகே புலிப்புதைவு முதலிய பல குகைகள் உள்ளன

பிர்க்காப் பெயரைத் தாங்கும் கூழப்பாண்டி இவ்வூராட்சியைச் சேர்ந்தது.

மதுரைப் பகுதி முன்னாளில் மாடக்குளம், பொற்குளம் (பொற்றாமரைக்குளம்) என இருபகுதிகளாக இருந்தது கொடிமங்கலத்தை உள்ளடக்கிய பகுதி ''மாடக்குளத்துப் பிரமதேயமான முடித்தலை கொண்ட பாண்டிய சதுர்வேதி மங்கலமான'' கொடிமங்கலம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

சாம்பல்நத்தம்

சமானத்தம் என்று ஊர்ப் பெயர் மருவியுளது. இவ்வூர் மதுரைக்குத் தெற்கே, நெடுங்குளம் சாலையில் 12 கி. மீ தொலைவில் திருஞானசம்பந்தரை மதுரைக்கு வந்து சைவநெறியைக் காக்குமாறு மங்கையர்க்கரசியும் குலச்சிறையாரும் வேண்டிய போது அவர் தம் கூட்டத்தினருடன் தங்கிய இடமாகிய பிள்ளையார் பாளையத்துக்கு (பிள்ளை - பரிவாரம்) அருகே சாம்பல் நத்தம் அமைந்துள்ளது. ஞானசம்பந்தருக்கும் சமணர்கட்கும் நிகழ்ந்த அனல் வாதத்தில் சமணர்களுடைய ஏடு தீயில் எரிந்துசாம்பலான இடமே 'சாம்பல் நத்தம்' என்று பெயர் பெற்றது.

சிலைமான்

மதுரை-மானாமதுரைச் சாலையில் உள்ள ஊர். இவ்வூரின் ஒரு பகுதி இராமநாதபுரமாவட்டத்திலும் மற்றொரு பகுதி மதுரை மாவட்டத்திலுமாக இருக்கிறது. இவ்வூர் வைகைக்கரையில் அமைந்து தென்னை முதலிய வளங்களால் ஏற்றம் பெற்றிருக்கிறது.

நூல்ஆலை, ஓடு செய்யும் தொழிற்சாலை, சிமிண்டுக்குழாய்த் தொழிற்சாலை ஆகியன இங்கு உண்டு. (இந்நூலாசிரியர் எழுதியுள்ள 'இராமநாதபுர மாவட்டம்' என்னும் நூலையும் பார்க்க).

தோப்பூர்

இங்கு நூலாலைகளுக்கு வேண்டும் பாபின்கள் செய்யப்படுகின்றன. இவ்வூரின் ஒரு பகுதியான ஆஸ்டின்பட்டியில் நுரையீரல்

நோய் மருத்துவமனை கட்டப்பட்டிருக்கிறது. பிற துறை மருத்துவமனைகளும் இங்கு ஏற்படக்கூடும்.

பரவபத்தி

அருப்புக்கோட்டைச் சாலையில் மதுரையிலிருந்து 16 கி. மீ. தொலைவு இராமநாதபுரமாவட்ட எல்லையில் உளது. இவ்வூர் 'கூடக்கோயில்' என்ற பெயர் பெற்று, மதுரை மாநகரமாக விளங்கிற்று என்பர். திருப்பரங்குன்றம், மதுரைக்கு மேற்காக அமைந்தது என்று அகநானூறு குறிப்பிடுவது இக்கருத்துக்கு ஆதரவு தருகிறது. இப்போது பெரியகூடக்கோயில் என்னும் பெயருடையது; இங்கிருந்து கூப்பிடு தொலைவிலுள்ள சின்னக் கூடக்கோயில், இராமநாதபுர மாவட்டத்துக் கள்ளிக்குடி ஒன்றியத்தில் அடங்கியது.

மீனாட்சி சொக்கலிங்கம் கோயில் இவ்வூரில் இருக்கிறது.

புதுக்குளம்

தியாகராசர் பொறியியற் கல்லூரி இங்குள்ள ஒரு குன்றின் சரிவுகளில் பல தளங்களில் அழகுற அமைந்திருக்கிறது. குன்றின் அடிவாரத்திற்குக் கிழக்கே மொட்டையரசு என்னும் தீர்த்தத் துக்குத் திருப்பரங்குன்றத்து முருகனை, திருவிழாக் காலத்தில் எடுத்துச் செல்லுவர்.

புல்லூத்து (புல்லூற்று)

துவரிமான் - சோழவந்தான் சாலையிலுள்ளதும் சுற்றுலாச் சென்று பொழுதுபோக்குவதற்கு ஏற்றதுமாகிய இடம். இங்கு கத்தோலிக்கப் பாதிரிமார் சிறந்த கோழிப்பண்ணை நடத்து கின்றனர்.

விரகனூர்

கத்தரிக்காயால் புகழ் பெற்ற ஊர்.

விளாச்சேரி

பசுமலையும் திருப்பரங்குன்றமும் விளாச்சேரியும் ஒன்றுக் கொன்று மூன்று கி. மீ. தொலைவில் முக்கோண வடிவில் அமைந்த ஊர்களெனலாம். இது, பரிதிமாற்கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்) பிறந்த ஊர்.

நாகமலை புதுக்கோட்டை

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி முதலிய கல்வி நிலையங்களும் அருகேயுள்ள பல்கலை நகரில் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் அமைந்திருப்பதால் இவ்வூர்வளர்ச்சி பெற்றுள்ளது.

மேலக்குயில்பட்டி

அமணமலையில் சமணர் படுக்கைகள் உள்ளன.

நெடுமதுரை

அவனியாபுரம் விமான நிலையத்திற்குத் தெற்கே ஏழு கி. மீ. தொலைவில் ஒரு சிற்றூர்.

ஹார்விபட்டி நகரியம்

திருப்பரங்குன்றத்துக்கு அருகேயுள்ள இந்த ஊர், மதுரை கோட்ஸ் என்று இப்போது பெயர் பெற்றுள்ள மாபெரும் வணிக நிறுவனத்தின் ஒரு கூறான ஹார்வி மில் ஊழியர்களுக்காக உண்டாக்கப்பட்டது ஆலைக்கும் இவ்வூர்க்கும் இடையே, இந்தத் தொழிலாளர்மட்டும் பயணஞ்செய்ய இரயில்கள் இயங்குகின்றன.

தமிழக அரசு, இவ்வூரை 1—4—1963 முதல் ஒரு நகரியமாக (டவுன்சிப்) அறிவித்துச் சட்டம் இயற்றியுள்ளது.

III மேலூர் வட்டம்

மதுரைக் கோட்ட ஆட்சியில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மேலூர் என்ற மூன்று வட்டங்களும் அடங்கியுள்ளன. மேலூர் வட்டம் மேலூரைத் தலைநகராகக் கொண்டு 1250 சதுர கி. மீ. பரப்புடன் விளங்குகிறது.

மதுரை மாவட்டத்தின் தென்கிழக்கு மூலையிலும், இராமநாதபுரமாவட்டத்துச் சிவகங்கை, திருப்பத்தூர்வட்டங்கள், திருச்சி மாவட்டத்து மணப்பாறை வட்டம் புதுக்கோட்டை மாவட்டத்துத் திருமெய்யம் வட்டம் ஆகியவற்றின் எல்லையிலும் மேலூர் வட்டம் அமைந்திருக்கிறது. திருச்சி - மதுரைச் சாலை இவ்வட்டத்தின் வழியே செல்லுகிறது இதனாலும் மதுரை—தஞ்சை, மதுரை – தேவகோட்டை, திண்டுக்கல் – காரைக்குடி போக்குவரத்துக்களாலும் இவ்வட்டத்தில் பஸ்களும், லாரிகளும்

பெரிய அளவில் இயங்குகின்றன. மதுரைக்கும் மேலூருக்கும் இடையே நாள்தோறும் 150 பஸ்கள் செல்லுகின்றன. இவ் வட்டத்தின் வழியாகத் தொண்டி துறைமுகத்துக்கு இரயில் பாதை அமைக்க இடையிடையே அரசினர் சிந்தித்துள்ள போதிலும் அப்பாதை போடப் பெறவில்லை.

புகழ்பெற்றதலங்களாகிய அழகர்கோயிலும் திருவாதவூரும் இவ்வட்டத்தில் உள்ளன.

வேளாண்மைத் தொழிலில் இவ்வட்டம் சிறந்த நிலையில் இருக்கிறது. பெரியாற்று நீர், வாய்க்கால்களின் வழியாக 1900ஆம் ஆண்டில் இவ்வட்டத்தின் சில பகுதிகளுக்கு விடப்பட்டது. 1920 இல் மேலும் சில பகுதிகள் இந்நீரின் பயனைப் பெற்றன. இவ்வாறு 1950-க்குப் பிறகு இன்னும் சில ஊர்கள்-விரிவுத் திட்டம் என்ற பெயரில் பாசன வசதி பெற்றன வட்டத்தின் மூன்றிலொரு பகுதி பெரியாற்றுப் பாசனமாக உள்ளது. இதனால் வட்டம் வளமாகவும், பிறவட்டங்களுக்கு நெல்வழங்கும் களஞ்சியமாகவும் விளங்குகிறது பருவமழை உரிய காலத்தில் பெய்தால், இருபோகமும் பயிரிடப் பெறுகின்றன, சிறுநெல் வகைகளே இங்கு மிகுதியாக விளைகின்றன. கொழை சீமைஉரம், புதுவகைக் கலப்பைகள் ஆகியவற்றை இங்குள்ள உழவர்கள் பெரிய அளவில் பயன்படுத்துகின்றனர். நிலத்தின்விலை கடந்த 30 ஆண்டுகளில் பன்மடங்காகிவிட்டதாலும் நெல்விலை ஏற்றத்தாலும் உழவரிடையே சோம்பல் பெருகி வருகிறது. வேளாண்மைக் கல்லூரி ஏற்பட்டிருப்பதன் விளைவாக, கோவை மாவட்டத்து உழவரைப்போல மேலூர் வட்டத்து உழவரும், உடலுழைப்பில் கூடுதலான ஆர்வம் காட்டுவர் என்று எதிர்பார்க்கலாம். சில ஊர்களில் வாழைத்தோட்டங்கள் தொழில் முறையில் நடத்தப்படுகின்றன. கரும்பு சிறு அளவில் பயிரிடப் படுகிறது.

வைகை-பெரியாறு தேக்கங்களில் நீர்மட்டம் குறையும் ஆண்டுகளில், பெரியாறு விரிவுப் பகுதிக்கு நீர் விடப்படுவதில்லை. இவ்வாறு பாதிக்கப்படும் நிலை திடீரென்று ஏற்படுவதால் அப் பகுதி மக்கள் அல்லற்படுகின்றனர்.

மேற்கூறிய பகுதிகள் யாவும் வட்டத்தின் தென் பகுதியில் உள்ளன. இனி வட்டத்தின் வட பகுதியைக் காண்போம். பரப்பில் இது தென் பகுதியைப் போல இருபங்கினதாகும். இப்பகுதியில் உணவு உற்பத்தித் துறையினர் கண்மாய்களை வெட்டியும், சிறு அணைகள் கட்டியும் பயனுள்ள பணிகள் செய்கின்றனர்,

இங்கு கரந்தமலை, நத்தம் மலை, அழகர்மலை முதலிய மலைகளும் அடர்த்தியான காடுகளும் நிறைந்துள. பாலாறு, திருமணிமுத்தாறு என்ற காட்டாறுகள் இங்கு பாய்ந்து நலம் பயக்கின்றன. ஆனால் அவற்றின் பெரும்பயன் இராமநாதபுர மாவட்டத்துக்கே கிடைக்கிறது. நத்தம் பகுதியில் மக்களின் பெருமுயற்சியால் பலவகைப் புன்செய்ப் பயிர்களும் தங்கள் தேவைக்கு வேண்டிய அளவு நெல்லும் பயிரிடுகின்றனர். புளி, பலாமரங்கள் ஏராளமாக உள்ளன. எல்லா வகையான பழத் தோட்டங்களும் உண்டாக்கப்பட்டுள்ளன. கொட்டம்பட்டிப் பகுதியில் உள்ள பல ஊர்களில் தென்னந் தோப்பும் வாழைத் தோட்டங்களும் கடலைக் காடுகளுமாய்க் கவினுறு காட்சி தருகின்றன. நத்தம்பகுதிக்குத்திண்டுக்கல்லும் கொட்டாம்பட்டிப் பகுதிக்குச் சிங்கம்புணரியும் பெரிய சந்தைகளாக உள்ளன.

வேளாண்மை வளத்தையொட்டி, புதிய வகைக் கலப்பைகள் மேலூரில் செய்யப்பட்டுத் தமிழ்நாடெங்கும் விற்பனை ஆகின்றன. இத்தொழிலையும், மேலூரில் ஏற்பட்டுள்ள கூட்டுறவு நெசவு ஆலையையும் தவிர, குறிப்பிடத்தக்க வேறு தொழில் இவ்வட்டத்தில் இல்லை. அரசினருக்கு இவ்வட்டத்தில் கிடைக்கும் வருவாய் பெரிது. அந்த வருவாய் அனைத்தும் நிலவரி வருவாயே ஆகும். அரசாங்கத்துக்கு அடுத்தபடி வேளாண்மையால் வருவாய் பெறுபவர் அழகர்கோயில் இறைவர் ஆவர்.

சமணசமயச் சின்னங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. கிறித்துவ சமயம் இங்கு ஏற்றம் பெறவில்லை. கல்வித் துறையில் போதிய முன்னேற்றம் இல்லாதிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும். யாதவர், வலயர், ஹரிஜனங்கள் ஆகியோர் இவ்வட்டத்தில் வாழும் குறிப்பிடத்தக்க சமூகத்தார் ஆவர். அட்டப்பட்டி, நாவினிப்பட்டி முதலிய ஏழு ஊர்களிலுள்ள ஏழூர்ச் செட்டியார்கள் முன்னர் வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டிருந்து இப்போது வேளாண்மையில் சிறக்கின்றனர்.

மலை வளமும், கல் தச்சர் தொகையும் மிகுந்தபோதிலும், அத்தொழிலாளரின் கைவண்ணம் போற்றத்தக்கதாயில்லை.

அழகர் கோயிலுக்குச் சென்று திருவிழாக் காலங்களில் பொறுப்புடன் பணிபுரிவது, மேலூர் வட்டத்துத் தாசில்தாரின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

மக்கள் தொகையால் மிகுந்த சமூகத்தார் கள்ளர் ஆவர். இவர்கள் துணிவும் வீரமும் மிக்கவர். திருநெல்வேலிச் சீமையை அடக்கி விட்டுச் சென்னைக்குத் திரும்பிய வெள்ளைக்காரத் தளபதி ஹிரானும் அவனுடைய வீரர்களும் 1755-இல் இவர்களிடம் நத்தம் பகுதியில் படாதபாடுபட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடினர்.

கள்ளர் நாட்டில் இருப்பதால் அழகர்கோயில் அழகர்க்குக் கள்ளழகர் என்ற பெயர் நிலவி வருகிறது. அழகர் தேரை இழுக்கும் உரிமை இவர்களுக்கே உரியது. அழகர்கோயில் பதினெட்டாம் படியின் முன்னிலையில் இவர்கள் சத்தியம் செய்து, பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளுகின்றனர். அழகருக்குக் கோட்டை நெல் கொடுக்கும் வழக்கம் இவர்களிடம் நிலவுகிறது. மேலூரிலிருந்து சிவகங்கைக்குச் செல்லும் வழியில் 10 கி மீ. தொலைவிலுள்ள வல்லடியான் கோயிலும், கள்ளர்களுக்குப் புனிதமானது. அங்கு பங்குனி உத்திரவிழா நிகழும். அவ் விழாவுக்கு எட்டு நாட்கள் முன்னதாகவே கள்ளர் தம் வீடுகளில் பொறிப்பது இல்லை இறைச்சி உண்பதில்லை. உத்திரத்தன்று உச்சிப் பொங்கலுக்குக் கடாய் வெட்டி மறுநாள்முதல் இறைச்சி உண்பர்.

கள்ளர் மாகாணங்களின் எண்ணிக்கை 22. இவற்றில் உறங்காம்பட்டி, கோட்டநத்தம்பட்டி ஆகிய 18 பட்டிகளில அம்பலகாரர் என்ற பட்டப் பெயருடைய தனித் தலைவர்கள் உள்ளனர். வெள்ளலூர் அம்பலகாரர் பெரிய அம்பலகாரர் ஆவார்.

கருப்பண்ணன், வீரணன், மந்தையன், அழகன் என்ற பெயர்களே இவர்களில் மிகுதியாக இருக்கின்றன.

மஞ்சி விரட்டு என்னும் மாட்டுப் பந்தயம் இவ்வட்டத்தில் சிறப்பாகப் பல ஊர்களிலும் ஒரு திருவிழாவாக நடைபெறுகிறது. இதற்காக உழவர்கள் பெரும் பணம் செலவிடுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் மஞ்சி விரட்டு நாட்கள் மிக முக்கியமானவை. மஞ்சி விரட்டில் கலந்து கொள்வதற்காக மாடுகளை வளர்ப்பதும், சிலருக்குப் பொழுதுபோக்காகவும், சிலருக்குத் தொழிலாகவும் இருந்து வருகிறது. தொழுவிலிருந்து மாடுகளை மொத்தமாகத் திறந்து விடுவதுதான் இங்கு பழக்கம்.

மேலூர் வட்டத்தில் ஒரு நகராண்மைக் கழகமும், மேலூர், கொட்டாம்பட்டி, நத்தம் என்னும் ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன.

மேலூர் நகரம்

மதுரைக்கு வடகிழக்கே 28. கி. மீ தொலைவில் உள்ளது. வட்டத் தலைநகராயும் ஒன்றியத் தலைநகராயும் உளது. மக்கள் தொகை 22,000 இங்கிருந்து சிவகங்கை 25 கி. மீ. திருவாதவூர் 10 கி. மீ. அழகர்கோயில் 15 கி. மீ திருச்சி 102 கி. மீ. திருப்புத்தூர் 33 கி மீ இந்த ஊர்களுக்குச் சாலைகள் பிரிவதால் போக்குவரத்து மிகுதியாக இருக்கிறது. 1978-இல், மேலூர் நகராட்சி ஏற்பட்டது.

16-ஆம் நூற்றுண்டளவில் தான் இவ்வூர் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று எண்ண இடம் இருக்கிறது. அந்நாளில் இங்கு ஒரு சிவன்கோயில் கூட இல்லையாம். இறைவனை வழிபட்ட பிறகே உணவு உண்ணும் வழக்கமுடைய ஒரு துறவி, இவ்வூரிலிருந்து திருவாதவூர்க்குச் சென்று இறைவனை வணங்கிப் பின்னர் இங்கு மீண்டு உண்டாராம். இவ்வூர் மேட்டில் அவர் பிரதிட்டை செய்த லிங்கமே இன்று கல்யாணசுந்தரர்–காமாட்சியம்மன் கோயிலில் கல்யாணசுந்தரராகக் காட்சி தருகிறது. இக்கோயிலுக்கு 1960-இல் ராஜகோபுரம் கட்ட அனீபாராவுத்தர் என்ற முஸ்லிம் செல்வர் நன்கொடை வழங்கியதும் அவர் ஓர் இந்துவைத் தம் சுவீகார மகனுக்கிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கன.

பெரியாற்று வாய்க்கால் நீரால் வளம் பெற்று மேலூர் செழித்துக் கொழித்து வளர்ச்சியடைந்து வருகிறது. சுற்று வட்டத்துக்கு இது ஒரு பெரிய வணிக நகராக இருக்கிறது. அரசினரின் அலுவலகங்கள் நாளும் பெருகிவருகின்றன.

இந்நகரின் ஒரு பகுதியான பல்லவராயன்பட்டி பல்லவரைச் சோழர் வென்றதைக் குறிக்கும் பழமைப்புகழ் உடையது. மகமதியர் படையெடுப்பின் போது, கள்ளர்களை அடக்குவதற்காக முகமதுயூசுப்கான் இங்கு ஒரு கோட்டை கட்டியதாகவும், ஆங்கிலேயர் தம் ஆட்சியின் தொடக்ககாலத்தில் கள்ளர்களைப் பணியவைப்பதற்காக இங்கு பட்டாளம் வைத்திருந்ததாகவும் வரலாற்று நூல்களிலிருந்து அறிகிறோம்.

முஸ்லீம் ஆட்சியில் கட்டப்பெற்ற கோடைக்கிணறு உளது. இன்று கோட்டைக் கிணற்றுத் தெரு என்று [2 ஆவது வார்டில்] அழைக்கப்பெறுகிறது.

மேலூரில் இருப்பவை

முன்சீப் கோர்ட்டு, கூட்டுறவு நூலாலை, கலப்பைத் தொழிற்சாலைகள், அரசினர் கோழிப்பண்ணை, அரசினர் கலைக் கல்லூரி.

மேலூரில் இல்லாதவை

தீயணைக்கும்படை, பூங்கா, பாதாள சாக்கடை

சந்தை நாள்

திங்கட்கிழமை

கடையடைப்பு நாள்

வியாழக்கிழமை

சுற்றுவட்ட மக்களின் பொழுதுபோக்கு

நாள்தோறும் மேலூருக்கு வருவது

மேலூர் மக்களின் பொழுதுபோக்கு

மதுரைக்குச் சென்று வருவது.

4. மேலூர் ஊராட்சி ஒன்றியம்

இது நிலவருவாய் அடிப்படையில் சிறந்ததொரு ஒன்றியமாக விளங்குகிறது. வல்லாளப்பட்டி, வெள்ளலூர் திருவாதவூர் பிர்க்காக்களிலுள்ள 36 ஊராட்சி மன்றங்களையும் அ. வல்லாளப்பட்டி, பேரூராட்சியையும் கொண்டு மேலூரில் இயங்குகிறது. வடக்கே (1) நத்தம் (2) கொட்டாம்பட்டி கிழக்கே (1) திருப்புத்தூர் (2) சிங்கம்புணரி [இராமநாதபுர மாவட்டம்] தெற்கே திருப்பூவணம், மேற்கே மதுரை கிழக்கு ஒன்றியங்கள் இதன் எல்லையில் உள. பரப்பு 179 ச. மைல். மக்கள் தொகை மேலூர் நகரம் உள்பட 1, 10, 124 (1971)

இங்கு மழைபெய்து விளையும் பகுதி குறைவு. எனினும் பெரியாற்றுநீர் கொங்கம்பட்டி தவிர இவ்வொன்றியத்திலுள்ள எல்லா ஊர்களுக்கும் கிடைப்பதால், பாய்ந்து விளையும் சீமையாக இருக்கிறது. இதற்குரிய கால்வாய் 19. கி. மீ. தொலைவினது. 40,000 ஏக்கர் நன்செயிலும் மலையடிவாரத்தில் 12000 ஏக்கர் புன்செயிலும் வேளாண்மை நடைபெறுகிறது. வையக்கொண்டான், நேருசம்பா, செங்கற்பட்டு முதலிய சிறு நெல்வகைகள் பயிரிடப் பெறுகின்றன. விநாயகபுரத்தில் அரசினர் விதைப் பண்ணை உளது.

திருச்சி-மதுரை தேசியநெடுஞ்சாலை 18. கி.மீ.தொலைவுக்கும் மேலூர்-திருப்புத்தூர் மாநில நெடுஞ்சாலை 15. கி. மீ. தொலைவுக்கும் இவ்வொன்றியத்தின் வழியே செல்லுகின்றன.

பெரியாற்றுக் கால்வாய் ஏற்படுமுன் இவ்வொன்றியத்தின் பல பகுதிகள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்தன. அழகர் கோயிலுக்குச் செல்லுபவர் திருடர்களிடம் திண்டாடவும் நேர்ந்தது.

இங்கு கள்ளர் மிகுதி. வலையரை அம்பலகாரர் என்று அழைப்பர். புரவி எடுப்பு பெரிதும் பரவியிருக்கிறது. கீரை, கத்தரிக்காய் முதலிய காய்கறிகள் பெரிய அளவில் பயிரிடப் பெறுகின்றன. இவ்வட்டத்தில் தனியார் நடத்தும் உயர்நிலைப் பள்ளி ஒன்றேனும் இல்லை.

திருவாதவூர், அழகர்கோயில் ஆகிய தலங்கள் இவ்வொன்றியத்தில் இருக்கின்றன.

சுக்காம்பட்டி

புதுச்சுக்காம்பட்டி, பழையசுக்காம்பட்டி என இரண்டு பகுதிகள் உண்டு. புதுச்சுக்காம்பட்டி மேலூர் நகராட்சியின் முதல் வார்டு.

பழைய சுக்காம்பட்டி தனி ஊராட்சி மன்றம். இவ்விரு பட்டிகளிலும் சுக்கான் மிகுதியாகக் கிடைக்கிறது. தென்னை மிகுதி. கோடையில் கத்தரி பயிரிடுகிறார்கள்.

சூரக்குண்டு

சின்னச் சூரக்குண்டு, பெரிய சூரக்குண்டு என்று இரு பிரிவுகள் உள்ளன. நீலநிறக்கத்தரிக்காய் பயிரிடப்பெறுகிறது.

கள்ளம்பட்டி

பெரியாற்றுக் கால்வாய்ப் படுகையில் உள்ளது கள்ளர் இசுலாமியர் ஆகியோர் வாழ்கின்றனர்.

அரிட்டாபட்டி

இவ்வூரைப்பற்றி வேடிக்கையான பழமொழி ஒன்று உண்டு. ஆட்டைக் கழுதையாக்கிய அரிட்டாப்பட்டி என்பர். மேலூர்க்கும் அழகர்கோயிலுக்கும் இடையேயுள்ள சிற்றூர். பெருமலை என்று சொல்லப்படும் தனியிடத்தில் குடைவரைக் கோயில் இருக்கிறது.

தமிழ் வரிவடிவம் கி. மு. முதல் நூற்றாண்டில் எவ்வாறு இருந்தது என்பது இங்குள்ள கல்வெட்டிலிருந்து தெரிகிறது. இக் கல்வெட்டு, பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரைக் குறிப்பிடு கிறது. மேலூரிலிருந்து ஆறு கி. மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது இங்கு பல மலைக்குன்றுகள் இருக்கின்றன. கிழக்கில் இடைச்சி மண்டபம் என்றொரு குடைவரையுள்ளது. கருவறையில் லிங்கமும நந்தியும் இருபுறமும் துவாரபாலர்களும் விநாயகரும் சுப்பிரமணிய ரும் வடிக்கப்பட்டுள்ளனர்.

அருகே இளமைநாயகி அம்மன்கோயில் உள்ளது. அங்குத் துர்க்கை, அகோரமூர்த்தி திருவுருவங்களும் வேலைப்பாடுடைய தூண்களும் காணப்படுகின்றன. நடுவயலில் ஒரே கல்லால் ஆன தேர் போன்ற அமைப்புடைய அழகிய பீடம் ஒன்று கிடக்கின்றது.

கிடாரிப்பட்டி

அழகர் கோயிலிலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது. தென்னை வளம் மிக்கது. மண்பாண்டம் செய்யும் மரபினர் வாழ்கிறார்கள். கிடேரி–பசு. கிடேரிமலை அருகே அமைந்த ஊர் கிடேரிப்பட்டி எனப்பெயர் பெற்றதாகக் கூறுவர். இவ்வூர் மூனக் கால் கண்மாயில் தோன்றுவதே சிலம்பாறு.

வெள்ளலூர்

வெள்ளலூர் நாடு என்று இப்பகுதி அழைக்கப் பெறும். இங்குள்ள கிராமத்தை "மாகாணம்" என்பர். 22 மாகாணங்கள் உள்ளன. சோழரது ஆட்சிமுறை அந்நாளிலேயே இங்குச்

செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. கரும்பு மிகுதி. கள்ளர் சமூகத் தலைவரான அம்பலகாரர் வாழ்வதால் தொன்மையான ஊர். ஏழை காத்த அம்மன்கோயில், காட்டுக்குள் இருக்கிறது.

அம்பலகாரன்பட்டி

வெள்ளலூர் நாட்டிற்கு உட்பட்டது. வல்லடியான்கோயில் புகழ்பெற்றது.

"வாராராம் வல்லடியான் ஏழுமகா நாடு கூட்டி," என்னும் நாட்டுப்பாடல் பலரால் பாடப் பெறுகிறது. வெள்ளையனை எதிர்த்த வீரவரலாறு உண்டு

முத்துச்சாமிபட்டி

மதுரை - திருப்புத்தூர் நெடுஞ்சாலையில் உள்ளது. மேலூரில் இருந்து 20 கி. மீ. நெடுஞ்சாலையிலிருந்து 3 கி. மீ. தூரம் உள்ளே செல்ல வேண்டும். மதுரை மாவட்டத்தின் கிழக்கு எல்லை இதுவே. அப்பால் முறையூர் உள்ளது.

நாயத்தன்பட்டி

வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்தது. மேலூர்-சிவகங்கைச் சாலையில் உள்ளது. மேலூரிலிருந்து 16 கல் தொலைவினது நெடுஞ்சாலையிலிருந்து 2-கல் தொலைவிற்கு உள்ளேஉள்ளது. மதுரை மாவட்டத்தின் தென்கிழக்கு எல்லை இங்கு முடிந்து இராமநாதபுர மாவட்டம் தொடங்குகிறது.

கொங்கம்பட்டி

இவ்வூர் உப்பாற்றுப் பாலத்துக்கு அருகேயிருந்து சிங்கம் புணரிக்குச் செல்லும் சாலையில் உள்ளது. இந்த ஊரை ஒட்டித் திருமணிமுத்தாறு ஓடுகிறது. கொங்கச்சித்தர் இங்கு வாழ்ந்ததால் இது கொங்கம்பட்டி என்று பெயர் பெற்றது. யாதவர் மிகுதி இந்த ஊருக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலையை ஒட்டி "புறுக் கூடு மலை" உள்ளது. அமைப்பில் புறுக்கூடு போல் இருப்பதால் இப் பெயர் பெற்றது. (பார்க்க-இந்நூலாசிரியர் எழுதிய இராமநாதபுர மாவட்டம், ப. 411)

கீழவளவு-கொங்கம்பட்டி வழியில், மணி முத்தாற்றங் கரையில், இரு பெரிய கோயில்கள் இடிந்துகிடக்கின்றன; லிங்க பீடமும் விநாயகர் உருவமும் ஆற்றில் அடித்து வந்ததாகக்

கருதப்படும். மகிஷவர்த்தினியின் விக்கிரகமும் உள்ளன. இதனை நீலி கோயில் என்கிறார்கள். பேய்ப்பனையம்பட்டியில் உள்ள பட்டத்தரசி அம்மன் கோயிலிலும் கரடிப்பட்டியிலுள்ள வடக்கு வளவுச் செல்வி அம்மன்கோயிலிலும் இத்தகைய விக்கிரகங்கள் காணப்படுகின்றன. கரடிப்பட்டியில் “ஒட்டைக்கோயில்” என்று வழங்கும் சிவன்கோயில் மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது. இங்கிருந்து எடுத்துச் சென்ற கற்களைக் கொண்டு கொங்கம்பட்டி மருதி கட்டப்பட்டதாக இவ்வூர் முதியோர் கூறுகின்றனர்.

சருகு வலையப்பட்டி

இவ்வூரார் சிலர் மத்திய கிழக்கு நாடான சாடி அரேபியாவுக்குச் சென்று கூலி வேலை பார்த்து, ஆயிரம் ஆயிரமாக அடிக்கடி அனுப்புவதால் இச்சிற்றூர் செல்வத்தில் புரளுகிறது.

வெள்ளரிப்பட்டி

மாங்குளம் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த பெருமாள் மலையின் அடிப்பாகம் வெண்ணிறமானது. எனவே அது வெள்ளறை என்றும் அதன் அடிவாரத்திலுள்ள ஊர் வெள்ளரிப்பட்டி என்றும் பெயர் பெற்றன.

அ. வல்லாளப்பட்டி

அழகர்கோயில் வல்லாளப்பட்டி மேலூர்-அழகர்கோயில் வழியிலுள்ள சிறுநகரம். வேளாண்மை வளமும், அண்மைக் காலத்தில் கல்விப் பெருக்கமும் உடையது. இயற்கை எழில் நிரம்பி அழகர் மலையைப் பின்னணியாகக் கொண்டது.

தெற்குத்தெரு

மேலூரையடுத்துள்ள இச்சிற்றூர் பல துறைகளில் முன்னேறிவருகிறது. அழகர்கோயில் திருவிழாவில் வடம் இழுக்கும் போது தெற்குப் பக்கத்தில் நிற்கும் உரிமை பற்றி ஊர்ப்பெயர் உருவாயிற்று. இவ்வூரில் மண்பானை வாணிகம் மிகுதியாக நடைபெறுகிறது.

சாத்தமங்கலம்

தனியாமங்கலத்துக்கு அருகில் உள்ளது சாத்தன்(ஐயனார்) கோயில் இருக்கிறது.

உறங்காம்பட்டி

மேலூரிலிருந்து வெள்ளலூர் வழியாய் 12. கி மீ, தொலைவு வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்தது வளமான ஊர். உறங்காதவன்பட்டி என்பது உறங்காம்பட்டி ஆயிற்று என்பர். இவ்வூரில் மாசிமாதம் நிகழும் மஞ்சுவிரட்டுப் பெரும் புகழ் பெற்றது. போலீசாரின் பெரும் பொறுப்புகளில் ஒன்றாகத் திகழ்வது.

கோட்டநத்தம்பட்டி

அம்பலகாரன்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்தது. மேலூர் சிவகங்கைச் சாலை வழியி லிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது மேலூரிலிருந்து 15 கி. மீ. இவ்வூர்க் கோவில் பழமையானது நல்ல தங்காள் கதைத் தொடர்புடையது. புரட்டாசியில் திருவிழா உண்டு.

நாவினிப்பட்டி

மேலூரிலிருந்து 2 கி. மீ. தொலைவு. ஆத்தங்குடிச் செட்டியார்கள் எனப்படும் ஏழூர் நகரத்தார்க்குரிய மங்கள சித்தி விநாயகர் கோயிலும், காசி விசுவநாதர் கோயிலும் இவ்வூரில் உள்ளன. வேளாண்மையில் இவ்வூர் சிறந்து விளங்குகிறது. நுண் அலை நிலையத்தின் கோபுரம் இவ்வூருக்குப் பெருமைதருகிறது.

திருக்காணை

பூலாம்பட்டிக்கு அருகேயுள்ள சிற்றூர். இவ்வூர்ப்பொட்டலி லுள்ள காராளன் கோயில் கல்யானையைத் திசை திருப்பி விட்டால் அது சற்று நேரத்தில் மீண்டும் பழைய திசைக்குத் திரும்பிவிடுவதாகக் கூறுகின்றனர்.

மலம்பட்டி

கீழ வளவுக்கு அருகே உப்பாற்றுப் பாலத்திலிருந்து ஏரியூர் செல்லும் சாலையில் உள்ள வளமான ஊர்.

அழகர் கோயில்

தொன்று தொட்டு முருகனின் படைவீடாகவும் பிற்காலத்தில் வைணவப் பதியுடனும், சில நூற்றாண்டுகள் முருகன் திருக்கோயிலை இழந்து 1960 முதல் இருவகைச் சிறப்பும்

பெற்ற இத்தலம், தீர்த்தம், வரலாறு, இலக்கியம், கலை ஆகிய சிறப்புகளுடன் கூடி, மலையும். காடும், தென்னஞ்சோலையும் அமைந்து எழிலார்ந்த காட்சி நல்குவது. இவற்றைக் கண்டு இன்புற்று இறையருளும் பெற விழையும் அடியார்கள் குடும்பத்துடன் தங்குவதற்கு வசதி நிறைந்த விடுதிகள் உள்ளன.

மாநகராகிய மதுரையிலிருந்து இத்தலம் 19 கி. மீ. இத் தொலைவு முழுதும் திருவிழாக்காலங்களில் இறைவன் தங்கும் மண்டபங்கள் அடுத்தடுத்துக் கட்டப்பட்டுள்ளன. கிடாரிப்பட்டி என்னும் ஊராட்சியின் எல்லையுள் அழகர்கோயில் அடங்கியுள்ளது. இங்கு நிகழும் பெரிய திருவிழா பங்குனி உத்தரம். அன்று அழகர் சுந்தரவல்லித் தாயார், ஆண்டாள், உபயநாச்சியார் இருவர் ஆகியோரை அடுத்தடுத்து மனைவியராக ஏற்று நான்கு திருமணங்களை ஒரே நாளில் செய்துகொள்ளுகிறார்.

மலை

அழகர் மலையின் நீளம் 16 கி. மீ, உயரம் 300 மீட்டர் (1,000 அடி) வடக்கே மதுரை-நத்தம் சாலை தெற்கே அழகர் கோயில் மேலூர்ச் சாலை இவற்றுக்கிடைப்பட்டது. பழமுதிர்சோலை திருமாலிருஞ்சோலை என்னும் இரு பெரும் பகுதிகளை உடையது. குறிப்பிட்ட இடங்கள் இருஞ்சோலைமலை, தண்டலைமலை, இடபகிரி, திருமால்குன்றம் என்னும் பெயர்களால் வழங்குகின்றன.

இயற்கை வளத்தால் பசுங்காடும் சோலையும் நிறைந்ததால் சோலைமலை என்னும் இயற்பெயரும், பழமரங்களிலிருந்து பழங்கள் கனிந்து அருவிகளின் பேரொலியால் தாமே உதிர்ந்தமையால் பழமுதிர்சோலை என்னும் பெயரும் ஏற்பட்டன.

இம்மலையின் நீண்டு வளர்ந்த மரங்களையும், தேன்கூடு களையும், மிளகு கொடிகளையும் நக்கீரர் பாடியுள்ளார். குரங்குகள் நடுங்கும் வண்ணமும், யானைகள் தாங்கமுடியாதவாறும் குளிர் வீசிற்று என்றும் அவர் திருமுருகாற்றுப் படையில் கூறியுள்ளார். இன்றும் அழகர்மலை, பசுமலைகளின் தொடர்ச்சியாயும், வண்ண மலர்களின் வரிசையாயும், விண்ணை முட்டும் மரங்களின் தொகுப்பாயும், மந்தி, மயில், புள்ளினம் வாழும் சோலையாயும் விளங்குகிறது. அழகர் கோயிலில் கருடன் பறக்காது என்பது நம்பிக்கை.

இம்மலைத்தொடரில் உயர்ந்த பகுதியில் பஞ்சபாண்டவர் படுக்கை என்று சொல்லப்படும் சமணத்துறவியர் வாழ்ந்த இடம் உளது. புத்த சமயத்தார்க்கும் இம்மலை புகலிடம் அளித்திருக்கிறது. சைவ, வைணவ சமயப் பெருமக்களையும் தன்பால் ஈர்த்திருக்கிறது.

தீர்த்தம்

இம்மலைமீது பல சுனைகளும் அநுமார் தீர்த்தமும் நூபுரகங்கைத் தீர்த்தமும் உள்ளன. இதன் நீர், வீழ்ச்சியாகத் தீர்த்தத் தொட்டியில் வந்து சேர்ந்து அருங்கோடையிலும் அடியார்களுக்கு உதவுகிறது.

நக்கீரர் உண்டாக்கிய மூலவாவி என்னும் குளம் வேனிற் காலத்தில் நீர் மிகுந்தும், மாரிக்காலத்தில் நீர் குறைந்தும் உள்ள அருமையை உடையது

இவைதவிர சரவணப்பொய்கை என்னும் பதினெட்டாம் படித் தெப்பக்குளமும், நாராயணராயர் தெப்பக்குளம் என விளங்கும் சக்கர தீர்த்தமும் உள்ளன. அமாவாசை நாளில் திரளான மக்கள் அழகர்கோயிலுக்குச் செல்லுகின்றனர்.

திருமங்கை மன்னன், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இக்கோயிலை மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெரியாழ்வார், தம் வாழ்வின் இறுதி நாளைக் கழித்து, திருநாட்டுக்கு எழுந்தருளிய தலம் இதுவே. அவர் பள்ளிப் படுத்தப்பட்ட இடம் மதிலை ஒட்டிய மாஞ்சோலையில் உள்ளது. அங்கு ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

கோயில்

அழகர்கோயில் பல மண்டபங்களையும், சிற்பச் சிறப்புடைய திருவுருவங்களையும் உடையது. போர்ப் படையில் பணி ஆற்றியவருள் கலையுள்ளம் படைத்தவர்களின் கலைத்திறன் விசயநகரக் கட்டிடக்கலையின் சிறப்பாக நாங்குனேரி பேரூர்க் கோயில்களில் காணப்படுவது போன்று இங்கும் காணக்கிடக்கிறது. யாளியின் சிற்பம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள மூலவர் பெயர் கள்ளழகர் என இன்று வழங்கி வந்த போதிலும் கல் அழகர் (கல்லழகர்) என்னும் பெயரும் உண்டு. அழகரின் உற்சவமூர்த்தி தங்கத்தில் செய்தது. முருகனுக்கு உரிய வெள்ளிக்கிழமைகளில்தான் அழகர்க்கு மலரணிவித்துத் தேனும் தினைமாவும் வழங்குகின்றனர். அர்ச்சனைக்கு அரளிப்பூவே பயன்படுத்தப் படுகிறது. அடியார்களுக்குத் துளசி வழங்கும் முறை எக்காலத்தும் கிடையாது.

இக் கோயிலில் உள்ள சேனை முதலியார் (விஷ்வக் சேனர்) மூர்த்தம் குறிப்பிடத்தக்கது. ஏனைய திருமால் கோயில்களில் நான்கு திருக்கரங்களுடன் இருக்கும் இந்த மூர்த்தம் இங்கு இரண்டு திருக்கரங்களுடன் மட்டுமே இருக்கிறார். மேலும் தம் நாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார்.

கள்ளழகர்க்கு சித்திரைத் திருவிழாவின்போது தல்லாகுளம் பெருமாள் கோயிலில் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வரும் ஆண்டாள் மாலை அணிவிக்கப் பெறுகிறது. மதுரை தெற்கு கிருஷ்ணன் கோயிலுக்கு அண்மையிலுள்ள ஸ்ரீ வீரராகவப் பெருமாள்கோயில் பட்டருக்கு, அழகருடைய சடாரியை ஏந்தும் உரிமை இன்றும் வழங்கப்படுகிறது. காரணம் முன்பு ஒரு சமயம் உற்சவரை இந்தப் பட்டருடைய முன்னோர்கள் தீயிலிருந்து காப்பாற்றியதாகும்.

இக்கோயிலின் கருவறையிலேயே சோலைமலைக் குமரனின் வெள்ளி வாகனம் இருந்து வருகிறது. சக்கரத்தாழ்வாருக்கும் மூலவருக்கும் வெள்ளிக்கிழமையன்று வரும் சஷ்டி நாள்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் அபிடேகம் செய்கின்றனர்.

வலம்புரி விநாயகர், வயிரவர், கலியாணசுந்தரவல்லி, ஆண்டாள், சாலிக்கிராமம் முதலிய சந்நிதிகளை வழிபடுவது மரபு.

கள்ளர் சமூகத்தார் வழிபடும் கறுப்பணசாமித் தெய்வங்களுள் தலைமையானது, இங்குள்ள பதினெட்டாம்படிக் கறுப்பணசாமி. இதற்கு உருவம் இல்லை. இக்கோயில் கோபுர வாயிற் கதவுக்குத்தான் எல்லாப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன பிரமோத்சவத்துக்கு மட்டும் இக்கதவுகள் திறக்கப் படும். வழக்குகள் யாவும் இப் பதினெட்டாம்படி வாயிலில் சத்தியம் செய்து முடிவு செய்யப் பெறுகின்றன. இது அழகரின் காவல் தெய்வம்; எனவே சித்திரைத் திருவிழாவுக்கு அழகர் எழுந்தருளும்போது அழகர் அணிந்துள்ள நகைகள் இத்

தெய்வத்தின் முன் படித்துக்காட்டப்பெற்று மீண்டும் திரும்பி வரும்போது இத்தெய்வத்தின் முன்னிலையில் சரிபார்க்கப் படுகின்றன. கோயில் கருவூலச் சாவி ஒவ்வோர் இரவும் இத் தெய்வத்தின்முன் வைக்கப்படுகிறது. மறுநாட் காலையில் பட்டர் வந்து அதை எடுத்துச் செல்லுகிறார். வேறு எவரும் சாவியைத் தொட்டது இடையாது.

அழகர் கோயிலில் கள்ளர் ஒருவராவது அறங்காவலராக இருப்பது மரபு. கள்ளர்களுக்குப் பரிவட்டம் முதலியன கட்டும் மரபு திருவிழாக்களில் இருந்து வருகிறது. தேர்வடம் பிடிப்பவர்கள் இவர்களே. இதற்காகத்,

(1) திருவிழாவில் வெட்டப்பெறும் ஆடுகளின் தலைகளும்,

(2) வடத்துக்கு 100 படி அரிசியும்,

(3) கோயில் சோறு உண்டைக்கட்டிகளும், தோசைகளும் வழங்கப் பெறுகின்றன. சட்ட திட்டங்களாலும், உயிர்ப்பலி நிறுத்தத்தாலும் இந்த ஏற்பாடுகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு உள்ளன.

12, 19-ஆம் நூற்றுண்டுகளில் முறையே மைசூர் மன்னர் குடும்பத்தாரும், பச்சையப்ப முதலியாரும் இக்கோயிலில் பல கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

கிராம மக்களுக்குள் ஏதாவது விவகாரம் ஏற்பட்டால், அழகர்கோயில் பதினெட்டாம் படியின் முன்னுல் வந்து வழக்கைச் சொல்வார்கள். எதிராளி வழக்கை மறுத்து அந்த பதினெட்டாம் படி வாசல் வழியாக நுழைந்து வெளியேறி விட்டால், அவர் குற்றமற்றவர் என்று வழக்கைச் சொன்னவர் ஏற்றுக் கொண்டு விடுகிறார்.

பதினெட்டாம் படியேறிப் பிராமணம் செய்வபவர்களுக்குக் கதவு திறப்பதன்மூலம் இக்கோயிலுக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது 18 படிகளிலும் 18 சித்தர்கள் சமாதியாகி இருப்பதாயும், அதனுல் வேண்டும் வரங்களை வழங்க மூலவரைவிடப் பதினெட்டாம்படியார் ஆற்றல் மிக்கார் என்றும் மக்கள் நம்புகின்றனர். கோயிலுக்கு விடப்படும் மாடுகளை ஏலத்தில் விற்று வருவாய் திரட்டப்பெறுகிறது. இவை அழகர் கோயில் மாடுகள் எனப்படுகின்றன.

இக்கோயிலின் திருமேனிக் காவலராக சிறுவாலை ஜமீன்தாரும், வெளிப்பாதுகாவலராக வெள்ளியக்குண்டம் ஜமீன்தாரும் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு இக்கோயிலில் மரியாதைகளும் பிரசாதங்களும் உண்டு.

வரலாறு

பாண்டிய அரசர்களால் இக்கோயில் திருப்பணி செய்யப் பெற்றது. விமானத்துக்குப் பொன்தகடு போர்த்தியவர்களும் அவர்களே. பிற்காலத்தில் திருமலைநாயக்கரால், கோயிலைச் சுற்றிக் கோட்டையும், கோயிலுள் பள்ளியறை மண்டபம் முதலியனவும் கட்டப்பெற்றன. இரண்யவர்மன் கோட்டை என்பது இரண்டாம் நந்திவர்மப் பல்லவனின் தந்தையார் பெயரைப் பெற்றிருப்பதால் அவரால் கட்டப்பெற்றிருக்கக் கூடும்.

முஸ்லிம் படையெடுப்பின்போது இக்கோயில் நகைகளைப் பாதுகாக்க வலம்புரி விநாயகர்க்கு அருகே பெரிய சுரங்கம் ஒன்று வெட்டப்பட்டது. இது இன்றளவும் திறந்துபார்க்கப் படவில்லை. இக்கோயிலுக்குப் பெருஞ்செல்வம் இருந்ததாகக் கல்வெட்டுகளி லிருந்து தெரிவதால் சுரங்கத்தைத் திறந்து பார்க்க வேண்டியது இன்றியமையாதது.

இலக்கியம்

இத்தலத்துக்குரிய இலக்கியம் திருமுருகாற்றுப்படை ஆகும். திருப்பரங்குன்றம் முதலிய பிற படை வீடுகளை இதன்கண் அகப்படுத்தி, இந்நூலில் நக்கீரர் பழமுதிர் சோலைக்கே சிறப்புத் தருகிறார்.

சமணர் படுக்கையில் உள்ள இடத்திற்கருகே நக்கீரர் வசித்த குகை இருக்கிறது. அவர் தவம் செய்ததற்குரிய அறிகுறிகள் காணப்பெறுகின்றன. இன்றும் இங்குக் காட்டுமிருகங்கள் சஞ்சாரமும் தவமுனிவர் வாழ்வும் உண்டு.

பரிபாடல், சிலப்பதிகாரம், திருப்புகழ், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய அழகர் அந்தாதி, வேம்பத்தூர் கவிகுஞ்சரமய்யர் ஆக்கிய அழகர் கலம்பகம், பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் படைத்த அழகர்கிள்ளைவிடு தூது, கவிகுஞ்சர பாரதியார் செய்த சோலைமலைக் குறவஞ்சி ஆகியவையும் இங்குள்ள மலை, கோயில் ஆகியவற்றின் புகழை இயம்புகின்றன.

உணவுச்சிறப்பு

இக்கோயில் பிரசாதமாக, தாமரை இலை அளவில் செய்யப் பெறும் நெய் தோசை பனையோலைப் பெட்டியில் வைத்து வழங்கப் பெறுகிறது. இது சில நாட்களுக்குப் பின்னரும் உண்ணத்தக்கது.

அழகர்கோயில் மாடு புகழ்பெற்றது. இதைப்பற்றி "எழுத்தாளன் சிறப்புமலர் 1961"-இல் திரு. சொ. அடைக்கலம் பாடிய பாட்டு இது.

அழகர் மாடு, அழகர் மாடு
அழகாய் வருகுது-அது
ஆயிரம் தையல் உள்ள துணியை
அணிந்து வருகுது
பழகிய மாடு போல வாசல்
பக்கம் வருகுது-அது
"பழைய துணி கேளு" என்றால்
படியில் ஏறுது.
தாளம் போட்டுக் கேட்கக் கேட்கத்
தலையை ஆட்டுது-அது
தன்னை வளர்க்கும் எஜமானர்க்குத்
தானம் கேட்குது
வைக்கோல், புல்லுக் கேட்டுத் தின்ன
வாயில் லாதது—அது
வயிற்றுக் கில்லா ஏழைக் குதவி
வழங்கி வருகுது

பழமுதிர்சோலை

பழமுதிர்சோலை என்ற முருகன் கோயிலும், ஆறுமுகப் பெருமான் திருக்கோயிலும் இத் தலத்தில் நெடுங்காலம் இருந்து எவ்வாறோ மறைந்து விட்டன. இங்கு ஒரு மதில் சுவர் எடுக்கப் பள்ளம் வெட்டியபோது 1903-இல் சிவலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுஉடனே மறைக்கப் பட்டதாயும் கூறுவர்.

மதுரைமாநகர் வாழ் முருகனடியார்களின் முயற்சியால் எருத்துமலை எனப்படும் இடமலையில், மீண்டும் முருகன் கோயில் உருவாகிறது. வள்ளி தெய்வானையுடன் அருள்பாலிக்கும் வெற்றி வேல் முருகன் உருவம் இங்கு அமைந்திருப்பதால் முருகனடியார்

களின் மனக்குறை நீங்கியுள்ளது. கார்த்திகை, விசாகம், சஷ்டி போன்ற சிறப்பு நாள்களில் அடியார்கள் திரளாகச் செல்கின்றனர் பெரிய தலங்கள் யாவற்றிலும் இருப்பது போன்று, அழகர் கோயிலில் ஒவ்வொரு நாளும் ஒரு திருநாளைப் போலவே மக்கள் குழுமி வருகின்றனர்.

சிலப்பதிகாரம் கூறும் சிலம்பாறு இப்போது ஓர் ஓடை போல உள்ளது. இவ்வாற்றின் புனிதம்கருதி, சிலர் இப்போதும் இங்கு அஸ்திகளைக்கரைக்கின்றனர்.

திருவாதவூர்

நித்தம் அத்தன் கற்றுக்களிக்கும் திருவாசகத்தை ஆக்கிய மாணிக்கவாசகர் பிறந்த பதி இதுவே. பாண்டியமன்னன் அரிமர்த்தனின் அமைச்சராக அவர் இருந்தார். பாரிமன்னனின் அமைச்சராக இருந்த கபிலரும் இவ்வூரில் பிறந்தவரே. மதுரையிலிருந்து(ஒத்தக்கடை வழியாக)25 கி.மீ. தொலைவிலும் மேலூரிலிருந்து 10 கி. மீ. தொலைவிலும் இத் தலம் உளது. இது மதுரை மேலூர்ச் சாலையில் இல்லாவிடினும் இவ்விரு நகரங்களிலிருந்தும் நேரே திருவாதவூருக்குப் பேருந்துகள் செல்லுகின்றன. வைகையின் வடகரையிலிருந்து சற்றுத் தொலைவில் திருவாதவூரும், தென் கரையில் திருப்பூவணம் என்னும் பாடல்பெற்ற தலமும் இருக்கின்றன. திருவாதவூரின் மக்கள் தொகை 3,000.

சமயவாதிகள் வாதம் செய்த காரணத்தால் ஊர்ப்பெயர் வாதவூர் ஆயிற்று. இவ்வூர்க்கோயில் வாதபுரீசுவரர் கோயில் என்னும் பெயருடையது. இறைவன் திருமறைநாதர், இறைவி ஆரணவல்லி. தொன்மையும் தோற்றப்பொலிவும் அழகிய வேலைப்பாடும் ஊரை நோக்கப் பெரிய அளவினதாயும் இக் கோயில் மிளிர்கிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கும் இக்கோயிலுக்கும் உள்ள ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கன. இக்கோயில் மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தான ஆட்சிக்குட்பட்டது, சுந்தரேசர்க்கு வலப்புறத்தில் மீனாட்சியம்மனும், திருமறைநாதர்க்கு வலப்புறத்தில் ஆரணவல்லியாரும் கோயில் கொண்டுள்ளனர். பிற கோயில்களில் இறைவனுக்கு இடப்பக்கத்திலேயே இறைவி எழுந்தருளுவது மரபாக இருந்துவருகிறது. மதுரையிலும் திருவாதவூரிலும்

பாதுகைகளே பள்ளியறைக்குச் செல்லும் வழக்கம் நிலவுகிறது. இரு கோயில்களும் மாணிக்கவாசகர் வாழ்க்கைத் தொடர்பு உடையன.

திருமறைநாதர் கோயில் கோபுரம் ஐந்தடுக்கு உடையது. இதனருகே கோயிலின் உட்பகுதியில் நுட்பமான வேலைப் பாட்டுடன் கூடிய ஒருமண்டபம் இருக்கிறது. இதன் கொடுங்கைகளின் சிற்பம் ஒப்புஉயர்வில்லாது. இதுவே 'வாதம்' நிகழ்ந்த மண்டபம் என்றும் மாணிக்கவாசகரால் கட்டப் பெற்றது என்றும் முன்பு 100 கால்களை உடையதாக இருந்தது என்றும் கூறுவர் தெற்குப் பிராகாரத்தின் நடுவில் 'ஆறுகால் பீடம்' இருக்கிறது. இம்மண்டபத்துக் கொடுங்கைகளும் புகழ்பெற்றவை. கோயில் கட்டும் ஸ்தபதிகள் எழுதும் உடன்பாடு களில் திருவாதவூர்க் கொடுங்கைகளை விலக்கி எழுதுவதிலிருந்தே இவ் வேலைப்பாட்டின் அருமையை உணரலாம்.

இக்கோயிலில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று கடவுளர்க்கும் தனித்தனிச் சந்நிதிகள் காணப்படுகின்றன. நவக்கிரகங்கள் இங்கு இல்லை. 'நவக்கிரகங்களைக் கோயிலில் வைத்து வழிபடும் பழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது; அவை இல்லாததால் இக்கோயில் மிகப் பழமையானது' என்பர் அறிஞர். இக்கோயில் பூசைகள்யாவும் ஆதிசைவர்களாலேயே செய்யப்படு கின்றன. இக்கோயிலுக்குத் தேவாரம் இல்லாமைக்குக் காரணம் தேவாரம் பாடிய பெருமக்கள் காலத்துக்குப் பின்னரே மாணிக்கவாசகர் தோன்றியதாகும்.

மாணிக்கவாசகர் இவ்வூரிலேயே பிறந்தார். அவருடைய முன்னோர்கள் மானமங்கலம் என்ற ஊரிலிருந்து இங்கு வந்து குடியேறினர் என்பர். அவரது தந்தையார் திருமறைநாதர் கோயிலில் அர்ச்சகராக இருந்தார். மாணிக்கவாசகர் இக் கோயிலில் வழிபட்டதோடன்றித் திருப்பணியும் செய்தார். அதனால் அவரது திருவுருவங்கள் மூலவரும் உற்சவரும் கோயிலில் வைக்கப்பட்டுள. உற்சவ மாணிக்கவாசகர் ஆவணிமூல விழாவுக்கு மதுரைக்கு, தாம் அமைச்சராயிருந்த பாண்டியர் தலைநகர்க்கு எடுத்துச் செல்லப்படுகின்றார். ஆனி மாதத்தில் மாணிக்கவாசகர் பிறந்த நட்சத்திரத்தில் ஏழைகட்கு அமுது படைக்கப்படுகிறது.

நடராசர்க்கு இக்கோயிலில் தனிச் சந்நிதி உண்டு. மார்கழித் திங்களில் திருப்பள்ளி எழுச்சி சிறப்பாக நிகழ்கிறது. இக்கோயில் இன்னும் சிறப்போடு நடத்தப் பெறவேண்டும்

இங்குத் திருவாசகப் பதிப்புகள் யாவும் சேகரித்து வைக்கப் பெற வேண்டும். அல்லது இக்கோயிலின் மேற்பார்வையில் ஒரு நூல் நிலையத்தை வைக்கலாம். ஆண்டுக்கு ஒருமுறை இங்கு திருவாசக மாநாடு கூடவேண்டும். யாத்திரை வாசிகள் வசதியாக அழகர் கோயிலிலிருந்து திருவாதவூர் போய்வர போக்குவரத்து அமைக்க வேண்டும்.

மாணிக்கவாசகர் பிறந்த வீடு இப்போது ஒரு கோயிலாக இருந்து வருகிறது. 1934-இல் இக்கோயில் புதுப்பிக்கப் பெற்றது. திருவாதவூர், பாண்டியர்களின் கோட்டைகளுள் ஒன்ருகஇருந்தது. திரிபுவனச் சக்கரவர்த்தியின் கல்வெட்டு இவ்வூரில் பொறிக்கப் பெற்றுளது.

கடைச்சங்கப் புலவராகிய கபிலர் தோன்றிய பெருமையும் இத்தலத்தைச் சேரும். இவர் பெயரைத் தாங்கும் கபிலதீர்த்தம், திருமறைநாதர் கோயிலில் இருக்கிறது. நம்பி திருவிளையாடல், பரஞ்சோதி திருவிளையாடல், திருவாதவூர்ப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகியவை இத்தலத்துச் சிறப்பைக் கூறுகின்றன.

பெரியாற்றின் கிளையான முல்லையாறு பாய்வதால் இவ்வூர் நீர்வளமும் நிலவளமும் பெற்றுத் திகழ்கிறது. இவ்வூர் ஏரி மேலூர் வட்டத்திலேயே பெரிய ஏரிகளுள் ஒன்ருகும். இந்த ஏரியில் இரட்டைக் கம்பத்தின்மீது விட்டங்களில் ஏரிகாவல் தெய்வம் உளது. மழையைக் கண்டு மாதம் பலவாகிவிட்டால் நூறு தேங்காய்களைக் கருக்கி மேளம் தாளம் விருதுகள் சூழ, அத் தெய்வத்தின்மீது பூசி அருள் பாலிக்க வேண்டுவர். பிறகு மழை பொழியுமாம்.

இவ்வூர்க்குத் தெற்கே மூன்று கி. மீ. தொலைவில் ஓவாய்மலை இருக்கிறது. சமணர் சல்லேகணம் செய்த இடங்களுள் இதுவும் ஒன்று. சல்லேகணை செய்தல் என்பது பசுமையும் இயற்கை அழகும் கூடிய இடத்தில் மலையில் படுக்கை அமைத்து உணவைச் சிறிது சிறிதாகக் குறைத்து, நீர் மட்டும் பருகி, சமணத்துறவிகள் உயிரைப் போக்கிக் கொள்ளும் முறையாகும். ‘அருங்கலச் செப்பு’ என்னும் நூலில் விவரம் காண்க. இம்முறை ‘வடக்கிருத்தல்’ போன்றதாகும்.

பாவை பாடிய வாயால் கோவை பாடிய மணிவாசகர் பெருமானின் தலம் இதுவாக இருப்பினும் அவரது சிறந்த

திருவுருவங்களைக் காண, புதுடில்லி ராஷ்டிரபதி பவனிலும், கொழும்பிலும் உள்ள காட்சிக் கூடங்களுக்குத்தான் சென்று கண்டின்புற வேண்டியவர்களாக உள்ளோம்.

இத்தலத்துக்கு உரிய விருட்சம் மகிழமரம். கண்ணொளி பெறுவதற்கு வழிபடும் முழிச்சிப் பிள்ளையார் கோயிலும், தீ மிதித்தல் நிகழும் திரௌபதை அம்மன் கோயிலும் இவ்வூரில் உள்ளன.

ஆமூர்

திருவாதவூர் அருகே உள்ளது. பழங்காலத்தில் சிறந்த மல்லன் ஒருவன் இருந்தான். அவன் 'ஆமூர் மல்லன்' என்று புறநானூற்றில் கூறப்படுகிறான். சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்பானை வென்று இவன் வாகை சூடினன். (புறம் 80-85) அவனுடைய ஆமூர் இதுவன்று.

இங்குச் சுந்தரபாண்டியன் கோயில் உள்ளது. மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவர்கள் சனிக்கிழமைதோறும் வந்து இக்கோயிலைத் தூய்மை செய்து பாண்டிய மன்னர் கல்வெட்டை ஆய்ந்து வருகின்றனர்.

திருவாமூர் என்பது, அப்பர் பிறந்த தலம். அது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கும் திருநாவலூருக்கும் இடையேயுள்ள சிற்றூர்.

கீழவளவு

கள்ளர் வளைத்துக்கொண்ட மேலவளவு, நடுவளவு (மேலூர் நகரின் ஒரு பகுதி), கீழவளவு என்னும் ஊர்களில் இது ஒன்று திருப்புத்தூர் மேலூர்ச் சாலையில் காவல்துறை நிலையத்துடன் அமைந்த வளமான ஊர். இவ்வூர் நிலங்களுக்குப் பெரியாற்றுப் பாசனம் உண்டு.

இவ்வூர் வீரகாளி அம்மன் கோயில், சாலை ஓரமாக அமைந்து எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. கார்த்திகை, பங்குனி மாதங்களில் கடைசிச் செவ்வாய்க்கிழமை அன்று திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

பல சாலைகள் சந்திப்பதால், இவ்வூர் ஓரளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கீழவளவு-பஞ்சபாண்டவர்மலை

கீழவளவுக்கும் கீழூர்க்கும் இடையே சிறிய மலைகள் தொடராக உள்ளன. கல் உடைக்கும் தொழில் இங்குப் பெரிய அளவில் நிகழுகிறது. சாலைக்குவடக்கே அமைந்த பஞ்சபாண்டவர் பாறையில் சமணத் துறவிகளின் படுக்கைகள் காணப்படுகின்றன. அத்துறவிகளின் உருவங்களும், குடைந்த பாறையும், அடிவாரத்தில் பிள்ளையார் கோயிலருகே பெரியதொரு மண்டபம் போன்ற அதிசயக் கூரையும், பலவகைக் கற்களும் கண்டு மகிழத்தக்கன.

கூரையின் அடித்தளம் பளபளப்பாக இருக்கிறது. மழை பெய்தால் இந்த மண்டபத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட விழாது. பனி பெய்தாலும் அது மண்டபத்துக்குள் இருப்பவரை வாட்டாது.

பின்வரும் தகவல்களைத் திரட்டி எனக்கு உதவியவர் திரு. மா. சுந்திரமூர்த்தி.

மலையின் ஒரு பகுதியில் அருகச்சமயத் தொடர்புடைய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் படைப்புச் சிற்பங்களாகும். முதல் சிற்பமும்ஆறுவது சிற்பமும் முற்றுப்பெறுத நிலையில் உள்ளன.

1. முக்குடைச்செல்வன் :

இரண்டு கால்களையும் மடித்து யோகநிலையில் அமர்ந்து உள்ளார். இரண்டு கைகளும் தியான முத்திரையில் உள்ளன தலையின் மேல் குடை செதுக்கப்பட்டுள்ளது. குடையின் மூன்று பிரிவுகள் முற்றுப்பெறுத நிலையிலுள்ளன. முக்குடைச்செல்வனின் உருவம் நீண்ட தொள்ளைக்காதுகளுடன் எளிமையாக வடிக்கப் பட்டுள்ளது. பீடங்கள் செதுக்கப்படவில்லை.

2. பார்சுவநாதர் :

பிறந்த மேனி. நின்ற நிலை. தலையின் மேல் ஐந்து தலை அரவம் காட்டப்பட்டுள்ளது. நீள்செவி - அகண்டதோள் - நெடியகண்கள். இடது தோளின் பக்கவாட்டில் சாமரம் காட்டப்பட்டுள்ளது. கால்களின் பக்கவாட்டில் இரண்டு குத்து விளக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. நின்ற நிலை பீடம் ஏதும் செதுக்கப்படவில்லை. பாண்டியர் காலத்ததாகக் கருதப்படும்

ஆனைமலை ஓவியங்களிலும் இத்தகைய குத்துவிளக்குகள் காட்டப் பட்டுள்ளது ஒப்புநோக்கு தக்கது. இவ்வுருவத்தின் மீது பூசப் பட்ட ஓவியங்கள் காலத்தால் அழிந்து விட்டன. இவ்வுருவத்தின் இடைப்பகுதியும் கண்களும் பொறிந்துள்ளன.

3. தீர்த்தங்கரர் (முக்குடைநாதர்)

சிம்மபீடத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்த நிலை. இரு கைகளும் தியான முத்திரையில் இணைந்து வலதுகால் பாதத்தின் மேல் காணப்படுகின்றன. அகண்ட தோள்களின் மேல் அரை வட்ட வடிவ பிரபாவளியும் பிரபாவளியைச் சுற்றிலும் 8 அனல் தளிர்களும் காட்டப்பட்டுள்ளன. இதன் மீது முக்குடைநாதரின் பக்கவாட்டில் இரு குத்துவிளக்குகள் காட்டப்பட்டுள்ளன. தோளின் பக்க வாட்டில் இரண்டு சாமரங்கள் உள்ளன.

சாமரையின் மேலும், உருவத்தின் வலப்புறமும் பூசப் பட்ட ஓவியங்கள் சற்று எஞ்சிய நிலையிலுள்ளன. பச்சை நிற வண்ணம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வுருவத்தின் மூக்கு, வாய், இடக்கண் ஆகிய பகுதிகள் பொறிந்துள்ளன. பீடத்தின் கண்டப்பகுதியில் நான்கு சிறிய சிம்மங்கள் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. பீடம் அதிட்டானவர்க்கங்களுக்குரிய உபபீடம். ஜகதி, குமுதம், கண்டம், கம்பு, பட்டி ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

4. முக்குடைநாதர்

பத்மத்தின்மேல் யோகநிலையில் அமர்ந்து காணப்படுகிறது. பக்கவாட்டில் உள்ள மூன்றாவது சிற்பத்தைவிடவும், ஐந்தாவது சிற்பத்தைவிடவும், சிறியது. இவ்வுருவத்தின் தோளின் மேல் பிரபாவளி காட்டப்பட்டுள்ளது. பிரபாவளியின் மீது எட்டு அனல்தளிர்கள் காணப்படுகின்றன. இது எண் குணத்தைப் பிரதிபலிக்கும் நிலையில் காட்டப்பட்டதாக இருக்கலாம். தோளின் பககவாட்டில் இரண்டு சாமரங்கள் உள்ளன; கீழே இருபுறத்திலும் சுடருடன் கூடிய இரண்டு குத்துவிளக்குகள் காட்டப்பட்டுள்ளன. இவ்வுருவத்தின முகத்தில் தெளிவான அமைதியை காணலாம்.

இந் நான்காவது உருவம் முழுவதும் ஓவியம் தீட்டப் பட்டிருக்க வேண்டும். ஆனால் தற்போது சாமரத்தின் மீதும்,

குத்துவிளக்கின் மீதும், முக்குடை மீதும் மட்டுமே ஓவியங்கள் எஞ்சியுள்ளன. சாமரையின் தோகைப்பகுதியில் ஒவ்வொரு முடியும் சிகப்பு மெல்லிய கோடுகளால் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். விளக்கு எரியும் சுடர் சிகப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது, பிரபாவளியின் மேல் சுண்ணச் சாந்து பூசி அதன்மேல் சிகப்பு மஞ்சள் ஆகிய வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. பிரபாவளியின் உட்பகுதியில் பச்சை வண்ணம் பூசப்பட்டுள்ளது. முக்குடை மேல் மஞ்சள் வண்ணம் தீட்டப்பட்டு, அதற்கு மேலும் சிகப்பு நிற வண்ணத்தில் வரி வடிவங்கள் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளன. காலத்தால் எஞ்சியுள்ள இவ்வழகிய ஓவியங்களின் தடயங்களைக் காணும் போது எத்தகைய சிறப்பு வாய்ந்த கலைப்பாணி சமீபகாலமாக அழிந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பச்சை, சிகப்பு, மஞ்சள், கருப்பு ஆகிய வண்ணங்கள் இங்கு பயன் படுத்தப பட்டுள்ளன.

பிரபாவளிக்கு பக்கவாட்டில் இரண்டு அலர்ந்த தாமரைகள் தீட்டப்பட்டுள்ளது. அவை சிகப்பு வண்ணத்தால் புனையப பட்டுள்ளன. தாமரையின் பக்கவாட்டில் அமர்ந்த ஐந்து இதழ்கள் தெளிவாகத் தெரிகின்றன.

தாமரை இலைகள் பச்சை வண்ணத்தில் தீட்டப்பட்டு உள்ளன. இவ்வோவியங்கள் ஆனைமலை, கழிஞ்சமலை ஆகிய பகுதிகளில் உள்ள பாண்டியர் கால ஓவியங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கன.

5. தீர்த்தங்கரர்

பீடம் ஏதுமின்றி யோகத்தில் அமர்ந்த நிலை. இவ்வுருவத்தின் மேலும் முன்னதைப் போன்ற பிரபாவளி, முக்குடை காணப்படுகிறது. பக்கவாட்டில் இரண்டு இயக்கர்கள் கையிலே சாமரம் ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளனர். பக்கவாட்டில் இரண்டு சமண கணங்களும் முக்குடைநாதரை வழிபடுகின்றன. அவர்கள் முடிமேல் நாகக்குடை காணப்படுகிறது.

6. பார்சுவநாதர்

பார்சுவநாதரின் இவ்வுருவம் முற்றுப் பெறவில்லை. இடுப்பிற்குக் கீழும் கால் பகுதியும் முகப்பகுதியும், தலையும், நாகக் குடையும் முற்றுப் பெறவில்லை.

பஞ்சபாண்டவர் மலையின் கீழ்ப் பகுதியிலுள்ள பாறையில் செதுக்கப்பட்டுள்ள படுக்கைகள் 27 உள்ளன. படுக்கைப் பகுதி பள்ளிக்கூடம் என்று அழைக்கப்படுகிறது. படுக்கையின் புறப் பகுதிகள் தண்ணீர் போக வடிகால் பாதைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு படுக்கையும் சுமார் 2 அடி அகலமும் 6 அடி உயரமும் உள்ளன. பாறையின் மேற்பகுதியில் பிராமி கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

மருதூர்

இவ்வூர், மதுரை மேலூர் நெடுஞ்சாலையில் கத்தப் பட்டிக்குத் தென்கிழக்கே 6 கி. மீ. தொலைவில் உள்ளது, இங்கே தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, பிற்காலப் பாண்டியர் ஆட்சியால் ஏற்பட்ட விஷ்ணு கோயில்களுள் ஒன்றான கண்ணாழ்வார் கோயிலைக் கண்டுபிடித்துள்ளது. இதை உள்ளூர் மககள் 'கிருஷ்ணன் கோயில்' என்று குறிப்பிடுகின்றனர். கருவறையிலும் முகமண்டபத்திலும் பெருமான் உருவங்கள் காணப்படுகின்றன.

முகமண்டபத்தின் புறச்சுவர்களில் பிற்காலப் பாண்டியர் சோழர் கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் இறைவன் பெயர் 'கண்ணாழ்வார்' என்றும் கோயிலின் பெயர் 'கண்ணாழ்வார்' என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஓவாமலையில் 2200 ஆண்டுகளுக்கு முன் பொறிக்கப்பெற்ற ஒரு கல்வெட்டில் 'பனங்காடு' என்று ஓர் ஊர் குறிக்கப்படுகிறது. அதே ஊர் மருதூர்க் கல்வெட்டில் 'பனங்காடி' என்று குறிக்கப் பட்டுள்ளது. பனங்காடி என்ற ஊர் இராஜேந்திரச் சோழன் காலத்தில் அம்மன்னன் பெயரால் இராஜேந்திரச் சோழச் சதுர்வேதிமங்கலம் என பெயர் மாற்றி அமைக்கப் பட்டிருக்கலாம்

5. கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

மேலூர் வட்டத்திலுள்ள பிற ஒன்றியங்களை நோக்க இது வளம் குறைந்தது. குடிதண்ணீர் கூட இங்கு அரிதாகவே உளது. தும்பைப்பட்டி சென்னகரம்பட்டி ஆகிய இரு ஊர்கள் மட்டுமே பெரியாற்றுப் பாசனம் பெறுகின்றன.

கிழக்கே சிங்கம்புணரி, தெற்கே மேலூர் தெற்கு, மேற்கே நத்தம், வடக்கே துவரங்குறிச்சி ஒன்றியங்கள் சூழ வெள்ளலூர், கொட்டாம்பட்டி பிர்க்காக்களிலுள்ள 27 ஊராட்சி மன்றங்களைக்கொண்டது இவ்வொன்றியம்.இவற்றுள் ஒன்றேனும் பேருராட்சியாக இல்லை.

கள்ளர் சமுகத்தினர் இங்கு மிகுதி. இவ்வொன்றியத்தின் வழியாக 28 கி. மீ. தொலைவுக்கு மதுரை – சென்னை தேசிய நெடுஞ்சாலை செல்லுகிறது.

அட்டப்பட்டி

தும்பைப்பட்டி அருகேயுள்ள இவ்வூர் எட்டுச் சிற்றூர்களின் தலைநகர். அஷ்டப்பட்டி என்பதே அட்டப்பட்டி ஆயிற்று. இன்றளவும் எட்டு ஊரார் இவ்வூர்த் திருவிழாவில் கலந்து கொள்ளுகின்றனர். இங்கிருந்து கீழவளவு, சிங்கம்புணரி, தும்பைப்பட்டி ஆகிய ஊர்களுக்குச் சாலைகள் பிரிகின்றன.

தும்பைப்பட்டி

மேலூரையடுத்துள்ளது. வளமானது. 'அமைச்சர்' கக்கனின் ஊர். ஊர்ப்பெயர் தும்பைப் பூவையும், அருகேயுள்ள வஞ்சி நகரத்தின் பெயர் வஞ்சிப்பூவைக் குறிப்பன. தும்பைப் போர் நடந்த இடமாகவும் இருத்தல் கூடும். போர் வீரர்களுக்குச் சோறு ஆக்கிய இடமாதலால் அருகேயுள்ள ஊர் சாலாக்கியப்பட்டி (சால்–சோற்றுப்பானை) என்று பெயர் பெற்று இருக்கக் கூடும். தும்பைப் போர் பற்றிய விவரங்கள் புறப் பொருள் வெண்பா மாலையில் கூறப்பெற்றுள்ளன.

மேலவளவு

மேலூர்க்குக் கிழக்கே கீழவளவும் மேற்கே மேலவளவும் உள்ளன இவ்வளவுகள் கள்ளர் வளைத்துக் குடியேறிய இடங்கள்.

எட்டிமங்கலம்

மேலூரிலிருந்து மேலவளவுக்குச் செல்லும் சாலைக்கு மேற்கேயும் சென்னகரம்பட்டியிலிருந்து தும்பைப்பட்டிக்குச் செல்லும் சாலைக்குத் தெற்கேயும் அமைந்த சிற்றூர். எட்டி

என்னும் சிறப்புப் பெயரைப் பாண்டிய மன்னர், புகழ்பெற்ற வணிகர்களுக்கு வழங்கினர் அவனுக்கு எட்டிப்பூவும் எட்டி மோதிரமும் பரிசிலாகக் கொடுக்கப் பெற்றன. அச்சிறப்புப் பெற்ற ஒருவன் வாழ்ந்த அல்லது அமைத்துக் கொண்ட ஊராக இருக்கலாம்.

கொடுக்கர்பட்டி

இராமநாதபுர மாவட்ட எல்லையிலுள்ள சிற்றூர். இங்கு ஹரிஜனக் கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை நடைபெறுகிறது. இவ்வூரைச் சேர்ந்த கல்யாணிக்கண்மாயில், திருமணிமுத்தாறு பாய்ந்து இராமநாதபுர மாவட்டத்துக்குச் செல்லுகிறது. இங்கு இவ்வாற்றின் குறுக்கே இந்நூலாசிரியர் முயற்சியால் அரசினர் ஓர் அணையை 1964-இல் கட்டுவித்துள்ளனர். ஆற்றங் கரையில் நூலாசிரியர் தம் தந்தையார் நினைவாகச் சோமசுந்தர விநாயகர் கோயிலைக் கட்டியுள்ளார்.

சொக்கலிங்கபுரம்

கொட்டாம்பட்டிக்கும் சிங்கம்புணரிக்கும் இடையே உள்ள ஊர். தென்னந்தோப்புகள் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ளன இவ்வூரினர் பலர் சந்தை வாணிகத்தில் செல்வம் ஈட்டியுள்ளனர். பாண்டியர் காலத்தில் மேன்மலையூர் என்ற பெயருடன் இவ்வூர் விளங்கிற்று. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நத்தம் சீமையின் வட எல்லையூராக அமைந்ததால் அச்சீமைத் தலைவனை முதலாம் சொக்கலிங்கம் நாயக்கன், தன் பெயரை இவ்வூர்க்கு இட்டான்.

பாக்கிஸ்தான் ஏற்பட்ட போது 1947-இல் இவ்வூர் முஸ்லிம்கள் இவ்வூர்க்கு ‘ஜின்னாபுரம்’ என்று தமக்குள் பெயர் இட்டு தங்கள் கடைகளில் அவ்வாறு பெயர்ப் பலகைகளைத் தொங்க விட்டனர். இப்போது ‘சொ–புரம்’ என்ற சொற்றொடரே பெருவழக்கில் இருந்து வருகிறது. இவ்வூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் பெயர் அழகிய சோழீசர். இங்கிருந்து ஒரு கி. மீ. தொலைவில் தொழில்பேட்டையும் அப்பால் சிங்கம்புணரியும் (இராமநாதபுர மாவட்டம்) உள்ளன.

பள்ளபட்டி

பாலாற்றின் தென்கரையில் அமைந்த பள்ளத்தாக்கான இடம். லெட்சுமி தாண்டவராயபுரம் என்ற பெயரும் இருப்பதற்கேற்ப இவ்வூர் வளம் கொழிக்கிறது. வாழை இலைகளும், தேங்காய்களும் மலைப் பகுதித் தழைகொழைகளும் இவ்வூரின் ஏற்றுமதிகளாக உள்ளன. வேளாண்மைக் காலத்தில் நிலங்களுக்கு உரம் ஊட்ட இங்கிருந்து கொழைகள் நூற்றுக் கணக்கான வண்டிகளில் சுற்று வட்டத்திற்கெல்லாம் சென்ற வண்ணமாக இருக்கும்.

பறம்புமலை அடிவாரம் இங்கிருந்து 8 கி.மீ. தொலைவு. இடையேயுள்ள மேலூர் என்ற மேலப்பட்டிக்குச் செல்ல பாலாற்றின் மீது பாலம் கட்டப்பெற்றால், கொட்டாம்பட்டி யிலிருந்து பொன்னமராவதி, புதுக்கோட்டைப் பகுதிகளுக்குச் செல்லக் குறுக்குவழி உண்டாகும். பறம்புமலைக்குப் புறத்தே இருப்பதால் இப்பகுதி முழுதும் புறமலைநாடு என்று பண்டு தொட்டுச் சுட்டப்பட்டுளது.

மதுரை மாவட்டத்து வடக்கு எல்லை முடிந்து திருச்சி – இராமநாதபுரம் மாவட்டங்கள் இந்த மலையில் ஆரம்பமாகின்றன.

மணப்பச்சேரி

கொட்டாம்பட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் நத்தம் சாலையிலுள்ள இவ்வூர், பலதுறைகளில் வளர்ச்சியடைந்து முன் மாதிரிக் கிராமமாக விளங்குகிறது. இது தொன்றுதொட்டுப் புலவர்கள் வாழும் ஊராகும்.

இவ்வூரைச் சேர்ந்த பூதகுடி மலையின் அடிவாரத்தில் 16–17-ஆம் நூற்றாண்டுகளில் தனிச்செயம் என்ற ஊர் இருந்தது. மனிதப்பலி கேட்ட சடாமுனிக்கு அஞ்சி, அவ்வூரார் மதுரை, சோழவந்தான் முதலிய ஊர்களுக்குக் குடியேறினர். இன்று அப்பகுதி அடர்த்தியான காடாக உளது. முன்னர் அங்கு வாழ்ந்தவர்களின் வழியினர், ஆண்டுதோறும் யாருக்கும் தெரியாமல் இரவில் வந்து பூசையிட்டுச் செல்லுகின்றனர்.

*அங்கு காணப்பெற்ற கல்வெட்டுக்களிலிருந்து அவ்வூரின் பழைய பெயர் வாரணவாசி என்று தெரிகிறது. இவ்வழியாக வட இந்தியாவிலிருந்து இராமேசுவரத்துக்கு யாத்திரையாக வந்தவர்கள் காசி மாநகரின் நினைவாக இப்பெயரை இட்டிருக்கக் கூடும். வாரணவாசி பிறகு சேரநாராயணபுரம் என்று மாறி இருப்பதால், அது சேரர்கள் பாண்டிய நாட்டை வென்றதற்கு நினைவுச் சின்னமாக்கப்பட்டது என்றும்; பாண்டியர் மீட்ட பின் தனிச்செயம் என்ற பெயர் பெற்றது என்றும் கருதலாம்.

இவ்வூர் ஒரு போர்க்களமாய் இருந்திருக்கக் கூடும் என்பது இங்குள்ள கோயில் பெயராலும், கண்மாய்களின் பெயராலும் தெரிகிறது.

உருமாண்டவன்கோயில்என்றபெயரிலுள்ள உருமாண்டவன் என்பது போரில் மாண்டவனைக் குறிக்கும். புறங்கண்டு ஓடிய இடம் கோயிலைச்சூழவுள்ள புறண்டோடிக் கண்மாயாகி விட்டது. வெற்றி கண்ட வேந்தனும் மறவர்களும் வாள் மங்கலம் செய்ததை வாள்மங்கலக் கண்மாய் நினைவூட்டுகிறது பகை மன்னன் முடிதாழ, வெற்றி மன்னனைப் பணிந்த இடமாகிய மண்ணு மங்கலம் பண்ணமங்களம் கண்மாயாய்க் காட்சியளிக்கிறது. போர்க்களத்தைப் பாடிய புலவர் பெயரால் சேந்தனி-பூதகுடிக்கண்மாய் வெட்டப்பட்டுள்ளது போலும்.

இவ்வூரருகே உழும் போது நூற்றுக்கணக்கான செப்புக் காசுகள் கிடைத்திருப்பதாகவும், இவ்வூரினரான புலவர் மாரன் கூறுகிறார்.

கொட்டாம்பட்டி

ஏறத்தாழ 3500 மக்கள் வாழும் இவ்வூர் திண்டுக்கல்–சிங்கம்புணரி, மதுரை-திருச்சிச் சாலைகள் சந்திக்கும் இடத்தில் மேலூர்க்கு வடக்கே 22 கி. மீ. தொலைவில் பறம்பு மலையைப் பின்னணியாகக் கொண்டு பாலாற்றுக்கு அருகே உளது ஊராட்சி மன்ற ஒன்றியத்தின் அலுவலகம் இங்கு ஏற்பட்ட பின் இவ்வூர் வளர்ச்சி பெற்று வருகிறது.

---

*இக்கல்வெட்டைக் கண்டவர் கொட்டாம்பட்டித் தமிழாசிரியர் ஆ. மாரன் ஆவார். கல்வெட்டு முழுமையும் இன்னும் படியெடுக்கப் பெறவில்லை. மேலும் ஆராய்ந்தால் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கும்.

கொட்டம் என்பதிலிருந்து இரும்புத் தொழிற்சாலை இருந்த இடம் இது என்று கருதலாம் இங்கிருந்து 5 கி. மீ. தொலைவில் சுண்டக்காபட்டி என்ற வேட்டைநல்லூர்ப் பாறையில் இரும்புப் படிவங்களும் உள்ளன. மணப்பச்சேரிக்கு அருகே குட்டுக்காட்டில் இரும்பு காய்ச்சிய இடங்களும் உள்ளன.

நத்தம் சீமை (சிவகங்கைச் சீமையை உள்ளடக்கிய) இராமநாதபுரம் சீமை இரண்டும் சந்திக்கும் எல்லையில் இருப்பதால், எல்லை காத்த வீரர்கள் கோலாட்டம் முதலிய விளையாட்டுகளில் ஈடுபட்டு விழித்திருந்து கொட்டம் அடித்த இடம் என்று குமாரசாமிக் கவிராயர் கும்மியில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

பாண்டங்குடி

பாண்டவர்குடி அல்லது பாணர்குடி என்று அழைக்கப் பெறும். இது கொட்டாம்பட்டியிலிருந்து சிங்கம்புணரிக்குச் செல்லும் பாதையில் உளது. இவ்வூர் யாதவர்களைப் 'பிறவான்' என்று அழைக்கின்றனர்.

தொந்திலிங்கபுரம்

கொட்டாம்பட்டிக்கு வடமேற்கே ஐந்து கி. மீ. தொலைவு மலையடிவாரத்தில் நீரூற்று வசதியால் செழிப்படைந்துள்ள சிற்றூர். சருகு தொந்திலிங்க நாயக்கர் பெயரால் ஏற்பட்டது.

தருக்காக்குடி

கொட்டாம்பட்டியருகே இருந்த சூளமாசகண்டன், சுவனூரவனேரி வீரசூளாமணி என்ற ஊர்கள் முகமதியர் படையெடுப்பால் அழிந்துவிட்டன. அவற்றுள் ஒன்றான இந்த ஊரில் சிவன்கோயிலும் கோச்சடை பன்மரான வீரபாண்டியன் கல்வெட்டுக்களும் உள்ளன.

வஞ்சிநகரம்

மதுரை திருச்சி நெடுஞ்சாலையில் மேலூரிலிருந்து ஏறத்தாழ 12 கி மீ தொலைவில் உள்ளது. இவ்வூர் மலைக்கல் சிவப்பு நிறமானது. கன்னியாகுமரி அருகேயுள்ள விவேகானந்தர் பாறையில் விவேகானந்தர் மண்டபம் அமைப்பதற்கு இங்கிருந்துதான்

கல் எடுக்கப் பெற்றது. இப்பகுதியில் வைரம் போன்ற பொருள் கள் பெருமழை பெய்யும்போது கிடைப்பதாகக் கூறுவர்.

இவ்வூருக்குக் கிழக்கே 5 கி. மீ. தொலைவில் 'கள்ளன் கரடு' என்னும் பெயருடன் 10 மைல் சுற்றளவுள்ள காடு இருக்கிறது.

சுந்தரபாண்டியன் (13-ஆம் நூற்றாண்டு) காலத்தில் இப் பகுதி சுரபி நாடு என வழக்கிலிருந்தது.

இங்குள்ள அகலிங்கீசுவரர் கோயில் புதைந்து கிடந்து 1970-இல் கண்டுபிடிக்கப்பட்டது.

திருச்சுனை

மதுரை திருச்சி நெடுஞ்சாலைக்குச் சற்றுத் தெற்கே கருங்காலக்குடிக்கு அருகே உள்ளது அழகிய சுனை ஒன்று உண்டு. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயிலும் அதில் கல்வெட்டுக் களும் இருக்கின்றன. 16 கால் மண்டபம் நாயக்க மன்னர்களால் விரிவுபடுத்தப்பட்டது.

கருங்காலக்குடி

மேலூர்க்கு வடக்கே 12 கி. மீ. தொலைவில் திருச்சிச் சாலையின் இருமருங்கிலும் அமைந்த தொன்மையான ஊர். இவ்வூரிலும் வஞ்சிநகரத்திலும் உள்ள மலைகளில் கருங்கல், தகடு போன்று கிடைக்கிறது. அரிய வேலைப்பாட்டுக்குரிய கற்களும், கட்டிட வேலைக்குரிய கற்களும், சிகைக்காய்ப் பொடி செய்ய உதவும் உசிலை இலையும் ஏற்றுமதியாகின்றன.

2000 ஆண்டுகளுக்கு முந்திய கல்லறைப் படிவங்கள் இவ்வூரில் உள்ளன. ஊரையொட்டிக் குன்றின் மேலமைந்து பொலிவுடன் விளங்கும் திருச்சுனைச் சிவன் கோயில், பாண்டிய மன்னர்களுள் முதல்வனை சுந்தரபாண்டியனால் கட்டப் பெற்று 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர்களால் விரிவு படுத்தப்பட்ட சிறப்புடையது. இவ்வூர்க் கல்வெட்டுகளைப் பற்றி பேராசிரியர் மு. இராகவையங்கார் 'சாசனத் தமிழ்க்கவி சரிதம்' என்ற நூலில் எழுதியுள்ளார்.

ஆவணக்களரியும், சிறியதொரு மருத்துவமனையும் இவ்வூரில் இயங்குகின்றன.

மேற்கே மூன்று கி. மீ. தொலைவிலுள்ள ஓட்டைக் கோயில்பட்டி என்னும் சிற்றூர் 13-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டின் ஓர் உறுப்பான சுரபி நாட்டின் தலைமையூராக இருந்தது. நாணயங்களும் ,பொன்நகைகளும் செய்ய ஓர் அக்கசாலை இங்கு திகழ்ந்தது.

கருங்காலக்குடியில் சமண தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. இவை பற்றி திரு. மா. சந்திரமூர்த்தி சேகரித்துள்ள குறிப்புகள் வருமாறு :

பத்மத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்த நிலை. இரண்டு கைகளும் மடியில் வைத்த நிலை. தலையின்மேல் முக்குடை இல்லை பக்கவாட்டில் சாமரை இல்லை. மகரக் குண்டு இல்லை. குத்துவிளக்கு ஏதுமின்றி எளிமையாக தீர்த்தங்கரரின் உருவம் வடிக்கப்பட்டு உள்ளது. முகம் தேய்ந்துவிட்டது. காலம் கி. பி. 9–10-ஆம் நூற்றாண்டு. 2' உயரம் – 1' அகலம் – பாறையில் 12' உயரத்தில் உள்ளது–புடைப்புச் சிற்பம்–கிழக்குப் பார்த்தது-பஞ்சபாண்டவ மலையில் உள்ளது–தீர்த்தங்கரர் உருவம் அரைவட்ட மாடத்தில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

உடல்

நீண்ட காது, அகண்ட தோள்–மெல்லிய உடல்–மடிப்புடன் கூடிய வயிறு–சிறப்புடன் காணப்படுகிறது.

படுக்கைகள்

11 படுக்கைகள் உள்ளன. 2' அகலம் 5' நீளம்–வழுவழுப் பாகச் செதுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுக்கள் படுக்கையில் இல்லை–இரண்டு படுக்கைகளுக்குத் திண்டும் வெட்டப்பட்டுள்ளன.

சிம்ம பீடங்கள்

இப்படுக்கையின் தென்பகுதியில் 3 சிம்மங்கள் அமர்ந்த நீள்சதுர பீடம் காணப்படுகிறது–சிற்பம் சிறிதாயினும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது – ஜகதி – குமுதம்–கண்டம் ஆகிய பகுதிகள் கொண்ட அதிட்டானவர்க்கமுடைய பீடத்தில் கண்டப்பகுதியில் சிம்மங்கள் உள்ளன.

நீளம் 3½', 2' அகலம் சமய தொடர்பான சடங்குகளுக்கோ, சமண முனிவர்கள் அமரும்படுக்கையாகவோ இது பயன்பட்டிருக்க வேண்டும்.

கல்வெட்டு

பாறையின் தென்பகுதியில் முகப்பின்மேல் கல்வெட்டு உள்ளது கல்வெட்டு 30 வரியில் பொறிக்கப்பட்டுளது.

6. நத்தம் ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியம், மேலூர் வட்டத்தின் வட எல்லையில் சாணர்பட்டி, வடமதுரை மருங்காபுரி [திருச்சி மாவட்டம்] கொட்டாம்பட்டி, மேலூர் தெற்கு, மதுரை மேற்கு, அலங்காநல்லூர் ஒன்றியங்கள் சூழ அமைந்துள்ளது. மக்கள் தொகை, 96,598 (1971)

நத்தம் பேரூராட்சி உட்பட 21 ஊராட்சி மன்றங்கள் சேர்ந்து இவ்வொன்றியம் உருவாகியுள்ளது. நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு பிர்க்காக்களிலுள்ள ஊர்கள் இதில் அடங்கியவை.

அடர்த்தியான காடுகளும், சிறிய மலைகளும் பெரிய அருவிப் பள்ளத்தாக்கும் நிறைந்தது இப்பகுதி. இங்கு வாழும் மக்கள் முயற்சி மிக்கவர். ஆழ்கிணறு தோண்டி கவலை, மின்சாரப் பம்பு செட்டுகள் வழியாகப் பயிரிடுகின்றனர். புன்செய் வேளாண்மை மிகுதியாய் நடைபெறுகிறது. செவ்வல் நிற மண் இருப்பதால் பழத்தோட்டங்கள் போடுவது ஒரு பெரிய தொழிலாக உருவாகி வருகிறது.

இவ்வொன்றியத்துக் "கோசி குறிச்சி" வழியாகத் திருச்சிக்கும் மதுரைக்கும் இடையே சீரழிந்துள்ள மங்கம்மாள் சாலையைப் புதுப்பித்தால் இவ்வொன்றியம் முன்னேற்றமடைய வாய்ப்பு ஏற்படும். அவ்விரு நகரங்களுக்கிடையேயுள்ள தொலைவும் 82 மைலிலிருந்து 75 மைலாகக் குறையும். இச்சாலையில் மண்டபங்கள், வேளிர் நடுகற்கள் இருந்ததற்குரிய சின்னங்கள் காணப் படுகின்றன. கண்ணகியும் கோவலனும் இவ்வழியாகவே மதுரைக்கு வந்திருக்க வேண்டும். நத்தத்திலிருந்து அலங்காநல்லூருக்குச் சாலை அமைப்பது இப்பகுதியின் இன்றியமையாத் தேவையாகும்

நத்தம்-மதுரைச்சாலே, அழகர் மலேக்கும் சிறுமலேயின் கிழக்குத் தொடர்ச்சிக்கும் இடையே அமைக்கப்பட்டிருக்கிறது. இப் பகுதியில் கிடைக்கும் பாலேமரத்தைக் கொண்டு பொம்மைகளும் கோலாட்டக் குச்சிகளும் செய்யப்படுகின்றன. மதுரை மாநகர்க்குத் தேவைப்படும் விறகில் ஒரு பகுதி இங்கிருந்து செல்லுகிறது. கரடிகள் நத்தம் காடுகளில் பெரிய அளவில் வாழ்கின்றன

நத்தம்

நத்தம் என்னுஞ்சொல், யாருக்கும் சொந்தமில்லாது அரசினர் நிலமாக உள்ள மேட்டுப் பகுதியைக் குறிக்கும். இவை கணக்கர் கணக்கில் பத்தாம் பசலி என்று குறிப்பிடப் பெறும். தமிழ்நாட்டில் பல ஊர்களில் நத்தம் என்னும் பகுதி உண்டு. நத்தம் என்னும் அடைமொழி அல்லது ஈற்றுச் சொல்லுடன் சுக்காநத்தம், கோட்டநத்தம், பாலவநத்தம் புத்தாநத்தம், சாமநத்தம் போன்ற எண்ணிறந்த ஊர்கள் இருக்க, இவ்வூர் நத்தம் என்னும் தனிச் சொல்லேயே தன் பெயராக உடையது.

இச் சிறுநகர், மதுரையிலிருந்து 35 கி. மீ தொலேவில் உள்ளது. திண்டுக்கல்லிலிருந்தும் காரைக்குடிச் சாலேயில் அதே தொலேவிலுளது இங்கிருந்து செந்துறை, கொட்டாம்பட்டி முதலிய ஊர்களுக்கும் சாலேகள் பிரிகின்றன. தொன்றுதொட்டு இவ்வூர் வழியேதான் திருச்சி-மதுரைப் போக்குவரத்து நடைபெற்றது நத்தத்துக்கும் மருங்காபுரி ஜமீனுக்கும் இடைப்பட்ட பகுதி நடுமண்டலம் என வழங்கப்படுகிறது.

18-ஆம் நூற்ருண்டில் நத்தத்தில் ஒரு கோட்டை இருந்தது. திருச்சி, மதுரை நகரங்களுக்கிடையே செல்லும் போர் வீரர்கள் இங்கே தங்கிச் செல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அந்நாளில் விசுவநாத நாயக்கர் பாண்டிய நாட்டை 72 பாளேயங்களாகப் பிரித்து அவற்றுள் ஒன்ருன நத்தம் சீமையைத் தம் உறவினஞன முதலாம் சொக்கலிங்கம் நாயக்கனிடமும் ஒப்புவித்தார். பிரிட்டிஷ் ஆட்சியில் அவர்கள் நத்தம் ஜமீன்தார் என்று பட்டம் பெற்றனர். அந்தக் குறுநில மன்னர் பரம்பரையில்லாது போனமையால் ஜமீன் உரிமை 19-ஆம் நூற்ருண்டில் ஆங்கில ஆட்சிக்கு மாறிற்று. அவர்

க்குடைய அரண்மனை இடிந்த நிலையில் உளது. ஹைதருக்கும் கும்மந்தான் கான் சாகிபுக்கும் இவ்வூரில் நடைபெற்ற போரில், ஹைதர் அலி, தோல்வி அடைந்து ஓட்டம் பிடித்தான்.

ஞாயிறுதோறும் சந்தை கூடுகிறது. இவ்வூரில் வாணிபம் பெரிய அளவில் நடைபெறுகிறது - திருமணிமுத்தாற்றின் வட கரையில் நத்தமும், தென்கரை ஊரில் ஒரு பகுதியானதும் பழைய ஊராயதுமாகிய கோயில்பட்டியும் உள்ளன. கோயில் பட்டியில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகளுள்ள கயிலாயநாதர் கோயில் என்னும் சிவன் கோயிலும், கத்தோலிக்கரின் கல்வி நிலையமும் உள்ளன. இரண்டாம் பராந்தகன் இவ்வூரைக் கோயிலுக்குத் தானமாக விட்டான். அதனால் சுந்தரசோழச் சதுர்வேதி மங்கலம் கோயில்பட்டி ஆயிற்று.

நத்தத்தார் என்பவர் இயற்றிய நத்தத்தம் என்பது மறைந்து போன இலக்கண நூல்களுள் ஒன்று. இந் நூலாசிரியர் இவ்வூரினராக இருந்திருத்தல் கூடும். நற்றத்தனார், எனவும் இவ்வாசிரியர் பெயர் சில பதிப்புகளில் காணப்படுகிறது.

ஏற்றுமதி : விறகு, பச்சைமிளகாய் முதலியன.

லிங்கவாடி, பரளி

இவ்வூர்களில் மாம்பழம், கொய்யாப்பழம் விளையும் பழத் தோட்டங்கள் உள்ளன. மாவு அரைக்கும் ஆலைகள் ஏராளமாக உள.

முளையூர்

நத்தத்துக்கு மேற்கே எருமைப்பட்டிக்கு அருகே மலையடி வாரத்திலுள்ள சிற்றூர். இங்குள்ள கழுவன்கோயில் இப் பகுதியில் புகழ்பெற்றது.

சாத்தம்பாடி

சுந்தர பாண்டியன் காலத்தில் ஒரு தளபதி, படை வீடு நிறுவிய இடம்.

கோட்டையூர்

இவ்வூரருகே ஆறு மாகாணங்காடு என்னும் காடு உளது. இதிலடங்கிய வெண்மையான பாறைகளில், காதணியில் பதிக்கத் தகுந்த கற்கள் கிடைக்கின்றனவாம்.

சமுத்திராப்பட்டி

நாயக்கர் வெட்டும் பெரிய ஏரி சமுத்திரம் எனப்பெறும். அதனைச் சூழ அமைந்த இவ்வூர் திருமணிமுத்தாற்றின் கரையிலும் நத்தம், கொட்டாம்பட்டி ஆகிய இரு ஊர்களுக்கும் நடுவேயும் இருக்கிறது. பழனித் தலத்துக்குத் தைப்பூசக்காவடி எடுத்துச் செல்லும் நாட்டுக்கோட்டை நகரத்தார் இவ்வூரில் இளைப்பாற ஒரு சத்திரமும் ஓர் ஊருணியும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

செந்துறை

நத்தத்துக்கு வடக்கே 21 கி. மீ. புன்செய் வளம் மிக்கது. கரந்தமலைப்பகுதி துவாரபதிநாடு என்று பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. கரந்து (மறைந்து) வாழ்தற்கேற்ற இடமாதலால் மலை அவ்வாறு பெயர் பெற்றது மலை வட்டவடிவினது. மா, பலா, கொய்யாத்தோப்புகள் உள்ளன. நத்தம் ஜமீன்தார் லிங்கமநாயக்கர் மலை மீது சிறு அணை கட்டித் தோட்டமும் ஏற்படுத்தியுள்ளார். அதனினும் உயர்ந்த பகுதியில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பெற்றிருக்கிறது. படுத்துக்குளிக்கக் கூடிய அருவி ஒன்று இருக்கிறது.

வெம்பரளி

மதுரையிலிருந்து 22 கி. மீ. தொலைவிலும் அழகர் கோயிலிலிருந்து 8 கி. மீ. தொலைவிலும் உள்ள ஊர். நீலகிரித் தைல மரமும் கொய்யா மரமும் மிகுதி.

சிறுகுடி

நத்தம்-கொட்டாம்பட்டிச் சாலையில் உள்ளது. மலையடிவாரம். இலக்கியத்தில் இடம் பெற்ற ஊர். இவ்வூராரில் பெரும்பாலோர் கடல் கடந்து வாழ்கிறார்கள்.

உசிலம்பட்டிக் கோட்டம்

உசிலம்பட்டிக் கோட்டத்தில்

1. உசிலம்பட்டி
2. திருமங்கலம்
3. நிலக்கோட்டை

என்ற மூன்று வட்டங்கள் அடங்கியிருக்கின்றன.

IV உசிலம்பட்டி வட்டம்

இவ்வட்டத்தில் உசிலம்பட்டி நகரமும் உசிலம்பட்டி சேடப்பட்டி, செல்லம்பட்டி என்ற மூன்று ஊராட்சி ஒன்றியங் களும் உள்ளன. உசிலம்பட்டி வட்டம் 1—10—1967-இல் உண்டாக்கப்பட்டது. இவ்வட்டத்தின் பரப்பளவு ஏறத்தாழ 800 சதுர கி. மீ. 98 ரெவின்யூ கிராமங்கள் அடங்கியது. இவ் வட்டத்தின் மக்கள் தொகை மூன்று லட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அரசினர் இவ்வட்டத்தில் தீப்பெட்டி தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளனர்.

உசிலம்பட்டி, முக்குலத்தோர் செல்வாக்கு மிகுந்த சிறு நகரம், வியாபாரத்தலம். மதுரையிலிருந்து 37 கி. மீ. தொலைவில் போடிநாயக்கனூர் இரயில் பாதையில் அமைந்தது. தேனி போன்ற பொருளாதார முக்கியத்துவம் நிறைந்த ஊர்களுக்குச் செல்லும் வழியில் இருப்பதால் இவ்வூரும் வளமான நிலையை எட்டி வருகிறது. தேவர் பெயரால் இங்கே ஒரு கல்லூரி இயங்குகிறது. இந்நகரில் கோட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகம் உள்ளது.

7 உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தின் பெரும்பகுதி, ஆண்டிப்பட்டி மலையும் பள்ளத்தாக்கும் அவற்றைச் சேர்ந்த ஊர்களும் அடங்கியது. மலைச்சுனைகள் (நீர் ஊற்றுகள்) உள்ள ஊர்கள்- மாணூத்து, சீமானூத்து, கல்லூத்து.

மேற்கே பெருமழை பெய்யும்போது, இவ்வொன்றியத்தில் வெள்ளம் ஏற்படுவதும் உண்டு.

பொதுவாக இது பிற்பட்ட பகுதி. 1968-க்குப் பிறகு தான் இப் பகுதியைக் கவனிக்க அரசு முன் வந்திருக்கிறது. பெரும்பாலான மக்கள் முக்குலத்தோர். குறிப்பாக, வீரமறவர் பெருங்குடியினர் திரளாக வாழ்கின்றனர். இவர்களிடையே ஓர் எழுச்சியை உண்டாக்கியவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும், பி. கே. மூக்கையாத்தேவரும். பின்னவரின் இடைவிடா முயற்சியால், முத்துராமலிங்கத்தேவர் நினைவுக்கல்லூரி உசிலம்பட்டியில் ஏற்பட்டுள்ளது.

கள்ளர் தொகையும் மிகுதி. கள்ளர்களைத் 'திருத்தி அமைக்கும்' முயற்சிகள் பிரிட்டிஷ் ஆட்சியில் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. ஹரிஜனங்களுக்குத் தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாணவர் விடுதி உசிலம்பட்டியில் தொடங்கப்பட்டது.

400 ஆண்டுகளாகச் செல்வாக்குப் பெற்ற நாயக்கர் சமூகத்தார் விசயநகர ஆட்சியில் ஆந்திராவிலிருந்து குடியேறினர். 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் ஜோதில் நாயக்கனூரர், உத்தப்பநாயக்கனூரர், தொட்டப்பநாயக்கனூரர், பாளையங்கள் இருந்தன. வடுகபட்டி, ராஜக்கால்பட்டி, திம்மனத்தம், நக்கல்பட்டி என்பனவும் தெலுங்குப் பெயர்களே. மொத்தம் 18 ஊராட்சி மன்றங்களில் உசிலம்பட்டியில் மட்டும் பேரூராட்சி நிலவுகிறது. ஆங்கிலேயர் ஆட்சி முதல்உசிலம்பட்டி ஒரு கோட்டாட்சித் தலைநகராக இருந்து வருகிறது. திருமங்கலம் வட்டத்திலிருந்து, தனியாகப் பிரிந்து உசிலம்பட்டி வட்டம் ஏற்பட்ட பின் இங்கு அலுவலகங்களும் போக்குவரத்துச் சாலைகளும் சிறு தொழிற்சாலைகளும் ஓரளவு பெருகியுள்ளன.

கல்லாட்டுப்பட்டி

திருமங்கலத்திற்கு வடமேற்கு 32 கி. மீ. விசயநகரத்தை ஆண்ட அச்சுதராஜாவின் செப்பேடு இங்குள்ள சிவன் கோயிலுக்கு அவன் நிலம் வழங்கியதைக் குறிக்கிறது. கோயில் அருகே உள்ள ஆனை மலையில் 13-ஆம் நூற்றாண்டுப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

8. சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்து 32 ஊர்களும் சிற்றூர்களே. மிகவும் பின்தங்கிய பகுதி. ஒன்றியத்தின் தலைநகர் சேடப்பட்டி.

இவ்வொன்றியத்தில் தேவர்கள் மிகுதியாக உள்ளனர். அடுத்தபடியாக நாயக்கர்கள் வாழ்கின்றனர். பாப்பிநாயக்கன்பட்டி துள்ளுக்குடிநாயக்கனூர், சில்நாயக்கன்பட்டி என்பவை நாயக்கர் குடியேறி ஏற்பட்ட ஊர்களில் சில.

சின்னக்கட்டளை, பெரியகட்டளை என்னும் ஊர்கள் கோயில் செலவுக்காக மானியமாக விடப்பட்டிருக்க வேண்டும். திருமாணிக்கம், மேலத் திருமாணிக்கம் என்னும் பெயர்களும் ஆராய்ச்சிக்குரியன.

வழிவழியாகத் திருடர்கள் வாழும் சில ஊர்களில் ஊரார் கிராமசபை அமைத்து அவர்களைப் பிடித்துக் கொடுக்கும் வழக்கம் இந்த ஒன்றியத்தில் உண்டு.

எழுமலை

10,000 பேர் வாழும் ஊர். திருமங்கலத்துக்கு வடக்கே 32 கி. மீ. முன்னாளில் ஒரு ஜமீனாக இருந்தது. ஆண்டிப்பட்டி மலையடிவாரத்தில் அமைந்தது. இப்பகுதியில் ‘எழுமலை’ என்னும் (மக்கள்) பெயர் பெருவழக்கு. இவ்வூரில் திங்கட்கிழமைகளில் சந்தை கூடுகிறது.

சதுரகிரி

புகழ்மிக்க சுந்தர மகாலிங்கம் கோயில் இம்மலை மீதுள்ளது. காட்டில் அமைந்து பெரும்புகழ் பெற்ற தலம் இது. விநாயக சதுர்த்தி, சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நெடுந்தொலைவில் இருந்தும் பக்தர்கள் வருகிறார்கள். அடிவாரத்திலிருந்து 11 கி. மீ. தொலைவுக்கு நடந்து செல்லவேண்டும்.

நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட மலையாக இருப்பதால் சதுர கிரி என்னும் பெயர் ஏற்பட்டது என்பர். உயரம் 4712 அடி, இந்த மலையில் இன்றும் முனிவர்கள் இருந்து தவம் செய்வதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

சாப்டூர்

மதுரை மாவட்டத்திலேயே பெரிய ஜமீன்களுள் ஒன்றாக், சாப்டூர் திகழ்ந்தது. நாயக்க மரபினர் ஜமீன்தார்களாக இருந்தனர். இப்பகுதி திருநெல்வேலிமாவட்டத்திலிருந்து 1895-இல் மதுரை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது. கேரள மாநிலத்து எல்லையிலுள்ளது.

சாப்டூர்மலைமீது சுனைகள்உள்ளன. உல்லாசப்பயணமாக இச்சுனைகளுக்கு சிலர்செல்கின்றனர். வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுப்பவர்க்குப் பரிசு வழங்குவதாக, ஆங்கிலேய அதிகாரிமேஜர்பானர்மன் அறிவித்த பிரகடனப்பட்டயம்இவ்வூரில் கிடைத்திருக்கிறது.

சாப்டூர்ப்பகுதி வேளாண்மைச் சிறப்பு மிக்கது. சாப்டூர் என்பது தெலுங்குச் சொல். சதுப்புநிலப்பகுதியாக இருப்பதால், இங்கு வந்த ஜமீன்தார், நிலத்தின்மீது பாயை விரித்துத்தான் தம் குலதெய்வத்தை வழிபட நேர்ந்ததாம். சாப்டூர் என்பது ஊற்றின் மீது விரிக்கப்பட்ட பாயைக் குறிக்குமாம்.

எம். கல்லுப்பட்டி

ஆடிக்காற்றில் இவ்வூர்க் கிணறுகள் மணலால் மூடப்பட்டு, பயங்கரநிலை உண்டாகும். பெரும் பணம் செலவு செய்து, மணலை நீக்குவர்.

குப்பளநத்தம்

திருமங்கலத்திற்கு 17 கி. மீ மேற்கேயுள்ள சிற்றூர். இங்கிருந்து இரண்டு கி. மீ. தொலைவிலுள்ள பொய்கைமலைஉச்சியில் சிறிய விஷ்ணு கோயிலும், மலையிலுள்ள குகைகளில் சமணர் கோயில்என வழங்கும் பகுதியில் சமணத் தீர்த்தங்கரர்உருவங்களும் காணப்படுகின்றன.

9. செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இவ்வட்டத்தின் பிற்பட்ட பகுதிகளில் இதுவும் ஒன்று. பேரூராட்சிகள் இல்லை. ஊராட்சிகள் 29.

சிந்துபட்டி

உசிலம்பட்டியிலிருந்து 13 கி. மீ. தொலைவில் திருமங்கலம் சாலையிலுள்ள ஊர். பெருமாள்கோயில் பழமையானது. இதன் கொடிமரத்தில் சத்தியம் செய்து வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இக்கோயிலில் பொட்டுகட்டிய சிலர் பெரும் புகழ் பெற்றவர்கள், இசைப்புலமை நிரம்பியவர்கள் என்பர்.

தீட்டியன்

குன்றின் அடிவாரத்தில் பெருமாள் கோயில் கட்டப் பெற்றிருக்கிறது.

கோயிலாங்குளம்

இங்குச் சமண தீர்த்தங்கரர் உருவம் ஒன்று நெடுங் காலமாகக் காணப்படுகிறது. இதை உள்ளூர் மக்கள் வழிபடு கின்றனர்.

கருமாத்தூர்

வாலாந்தூரிலிருந்து 5. கி. மீ. இங்குக் கள்ளர் வழிபடும் மூன்று கோயில்கள் உள்ளன. சிவராத்திரியன்று பயங்கரமான கூட்டம் கூடும். பூசாரி, தம் வீட்டிலிருந்து பூசைப் பெட்டியைத் தூக்கிச் செல்லுவது விமரிசையான சடங்கு.

வாலாந்தூர்

பிறமலைக் கள்ளர்களுக்கு இது தொன்மையான ஊர். அவர்களுக்கு இது தலைமை நாடு. குருநாதசாமி–அங்காளம்மன் கோயிலில் சிவராத்திரியன்று தமிழ்நாட்டின் பல பகுதிகளிலு மிருந்து கள்ளர்கள் இங்குவந்து பம்பைக்கொட்டு, சாமியாட்டம், உடுக்கு முழக்கம் ஆகியவற்றுடன் வழிபடுகின்றனர். இது தவிர, ஏழாண்டுகளுக்கொருமுறை ஒரு பெரிய கும்பிடு சிறப்பாக நிகழ் கிறது. பரம்பரைப் பூசாரி, தமிழ் பேசும் நாயக்கமார். இக் கோயில் வாலந்தூர், சொக்கத்தேவன்பட்டி, தங்கம்பட்டி, ஆரியபட்டி, தண்ணீயம்பட்டி ஆகிய ஐந்து ஊரார்களுக்கு உரிமையானது.

கட்டக்கருப்பன்பட்டி

உசிலைக்குக் கிழக்கே 6 கி. மீ. இவ்வூரைச் சேர்ந்த ஆனையூர் முன்னுளில் புகழ் பெற்றிருந்தது.

இந்திரனின் யானை – ஐராவதம் – தன் நிறத்தை ஏதோ சாபத்தால் இழந்து ஆனையூர்க் கோயில் குளத்தில் நீராடி மீண்டும் வெண்மை நிறம் பெற்று வெள்ளையானை ஆயிற்று என்பது செவி வழிச் செய்தி. 1877-இல் இவ்வூர் ஐராவதீசுவரர் கோயிலில், தந்தத்தின் தூள்கள் ஏராளமாக அகப்பட்டன. நெடுங்காலத்துக்கு

முன் இறந்த யானையின் கூடு புதைந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இக்கோயில் உக்கிரபாண்டியனால்கட்டப்பெற்றது.

V திருமங்கலம் வட்டம்

இராமநாதபுர மாவட்டத்து எல்லையில் அமைந்த இவ் வட்டத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மை இனத்தார் முக்குலத்தோர் ஆவர். தெலுங்கு பேசும் நாயக்கமாரும் ரெட்டியாரும் பல ஊர்களில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் குடியேறியுள்ளனர். இவ்வட்டத்தின் வளர்ச்சிக்கு அவர்களும் பெரும் பங்கு புரிந்துள்ளனர்.

உசிலம்பட்டி வட்டத்திலிருந்து இவ்வட்டத்தின் சில பகுதி களுக்குப் பாசன வசதி கிடைத்துவருகிறது.

இவ்வட்டத்தில் நகராட்சி நிலை பெற்ற நகரம் எதுவுமில்லை. திருமங்கலம், கள்ளிக்குடி, கல்லுப்பட்டி என்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களும் பல்கலைநகர் என்ற நகரமைப்பும் உள்ளன.

10. திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

வடக்கே செல்லம்பட்டி, வடகிழக்கே திருப்பரங்குன்றம், தென்கிழக்கே கள்ளிக்குடி (இராமநாதபுர மாவட்டம்) தெற்கே கல்லுப்பட்டி, மேற்கே சேடப்பட்டி ஆகிய ஒன்றியங்கள் சூழ அமைந்த திருமங்கலம் ஒன்றியம் 131 சதுரமைல் பரப்பும் 74,805 மக்களும் கொண்டது. இது 1953-லேயே தேசிய வளர்ச்சி வட்டாரமாக ஏற்பட்டது. திருமங்கலம், பன்னிக்குண்டு பிர்க்காக்களிலுள்ள 38 ஊராட்சிமன்றங்கள் இதில் அடங்கியன. இவற்றுள் திருமங்கலத்தில் மட்டும் பேரூராட்சி உண்டு.

குறிப்பிடத்தக்க ஆறு, மலை, காடு, புவியியல் வளம் ஒன்றும் இப்பகுதியில் இல்லை. காங்கேயநத்தம், வாகைக்குளம் பகுதிகளில் மட்டும் சுதந்தரத்துக்குப் பிறகு ஒரு கால்வாய் வெட்டி 10,000 ஏக்கருக்கு வைகை ஆற்று நீர் கொண்டுவரப் பெற்றிருக்கிறது. உரப்பனூர்க் கண்மாய், இப்பகுதியின் பெரிய கண்மாயாக இருக்கிறது. குண்டாற்றின் குறுக்கேமேலக்கோட்டை யருகே அணை கட்டி முடிக்கப் பெற்று மேலும் சில ஊர்கள் பயனடைந்துள்ளன. இங்கு நன்செய் குறைவு. சோளம், கேழ்வரகு, பருத்தி, வரகு, கடலை போன்ற புன்செய்ப் பொருள்கள்

மிகுதியாய்ப் பயிரிடப் பெறுகின்றன. மழை குறைவாகப் பெய்வதாலேயே இந்த நிலை நிலவுகிறது. பூந்தோட்டங்கள் இங்கு மிகுதி.

கள்ளர், மறவர், நாயக்கர், ரெட்டியார் ஆகிய சமூகத்தினர் சிற்றூர்களிலும் திருமங்கலம் நகர்ப்புறத்தில் நாடார்களும் முதலியார்களும் நெசவுத்தொழிலில் சிறந்த முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மகமதுசாபுரத்திலும் இவ்வொன்றியத்திலுள்ள ஊராண்ட உறப்பனூர், பல சிற்றூர்களைக் கொண்ட கள்ளர் நாட்டின் தலைநகராகும்.

கப்பலூரிலிருந்து சூரக்கோட்டைவரை 15 கி. மீ தொலைவுக்கு இவ்வொன்றியத்தின் வழியாய்த் தேசிய நெடுஞ் சாலை அமைந்திருக்கிறது. இரயில்பாதையும் ஒன்றியத்தின் வழியே செல்லுகிறது.

கரடிக்கல், குதிரைச்சாணிக்குளம், மாவெளிப்பட்டி என்னும் ஊர்கள் உயிரினங்களின் பெயரால் அமைந்தவை. குறிப்பிடத்தக்க பிற ஊர்ப்பெயர்கள் எட்டுநாழி, வாழவந்தாபுரம், நல்லபிள்ளைப்பட்டி.

கீழக்கோட்டை. நடுக்கோட்டை, மேலக்கோட்டை, நக்கலக்கோட்டை என்பன ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் திருமங்கலத்தைச் சுற்றிக் கோட்டைகட்டி வாழ்ந்த ஊர்கள். வால்நாயக்கன்பட்டி, போல்நாயக்கன்பட்டி, நல்லமநாயக்கன் பட்டி, சித்திரெட்டிப்பட்டி, கட்டாரெட்டிப்பட்டி. கிரியக் கவுண்டன்பட்டி என்பன அந்தந்தச் சாதியார் குடியேறிய காலத்தில் ஏற்பட்ட ஊர்களாக இருத்தல் வேண்டும். மீனாட்சிபட்டி, சொக்கநாதன்பட்டி என்பன மதுரைக் கோயிலையும் திருமால், கிருஷ்ணபுரம் என்பன நாயக்க மன்னர்களையும் நினைவூட்டுவன.

இவ்வட்டத்தில் அரசினர் சில தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தொடங்கியுள்ளனர்.

திருமங்கலம்

குண்டாற்றின் வடகரையிலும் மதுரைக்குத் தென் மேற்கே 20 கி. மீ. தொலைவிலுமைந்து 20,000 மக்கள் வாழும்

சிறு நகரம். திருமங்கலம் வட்டத்தின் தலைநகரமும் இதுவே. மதுரை-விருதுநகர் இரயில் பாதையில் முக்கியமான நிலையம் இதுவே.

இங்கிருந்து வடக்கே சோழவந்தானுக்கும் (25 கி. மீ) வடகிழக்கே மதுரைக்கும் தெற்கே விருதுநகர் 25 (கி மீ) வழி கன்னியாகுமரிக்கும், தென்மேற்கே கல்லுப்பட்டி, ராசபாளையம் வழியாய்த் திருக்குற்றாலம், திருவனந்தபுரம் பகுதிக்கும், வடமேற்கே உசிலம்பட்டி (30 கி. மீ) வைகை அணை வழியாய்ப் பெரியகுளம் பகுதிக்கும் சாலைகள் பிரிகின்றன. இதனால் எக்ஸ்பிரஸ் பஸ் வசதியும் இவ்வூர்க்கு உண்டு.

திருமங்கலம் என்னும் பெயர் (மைசூர் மாநிலத்து மங்களூர் போன்று) மண் வளத்தாலும், மண்கலங்கள் செய்யும் தொழிலாளரின் கைவண்மையாலும் ஏற்பட்டது என்பது சிலர் கருத்து.

சோழவந்தானில் குடியேற்றியது போல, தளவாய் அரியநாயக முதலியார் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வூரிலும் தொண்டை மண்டல வேளாளர் பலரைக் குடி ஏற்றினர். இந்நாளில் நாடார் இனத்தவரும் பெரிய அளவில் வாழ்கின்றனர். வில்லிபுத்தூர்க் கோயிலில் பூசை நடைபெற்ற செய்தியைத் தாம் அறிந்துகொண்டு உணவருந்துவதற்காக, பல இடங்களில் நகராமண்டபம் அமைத்து ஒவ்வொன்றிலும் நகரா(பறை)முழங்கத் திருமலை நாயக்கர் ஏற்பாடு செய்து இருந்தார்; அத்தகைய நகரா மண்டபங்களில் ஒன்று திருமங்கலத்தில் உளது.

சில ஆண்டுகளுக்கு முன் திருமங்கலத்தில் நெய் வணிகம் பெரிய அளவில் நடைபெற்றது.

இருப்பவை :

வட்ட அலுவலகம், ஒன்றிய அலுவலகம், முன்சீபு கோர்ட்டு, தென்னிந்தியத் திருச்சபையின் கிளை, நெல் விதைப் பண்ணை, ஆதாரப் பயிற்சிப் பள்ளி, மாரியம்மன் கோயில், வெள்ளிக்கிழமைச் சந்தை, நுரையீரல் போன்ற நோய்களைப் போக்கும் காற்று.

விக்கிரமங்கலம்

இது 6,000 மக்கள் உள்ள ஊர். திருமங்கலத்துக்கு வடக்கே 23 கி மீ.

இவ்வூராட்சியைச் சேர்ந்த கோவில்பட்டி கல் வேலைப் பாட்டுக்கும் பழமையான சிவன்கோயிலுக்கும் புகழ் பெற்றது. தென் கல்லக நாட்டைச் சேர்ந்த விக்கிரம சோழபுரம் என்று இவ்வூரைப் பற்றிய கல்வெட்டுகள் கூறுகின்றன. இக் கோயிலில் 11, 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் ஏராளமாக உள்ளன. நுட்பமான வேலைப்பாடுகளுடைய தூண்களைக் கொண்ட சிறு மண்டபங்களும் பிராகாரங்களும் இக்கோயிலை அணிசெய்கின்றன மூலவரின் உருவம் தனி ஒருவர் வீட்டில்வைத்துப் பாதுகாக்கப் படுகிறது. விழா நாள்களில் மட்டும் அதைக் கோயில் கருவறையில் வைத்து வழிபடுகின்றனர்.

விக்கிரமங்கலம், கல்வெட்டுகளில் விக்கிரம சோழமங்கலம் என்று வழங்கப்படுகிறது.

கப்பலூர்

இரயில் நிலையத்தை அடுத்த ஊர். 1960-ஆம் ஆண்டு அளவில் தியாகராசர் நூல் ஆலை இங்கு தொடங்கப்பெற்றது. அதைத் தொடர்ந்து ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்பட்டு, இப்போழுது கப்பலூர், மதுரை மாநகரின் விரிவாகக் காட்சி அளிக்கிறது. பெரிய அளவில் ஒரு தொழிற்பேட்டை இங்கு அமைந்திருக்கிறது. ரோசா, மல்லிகை, அரளிப் பூக்கள் இப் பகுதியில் மிகுதியாகப் பூக்கின்றன.

மதுரையிலிருந்த இவ்வூர் 15 கி மீ. தொலைவு கப்பலூருக்குப் பக்கத்தில் கடலே கிடையாது. சற்று மேடான பகுதியில் அமைந்திருக்கும் இவ்வூரைத் தூரத்திலிருந்து பார்த்தால் கப்பல் ஒன்றின் மேல்தளம் போல் தோன்றும்;

இவ்வூர் முத்தூர்க் கூற்றத்தைச் சேர்ந்தது. இவ்வூரினரான கருமாணிக்கம் என்பவனைத் தலைவராகக் கொண்டு கப்பற்கோவை என்னும் நூல் எழுந்தது.

ஜோசியர் ஆலங்குளம்

மீனாட்சியம்மன் கோயில் சோதிடருக்கு மானியமாக விடப் பட்டதால் இவ்வூர் இவ்வாறு பெயர் பெற்றது.

கிழவனேரி

திருமங்கலத்திலிருந்து 11 கி. மீ இப்போது கவுண்டநதி என வழங்கும் கிழவநதியின் கரையில் இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றது.

கரடிக்கல்

திருமங்கலத்திலிருந்து சோழவந்தான் சாலையில் 8 கி. மீ. தொலைவு. மலைமீது பெருமாள் கோயிலும் கருப்பண்ணசாமி கோயிலும் கட்டப்பெற்றிருக்கின்றன. மலையின் உயரம் 150 அடி இங்கே கரடிகள் தங்கியிருந்த வெளிப்பொந்து, இருட்டுப் பொந்து என்ற இரு பொந்துகளைக் காணலாம். இவ்வூர்ப் பகுதியில் கொய்யாத் தோட்டங்கள் உண்டு.

குதிரைச்சாணிக்குளம்

நவாபுகள், மதுரை நாயக்க மன்னர்கள் காலங்களில் குதிரை லாயம் இருந்த இவ்வூர் திருமங்கலத்திலிருந்து 2 கி. மீ. தொலைவிலுளது.

செக்கானூரணி

செக்கனூர் என்பது மருவி செக்கானூரணி ஆகியிருக்கிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில், பதின்மூன்றும் நூற்றுண்டில் மீனாட்சியம்மன் கோயிலுக்கு இலுப்பை எண்ணெய் ஆட்டப்பெற்றது; அதற்காக ஏற்பட்ட கல் செக்கு மதுரை மாநகரில் ஆடிவீதியருகே வன்னியடி விநாயகர் சந்நிதிக்கு எதிரில் உளது. இதில் இலுப்பை எண்ணெய் ஆட்டுவதற்காக விடப்பட்ட ஊர் செக்கனூர். இவ்வூரில் இதற்கென 601 இலுப்பை மரங்கள் நடப்பட்டிருந்தன. கொட்டை பொறுக்குபவர்களுக்கும் எண்ணெய் ஆட்டுபவர்களுக்கும் மானியங்கள் விடப்பட்டிருந்தன (ஆதாரம்–கல்வெட்டு)

இவ்வூரில் அடிப்படை மருத்துவ நிலையம் இருக்கிறது. சந்தை நாள் சனிக்கிழமை.

இவ்வூர் மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்குச் செல்லும் இரயில் பாதையில் மதுரை இரயில் சந்திப்பிலிருந்து 17 கி. மீ. தொலைவிலும் உசிலம்பட்டியிலிருந்து 20 கி மீ. தொலைவிலும் உள்ள இரயில் நிலையத்தை உடையது.

கருமாத்தூர்

இவ்வூர் செக்கானூரணிக்கு மேற்கே நான்கு கி. மீ. தொலைவில் உள்ளது. இங்கு கத்தோலிக்கர் ஒரு கல்லூரியை நடத்திவருகிறார்கள்.

வாகைக்குளம்

கருமாத்தூர்க்கு அருகேயுள்ள இக்காட்டில் திருமலைநாயக்கர் யானைமீது சென்று வேட்டையாடியபோது ஒரு புலி அவரைத் தாக்கியது. அந்தப்புலியைச் சுட்டுக்கொன்ற ரெங்கசாமி நாயக்கருக்கு அரசர், வாகைக்குளம் கிராமத்தை முற்றூட்டாக வழங்கிய செய்தி, திருமலைநாயக்கர் வழங்கிய செப்பேட்டால் தெரிகிறது.

பல்கலைநகர் நகரியம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கட்டிடங்கள் உள்ள பல்கலை நகர் என்னும் பகுதியை 1969-ஆம் ஆண்டில் தமிழ் நாடு சட்டப்பேரவை ஒரு தனிச்சட்டம் நிறைவேற்றி நகரியம் (டவுன்சிப்) என்று அறிவித்துள்ளது.

11. கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்

இவ்வட்டத்தின் தென்கோடியில் இராமநாதபுர மாவட்டம் இரு பக்கமும் அமைந்தது. மிகவும் பிற்பட்ட பகுதி. இங்குப் பேரூராட்சி ஒன்றும் இல்லை. 36 ஊராட்சி மன்றங்கள் மட்டும் உள்ளன. மதுரை-விருதுநகர் இரயில்பாதை இவ்வழியாகச் செல்லுகிறது. கமண்டலநதி என்னும் சிற்றாறும் இங்குப் பாய்கிறது.

இவ்வொன்றியத்தில் தேவர் சமூகத்தினரே மிகுதியாக வாழ்கின்றனர். விசயநகர ஆட்சிக்காலத்தில் குடியேறிய ரெட்டியார், நாயக்கர், கவுண்டர் ஆகியோரும் சில ஊர்களில் தொகுப்பாகவாழ்கின்றனர். மாதவ நாயக்கர்என்றகுடும்பத்தினர் புளியங்குளத்தில் ஜமீன்தார்களாக இருந்தனர்.

விக்கிரமங்கலத்துக்கு அருகேயுள்ள கோயில்பட்டியிலுள்ள கோயில் சிற்ப வேலைப்பாடுகள் சிறப்பாக உள்ளன.

வடக்கம்பட்டி

இவ்வூர் ரெட்டியார்கள் மதுரை ஸ்ரீ முனியாண்டி விலாஸ் என்ற பெயரில் புலால்உணவு விடுதிகளை மதுரை ஸ்ரீ முனியாண்டி விலாஸ் என்ற பெயரில் தமிழ் நாடு, புதுச்சேரி, ஆந்திரபிரதேஷ் போன்ற பல மாநிலங்களில் நடத்திவருகின்றனர். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் ஆண்டுக்கு ஒரு முறை தங்கள் ஊருக்கு வந்து முனியாண்டி சுவாமிக்கு விழா எடுக்கின்றனர்

12. தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தின் முழுப்பெயர் தேவன்குறிச்சி கல்லுப்பட்டி என்பதாகும். குறிஞ்சி நிலப்பகுதியால் அமைந்த இவ்வொன்றியம் திருமங்கலம், கள்ளிக்குடி, நத்தம்பட்டி (இராமநாதபுர மாவட்டம்) சேடப்பட்டி ஒன்றியங்களால் சூழப் பட்டு, கல்லுப்பட்டிப் பிர்க்காவிலுள்ள இரு பேரூராட்சிகளையும் 42 ஊராட்சி மன்றங்களையும் தன்னகத்தே கொண்டது.

ஒன்றியத்தின் அலுவலகம் கல்லுப்பட்டியருகே திருமங்கலம் சாலையில் கட்டப் பெற்றிருக்கிறது.

சிறிய மலைகள் ஆங்காங்கு உள்ளன. மலையடிவாரத்தில் சிவப்பு மணல் கலந்திருப்பதால் மணலில் சத்து இருப்பதாகக் கூறுவார். எஞ்சிய பகுதிகள் கரிசல் மணல் பூமியாக உள்ளன. மழை மிகக் குறைவு. மரவகைகளில் பனைமரங்களே மிகுதி. ஆறோ ஆற்றுக்காலோ இல்லை. சோளம், கேழ்வரகு, கம்பு, மிளகாய், வரகு, குதிரைவாலி, பருத்தி ஆகியவையே பயிரிடப்படுகின்றன. ஏராளமான கோழிப் பண்ணைகள் உள்ளன.

தேசிய நெடுஞ்சாலையோ, இரயில் பாதையோ இவ் வொன்றியத்தில் இல்லை. மதுரை – இராஜபாளையம் சாலை ஒன்றியத்தைச் சமபகுதிகளாகப் பிரித்து வடகிழக்கு மூலையிலிருந்து தென்மேற்கு மூலைவரை செல்லுகிறது.

இப்பகுதியில் 1930 இல் கள்ளுக்கடை மறியல் பெரிய அளவில் நடைபெற்றது. தேசிய இயக்கம் இங்கு வலுவான ஆதரவு பெற்றிருந்தது.

மெயர் என்பது ஜெர்மன் நாட்டில் பட்டு (வெல்வெட்) உற்பத்தி செய்து உலகமெங்கும் விற்பனை செய்யும் நிறுவனம்

ஆகும். இந்த நிறுவனத்தின் லாபத்தில் கிடைத்த பங்குப் பணத்தைக் கொண்டு இந்தியாவில் கிராம மக்களுக்காகக் கிணறு கட்டுதல், பழைய கிணறுகளைப் புதுப்பித்தல், காளைமாடு, உழவு மாடு பசுமாடு வாங்கிக் கொடுத்தல், வேலைக்கூடம் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகளுக்குப் பணம் ஒரு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இந்த நிறுவனம், காந்தி நிகேதன் ஆசிரமத்தின் வாயிலாக இவ்வட்டாரத்தில் 12 ஊர்களுக்கு உதவியுள்ளது.

இப் பகுதியில் மலைகளில் தரகுப்புல் (Lemon grass) உண்டாகிறது. கூரை வெய்ய இதைப் பயன்படுத்துகிறார்கள். குளிர்ச்சியானது. தடுமன் (ஜலதோஷம்) மண்டை வலியைப் போக்கும்.

இடைக்கற்காலக்கருவிகள் 1980-ஆம் ஆண்டில் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இது தொல் பொருள் சிறப்பும் பெற்ற பகுதியாக மிளிர்கிறது.

கல்லுப்பட்டி

இச்சிறுநகரத்தின் முழுப்பெயர் தேவங்குறிச்சிகல்லுப்பட்டி. தேவங்குறிச்சி என்பது 'ரெவினியூ' கிராமத்தின் பெயர்.

மதுரையிலிருந்து இவ்வூர் 39 கி. மீ; திருமங்கலத்திலிருந்து 20 கி. மீ. விருதுநகரிலிருந்து 16 கி. மீ. சாப்டூரிலிருந்து 17 கி. மீ. இங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் 35 கி. மீ. கள்ளிக்குடி 15 கி. மீ. மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், தேனி–உசிலம்பட்டி, கள்ளிக்குடி விருதுநகர்ச் சாலைகள் சந்திக்கும் இடமாக இருப்பதாலும் காந்தி நிகேதன் ஆசிரமத்தாலும் இவ்வூர் புகழ்பெற்றிருக்கிறது. இவ்வூர் மலைமீது அக்கினீசுவரர் கோயிலும் சுப்பிரமணியர் சுனையும் உள்ளன. 8 ஊர்த் தேர்கள் வந்துசேரும் முத்தாலம்மன் திருவிழா மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இங்கு நிகழ்கிறது. செவ்வாய்க் கிழமைகளில் சந்தை கூடுகிறது. கைத்தறி நெசவுக்கும் செப்புப் பாத்திரங்கள், மண்பானை மற்றும் கதர் உற்பத்திக்கும் இவ்வூர் புகழ்பெற்றது.

ஓர் ஓடை மட்டுமே இருப்பதால் இவ்வூரில் வேளாண்மை அவ்வளவு சிறப்பாக இல்லை.

காந்தி நிகேதன் ஆசிரமத்தின் வளர்ச்சியின் விளைவாக் இவ்வூரில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் 25 பேருக்கு மேல் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

காந்திநிகேதன்

கல்லுப்பட்டிக்கு பெருமை அளிப்பது காந்திநிகேதன். இதைப்பற்றி 180-ஆம்பக்கத்திலும் குறிப்பிட்டுள்ளோம். காந்தி நிகேதன் தமிழ் நாட்டில் காந்தி பெயரால் ஏற்பட்ட கிராமப் புனருத்தாரண முயற்சிகளில், முதலாவது பெருமுயற்சி காந்தி நிகேதன். மகாத்மா காந்தியின் உருவத்தையும் தாகூர் தொடங்கிய சாந்தி நிகேதனையும் நினைவுபடுத்தும் வகையில் இப்பெயர் இடப்பட்டுள்ளது.

இப்பகுதியை சேர்ந்த கோபிநாயக்கன்பட்டி என்னும் குக்கிராமத்தினரான திரு. கோ வெங்கடாசலபதி (1909–1969) துடிப்பான இளம் மாணவராக இருந்தபோது தேசிய இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தொண்டர். இவர் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றவும், ஊழியர்களுக்குப் பயிற்சிக் கொடுக்கவும் ஆதாரக்கல்வி நிலையங்கள் நடத்தவும், குடிசைத் தொழில்களை ஆரம்பிக்கவும் கனவு கண்டார். இந்த நிறுவனத்தை 12—10—1940 இல் ஓர் ஆசிரமமாகத் தொடங்கினார். உழைப்பாலும் தன்னலமற்ற தொண்டாலும் அவர் ஆரவாரமின்றி விதைத்த விதை ஆல்போல் வளர்ந்து அரசு போல் வேர் விட்டுப் பெருவளர்ச்சியடைந்திருக்கிறது.

இங்கே நடைபெற்ற ஊழியர் கூட்டங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றின் வாயிலாக காந்தியடிகளின் கொள்கைகள், தத்துவங்கள், வேலைமுறைகள் ஆகியவை தமிழ் நாடெங்கும் பரவியுள்ளன.

இங்கு இயங்கி வரும் நிறுவனங்கள் வருமாறு.

1. ஆதாரப் பள்ளிகளாகத் தொடங்கிய உயர்நிலைப் பள்ளிகள்.
2. ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம்.
3. மனையியல் துறையில் கிராமசேவகிகளைப் பயிற்றுவிக்கும் நிலையம்.

4. ஆசிரியர்களுக்கு (ஆடவருக்கு மட்டும்) அரசினர் பயிற்சிப் பள்ளி.

5. உணவுக்கு உதவாத எண்ணெய்களைக் கொண்டு சவுக்காரம் செய்யும் தொழிற்சாலை.

6. கதர் உற்பத்தி நிலையம்.

7. கிராமப்புறக் கைத்தொழில்கள் எல்லாவற்றையும் செய்வதற்குத் தனித்தனி நிறுவனங்கள்.

8. மரத் தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலை.

9. கோழிக்குஞ்சு வளர்த்து விற்பனை செய்யும் நிலையமும் விரிவாக்க நிலையமும்.

1947 முதல் 1949 வரை ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மாநில முதலமைச்சராக இருந்த போது அரசின் ஆதரவு முதல் தடவையாக இந்த ஆசிரமத்திற்குக் கிடைத்தது. தொடர்ந்து பல ஆண்டுகள் அரசின் ஆதரவு இருந்து வந்தது.

ஓமந்தூராரின் விருப்பப்படி மாநில அரசில் ஒரு பெரும் பதவியை திரு. கோ. வெ. ஒப்புக்கொண்ட பிறகு காந்தி நிகேதன் பொறுப்பை திரு. குருசாமி ஏற்று, சிறப்பாக நடத்தி வருகிறார்.

சுற்று வட்டாரம் தன்னிறைவு பெறவும் அங்கு வாழும் மக்கள் முதியோர் கல்வி பெறவும் ஏரி குளங்களைச் சீர்திருத்தம் செய்யவும் காந்தி நிகேதன் வழி காட்டியிருக்கிறது.

காந்தியடிகளின் பொருளாதார ஆலோசகராக இருந்த திரு. ஜே. சி. குமரப்பா, தன் வாழ்நாள் இறுதிக் காலத்தில் இங்கே தங்கியிருந்ததும் இவ்வூரில் கிடைக்கும் பொருள்களை மட்டுமே பயன்படுத்தித் தமக்கு ஒரு குடில் அமைத்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கன. இக்குடில் பொறியியல் அறிஞர்கள், கட்டிடக் கலைஞர்கள் உள்பட அனைவராலும் காணத்தக்கது.

திரு. ஜே. சி. குமரப்பாவைப் பார்க்க இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த போது பாபு இராஜேந்திர பிரசாத் இவ்வூருக்கு வந்தார். அதனால் திடீரென்று இவ்வூரில் தந்தி தொலைபேசி நிலையங்கள் ஏற்பட்டன.

கீழ்க்கண்ட நிறுவனங்களும் இங்கு உள்ளன.

1. இளைஞர் தொழிற் கல்வி நிலையம்.
2. எண்ணெய் உற்பத்தி நிலையமும் நாட்டுச்செக்கில் மாறுதல்கள் செய்வதற்கான ஆராய்ச்சி நிலையமும்.
3. தோல் பதனிடு தொழில் – உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையம்.
4. இறந்த மாடுகளின் தோலை உரிப்பதற்குப் பயிற்சி கொடுக்கும் நிலையம்.
5. மாதிரி பனைத்தொழில் பண்ணை.
6. தேனீ வளர்ப்புத் தொழில்.
7. தீப்பெட்டித் தொழில்.
8. மண்பாண்டத்தொழில் உற்பத்தியும் பயிற்சியும்.
9. கைக்காகித உற்பத்தி தொழிற்சாலை.
10. கைக்குத்தல் அரிசித் தொழிலும் பயிற்சி நிலையமும்.
11. நார்த்தொழில் (வாழைநார் உரித்தல், கற்றாழை நார் பிரித்தல்) பயிற்சி உற்பத்தி நிலையம்.
12. கதர்–கிராமக் கைத்தொழில் வித்யாலயம்.
13. மண்டலத் திட்ட நிலையம்.
14. கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்லாயிரம் கிசான் ராட்டைகள் வழங்கும் நிலையம்.

தமிழ்நாடு அரசு இங்கு நடத்தும் நிலையங்களாவன:

1. கிராமசேவக் பயிற்சி நிலையம்.
2. கிராம சேவகிகளுக்குப் பயிற்சித் தர குடும்பக்கலை நிலையம்.
3. தச்சர்-கொல்லர் தொழில் நிலையம்.

காந்திநிகேதன் ஆசிரமத்தில் உற்பத்தி செய்யும் பொருள்கள் யாவும் தரமாகவும் உறுதியாகவும் கவர்ச்சியாகவும் தூய்மையாகவும் உள்ளன. சென்னை லாயிட்ஸ் சாலை (ஔவை சண்முகம் சாலை)யிலுள்ள காதி கிராம உத்யோகபவன் போன்ற இடங்களில் இப்பொருள்கள் விற்பனை செய்யப் பெறுகின்றன.

ஆசிரமத்திலேயே காந்தியடிகளின் அஸ்தியின் ஒரு சிறு பகுதி இருந்தது. இதை அறிந்த திரு. ஜே. சி. குமரப்பா இதை காந்தியடிகளின் சிலையின் கீழே வைத்துப் பிரதிஷ்டை செய்து விடலாம் என்று கூறினார். ஆனால் அதை எப்படி அமைப்பது என்பது பற்றி ஆராய்ச்சி எழுந்தது. காந்தியடிகள் விரும்பிய வாறே அதைப் பிரதிஷ்டை செய்ய முடிவாயிற்று. அந்த அஸ்தியை ஆசிரமத்திலேயே விளைந்த பஞ்சைக் கொண்டு அங்குள்ள சிறுவர்கள் நூற்று நெய்த துணியில் பொதிந்து, அங்கேயே செய்த கைக் காகிதத்தில் மடித்து, அங்கேயே செய்த மண்பாண்டம் ஒன்றில் வைத்து மூடி சிலைக்கடியில் பதித்துவிட வேண்டும் என்று கூறினார் குமரப்பா. அவ்வாறே செய்யப்பட்டிருக்கிறது.

"கதர் அபிவிருத்தியும் கைத்தொழில் வளர்ச்சியும் மத ஒற்றுமையும் மாதர் முன்னேற்றமும் மதியினை மயக்கும் மதுவினை விலக்கலும் புதுமுறைக் கல்வியும் பொது ஜனக் கல்வியும் நம் தாய் மொழியும் இந்திய மொழிகளும் ஊர்ச் சுகாதாரமும் உடற்சுகாதாரமும் ஹரிசன சேவையும் சரிசம உடைமையும் வையம் வாழும் வகை செய்யும் உழவர், குஷ்டம் என்னும் கொடுநோய் கொண்டோர் மலைவாழ் குடிகள், மாணவர் தம்மொடு தொழில்செய் மக்கள் துயரம் தீர்த்தலும் ஆய இப்பதினெண் அருப் பணி வாயிலாய்ச் சர்வோதய நற்சமுதாயத்தினை நிர்மாணம் செய்ய நித்தமும் உழைப்போம்."

என்ற திட்டத்தை நிறைவேற்றிவருகிறது காந்திநிகேதனம்

அம்மன்பட்டி

ஏழு ஊர்த் திருவிழா இங்கு நடைபெறுகிறது. கல்லுப்பட்டி முதலிய ஏழு ஊர் மக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஐப்பசி மாதம் இத்திருவிழாவைக் கொண்டாடுவர் புதிதாகக் களிமண்ணில் அம்மன் உருவம் செய்து, சப்பரம் (பெரிய தேர்) கட்டி, ஆடவர் அதைச் சுமந்து அம்மன்பட்டியில் இருந்து தங்கள் தங்கள் ஊர்களுக்குக் கொண்டுபோய், மறு நாள் உடைப்பர்.

கிராமங்களுக்குள் இருக்கக்கூடிய பூசல்களை நீக்கி இணைப்பு ஏற்படுத்த இத்தகைய விழாக்கள் தோன்றின,

காரைக்கேணி

கல்லுப்பட்டிக்கு அருகேயுள்ள சிற்றூர். காரைச்செடி நிறைந்த ஊர். (காரைக்குடியும் இவ்வாறு பெயர் பெற்றதே) இவ்வூரில் 'பழமதுரைக்குளம்' உண்டு. இதன் கரையில் மீனாட்சி சொக்கநாதர் கோயிலும் கோட்டைச் சுவரும் காணப் படுகின்றன.

வேல மரங்களினூடே நூற்றுக்கணக்கான மயில்கள் மாலை நேரத்தில் ஆடித்திரிவதைக் காணலாம்.

கிராமதான அடிப்படையில் இவ்வூர் மக்கள் எல்லாச் செயல்களையும் செய்து வருகின்றனர். ஆடு மாடு தவிர, இவர்கள் வெளியூர்க்கு விற்கும் எல்லாப் பொருள்களுக்கும் 3% மகமை எடுத்து ஊர் நன்மைக்குச் செலவிடுகின்றனர். ஊர் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கிறது ஊரார்க்குள் எவ்விதச் சச்சரவும் பூசலும் இல்லை. வேளாண்மைத்துறையில் இவ்வூரின் சாதனை பாராட்டுக்குரியது.

காடனேரி

கல்லுப்பட்டியிலிருந்து 3 கி. மீ. 1500 மக்கள் வாழும் சிற்றூர். மூர்த்தி சிறிதாயினும் இதன் கீர்த்தி பெரிது. ஊரார் கருவேலமரம் நட்டு 21,000 ரூபாய் ஈட்டி அழகான குளம் அமைத்துள்ளனர்.

காடனேரி என்பது கருடநெறி என்னும் பெயரின் சிதைவு என்று தெரிகிறது.

இவ்வூரின் வேளாண்மை வரவு செலவு, கல்விநிலை போன்ற எல்லா விவரங்களும் அடங்கிய கணக்கு (Sample survey) எடுக்கப்பட்டிருக்கிறது, விவசாய இளைஞர் மன்றம் நன்கு செயல்படுகிறது. சர்வோதயத்தில் இவ்வூராருக்கு ஈடுபாடு மிகுதி.

இப்பகுதியில் பல வகுப்பினர், தங்கள் பெண் குழந்தைகளின் காதுகளைச் சிறுவயதில் குத்திப் பஞ்சினால் துவாரத்தைப் பெரிதுபடுத்தி ஈயக்குழைகளை அணிவிப்பர். பருவமடைந்த பின் தங்கத்தால் செய்த தண்டப்பூப் போடுவர். இதைக் கண்ட ஆந்திர நாட்டுக் காந்திய ஊழியர் ஒருவரின் உருக்கமான

வேண்டுகோளுக்கிணங்க 1950-இல் சிறுமிகள் பலரின் காதுகள் முழு வடிவம் பெற்றன. முன்னைப் பழக்கமும் கைவிடப் பட்டிருக்கிறது.

இவ்வூர் இளைஞரின் பொழுதுபோக்கு சிலம்பம் ஆடுதல்.

சிலைமலைப்பட்டி

கல்லுப்பட்டியிலிருந்து 10 கி. மீ. தொலைவு. வைகாசித் திங்களில் நிகழும் இவ்வூர் ஜல்லிக்கட்டு புகழ்பெற்றது. பித்தளைப் பாத்திரங்களும் மண்பானைகளும் இவ்வூரில் கூட்டுறவு முறையில் செய்யப்படுகின்றன. வெண்கலத்தில் விளக்குகள் வார்க்கும் கலையில் இவ்வூரார் சென்ற தலைமுறையில் சிறந்துவிளங்கினர்.

வன்னிவேலம்பட்டி

இவ்வூர் வெள்ளரிக்காய் சுவையானது.

நல்லமரம்

கல்லுப்பட்டிக்குத் தெற்கே 3 கி. மீ. இவ்வூரில் புண்ணியமூர்த்திசுவாமி கோயில் இருந்தது. இவ்வூரில் (முன்பு இருந்த) அடர்த்தியான சோலைகளில் துறவிகள் முதலிய பெருமக்கள் தங்கினர். அதனால் நல்லமரம் என்னும் பெயர் வந்தது.

1900 ஆம் ஆண்டு வரை தேர்மீது ஆளைவைத்து அவன் மூலம் தேரை ஊர் முழுவதும் இழுக்கும் வழக்கம் (சிலாசுற்றுவது) இருந்தது. அவ்வழக்கம் அரசினரால் தடைசெய்யப்பெற்றது.

மோதகம்

இதுவே, கல்லுப்பட்டிப் பிர்க்காவில் முதலில் சர்வே செய்யப்பட்ட ஊர். சர்வே செய்யப் பிள்ளையார்சுழி போடப் பட்ட இடம் ஆதலால் பிள்ளையாருக்கு விருப்பமான தின் பண்டத்தின் பெயர் இடப்பட்டது.

சந்தையூர்

ஒரு ஜமீனின் தலைநகராயிருந்தது. மக்கள் தொகை 2,000

பேரையூர்

தே. கல்லுப்பட்டியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் சாப்டூர்ச் சாலையில் உள்ளது. இது பேரூராட்சி உள்ள ஊர். தே. கல்லுப்பட்டி ஒன்றியத்துக்குரிய ஒரே ஆவணக்களரி இவ்வூரில் இருக்கிறது. செப்புக்குடங்கள் உற்பத்திக்கு இவ்வூர் புகழ்பெற்றது.

மேற்குத் தொடர்ச்சிமலையைச் சேர்ந்த ஒரு சிறுமலையின் அடிவாரத்தில் உள்ள சுப்பிரமணியர் கோயிலும் மலைமீது சிவன் கோயிலும் ஏற்பட்டிருக்கின்றன. மலையின் உயரம் 50 மீட்டர்.

பேரையூர், தெலுங்குத் தொட்டியநாயக்கர் மரபில் வந்த ஒரு ஜமீன்தாரின் இருப்பிடமாக இருந்தது. ஜமீன்தார் பெயரால் நாகையாபுரம் என்று இவ்வூர்க்குப் பெயரிடப் பட்டது. அவ்வளவு பெரியவர் பெயரைச் சொல்லக் கூடாது என்று மரியாதையாக அவர் 'பெயரே ஊர்' என்றனர். பெயரே ஊர், 'பேரையூர்' ஆயிற்று!

மலைப்படிகளின் வாயிலருகே ஜமீன்தார் கட்டிய காற்றுடி மேடை பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. பொதுவாக இவ்வூரில் எங்கும்நல்ல காற்று வீசுகிறது. சந்தனவியாபாரம் இங்கு மிகுதி; பேரையூர்ச் சந்தனம் புகழ்பெற்றது. இதனால் 'ஜில்' என்ற காற்றும் 'ஜம்' என்ற வாசனையும் உடையது பேரையூர் என்பர். செங்கல், சுண்ணும்புக் காளவாய்களும் கத்தரிக்காய், வேளாண்மையும் இப்பகுதியில் ஏராளம். முஸ்லிம்களும் மறவரும் தொகையாக வாழ்கின்றனர். நாயக்கமார் செல்வாக்கு மிகுதி. 1859 வரை இது நெல்லைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

இவ்வூரின் திருவிழா பங்குனி உத்தரம், மசூதியும் தேவாலயமும் இவ்வூரில் உள்ளன. காற்றுடி மேடையிலிருந்து 8 கி. மீ தொலைவில் சாப்டூர் இருக்கிறது. பேரையூரிலிருந்து 5 கி. மீ. தொலைவில் கன்னிமார் என்னும் இடத்திலுள்ள மலைமீது வீரபாண்டியக் கட்டபொம்மன் தங்கியிருந்ததாகக் கூறுவர்.

கோபாலசாமி மலை (பறம்பு)

கல்லுப்பட்டி-ஸ்ரீவில்லிபுத்தூர்சாலையில் கல்லுப்பட்டியைத் தாண்டியதும் சிப்ளாபுரம் அருகே இருமருங்கிலும் பரவிக் கிடக்கும் சமவெளியில் திடீரென்று தலைநிமிர்ந்து நிற்கும்

சிறு குன்று தென்படுகிறது. ஒருபுறம் பிளவுண்ட குன்று போலவும் மறுபுறம் ஊசிக் கோபுரம் போலவும் இது தோன்றும். இதன் உச்சியில் பெருமாள் கோயில் அமைந்திருக்கின்ற காரணத்தால் இதைக் கோபால்சாமி மலை என்பர். மலையின் உயரம் 45 மீட்டர்.

வைகாசிவிசாக விழாவுக்கும் கருடவாகனத்துக்கும் இக் கோயில் புகழ்பெற்றது.

கோபால்சாமி மலைப்பகுதி, மக்கள் ஆரவாரம் இன்றி அமைதியாக இருக்கும். சுமார் 600 அடி உயரமுள்ள அம்மலையின் உச்சியிலுள்ள கோயிலுக்கு இட்டுச் செல்ல படிகள் உண்டு. இடையிடையே தங்குவதற்கு வசதியான மண்டபங் களும் உண்டு. பெருமாள் சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வயது முதிர்ந்தவர்கள் மாத்திரம் அங்குத் தனிமையில் தங்கியிருப்பர்.

இராசபாளையம் சாலையில் கல்லுப்பட்டியிலிருந்து 12 கி. மீ. தொலைவில், சாலைக்குக் கிழக்கே 4 கி. மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதி செங்குளம் ஊராட்சி எல்லைக்குட்பட்டது. இம்மலைப் பகுதியில் நவரத்தினங்கள் இருப்பதாகக் கூறுவர்.

கோபிநாயக்கன்பட்டி

இது கோபால்சாமி மலைக்குக் கிழக்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது. நாயக்கர்கள் மிகுந்த ஊர். இந்த ஊரின் பழமையான பெயர் கோப்புநாயக்கன்பட்டி; அரசாங்கப் பதிவேடுகளில் அவ்வாறே குறிப்பிடப்படுகிறது.

கோபாலனுக்கு உகந்த கோபி என்ற இனிய சொல் தொனிக்க அதனைக் கோபிநாயக்கன்பட்டி என்று இவ்வூரினரான திரு. கோ. வெங்கடாசலபதி மாற்றியமைத்தார். கிராம ஊழியர் சங்கம் கோபிநாயக்கன்பட்டி என்ற பெயரை நிலை நாட்டியது.

தமிழ்நாட்டில் ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் வாயிலாகச் சர்வோதய நற்சமுதாயம் காண, தமிழக அரசின் வளர்ச்சித்துறை ஆணையராக 1948 முதல் 1960 வரை பதவியில் இருந்த திரு. கோ. வெங்கடாசலபதி பிறந்த ஊர் இதுவே. இவர் கல்லுப்பட்டியில் ''காந்தி நிகேதனம்'' நிறுவிய பெருந் தொண்டர்.

கண்மாய் பாய்ந்து நன்செய்ப்பயிர்களும், மழைபெய்து அல்லது கேணிநீர் பாய்ச்சி பருத்தி, நிலக்கடலை, சோளம், கம்பு, கேழ்வரகு, உளுந்து ஆகிய புன்செய்ப் பயிர்களும் பயிரிடப் பெறுகின்றன.

மூவரைவென்றான்

கல்லுப்பட்டி-ஸ்ரீவில்லிபுத்தூர் வழியிலுள்ள கிராமம். இராணிமங்கம்மாளால் வீரமானியமாக வழங்கப்பட்டது மானியம் பெற்ற வீரமல்லுத்தேவன் பரம்பரையினர் வாழ்ந்து வருகின்றனர். நத்தம்பட்டி, தேவதானம், சாப்டூர், ஆகிய மூன்று ஜமீன்களையும் வென்றவன் வீரமல்லன்.

VI நிலக் கோட்டை வட்டம்

சிறுமலை, அழகர்மலை, ஆண்டிப்பட்டிமலை, கீழ்ப்பழனிமலை, ஆகியவற்றால் சூழப்பெற்று மஞ்சளாறும் வைகை ஆறும் பாயும் வளமான வட்டம், நிலக்கோட்டை. வைகையின் குறுக்கே கட்டப் பட்டுள்ள பேரணையும் சிற்றணையும் உடையது. வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களுக்கும் இங்குக்குறைவில்லை. பாண்டிய மன்னர் காலத்தில் சம்பந்தரால் பாடப்பெற்ற திருவேடகமும், நாயக்க மன்னர்கள் காலத்தில் புகழ்பெற்ற சோழவந்தானும், ஹைதர் அலிகாலத்தில் சிறப்பிடம்பெற்றநிலக்கோட்டையும், ஆங்கிலேயர் ஆட்சியில் கோடைக்கானல் மலையின் தலைவாயிலாய், நுழை வாயிலாய் அமைந்த அம்மைய நாயக்கனூரும் இவ்வட்டத்தில் உள்ளன.

இவ்வட்டத்தில் போரில் சரங்களைத் தாங்கி நிற்கும் போர் வீரனின் அரிய செயலைப் பாராட்டு முறையில் சரந்தாங்கி என்னும் ஊர் இருக்கிறது. அறச்செயல் புரிதல் தொழிற் சிறப்பு நோக்கிப் பாராட்டு முகமாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி என்னும் ஓர் ஊர் இருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

இவ்வட்டத்தில் அடங்கிய ஊராட்சி ஒன்றியங்கள் வருமாறு:—

(அ) நிலக்கோட்டை
(ஆ) வத்தலக்குண்டு
(இ) அலங்காநல்லூர்
(ஈ) வாடிப்பட்டி

இவ்வட்டத்தில் பெரியாறு பாய்வதால் நீர்வளமும், கிழக்குத் தொடர்ச்சிமலையால் குறிஞ்சி வளமும் காணப்படுகின்றன. நெல் கரும்பு, தேங்காய், மலைபடுபொருள்கள் விளைகின்றன.

13 நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிப் பணியில் சிறந்த தொண்டு புரிந்ததற்காகக் கேடயம் பெற்ற சிறப்பு இவ்வொன்றியத்திற்கு உண்டு. நிலக் கோட்டையிலும் அம்மைய நாயக்கனூரிலும் பேரூராட்சிகளும் 23 ஊர்களில் ஊராட்சி மன்றங்களும் உள்ளன. ஒன்றியத்தின் மக்கள் தொகை ஒரு லட்சத்தை மிஞ்சிவிட்டது.

நிலக்கோட்டை

இது, வட்டத்தின் தலைநகர். மக்கள் தொகை 12,500, பழங்காலத் திண்டுக்கல் சீமையில் 26 பாளையங்களில் ஒன்று, நிலக்கோட்டை. மதுரையில் விசுவநாதநாயக்கர் மதுரை நாயக்க மரபின் ஆட்சியைத் தொடங்குவதற்கு முன்னரே விசயநகரத்தில் இருந்து ஒருவர் வந்து இங்குப் பாளையம் ஏற்படுத்தினார். அவர் கட்டிய மண் கோட்டையின் இடிபாடுகள் கூளப்பநாயக்கன் கோட்டை என்ற பெயரில் வழங்கி வருகின்றன. கூளப்பநாயக்கன் பின்னோர்கள் கட்டிய அகோபில நரசிம்மர் கோயில் இங்கு இருக்கிறது.

இவ்வூர்ப் பாளையக்காரர் மூன்றாண்டுகள் ஆங்கிலேயரை எதிர்த்து, பிறகு அவர்களுடன் சமரசம் செய்து மாதந்தோறும் உதவிப் பணமும் நிலக்கோட்டையில் தங்குவதற்கு இசைவும் பெற்றார்.

அம்மையநாயக்கனூர்

நிலக்கோட்டைக்கு 6 கி. மீ. கிழக்கே அமைந்த சிற்றூர். உருவம் சிறிதாய் இருந்தாலும் வரலாற்றில் இவ்வூரின் பங்கு பெரிது.

1736- இல் நாயக்கர் ஆட்சிக்கு முடிவுகட்டி சந்தாசாஹிப் பின் அழிவுக்கு அடிகோலிய போர் இவ்வூரில்தான் நடைபெற்றது.

சிறுமலையின் பகுதிகளையும் உள்ளிட்ட ஒரு ஜமீனின் தலை நகராயும் அம்மையநாயக்கனூர் நிலவியது. விசயநகரத்திலிருந்து

1559-இல் விசுவநாத நாயக்கருடன் வந்த ஒரு படையின் தளபதியான மக்கயநாயக்கர் இப்பாளையத்தின் முதல் பாளையக் காரராக நியமனம் பெற்றார். இப்பாளையக்காரர்கள் முதலில் ஹைதர் அலியையும் பிறகு ஆங்கிலேயரையும் ஆதரித்து அவ்வப் போது தங்களுக்கு இடையூறு ஏற்படாது காத்துக்கொண்டனர்.

ஒரு பாளையக்காரரின் தம்பி கொல்லப்பட்டதையடுத்து அவருடைய மனைவி உடன்கட்டை ஏறினாள் என்று சொல்லப் படுகிறது. அவளுக்கு இவ்வூரார் கோயில் எழுப்பி வழிபட்டு வருகின்றனர்.

மதுரையிலிருந்து இவ்வூர் 42 கி. மீ. தொலைவு. கோடைக் கானல் நகர் இங்கிருந்து 75 கி. மீ கோடை ரோடு இரயில் நிலையம் இவ்வூர் எல்லைக்குள் அடங்கியது, இங்கிருந்து மலைக்கு அவுட் ஏஜென்ஸி வசதி இருக்கிறது. இதனால் மலைக்குச் செல்பவர்கள் வாங்கும் இரயில் டிக்கெட் மலைச்சாலைக்குச் செல்லும் பஸ் கட்டணமும் அடங்கியது.

அம்மையநாயக்கனூரிலிருந்து காந்தி கிராமம் வரை செம் மண் பகுதி. இதில் கேழ்வரகு, சோளம், கடலை வேளாண்மையே சில நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. இந்த நூற்றாண்டில், ஆண்டு முழுவதும் செய்யக் கூடிய வேளாண்மையையும், நாள் தோறும் மாலையில் விற்றுச் செலவுக்குப் பணம்பார்க்கும்முறையை யும் இப்பகுதியில் கடைப்பிடிக்கின்றனர். இதனால் ஒவ்வொருநாளும் பூ, திராட்சை, தக்காளி, வெங்காயம் ஏற்றுமதியாகின்றன.

மாவுத்தம்பட்டி

அம்மையநாயக்கனூர்ஓரமாய், சிறுமலைஅடிவாரத்திலுள்ள சிற்றூர். இயற்கை அழகு பொலிகிறது. அம்மையநாயக்கனூர் ஜமீன்தார்கள் இங்கிருந்து 3 கி மீ. தொலைவிலுள்ள ராஜதானிக் கோட்டையில் யானைகளை வைத்திருந்தனர். யானைப்பாகன் குடியிருந்த பகுதி அக்காரணத்தால் மாவுத்தன்பட்டி ஆயிற்று. இவ்வூரில் கவுண்டர்கள் வாழ்கின்றனர். ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் உளது.

அம்மாபட்டி

அம்மையநாயக்கனூர் பேரூராட்சிக்கு உட்பட்டது. கிறிஸ்துமஸைவிடப் புத்தாண்டு விழாவைப் பெரிய அளவில்

கொண்டாடுவது இவ்வூர்க் கிறித்தவர்களின் வழக்கம். அமெரிக்க மிஷனும் தென்னிந்தியத் திருச்சபையும் பணியாற்றுகின்றன.

மேட்டுப்பட்டி

வைகையின் தென்கரையில் நிலக்கோட்டையிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள சிற்றூர். இங்கே காணத்தக்கன ஊர் எல்லையில் பேரணை, வடக்கே $1\frac{1}{2}$ கி. மீ. தொலைவில் சித்தர் மலை. பஞ்சபாண்டவர்பாதம் எனப்படும் சமணமுனிவர்கள் படுக்கைகள், கன்னிமார் கோயில், மலையில் பொறிக்கப்பட்டுள்ள கறுப்பணசாமி உருவம்.

காட்டுநாயக்கன்பட்டி

தேவராட்டம், சேவையாட்டம் என்ற கிராமியக்கலையை இவ்வூரில் தொட்டியநாயக்கர்கள் பரப்பி வருகின்றனர். உறுமி மேளத்தைப் பக்கவாத்தியமாகக் கொண்ட ஒருவகை ஒயில் ஆட்டத்தைக் காலில் சலங்கை கட்டி ஆடுவது தேவராட்டம்.

சேவையாட்டம் என்பது தலையில் சரிகையோடு உருமாவும் இடுப்புக்குக் கீழே பாவாடையும் கட்டி ஆண்கள் ஆடும் ஆட்டம்.

சேங்காளம் என்ற தாளக்கருவியும் கைத்தாளமும் (ஜால்ராவும்) பயன்படுத்துவர் ராமர் கதை, பாரதக்கதை முதலியவற்றைத் தெலுங்கிலும், தமிழிலும் சொல்கிறார்கள்.

20,25 பேர்வரை ஒரு குழுவாகச் சேர்ந்து இந்த ஆட்டங்களை ஆடுவது வழக்கம். புரட்டாசிச் சனிக்கிழமைகளில் வத்தலக்குண்டு செண்பகராயப் பெருமாள் கோயிலில் சிறப்பு நிகழ்ச்சி உண்டு

14 வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம்

வத்தலக்குண்டு பேரூராட்சியும் 19 ஊராட்சிகளும் உடையது. கோடைக்கானல் மலையின் அடிவாரத்தில் அமைந்து இயற்கை வளமும் முயற்சியுடைய மக்கள் வாழ்வதால் செயற்கை நலமும் சேர்ந்த பகுதி.

வத்தலக்குண்டு

16,000 மக்கள் வாழும் சிறு நகரம். நிலக்கோட்டைக்கு மேற்கே 11 கி. மீ. தொலைவு. இங்கிருந்து பெரியகுளம் 25 கி. மீ.

கோடைரோடு இரயில் நிலையத்திலிருந்து கோடைக்கான லுக்கும் பெரியகுளத்துக்கும் செல்லும் வழியில் 19 கி மீ தொலைவில் அமைந்தது. மதுரையும் கோடைக்கானலும் இங்கு இருந்து சமதொலைவில் உள்ளன.

விரைவுப் போக்குவரத்து வசதி ஏற்படு முன்னர் மலைக்குச் செல்பவர்கள். இங்கே ஓர் இரவு தங்கிச் சென்றனர். ஹைதர் அலியின் துருப்புகளுக்கும் முகமதுயூசுப்பின் துருப்பு களுக்கும் இங்கு 1760-இல் பெரியபோர் ஏற்பட்டது. 1885-இல் இங்கு ஊராட்சி மன்றம் ஏற்பட்டது.

வற்றாத குளமும் வளைந்தோடும் மஞ்சளாறும் வழங்கும் நீரால் வேளாண்மை சிறந்து விளங்குகிறது. தரமான அரிசிக்கு வத்தலக்குண்டு புகழ்பெற்றது. வாழை, தென்னை, நிறமான தக்காளி ஆகியவையும் இவ்வூரின் உற்பத்திகள். வெற்றிலை பெரிய அளவில் ஏற்றுமதியாகிறது. பழங்காலத்திலிருந்து வெற்றிலை பயிரிடப்பட்டதால் இவ்வூர் வெற்றிலைக்குண்டு என்னும் பெயர் பெற்றது. அச்சொல் வத்தலக்குண்டு ஆயிற்று. ஆங்கிலேயர் வெற்றிலைக்குரிய Betel என்னும் சொல்லையொட்டி, பீட்டல்குண்டு என்று இவ்வூரைக் குறிப்பிட்டனர். அது பின்னர் பட்லக்குண்டு ஆயிற்று.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழில் புதினங்கள் எழுதிப் பெரும் பெயர் பெற்ற இராஜம் ஐயராலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மணிக்கொடி என்னும் இதழின் மூலம் சிறுகதை இலக்கியத்தைப் பரப்பிய பி. எஸ். இராமையா மூலமும் இவ்வூர் இலக்கியத்துறையில் இடம் பெற்றிருக்கிறது.

வத்தலக்குண்டுக்கு அருகேயுள்ள தொட்டியங்கோட்டை திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த சிறிய பாளையங்களுள் ஒன்று.

தெலுங்கு பேசுபவர் குடியேறிய ஊர்களில் இதுவும் ஒன்று. வேப்பகுண்டா, ரேணிகுண்டா, பேனுகுண்டா என்பன ஆந்திரத்து ஊர்ப் பெயர்கள். இவ்வகையைச் சேர்ந்ததே 'வத்தலகுண்டு'வும்.

மல்லிகைப்பூவிலிருந்து ஒரு தைலம் உற்பத்தி செய்ய இவ்வூரில் ஒரு தொழிற்சாலையை நிறுவ தமிழ்நாடு விவசாயத் தொழிற் கழகம் திட்டமிட்டு வருகிறது. திண்டுக்கல்

வத்தலகுண்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான நிலப் பரப்பில் மல்லிகை நிறைய உற்பத்தியாகிறது.

ஒரு டன் மல்லிகைப்பூவிலிருந்து 8-இல் இருந்து 10 அவுன்ஸ் மல்லிகைத் தைலம்தான் உற்பத்தி செய்யமுடியும். ஆனால், இந்தத் தைலத்தின் விலை மட்டும் ஒன்றரை லட்சம் ரூபாய், ஒரு வாளி நிறையத் தண்ணீர் நிரப்பி அதில் ஒரு சொட்டு மல்லிகைத் தைலத்தை விட்டால் போதும். வாளி முழுவதுமே உயர்ந்த ரக மல்லிகைப்பூச் செண்டாகிவிடும்.

கோடைக்கானல் மலைக்குச் செல்ல வாயிலாக இருப்பதால், இவ்வூர் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

சந்தையூர்

நாயக்கமார் பாளையங்களுள் இதுவும் ஒன்று. நிலக்கோட்டையிலிருந்து 15 கி. மீ. தொலைவு.

ஜி. தும்மலப்பட்டி

வத்தலக்குண்டிலிருந்து 6 கி. மீ. சக்கிலியாறு, மஞ்சளாறு ஓடைகளுக்கிடையே அமைந்தது. நெல் வளமும் கரும்பு வளமும் கொழிக்கும் சிற்றூர். கவுண்டர்களும் கோனார்களும் வாழ்கின்றனர்.

பட்டிவீரன்பட்டி

தமிழ்நாட்டின் செல்வச் செழிப்புள்ள வணிக நகரங்களுள் இது ஒன்று. பழனிமலையிலுள்ள காப்பித் தோட்டங்களிலிருந்து வரவழைத்துக் காப்பிக்கொட்டையை வறுக்கும் தொழில் இங்குப் பரவியிருக்கிறது. கூட்டுறவுத் தொழிலிலும் இவ்வூர் தமிழ் நாட்டில் முன்னணியில் நிற்கிறது. ஏலக்காயைப் பக்குவப்படுத்தி விற்பனை செய்வதும் இங்கு ஒரு பெரிய தொழில்.

பருவக் காலங்களில் இவ்வூரிலும் சுற்றுப் பகுதியிலும் பன்னீர்த்திராட்சைப்பழம் பானைகளில் அடுக்கியும் மலைவாழைப் பழம் கூடைகளிலும் ஓலைப்பெட்டிகளிலும் வைத்தும் வெளியூர் களுக்கு அனுப்பப்படுகின்றன. நாள்தோறும் இவ்வாறு அனுப்பப்படும் பழங்களின் மதிப்பு ஒரு இலட்சம் ரூபாய் ஆகும்.

நாடார்கள் 800 குடும்பத்தார் உள்ளனர். இவர்கள் செல்வமும் செல்வாக்கும் நிறைந்தவர்கள். இவர்களுடைய விடாமுயற்சி போற்றத்தக்கது. இங்கு பெரியதொரு மேல்நிலைப் ள்ளி சிறந்த முறையில் நடைபெற்றுவருகிறது.

அய்யம்பாளையம்-தாண்டிக்குடிச்சாலையில்மதுரையிலிருந்து 65 கி. மீ. தொலைவில் இந்நகர் அமைந்திருக்கிறது.

15. அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

மேலூர், மதுரை வட்டங்களின் எல்லையில் அமைந்த இந்த ஒன்றியம் அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சி களையும் 35 ஊராட்சிகளையும் உடையது.

அலங்காநல்லூர்

அலங்காரநல்லூர் என்ற சொற்றொடரே மருவி வழங்கி வருகிறது. பெயருக்கு ஏற்ப இது மிகவும் வளமான ஊர். இதைச் சுற்றியுள்ள பகுதி கரும்பு வேளாண்மையில் தலை சிறந்து விளங்குகிறது. ஒரு சர்க்கரை ஆலை இங்கு நடை பெறுவதால் கரும்பு பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. இருபோகம் விளையும் நெல் வயல்கள் உடையது. தென்னந் தோப்புகள் மிகுதி.

பாலமேடு

இவ்வூரிலும் வேளாண்மை செழிப்பாக இருக்கிறது. முருங்கைத் தோப்பு மிகுதி.

16. வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

மதுரை மாவட்டத்தின் வளமான பகுதிகளில் இது ஒன்று. மதுரைநகரையடுத்து அமைந்திருப்பதாலும் இரயில் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து உள்ளதாலும் இந்த ஒன்றியம் வளர்ச்சியடைந்து வருகிறது வேளாண்மைதான் இங்குத் தலையாயதொழில். கழிவுக் காகிதத்தைக்கொண்டு அட்டைசெய்யும் தொழிற்சாலை சோழவந்தானில் தொடங்கப் பெற்றிருக்கிறது.

சோழவந்தான் தேர்வு நிலைப் பேரூராட்சியும் 22 ஊராட்சி களும் இதில் அடங்கியுள்ளன.

சோழவந்தான்

20,000 மக்கள் வாழும் நகரம். மதுரைக்கு 25 கி. மீ. வட மேற்கே, சாலைவசதி இரயில்வசதிகளுடன் கூடி வளம் பெருகிச் சிறக்கும் நகரம்.

ஊரைச் சுற்றித் தென்னஞ்சோலையும் தீம்புனல் வைகையும் இயற்கையன்னையின் எழிலார் தோற்றமும் ஒருங்கே அமையப் பெற்றது. சோலையைக் கண்டு சோழன்உவந்தான் என்னும் பெயர் ஏற்பட்டதாயும் அவன் பண்பைக் கண்டு பாண்டியன் மகிழ்ந்து சோழகுலாந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் இட்டான் என்றும் கூறுவர்.

ஊர்ப் பெயரை, 'சோழன் வந்தான்' 'சோழன்உவந்தான்' என்றெல்லாம் கூறுவாரும் உள்ளனர். பத்தாம் நூற்றுண்டில் பாண்டிய அரசன் ஒருவன் சோழனை வென்று அவனைக் கொன்றுன். சோழனுக்கு எமனாக விளங்கியதால் 'சோழனுக்கு அந்தகன்' என்று பட்டப்பெயர் சூடிக்கொண்டான். அந்த நிகழ்ச்சியின் நினைவாக, அந்தணர்களுக்குத் தானமாக அந்தப் பாண்டியன் வழங்கிய பகுதி "சோழகுலாந்தகச் சதுர்வேதி மங்கலம்" என்று பெயரிடப்பெற்றது. பிற்காலத்தில் அந்தப் பெயர் சோழவந்தான் என்று மாறிற்று.

வைகைக் கரையில் பிரளயநாத சுவாமி கோயில் இருக்கிறது. இது பிரளயகாலத்தில் தோன்றியது என்பது கர்ண பரம்பரைக் கதை. இப்போது உள்ள கோயில் விசயநகர ஆட்சியில் ஏற்பட்டது.

ஜனகநாராயணப் பெருமாள் கோயில் என்பது ராஜராஜனின் பட்டப் பெயர்களுள் ஒன்றுன ஜனநாதன் என்பதை நினைவு படுத்தும் வகையில் ஜனநாத விண்ணகரமாக ஏற்பட்டது. இக்கோயில் மண்டபத்தில் நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட அழகிய சிற்பங்கள் உள்ளன மாறவர்மன் சுந்தர பாண்டியன் முதலிய பலருடைய கல்வெட்டுகள் காணப் படுகின்றன.

இவ்வூர் வரலாற்றைத் தெரிவிக்கும் 100 கல்வெட்டுகள் சுற்றுப் புறத்திலுள்ள கோயில்களில் உள்ளன, அவை ஆராயப் படவேண்டும்,

பாண்டிய அரசர்க்கும் இவ்வூர்க்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இங்குள்ள பெருமாள் கோயிலிலும் தென்கரையிலுள்ள மூலநாதர் கோயிலிலும் காணப்பெறும் ஏராளமான கல்வெட்டு களிலிருந்து தெரிகிறது. நெடுங்காலமாக, இது மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே முக்கிய இராணுவத் தளமாக இருந்தது.

16-ஆம் நூற்றுண்டில் மதுரை நாயக்க அரசின் அமைச்ச ராக விளங்கிய தளவாய் அரியநாதர் இவ்வூரைத் தம் இருக்கை யாகக் கொண்டார். தொண்டை மண்டல வேளாளரும் தம் உறவினருமாகிய 300 பேரை அவர் காஞ்சிபுரம் பகுதியில் இருந்து இவ்வூரில் குடியேற்றி, 'முதலியார் கோட்டை' என்ற கோட்டையைக் கட்டினுர்.

இராமேசுவரத்துக்குச் செல்லும் யாத்திரிகர் இவ்வூரில் தங்கிச்சென்றனர். இரயில் போக்குவரத்து ஏற்படும் வரை, இராணி மங்கம்மாள் இங்குக் கட்டிய சத்திரம் நன்கு செயல் பட்டு வந்தது.

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் பெரும் புலவராய் விளங்கிய அரசன் சண்முகனுர் இவ்வூரினர் ஆவார்.

நெல் வேளாண்மையில் இவ்வூர் மிகச் சிறப்புடன் திகழ்கிறது. பன்றியின் உரத்தை இவ்வூரார் பலர் வயலுக்கு பயன்படுத்திப் பலன் கண்டுள்ளனர்.

திருவேடகம்

மதுரைக்கு வடமேற்கே 19 கி. மீ. தொலேவிலும் சோழவந்தானுக்குத் தெற்கே 5 கி. மீ. தொலேவிலும் வைகையின் வடகிழக்குக் கரையிலமைந்த ஊர்.

சமணர்களுடன் வாதம் செய்தபோது சம்பந்தர் எழுதி, வைகையாற்றில் விட்ட ஓர் ஏடு பெருவெள்ளத்தை எதிர்த்துக் கரை சேர்ந்த இடம் ஆதலால் இது 'ஏடகம்' என்னும் பெயர் பெற்றது. பாடல் பெற்ற தலமாக இருப்பதால் 'திரு' என்னும் அடைமொழி பெற்று, இலக்கண விதிப்படி திருவேடகம் ஆயிற்று. 'ஏடு சென்று அணைதரும் ஏடகத்தொருவனே' என்று சம்பந்தர் பாடியுள்ளார்.

இலங்கையின் கிழக்கு மாநிலமாகிய மட்டக்களப்புப் பகுதியில் ஏடகக் கொம்புகளை வைத்து ஒருவகைத் தேர் செய்கின்றனர். அந்தத் தேரும், தேர் செய்ய உதவும் மரமும் 'ஏடகம்' என்ற பெயராலேயே வழங்குகின்றன.

இங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவன்-ஏடகநாதர் இறைவி-ஏலவார்குழலி.

தமிழ்நாட்டின் தென் பகுதியில் சைவம் நிலை பெறக் காரணமாய் உள்ள பேரூர்களில் திருவேடகமும் ஒன்று. இதன் பழமைப் பெருமையை எடுத்துக் கூறுவதில் தேவாரத் திருமுறை சிறந்து விளங்குகிறது. பதிதொறும் முருகன் புகழ் பாடிய அருணகிரிநாதர், தமிழ்நாட்டுத் தலங்கள் பலவற்றுடன் இணைத்து "இன்புறு செந்தில் ஏடகம் வாழ் சோலையங்கிரி" என்று சிறப்பிக்கிறார்.

"... ....வானவர் கோன்
தேரேடகத்தனோடு சீதானும் வாழ்த்தும்சீ
ரசம் ஏடகத்து அறிவானந்தமே"

என்று வடலூர் வள்ளலார் வாழ்த்துகிறார்.

ஏழாம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சி செய்த பாண்டியன் அரிகேசரி நெடுமாறன் என்ற கூன் பாண்டியன் சமணத்தைத் தழுவியதால், அக்காலத்து மக்கள் பலரும் சமணர் ஆயினர். அரசி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர்களும் ஆற்றொணாத் துயருற்று, ஞானசம்பந்தரை அழைத்தனர். அவ்வமயம் சம்பந்தரும் நாவுக்கரசரும் திருமறைக்காட்டில் இருந்தனர். சம்பந்தர், மதுரைக்குப் புறப்படத் தயாரானார். 'நாளும் கோளும் நன்றாக இல்லை' என்று நாவுக்கரசர் கூறினார். 'வேயுறு தோளி விடமுண்ட கண்டன்' முதலியகோளறு பதிகப் பாடல்களைப் பாடி, சம்பந்தர் நாவுக்கரசரிடம் விடை பெற்று மதுரைக்குப் பயணமானார்.

சம்பந்தர் வருகையால் தங்கள் சமயம் வீழ்ச்சியடைவதை உணர்ந்த சமணர், அவரை அனல் வாதத்திற்கு அழைத்தனர். 'போகமார்த்த பூண்முலை' என்னும் திருநள்ளாற்றுப் பதிகத்தை ஓர் ஓலையில் எழுதி அந்த ஏட்டை நெருப்பில் இட்டார். அது தீயில் வேகவில்லை, எனவே, பச்சைப் பதிகம் என்று பெயர் பெற்றது. சமணர் இட்ட ஏடு எரிந்து சாம்பலாயிற்று. ஆத்திரம்

அடைந்த சமணர், சம்பந்தரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் பதிகத்தை எழுதி அந்த ஏட்டைச் சம்பந்தர் வைகையில் மிதக்க விட்டார். சமணரும் ஓர் ஏட்டை, வைகையில் இட்டனர். சம்பந்தர் விட்ட ஏடு, ஏடகத்தில் கரை சேர்ந்தது. சமணர் இட்ட ஏடு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

சம்பந்தர் எழுதிய ஏடு 'எதிரேறிய திருவிழா' ஆண்டு தோறும் ஆவணி மாதப் பிறப்பன்று இவ்வூர்க் கோயிலில் கொண்டாடப் பெறுகிறது.

தோல்விகண்ட சமணர், தாங்கள் செய்து கொண்ட சபதப்படி, திருவேடகத்திற்கு அருகேயுள்ள மேலக்கால் என்னும் ஊரிலிருந்து மதுரைக்குக் கிழக்கேயுள்ள கழுவடை என்னும் ஊர் வரை 8,000 கழுமரங்களை நட்டு, ஒரு மரத்துக்கு ஒருவராக எண்ணாயிரம் சமணர், கழுவேறினர் என்று சுற்றுவட்டாரத்து மக்கள் கூறுவர்.

ஏடணைந்த இடத்துக்கு அருகே சிவலிங்கம் ஒன்றை நிலை நாட்டி, திருஞானசம்பந்தர் வழிபட்டதாகவும் அந்தச் சிவலிங்கமே கோயிலில் இருக்கும் ஏடகநாதர் என்றும் கூறுவர்.

பழங்காலத்துப் பாண்டியரும், பன்னிரண்டாம் நூற்றாண்டினரான பராக்கிரமனும் விக்கிரமனும் பிற்காலத்து அரசர் பலரும் இங்கே திருப்பணி செய்துள்ளனர். 1930-இல் தேவகோட்டை உ. ராம. மெ. சுப. சேவுகன்செட்டியார் குடும்பத்தார் விரிவான கற்கோயிலை அமைத்தனர்.

மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், நின்றசீர்நெடுமாறன் திருவுருவங்களும் அழகிய வாகனங்களும் மாறவர்மன் சுந்தர பாண்டியன், கிருஷ்ணதேவராயர் போன்ற அரசர் பலரின் கல்வெட்டுகளும் காணத்தக்கன.

கோயிலுக்கும் சோழவந்தானுக்கும் இடையே வைகைக் கரையில் சுவாமி சித்பவானந்தர் நிறுவியிருக்கும் ஆசிரமும் விவேகானந்தர் கல்லூரியும் தொழிற்பள்ளியும் உள்ளன.

கருப்பட்டி

இங்குத் தென்னை, பனைமரங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. கயிற்றுத்தொழில் பரவுவதற்கு இது ஏற்ற இடமாகும்.

1,500 ஆண்டுகளுக்கு முந்தின முதுமக்கள்தாழி இவ்வூரில் கிடைத்துளது.

மேலக்கால்

மதுரையிலிருந்து 16 கி. மீ தொலைவு. சம்பந்தருடன் வாதத்தில் தோல்வியுற்ற சமணர், உடன்பாட்டுப்படி கழு ஏறுவதற்காக நாட்டப்பெற்ற கழுமரங்களின் வரிசை மேலக் கோடியில் முடிவுபெற்ற இடமாதலால் இது மேலக்கால் எனப்பட்டது.

திருவாலவாயநல்லூர்

மதுரைமாநகர்க்குரிய ஆலவாய் என்னும் பெயரை நிலை நாட்டும் ஊர்களுள் ஒன்று. இவ்வூர் பெரியாற்றுப் பாசனம் பெற்று, வடதிருவாலவாயநல்லூர் எனப்படுகிறது. தென் திருவாலவாயநல்லூர் வைகைக் கரையில் உளது.

விராலிப்பட்டி

விராலிமலை,(புதுக்கோட்டைமாவட்டம்),விராலிமயன்பட்டி (வத்தலக்குண்டு ஒன்றியம்) என்னும் ஊர்களைப் போல இவ்வூர்ப் பெயரும் விராலி என்னும் சொல்லுடன் தொடங்குகிறது. இப்பெயர், ஆராய்ச்சிக்குரியது.

குலசேகரன்கோட்டை

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் ஊர். மதுரைக்கு வடமேற்கே 8 கி. மீ. தொலைவிலும் நிலக் கோட்டைக்குத் தென்கிழக்கே 15 கி. மீ. தொலைவிலும் வைகைக் கரைக்கும் சிறுமலை அடிவாரத்துக்கும் இடையே அமைந்தது. பழங்காலத்துக் கல்லறைகள் இங்குத் தோண்டி எடுக்கப் பெற்றுள்ளன.

குருவித்துறை

வைகைக்கரையில் உள்ள ஊர். இங்கே உள்ள ஸ்ரீ சித்திர ரத வல்லபப் பெருமாள் கோயில், இடைக்காலப் பாண்டியர்களின் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

VII திண்டுக்கல் வட்டம்

மதுரை மாவட்டத்தின் மிக முக்கியமான வட்டங்களுள் திண்டுக்கல் வட்டம் இடம்பெறும். இதில் திண்டுக்கல் நகரமும், திண்டுக்கல், ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், சாணர்பட்டி என்ற நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கியிருக்கின்றன. இந்த வட்டம் மக்கள் நெருக்கம் உடையது. தொழில், வேளாண்மைத் துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. கல்விப் பெருக்கத்தையும் இங்கு காணுகிறோம்.

வட்டத்தின் பரப்பு–900 சதுர கி. மீ.

சாகுபடியாகும் தானியங்கள்	-நெல், சோளம், கேப்பை, சாமை.
சாகுபடியாகும் பிறபொருள்கள்	– கரும்பு, பருத்தி, காப்பி, வாழை
குறிப்பிடத்தக்க ஏற்றுமதிகள்	–வாழை, திராட்சை, தோல், பூ
முக்கிய ஆறுகள்	–கொடகனுறு, மாங்கரை ஆறு, வரட்டாறு, சந்தானவர்த்தினி ஆறு,
பாதுகாக்கப்பட்ட வனங்கள்	– கன்னிவாடி, சிறுமலை, காந்தமலை
மலைக்கிராமங்கள்	– ஆடலூர், பன்றிமலை, தோணி மலை, சிறுமலை, மணலூர்.

திண்டுக்கல் நகரம்

மதுரை மாவட்டத்தில் மதுரைக்கு அடுத்த பெருநகரம் திண்டுக்கல். இந்நகரின் மக்கள் தொகை இரவில் இரண்டு லட்சம்; பகலில் இரண்டேகால் லட்சம்; திங்கட்கிழமைகளில் இரண்டரை லட்சம்.

ஒரு புதிய மாவட்டத்தின் தலைநகரமாக அமையத்தக்கது திண்டுக்கல். விசயநகர ஆட்சியில் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் ஏற்படுத்திய அம்மையநாயக்கனூர், கன்னிவாடி, விருபாட்சி ஆயக்குடி, அம்பாத்துறை முதலிய 18 பாளையங்களைக் கொண்ட திண்டுக்கல் சீமையின் தலைநகராக இந்நகர் இருந்தது. இப்போதும் (1980-இலும்), மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட நீதிபதி,

மாவட்டக் காவல்துறைத் தலைவர் அலுவலகங்கள் மட்டுமே புதிதாகத் திறக்க வேண்டும். எஞ்சிய அலுவலகங்கள் பெரும்பாலும் இந்நகரிலேயே இயங்குகின்றன.

ஊர்ப்பெயர்: நாமக்கல், குண்டக்கல் என்னும் ஊர்களைப் போலவே இந்நகரும் இங்குள்ள மலையால் பெயர் பெற்றது. இவ்வூரிலுள்ள மலை ஒரே கல்லால் ஆனது. திண்டு=அரை வட்ட வடிவான பஞ்சணை. இவ்வகையான தலையணை போன்றவடிவத்தில் அமைந்த மலை திண்டுக்கல் எனப்பட்டது.

தட்பவெப்பம்: சிறுமலையின் அடிவாரம் இங்கிருந்து 11 கி. மீ. தொலைவிலுளது. கோடைக்கானல் மலைத்தொடர் தொடங்குமிடம் திண்டுக்கல்லிலிருந்து 35 கி. மீ. தொலைவில் உள்ளது. எனவே திண்டுக்கல்லில் வெப்பம் கிடையாது. தட்பமான இயற்கை நிலை நிலவுகிறது. சுற்றிலும் மலைகள் இருந்ததால் பள்ளத்தாக்குப் பகுதியில் மழை பெய்யும். திண்டுக்கல் நகரைத் தாழ்வான மலைகளே சூழ்ந்திருப்பதால் போதிய அளவு மழை பெய்வதில்லை.

திண்டுக்கல் மலைக்கோட்டைமீது நடந்து சென்றால் கடற்காற்றை அனுபவிப்பது போன்ற இன்பத்தைப் பெறலாம்

தல புராணம்: திண்டி என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமானால் அழிவுண்டான். இறக்கும் போது தன் பெயரால் இவ்வூர் வழங்க வேண்டுமென்று வேண்டினான். அதனால் இவ்வூர் திண்டீசுவரம், திண்டுக்கல் என வழங்கலாயிற்று என்று தலபுராணம் கூறுகிறது.

ஆதியில் தாமரை மொட்டு வடிவாக திண்டுக்கல் மலை தோன்றியது. அதனால் பத்மகிரி என்று பெயர் பெற்றதாகவும் தலபுராணம் கூறும். இம்மலையில் இன்றும் நீர்ச்சுனைகள் பலவற்றைக் காணுகிறோம்.

இலக்கியங்கள்: திருநாவுக்கரசு சுவாமிகள் 'திண்டீசுவரம்' என்று வைப்புத் தலங்களுள் ஒன்றாகக் கூறுவது திண்டுக்கல்லையே என்று மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வூரைப்பற்றிப் பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்னும் மிகச் செவ்விய நூல் ஒன்று உள்ளது. பலபட்டடைச்

சொக்கநாதப் பிள்ளை என்பவர் இயற்றிய இந்நூல் தூது நூல்களில் தலையாயது. இதன் சுவை கருதி, இந்நூலை டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பித்துள்ளார்.

வரலாறு: தொன்று தொட்டு இந்நகர் பாண்டியர் ஆட்சியில் இருந்து வந்திருக்கிறது. விசயநகர ஆட்சியில் தான் திண்டுக்கல் சிறப்புப் பெற்றது. இராணுவ தளமாக விளங்கிய இவ்வூர் மலைக்கோட்டை, வெவ்வேறு ஆட்சிகளில் கட்டப்பட்டது. நாயக்க அரசர்கள், ஆர்க்காட்டு நவாபுகள், மைசூர் மன்னர்கள், ஆங்கிலேயர் ஆகிய ஒவ்வொருவரும் இக்கோட்டையை விரிவாக அமைத்தனர். ஒருவரிடமிருந்து மற்றொருவர் மாறி மாறி இக்கோட்டையைக் கைப்பற்ற முயன்றதை வரலாற்று ஏடுகள் வர்ணிக்கின்றன.

பாண்டிய நாட்டுக்கும் மதுரை நகர்க்கும் ஏற்படவிருந்த இன்னல்கள்பலவற்றைத் தடுத்து அவற்றினின்றும் அந்தநாட்டையும் நகரத்தையும் பாதுகாத்தது திண்டுக்கல் கோட்டைதான்.

மலைமீது ஒரு கோயில் இருக்கிறது. இதைச் சேரமன்னர் கட்டியதாகக் கூறுவர். இக் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. இங்கு காணப்படுவது பாண்டியர் காலத்துக் கட்டிடக்கலையே. இக் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் பாண்டிய அரசர்களின் பெயர் இல்லை.

1538-இல் விசயநகரத்திலிருந்து வந்த அச்சுதராயன் ஒரு கோயிலைக்கட்டி அபிராமி அம்மன் பத்மகிரீசர் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்ததாக ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மலையின் அடிவாரத்தில் சீனிவாசப் பெருமாள் கோயிலையும் நகருக்குள் காளத்தீசுவரர் கோயிலையும் இவன் கட்டியிருக்கிறான்.

மலைக்குக் கீழே தென்கிழக்கில் பழைய கோட்டை ஒன்று இருந்தது. மதுரையை ஆண்ட முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் அதை 1605-இல் கட்டியதாகத் தெரிகிறது. கோட்டை திருமலை நாயக்கர் ஆட்சியிலும் அங்குச் செல்ல 600 படிகள் ராணி மங்கம்மாள் ஆட்சியிலும் அமைக்கப்பட்டன.

1623 முதல் 1792 வரை இந்த ஊரிலே பல போர்கள் நிகழ்ந்த வண்ணமாக இருந்தன. மகாராஷ்டிரர்களுக்கும் மைசூர் படையினருக்கும் எதிராக இராமநாதபுரம் சேதுபதிகளுடைய படைகளுடன் போர், ஹைதர் அலிக்கும் மதுரையை ஆண்ட

நாயக்க மன்னர்களுக்கும் போர், பிரிட்டிஷாருக்கும் ஹைதர் அலிக்கும் போர் இப்படிப் பல போர்கள் இங்கு நிகழ்ந்தன.

1763-இல் ஆர்க்காட்டு நவாபாக இருந்த சாந்தாசாகிபு இக்கோட்டையைக் கைப்பற்றினன். அவன் தம்பி சந்தாசாகிபு, அண்ணனின் பிரதிநிதியாக இங்கிருந்து ஆட்சி செய்தான். பிக்ரி வேங்கடன் என்ற மைசூர்த் தளபதி இவ்வூரை 1742-இல் தாக்கி வெற்றி பெற்றான்.

1755-இல் ஹைதர்அலி திண்டுக்கல்லைக் கைப்பற்றினர். இந்நகரிலேயே ஒரு படை திரட்டி, திண்டுக்கல்லை இராணுவ கேந்திரமாக ஆக்கினர். பிரெஞ்சுப் பொறியியல் அறிஞர் சிலரின் மேற்பார்வையில் ஆயுதக் கிடங்கை உண்டாக்கினர். ஹைதர் மைசூருக்குச் செல்ல நேர்ந்தபோது ஆட்சிப் பொறுப்பைத் தம் உறவினர் மிர் ராஜாளித்தார் என்பவரிடம் ஒப்புவித்தார். இந்த மிர்ராஜாளித்தாரின் மனைவி அமிர் உன் நிசா பேகம் உயிர்நீத்தபோது, அவளுக்குச் சமாதி வைத்த இடமே இன்றைய பேகம்பூர்.

1767-இல் ஆங்கிலேய தளபதி உட் என்பவன் திண்டுக்கல்லைப் பிடித்துக் கொண்டான். ஹைதர்அலி அதை மீட்டான். இவ்வாறு பல தடவை, திண்டுக்கல் கை மாறிற்று.

1784 முதல் 1790 வரை திப்புசுல்தானின் ஆட்சி நிலவியது. அவனுடைய பிரதிநிதியான சையது மீர்சாயபு, ஆங்கிலேயர் உதவியுடன் திண்டுக்கல் கோட்டையை விரிவாக்கி, பழைய வாயில்களைத் தகர்த்து, பாரசீக மொழியில் ஒருகல்வெட்டுடன் கூடிய புதிய வாயில் அமைத்தான். 1798-இல் ஆங்கிலேயர் கோட்டையில் மேலும் சில கட்டிடங்களைக் கட்டினர்.

திப்புசுல்தானுக்கு ஓர் ஐயப்பாடு ஏற்பட்டது. மலைமீது கோயில் இருந்தால் அங்கு வழிபடச் செல்வதாகக் கூறி, தன் எதிரிகள் திண்டுக்கல் கோட்டையைப் பிடித்து விடக்கூடும் என்று நினைத்தான். அத்தகைய சூழ்ச்சியை முன்கூட்டி முறியடிப்பதற்காக, மலைக்கோயிலில் இருந்த விக்கிரகங்களைக் காளத்தீசுவரர் கோயிலில் வைத்துப் பிரதிட்டை செய்ய ஆணையிட்டான்.

1790 முதல் 1792 வரை மூன்றாவது மைசூர்ப்போர் நிகழ்ந்தது. அப்போது தளபதி ஜேம்ஸ் ஸ்டுவர்ட்,

திண்டுக்கல்லைத் தாக்கினன். 1797-இல் திப்புசுல்தான் இக் கோட்டையை ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தான். 1797–98இல் தங்களுக்கு அடங்காத பாளையக்காரர்களை ஆங்கிலேயர் இக் கோட்டையில் சிறைவைத்தனர்.

மலையின் நீளம் தெற்கு வடக்காக 120மீட்டர் இருக்கலாம். அகலம் 100 மீட்டர். மலையின் சுற்றளவு ஒன்றரை கி. மீ. உயரம் 90 மீட்டர்.

மலைமீதுள்ள கோட்டை கருப்பட்டிப் பாலில் நனைத்த காரையால் கட்டப் பட்டிருக்கிறது; கோட்டைச் சுவர்களின் அகலம் ஒரு மீட்டர் செங்கல்லுடன் முட்டையையும் பயன்படுத்தி உறுதியாகக் கட்டியிருப்பதால் இந்தச் சுவர்களை இடிக்கவும் இயலவில்லை.

கோட்டையின் வலது பக்கத்தில் வளைவுகளும் அரிய வேலைப்பாடுகளும் கொண்ட பாசறை ஒன்று இருக்கிறது வேலூர், செஞ்சி. சங்ககிரிக் கோட்டைகள் சிறப்புடையனவாய் இருந்தாலும், திண்டுக்கல் கோட்டையில் மட்டுமே பாசறை இருக்கிறது.

கோட்டைச் சுவரின் உள்ளே சில சுரங்கங்கள் உள்ளன. மறைந்திருந்து எதிரிகளைத் தாக்குவதற்கு அவை பயன்படுத்தப் பட்டதாகக் கூறுவர். இச்சுரங்கங்களுக்குள் சென்ற சிலர் திரும்பி வராமையால், சுரங்கப்பாதை மூடப்பட்டிருக்கிறது. இக்கோட்டையில் வெடிமருந்து செய்த இடம், போர்க்கருவிகள் குவித்திருந்த இடம், திப்புசுல்தான் தங்கியிருந்த பகுதி, குண்டுகளை வைத்து எதிரிகளைத் தாக்குவதற்குத் தளமாக அமைந்த மேடை ஆகியவற்றைக் காணலாம். ஹைதர்அலி திப்புசுல்தான் காலங்களில் இங்கு நாணயச்சாலை இருந்தது.

இம்மலையின் அடிவாரத்தைச் சுற்றிக் கைபிடிச் சுவர் கட்டப்பட்டிருப்பதால் மழைக்காலத்தில் விழும் தண்ணீர் அடிவாரத்தில் கோட்டைக்குள் உள்ள குளத்தில் தேக்கி வைக்கப்பட்டு குளோரின் கலந்து குடிநீராகப் பயன்படுத்தப் படுகிறது.

நகரிலுள்ள தெருக்கள் பலவற்றின் பெயர்கள் ஆராய்ச்சிக்கு உரியன. அவற்றுக்குச் சுவையான வரலாறு உண்டு. சான்று: இராணுவத்தில் சேர்ந்திருந்த வங்காளிகள் சிலர் இருந்த பகுதி பங்காளித்தெரு என வழங்குகிறது.

தொழில்வளம் : திண்டுக்கல்லில் பல பொருள்கள் உற்பத்தியாகின்றன. சுருட்டுச் சுற்றுதல் ஒரு முக்கியமான தொழில். நகரத்தைச் சுற்றிலும் புகையிலை ஏராளமாக விளைகிறது. திண்டுக்கல் பகுதியில் இந்திய அரசினருக்கு இதனால் கலால் வரியும் மிகுதியாகக் கிடைக்கிறது. கேரளத்திற்கு வாசனைப் புகையிலை இங்கிருந்து பெரிய அளவில் ஏற்றுமதி ஆகிறது. இங்குள்ள புகையிலைத் தொழிற்சாலைகளில் குறிப்பிடத் தக்கது ஸ்பென்சர் கம்பெனி. 1881-இல் சர் ஜார்ஜ் வாட் என்பவர் ஜாவாவிலிருந்தும் சுமத்திராவிலிருந்தும் புகையிலையை வரவழைத்து அதைச் சுருட்டின் மேலேடுக்குப் பயன் படுத்தி ஸ்பென்சர் சுருட்டைத் தயாரித்தார். சுருட்டப்பட்ட புகையிலை சுருட்டு ஆயிற்று. பிறகு இது செரூட் (Cheroot) என்று ஆங்கிலத்தில் மருவி விட்டது. திண்டுக்கல் செரூட்டுக்கு இங்கிலாந்தில் பெரும் கிராக்கி இருந்துவருகிறது.

திண்டுக்கல்லின் மற்றொரு தொழில் இரும்புப்பெட்டி, பூட்டு முதலியன செய்வது. 1942 வரை, 'கொல்லர்' எனப்படும் ஆசாரிகள் மட்டுமே இவற்றைச் செய்து வந்தனர். இப்போது எல்லாச் சாதியினரும் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அரசாங்க அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் 'காட்ரஜ்' போன்ற எஃகு அலமாரிகள் பெரிய அளவில் வாங்கப்பட்ட போதிலும், வியாபாரிகள் தொன்று தொட்டு அவர்களோடு ஒன்றிவிட்ட திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்களையே விரும்பி வாங்குகிறார்கள்.

பூட்டுச் செய்யும் தொழிலை 1957 முதல் திண்டுக்கல்லில் தமிழக அரசும் மேற்கொண்டிருக்கிறது. இத்தொழிற்சாலையில் பலவகையான பட்டறைகளும் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளும் உண்டு. பூட்டுச் செய்யும் தொழிலில் தலைமுறை தலைமுறையாக ஈடுபட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கட்கு இங்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அவர்கள் தொழில் செய்வதற்கு வேண்டும் மூலப்பொருள்களும் உபரிப் பொருள் களும் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தியாவிலேயே அரசுத்துறையில் நடத்தப்படும் பூட்டுத் தொழிற்சாலை இது ஒன்றுதானும். மாங்காய்ப் பூட்டு, டிராயர் பூட்டு, அலமாரிப்பூட்டு எனப் பலவகைப் பூட்டுக்கள் செய்யப்படுகின்றன.

மங்குச்சாமான்கள் செய்யும் தொழிற்சாலை, எனுமல் முலாம்பூசுதல், ஜரிகை வியாபாரம் ஆகியவையும் நடைபெறுகின்றன.

நூல் ஆலைகளும், பருத்திக் கொட்டையை நீக்கிப் பஞ்சு எடுக்கும் ஆலைகளும் உள்ளன.

கடலை எண்ணெய் ஆலைகளுக்கும் குறைவில்லை. தோல் பதனிடுதல், திண்டுக்கல்லில் பெரியதொரு தொழிலாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. பேகம்பூர்க் கிணற்றுத் தண்ணீர், தோலைப் பாடம் பண்ணுவதற்கு ஏற்றது. தோல் செருப்புகள் பல வடிவங்களில் இங்கு செய்யப்படுகின்றன.

வியாபாரம்: தேனி, பொள்ளாச்சி, மணப்பாறை போன்ற வணிக நகரங்களுக்கு இடையே அமைந்திருப்பதால் திண்டுக்கல்லில் பலவகைப் பொருள்களும் பெரிய அளவில் விற்பனையாகின்றன. வேடசந்தூர்ப் புகையிலை, சின்னாளப்பட்டி நார்ப்பட்டுத் துணிவகைகள், கோடைக்கானல் மலையின் சில பகுதிகளில் விளையும் பொருள்கள் ஆகியவை திண்டுக்கல்லுக்கு விற்பனைக்கு வருகின்றன. கடலைப்பிண்ணாக்கு இங்கிருந்து இலங்கைக்குச் செல்லுகிறது.

சிறுமலை வாழைப்பழத்திற்கு மட்டுமின்றி, ஆந்திராவில் இருந்து வரும் சாத்துக்குடி ஆரஞ்சுப்பழத்துக்கும் திண்டுக்கல் ஒரு பெரியசந்தையாக விளங்குகிறது. தெற்கேயுள்ள எல்லா ஊர்களுக்கும் இங்கிருந்து தான் பழங்கள் வியாபாரத்திற்கு அனுப்பப்படுகின்றன.

அமைப்பு: மதுரையிலிருந்து திண்டுக்கல் வழியாகத்தான் கோயம்புத்தூர்க்கும் திருச்சிக்கும் நெடுங்காலமாகப் போக்கு வரத்து இருந்து வந்திருக்கிறது. இராமேசுரம், மதுரைக் கோயில்களில் வழிபட்ட பிறகு பழனிக்கும் திருவரங்கத்திற்கும் செல்லவும் திண்டுக்கல்தான் வசதியான வழி.

இரு பெரும் தேசிய நெடுஞ்சாலைகள் இங்கு கூடுகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத்தொடர்ச்சி மலையும் இவ்வூரருகே சந்திக்கின்றன. மதுரை, திருச்சி, கோவை நகர்களில் திருட்டு, கொலைக் குற்றங்களுக்காகத் தேடப்படும் "பேர்வழிகள்" திண்டுக்கல்லில் பிடிபடுகிறார்கள்.

போக்குவரத்து: திருச்சி-மதுரை, திண்டுக்கல்-பாலக்காடு திண்டுக்கல்-கோயம்புத்தூர் இரயில் பாதைகள் சந்திக்கும் இடமாகத் திண்டுக்கல் விளங்குகிறது. கரூரிலிருந்து மதுரைக்குத் திண்டுக்கல் வழியாக அகல இரயில் பாதை போட முடிவு செய்யப் பட்டிருக்கிறது. கேரள எல்லையில், (திண்டுக்கல்லிலிருந்து 100 கி. மீ. தொலைவிலுள்ள) கூடலூருக்கு வைகை அணை வழியாக இரயில் பாதை அமைக்க வேண்டும் என்ற திட்டமும் நெடுங் காலமாகப் பேசப்பட்டு வருகிறது.

நெடுஞ்சாலைப் போக்குவரத்திலும் திண்டுக்கல் குறிப்பிடத் தக்கது. தமிழ் நாட்டிலுள்ள அனைத்து நகரங்களுக்கும் பேருந்துகள் செல்லுகின்றன அருகேயுள்ள சிறுமலைக்குச் சிறிய உந்துகளும் சுற்றுவட்டம் முழுவதற்கும் 'டவுன் பஸ்' களும் செல்லுகின்றன.

நகராண்மைக்கழகம்: திண்டுக்கல் நகராண்மைக் கழகம் 1866 இல் ஏற்பட்டது. பல்வேறு படையெடுப்புகளால் இங்கு வந்து குடியேறிவிட்ட முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகியோரும் இக்கழகத்தின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

கல்விநிலையங்கள்: சிறந்த உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் இரண்டு கல்லூரிகளும் சுவீடிஷ் மிசன் நடத்தும் தொழில்பள்ளியும் திண்டுக்கல்லில் உள்ளன. காந்திகிராமத்தில் உள்ள கல்வி நிலையங்களும் திண்டுக்கல்லுக்குப் பயன்படுகின்றன

சமயநிறுவனங்கள்: திண்டுக்கல்லில் சிவன் கோயில்களும் பெருமாள் கோயில்களும் உள்ளன. மலையடிவாரத்தில் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கு ஒரு கோயில் இருக்கிறது.

மாரியம்மன் திருவிழாவில் தீச்சட்டி சுற்றுவது, திண்டுக்கல்லில் ஒரு பெரிய திருவிழா. மேளதாளங்கள் முழங்க ஆண்களும் பெண்களும் அக்கினிக்காவடி தூக்குவது போல, தீச் சட்டி தாங்கி நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள்.

பேகம்பூரில், ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ள பேகத்தின் சமாதி அருகே பெரியதொரு மசூதி கட்டப்பட்டிருக்கிறது.

கிறித்தவ தேவாலயங்களுள் குறிப்பிடத்தக்கன, மேட்டுப்பட்டியில் 1729-இல் கட்டப்பட்ட "சர்ச் ஆப் அவர் லேடி ஆப் டோலர்ஸ்", நகரின் நடுப்பகுதியில் 1872-இல் கட்டப் பட்ட "புனித ஜோசப் சர்ச்" என்பன.

கரூர்ச் சாலையில் பெஸ்கி பாதிரியார் பெயரால், இயேசு சபையினர்க்குப் பயிற்சி வழங்கும் கல்வி நிலையம் கண்ணைக்கவரும் சூழ்நிலையில் பெரிய அளவில் அமைக்கப்பட்ட விரிவான கட்டிடங்களுடன் திகழ்கிறது.

திண்டுக்கல் வாழ் கிறித்தவர்களுக்கு 1970-ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் குப்பை லாரி ஓட்டுநராக இருந்தவர் ஜேம்ஸ் பாஹி : அவர் குடியரசுத் தலைவராக இருந்த ஜான் கென்னடியின் நண்பர். பசிபிக் மாக்கடலில் நடந்த இரண்டாம் உலகப் போரைப் பற்றி ஜேம்ஸ் பாஹி ஒரு நூல் எழுதினார். 1963-ஆம் ஆண்டில் வெளியான நூல்களுள் அதுவே மிகுதியாக விற்பனையாயிற்று. அந்த நூலின் விற்பனையி லிருந்து அவருக்குக் கிடைத்த வருமானத்தில் சரிபாதியை அவர் திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் இருந்த சர்ச் ஆப் அவர் லேடி ஆப் டோலர்ஸ் என்ற தேவாலயத்தைப் புதிதாகக் கட்ட வழங்கினார். 1967-இல் தொடங்கிய திருப்பணி இந்த நான்கு இலட்சம் ரூபாய்ச் செலவில் 1970-இல் நிறைவேறியது.

ஜேம்ஸ் பாஹியின் நூலைப் படித்து மகிழ்ந்த வாசகருள் ஒருத்தி, நூலாசிரியரை மணம் செய்து கொள்ள முன்வந்தாள். இத்திருமணம், இந்தத் தேவாலயத்தில் நாதசுரம், இரட்டைத் தவில், கிளாரினட் இசை ஆகியவை முழங்க நடைபெற்றது. இந்தத் தேவாலயத்தில் வழக்கமாக வழிபடும் 500 பேர் மணமக்களுக்கு விருந்து படைத்தனர். சாதி மத வேறுபாடு இன்றித் திண்டுக்கல்லார்பல்லாயிரவர் முன்னின்று நகராண்மைக் கழகத்திற்கு மணமக்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று பாராட்டு விழா நடத்தினர். விழாவின் இறுதியில் அவர்களை மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அங்கு மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளவும் செய்தனர். இந்நிகழ்ச்சிகளை உலகப் புகழ்பெற்ற எம். ஜி. எம். (மெட்ரோ கோல்டுவின் மேயர்) குழுவினர் வண்ணப் படமாக எடுத்துப் பல நாடுகளில்காட்டினர்.

திண்டுக்கல்லில் மிகுதியானவை : வெங்காயம், கடலைப் பிண்ணாக்கு, தோலினால் செய்த பொருள்கள், வாசனைப்புகையிலை, புளி (ஊரைச் சுற்றிப் புளிய மரம், உலுப்பி விட்டால் கலகலக்கும்.)

திண்டுக்கல்லில் இருப்பவை : தோல் பதனிடு தொழிற் சாலைகள் (60), அமெரிக்க மிசன் நடத்தும் குட்டரோக

மருத்துவமனை, ஏராளமான நெல் அறைக்கும் இயந்திரங்கள், நூற்றுக்கணக்கான கமிசன் மண்டிகள், தாஜ்மஹால் பாணியில் அங்கு விலாஸ் முத்தையாபிள்ளைக்கு நினைவாலயம்.

வாரச்சந்தை கூடும்நாள்: திங்கட்கிழமை

திண்டுக்கல்லின் புகழ்ப் பெயர்: தென்னிந்தியாவின் அலிகார்.

திண்டுக்கல்லின் சுற்று வட்டத்தில் பார்க்கத்தக்க ஊர்கள்: தாடிக்கொம்பு, காந்திகிராமம், சிறுமலை, வேடசந்தூர்.

திண்டுக்கல்லிலிருந்து பழனி 60 கி. மீ., கோடைக்கானல் 96 கி. மீ, கோடைரோடு எனப்படும் அம்மையநாயக்கனூர் 22 கி. மீ., நத்தம் 35 கி. மீ., மதுரை 65 கி. மீ., திருச்சி 96 கி. மீ.

17. திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்

இது திண்டுக்கல் நகரத்தைச் சுற்றியுள்ள 16 ஊராட்சிகளை உடையது. இந்த ஒன்றியத்தில் மலைப்பகுதியும் உண்டு. திண்டுக்கல்லின் வணிகச் சிறப்புக்கு இந்த ஒன்றியமே பெரிதும் காரணமாய் இருக்கிறது.

அகரம்

குடகனாறு என்னும் காட்டாற்றின் தென்கரையில் தாடிக்கொம்புக்கு எதிரே அமைந்தது. மக்கள் தொகை 15,000.

இவ்வூர் மாரியம்மனுக்கு முத்தாளம்மன் என்று பெயர் முத்தாளம்மன் கோயிலில் புரட்டாசி மாதம் நடைபெறும் அகரம் திருவிழாவையொட்டிப் பெருங்கூட்டம் கூடும். நூற்றுக் கணக்கான பேருந்துகள்விடப்படும். திருவிழாவன்று பெரும்பாலும் மழை பெய்யும். மழையில் நனைந்துகொண்டு, மக்கள் அம்மனை வழிபடுவர். அவ்விழாவில் அரிச்சந்திர நாடகத்தை நடிப்பது மரபு.

இங்கு மட்டும் தாழங்குடை என்னும் ஒருவகைக் குடை ஆயிரக் கணக்கில் விற்பனையாகும்.

ரிவ. கல்லுப்பட்டி

10,000 மக்கள் வாழும் இவ்வூர் திண்டுக்கல்லிலிருந்து 4 கி மீ. தொலைவில் இருக்கிறது. இங்கு இருப்பவை- கத்தோலிக்கரின் தேவாலயம், சிலுவைத் திண்ணை, சப்பரம். இவ்வூரின் விளைபொருள்கள்- சோளம், காய்கறி, பூ, பயறு வகைகள்.

வெள்ளோடு

சிறுமலையின் அடிவாரத்தில் அமைந்தது. இரயில் நிலையம் ஒன்றரை கி. மீ தொலைவில் உளது. புன்செய்ப் பொருள்களைப் பயிரிட்டு, மக்கள் வளம் கொழிக்கின்றனர்.

தாடிக்கொம்பு

திண்டுக்கல்லுக்கு வடக்கே 8 கி. மீ. தொலைவில் பள்ளப்பட்டி வழியாகக் கரூர் செல்லும் சாலையில் உள்ள ஊர். மக்கள்தொகை பத்தாயிரம். இவ்வூர், குடகனாற்றின் வடகரையில் இருக்கிறது.

இன்று இது சிற்றூராக உளது. 1801வரை இவ்வூர் வட்டத் தலைநகராக இருந்தது. முன்னாளில் இவ்வூர் பெரிய ஊராக விளங்கியது என்பது திண்டுக்கல் பகுதியில் இவ்வூரில் இருப்பது போன்ற பெரிய கோயில் வேறு எங்கும் இல்லை என்பதிலிருந்து தெரியவரும். திண்டுக்கல்லில் அடிக்கடி போர் நிகழ்ந்ததால் அமைதியாக வாழ விரும்பிய மக்கள் இவ்வூரில் குடியேறினர்.

விசயநகர ஆட்சியில் தெலுங்கு பேசிய மக்களும் இவ்வூரில் குடியேறினர். தாடிக்கொம்பு என்பது அவர்கள் இவ்வூருக்கு இட்ட பெயர். தெலுங்கு மொழியில் தாடி என்றால் பனைமரம்; கும்பு என்றால் கூட்டம். எனவே தாடிக்கொம்பு என்பது பனைமரக் கூட்டம் என்று பொருள்படும்.

தெலுங்கர் குடியேறுவதற்கு முன் இவ்வூருக்குத் தாலவனம் என்ற பெயர் நிலவியது. தாலம்-கூந்தற்பனை.

இங்குள்ள கோயில், சௌந்தரராசப் பெருமாள் கோயில் எனப்படும். ஊரினைக் கடந்து செல்லுவோர் இத்திருக் கோயிலையும் நெடிதுயர்ந்த கோபுரத்தையும் காணலாம்.

நாற்புறமும் தேரோடும் வீதிகள் அமைத்து ஊரின் நடுவில் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. நாயக்க அரசர்கள் காலத்தில் இது கட்டப்பட்டது. கி. பி 1629-இல் திருமலை நாயக்கர் ஆட்சியில் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. சௌந்தரராசப் பெருமாளும் சௌந்தரவல்லித் தாயாரும் இக் கோயிலில் எழுந்தருளியுள்ளனர்.

இக்கோயிலுக்குப் பெரிய திருமதிலும் மதிலுக்குள் ஐந்து சந்நிதிகளும் உள்ளன. தாயார் சந்நிதி, ஒரு கலைக்கூடமாகக் காட்சி தருகிறது. ஊஞ்சல் மண்டபத்தில் விசயநகர அரசர் ஒருவரின் உருவமும் அவர் மனைவியின் உருவமும் உள்ளன மகா மண்டபத்தில் ஏழு சுரங்களைத் தரும் இசைத்தூண்களும் அரிய சிற்பங்களும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் பதினான்கு சிற்பங்கள் மிகவும் புகழ் பெற்றவை. தமிழ்நாட்டில் தாரமங்கலம் தவிர வேறு எங்கும் இவ்வளவு அழகிய சிற்பங்களைக் காண இயலாது. ஒவ்வொரு சிற்பமும் ஒரே கல்லில் பிரமாண்டமான அளவில் செதுக்கப் பெற்றுள்ளது. நரசிம்பன் இரணியனைக் கொல்வது, உலகளந்த பெருமானின் சிற்பம், 16 கைகளைக் குடைந்துள்ள சிற்பங்கள், காமன்-ரதி சிற்பங்கள், கருடாழ்வார் மீதேறி விஷ்ணு போர்க் கோலத்தில் செல்லும் காட்சி ஆகியவை நுணுக்கமாகச் செதுக்கப் பெற்றுள்ளன.

பளிங்குத் தூண்களும் கவினுறு மண்டபங்களும் இக் கோயிலுக்கு மேலும் பெருமை கூட்டுகின்றன. தூண்கள், விசயநகரப் பேரரசின் தலைநகராக இருந்த ஹம்பி கோயிலிலுள்ள புகழ்பெற்ற தூண்களின் பாணியைப் பின்பற்றி அமைக்கப் பட்டுள.

சிற்பிகள் எந்தக் கோயிலிலாவது வேலை செய்ய ஒப்பந்தம் எழுதுகையில் "தாரமங்கலம், தாடிக்கொம்பு ஆகிய இரண்டு ஊர்ச் சிற்பங்களையும் ஆவுடையார்கோயில் கொடுங்கையையும் திருவீழிமிழலை வௌவால் நெற்றி மண்டபத்தையும் தவிர ஏனைய ஊர்ச் சிற்பங்களைச் சிறப்பாகச் செய்து தருவோமாக" என்று எழுதுவார்கள். இதிலிருந்து தாடிக்கொம்புச் சிற்பங்களின் சிறப்புப் புலனாகும்.

எவ்வித வடிகால் வசதியும் இல்லாமல் இக்கோயிலின் தளவரிசையில் விழும் மழைநீர் மாயமாய் மறைகிறது. இது

ஒரு புதிராகவே இருக்கிறது. எதற்காவது காரணம் சொல்ல முடியாவிட்டால், அமெரிக்காவில் "அது 64 டாலர் கேள்வி" என்று கூறுவது போல, "தாடிக்கொம்பு தளவரிசை மாதிரி" என்று சொல்வது திண்டுக்கல்பகுதியில் வழக்கம்.

சிறுமலை

சிலப்பதிகாரம் காட்டும் மலைவளங்களுள் ஒன்று திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த சிறுமலை. இந்த மலை, தெற்கேயுள்ள பாண்டிநாட்டு அரசனான தென்னவனின் மலை. இளங்கோவடிகள் பாடுவது வருமாறு :

"காயமும் மஞ்சளும் ஆய்கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"

சிறுமலையில் சந்தானவர்த்தினி ஆறு உற்பத்தி ஆகிறது. இந்த ஆற்றில் நீராடுபவர்கட்குச் சந்தானம் (சந்ததி) பெருகும் என்பது பெயரிலிருந்து அறியத்தக்க நம்பிக்கை.

மலையின் பெயருக்கும் ஒரு காரணம் கூறுவர். சஞ்சீவி பர்வதத்தை அநுமான் தூக்கிச் சென்றபோது, அதில் ஒரு சிறு பகுதி திண்டுக்கல்லுக்கு அருகே கீழே சிதறி விழுந்தது. அதன் பெயர் 'சிறுமலை' ஆயிற்று.

திண்டுக்கல்–நத்தம் சாலையில் 6. கி. மீ. தொலைவு சென்று மலைமீது போடப்பட்டுள்ள 16 கி மீ. சாலையில் பயணம் செய்து சிறுமலையை அடையலாம்.

சிறுமலையின் உயரம் 1200 கி. மீ. (3,878 அடி) அகலம் 20 கி. மீ. இம்மலையின் உயர்ந்த பகுதி ஆங்காங்கே பள்ளத்தாக்கு வடிவத்தில் 6,000 மக்கள் வாழும் குடியிருப்புகளைக் கொண்டிருக்கிறது. குறிஞ்சி வளம் அவர்களை வாழவைக்கிறது. புதூர், பழையூர், சக்கிலிப்பட்டி, அரளிக்காடு, தவிட்டுக்கட்டை, தாழைக்காடு, வேளாண்பண்ணை என்பன இங்குள்ள ஊர்கள். இங்கு வாழும் மக்கள் பிள்ளைமார், நாயடு, சக்கிலியர் மற்றும் பளியர் என்ற பழங்குடியினர்.

வாழையும் பலாவும் செழிக்கின்றன. ஆரஞ்சுப் பழத்துக்கும் எலுமிச்சைப் பழத்துக்கும் பஞ்சமில்லை. செந்நிறமான மாதுளை, சாலையின் இருமருங்கிலும் நம்மை வரவேற்கிறது. தேன்கூடுகள் தொங்குகின்றன. காப்பித் தோட்டங்கள் கண்பார்வை படும் இடமெங்கும் தென்படுகின்றன. சாமை, தினை உள்பட மொத்தம் விளைநிலம் 25,000 ஏக்கர் பரப்புக்கு உள்ளது. எஞ்சிய இடத்தில் பலவகையான காடுகள் அடர்த்தியாக உள்ளன. அவற்றில் செடி கொடிகள் வெள்ளை ஒக்கு, தேக்கு மரங்கள் அபூர்வமாகத் தோதகத்தி மரங்கள் இருக்கின்றன.

பன்றி, கலை ஆடு, மான், முயல் ஆகியவை எங்கும் திரிகின்றன.

வெட்டுக்காயத்தைப் போக்க உதவும் ஓர் எண்ணெய்யின் மூலப்பொருளான ஒருவகைப் புல் (LEMON GRASS) இம்மலையில் உண்டாகிறது.

ஆண்டு முழுவதும் இதமான காலநிலை உண்டு. வடகிழக்குப் பருவக்காலத்தில் நல்ல மழை பெய்கிறது. இம்மலையிலிருந்து வீசும் தென்றல் காற்றானது எலும்புருக்கி நோயைக் குணப் படுத்துவதால், திண்டுக்கல்லில் பலர் குடியேறுகின்றனர்.

18. ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்

இயற்கை எழில், கல்விப் பெருக்கம், வேளாண்மை வளம், வணிகச் சிறப்பு யாவும் ஒருங்கே அமைந்த இந்த ஒன்றியம் மூன்று பேரூராட்சிகளையும் இருபது ஊராட்சிகளையும் உடையது ஒன்றியத்தின் பல ஊர்களில், சிறுமலைக்காற்று வீசுகிறது. காற்றும் தூய்மையாக இருக்கிறது.

வழிப்பறி அடிக்கடி நடந்தது. புகழ்பெற்ற ஆனைவிழுந்தான் ஓடையில் ஒரு பக்கம் திண்டுக்கல் சாலையும் மறு பக்கம் சிறு மலையும் உள்ளன. அந்த இடம் இப்போது அல்லும் பகலும் போக்குவரத்து நிறைந்ததாய், கல்வி நகராய், காந்தியடிகள் பெயரைத்தாங்கும் நகரமாய் விளங்குகிறது.

இக்கிராமத்தின் வாயிலாக ஐ. நா. குழந்தை நல இயக்கம், ஃபோர்டு அற நிறுவனம் ஆகியவை மேற்கொண்ட முயற்சிகளால் இந்த ஒன்றியம் முழுவதிலும் சுகாதாரத் துறையில் பெரு

முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாடு உணர்ச்சியும் பரவியிருக்கிறது.

அய்யம்பாளையம்

மக்கள் தொகை 15,000 தாண்டிக்குடி மலையும் ஊர் ஓரமாக அமைந்த மருதாநதியும் இவ்வூருக்கு எழில் தருகின்றன தாண்டிக்குடிச்சாலை இங்கிருந்து பிரிகிறது.

அய்யனாருக்கு ஒரு பெரிய கோயில் இருக்கிறது. இக் காரணத்தால் ஊர்ப்பெயர் அய்யனூர் என வழங்குகிறது.

இவ்வூரின் விற்பனைகள்: எலுமிச்சை, ஆரஞ்சு, ஏலக்காய் காப்பிக்கொட்டை.

விளைபொருள்கள்: பருத்தி, தென்னை, மாங்கனி, வாழை.

வாழைநார் இங்கு மிகுதியாகக் கிடைக்கிறது. இதிலிருந்து நூல் எடுத்துப் பை, கயிறு, கூடைசெய்யும் தொழிற் சாலையும், இங்குள்ள மலைப் பகுதியில் விளையும் மூங்கில் மரத்திலிருந்து காகிதக்கூழ் உற்பத்தி ஆலையும் நிறுவலாம்,

தொழிலாளர்களும் தோட்ட முதலாளிகளும் உள்ள ஊர் இவ்வூரினர் மணலூர், தாண்டிக்குடி, வத்தலக்குண்டு, பட்டி வீரன்பட்டி, மதுரை, திண்டுக்கல் ஆகிய ஊர்களுக்குச் சென்று வேலையில் அமர்ந்து வாழ்கின்றனர். தமிழ், தெலுங்கு, கன்னடம் பேசும் மக்கள் சம அளவில் உள்ளனர். குழாய்க் கிணறுகள் ஏராளமாகப் போடப்பட்டுள்ளன.

இவ்வூர் திண்டுக்கல்லிலிருந்து 40 கி. மீ. தொலைவிலும் பட்டிவீரன்பட்டியின் எல்லையிலும் இருக்கிறது.

சின்னாளப்பட்டி

பழனிமலை, சிறுமலை ஆகிய மலைப்பகுதிகள் இரண்டுக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கில், நெசவுக்கேற்ற சூழலில் அமைந்தது. மக்கள் தொகை 20,000 மதுரையிலிருந்து 50 கி. மீ.

கி. பி. 1850 முதல் இங்குக் கைத்தறி நெசவுத்தொழில் நடைபெறுகிறது. இத்தொழிலில் தொடக்கத்தில் ஈடுபட்டவர் தேவாங்கச்செட்டியார் மட்டுமே ஆவார். இப்போது எல்லா

இனத்தவர்களும் இதில் ஈடுபடுகின்றனர். நார்ப்பட்டுநெசவு 10,000 தறிகளில் நடைபெறுகிறது. சேலைகளும் வேட்டிகளும் மலையாள முண்டுகளும் சின்னாளப்பட்டியில் தயாராகித் தென் இந்தியாவெங்கும் விற்பனையாகின்றன. ஆண்டுதோறும் விற்பனை யாகும் பொருள்களின் மதிப்பு மூன்று கோடி ரூபாய் ஆகும்.

தேவாங்கச்செட்டியார்களுக்கு நெசவுத்தொழில் கைவந்த கலை. இவர்களுள் தெலுங்கு பேசுபவர்களும் கன்னடம் பேசு பவர்களும் உள்ளனர். இவ்விரு மொழிகளைப் பேசும் தேவாங் கர்களுக்கும் பொதுவான மடம் விசயநகரப் பேரரசின் தலை நகராயிருந்த ஹம்பியில் பம்பாதி கோயிலுக்கு அருகேயுள்ள ஹேகூடபர்வதத்தில் இருக்கிறதாம்.

சின்னான், சின்னழகன் என்ற பெரியவர் ஒருவர் பெயரால் இவ்வூர் ஏற்பட்டது என்பர். ஓர் ஆசாரியின் பட்டறை இருந்ததாகவும், சின்னான் பட்டறை சின்னாளப் பட்டியாக மருவியதாகவும் கூறுவர். இவ்வூரில் திறமையான கொல்லர்கள் உள்ளனர்.

இவ்வூரில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில், 1905-ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் பெரும் பொருளீட்டிய குமாரசாமி செட்டியாரால் தொடங்கப் பெற்று 59 ஆண்டுகள் கழித்து அவருடைய பேரன், சென்னை டாக்டர் குமாரசாமி அவர்களால் முடிக்கப் பெற்றது.

நாள்தோறும் இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலும் சில நாள் இரவு 10 முதல் 12 வரையிலும், காலையில் 4 முதல் 5 மணி வரையிலும் இக்கோயிலில் ஒரு மணம் கமழுகிறது. இறைப்பற்று உள்ள சிலருக்கு வேல் போலவும் சிலருக்கு தீபம் போலவும் சிலருக்குச் சக்கரமாகவும், சிலருக்கு வாழைத் தண்டு விளக்குப் போலவும் பேரொளி தெரிந்து விக்கிரகத்தைச் சுற்றித் தீப ஆராதனைபோல வலம் வருகிறது.

சஷ்டி, கிருத்திகை, திங்கட்கிழமை ஆகிய நாள்களில் இந்தப்பேரொளி பெரிய உருவில் தெரிந்து, வடமேற்கேயிருந்து வந்து கலசத்தின் அருகே இறங்குகிறது.

சித்தையன் கோட்டை

இவ்வூர் அணையிலிருந்து திண்டுக்கல்லுக்குக் குடிநீர் வழங்கப் பெறுகிறது.

பொட்டிகாமன்வாடி

சம்பங்கி, கனகாம்பரம், சிவந்தி, செண்டு, மல்லிகை, மருகு, அரளி ஆகிய பூக்களும் தக்காளியும், நிலக்கடலையும் ஏற்றுமதியாகின்றன.

அம்பாத்துறை

இரயில்நிலையமும் சிறந்த கோழிப்பண்ணையும் உடைய ஊர். காந்தி கிராமத்தால் புகழ்பெற்றிருக்கிறது.

இவ்வூர் கடல் மட்டத்திற்குமேல் 300 மீட்டர் உயரத்தில் இருப்பதால் உடல் நலத்திற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது. 18-ஆம் நூற்றாண்டில் அம்பாத்துறை ஒரு பாளையமாக இருந்தது. அதில் சிறுமலையும் அடங்கியிருந்தது.

காந்தி கிராமம்

சிறுமலையின் அடிவாரத்தில் அமைந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைச் சூழலை உடைய ஊர் காந்தியடிகளின் கல்விக் கொள்கைகளையும் ஆக்கத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்காக 1947-ஆம் ஆண்டில் திருமதி. சௌந்தரம் இராமச்சந்திரன் இவ்வூரை படிப்படியாக உண்டாக்கினார். இங்குள்ள நிலையங்கள் ஒரு கிராமியப் பல்கலைக் கழகமாக உருவாகி வந்துள்ளன. இதைப்பற்றி இந்நூலின் முற்பகுதியில் கல்வி என்னும் தலைப்பில் விரிவாகக் கூறியுள்ளோம்.

காந்திகிராமக் கட்டடங்கள் இரயில் பாதையின் இரு பக்கங்களிலும் உள்ளன.

சர்வோதய முறையில் இங்கு ஒரு கூட்டுறவு பாங்கு இயங்கி வருகிறது.

பாறைப்பட்டி

இவ்வூருக்கும் தர்மப்பட்டிக்கும் இடையே இராமநாதபுரம் என்னும் சிற்றூர் இருக்கிறது. இராமநாதபுரத்துச் சேதுபதிகள் அனுப்பிய மறவர்படை தங்கியிருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கும். நாயக்க அரசர்களின் ஆட்சியில் திண்டுக்கல் சீமையில் பல போர்கள் நடந்தபோது அவர்களுக்கு ஆதரவாகச் சேதுபதிகள் படைகளை அனுப்பினர்.

செம்பட்டி

பழனிமலைத் தொடரைச் சார்ந்த இவ்வூரிலிருந்து பழனி, மதுரை, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய ஊர்களுக்குச் சாலைகள் பிரிகின்றன. திண்டுக்கல் இங்கிருந்து 15 கி. மீ., வத்தலக்குண்டு 19 கி. மீ.

செம்மண் பூமி. எனவே இங்குத் திராட்சை பெரிய அளவில் பயிராகிறது. விலையும் கொள்ளை மலிவு. மிகப் பெரியதொரு மின்சார நிலையம் இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இதையொட்டி இப்பகுதி எங்கும் மின்சாரப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இதைப் பற்றிய ஒரு நாட்டுப் பாடல்:—

"நீலகிரி ஓரத்திலே
நீட்டிவிட்டான் காந்தக்கம்பி
தொட்டாப் புடிக்குதடி
துடிகாரன் போட்டகம்பி
கோணூசி போல
கோயமுத்தூர் ஜில்லாகம்பி
கொள்ளைப் பணம் செலவழித்து
கொண்டு வந்தான் செம்பட்டிக்கே"

அம்மையநாயக்கனூரிலிருந்து திண்டுக்கல் சாலையில் 5 கி. மீ தொலைவு வந்து பிறகு மேற்கே திரும்பி செம்பட்டுக்குச் செல்ல வேண்டும். இவ்வழியே நேரே பழனிக்குச் செல்லலாம், ஒட்டன்சத்திரத்திற்குப் போய்த் தாராபுரம் வழியாகக் கோவைக்குச் செல்லவும் இது குறுக்கு வழியாகும். மேற்கண்ட எல்லா ஊாகளுக்கும் மதுரையிலிருந்து, திண்டுக்கல்லுக்குச் செல்லாமல் இவ்வழியைப் பயன்படுத்தலாம்.

சித்தரேவு

திண்டுக்கல்—அய்யம்பாளையம் சாலையிலுள்ள முக்கியமான ஊர் இதுவே. புன்செய்ப் பயிர் மிகுதி. ஊருக்கு வடக்கே தாண்டிக்குடி மலை இருக்கிறது. சித்தர்கள் வாழ்ந்ததால் சித்தரேவு என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

உடல் உறுப்புக் குறைந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நிலையம் ஒன்று இவ்வூரில் இயங்குகிறது.

வீரக்கல்

திண்டுக்கல்லிலிருந்து அய்யம்பாளையம் செல்லும் சாலையில் வடக்கே 8 கி. மீ. தொலைவிலும் காந்திகிராமத்திற்கு மேற்கே 13 கி. மீ. தொலைவிலும் உள்ள ஊர். ஏராளமான பொற்கொல்லர் உள்ளனர். வீரன் ஒருவனுக்கு நடுகல் நாட்டப்பட்டதாக ஊர்ப் பெயரிலிருந்து உணரலாம்.

வக்கம்பட்டி

சின்னாளப்பட்டியிலிருந்து 8 கி. மீ. தொலைவு. இவ்வூரிலும் சுற்றுவட்டத்திலும் ஒயில் கும்மி ஆட்டக்காரர்கள் உள்ளனர். இவர்களில் கிறித்தவராக உள்ளவர்கள் வேளாங்கண்ணி மாதாவைப் பற்றி ஒயில் கும்மி ஆடுவதற்குரிய பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

ஆத்தூர்

திண்டுக்கல்லிலிருந்து 15 கி. மீ தொலைவில் தென்மேற்கே குடகனாற்றின் கரையில், கீழ்ப் பழனிமலை அடிவாரத்தில் உள்ள ஊர். வாய்க்கால் வளத்தாலும் முத்தாளம்மன் கோயில் திருவிழாவாலும் புகழ் பெற்றது.

பஞ்சம்பட்டி

வெள்ளோடு இரயில் நிலையத்துக்கு அருகேயும் காந்திகிராமத்திலிருந்து வடமேற்கே 8 கி. மீ. தொலைவிலும் உள்ள ஊர். மக்கள் தொகை 6,000. சிவந்தி கனகாம்பரம் முதலிய மலர்கள், கரும்பு, நெல், வெங்காயம் மற்றும் சோளம், மணிலாக் கடலை, கம்பு, எள் இங்குப் பயிரிடப்படுகின்றன. வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவதில் இவ்வூரார் சிறந்து விளங்குகின்றனர். இதைக் குறித்து காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித்துறை ஆங்கிலத்தில் ஆய்வு நூல் வெளியிட்டுள்ளது.

19. ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்

காடுகளும் காப்பித் தோட்டங்களும் திராட்சைத் தோட்டங்களும் உடைய இந்த ஒன்றியம் குறிஞ்சி நிலப் பகுதியில் அமைந்தது. இரு பேரூராட்சிகள் உட்பட 24 ஊராட்சிகள் உள்ளன.

கன்னிவாடி

இவ்வூர்ப் பேரூராட்சியின் பெயர் சிரங்காடு. செம்பட்டியிலிருந்து ஒட்டன்சத்திரம் செல்லும் வழியிலுள்ள மலைவளம்மிக்க ஊர். வாழை, பலா, திராட்சை, ஆரஞ்சுத் தோட்டங்கள் உள்ளன. இங்கு விளையும் பொருள்கள் சிறுமலையில் விளையும் பொருள்களை விட இனிப்பு மிக்கன. சிறுமலையும் கன்னிவாடி மலையும் திண்டுக்கல்–மதுரை இரயில் பாதையின் எதிர்த் திக்குகளில் உள்ளன.

மலையடிவாரத்தில் சோளம் முதலிய புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மலைப்பகுதியில் காடுகளும் 6 கி. மீ. தொலைவுக்கு அப்பால் காப்பித் தோட்டங்களும் புகையிலை விளையும் கொல்லைகளும் உள்ளன. கன்னிவாடிப் பகுதியில் ரெட்டியார்கள் மிகுதியாக வாழ்கின்றனர். இங்கிருந்து திண்டுக்கல் 20 கி. மீ. செம்பட்டி 13 கி. மீ.

மதுரை மாவட்டத்தில் கன்னிவாடிதான் மிகப்பெரிய ஜமீனாக இருந்தது. யானைகள் மிகுந்த காடுகள் இருந்ததாயும் மைசூர்ப்படை இங்கு 18-ஆம் நூற்றாண்டில் மும்முறை படை எடுத்ததாயும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது.

கரிசல்பட்டி

கன்னிவாடி அருகே உளது. விளைபொருள்கள்; திராட்சை, வெங்காயம், பருத்தி, மிளகாய், நவதானியங்கள். கத்தோலிக்க வன்னியர் செல்வாக்கு இங்கே மிகுதி.

ரெட்டியார்சத்திரம்

திண்டுக்கல்-பழனிச் சாலையில் திண்டுக்கல்லிலிருந்து 15 கி. மீ. தொலைவில் இரயில் நிலையத்துடன் கூடிய ஊர்.

மூன்று கி. மீ. தொலைவில் கோபிநாத சுவாமி கோயில் உள்ளது. மலைமீது அமைந்த இக்கோயிலில் திருமால் கோபாலனாக அமைந்துள்ளார். கால் நடைத் தெய்வமாக இவர் போற்றப் படுகிறார்.

மாடுகன்றுகளின் உருவங்களை ஆயிரக்கணக்கான மண் பொம்மைகளாகச் செய்து காணிக்கை வழங்கும் வழக்கம் இப் பகுதியில் உண்டு. இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன்

அருளால் தங்களுடைய மாடு-கன்றுகள் வளமாக இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

பன்றிமலை

திருவிளையாடல் ஒன்று நிகழ்ந்த ஊர் இது. ஒரு வேளாளக் குடும்பத்தில் 12 குழந்தைகள் பிறந்தன. அன்பினால் பெற்றோர்கள் அவர்களை அவர்கள் மனம் போனவாறு நடக்க விட்டனர். அப் பிள்ளைகள் வேடரோடு கூடி ஒரு முனிவரின் தவத்திற்குஇடையூறு செய்தனர் அவர் மனம் நொந்து சபித்தார். அச்சாபத்தால் அப்பிள்ளைகள் பன்றியாயினர்.

ஒரு நாள் இராஜராஜபாண்டியன், தன் படைவீரரும் வேடரும் சூழ அந்தக் காட்டில் வேட்டையாடினான். காட்டில் விலங்குப் பதுமைகள் (பாவை விலங்குகளை) வைத்து ஓசை எழுப்பச் செய்தான். அந்த ஆரவாரத்தில் விலங்குகளெல்லாம் வெருண்டும் மயங்கியும் வெளிப்பட்டன. பன்றிகள், பாவை விலங்குகளைக் கண்டு நெருங்கி வலைகளில் வீழ்ந்தன.

பன்றி அரசன் பாண்டியனோடு போர் செய்து வீழ்ந்தான். அதைத் தொடர்ந்து போராடிப் பாண்டிய மன்னனை பணியாளர் தலைவனையும் வீழ்த்தினான். பிறகு பன்றி அரசியும் மடிந்தாள். இப்போரில் பன்றிகள் வீழ்ந்த இடமே பன்றிமலை.

தாய் தந்தையின்றிப் பன்றிகள் வாடியபோது பாண்டிய அரசன் மீனாட்சியம்மையாகிய இறைவியுடன் அங்கு எழுந்து அருளினார். அப்போது இறைவி அக்குட்டிகளின் முன் நின்று அவற்றின் தாயாக அவதரித்துப் பால் ஊட்டினார். அதன் பின்னர் முகம் மட்டும் பன்றி முகமாகவும் ஏனைய உறுப்புகள் மக்களுடைய உறுப்புகளாகவும் திகழ இறை அருள் புரிந்தது. இப் பன்றிக்குட்டிகள் பல்கலை அறிஞராய் விளங்கி அருள்பெற்று பாண்டியனின் அமைச்சராய் ஆயினர். எட்டுத் திக்கிலும் அவை பாண்டியருக்கு வெற்றி உண்டாக்கின.

திண்டுக்கல்லுக்கு மேற்கில் உள்ள இக்குன்றுகள் பன்றி நாடு என்றும் கூறப்படுகின்றன. பன்றிமலையும் பன்றிநாடும் காப்பித் தோட்டங்களும் வாழைத் தோட்டங்களும் நிறைந்து வளம் கொழிக்கின்றன.

திருவிளையாடல் புராணத்து நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப, இந்த ஊரினரான பன்றிமலை சுவாமிகள் அவர்கள் இறை அருள் பெற்று பல்கலை அறிஞராக எட்டுத்திக்கும் புகழ் பெற்று விளங்குகிறார். இவர் அருளாளர், சித்தர். தாம் விரும்பும் பொருள் குறித்து ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் கூட தட்டச்சுச் செய்த கட்டுரைகளை வரவழைக்க வல்லவர். ஒருவர் பிறந்த ஆண்டில் அச்சிடப்பெற்ற அமெரிக்க நாணயம் முதலியவற்றை நொடிப்பொழுதில் அவர் முன் காட்டும் ஆற்றல் பெற்றவர். ஸ்ரீ-ல-ஸ்ரீ. பன்றிமலை சுவாமிகள் அவர்களின் ஆசிரமம் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ளது.

இப்பகுதியிலுள்ள கோவிலூர் ஊரினரும் அருட்கவிஞரும் பெரும்புலவருமான திரு. அரங்கசீனிவாசன் இந்நூலாசிரியருக்கு எழுதியிருப்பதை இனிக் கூறுவோம்.

கோடைப் பொருநன் பண்ணி

"திண்டுக்கல்லுக்குத் தெற்கே மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கோடைமலை (கோடைக்கானல்) உள்ளது."

சங்ககாலத்தில் இங்குப் "பண்ணி" என்னும் வீரவள்ளல் ஒருவன் இருந்தான். அவனைப் பற்றிப் பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் ஒருபாடலில் குறிப்பிட்டுள்ளார். (புறம் 205)

முத்துமாலையும் சந்தனமாலையும் அணிந்த பாண்டிய மன்னனுக்கும் படைத்துணையானவன். வரைநிலை இன்றி இரவலர்க்கு ஈயும் வாள்வாய் அம்பின் கோடைப் பொருநன் பண்ணி என்கிறார் சாத்தனார்.

இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் கோடைமலையின் ஒரு பகுதி பண்ணிமலை என அழைக்கப்பெற்றது.

"ஆனால் பிற்காலத்தார் இவ்வரலாற்றினை அறியாமையால் பண்ணி மலையைப் பன்றிமலை என வழங்கலாயினர். வடமொழியாளர் பன்றிமலை எனவே கொண்டு வராககிரி எனத்தம் மொழியில் அழைத்தனர். இம்மலையில் ஆடலூர் என்னும் ஊர் உள்ளது. ஆதலால் ஆடலூர் பன்றிமலை எனச் சேர்த்தே வழங்குகின்றனர். பண்ணியினுடைய வெற்றிக்கு அடையாளமாக அவ்வூர் ஆடலூர் என அழைக்கப் பெற்றிருக்கலாம். (ஆடல்-வெற்றி)"

ஊர்ப் பெயர்கள்

இந்த ஒன்றியத்தில் உள்ள சில ஊர்களின் பெயர்கள் காரணப் பெயராக இருக்கவேண்டும். ஊர்ப்பெயர் ஆராய்ச்சியில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு இப்பகுதி ஒரு சுரங்கமாகும்.

ஆடலூரர், அழகுப்பட்டி, அம்மாபட்டி,
அனுமந்தராயன்கோட்டை, தர்மத்துப்பட்டி,
கோடல்வாவி, குருநாதநாயக்கனூர், காமாட்சிபுரம்,
கொத்தப்புளி, கரிசல்பட்டி, கசவணம்பட்டி,
குட்டத்துப்பட்டி, மாங்கரை, நீலமலைக்கோட்டை,
பழக்கனூற்று, பண்ணைப்பட்டி, பொன்னுமாந்துறை,
புதுச்சத்திரம், புதுப்பட்டி, கே. புதுக்கோட்டை,
சில்வார்பட்டி, சுள்ளெறும்பு.

20. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்

திண்டுக்கல் நகரை அடுத்தும் சிறுமலைச் சரிவிலும் இந்த ஒன்றியத்தின் 21 சிற்றூர்கள் உள்ளன. பல ஊர்களுக்குத் திண்டுக்கல் நகரப் பேருந்துகள் செல்லுகின்றன. ரெட்டியார் பட்டியிலிருந்து சிறுமலைக்கு 19 கி. மீ. தொலைவுக்கு மலைச்சாலை போடப்பட்டிருக்கிறது. நத்தம் – பழனிச்சாலை இந்த ஒன்றியத்தின் மற்றொரு முக்கிய சாலையாகும். இந்த ஊராட்சி ஒன்றியத்திற்குச் சிறந்த ஒரு கட்டடம் இருக்கிறது. திராட்சைப் பழச் சாகுபடி இவ்வொன்றியத்தை வாழ வைக்கிறது.

எமக்கலாபுரம்

சிறுமலைச் சரிவில் உள்ளது. அடம்பிடித்த குதிரையை அடக்கியவருக்கு இவ்வூர் ஒரு பாளையமாக வழங்கப்பெற்றதாம்.

மடூர்

இவ்வூரும் 18-ஆம் நூற்றாண்டில் ஒரு பாளையத்தின் தலைநகராய் இருந்தது. ஊர் அருகே ஓர் இராமநாதபுரம் இருக்கிறது, இராமநாதபுரம் சேதுபதி 18-ஆம் நூற்றாண்டில் அனுப்பிய படைவீரர்கள் இங்கே தங்கியிருக்க வேண்டும். இந்த இராமநாதபுரத்திற்குக் கிழக்கே ஒரு பாறையில் மாறன்சடையன் என்ற பாண்டிய அரசனின் கல்வெட்டுக் காணப்படுகிறது

மருனூத்து

இதுவும் முன்னளில் ஒரு பாளையமாக இருந்தது. நீர் மிகுதியால் 'ஊற்று' என்னும் ஈற்றுச்சொல் இவ்வூருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

தவசிமடை

இவ்வூர் பாளையக்காரர் தவமிருந்து அந்தத் தவத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வூரை உண்டாக்கியதாகக் கூறுவர் குறிப்பிடத்தக்க ஊர்ப்பெயர்கள் வருமாறு:- கூவனூத்து, ராகளாபுரம், ராஜக்காபட்டி, சிலுவத்தூர், வீரச்சின்னம்பட்டி பஞ்சம்பட்டி, கணவாய்ப்பட்டி, திம்மணநல்லூர், வஜ்ஜிரசேர்வைக்காரன் கோட்டை, அஞ்சுகுழிப்பட்டி, கோம்பைப்பட்டி, வேம்பார்பட்டி, கானப்பாடி.

VIII வேடசந்தூர் வட்டம்

இது இம்மாவட்டத்தின் வட கோடியில் உள்ளது. குடகனுறு இங்கு பாய்கிறது. வேடசந்தூர், வடமதுரை, பாளையம் என்ற ஒன்றியங்கள் இவ்வட்டத்தில் உள்ளன. பெரியார் மாவட்டத்தின் எல்லையில் இந்த ஒன்றியம் இருக்கிறது.

திண்டுக்கல்-கரூர் இரயில் பாதை ஏற்பட்டால் இவ் வட்டம் வளர்ச்சி பெறும். வியாபாரம், திருமண உறவு முதலிய யாவும் இவ்வட்டாரத்தினர்க்குக் கொங்கு நாட்டுடன்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன.

குடகனுறு என்னும் காட்டாற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் 1977-ஆம் ஆண்டில் இந்த வட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டது. அத்தகைய வெள்ளம் ஓராயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே ஏற்படக்கூடியது என்கின்றனர். இந்த அணை, புதுப்பித்துக் கட்டப்படவேண்டும்.

திண்டுக்கல்லுக்கு மேற்கேயும் வடக்கேயும் உள்ள கொங்கு நாட்டுப்பகுதிகள் வேடசந்தூர் வட்டம் என்றதனித் தாலூகாவாக ஆக்கப்பட்டன. இங்கு வெங்காயம் அதிகமாகப் பயிராகிறது பிற விளை பொருள்களில் நிலக்கடலை குறிப்பிடத்தக்கது. தரத்தில் சிறந்த வர்ஜீனியா புகையிலை இப்பகுதியில் பயிராகிறது. எனவே ஸ்பென்சர் கம்பெனியார் திண்டுக்கல்லில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுருட்டுத் தொழிற்சாலையைத் தொடங்கினர்,

மண்வளம் குறைந்த இப்பகுதியில் கிணற்று இறைவையை நம்பியே மக்கள் வாழ்கின்றனர். மழை பெய்யாத ஆண்டுகளில் உழவர் படும் பாடு எழுத்தில் வடிக்க இயலாதது.

21. வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம்

இரயில் போக்குவரத்து முதலிய வசதிகள் எதுவுமின்றி மாவட்டத்தின் வட கோடியில் இந்த ஒன்றியம் அமைந்து இருக்கிறது. கரூரிலிருந்து திண்டுக்கல்லை இணைக்க அகல இரயில் பாதை அமைக்கப்பெற இருப்பதால் இவ்வொன்றியத்திற்குச் சிறந்த எதிர்காலம் உண்டு.

ஒன்றியத்தின் வட கோடியிலுள்ள மக்களுக்குப் பெரும்பாலும் கரூருடன்தான் தொடர்பு இருக்கிறது. திருச்சி, கோவை மாவட்டங்களின் எல்லையில் இருப்பதால் இங்குக் கவுண்டர்கள் சில ஊர்களில் தொகையாகவும் செல்வாக்குடனும் வாழ்கின்றனர். ஆங்காங்குச் சிறிய மலைகள் உள்ளன. குடகனாறு என்னும் காட்டாறு இங்குப் பாய்கிறது. இவ்வொன்றியத்தின் வழியாகக் கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு இரு சாலைகள் உள்ளன. ஒன்று வேடசந்தூர் வழியாக அமைந்த தேசிய நெடுஞ்சாலை. மற்றொன்று எரியோடு, பாளையம் வழியாகச் செல்லும் சாலை.

வேடசந்தூர்

இவ்வொன்றியத்தில் இந்தப் பேரூராட்சியும் 23 சிற்றூர்களும் உள்ளன. திண்டுக்கல் – கரூர்ச்சாலையும் பழனியில் இருந்து வடமதுரைக்குச் செல்லும் சாலையும் சந்திக்கும் இடத்திலும் குடகனாற்றின் கரையிலும் இருப்பதால் இது சிறு நகரமாக வளரக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

இங்கு வாழ்ந்த வேடர்களின் சந்தை கூடியதால் வேடசந்தையூர் எனப் பெயர் ஏற்பட்டு அச்சொல் வேடசந்தூர் எனத் திரிந்தது என்கிறார்கள்.

உயரமான ஒரு கோட்டையின் இடிபாடுகள் இங்கு உள்ளன. அக்கோட்டை அருகே ஹசரத் ஸையது அரபு அப்துர் ரஹிமான் ஆலியா என்ற பெரியாரின் தர்கா இருக்கிறது. அவரைப் பற்றிப் பல அருட்செயல்கள் கூறப்படுகின்றன.

தஞ்சை, புதுக்கோட்டை அரசர்கள் தங்கள் ஆட்சிக் காலங்களில் பழனிக் கோயிலுக்குக் காவடிகளையும் தங்கள் காணிக்கைகளையும் ஆண்டு தோறும் அனுப்பி வைத்தார்கள்; குறிப்பிட்ட நாளில் பஜனைக் குழுக்களுடனும் கரக ஆட்டக்காரர்களுடனும் இந்தக் கூட்டங்கள் வேட சந்தூரில் கூடி இவ்வூரைத் திருவிழா நகராக்கின. அந்த ஊர்வலக்காரர்கள் இங்கு ஓரிரு நாள் தங்கிச் செல்வதும் வழக்கமாயிருந்தது.

புகையிலை பயிரிடுவதில் வேடசந்தூர் தலைமைதாங்குகிறது. இந்திய அரசின் புகையிலை ஆராய்ச்சிக்கூடம் இங்கு இருக்கிறது.

எரியோடு

திண்டுக்கல்–கரூர்ச் சாலையும் பழனி–வேடசந்தூர் வட மதுரைச் சாலையும் கூடுமிடம். திண்டுக்கல்லுக்கு வடகிழக்கே 19 கி. மீ. மலைப்பகுதிகள் உட்பட 12 ஊர்கள் அடங்கிய ஒரு பாளையத்தின் தலைநகராய் இருந்தது.

கோவில்பட்டி

காசிபாளையத்துக்குத் தெற்கே 2 கி. மீ. தொலைவிலானது. பழமையான பெருமாள்கோயில் இங்கு உண்டு. பாண்டியர் காலத்தது என்பர். அந்நாளில் இங்கு கோட்டை ஒன்று இருந்ததற்குச் சான்றாக சிதைந்த செங்கற்கள் நிரம்பிய மேட்டுப் பகுதிகள் ஆங்காங்கு காட்சியளிக்கின்றன.

காசிபாளையம்

வேடசந்தூரிலிருந்து 9 கி. மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரையொட்டிச் செல்லும் திண்டுக்கல்–கரூர் நெடுஞ்சாலையில் கிராமக் கைத்தொழிற் கூடம் காந்தியடிகள் பெயரால் நிறுவப் பெற்றுளது. இங்கு இராட்டை நூற்று, இந்நகரத்துப் பெண்கள் வருவாயைத் தேடிக் கொள்ளுகின்றனர்.

திரு. குப்புசாமிக்கவுண்டர் சுதந்தரப் போராட்டத்தின் போது சிறை சென்றவர். கல்வி நிலையங்களின் தொண்டிற்காகத் தன்னுடைய நிலங்களை, கொடையாகக் கொடுத்தவர். கதர்த் தொழிலுக்கு ஊக்கம் காட்டுபவர்.

இங்கு, கொங்கு–வேளாளக் கவுண்டர்கள் மிகுதி. இவர்கள் வேளாண்மையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள்.

பிற ஊர்கள்

நாகையகோட்டை, புதுக்கோட்டை, மல்லார்பட்டி, தட்டாரப்பட்டி, நத்தப்பட்டி, உசிலம்பட்டி, குடம்பம், கோவிலூர், குட்டம்.

ரங்கமலை

பள்ளப்பட்டி வழியாகத் திண்டுக்கல்லிலிருந்து கரூருக்குச் செல்லும் சாலையில் கல்வார்பட்டிக்கும் பள்ளப்பட்டிக்கும் நடுவே சாலையின்மேற்புறம் ரங்கமலை உள்ளது. கூம்பு வடிவமான இம்மலை இப்பகுதி மலைகளிலேயே மிக உயரமானது. மலையின் உச்சியில் விளக்குக் கம்பம் உள்ளது. மலையுச்சிக்குச் சற்றுக்கீழே சிவன் கோயில் இருக்கிறது. இறைவன் பெயர்–மல்லீசுவரர். கோயில் சற்றுப் பெரியது. நாள்தோறும் பூசை உண்டு. அருச்சகர்கள் ஒவ்வொரு நாளும் காலையில் மலைமேல் ஏறி மாலைவரை இருந்து பூசைகளை முடித்துவிட்டு இறங்கி வருகின்றனர். செங்குத்தான இம்மலைக்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் மலை ஏறுவது கடினமே. அதைப் பொருட்படுத்தாது நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் மலைக்குச் சென்று இறைவனை வழிபட்டு மீளுகின்றனர். சிலர் இரவு அங்கேயே தங்கி மறுநாள் இறங்குவர். இந்த மலையில் நல்ல மூலிகைகள் இருப்பதால் இங்குத் தங்கினால், பல பிணிகள் தீருவதாக நம்புகின்றனர். அதனால் இந்த மலைமீதே சிலநாள் தங்குபவர்களும் இருக்கிறார்கள்.

இக்கோயில் மிகப் பழமையானது. கோயில் சுவரில் மீன் சிற்பம் இருப்பதால், பாண்டியர் இக்கோயிலைக் கட்டியதாகக் கருதலாம். மலை செங்குத்தானது; மூன்று கி. மீ. தொலைவுக்குப் படிகள்மீது நடந்து செல்லவேண்டும்.

22. வடமதுரை ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியம் திருச்சி மாவட்ட எல்லையில் அமைந்தது. வடமதுரை, அய்யலூர் என்னும் இரு பேரூராட்சிகளையும் 13 சிற்றூர்களையும் உடையது. இரயில் பாதையும் திண்டுக்கல்–திருச்சி தேசிய நெடுஞ்சாலையும் இவ்வழியாகச் செல்லுகின்றன. இங்குள்ள மக்களுக்கு மணப்பாறையுடனும் திருச்சியுடனும் வணிகத் தொடர்பு மிகுதி. இவ்வொன்றியத்தின் கிழக்குப் பகுதியில் செங்குத்தான மலைகள் உள்ளன. அவற்றில் பல, நத்தம் மலையின் தொடர்ச்சியாக அமைந்தவை. ஒன்றியத்தின் பரப்பு 266 ச. கி. மீ. மக்கள் தொகை 75,000.

பெரிய பாசன வசதிகள் இல்லாததால் புன்செய் வேளாண்மையே மிகுதி. செம்மறி ஆடு, கோழி வளர்ப்பு போன்ற வேளாண்மை துணைத் தொழில்கள் பெருகியுள்ளன.

ரெட்டியார், நாயக்கர், கவுண்டர், முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர் வாழ்கின்றனர். கிராம தேவதையான ஐயனாரின் பெயர்களில் ஒன்றான ஆதினமிளகி என்ற பெயர் இங்கு பரவலாக இடம்பெறுகிறது.

ஊர்ப் பெயர்களில் நம் சிந்தனையைக் கவர்பவை:— வேல்வார்கோட்டை, பிலாத்து, சிங்காரக்கோட்டை வேலாயுதம்பாளையம், தென்னம்பட்டி, மோர்பட்டி, சித்துவார்ப் பட்டி, கொம்பேரிப்பட்டி, பாகாநத்தம், பாடியூர், புத்தூர்.

வடமதுரை

இவ்வூர் திண்டுக்கல்லுக்கு வடபால் 18 கி. மீ தொலைவில் உளது; வடமதுரைக்கு வடக்கே மான்கொம்புமலையும் தெற்கே வற்றாத நீரூற்றுடன் கூடிய ஊற்றங்கரையும் கிழக்கு எல்லையாக முடிமலையும் மேற்கே புகழ்பெற்ற அக்கம்மாள் கோயிலுடன் கூடிய பாடியூரும் இருக்கின்றன.

இப்பகுதி செம்மண்பிரதேசம்; எனவே கேணிகள் உள்ள நிலபுலங்களில் தோட்டப் பயிர்களும் நெல் சாகுபடியும் நடைபெறுகின்றன. துவரை, வேர்க்கடலை உற்பத்தியும் உண்டு.

இது, ஒன்றியத்தின் தலைமை அலுவலகம் உள்ள ஊர். இரயில் நிலையம் உண்டு. திருச்சிப் பக்கத்திலிருந்து மதுரைக்குச் செல்லுபவர்களுக்கு வாயிலாக அமைந்ததால் வடமதுரை எனப் பெயர் ஏற்பட்டது போலும்.

இவ்வூரில் அளித்தல் தெய்வமாகிய சௌந்தரராசப் பெருமாளின் கோயில் ஒன்று அழகுபெற அமைந்திருக்கிறது இதில் ஆடிப்பெரு நிலவில் தேர்த் திருவிழா நிகழுகிறது. இவ்வூர் மாட்டுத்தாவணி புகழ்பெற்றது.

இவ்வூருக்கு விடாய்நகர் என்னும் பெயர் உண்டு. மக்கள் தொகை 10,000. செங்கற்பட்டு மாவட்டம் பெரியபாளையத்துக்கு அருகேயும் ஒரு வடமதுரை உளது.

அய்யலூர்

மக்கள் தொகை 8,000. இரயில் நிலையம் உண்டு.

சுக்காம்பட்டி

அய்யலூருக்கு 3 கி. மீ. அப்பால் ஒன்றியத்தின் வடகோடியில் உள்ளது. திண்டுக்கல் சீமையின் பழைய பாளையங்களுள் இதுவும் ஒன்று.

23. பாளையம் ஊராட்சி ஒன்றியம்

மதுரை மாவட்டத்தில் வடகோடியில் முப்புறம் திருச்சி மாவட்டம் சூழ அமைந்தது. இந்தப்பகுதி 1935-இல் திருச்சி மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு 1946-இல் மீண்டும் மதுரை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இவ்வொன்றியத்தில் இராமகிரிக் காடுகள் உள்ளன. இக் காடுகள் வழியே மதுக்கரைப்பாதை செல்லுகிறது. இது இந்த ஒன்றியத்தின் கிழக்கு எல்லையாக இருக்கிறது. இன்னும் வடக்கே இப்பாதை சேர நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் எல்லையாக இருக்கிறது.

இந்த ஒன்றியத்தின் தென்பகுதிக்கு மட்டும் வேடசந்தூர், வடமதுரை ஒன்றியங்களுடன் தொடர்பு உண்டு. வடபகுதியின் கிழக்கேயுள்ள பகுதிகள் 1948 வரை புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஆட்சியில் இருந்தன. அந்தத் தொடர்பால் இந்த ஒன்றியத்திலும் புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் ஆகிய பெயர்களுடன் ஏற்பட்ட ஊர்களைக் காண்கிறோம்.

பாளையம் பேரூராட்சி உள்ள ஊர்

கரிக்காலி, வடுகம்பாடி, வாணிக்கரை, கூம்பூர், கருங்கல், உல்லியகோட்டை, லத்தகோட்டை, ஆலம்பாடி, கோட்டாநத்தம் வெள்ளோடு, சின்னுலுப்பை என்னும் ஊராட்சிகளின் பெயர்களும் இந்த ஊர்களைச் சேர்ந்த மலைவாடி நாயக்கனூர். காஞ்சா நாயக்கன் தோட்டம், மாதாநாயக்கனூர், ஜெக்கலப்ப நாயக்கன்பட்டி, வசவநாயக்கன்பட்டி, பேரநாயக்கன்பட்டி, பில்லம நாயக்கன்பட்டி, மடையப்ப நாயக்கன்பட்டி குப்பாகவுண்டனூர், குமுதாக்கவுண்டனூர், தளும்பக்கவுண்டனூர்,

கவுண்டன்புதூர், நல்லா கவுண்டன்பட்டி, துலுக்கன்பாறை, தோளிப்பட்டி என்னும் சின்னஞ்சிறு ஊர்களின் பெயர்களும் குறிப்பிடத் தக்கன.

புலியூரிலுள்ள செட்டிநாடு சிமெண்டு ஆலை வரைக்கும் சிறு இரயில் பாதை அமைத்து அதன் வழியே பாளையத்துக்கு அருகே கிடைக்கும் ஜிப்சம் கல்லை வெட்டியெடுத்து இரயிலில் அனுப்புகின்றனர்.

பாளையம் என்னும் பொருளையுடையது பாடி. இப்பகுதியில் முள்ளிப்பாடி, தாமரைப்பாடி, பாடியூர் எனவழங்கும் பலஊர்கள் உள்ளன. கரூர் சேரர் தலைநகரமாக இருக்கையில் பாண்டியர்க்கும் சேரர்க்கும் அடிக்கடி போர் மூண்டது. அப்போது இருதரப்புப் படைகளும் தங்கிய இடங்கள் பாளையம் அல்லது பாடி எனப் பட்டன. எரியோடு, வெள்ளோடு என்னும் ஊர்களும் உண்டு ஓடு என்பது ஓடையாகும்.

ஊரெல்லாம் பட்டி தொட்டி
உண்பதோ கம்பு சோளம்
பேரெலாம் பொம்மன் திம்மன்
பெண்களோ நாயும் பேயும்
நீரெலாம் சேற்று நாற்றம்
நிலமெலாம் கலலும் முள்ளும்
காருலாம் கொங்கு நாட்டைக்
கனவிலும் கருதொணுதே

எனக் கம்பன் பாடியதாக ஒரு பாடல் உண்டு. அது இப் பகுதியைப் பற்றியதே. இங்குள்ள ஊர்கள் பெரும்பான்மை பட்டிகளாகவே உள்ளன. மக்களின் முக்கியஉணவு கம்பு சோளமே. மக்கள் பெயரும் பொப்பாளன், சிக்காளன், போரன், ஆவளி, சவடமுத்து, சங்கர், பொன்னர், யோரக்கா, ஆலக்கா, என்றே உள்ளன. இப்பகுதியில் பல குடும்பங்கள் பெண்கள் பெயர் கொண்டே அழைக்கப் பெறுகின்றன. ஆலக்காவீடு, நாகம்மா வீடு, பொன்னக்காவீடு என்பதே பெருவழக்கு. கிணற்று நீரே குடிநீர். ஆகையால் சவறு நாற்றம் இருக்கும். எங்கும் கற்காடுகளே. மழையை நம்பிய பகுதியாதலால் அரசாங்கத்தினரே உழவர்க்குக் கிணறுகள் வெட்டித் தரலாம், வட்டியில்லாத கடன் வழங்கலாம். மக்கள் நல்ல உழைப்பாளிகள் ஆதலால் நீரும் வசதியும் இருந்தால் வறண்ட நிலத்திலேயே பொன்னை விளைவித்து விடுவர். ஆனல் இப்பகுதி புறக்கணிக்கப்

பட்டே உள்ளது. இங்கு படித்தவர் தொகையும் மிகக் குறைவு. எனவே உரிமைகளைப் போராடிப் பெறவேண்டும் என்பதை இம்மக்கள் அறியார். கன்னடம் பேசும் காபிலியக்கவுண்டர் களும் தெலுங்கு பேசும் நாயக்கர், ரெட்டி, தெலுங்குச் செட்டி போயர் முதலிய பல இனத்தவரும், சான்ருர், பிள்ளை, முத்தரையர் முதலிய தமிழ் நாட்டிலுள்ள எல்லா இனத்தவரும் வாழ்கின்றனர். அரிசனங்களைத் தவிர, பிறவகுப்பினர் எல்லாரும் வேற்றுமையின்றி மாமன் மைத்துனன் அண்ணன் தம்பி, அக்கா தங்கை முதலிய உறவுமுறை சொல்லிப் பழகுவது இப்பகுதியின் தனிச்சிறப்பு.

இப்பகுதி மக்கள் பெரியவர்களையும் மற்றையோரையும், தாய் தந்தையரையும் – ஏன் எல்லோரையுமே – நீ என்றே அழைப்பர். நீங்கள் என்று மரியாதையாகப் பேச அறியார்.

வேட்டையாடுவதில் விருப்பம் உள்ளவர்கள். முயல் வேட்டைக்கு மாசிமாதம் முதல்முதலில் புறப்படுகையில் மேள தாளத்துடன் கருப்பணசாமிக்கு வழிபாடு நடத்திவிட்டுப் புறப்படுவர். பெருச்சாளி வேட்டை, ஈசல்பிடித்தல், அணில் வேட்டை முதலியனவும் இவர்களுக்கு விருப்பமானவை.

குருடன் பாறை

கரூர்-திண்டுக்கல் சாலையில் குஜிலியம்பாறைக்குக் கிழக்கே குருடன் பாறை என்னும் குன்று ஒன்று உள்ளது. அதன் பெயர்க் காரணத்துக்கு ஒரு கதை வழங்கப்படுகிறது குருடன் ஒருவன் மலைமேல் இருந்து இனிய இசையுடன் பாடிக் கொண்டிருந்தான். கணவனும் மனைவியுமாக அவ்வழியே இருவர் வந்து கொண்டிருந்தனர். அக்குருடன் இசையில் மயங்கிய மனைவி, அவன் பேரழகனாக இருப்பான் எனக்கருதி அவன்மேல் ஆசை கொண்டாள். பக்கத்தில் உள்ள கிணற்றில் தன்கணவனைத் தண்ணீர் கொணரச் சொல்லி, அவன் தண்ணீர் முகக்கும்போது பின்னாலிருந்து அவனைக் கிணற்றுக்குள் தள்ளிக் கொன்றுவிட்டு. நேரே இசைபாடியவனிடம் சென்றாள். அங்குப் பார்க்கையில் இசைபாடியவன் குருடன் என்பதை அறிந்து மிகவும் வருந்தினாள். ஆயினும் என் செய்வாள்; கணவனும் இறந்துவிட்டான். ஆதலால் அக்குருடனையே கணவனாக ஏற்று, அவனுடன் ஊர் தோறும் பிச்சையெடுத்து வரலானாள். குருடன் இசைபாடிய பாறையாதலால் அது குருடன் பாறை என வழங்கலாயிற்று.

கீருங்கல்

இக்கிராமத்தின் எல்லையில் உள்ள தேவர்மலை என்னும் இடத்தில் இடுப்பளவு தண்ணீரில் நின்று வருணஜபம் செய்து திருமால் தன் பாவத்தைப் போக்கிக் கொண்டதாகவும், பாளையத்தைச் சேர்ந்த இராமகிரியை அடைந்து கல்யாண நரசிம்மராகக் காட்சி தருகிருர் என்றும் தேவர்மலை நீரூற்றில் நீராடி இறைவனை வழிபட்டால் அரசாங்க ஊழியர்கள் வேறு ஊர்களுக்கு வேலைமாறுதல் பெறுவதாகவும் கூறுகிருர்கள்.

பாளையம்

இப்பேரூர் திண்டுக்கல்லுக்கு வடக்கே 38 கி.மீ. தொலைவில் கரூர்ச் சாலையில் இருக்கிறது. ஊரின் முக்கிய பகுதி குஜிலியம் பாறை என்பது.

சிறுசிறு குன்றுகளும் அவற்றின் அடிவாரத்தில் பள்ளத் தாக்குகளும் உள்ளன. கவுண்டர் சமூகத்தினர் மிகுதியாக வாழ்கின்றனர். கேழ்வரகு, சோளம், சாமை, கடலை வேளாண்மை மிகுதி.

இராமகிரி

கரூர் – திண்டுக்கல் (குஜிலியம்பாறை வழி) சாலைக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. இங்கு கல்யாண நரசிம்மசுவாமி கோயில் உள்ளது. சிலவீடுகளே உள்ள இச் சிற்றூரில் பங்குனிமாதம் நடைபெறும் உத்தரத் திருவிழாவில் பல்லாயிரம் மக்கள் கூடுவர். அறநிலையத் துறையினரின் பொறுப்பிலுள்ள கல்யாண நரசிம்மர் கோயிலில் திருமணங்கள் பல நடைபெற்று வருகின்றன.

இராமகிரி சுமார் ஐந்நூறு ஆண்டுகட்குமுன் சாமா நாயக்கர்கள்என்ற சிற்றரசர்களுக்குத்தலைமையகமாக விளங்கியது இப்போதும் அரண்மனைக் கோட்டையின் இடிந்த சுவடுகள் காணப் பெறுகின்றன. இவ்வூரின் அருகிலுள்ள குன்றின்மேல் வெள்ளைக்கோட்டை என்று வழங்கப் பெறுகின்ற கோட்டை ஒன்று உள்ளது. அங்குச் செங்கற்களால் கட்டப்பெற்ற தர்பார் மண்டபத்தின் நாற்புறச் சுவர்கள் இன்றும் உள்ளன. அம் மண்டபத்தின் அடியில் சுரங்கம் போன்ற அமைப்பு உள்ளது. அதனுள் சென்று காண வசதியில்லை. புதர் அடர்ந்த இடம் ஆகையால் இவ்விடத்திற்குச் செல்வது சிறிது கடினம்.

இராமகிரியை ஆண்ட மன்னர்களைப் பற்றிய சுவையான சிலவரலாறுகள் இப்பகுதியில் வழங்குகின்றன.

இரும்பு முறுக்கிச் சாமா நாயக்கன் என்பவன் ஒருவன் உடலாற்றல் மிக்கவன். யானையைக் கூடத் தன்கையால் பிடித்து இழுக்க வல்லவன். தன் உடலாற்றல் குறையாமல் உள்ளதா என்று அன்றாடம் தெரிந்து கொள்ள ஒரு விநோதமான முறையைக் கையாண்டான்.

ஒவ்வொரு நாளும் உணவருந்தச் செல்லுமுன்பு ஓர் இரும்புக் கடப்பாறையை எடுத்துக் கையால் வளைத்த பிறகே உணவு கொள்வான். கடப்பாறையை வளைத்து விடுவதால் தன் ஆற்றல் குறையவில்லை என்று அவன் மனநிறைவு பெறுவான்.

தலைவெட்டிச் சாமா நாயக்கன் என்பவன் இன்னொருவன். இவன் வரலாறு பயங்கரமானது. இவனுக்குப் பிள்ளைப்பேறு இல்லை. இதனால் மனமுடைந்து யாரோ ஒரு சோதிடனை அழைத்து, தனக்கு பிள்ளைப்பேறு கிட்ட வேண்டுமாயின் என்ன செய்யவேண்டும் என்று வினவினான்.

அந்தச் சோதிடன் ஒவ்வொரு நாளும் யாருக்காவது விருந்திட்டுச் சாப்பிட்டால் பிள்ளைப்பேறு உண்டாகும் என்று சொல்லக்கருதி: ''ஐயா! நாடோறும் ஒருதலை கண்டபிறகே சாப்பிட வேண்டும்'' என்று கூறினான். விருந்திட்டுச் சாப்பிட வேண்டும் என்று பொருள்படப் பேசிய சோதிடன் உரையைத் தவறாகப் புரிந்து கொண்ட சாமா நாயக்கன், அன்று முதல் யாரையாவது வெட்டித் தலையைக் கொணரச் செய்து, அத் தலையைக்கண்டபிறகே சாப்பிடும் வழக்கத்தைமேற்கொண்டான்.

இராமகிரிக்குக் கிழக்கே அருகில் உள்ள தொப்பையசாமி மலையில் தலைவெட்டிப் பாறை என ஓர் இடம் இன்றும் உள்ளது. அவ்விடத்தில்தான் தலைவெட்டப் பட்டதென்று கூறுகின்றனர். யாராவது வேற்றூர்க்காரனைக் கண்டால் அவனைப் பிடித்துவர ஏவலர்களை நியமித்திருந்தானும்.

காலப்போக்கில் தான்செய்தது தவறு என்று அறிந்த தலைவெட்டி சாமாநாயக்கன் பிராயச் சித்தமாகச் சுற்றிலுமுள்ள பல ஊர்களில் பெருமாள் கோவில்களை ஏற்படுத்தி அவற்றிற்கு மானியங்களாக நிலங்களை விட்டுள்ளான்.

இராமகிரியிலுள்ள கோயிலும், கோவிலூர், நல்லூர், வெம்பூர் முதலிய ஊர்களிலுள்ள கோயில்களும் அவன் கட்டியவையே. எல்லாக் கோயில்களுக்கும் மானியங்கள் உண்டு.

இவன் மரபைச் சேர்ந்த முத்துமீனம்மாள் என்பவள் கோவிலூரில் சத்திரம் ஒன்று கட்டியுள்ளாள். அது இன்றும் நல்ல நிலையில் உள்ளது. அச்சத்திரத்தில் பஞ்சாயத்து அலுவலகமும், மின்வாரிய அலுவலகமும் உள்ளன.

சாமா நாயக்கன் மரபைச் சேர்ந்த பல்லி (பழனி என இருக்கலாம்) நாயக்கன் என்பவன் இராமகிரியிலிருந்து பழனி வரையிலும் சிலகல் தொலைவுக்கு ஒன்ருகப் பல சத்திரங்களைக் கட்டியிருக்கிருன்.

இன்றும் அச்சத்திரங்களின் இடிபாடுகள் ஆங்காங்கே தென்படுகின்றன.

தொப்பைய சாமிமலை

முன்னுளில் பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் எல்லையாக ஒரு கரையமைக்கப் பட்டிருந்தது. அது இன்றும் மதில்கரை (மதுக்கரை) என வழங்கப் பெறுகிறது. அக்கரையின் சுவடுகள் இன்றும் காணப்படுகின்றன. கரூர்–திண்டுக்கல் சாலைக்குக் கிழக்கேயுள்ள தொப்பையசாமி மலையின் நடுஉச்சியில் அந்த எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. உச்சியில் ஆங்காங்கே எல்லைக்கற்கள் வரிசையாக நடப்பட்டுள்ளன.

தொப்பைய சாமிமலை தெற்கு வடக்காக சுமார் பத்துக் கல் நீளமுள்ளது. மிகஉயரமானது. வளமும் உடையது. இங்குபல ஊற்றுகள் உள்ளன. ஆகாயஊற்று என்னும் ஊற்றில் வறண்ட கோடையிலும் நீர் ஊறிவருகின்றது.

புகுந்துகுடி ஊற்று என ஒன்று உண்டு. ஒருவர்தலை மட்டும் நுழையக்கூடிய சிறுகுகை போன்ற இடம் உள்ளது. அதனுள் தலையை விட்டுக் குனிந்து பருகினுல் நீர் சுரக்கிறது. இம்மலையில் வரையாடு, கழுதைப்புலி, காட்டெருமை, அழுங்கு, மலைப்பாம்பு முதலிய பிராணிகள் வாழ்கின்றன. மலையின் உச்சியில் தொப்பையசாமி கோயில் உள்ளது. நாற்புறம் சுவர் மட்டும் உள்ள சிறு இடம். அதனுள் சிவலிங்கம் உள்ளது. சிவலிங்கத்தின்மேல் செப்புக்கவசம் இடப் பெற்றுள்ளது. கோயிலின் எதிரில் விளக்குக் கம்பம் உள்ளது. இக்கோயிலை அடைய மலையில் சுமார் ஐந்துகல் தூரம் செல்ல வேண்டும்.

இங்கு மாசி சிவராத்திரியன்று நூற்றுக்கணக்கானோர் கூடுவர். நெய், அரிசி முதலிய பொருள்களைக் கொண்டு சென்று பொங்கலிட்டுப் படைப்பர். அன்றிரவு பயங்கரமான அம்மலை உச்சியில் தங்கியிருந்து மறுநாள் கீழ் இறங்குவர்.

இம்மலைக்கு கீழ்ப்புறம் கடவூர் ஜமீன் (திருச்சி மாவட்டம்) உள்ளது.

IX பழனி வட்டம்

கோவை மாவட்டத்தின் எல்லையிலுள்ள இவ்வட்டம் பழனி நகரத்தையும், பழனி, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஒன்றியங்களையும் கொண்டது.

இவ்வட்டத்தின் மலைப்பகுதிகளில் காப்பிக் கொட்டை, ஆரஞ்சுப்பழம், மாதுளை, கொய்யா, பலாவும் சமதளப்பகுதியில் புகையிலையும் விளைகின்றன.

பழனி நகரம்

கடல் மட்டத்திற்கு மேல் 350 மீட்டர் உயரத்திலும் பழனிமலைத் தொடர்களின் அடிவாரத்திலிருந்து 10 கி. மீ. தொலைவிலும் உள்ள இந்த நகரம், பல கோயில்கள் உள்ள நகரம். 60,000 மக்கள் வாழும் இடம். இங்கு முதல் நிலை நகராட்சி உள்ளது. மலைகளையும் குன்றுகளையும் ஆறுகளையும் இந்த ஆட்சியின் 20 சதுர கி. மீ. பரப்புக்குள் காணலாம். ஒவ்வொரு நாளும் நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் பல்லாயிரம் பக்தர்களை ஈர்த்துத் தமிழ் நாட்டிலேயே வருவாய் மிகுதியாக உள்ள கோயிலைக்கொண்டு இருப்பது பழனியின் பெருமை.

மதுரையிலிருந்து செம்பட்டி வழியாக இந்நகர் 115 கி. மீ. தொலைவிலும் கோயம்புத்தூரிலிருந்து உடுமலை வழியாக 105 கி. மீ. தொலைவிலும் திருச்சியிலிருந்து திண்டுக்கல் வழியாக 153 கி. மீ. தொலைவிலும் பழனி உள்ளது. இரயில் நிலையம் உண்டு. பேருந்து வசதி மிகுதி. எந்த நேரமும் மக்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருப்பதால், பேருந்து நிலையம், கோயில் பகுதிகளில் இரவு பகல் என்ற வேறுபாட்டை அவ்வளவாகக் காண இயலாது.

பழத்திற்காகத் தம் பெற்றோர்களான சிவபெருமானிடமும் பார்வதியிடமும் பிணக்குக் கொண்டதாக முருகனைப்பற்றி ஒரு கதை உண்டு. அதை ஆதாரமாக வைத்து, 'பழம் நீ' என்ற சொற்கள் பழனி என்று திரிந்து ஊர்ப் பெயரானதாகக் கூறுவர்.

பொதினி என்னும் மலைப்பெயர்தான் பலவாறாக மாறியும் மருவியும் பழனியாயிற்று என்பாரும் உள்ளனர்.

பழனி நகரின் பழமையான பகுதி, திருஆவினன்குடிப் பகுதி. இது, பண்டைநாளில் வையாபுரி, வையாவிபுரி என அழைக்கப்பெற்றது. இந்நகரம் 'வைகாவூர்' என்ற ஒரு நாட்டின் தலைநகராக விளங்கியது. இந்நாட்டை 'ஆவி' குடியைச் சேர்ந்த வையாவிக் கோப்பெரும்பேகன் என்ற சிற்றரசன் ஆட்சி செய்தான். இவன் பெயரைச் சுருக்கமாகப் பேகன் என்பர். முருகனிடம் இவன் கொண்டிருந்த ஈடுபாட்டால் முருகனின் வாகனமாகிய மயில் ஒன்று குளிரால் நடுங்கியபோது, அந்த மயிலுக்குப் போர்வை ஈந்தான். கடையெழு வள்ளல்களில் அவனும் ஒருவன் ஆவான்.

'பேகனெனும் பெருவள்ளல் தங்கு வையாபுரி' என்று கொங்குமண்டல சதகமும் பேகனுக்கு உரிய பொதினி மலையில் ஆற்றல் மிக்க தெய்வம் ஒன்று இருந்ததாகப் புறநானூறும் 'மலைநாட்டு மன்னன் பேகன்' என்று சிறுபாணாற்றுப் படையும் கூறுகின்றன.

இவ்வாறு புகழ்பெற்ற பழனியின் அருகே பல நூற்றாண்டு களுக்கு முன் சமணரும் வாழ்ந்தனர். இன்றைய பழனியில் பல மதத்தினரும் உள்ளனர். பல்வேறு தொழில்களும் சிறந்து விளங்குகின்றன. நூல்ஆலைகளும் அரசினருக்கு உரியதான எஃகு தளவாடப் பொருள்கள் செய்யும் தொழிற்சாலையும் அரிக்கன் விளக்கு மற்றும் தகரத்தாலான பொருள்கள் செய்தல், பழங்களைப் பதனிடுவது ஆகிய தொழிற்சாலைகளும் உள்ளன. இருப்பினும், பழனியின் பெரிய தொழில் கோயிலுக்கு வருபவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதும் அவர்களுக்கு வேண்டும் பொருள்களை விற்பதுமே.

ஆறுபடைவீடுகளுள் மூன்றாவதாகத் திருமுருகாற்றுப்படை யில் நக்கீரர் அடிவாரத்திலுள்ள திருஆவினன்குடிக் கோயிலைப் பாடியுள்ளார்.

485 அடி உயரத்தில் சக்திகிரி உள்ளது. இந்த மலைமீது இடும்பனுக்குக் கோயில் இருக்கிறது.

160 மீட்டர் (480 அடி) உயரமுள்ள சிவகிரி என்னும் மலை மீது புகழ் பெற்ற தண்டாயுதபாணி சுவாமி கோயில் இருக்கிறது. இம்மலை இரண்டு கி. மீ. சுற்றளவுஉள்ளது. இதை வலம் வருவது உடலுக்கு உரம் தரும். இவ்வாறு வலம் வருவதற்கு உரியநேரம் பொழுது விடிவதற்கு முந்தின காலப்பகுதியாகும். சித்திரை 23 முதல் வைகாசி 7 வரை காலை 4 மணிக்குப் புறப்பட்டு மலைவலம் வந்தால் கோடைக்கானல் மலையிலிருந்து வீசும் சஞ்சீவிக்காற்றை அனுபவிக்கலாம்.

இந்த மலையின் உச்சிக்கு வசதியாகக் கட்டப்பட்டுள்ள படிகள் வழியாகவும் செல்லலாம்; ஒற்றையடிப் பாதையிலும் போகலாம்; மின்சக்தியால் இயங்கும் கயிற்றைச் சுற்றி இயங்கும் (விஞ்சு) என்னும் வாகனத்தில் பயணம்செய்தும் சந்நிதியை அடையலாம்.

மலைமீதுள்ள கோயில் தண்டாயுதபாணி சுவாமி கோயில் எனப்படும். இது எப்போது ஏற்பட்டது என்று யாராலும் காலத்தை வரையறை செய்ய இயலவில்லை. கிரேதாயுகத்தில் என்பர். அதற்குப் பிற்பட்ட திரேதாயுகத்தில் என்றும் கூறுவர். கலியுகவரதன் என்று முருகன் குறிப்பிடப்படுவதால், கலியுகத்தில் என்பர்; அவ்வாறு வைத்துக் கொண்டாலும் கலியுகம் என்பது கி. மு 3102-இல் தோன்றிய காலகட்டம் ஆகும்.

இங்குள்ள முருகன் திருவுருவம் கல்லால் ஆனதன்று. இது உண்டான வரலாற்றை, ஈசான்ய சிவாச்சாரியார் அவர்கள் பின் வருமாறு கூறினார் என்பர். "பல முனிவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்து அகஸ்தியர் கருத்தைக் கேட்டனர் அவர், போகரை யோசனை கேட்போம் என்று சொன்னார். எல்லோரும் போகரிடம் சென்றார்கள். 81 முனிவர்களாகிய நாம் சேர்ந்து 81 வகையான பாஷாணத்தை உருக்கி ஒரு ஞான தண்டாயுதபாணி உருவம் சமைப்போம். அதைப் பிரதிட்டை செய்துவிட்டால், கலியுகத்தில் வாழும் மக்கள் நன்மை அடைவர் என்று கூறினாராம். அவ்வாறே 81 முனிவர்களும் தனித்தனியே ஒவ்வொரு பாஷாணத்தை வேகவைத்து முடித்தனர். போகர் அவற்றை இணைத்து ஒரு திருவுருவமாக்கிப் பூசை வழிபாடு செய்தார். 81 பாஷாணங்கள் என்பது 9×9. எனவே இதை நவபாஷாணம் என்று சொல்கின்றனர் என்றும் 81 பாஷாணங்களின் பெயர்கள் உள்ள ஏடு தம்மிடம் இருப்பதாயும் ஈசான்ய சிவாச்சாரியார் அவர்கள் கூறுவார்களாம்.

மருந்துகளால் இவ்வாறு செய்யப்பட்ட உருவத்திருமேனி கரைந்து போகாதிருப்பதற்காகவே, இந்தமூலவர்க்கு எந்நேரமும் அபிஷேகங்கள் நடந்த வண்ணமாக உள்ளன. இவற்றுள் சந்தன அபிஷேகம் குறிப்பிடத்தக்கது மைசூர்ச் சந்தனக்கட்டையில் அரைத்த சந்தனம் பட்டினம் படி ஒருபடிக்கு ஒரு தோலாக் கலவைப் பொருள் சேர்த்து அபிஷேகம் செய்கிறார்கள். கலவைப் பொருள்களாவன-கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கேசரிப்பவுடர், சந்தனத்தூள், சந்தனஅத்தர், பன்னீர், பூலாங்கிழங்கு. மட்டிப்பால்தைலம், புனுகுசட்டம் என்பன. இதனால், அபிஷேகச் சந்தனம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

போகர் ஒரு பெரும் ஞானி, சித்தர். மாமேதை, பல்துறை அறிஞர் அவர் சீனநாட்டவர் என்று சிலர் கூறுவர். அவர் சீனாவுக்கு ஒரு விமானத்தில் சென்று சித்தமருத்துவ முறையையும் ஆகாயவிமானம். நீராவிக் கப்பல் ஆகியவற்றைச் செய்யும் முறைகளையும் சீனருக்குக் கற்பித்தார் என்று சில நூல்களில் ஆதாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாலும், தயிரும், தண்ணீரும். தேனும், சந்தனமும் ஊற்றி அபிஷேகம் செய்யப்பட்டும் அதைத் தாங்கி நிற்கும் திருவுருவத்தை உண்டாக்கிய போகர் மாபெரும் அறிவியல் அறிஞர் என்பதை அனைத்து நாட்டினரும் ஏற்றுக் கொள்ளு கின்றனர்.

போகருக்குப் பிறகு புலிப்பாணி என்பவர் பூசைகளைச் செய்துவந்தார். அவருடைய வாரிசுகளே பண்டாரங்கள். திருமலை நாயக்கரின் தளவாயான இராமப்ப அய்யன், பழனிக் கோயிலுக்கு வந்தபோது. பிராமணரல்லாதாராகிய பண்டாரங் களிடம் திருநீறு வாங்க விரும்பாது, பிராமணர்களைக் கொடுமுடியி லிருந்து உடனே அழைத்துவரச் செய்து அவர்களிடம் கோயில் பிரசாதங்களைப் பெற்று வந்தார். அது முதல் பிராமணர்கள் பூசைகளைச் செய்து வருகின்றனர். பிற பணிகளைப் பண்டாரங்கள் செய்து வருகின்றனர். இன்று செல்வச் செழிப்பில் நிகரற்று விளங்கும் இக்கோயில் 1900-ஆம் ஆண்டுவரை திருவிழாச் செலவு களுக்குப் பணமின்றித் தவித்தது. அப்போது உற்சவமூர்த்தியைப் பண்டாரங்கள் பல்லக்கில் தூக்கிச் சென்று பழனியைச் சுற்றியுள்ள ஊர்களில் பணம் வசூலித்துத் திருவிழாக்களை நடத்தினர். மக்கள் மலைக்கோயிலுக்கு வர அஞ்சிய காலத்திலும் இந்தப்பண்டாரங்கள் தான் திருமஞ்சனப்படி வழியாக வந்து தண்டாயுதபாணிக்கு அபிஷேகங்களைச் செய்து வந்தனர்.

விசுவரூப பூசை (காலை 5 மணி), ராக்காலம் (இரவு 8 மணி), பள்ளியறைக்குச் செல்லுவது, தங்கரதம் ஆகியவை மலையில் காணத்தக்கன.

பழனி நகருக்குள் ஊர்க்கோயில் எனப்படும் பெரியநாயகி அம்மன் கோயில் பலவகைச் சிறப்புக்கள் உடையது. இங்கு பல கோயில்களைச் சேர்ந்த வாகனங்கள் முதலியன உள்ளன. இவற்றைக் கண்டு இன்புறலாம்.

பழனியில் ஏராளமான திருவிழாக்கள் நிகழ்கின்றன. இவற்றுள் முதன்மையானது பங்குனி உத்தரம், அடுத்தது தைப்பூசம், மூன்றாவது ஐப்பசி மாதத்தில் கொண்டாடப் பெறும் கந்தசஷ்டி. சித்திரை, வைகாசியில் நடைபெறும் அக்னி நட்சத்திர விழாவும், வைகாசி விசாகம், தைக் கார்த்திகை சித்திரை முதல் நாளில் தமிழ்ப் புத்தாண்டு விழாவும் குறிப்பிடத்தக்கவை.

இது, கோயிலைப் பற்றிய நூல் அன்று; எனவே சில சிறப்புக் கூறுகளை மட்டும் சுட்டிக்காட்டியுள்ளோம். கோயிலைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோர் தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ள பல தமிழ் நூல்களையும் இந்நூலாசிரியர் எழுதித் தேவஸ்தானத்தார் வழங்கியுள்ள PALANI-THE HILL TEMPLE OF MURUGA என்ற ஆங்கில நூலையும் படித்துப் பார்ப்பது பயன் தரும்.

பழனியின் ஏற்றுமதிகள் – பஞ்சாமிர்தம், திருநீறு.

பழனியில் இருப்பவை – எல்லாச் சாதியினர்க்கும் சத்திரங்களும் மடங்களும், பல கல்லூரி-கள், சித்த மருத்துவ நிலையங்கள்.

24. பழனி ஊராட்சி ஒன்றியம்

பழனி நகராண்மைக் கழகத்தையடுத்த ஊர்களைக் கொண்டது இவ்வொன்றியம் ஆயக்குடி, பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி என்னும் சிறு நகரங்களும் நில வருவாய்த் துறைக் கிராமங்கள் 39-ஐ அடக்கிய இருபது ஊராட்சிகளும் உள்ளன.

ஒன்றியத்தின் பரப்பு 500 சதுர கி. மீ. அலுவலகங்கள் பழனி நகரில் உள்ளன பெரும்பாலும் நாயக்கமார் வாழும் ஊர்கள் ஏராளமாக உள.

பழனியிலிருந்து கோடைக்கானலுக்கு 66 கி. மீ. தொலைவுள்ள மலைச்சாலை 1978-இல் போடப்பட்டது, இவ்வொன்றியத்தின் வரலாற்றில் பெரியதொரு திருப்பம் ஆகும். பாலாறு-பொருந்தலாறு அணைக்கட்டும் சண்முகநதியும் பழனி மலைத்தொடரும் பழனித் தலமும் இவ்வொன்றியத்து மக்களுக்கு வாழ்வளிக்கின்றன. ஆற்றுப் பாசனத்தாலும் கிணற்றுப் பாசனத்தாலும் நெல், சோளம், மணிலாக்கடலை, பருத்தி பயிரிடப்படுகின்றன.

உடுமலைப்பேட்டைவரை தென்மேற்குப் பருவக்காற்றும் ஒட்டன்சத்திரம்வரை வடகிழக்குப் பருவக்காற்றும் வீசுகின்றன. இடையேயுள்ள பழனி, தாராபுரம் வட்டங்களில் எவ்வித மழையும் பெய்வதில்லை.

கடையெழு வள்ளல்களில் ஆய், பேகன் இருவரும் இப் பகுதியினர். ஆய் வாழ்ந்த குடியினையுடைய ஊர் ஆயக்குடி. மயிலுக்குப் போர்வை போர்த்திய ஆவியர்கோன் வள்ளல் பேகன் வாழ்ந்த ஊர் திருஆவினன்குடி என்பதை முன்னரே தெரிவித்து உள்ளோம். குமண வள்ளல் வாழ்ந்த கொழுமம் (குமணம்) பழனியிலிருந்து 16 கி. மீ தொலைவில் கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் இருக்கிறது.

குறிப்பிடத்தக்க ஊர்ப் பெயர்கள்: அமரபூண்டி, அய்யம்பாளையம், கலயம்புத்தூர், சின்னக்கலயம்புத்தூர், சித்திரக்குளம், தாமரைக்குளம், கணக்கன்பட்டி, கரடிக்கூட்டம், கோதைமங்கலம், மேலக்கோட்டை, சிவகிரிப்பட்டி.

ஆயக்குடி

பழனிக்குக் கிழக்கே 6 கி. மீ. தொலைவிலுள்ளது. 10,000 மக்கள் வாழும் சிறுநகரம். பழைமையான ஒருஜமீனை உடையது. ஜமீன்தாரர்களின் இல்லத்துக்கு அரண்மனை என்னும் பெயர் உண்டு. இந்த ஜமீன்தாரர்களை ஐயன் என்று கூறுவது மரபு. ஐ-வியக்கத்தவர். ஆயக்குடி ஜமீன்தார்கள் பழனிக்கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். இவர்கள் அகோபில மடத்துக்கு அடிமைப் பட்டவர்கள். அகோபில என்பதைச் சுருக்கி ஓபில என்று தங்கள் பெயர்களில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் தக்காணத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததாயும் அங்கிருந்து ஆந்திர மாநிலத்திலுள்ள அனந்தப்பூருக்கு வந்து தங்கியதாகவும் தெரிகிறது. பின்னர் விசுவநாத நாயக்கருடன் விஜயநகரத்திலிருந்து மதுரைக்கு வந்து பழைய ஆயக்குடியில் பாளையம் ஏற்படுத்திப் பிற்காலத்தில் புதுஆயக்குடி நகரை உண்டாக்கினர். பழனிக்குச் செல்லும் யாத்திரிகர்களைத் துன்புறுத்திய யானைகளை அடக்கியும் பாண்டி நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவித்த இப்பகுதிக் கள்ளர்களைக் கட்டுப் படுத்தியும் மதுரை நாயக்கர்கள் தொடுத்த போர்களிலெல்லாம் போர்ப் படைகளுடன் தாங்களும் களத்துக்குச் சென்றும் ஆயக்குடி நாயக்கர்கள் மதுரை வரலாற்றில் இடம் பெற்றிருக் கிறார்கள்.

ஜமீன்தார் உடல்நிலை மிகவும் மோசம் அடைந்ததும் அவரிடமிருந்து செங்கோல் பெற்று அவருடைய மகன் ஆடை அணிகலன்களுடன் ஒரு மண்டபத்துக்குச் சென்று சிம்மாசனம் ஏறி அடுத்த வாரிசாகப் பட்டம் ஏற்பதும் ஆயக்குடியில் மரபு. அவர், இறந்த ஜமீன்தாரின் உடலைப் பார்க்கக் கூடாது. எவ் விதத்திலும் வருத்தப்படவும் கூடாதாம்.

பாலசமுத்திரம்

இவ்வூர்ப் பெயரை வாலசமுத்திரம் என்றும் சொல்லுவர். பழனியிலிருந்து கோடைக்கானல் மலைக்குப் போடப்பட்டுள்ள நேர் சாலையில் பழனியிலிருந்து 5 கி. மீ. தொலைவிலுள்ளது செழிப்பான பகுதி. ஊரைத்தாண்டியதும் மலைமீது வாழை ஆரஞ்சு, காப்பித் தோட்டங்கள் உள்ளன.

நாயக்க மரபினரான பாலசமுத்திரம் ஜமீன்தார்கள் இங்கு அகோபில வரதராஜப் பெருமாள் கோயிலை 17-ஆம் நூற்றுண்டில் கட்டினர். இக்கோயில் சிற்பச் சிறப்புடையது. இந்தக் குறுநில மன்னர்கள் கட்டிய கோட்டை 1755-இல் இவ்வூரை ஹைதர்அலி தாக்கியபோது சேதமடைந்தது. துப்பட்டி நெசவுக்கு இவ்வூர் புகழ்பெற்றது.

நெய்க்காரப்பட்டி ஜமீனுக்கு இங்கும் அரண்மனை உண்டு.

நெய்க்காரப்பட்டி

மதுரை மாவட்டத்தில் புகழ்பெற்ற ஜமீன் என்று நெய்க்காரபட்டியைச் சொல்லலாம். ஜமீன்தார்களான நாயக்க

மரபினர் பயிர்த் தொழிலில் தொன்று தொட்டுப் பேரார்வம் காட்டி வருகின்றனர். இங்கு ஒவ்வோர் ஏக்கரிலும் தஞ்சை மாவட்டத்து நிலங்களைவிடக் கூடுதலான விளைவு உண்டு. காங்கேயம் பண்ணையைப் போன்ற மாட்டுப் பண்ணையை இங்கு இந்த ஜமீன்தார்கள் நடத்தி வருகின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டு கால்நடைக் கல்லூரி அமைப்பது சாலப் பொருந்தும்.

கோதைமங்கலம்

பழனியைச் சுற்றியுள்ள அஷ்ட மங்கலங்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது கோதை மங்கலம். வள்ளல் பேகன் தன் பரத்தை கோதை என்பவளுக்கு மானிய மாகக் கொடுத்ததால் இவ்வாறு பெயர் பெற்ற ஊர் பழனிக்கு வடமேற்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது. விசயதசமி (கலைமகள் விழா) நாளில் இங்கு திருவிழா உண்டு. அன்று பழனி மலைமீதுள்ள தண்டாயுதபாணி சுவாமியின் உற்சவத் திருமேனி இவ்வூருக்குவந்து வன்னிகா சூரசம்காரம் செய்யும்.

பழனிக்கு வரும் வாய்க்கால் கோதை வாய்க்கால் என்றும் அந்த நீர் தேக்கப்படும் இடம் கோதை மங்கலத்துக் குளம் என்றும் சொல்லப்படுகின்றன. கோதை வாய்க்காலுக்கு அருகேயுள்ள கல்லினையே மயிலாடும் பாறை என்பர்; அதுதான் பேகன், மயிலுக்குப் போர்வை வழங்கிய இடம் என்பர்.

ஐவர் மலை

பழனியிலிருந்து கொழுமத்துக்கு செல்லும் வழியில் இந்த மலை இருக்கிறது. குகைகளும் படுக்கை போலச் செதுக்கப்பட்ட பாறைகளும் உள்ளன. பாண்டவர் ஐவர் படுத்திருந்த இடம் என்னும் கருத்துடையவர்கள் இம்மலைக்கு ஐவர்மலை என்று பெயரிட்டனர். இக்கருத்து தவறானது. சமணகுரவர்கள் இங்கே தவம் செய்ததாயும் இம்மலையின் சரியான பெயர் அயிரூர் மலை' என்றும் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது.

தாண்டிக்குடி (தான்றிக்குடி)

கோடைக்கானல் மலையின் அடிப்பகுதியில் ஆதிவாசிகள் வாழும் ஊர். இவர்கள் இங்கு விளையும் நாணல் போன்ற ஒரு தட்டையில் துளைபோட்டு அந்தத் தட்டையை நாதசுரம் போல இசைக்கிறார்கள். இருகுழல்களை இணைத்து இரட்டை

நாதசுரம் போலவும் வாசிக்கின்றனர். விடியற்காலை நேரத்தில் பறவைகள் இயற்கையாக ஒலிப்பதை ஒத்த முறையில் வாசிக்கின்றனர். புலிவேட்டைக்கு உரிய ஒலியையும் வாசிக்கின்றனர். தும்பி, தாளம், குச்சியடித்தாளம் என்ற 200 வகைத் தாளங்களை ஊதுகின்றனர்; அப்போது பின்னால், 30 பெண்கள் லகாரத்தை வாய்ப்பாட்டு (குழல் ஒலியைப் போன்று) பாடுகின்றனர்.

சின்னக்கலயம்புத்தூர்

பழனிக்கு மேற்கே 5 கி. மீ. தொலைவு, சண்முகநதிக் கரையில் அமைந்தது. இவ்வூர் அருகே 1856-இல் ரோமாபுரித் தங்கநாணயங்கள் ஏராளமாகத் தோண்டி எடுக்கப்பட்டன.

பாம்பாட்டி என்னும் ஊரைச் சேர்ந்த ஒரு சிற்றூரின் பெயர் இரட்டையர்பாடி.

தாமரை மலர்கள் மிகுந்த குளத்தால் தாமரைப்பட்டி என்னும் ஊர் ஏற்பட்டது.

சிவகிரிப்பட்டி

பழனி ஆண்டவர், கோயில் கொண்டுள்ள சக்தி மலையை அடுத்த சிறு குன்றாகிய சிவகிரியைச் சார்ந்துள்ள சிற்றூர்.

25. தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இது கீரனூர் என்னும் பேரூராட்சியையும் 38 ஊராட்சிகளையும் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தின் பகுதிகளை வட எல்லையாகவும் கிழக்கு எல்லையாகவும் உடையது. சண்முக நதியும் பல சிறு அணைக்கட்டுகளும் இங்கு உள்ளன.

கீரனூர்

பழனிக்கு வடக்கே 15 கி. மீ. தொலைவில் சண்முகநதிக் கரையில் உள்ளது. மக்கள் தொகை 6,000. இங்குள்ள சிவன் கோயிலுக்குச் சோழ மன்னர்கள் வழங்கிய கொடைகளைப்பற்றிக் கோயில் கல்வெட்டுக்கூறுகிறது. இவ்வூரின் மக்களில்சரிபாதிப்பேர் முஸ்லிம்களாக; உள்ளனர். பொள்ளாச்சியிலிருந்தும் நீலகிரி மலைப் பகுதிகளிலிருந்தும் பொருள்களை வரவழைத்து வியாபாரம் செய்கின்றனர்.

வேளாண்மையும் செய்து வருகின்றனர். இங்குள்ள பெரிய பள்ளிவாயில் ஏறத்தாழ ஹிஜ்ரி 1340-ஆம் ஆண்டில் கட்டப் பட்டது. நீண்டு உயர்ந்த அதன் இரு மனாராக்களில் ஒன்றின்மீது ஏறி நின்றால் நெடுந்தொலைவுவரை நன்குதெரியும். இப்பள்ளிவாயி லின் அண்மையில் நூர் முஹம்மது வலியுல்லாஹ் அவர்களின் அடக்க இடம் இருக்கிறது.

இவ்வூரில் பாசிப்பட்டினம் நெய்னாமுஹம்மது சாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் பேரில் ஆண்டுதோறும் மௌலிது ஓதி ஊர் விருந்து நடத்தப்படுகிறது. அன்று இரவுமுழுவதும் மௌலிது ஓதப்பெற்று காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 3 மணிவரை விருந்து நடைபெறும்

'நெஞ்சில் நிறைந்த நபிமணி' எழுதிய மௌலவி சதக்கத்துல்லாஹ் சிராஜ் பாகவி இவ்வூரைச் சேர்ந்தவரே. கீரனூர் என்னும் பெயருடன் உடைய ஊர் புதுக்கோட்டை மாவட்டத்திலும் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் 'கொண்டங்கிக் கீரனூர்' உளது.

தொப்பம்பட்டி

இவ்வூர் பழனி-தாராபுரம் சாலையில் உள்ளது.

கொழுக்கொண்டான்

கொழுமங்கொண்டான் என்பதன் மரூஉ என்று சிலர் சொல்கின்றனர். கொழுமம், குப்பம்பாளையம், குமரலிங்கம் மூன்றும் சேர்ந்த கொழுமங்கொண்டான், வள்ளல் குமணன் ஆட்சி செய்த இடம் என்பர்.

அப்பனூத்து தாழையூத்து

இவை அமராவதி ஆற்றுப்பக்கம் உள்ளன. நீர் சார்ந்திருப்ப தால் ஊற்று என்னும் ஈற்றுச்சொல் ஏற்பட்டிருக்கிறது.

26. ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம்

ஒட்டன் சத்திரம் பேரூராட்சியையும் 33 ஊராட்சிகளையும் உடைய ஒன்றியம். வளமான மலைப் பகுதிகளும் இதில் உள்ளன.

ஒட்டன்சத்திரம்

தாராபுரம், பழனி, திண்டுக்கல், (செம்பட்டு வழியாக) மதுரை ஆகிய நகர்களுக்குச் செல்லும் சாலையில் அமைந்து வியாபாரத் தலமாக இருக்கிறது. தரகு மண்டிகள் ஏராளமாக உள்ளன. தக்காளி, வெங்காயம், மணிலாக்கடலை மூன்றும் இங்கு பெரிய அளவில் விற்பனையாகின்றன.

தெலுங்குபேசும் ஒட்டரச்சாதியினர் ஆந்திர நாட்டிலிருந்து இங்கு வந்து பாடி அமைத்து வாழ்ந்தனர். அவர்கள் தலைவன் நிறுவிய சத்திரத்தைச் சூழ அமைந்த ஊர் ஒட்டன் சத்திரம் ஆயிற்று. ஒட்டரச்சாதியார் தோல் உரித்தல், செருப்புத் தைத்தல், தெருப் பெருக்குதல், கிணறு தோண்டுதல் ஆகிய தொழில்களில் வல்லவர்கள். குறிப்பிட்ட வற்றல் வகைகளை விற்பதும் இவர்கள் தொழில். ஒட்டப்பிடாரம், ஒட்டநத்தம் என்னும் ஊர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ளன.

இவ்வூரில் கிறித்தவ ஃபெலோஷிப் மருத்துவமனை மிகச் சிறந்த முறையில் இயங்குகிறது.

இங்கிருந்து 8 கி மீ. தொலைவில் கொங்குப்பட்டி என்னும் ஊர் இருக்கிறது. அது ஒரு காலத்தில் கொங்கு நாட்டின் எல்லை ஊராக இருந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

விருபாட்சி

விருப்பாட்சி என வழங்குகிறது. விருபாட்சன் என்பது சிவனுக்கு உரியபெயர்களில் ஒன்றாகும்.

பழனிக்குக் கிழக்கே 20 கி. மீ. தொலைவில் பழனிமலை அடிவாரத்தில் ஒரு காட்டாற்றின் கரையில் அமைந்த ஊர். விருப்பாட்சன் என்பது சிவபெருமானைக் குறிக்கும் வடமொழிப் பெயர். இங்கிருந்து 2 கி. மீ. தொலைவில் தலைக்கூற்று கோடரி என்னும் பெயர்களையுடைய அருவிகள் உள்ளன. கோடரி போன்ற தோற்றம் இருப்பதாலும் மலை உச்சியிலிருந்து சரிந்து விழுவதாலும் இப்பெயர் ஏற்பட்டது. இவ்வருவிகளுக்கு அருகே ஏழு கன்னிமார் கோயில் இருக்கிறது.

விருப்பாட்சி, நாயக்க ஆட்சியில் ஏற்பட்ட பாளையங்களுள் ஒன்று. இப்பாளையக்காரர்கள் பச்சனூர் என்னும் ஊரை உண்டாக்கினர். பஞ்சாமிர்தத்திற்கேற்ற நீர்ச்சத்துக் குறைவான

வாழைப்பழம் விருபாட்சியில் கிடைக்கிறது. நாரத்தை, ஆரஞ்சு சாத்துக்குடி, கொய்யா ஆகிய பழங்களும் கிழங்குக், காய்கறி வகைகளும் இப்பகுதியின் ஏனைய விளைபொருள்கள். சந்தை நாள் வியாழக்கிழமை.

அத்திக்கொம்பு

ஆண்டுதோறும் பங்குனியில் இங்குப் பெரியதொரு மாட்டுச் சந்தை கூடுகிறது.

இடையகோட்டை

இவ்வூர் இடையன் கோட்டை என்றும் கூறப்படும். இது விசுவநாத நாயக்கரால் ஏற்படுத்தப்பட்ட பாளையங்களுள் ஒன்று. சிலகாலம் இது கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்த அரவக்குறிச்சியில் சேர்க்கப்பட்டிருந்தது. ஹைதர்அலி இதைத் திண்டுக்கல் சீமையுடன் இணைத்தார்.

ஆற்றூர்

விருபாட்சியை அடுத்த ஊர். இவ்வூரில் கண்ணகி திருவிழாவில் பொற்கொல்லனுக்குத் தண்டனை கொடுப்பதுபோல ஒருவனுடைய தலைமுடியை அறுத்துவிடும் வழக்கம் நூறு ஆண்டுகளுக்கு முன்வரையில் நிலவியதாம். ஒருவர் புரிந்த குற்றத்திற்காக அவருடைய மரபில் பன்னெடுங்காலத்திற்குப் பின் தோன்றியவர்களைத் தண்டிப்பது தவறு; எனவே இப்போது இவ்வழக்கம் கைவிடப் பட்டிருக்கிறது.

X பெரியகுளம் வட்டம்

மாவட்டத்தின் வடமேற்கு மூலையில் அமைந்த பெரியகுளம் வட்டம், வளமான பகுதியாகும். பெரியகுளம், தேனி-அல்லிநகரம் என்ற இருநகராண்மைக் கழகங்களும், பெரியகுளம், ஆண்டிபட்டி தேனி என்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கிய வட்டம் இது.

தேனி, சின்னமனூர், கம்பம், கூடலூர்ப் பகுதிகளுக்குப் பூமிநாடு என்ற பெயரும் வழங்குகிறது. பூமிநாடு, சேர நாட்டின் ஒருபகுதி, சின்னமனூர்க் கல்வெட்டுகள் பெரியகுளம் உத்தமபாளையம் வட்டங்களாக இப்போது உள்ள பகுதிகளை "அளநாடு" என்று குறிக்கின்றன.

ராஜராஜசோழன் பாண்டிய நாட்டில் பெற்ற வெற்றியை அவனுடைய பெயர்தாங்கி நிலைநாட்ட ராஜசூடாமணி சதுர்வேதமங்கலம் என்ற ஊர் ஏற்பட்டது. ஜெயமங்கலத்துக்கு அருகேயுள்ள இவ்வூர் இந்நாளில் குள்ளபுரம் என வழங்குகிறது.

பலவகைப் பழங்கள் பயிரிடப்படுகின்றன. மூன்று ஆள் ஆழத்தில் நீர் கிடைக்கிறது. போதிய அளவு மழையும் பெய்கிறது. அதனால் இங்கு 200 ஏக்கர்ப் பரப்பில் ஆண்டுதோறும் இரண்டு போகம் திராட்சை பயிரிடப்படுகிறது. பட்டிவீரன்பட்டி திண்டுக்கல் பகுதிகளில் போல ஐப்பசியிலும் பங்குனியிலுமாக ஆண்டுக்கு இருமுறை பெரியகுளம் வட்டத்தில் திராட்சை கிடைப்பது உலகெங்குமுள்ள விஞ்ஞானிகளுக்கு வியப்பை ஊட்டுகிறது. பச்சைத் திராட்சை, விதையில்லாத் திராட்சை வகைகள் பயிரிடப்படுகின்றன. ஏக்கருக்கு பத்தாயிரம் கிலோ விளைகிறது. நான்காவது ஆண்டுக்குப் பிறகு பெருத்த இலாபம் கிடைக்கிறது

பெரியகுளம் நகரம்

இது நகராண்மைக் கழகம், கோட்ட ஆட்சி அலுவலகம், வட்ட ஆட்சி அலுவலகம் ஆகியவை உடைய ஊர். வராகநதிக் கரையில் அமைந்து அதன் வடக்கேயுள்ள பகுதி வடகரை எனவும் தெற்கேயுள்ள பகுதி தென்கரை எனவும் வழங்குகிறது.

கோடைக்கானல் மலையின் அடிவாரத்திலிருந்து 13 கி மீ. தொலைவில் இந்நகரம் இருப்பதால், இந்நகரத்து ஆடு மாடுகளுக்கு மிகுதியான மேய்ச்சல் வசதி உளது.

வடகரை, ஒரு ஜமீனாக இருந்தது. ஜமீன்தார் ராமபத்ர நாயக்கர் 1904-இல் பெரியகுளம் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருந்து அரும்பணி புரிந்தார்; புதிய வேளாண்மை முறைகளைக் கடைப்பிடித்துப் பலருக்கும் வழிகாட்டினார். இந்நகரிலுள்ள அரசினர் பழப்பண்ணையைப் பற்றி இந்நூலில் பிறிதோரிடத்தில் கூறியுள்ளோம்.

இந்நகரில் ஒரு கல்லூரியும் 1902-இல் தொடங்கப்பெற்ற உயர்நிலைப்பள்ளியும் உள்ளன.

தேனி-அல்லி நகரம்

நகராட்சிக்குத் தேனி-அல்லிநகரம் என அரசினர் பெயர் சூட்டியுள்ளனர். தேனி என்பது அல்லிநகரத்தின் ஒரு பகுதி. இன்று மக்கள் நாவில் பழகிவிட்ட பெயர் தேனிதான்.

மேற்கே கேரள எல்லே. கிழக்கே ஆண்டிப்பட்டிக் கணவாய் வடக்கே கோடைக்கானல் மலே. தெற்கே கண்டமனூர் ஜமீன் மலே. இந்த நான்கையும் தொட்டுக்கொண்டு, கவினுற விளங்கும் கம்பம் பள்ளத்தாக்கின் நடுநாயகமாகத் திகழ்வது தேனி.

வைகையின் துணையாருக விளங்கி முல்லே ஆறு என்றும் தேனி ஆறு என்றும் பெயர்பெற்றுள்ள ஆற்றின் கரையில் இந்நகர் இருக்கிறது. புதிய கற்காலக் கருவிகள் இந்நகரில் அகப்பட்டுள்ளன.

ஆற்றுநீரை வழங்கும் பி. டி. ஆர். வாய்க்கால் முதலியவற்றின் பாசனத்தால் வளம் கொழிக்கும் நெல் வயல்கள் வீரப்பன் கோயில் அடிவாரத்தில் அமைந்துள்ள புன்செய்த் தோட்டங்கள், தேனி, கரடு என்பன இந்நகருக்கு அணி செய் கின்றன.

தேனீக்கள் பல மலர்களிலிருந்து தேனே எடுத்துச் சேகரித்து வைப்பதுபோல, தேனிச் சந்தையில் நாற்பது, ஐம்பது கி. மீ. சுற்றளவில் விளேயும் உணவுப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், பருத்தி, கடலே, பயறு வகைகள், எள், வெங்காயம், வெள்ளேப் பூண்டு, மிளகாய் ஆகியவை காட்சிப் பொருள்களாகிப் பின்னர் விற்பனேயாகின்றன. அவற்றின் விலேயை நிர்ணயிப்பது இந்தச் சந்தையே. பொள்ளாச்சிக்கு அடுத்தபடி தமிழ்நாட்டின் பெரிய சந்தை தேனிச் சந்தைதான்.

தேனப்பன் என்ற ஒருவரால் வளர்ச்சியடைந்து இவ்வூர் 'தேனூர்' ஆயிற்று. பிறகு தேனூர் என்பது மருவித் தேனி ஆயிற்று என்பர் சிலர். 'தேன் ஈ' என்பதே இவ்வூர்க்குப் பொருத்தமான பெயர்; தேனீக்களின் சுறுசுறுப்பை இந்நகர மக்களிடம் காணுகிறேம். ஆற அமர வாழ விரும்புபவர்களுக்குத் தேனி ஒத்து வராது!

குன்றுகளின் அடிவாரத்தில் இருப்பதால், உடல்நலத்துக்கு ஏற்ற இயற்கை நலம் இங்கு உள்ளது. 5 கி. மீ. தொலேவில்

தேனி ஆறு சுருளி ஆற்றுடனும் அங்கிருந்து அதே தொலைவில் சுருளி ஆறு வைகையுடனும் கலக்கின்றன.

மதுரை–போடிநாயக்கனூர் இரயில் பாதையில் மிகப் பெரிய நகர் தேனிதான். இந்நகரிலிருந்து வைகை அணை, மஞ்சளாறு அணை, தேக்கடி அணை, பெரியாறு நீர் மின் நிலையம், சுருளி அருவி, கும்பக்கரை அருவி, கோடைக்கானல், குரங்கணி, சபரிமலை ஆகிய சுற்றுலாப் பகுதிகளுக்கு நினைத்த நேரமெல்லாம் பேருந்துகள் செல்லுகின்றன.

தேனியின் பழைய பெயர்	– கூட்டுச்சாலை (மதுரை, திண்டுக்கல், குமுளி–போடிநாயக்கனூர்ச் சாலைகள் கூடுமிடம்)
பொதுச்சந்தை கூடும் நாள்	- ஞாயிற்றுக்கிழமை
ஊர்ச் சந்தை நாள்	– வியாழக்கிழமை
தேனியில் இருப்பவை	– நூற்பு நெசவு ஆலைகள், பருத்தி-நெல் அரவை ஆலைகள், எண்ணெய் ஆட்டும் ஆலைகள், கடலையை உடைக்கும் இயந்திரங்கள், சிமிண்டுத் தூண்கள் செய்வதற்காக மின்சார வாரியம் நிறுவியுள்ள நிலையம், ஏராளமான வங்கிகள், சுங்கத் துறையின் அலுவலகம், நூற்றுக் கணக்கான தரகு மண்டிகள், விருதுநகர்ப் பேட்டை, பகவதி அம்மன் கோயில்.

தேனியிலிருந்து நாள்தோறும் பேசப்படும் தொலைதூரப் பேச்சுகள் – 1200

தேனியில் பெருகுவன	– நாளொரு வீடு, வாரமொரு கடை, மாதமொரு குடும்பம், ஆண்டுக்கொரு வீதி.

கண்டவர் வியக்கவும் காணாதவர் காணத் துடிக்கவும் உரிய நகர் தேனி,

27. பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம்

இந்த் ஒன்றியத்தில் கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி, வடுகப்பட்டி, தென்கரை ஆகிய நான்கு பேரூராட்சிகளும் 18 ஊராட்சிகளும் உள்ளன.

தேவதானப்பட்டி

15,000 மக்கள் உள்ள ஊர். பெரியகுளம்-அம்மைநாயக்கனூர்ச் சாலையில் முருகன் மலையின் அடிவாரத்தில் அமைந்தது. திண்டுக்கல்லைச் சேர்ந்த பாளையங்களுள் இதுவும் ஒன்று. இங்கிருந்து 2 கி. மீ. வடக்கேயுள்ள மஞ்சளாற்று அணையருகே மூங்கிலணைக் காமாட்சியம்மன் கோயில் இருக்கிறது. இங்கு விக்கிரகம் ஒன்றும் இல்லை. மகாசிவராத்திரிக்கு முன் 8 நாள் திருவிழா நடைபெறுகிறது. நெய்த் தீபம் மட்டுமே ஏற்றுகிறார்கள். இங்குச் சேகரித்து வைக்கப்பெறும் நெய்யில் எறும்பு, ஈ, முதலியன படுவதில்லை. கோயில் வாயிலாகிய கதவைத்தான் மக்கள் வழிபடுகின்றனர். எனவே, கதவு திறக்காத காமாட்சியம்மன் கோயில் என்னும் பெயரும் இக்கோயிலுக்கு நிலவி வருகிறது.

வடுகப்பட்டி (மேல்மங்கலம்)

10,000 மக்கள் வாழும் ஊர். நாயக்கமார் செல்வாக்கு மிகுதி.

கெங்குவார்ப்பட்டி

மக்கள் தொகை 8,000. கொட்டாரப்பட்டி, செங்குலத்துப் பட்டி, மீனாட்சிபுரம், அம்சாபுரம் ஆகிய ஊர்கள் அடங்கியது.

தென்கரை

தென்கரை, தெ. கள்ளிப்பட்டி, கயிலாசப்பட்டி, வெங்கடாசலபுரம், தாமரைக்குளம் ஆகிய ஊர்கள் அடங்கிய பேரூராட்சி. மக்கள் தொகை 8,000.

கும்பக்கரை

இது கோடைக்கானல் மலையின் தென்சரிவில் தென்னஞ் சோலை, மாந்தோப்புகள், பச்சைப்பசேலென்ற மரங்கள் ஆகிய இயற்கை நலங்களுடன் கூடிய இடத்திலுள்ள சிறு அருவி, பெரிய

குளத்திலிருந்து ஐந்து கி. மீ. தொலைவில் மதுரைச்சாலையருகே அமைந்தது. குளிக்கவும் நீந்தவும் ஏற்றது.

குறிப்பிடத்தக்க ஊர்கள் வருமாறு :—

வாடிப்பட்டி, சில்வார்ப்பட்டி, நல்லகருப்பன்பட்டி ஜெயமங்கலம், அம்மாபுரம், அம்மாபட்டி, சொக்கத்தேவன்பட்டி வீரசக்கம்மாள்புரம், சர்க்கரைப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி எருமலநாயக்கன்பட்டி, தடமலைநாயக்கன்பட்டி.

28. ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இது, மலைவளமும் மண்வளமும் நீர்வளமும் நிறைந்த பகுதி. ஆண்டிப்பட்டி, நரசிங்காபுரம், வள்ளல்நதி முதலிய பேரூராட்சிகளும் 22 சிற்றூராட்சிகளும் உள்ளன.

இவ்வொன்றியத்திலுள்ள மாவூத்து மலையில் மருத மரங்களும் சிறு சுனைகளும் இருக்கின்றன.

ஆண்டிப்பட்டி

12,000 மக்கள்வாழும் ஊர். பெரியகுளத்திலிருந்து 16 கி. மீ.

உசிலம்பட்டியிலிருந்து தேனி, போடிநாயக்கனூர் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் வழியிலும் மதுரை–போடி இரயில் பாதையிலும் உள்ளது.

இவ்வூரில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இது பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது. 60/70 ஆண்டுகளுக்கு முன் ஆண்டிப்பட்டி ஜமீன்தாராக இருந்த பெத்தாச்சி செட்டியார் என்ற நகரத்தார் குடும்பத்தார் திருப்பணி செய்தபோது, பழைய கல்வெட்டுகள் அழிந்துவிட்டன. இக்கோயிலுக்குச் செப்புப் பட்டயம் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வூர்ப் பேரூராட்சிஎல்லைக்குள் அடங்கிய ஜம்புலிபுத்தூர் என்னும் கிராமத்தில் உள்ள கதலிநரசிங்கப் பெருமாள் கோயில் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. குறிப்பாக கம்பளத்தார்கள் இக்கோயிலைக் கட்டியிருக்கலாம். இக்கோயிலிலுள்ள முன்வாசல் மரக்கதவுகளில் பொறிக்கப்பட்டுள்ள

வாசகத்திலிருந்து கண்டமனூர் ஜமீன், திருப்பணி செய்திருப்பது தெரிகிறது. கோயிலின் உள்ளே சிதைந்த நிலையில் சில கல்வெட்டு கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை இதுகாறும் படியெடுத்த தாகத் தெரியவில்லை. இவ்வூர் மதுரைத் – தேனி வழியில் ஆண்டிப்பட்டியிலிருந்து மூன்று கி மீ. தொலைவில் உள்ளது. வைகை அணை இங்கிருந்து 5 கி. மீ. தொலைவில் கட்டப்பட்டிருக்கிறது.

தெப்பம்பட்டி

ஆண்டிப்பட்டியிலிருந்து தெற்கே 15 கி. மீ. தொலைவில் உள்ள ஊர். இதற்கப்பால் இயற்கை அழகு சூழ்ந்த மலைப்பகுதி தொடங்குகிறது.

வேலப்பர்கோயில்

ஆண்டிப்பட்டியிலிருந்து தெற்கே சுமார் 10கல் தொலைவில் மலைச்சரிவில் முருகன் கோயில் ஒன்று உள்ளது. ஆண்டிப்பட்டியி லிருந்து தெப்பம்பட்டி என்னும் ஊரை அடைந்த பின் ஏழு கி. மீ. தொலைவு மலைப்பகுதியில் நடந்து சென்று கோயிலை அடைய வேண்டும். இக்கோயிலில் உள்ள முருகனை வேலப்பன் என்று சொல்கிறார்கள். முருகன் வள்ளி தெய்வானை சமேதராகக் காட்சி யளிக்கிறார். இக்கோயிலின் பூசாரியாக மலைவாழ் சாதியினரான பளியர் இன்றும் பூசை புரிந்து வருகின்றனர். இன்றும் கோயிலின் முதல் காவடி செலுத்தும் உரிமை அவர்களுக்கே உள்ளது. தற்போது கோயிலை அடைவதற்கு வசதியாகச் சீரான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்தாண்டு இங்கு ஒரு பெரிய திருவிழா. இருபக்கங் களிலும் மயில் தோகையும் அடியில் தீர்த்தச் செம்பும் கட்டிய நூற்றுக்கணக்கான காவடிகளுடன் மக்கள் இங்கு மாவூத்து வேலப்பரை வழிபடுவர். நல்ல மருதமர ஊற்றுகளில் நீர் சுரக் கிறது. மலையேறப் படிக்கட்டுக்கள் உண்டு. அரிவாளைக் கையில் ஏந்திய கறுப்பணசாமிக்கு அரிவாள் காணிக்கை கொடுப்பது இங்கு வழக்கம்.

தீ. சுப்புலாபுரம்

ம. தொ. 5,000. மதுரை–தேனி நெடுஞ்சாலைக்கு வடக்கே $1\frac{1}{2}$ கி. மீ. தொலைவிலுளது. இங்குள்ள மக்கள் நெசவு, வேளாண்மை, கல் உடைக்கும் தொழில்களால் வாழ்கின்றனர்.

தமிழ்நாட்டின் பலபகுதிகளுக்கு இங்கிருந்து கல்லாலான பொருள்களை (அம்மி, ஆட்டுக்கல் முதலியவற்றை) ஏற்றுமதி செய்கின்றனர்.

கண்டமநாயக்கனூர்

ஒரு பெரிய ஜமீனின் தலைநகர். வைகை ஆறு வருஷநாட்டு மலையைவிட்டு நிலத்தில் இறங்கும் இடத்தில் உள்ளது மதுரையிலிருந்து 80 கி. மீ.

வருஷநாட்டு மலையில் காப்பி, தேயிலை, ஏலக்காய், பருத்தி பயிராகின்றன. கண்டமநாயக்கனூரிலிருந்து கடமலைக்குன்று அய்யனூர் கோயில் வழியே ராஜபாளையம்வரை மலைமீது சாலை அமைத்தால் மலைவாழ்தோட்ட விவசாயிகள் பயனடைவர்.

வைகைஅணைப்பகுதியில் அடர்ந்தகாடுகள் இவ்வூரருகேயே இருந்தன. பருத்தியையும் பிறவணிகப் பயிர்களையும் சாகுபடி செய்ய அவை பெரும்பாலும் அழிக்கப்பட்டன.

வைகை அணை

இது மதுரையிலிருந்து 64 கி. மீ. தொலைவில் திரு. காமராசர் முதலமைச்சராக இருந்தபோது 1959-இல் கட்டப் பெற்றது. அவர்கூறிய கருத்துக் கிணங்க, மைசூர் பிருந்தா வனத்தைப் போல, பூங்கா ஒன்று அமைக்கப் பெற்று சுற்றுலா வருபவர்களை ஈர்க்கிறது. வனத் துறைப்பள்ளி ஒன்று இவ்வூரில் இயங்குகிறது.

வைகை அணையிலிருந்து 20,000 ஏக்கர் நிலத்திற்கு நீர் விடப்படுகிறது. இந்த அணையின் பரப்பு 2,100 சதுர கி. மீ அணையின் நீளம் 3.6 கி. மீ.; கழிவாய்ப்பகுதி உள்பட கல்லணைப் பகுதியின் நீளம் 350 மீட்டர். கல் அணையைத் தொடர்ந்து இருமருங்கிலும் மண்அணைகள் உள்ளன. ஆற்றுமட்டத்திலிருந்து அணையின் உயரம் 35 மீட்டர். அணைநிரம்பி முழு கொள் அளவை அடையும் போது, 24 சதுர கி. மீ. பரப்புக்கு நீர்பரவி நிற்கும்.

மயிலாடும் பாறை

வருஷநாட்டில் வைகையின் கீழ்கரையில் உள்ள ஊர். காட்டு மயில்கள் கூட்டம் கூட்டமாக ஆடும் பாறையைச் சுற்றி

அமைந்த ஊர். மக்கள் தொகை 43,000. ஊருக்குத் தெற்கே தென்பழனி என்ற முருகன் கோயில் இருக்கிறது.

இங்கு ஓர் ஆள் உயரமுள்ள ஒரு கல்லில் ஏழுபைசாக் காசை வைத்துவிட்டு துணியில் மூன்று முடிச்சுகள் போட்டு மும்முறை கல்லில் தலையை வைத்து எடுத்தால் தலைவலி தீரும் என்று அனுபவ வாயிலாகப் பலர் உரைக்கின்றனர்.

கடமலைக்குண்டு

மயிலாடும் பாறைக்கு வடக்கே உள்ளது. மக்கள்தொகை 23,000. மலைப்பகுதியில் வடதிக்கில் கடைசியாக உள்ளமலை என்ற பொருளில் ஊர்ப்பெயர் உருவாகியுள்ளது.

வருஷ நாடு

கோடைக்கானல் உள்ளிட்ட பழனிமலைத்தொடர், மதுரை மாவட்டத்தின் பெரியமலையாகும். இது 250 சதுர கி. மீ. பரப்பும் 2,300 மீட்டர் வரை (7,000 அடிவரை) உயரமும் உடையது. இதைப்போலவே மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பிரியும் மற்றொரு கிளை வருஷ நாடு ஆண்டிப்பட்டி மலைத்தொடர். இது மதுரை மாவட்டத்தின் இரண்டாவது பெரியமலை ஆகும். இது வருஷநாடு பள்ளத்தாக்கின் தெற்குப்பகுதியின் ஒரு மூலையிலிருந்து தொடங்கி, ஆண்டிப்பட்டி வரையிலும் பரவி உள்ளது. இந்தமலைத் தொடருக்கு இணையாக கம்பம் பள்ளத் தாக்கிலிருந்து பிரிந்து 60 கி. மீ. தொலைவுக்கு வடகிழக்காக ஓடி ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகை ஆற்றை ஒட்டி நிற்பது மேக மலைத்தொடர்.

வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைத்தொடருக்கும் மேகமலைத் தொடருக்கும் இடையே தெற்கு வடக்காக உள்ள பள்ளத்தாக்குத் தான் வருஷநாடு எனப்படுகிறது. இப்பள்ளத்தாக்கின் உயர்ந்த பகுதி கோட்டைமலை; இம்மலையின் உயரம் 6617 அடி.

மூங்கிலாறு, சிற்ருறு முதலியவற்றின் நீருடன் வைகையாறு இப்பள்ளத்தாக்கில் ஓடிவருகிறது. இவ்வாற்றின் கரையில் (1) வருஷ நாடு, (2) மயிலாடும்பாறை, (3) கடமலைக்குண்டு என்ற ஊர்கள் உள்ளன.

வருஷநாடு என்ற சொற்றொடர் மழைமிகுந்த பகுதி என்ற பொருளுடையது. யானைகள் செல்ல இயலாதபடி அடர்த்தியான காடுகள் இருந்ததையும் இப்பெயர் குறிக்கும். கண்டமனூரர் ஜமீனுக்கு இப்பகுதி உட்பட்டிருந்த போது கண்ணுக்கெட்டிய தூரம்வரை யானைகளை நிறுத்தி வைத்து ஜமீன்தார் தன் பெருமையைப் புலப்படுத்தினராம்.

ஏழாம் நூற்றாண்டு அளவில் இப்பள்ளத்தாக்கிலும் மலைச் சரிவுகளிலும் பாலி மொழிபேசிய சமண, பௌத்தத் துறவிகள் வாழ்ந்ததற்கு ஆதாரம் உளது.

மயிலாடும் பாறைக்கு அருகேயுள்ள நரியூத்து என்னும் சிற்றூரில் பெருமழை பெய்து விட்டதும் பழங்காலத்து நாணயங்கள் மண்ணில் பளிச்சிடுகின்றன. அருகேயுள்ள குளத்தின் கரையில் வேலைப்பாடு மிக்க இறையுருவங்களும் தூண்களும் காணப்படுகின்றன.

சிவிநாயக்கன் சுனை உள்ள பாறை இடுக்குகளில் புதையல் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

மயிலாடும் பாறைக்கு அருகே வைகைக் கரையிலுள்ள சங்கிலிக் காட்டில் பாழடைந்த கிணறு ஒன்று இருக்கிறது. இக் கிணற்றின்மேலும் அடியிலும் பலமான இணைப்புடன் மிகநீளமான இரும்புச் சங்கிலி தொங்குகிறது. இந்தச் சங்கிலியின் வரலாறு ஒருவருக்கும் தெரியவில்லை.

வைகைக் கரையில் முறுக்கு ஓடை என்னும் இடத்தில் 300 ஆண்டுகட்குமுன் வெட்டப்பட்ட குடிநீர்க் கிணறு உள்ளது. இதன் நீர் இன்றும் சுவையாகவே இருக்கிறது.

கடமலைக்குண்டுக்கு மேற்கேயுள்ள மேலப்பட்டியில் கண்ணகி இவ்வழியாகச் சென்றபோது தாகம் தீர்த்துக்கொண்ட 'கண்ணகி சுனை' காணப்படுகிறது.

வருஷ நாட்டின் மக்கள் தொகை 70,000. இந்த மக்கள் கடுமையான தொத்து நோய்களுடனும், கொடிய காட்டு மிருகங் களுடனும், முரடான மண்ணை வளப்படுத்தவும் போராடி வெற்றி பெற்றவர்கள். இங்கு கந்தகம், மண்எண்ணெய் முதலியன கிடைக்க வாய்ப்பு இருப்பதாகக் கூறுகின்றனர்.

இங்கு வாழும் மக்களில் பளியர் குறிப்பிடத்தக்கவர். இவர்தம் தொகை 500 இருக்கலாம். அரை குறையான ஆடை, சுருண்டமுடி, கூரிய கண்கள், சிதைந்த தமிழ்ப்பேச்சு ஆகியவை இவர்களைக் காட்டிக் கொடுக்கும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற சங்ககாலப் பாண்டியனிடம் படைத் தலைவனாக விளங்கிய பழையன் மாறன் என்பவன் இப் பழங்குடியைச் சேர்ந்தவன். (ஆதாரம்–அபிதான சிந்தாமணி)

"அலைகளோடும் மலைகளையும் அணிந்த வருஷநாடு
அதிகமழை பொழிந்திடுமாம் நதிகள் பலவற்றோடு
தேக்குமரத் தாக்குகளும் திரண்ட யானைக்கூட்டம்
ஊக்கமுள்ள புலிகரடி ஓரிகளும் நாட்டம்
அரண்களோடு மரங்கள்தென்னை பருத்தி விளைநாடு
பருத்திமரம் பறித்திடுவோர் பாலர்தம் ஏற்றம்"

29. தேனி ஊராட்சி ஒன்றியம்

இந்த ஒன்றியம் தொடங்கப்பட்டபோது, தேனியும் இதில் சேர்ந்திருந்தது. 1964-இல் தேனி, நகராண்மைக் கழகமாக அறிவிக்கப்பெற்றது. அதன்பிறகு இந்த ஒன்றியத்தில் வீரபாண்டி பேரூராட்சியும் 14 ஊராட்சிகளும் அவற்றில் அடங்கிய 45 சிற்றூர்களும் உள்ளன. பி. டி. இராசன் வாய்க்காலால் பல ஊர்களில் பாசன வசதி ஏற்பட்டு நெல், பருத்தி, மிளகாய், சோளம், கம்பு, காய்கறிகள் பயிரிடப்படுகின்றன.

வீரபாண்டி

தேனியிலிருந்து 6 கி. மீ. தொலைவில் முல்லையாற்றின் கரையில் உள்ளது. வீரபாண்டியன் என்ற பாண்டிய அரசன் ஒருவன் இருந்தான் என்றும் கண் ஒளி இழந்ததால் அவன் மீண்டும் கண் ஒளி பெற இங்கு ஒருகோயிலைக் கட்டினான் என்றும் அவன் பெயரால் வீரபாண்டி என்று இவ்வூர் வழங்குவதாயும் கூறப்படுகிறது. கண்வழங்கிய இறைவன் கோயில் கொண்டிருப்பது கண்ணீசுரர் என்னும் பெயரால் வழங்குகிறது. கண்ணுடையஈச்சுரமுடைய நாயனார் கோயில் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வூர் மாரியம்மன் திருவிழா பல நூற்றாண்டுகளாக நாட்டுப் பாடல்களில் புகழப் பட்டிருக்கிறது.

மாலிக்காபூர் படையெடுப்பு ஏற்பட்டபோது இவ்வூரில் புதைத்துவைக்கப்பட்ட விக்கிரகங்கள் சில ஆண்டுகளுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டுள.

குன்னூர்

சுருளிமலைத் தொடரின் மேற்குப் புறக்கோடியில் உற்பத்தியாகும் வைகை ஆறு, கம்பம் பள்ளத்தாக்கின் வழியாக வடக்கு நோக்கி ஓடி இவ்வூர் அருகே கிழக்குப் புறமாகத் திரும்பி மதுரைக்குச் செல்கிறது.

கண்ணகி, இவ்வூர் வழியாகவே நடந்துசென்று கண்ணகி கோட்டம் அமைந்துள்ள இன்றைய கேரளப் பகுதியை அடைந்தாள் என்று கருதப்படுகிறது.

XI உத்தமபாளையம் வட்டம்

இவ்வட்டம் 1-10-1967-இல் ஏற்பட்டது. இதில் போடிநாயக்கனூர், கம்பம், சின்னமனூர் என்னும் நகராட்சி நிலைபெற்ற மூன்று நகரங்களும் ஹைவேவிஸ் நகரியமும் உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம், போடி என்ற நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கியுள்ளன. மக்கள் தொகை ஐந்து லட்சம். வளமான பகுதி. கேரளத்திலிருந்து இவ்வழியாக வருபவர்களுக்குத் தமிழ் நாட்டின் வாயிலாக விளங்குவது.

போடிநாயக்கனூர்

இந்நகரம் மதுரையிலிருந்து 90 கி மீ. தொலைவில் கேரள மாநில எல்லையில் அமைந்தது. 1916 இல் இங்கு நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. மக்கள் தொகை ஏறத்தாழ 45,000.

இந்நகர், முப்புறமும் உயர்ந்தோங்கும் மலைகளால் சூழப்பட்டுக் கிழக்கிலிருந்து வருபவர்களை இருகரம் நீட்டி உள்ளக் களிப்போடு வரவேற்பதுபோல் அமைந்துள்ளது. இம்மலையின் மீது பச்சைப்பசேலெனச் செழித்து வளர்ந்துள்ள இயற்கை வளம் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு எழிற்கோலம் கொண்டு இயற்கையன்னை வீற்றிருக்கும் இந்நகர், கேரளமாநில எல்லையில் மேற்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. உலகெங்கும் தன் மணம் பரப்பிடும் ஏலக்காய் விளைவித்தலிலும்,

ஏலக்காய் வணிகத்திலும் இந்நகர் பெருமைபெற்றது. மலை மீது 20 கி. மீ. தொலைவுக்கு இந்நகரிலிருந்து தமிழ்நாடு-கேரள எல்லையை இணைக்கும் போடிமெட்டு மலைப்பாதை 17 கொண்டை ஊசி வளைவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையின் மிக உயர்ந்த பகுதி, கடல் மட்டத்திற்குமேல் 4,644 அடி (1550 மீட்டர்) உயரமானது. அந்த இடத்தில் ஏலக்காய் பயிரிடுவோர் சங்கத்தார் அசோக முத்திரை பொறித்த தூண் ஒன்றை நட்டுள்ளனர்,

நகர்ப் பெயர்

மதுரை மன்னன் விசுவநாத நாயக்கனின் தளபதி மல்லாக்கான், சிற்றரசர் பலரிடம் தன் மற்போர் ஆற்றலால் திறை பெற்று வந்தான். இந்நகர்ச் சிற்றரசரிடமும் கேட்டான். இவ்வூர்ச் சிற்றரசர் அவன் கேட்ட திறையைக் கொடுக்க மறுத்தார். மேலும் அவன்மீது சீற்றம் கொண்டு அவன் எழுமுன்பே அவன் கைகளைப் பின்கட்டாகக் கட்டி அவனது ஆணவத்தை அடக்கினார். இதைக் கேள்விப்பட்ட விசுவநாத நாயக்கர் மல்லாக்கானை விடுவித்தார். இங்கு அரசாளும் சிற்றரசர்கள் இனி மதுரை நாயக்கர்களுக்குக் கப்பம் கட்ட வேண்டியதில்லை என்றும் அறிவித்தார். மல்லாக்கானின் ஆணவத்தை அடக்கிய சிற்றரசர் சீலபோடைய நாயக்கர் பெயரால் இவ்வூர் கோடைய நாயக்கனூர் என வழங்கும் என்றும் ஆணையிட்டார்.

போடிநாயக்கனூர் ஜமீன்தார்களுள் ஒருவரான காமராஜ பாண்டி நாயக்கர் வாரணாசிக்கு யாத்திரையாகச் சென்று திரும்பி வருங்கால் அங்கிருந்து ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வந்து போடிநாயக்கனூர் எல்லையில் கோயில் கட்டுவித்தார். இக் காரணத்தால் தென்காசியம்பதி; என்னும் பெயரால் இந்நகர் குறிப்பிடப்படுவதும் உண்டு.

ஊத்தாம்புறை ஆறு, கூவலங்காறு, கொட்டகுடி ஆறு, வலசைஆறு, முத்துக்கோம்பையாறு என்னும் ஐந்து ஆறுகள், பாய்வதால் பஞ்சநதி என்ற பெயரையும் போடிநாயக்கனூர் பெற்றிருக்கிறது.

சுற்றுவட்ட வயல்களும் காடுகளும் நீர்வளத்தால் எப்போதும் பச்சையாக உள்ளன. மதுரைமாவட்ட நகராண்மைக் கழகங்களுள் குடிநீர் வசதி சிறந்து விளங்கும் நகரம் இதுவே.

எனவே பச்சையூர் என்ற சிறப்புப் பெயரும் இவ்வூருக்கு உண்டு, சுருக்கமாக ஊர்ப்பெயர் போடி என வழங்குகிறது.

ஆட்சிவரலாறு

ஆந்திர மாநிலத்தில் அனந்தப்பூர் மாவட்டத்தில் ஹூட்டி என்னும் ஊரில் கம்பளநாயக்கர்கள் அரசர்களாக இருந்தனர். அவர்கள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் இப்பகுதிக்கு வந்து வாழலாயினர். அக்காலத்தில் இது திருவாங்கூர் அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. ஒரு காட்டுப் பன்றியால் இவ்வூருக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்க அரசன் முடிவு செய்தான். அதற்கு உதவுபவர்களுக்கு இப்பகுதியை வழங்குவதாகப் பிரகடனப் படுத்தினன் ஹூட்டியிலிருந்து வந்த கம்பளநாயக்க குடும்பத்தைச் சேர்ந்த ஐக்கநாயக்கர் காட்டுப் பன்றியைக் கொன்று தம் வீரத்திற்கு அரசரிடம் இப்பகுதியை மானியமாகப் பெற்ருர். அன்றுமுதல் திருவாங்கூர் அரசர்களுக்கும் போடிநாயக்கனூர் ஜமீன்தார்களுக்கும் நல்லுறவு இருந்துவந்திருக்கிறது. புதிதாக ஜமீன்தார்ப் பட்டம் ஏற்பவர்கள் மரியாதைக்கு அறிகுறியாகத் திருவாங்கூர் அரசர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களை அனுப்பி வந்தனர். திருவாங்கூர் அரசரும் போடி ஜமீன்தார்களும் தங்கள் உரிமைகளை இழந்து விட்டதால் அந்தப் பழக்கங்களும் அழிந்துவிட்டன.

தளவாய் அரியநாதர் ஏற்படுத்திய 72 பாளையப்பட்டுகளுள் போடி நாயக்கனூரே முதலாவதாக அமைந்தது. திருமஞ்சனக் கோட்டையைக் காவல் புரியும் உரிமையைப் போடி நாயக்கனூர் பெற்றிருந்தது.

இங்கு ஜமீன்தாராய் இருந்த ராஜநாயக்கர் என்பவர் ஒளியிழந்த ஒரு பெண்ணுக்குக் கண் வழங்கியதாக கூறுவர். இதனுல் கண்கொடுத்த ராஜநாயக்கர் என்ற பெயரைப் பெற்ருர். இவ்வூர் சுப்பிரமணியர் கோயிலில் இவர் கண்கொடுத்தகாட்சியின் நினைவாக இவரது திருவுருவம் பொறிக்கப் பட்டிருக்கிறது.

இவர் ஆட்சியில் வயலில் நெற்கதிரில் மூன்று முத்துகள் விளைந்தன. அதனுல் இப்பகுதி முத்துக்கோம்பை எனப்படுகிறது.

போடிநாயக்கனூர் ஜமீன்தார்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றும் புரவலர்களாயும் இருந்திருப்பது டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய 'வறுமைப்புலி' என்னும் கட்டுரையிலிருந்து தெரிகிறது.

காமராஜ பாண்டிய நாயக்கர்காலத்தில்ராஜஸ்தானிலுள்ள ஜோத்பூர் அரண்மனையைப் பின்பற்றி இங்கு ஓர் அரண்மனை கட்டப் பெற்றது.

தொழில்

நன்செய் புன்செய் நிலங்களும் தோப்புகளும் இங்கு ஏராளமாக உண்டு. மக்களின் தலையாய தொழில் உழவு. நெல், பருத்தி ஆகியனவும் மலைபடு பொருள்கள் யாவும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

ஏலம், இலவம்பஞ்சு (silk cotton) காப்பி, தேயிலை, மா, பலா, வாழை மற்றும் ஆரஞ்சு, கொய்யா போன்ற பல விளை பொருள்கள் மலைப் பகுதிகளிலிருந்து கிடைக்கின்றன. இந்தியாவிலேயே போடிநாயக்கனூர்ப், பகுதியில்தான் ஏலம், இலவங்காய் முதலியவை அதிகப்படியாக உற்பத்தியாகின்றன. புதிதாகப் போடிநாயக்கனூருக்கு வருபவர்கள், நகரத்தின் வீதிகளில் நடந்து செல்லும்போது ஏலமணம் கமழுவதை நன்றாக உணர்வார்கள். பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து ஏலக்காய் கொள்முதல் செய்வது, இந்நகரின் சிறப்பாகும். உலகத்தின் மொத்த ஏலக்காய் உற்பத்தி 3000 மெட்ரிக் டன்கள் என்றால், போடிநாயக்கனூர்ப் பகுதியில் மட்டும் 1400 மெட்ரிக் டன்களுக்கு மேல் கொள்முதல் செய்யப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களின் பகுதிகளிலும் ஏலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் சராசரி பத்துக் கோடி ரூபாய்க்கு வெளிநாடுகளுக்கு ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்படு கிறது இதில் ஒன்பது கோடி ரூபாய்க்கு ஏலக்காய், போடிநாயக்க னூரிலிருந்து செல்கிறது.

ஏலக்காயை இறக்குமதி செய்யும் நாடுகளில் மத்தியக் கிழக்கு நாடுகள் முதலிடம் வகிக்கின்றன.

சிக்கரியைக் காப்பியுடன் கலந்து பிரெஞ்சுக் காப்பி தயாரிப்பது போல, ஏலக்காயைக் காப்பியுடன் கலந்து ஏலக்காய் காப்பி (Cardamom Coffee) தயாரித்துப் பருகுகின்றனர். ஏல அரிசியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற எண்ணெய்யும் பெரிய விருந்துகளில் பயன்படுத்தப்படுகிறது.

இலவம் பஞ்சு மெத்தைத் தலையணைகளுக்கும் தூக்கத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. 'இலவம் பஞ்சில் துயில்' என்றே பழமொழி வழங்கப்படுகிறது. எந்த நுரை ரப்பர் மெத்தையும் இதற்கு இணையாகாது.

தமிழ்நாட்டில் இலவம்பஞ்சுஉற்பத்தியில்போடிநாயக்கனூர் முன்னணியில் நிற்கிறது. ஆண்டுதோறும் 9 கோடி இலவங்காய் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது. இலவமரம் தனிப் பயிராக மலைச்சாரல்களில் பயிரிடப்படுவதும் இங்குத்தான். 10,000 க்கும் கூடுதலான மக்கள் இலவங்காய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். மரங்களை வளர்ப்பது, காய்கள் பறிப்பது, காய்களை வண்டிகளில் கொண்டு வருவது, பஞ்சுப் பேட்டைகளில் பக்குவம் செய்வது, பஞ்சையும், விதைகளையும், பட்டைகளையும் பிரித்து எடுப்பது போன்ற வேலைகளில் மக்கள் ஈடுபடுகின்றனர். சில குடும்பங்களில் சிறு தொழில்களாகவே இத்தொழிலை மேற் கொண்டுள்ளனர்; பலவியாபாரிகள் பெரும் அளவில் இத்தொழிலை மேற்கொண்டு இங்கிருந்து இலவம் பஞ்சை அண்டையில் உள்ள கேரளா, கருநாடக, ஆந்திர மாநிலங்களுக்கும், தூரத்தில் உள்ள குஜராத் மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கின்றனர். போடிநாயக்க னூரில் தயார் செய்யப்பட்ட தலையணை, மெத்தைகளை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர்.

ஏலக்காய் பயிரிடுவோர் சங்கம்

போடிப்பகுதியில் பெரியதொழில் ஏலக்காய் பயிரிடுவது ஏலக்காய் பயிரிடுவோர் சங்கம் இந்நகரில் வலுவான அமைப்பாக உள்ளது; ஏலக்காய் வாரியம் வகுத்துள்ள அளவுப்படி மாதிரிகள் எடுத்து நல்ல விலைக்கு ஏலவிற்பனை செய்து வருகிறது. உழவர்களுக்குச் சரக்கின் பேரில் சங்கம் முன்பணம் கொடுத்து வருகிறது. சங்கத்தின் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு, கேரளம் ஆகிய இருமாநிலங்களிலும் ஏலத்தோட்டங்கள் உள்ளன.

கயிற்றுப்பாதை

போடியிலிருந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள குரங்கணியில் சுவிட்சர்லாந்து நாட்டில் இருப்பது போல மின்சாரக் கம்பிப் பாதை இருக்கிறது. கேரள மாநிலத்தில் தேவிகுளம் மலையில் விளையும் பொருள்களை இறக்குமதி செய்யவும் அங்குள்ள தோட்டங்களுக்குத் தேவையான பொருள்களை இங்கிருந்து அனுப்பவும் இந்த அமைப்பு உதவுகிறது. தோட்டங்களிலிருந்து

வரும் தேயிலைப் பெட்டிகள் போடிநாயக்கனூரிலிருந்து இரயிலில் சென்னைத் துறைமுகத்திற்கு அனுப்பப்படுகின்றன. இதற்காக போடிநாயக்கனூர்-மதுரை இரயில் பாதை ஏற்பட்டிருக்கிறது.

போடிமெட்டு என்னும் இரயில்பாதை வழியே மூணாறு, தேவிகுளம் நகரங்களை அடையலாம்.

போடியில் காணத்தக்கவை:- குன்றின் மீதுள்ள பரமசிவன் கோயில், தம்பட்டக்கரடு, கிளிக்கூடு, தீர்த்தத்தொட்டி.

நிலா நாளில் கண்டு மகிழத்தக்கவை	–	முப்புறமும் உள்ள அக்காள் மலை, தங்கை மலை, மரக்கலராயர்மலை.
போடியின் பெருமை	–	குடிநீர் வடிகட்டும் நிலையம், சுவையான குடிநீர்.
போடியின் மறுபெயர்	–	தென்காசை
போடி என்னும் சொல்லின் பொருள்	–	உழவர் தலைவன் (தமிழ் நாட்டில்); – நெற்செய்கைக்கு வேண்டும் மூலதனம் போடுபவர் (இலங்கையில்)
வரலாற்றுக் குறிப்பு	–	கொட்டகுடி ஆற்றின் இருமருங்கிலும் முதுமக்கள் தாழிகள் உள்ளன.

கம்பம்

இது நகராண்மைக்கழகம் உள்ள நகரம்; இப்போதுள்ள நகராண்மைக்கழகம் நம்நாடு சுதந்தரம் பெற்றபோது ஏற்பட்டது. ஆனால் இங்கு 1866-இலேயே ஒரு நகராண்மைக்கழகம் அமைக்கப்பட்டுச் சில ஆண்டுகளுக்குப் பின் கலைக்கப்பட்டது. இவ்வூரில் உதவி கலெக்டர் அலுவலகமும் 19-ஆம் நூற்றாண்டில் இருந்தது.

மதுரை மாவட்டத்தின் தென்மேற்கு எல்லையில் உள்ள இந்நகரின் பெயரைக் குறித்து மூன்று கருத்துகள் உண்டு. (1) தளவாய் அரியநாத முதலியார் இப்பகுதிக்கு வந்ததன் நினைவாக நடப்பட்ட ஒரு கம்பத்தைச் சுற்றி உருவான ஊராதலால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது. (2) கம்பம் நாயக்கர் என்ற பெயருடைய குறுநில மன்னர் இங்கு வாழ்ந்ததால், சுருக்கமாகக் கம்பம் என்ற பெயர், ஊருக்கும் வழங்கிற்று. (3) ஆந்திர மாநிலத்து பிரகாசம் (கர்னூல்) மாவட்டத்திலுள்ள கம்பம் என்னும் ஊரினர் இப்பகுதிக்கு வந்து குடியேறி உண்டாக்கிய ஊர்.

இவ்வூரருகே குண்டலக் கண்மாய் ஆற்றின் குறுக்கே கலிங்க அரசர்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டிய அணை உள்ளது; இதை நாயக்க மன்னர்கள் புதுப்பித்துள்ளனர்.

இந்நகரின் மக்கள் தொகை 70,000 இருக்கும். எல்லா மதத்தினரும் வாழ்கின்றனர். வேளாண்மையே பெரிய தொழில். வண்ணத் துப்பட்டிகள் இங்கு தயாராகின்றன. மூணாறு, பீர்மேடு போன்ற கேரளத்துப் பகுதிகள் பலவற்றில் இந்நகரத்து மக்கள் ஏலக்காய், காப்பி, மிளகு, தேயிலை, ரப்பர் தோட்டங்களின் முதலாளிகளாகவும், தொழிலாளராகவும், அப்பொருள்களை விற்பனை செய்யும் வணிகராகவும் உள்ளனர். சுருங்கச் சொன்னால், அவர்களை வாழவைப்பது கேரளம்.

பெரியாறு அணை கட்டப்பட்டபோது, இந்நகரம் மற்றும் சுற்றுப்புறத்து மக்கள் நூற்றுக்கணக்கில் உயிரிழக்க நேர்ந்தது. அணை கட்டுவதற்குத் தேவையான பொருள்களையும் கருவிகளையும் அக்காலத்தில் தலைச்சுமையாகவே கொண்டுபோக வேண்டியிருந்தது. காட்டு மிருகங்களுக்கு இரையானவர் பலர்; தொத்து நோய்களுக்கு இரையானவரும் பலர்.

மலையடிவாரத்தில், கம்பத்துக்கு அருகேயுள்ள 'லோயர் காம்ப்' என்ற ஊரில்தான், மலைமீதுள்ள பெரியாறு ஏரித் தண்ணீரைப் பெரிய குழாய்கள் வாயிலாகக் கொண்டுவந்து, மின் உற்பத்தி நிலையம் அமைத்திருக்கிறார்கள்.

லோயர் காம்பிலிருந்து குமிளி 6 கி. மீ. இவ்வழியில் மலைமீது நடந்துசென்று இருபுறமும் இனிய காட்சிகளைக் கண்டு இன்புறலாம். நடந்து சென்றால்தான் அது இயலும்.

குமிளி என்னும் ஊரின் எல்லை தொடங்கும்போது தமிழ் நாட்டின் எல்லையும் முடிவடைகிறது. ஊர் வாயிலில் இதைக் குறிக்கும் வளைவு ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள்.

குமிளி ஊர் எல்லையில் ஒரு பெரிய சோலை இருக்கிறது. இந்தச் சோலையினூடே பெரியாறு பாய்கிறது. பெரியாறு, ஆடுதாண்டு காவிரிபோல, இந்த இடத்தில் மிகச் சிறிதாக இருப்பது அனைவர்க்கும் வியப்பூட்டும். இங்கு நாம் காண்பது பெரியாறு ஏரியின் வால்புறம்தான்!

தேக்கடிக்கு அருகே மலையைக் குடைந்து சுரங்கப்பாதை வெட்டியிருக்கிறார்கள். பெரியாற்றின் நீர் இந்தப் பாதை வழியாக பயங்கரமான வேகத்தில் பாய்கிறது. பிறகு பெரிய குழாய்களின் வழியாகச் சென்று லோயர் காம்பிலுள்ள மின்சார நிலையத்தில் புகுந்து அங்குள்ள மூன்று மாபெரும் மின்சார உற்பத்தி இயந்திரங்களைச் சுழலச் செய்கிறது. அவற்றைச் சுற்றிவிட்டு இந்த நீர் முழுவதும் வைகை அணையில் போய் விழுகிறது.

கம்பம் நகரில் முஸ்லிம்கள் குறிப்பிடக் கூடிய அளவு வாழ்கின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் பூர்வீக முஸ்லிம்கள். ஏனையோர் அருகேயுள்ள ஊர்களிலிருந்தும் இராஜபாளையத்திலிருந்தும் குடியேறியவர்கள். ஆர்க்காடு நவாப் காலத்தில் கம்பம் முஸ்லிம்களின் நாட்டாண்மைக்காரர் முன்னின்று அமைத்தது வாவேர் பள்ளிவாசல் என்ற ஜாயிமஸ்ஜித்; இராஜபாளையத்தார் கட்டியிருப்பது 'மஸ்ஜிதுல் இலாஹி' என்ற புதுப் பள்ளிவாசல்: இவர்கள் மதரஸாக்கள், இலாஹி ஓரியண்டல் அரபுப் பள்ளி முதலியவற்றை நடத்திவருகின்றனர்.

பெரியாறு அணை கட்டுவதற்கு உறுதுணையாக இருந்த மீரா ராவுத்தர் குடும்பத்தாரை, மலைவாழ் மக்கள் 'பட்டத்து முதலாளி' என்ற சிறப்புப் பெயரால் பாராட்டி வருகின்றனர்.

கன்னடம் பேசும் ஒக்கிலியர் ஒரு மடம் கட்டி, அதில் கோவில் மாடுகளை வளர்க்கின்றனர். இவ்வூர்க் கோவில்களுள் கம்பராயப் பெருமாள் கோவில் குறிப்பிடத்தக்கது.

சின்னமனூர்

மதுரைக்கு மேற்கே 100 கி. மீ. தொலைவு. பெரியகுளம்-உத்தமபாளையம் சாலையில் பெரியகுளத்திலிருந்து 35 கி. மீ. தொலைவில் பெரியாற்றின் கரையில் அமைந்துள்ளது. தேனியிலிருந்து 22 கி. மீ. தேனிதான் இவ்வூருக்கு உரிய இரயில் நிலையம். பேருந்துப் போக்குவரத்து மிகுதியால், இப்பகுதியில் இரயிலைப் பயன்படுத்துவது அரிது.

மக்கள்தொகை 25,000. மூன்றும் நிலை நகராண்மைக் கழகம் உள்ளது.

நெல் வயல்களும் தென்னந் தோப்புகளும் இவ்வூரைச் செழிப்படையச் செய்துள்ளன. எண்ணெய் ஆலைகள் பல இந்நகரில் இயங்குகின்றன. தேயிலை முதலிய தோட்டப் பொருள்கள் இங்கிருந்து வெளியூர்களுக்குச் செல்லுகின்றன. பெரியாறு மின்சார உற்பத்தி நிலையம் உள்ள லோயர் காம்ப் இங்கிருந்து 25 கி. மீ தொலைவிலுள்ளது.

இராணி மங்கம்மாள் காலத்தில் சின்னம நாயக்கர் என்பவர் இவ்வூரை உண்டாக்கியதால் அவர் பெயரால் இவ்வூர் வழங்கி வருவதாகச் சிலர் கூறி வருகின்றனர். இவ்வூர் மிகப் பழமையானது. பழைய பெயர் அரிகேசரிநல்லூர்.

9, 10-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இராச சிம்ம பாண்டியன் கட்டிய பூலாநந்தீசுவரர் கோயில் இவ்வூரில் இருக்கிறது. இக்கோயிலில் இராசேந்திர சோழன் கல்வெட்டுகளும் 11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி நடத்திய பாண்டிய அரசர் பலருடைய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கோயிலில் பல திருவிழாக்கள் நிகழ்கின்றன. எத்துணை உயரம் அல்லது பள்ளத்திலிருந்து நோக்கினும் பார்ப்பவர் தலையின் மட்டத்திற்குச் சமமாகத் தோற்றம் தரத்தக்க அதிசயச் சிவலிங்கம் இங்கு இருக்கிறது.

ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே பழுக்கும் ஒரு வகைப் பழமும் இந்நகரின் சிறப்பு ஆகும்.

முதல் பராந்தக சோழன் கட்டிய கன்னிகா பரமேசுவரி கோவில் இந்நகரில் உள்ளது.

வரலாற்றறிஞர் பெருமிதத்துடன் குறிப்பிடும் சின்னமனூர் செப்பேடுகள் இந்நகரில் கிடைத்தவையே. இவற்றிலிருந்து அரிகேசன் முதல் இரண்டாம் இராசசிம்மன்வரை ஆட்சி செய்த பாண்டிய மன்னர் தலைமுறை தெள்ளத் தெளியத் தெரிகிறது. இந்தச் செப்பேடுகளை இராசசிம்ம பாண்டியன், இந்நகரில் (இராச சிங்க மங்கலத்தைச் சார்ந்த புழல் என்னும் இடத்தில்) தங்கிய போது வெளியிட்டான். இந்தச் செப்பேடுகளைப்பற்றிச் சென்னையில் 1960-ஆம்ஆண்டு அளவில் இயங்கிய தமிழ்வரலாற்றுக் கழகம், பி. ஸ்ரீ. அவர்களைக்கொண்டு வெளிட்ட 'பாண்டியர் செப்பேடு முப்பது' என்னும் நூலில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

தமிழக அரசின் நூலகத்துறை இயக்குநராக உள்ள திரு தில்லைநாயகம் இவ்வூரினர். இவர் நூலக இயக்கத்தை விரித்தும் நூற்றுக்கை நூலகப் பணி பற்றிய நூல்களை எழுதியும் நூலக விழாக்கள் நடத்தியும் 'ஆளுக்கு ஒரு நூல், நூலுக்கு ஒரு ஆள்' என்ற கோட்பாட்டைப்பரப்பியும் தமிழ் மக்களிடையே நூலக உணர்வை உண்டாக்கியுள்ளார்.

ஹைவேவீஸ் நகரியம்

இந்த நகரியம் 1964-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. உத்தமபாளையம் வட்டத்தில் கேரளமாநிலத்துக்கு அருகே 5,100 அடி உயரமுள்ள மலைப்பகுதியில் அமைந்தது. அலை அலையான மலைகளும் அடர்த்தியான காடுகளும் இயற்கை வளமும் சுருளி ஆறு அணைக்கட்டுப்பகுதியும் உடையது.

நகரியத்தின் எல்லைகள்

வடக்கு : கம்பம் பள்ளத்தாக்கும் வனமும்
தெற்கு : கேரள மாநில வனம்
மேற்கு : கம்பம் பள்ளத்தாக்கும் வனமும்
கிழக்கு : ரிவர்சைடு எஸ்டேட், கண்டமனூர் வனம், கேரள மாநிலத்தின் வனம்.

சின்னமனூரிலிருந்து இது 40 கி. மீ. தொலைவு. பஸ் வசதி உண்டு. சுருளி அருவிக்குக் கிழக்கேயுள்ள மலையில் இந்த நகரியம் அமைந்துள்ளது. மொத்தப்பரப்பு 10,000 ஏக்கர்.

இந்த 10,000 ஏக்கரும் எவ்விதத்திலும் பயன் படாமல் அடர்ந்த காடுகளாக இருந்தது. 1947-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் சிலர் இதை வந்து பார்வையிட்டு மாநில அரசாங்கத்தின் இசைவுடன் 10,000 ஏக்கரையும் ஒப்படைப்புப் பெற்று ஒரு கோடி ரூபாய்க்குமேல் முதலீடு செய்து தேயிலை பயிரிட்டனர். மேலும் தொழிலாளர், பணியாளர், மேலாளர் ஆகியோருக்கு 1,400 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மிகப் பெரிய தேயிலைத் தொழிற்சாலைகள் இரண்டும், ஒரு பணிமனை யும் அமைத்தனர். மொத்தம் இங்கு ஆறு தோட்டங்கள் உள்ளன. 1. மேகமலை, 2. ஹைவேவீஸ், 3. மணலாறு, மேல்மணலாறு, 4. வெண்ணியாறு, 5. மகராஜாமெட்டு, 6. இரவங்கல்லாறு, இவை யாவும் 'The Madras Tea Eastate (P) Ltd' என்னும் குழுவுக்குச் சொந்தமானவை. இதைத் தவிரச் சில புறம்போக்குப் பகுதிகளும் உண்டு.

இந்தக் கம்பெனியார் நன்கொடையாக அளித்த இடத்தில் நகரியம் அலுவலகக் கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறது. நகரியத்தின் மக்கள் தொகை 6,420.

நகரியம் ஓராயிரம் உயர்ரகப் பால்மாடுகள் வைத்திருக் கிறது. நகரிய நிதியிலிருந்து கால்நடை மருந்தகமும் தங்கும் விடுதியும் திரை அரங்கமும் கட்டப்பட்டிருக்கின்றது.

தொழிலாளர்களுக்குத் தோட்ட முதலாளிகளே மருத்துவமனை வைத்திருக்கிறார்கள். இங்குத் தயாராகும் தேயிலைத் தூள் தரம்வாரியாக பிரித்துக் கம்பெனி லாரிகளில் கொச்சிக்கு அனுப்பப்பெற்று அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்றது.

யானை, சிறுத்தை, மான், காட்டாடுகள் இரவில் நகரியம் எங்கும் திரிகின்றன. அவை யாருக்கும் தீங்கு விளைவிப்பதில்லை, மாரிக்காலத்தில் மழைக்கும் பனிக்காலத்தில் பனிக்கும் குறைவில்லை. பங்குனி, சித்திரை, வைகாசியில் இங்குக் கம்பளி உடை தேவைப்படும்.

நகரியத்துக்குள் 3 கி.மீ. தொலைவுக்குத் தோட்டத்துக்குச் சொந்தமான நெடுஞ்சாலை உள்ளது. பொதுமக்கள் இதைத் தர்ராள்மாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் கம்பெனியின் உரிமையை நிலைநாட்டுவதற்காக ஆண்டுதோறும் ஜூன் 30-ஆம் நாள் இந்தச்சாலை மூடப்படுகிறது. அன்று எந்த வாகனமும்

செல்ல இயலாது. எல்லா அலுவலகங்களுக்கும் கம்பெனியார் முன்கூட்டியே அறிவித்து விடுகின்றனர். சென்னை நகரில் வாலாஜாரோடு இவ்வாறே ஆர்க்காடு நவாப்பால் அமைக்கப் படுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஹைவேவீஸ் எஸ்டேட்டில் 1971 டிசம்பர் 9 ஆம் நாள் திருவனந்தபுரத்திலிருந்து மதுரைக்கு வந்து கொண்டிருந்த இந்தியன் ஏர்லையன்ஸ் கம்பெனியின்ஆவ்ரோவிமானம்—இங்குள்ள மேகமலை எஸ்டேட்டில்-விபத்துக்குள்ளாயிற்று. அந்த இடத்தி லேயே அனைவரும் உயிர் நீத்தனர். தோட்டத்து அலுவலர்களும் நகரிய அலுவலர்களும் அப்போது செய்தபணி பாராட்டுக்குரியது.

30. உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தில் உத்தமபாளையம், கோம்பை தேவாரம், பண்ணைபுரம் ஆகிய நான்கு பேரூராட்சிகளும் 13 ஊராட்சிகளும் உள்ளன.

உத்தமபாளையம் ஒரு தனித் தாலுகாவாகவும் உள்ளது கேரளத்துக்குச் செல்லும் சாலையும் சுருளி அருவியும் ஏலக்காய்த்· தோட்டங்களும் இவ்வட்டத்துக்குப் பெருமை தருகின்றன. தமிழ் நாட்டிலேயே மழை மிகுந்த பகுதியென்று இதைச் சொல்லலாம். மாவட்டத்தின் பல பகுதிகளில் 35 அங்குலம்தான் பெய்கிறது. இங்கு 80 அங்குலம் பெய்வது வழக்கம். பெரியாற்றின் பயனைப்பெறும் பெரும் நிலம் இந்த வட்டத்திலேயே இருக்கிறது. இங்கு நன்செய் நிலங்கள் இரண்டுபோகம் விளை கின்றன. கடலை, சாமை ஆகிய புன்செய்த் தானியங்களும் இரண்டு போகம் விளைகின்றன. மஹாகாராஜா மெட்டு என்ற பகுதியில் தேயிலை, ஏலக்காய், பாக்குத் தோட்டங்கள் உள்ளன.

முஸ்லிம்களும், கவுண்டர்களும், தேவர்களும், உடையார் களும் இங்கு பெரும் அளவில் வாழ்கின்றனர். நெல் அரைக்கும் ஆலைகள் ஏராளமாக உள்ளன. மலை அடிவாரத்தில் பலா, மா மிகுதி. மரங்களின் அடர்த்தியால் தச்சுத்தொழில் பெருகி வீடு தோறும் கட்டில்கள் உள்ளன.

உத்தமபாளையம்

இவ்வூர் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த கம்பம் பள்ளத்தாக்கில் இருக்கிறது. இப்பள்ளத்தாக்கின் தலைநகரம் போன்றது. மக்கள் தொகை 15,000 இதில் சரிபாதி முஸ்லிம்கள்.

முல்லையாற்றின் பெரு வளத்தால் எங்கும் பசுமையும் செழிப்பும் பரந்து காணப்படும். பாங்குக்கு இந்நகர் எடுத்துக்காட்டாக உள்ளது. ஊரினூடே சுருளி ஆறு செல்லு கிறது. இங்கிருந்து 20 கி.மீ. தொலைவில் சுருளி அருவி உளது.

உத்தமநாயக்கர் என்பவர் இவ்வூரில் வந்து தம் ஆட்களை இறக்கி, பாளையம் அமைத்ததால் இவ்வூர் உத்தமபாளையம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

உள்ளூர் மக்கள் இவ்வூரை 'பாளையம்' என்று அடைமொழி எதுவுமின்றிச் சுருக்கமாகக் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவதற்குக் காரணம், இதுவே மதுரைச் சீமையில் ஏற்பட்ட முதலாவது பாளையம் என்பர்.

நீர் வளமும் நிலவளமும் நிறைந்த தென்காளத்தி என்றும் இவ்வூரார் குறிப்பிடுவர். இங்கே ஒரு காளத்தி கோவில் இருப்பது இக்கருத்துக்குத் துணையாக உளது.

உத்தமபாளையம் என்ற பெயருக்கு ஏற்ப, ஒழுக்கம் வாய்மை, நாணயம், ஈகை, நகை, இன்சொல், இகழாமை ஆகிய பண்புகள் கொண்ட உத்தமர் பலர் இவ்வூரில் பல சாதிகளிலும் மதங்களிலும் தோன்றியுள்ளனர். புகழ்பெற்ற சர் பி.டி. இராசன், இவ்வூரினர். கருத்தமீரரராவுத்தர், ஹாஜி என்.கே.எம். முஹம்மது மீரான், வள்ளல் மக்கா ராவுத்தர், வள்ளல் பீர் முஹம்மது ராவுத்தர் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெருவள்ளல் கருத்தா ராவுத்தர் நிறுவிய கல்லூரி இந்நகர்க்குப் பெருமை தருகிறது.

பாண்டி நாட்டில் சமணம் தழைத்தோங்கிய ஊர்களில் உத்தமபாளையமும் ஒன்று. ஊருக்கு வடமேற்கே சிறு தூரத்தில் கருப்பணசாமி பாறை என்ற பெரிய பாறை உள்ளது. இங்கே சமணத் துறவிகள் இருந்த குகைகளும் கல்வெட்டுகளும் உள்ளன. சமண தீர்த்தங்கரர் இருபத்தொருவரின் உருவங்கள் செதுக்கப் பட்டிருப்பதோடு அவர்கள், அவற்றைச் செதுக்கியவர்கள் ஆகியோர் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இனிய நீர்ச்சுனை ஒன்றும் இப்பாறையில் இருக்கிறது. பாறையும் சிற்பங்களும் இந்திய அரசின் தொல்பொருள்துறையின் பாதுகாப்பில் இருந்து வருகின்றன.

பாளையத்தில் முஸ்லிம்கள் செல்வாக்குடன் விளங்குகின்றனர். இவர்கள் கருப்பட்டி, நல்லஆண்பிள்ளைப்பட்டி, திருநெல்வேலி, தாளையூற்று, சிவகாசி முதலிய ஊர்களிலிருந்து 16-ஆம் நூற்றுண்டிலும் அதற்குப் பிறகும் இங்கே குடியேறியதாகத் தெரிகிறது. எட்டுப் பள்ளிவாசல்கள் இவ்வூரில் இருக்கின்றன. அரபிமொழி கற்பிக்கும் பள்ளியும் உள்ளது.

புலவரும் புரவலருமான கா. சி. முஹம்மது இஸ்மாயீல் 'சதாவதானி ஷைகுத் தம்பிப் பாவலர் கோவை' பாடியுள்ளார். இசுலாமியமார்க்க விற்பன்னர்கள் என்று தமிழ்நாட்டு முஸ்லிம்கள் போற்றுபவர்களில் மூவர் (அபூபக்கர் ஹஸரத், மௌல்வி எஸ்.எஸ். அப்துல் காதிர் பாகவி, மௌல்வி பி. எஸ். கே. முஹம்மது இப்ராஹீம் பாகவி) இவ்வூரினர். ஆசுகவி அப்பாவு உபாத்தியாயர், பீர்காளைப் புலவர் போன்ற பலரும் இவ்வூரினர்.

தேவாரம்

இவ்வூர் மதுரையிலிருந்து 60 கி. மீ. உத்தமபாளையத்திற்கு வடமேற்கில் 11 கி. மீ. தொலைவு. மக்கள் தொகை 13,000. 18-ஆம் நூற்றுண்டில் திண்டுக்கல் சீமையைச்சேர்ந்த பாளையமாக இருந்தது. ஏலக்காய்த் தோட்டங்கள் இப்பகுதியில் ஏராளமாக இருக்கின்றன. ஆகஸ்டு முதல் மார்ச்சுவரை ஏலக்காய் கிடைக்கும் பருவம். ஆனி மாதம் தொடங்கித் தீபாவளி வரை இங்கு நல்ல சாரல் உண்டு. அக்காலத்தில் இங்கு வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

இங்கு வாழும் நடுத்தர மக்கள் இறுங்குச் சோளத்தை விரும்பி உண்கின்றனர்.

இராயப்பன்பட்டி

இங்குச் சிறந்ததொரு கத்தோலிக்கத் தேவாலயம் இருக்கிறது.

அநுமந்தன்பட்டி

பெரியாற்றுக்குச் செல்லும் வழியில் உத்தமபாளையம் ஓரமாக உள்ள ஊர். இவ்வூர் எல்லையில் தோப்பின் நடுவே அண்ணன்மார் கல் என்னும் கல் இருக்கிறது. தவறுன ஒழுக்கமுடைய தங்கள் சகோதரியைக் கொலை செய்த இருசகோதரர்கள் அவள் நினைவாக எழுப்பிய கல் என்று கூறப்படுகிறது.

கருப்பணசாமிமலை

கல்வெட்டுகளும் கலை அழகுள்ள சிற்பங்களும் உள்ளன. இவற்றை மழையிலிருந்தும் வெப்பத்திலிருந்தும் காக்கப் புதை பொருள்-துறையினர் ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கின்றனர்.

கோம்பை

வரலாற்றாலும் மலைவளத்தாலும் பெருமையுடைய சிறு நகரம் கோம்பை. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இயற்கை எழிலுடன் அமைந்தது. உத்தமபாளையத்துக்கு வடமேற்கே 6 கி. மீ. தொலைவு. மக்கள் தொகை ஏறத்தாழ 15,000.

மலைசூழ்ந்த முடக்கில் அமைந்த காரணத்தால் கோம்பை என்று இவ்வூர் பெயர் பெற்றதாகக் கூறுவர். இம்மாவட்டத்தில் அத்திக்கோம்பை என்னும் ஊரும், திருச்சி மாவட்டத்தில் கல்லாத்துக் கோம்பை என்னும் ஊர் சேலம் மாவட்டத்தில் வாழைக் கோம்பை என்னும் ஊரும் உள்ளன.

அடர்த்தியான காடுகள் இப்பகுதியில் உள்ளன. சந்தன மரமும் அவற்றின் பிற விளைபொருள்களும் இங்கு விற்பனைக்கு வருகின்றன. நன்செய், புன்செய் பயிர்கள் தவிர ஏலக்காய் வேளாண்மையும் இங்கு மிகுதியாய் நடைபெறுகிறது.

18 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை கோம்பை, திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த ஒரு பாளையமாக இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டதும், இவ்வூர்ப் பாளையக்காரர் ஆங்கிலேயர்க்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டுக் கலகம் செய்தார். அதனால் பாளையத்தாரின் உரிமைகள் பறிக்கப்பட்டன. 1930-31 இல் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலிலும் இவ்வூரினர் பெரிதும் பங்கு கொண்டனர்.

மலையடிவாரத்தில் அரங்கநாதர் கோயிலும் ஊருக்குள் திருமலைராயப் பெருமான் கோயிலும் உள்ளன. வைகாசி விசாகத் திருவிழா நன்கு கொண்டாடப் பெறுகிறது.

இப்பகுதியில் ஒருவகை நாய் இனம் நன்கு பேணி வளர்க்கப்பட்டு, கோம்பை நாய் என்று பெயர் பெற்றிருக்கிறது. மனிதன்பால் நன்றிகாட்டும் உயிரினங்களில் தலையாயதான நாயை வளர்ப்பது நாகரிகக் குறைவு என்ற தவறான மனப்பான்மையால், இப்போது இத்துறையில் இவ்வூராரின் ஆர்வம் குறைந்து வருவது வருந்தற்குரியது.

31. சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம்

இது 17 ஊராட்சிகளை உடையது. இப்பகுதியில் ஆண்டிப்பட்டி, கண்டமநாயக்கனூர், ஸ்ரீபாலக்கோட்டை, சின்னமனூர் ஆகிய ஊர்களுக்கிடையே மங்கம்மாள் அமைத்த சாலைகள் உள்ளன. அவை அண்மையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கூடலூர் இரயில் பாதை ஏற்பட்டால் இப்பகுதியும் பயனடையும். இப்பகுதிச் செல்வர் பலர் மலைத் தோட்டங்கள் நடத்துவதில் நிறைந்த அனுபவம் பெற்றுக் கேரளத்தில் மலைத் தோட்டங்களுக்கு உரிமையாளர்களாக இருக்கின்றனர்.

வயல் தகராறுகளால் குத்தும்வெட்டும் ஏற்பட்டுக்கொலையில் முடிந்து பிணத்தைப் பெரியாற்றில் போட்டு விடுவார்கள். ஆற்றுக்குள் இறங்கிப் பிணங்களைத் தேடும் பணியில் போலீசார் ஈடுபடுவர். இது காட்டுவளம் மிகுந்த ஒன்றியம். பூலா என்பது ஒருவகைப் புதர். அது செடியும் அன்று மரமும் அன்று. இங்குள்ள பூலா வனத்தில் மாலிக்காபூர் ஒளிந்திருந்ததாகக் கருதப்படுகிறது. பூலா நந்தபுரம் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. சின்னமனூர்நந்தியெம் பெருமானுக்குப் பூலாநந்தீசுவரர் என்று பெயர்.

32. கம்பம் ஊராட்சி ஒன்றியம்

இந்த ஒன்றியத்திலிருந்த ஹைவேவிஸ் எஸ்டேட், தமிழ் நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டப்படி தனிநகரியமாக இயங்கிவருகிறது. அதன்பிறகு கூடலூர் காமயக்கவுண்டன்பட்டி, அனுமந்தம்பட்டி, புதுப்பட்டி, ஆகிய நான்கு பேரூராட்சிகளும் நாரயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, கருநாகமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, ஆகிய நான்கு ஊராட்சிகளும் உள்ளன.

கம்பம் பள்ளத்தாக்கு, பழனிமலைத் தொடருக்கும் வருஷ நாடு – ஆண்டிப்பட்டி மலைத் தொடருக்கும் இடைப்பட்டது.

மலைகளிலிருந்துவிழும் ஆற்று நீரால் இப்பள்ளத்தாக்கில் வெள்ளம் போல நீர் எப்போதும் நிறைந்திருக்கிறது. இங்கு வெப்பம் குறைவு.

பயிர் வளத்திலும் வாணிகத்திலும் சிறந்த இந்தப்பகுதி, மதுரை மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது .60,000 ஏக்கர் நிலங்களை விளைவிக்கும் பெரியாற்று அணை இங்கு உள்ளது. லோயர் காம்பில், மின்சார உற்பத்தி நிலையம் இயங்குகிறது.

காடுகளில் அரக்குப் பயிரிடுதல் ஒரு பெரிய தொழிலாக உளது. மின்சார இன்சுலேட்டர்கள், இசைத்தட்டுக்கள், மருந்து ஆகியவை செய்வதற்கும் சாயத் தொழில் முதலியவற்றுக்கும் அரக்குத் தேவைப்படுகிறது. கம்பத்தில் அரக்கு உற்பத்தித் தொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது. 1958 வரை இது கிருஷ்ணகிரி மாவட்டத்துத் தேன்கனிக்கோட்டையில் இருந்து வந்தது.

கம்பம் பள்ளத்தாக்கில் பழுதடைந்த பெருமாள் கோயில் ஒன்று இருக்கிறது. இதில்காணப்பெறும் 17-ஆம் நூ. கல்வெட்டு, மங்களாதேவி கோயிலுக்கு நன்கொடைகள் வழங்கப்பெற்றதைக் குறிக்கிறது. மங்களாதேவி என்ற சொல், கண்ணகியைக் குறிக்க சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

கூடலூர்

35,000 மக்கள் வாழும் இவ்வூர் 1901-இல் பேரூராட்சி ஆயிற்று. விரைவில் நகராண்மைக் கழகம் ஏற்படக்கூடும்.

பெரியகுளத்திற்குத் தென்மேற்கே 61 கி. மீ., கம்பம் பள்ளத்தாக்கின் தலைப் பகுதியிலிருந்து 8 கி. மீ. தொலைவுகளில் அமைந்தது. கூடலூர்-கம்பம் 10 கி. மீ. கூடலூர்–குமுளி 11 கி. மீ. குமுளி-அப்பர் காம்ப் 5 கி. மீ. அப்பர் காம்ப் –லோயர் காம்ப் 7 கி மீ.

பெரியாற்றிலிருந்து கூடலூருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பெறுகிறது.

இது, திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த 26 பாளையங்களுள் ஒன்றாகும். திண்டுக்கல்லிலிருந்து கூடலூர் வரை இரயில் பாதை போட வேண்டும் என்ற எண்ணம் நீண்டகாலமாக அரசினரின் திட்டத்தில் உள்ளது.

இப்பகுதி, இடையிடையே திருவாங்கூர் அரசர்களின் ஆட்சியிலும் இருந்து வந்திருக்கிறது. அந்த அரசர் கி. பி. 1669-இல் இவ்வூர், கூடல் அழகியபெருமாள் கோயிலுக்கு மானியம் வழங்கியதைக் குறிக்கும் கல்வெட்டு அக்கோயிலில் உளது.

இவ்வூர்ப்பெயர் குறித்து வழங்கும் மூவகைக் கருத்துக்கள் வருமாறு :—

1) முல்லையாறு, எரவங்கலாறு, சுருளியாறு இம்மூன்று நதிகளும் நகரின் புறப்பகுதியில் கூடுவதால் "கூடல் ஆறு" என்ற பெயர் மருவி கூடலூர் என்றாயிற்று.

2) இவ்வூரில் தாமரைக்குளம் செல்லும் பாதையில் ராஜாக்கிணறு உள்ளது. அந்நாளில் இக் கிணற்றைத் தோண்டும் போது பேசிய கூலி ரூ 100க்கு மேலாக கூட நூறு வேண்டும் என்று தொழிலாளர்கள் கேட்டார்களாம். 'கூட நூறு' ரூபாய் கேட்டதால் 'கூடனூறு' என்பது கூடலூறு ஆக மாறியது.

3) மதுரைக் கூடல்அழகரிடத்து பூஞ்ஞாத்துத் தம்பிரான் அவர்கள் பெரும் பக்திகொண்டு விளங்கினார்கள். இதன் விளைவாக இவ்வூரில் மேற்குப் பகுதியில் கூடல் அழகிய பெருமாள் கோயில் கட்டப்பெற்றது. கூடலழகர் – என்ற இறைவனின் திருப்பெயரே கூடலூரானதாம்.

புலவர்கள்: கூடலூர் கிழார் [புறம்]

இங்கு வாழும் கவுண்டர் வகையினர்: காப்பிலிக் கவுண்டர், குறும்பக் கவுண்டர், மூணுவலைவிக் கவுண்டர், அலுப்பக் கவுண்டர்.

தொழில்: கேப்பை, சாமை, காணம் வேளாண்மை.

சுருளிப்பட்டி

கம்பத்திலிருந்து 10 கி. மீ. தொலைவிலும் உத்தமபாளையத்திலிருந்து 20 கி. மீ. தொலைவிலுமுள்ள சிற்றூர். இங்குப் பெரியாறு சுருளியாற்றுடன் கலக்கிறது. 1937 முதல் இப்பகுதிக் காடுகளில் தேக்குமரம் பயிரிடப்பட்டு வருகிறது. யானைகளின் அட்டகாசம் இன்றேல் இங்கே தேக்கு பெரிய அளவில் கிடைக்கும்.

சுருளிப்பட்டியிலிருந்து 5 கி. மீ. தொலைவில் சுருளிமலையும் சுப்பிரமணியசுவாமி கோயிலும் அருவியும் உள்ளன. இங்குக் கோயில் கொண்டுள்ள சுப்பிரமணியர் மீது

'சுருளிமலை மேல்உலாவும் வேலா-உன்னை
ஸ்தோத்தரித்தேன் சுப்பிரமணிய பாலா-பசந்
தோகைமயில் மீதிலேறி வாகுடனே காத்து
அருள்செய் அய்யா முருகையா'

என்று ஆர்மோனியம் காதர்பாச்சா பாடியுள்ளார். நாயன்மார் களும் இக்கோயிலைப் பாடியிருக்கின்றனர்.

இங்குச் சுருளியருவியில் இரு தட்டுகளாய் முதலில் 50 அடி கீழேயும் பிறகு 20 அடி கீழேயும் நீர் விழுகிறது. நீரோட்டம் மெல்லவுமின்றி விரைவுமின்றி நடுத்தன்மையாயும் ஒரு நாளும் வற்ருது ஆண்டு முழுவதும் நீர் வருவதாயும் இருக்கிறது. குளிக்க வசதியாக இருக்கிறது. 1960-க்குப் பிறகு, சுற்றுவட்டத்து நகரப் பெருமக்கள் முயற்சியாலும் அரசினர் ஆதரவாலும் இந்த அருவி நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

இச்சுருளியாற்றில் பாசனவசதிக்காக ஓர் அணையைக் கட்டுவதற்கும் மின்சாரம் உற்பத்தி செய்யவும் மாநில அரசு முயன்று வருகின்றது.

கண்ணகி கோயில்

கூடலூருக்குத் தெற்கிலும் சுருளியாறு, பெரியாறு நீர்மின் திட்டங்களுக்கு நடுவிலும் தமிழ்நாட்டு எல்லையிலிருந்து 5 கி. மீ. தொலைவிலும் கேரள மாநிலத்துக் கோட்டையம் வட்டம் வேங்கைக்கானல் பகுதியில் 'மங்கலதேவி கோயில்' சிதைந்த நிலையிலுள்ளது.

இக்கோயிலைத் தமிழ் நாடு அரசிடம் ஒப்படைக்க வேண்டு மென்று 1975-இல் தமிழ் நாடு அரசு, கேரள அரசிடம் வேண்டிக் கொண்டது. மேற்கண்ட கோயிலுக்குச் சிலப்பதிகாரம் அல்லது கண்ணகியோடு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று கூறி, இப் பகுதியை ஒப்படைக்க, கேரள அரசு மறுத்துள்ளது.

1966-ஆம் ஆண்டில் இந்திய அரசின் தொல் பொருள் துறையினர் இங்கே சென்று ஆராய்ந்து பின்வருமாறு அறிவித்துள்ளனர். "இந்த மங்கலதேவி கோட்டம், சிலப்பதி

காரத்தில் குறிப்பிட்டபடி சேரன் செங்குட்டுவனால் கண்ணகிக்கு எடுக்கப்பெற்றது என்பதில் ஐயமில்லை. இக்கோட்டத்தின் 277-ஆம் எண்ணுக்கு உரிய பழைய கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்தது. 11-ஆம் நூற்றாண்டு வரை இங்கு வழிபாடு நடந்தது. உறுதியாகத் தெரிகிறது. இதை மேலும் உறுதிப் படுத்தும் கல்வெட்டு கீழக்கூடலூரில் உள்ளது ''

கூடலூரில் 1954 முதல் இயங்கி வரும் கூடல் தமிழ்க் கழகத்தின் ஓர் உறுப்பான மங்கலாதேவி (கண்ணகி) கோட்டச் சீரமைப்புக் குழுவின் செயலர் புலவர் தமிழாதன் பின்வருமாறு கருதுகிறார்:

கண்ணகி விண்ணுலகு அடைந்த பின் அடக்கம் கொண்ட இடத்தில் எழுப்பப்பட்ட இக்கோயில் மலை மீதானதே. இதனைச் சிலப்பதிகாரத்து வரலாற்றுக் காண்டம் என அறிஞர்களால் பாரட்டப்படும் வஞ்சிக்காண்டத்து வரந்தரு காதையுள் பின்வரும் அடிகளால் இளங்கோ அடிகள் உணர்த்தியுள்ளார்.

"மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரை சேணுயர் சிலம்பல்"

வரை, கோடு, சிலம்பு என்பன மலைவகைகளின் பெயர்களே. இவை அடிகளார் அரமண்மனையின் அரிமா ஏந்திய அமளிமிசை அமர்ந்து கொண்டு தமது கற்பனையால் எழுதியவையென்று கூறுபவர்கள் நேரடியாகத் தற்போதுள்ள மங்கலதேவி கோயிலை வந்து பார்த்தார்களானால் தங்கள் கருத்து வலிவிழந்து தவித்துத் திண்டாடுவதைக் காண நேரும்.

வரையென்பது மூங்கிலைக் குறிக்கும். மூங்கில் செறிந்து காணப்படும் மலையையும் இது உணர்த்தும். இவ்வரைகளில் கூட்டங்கூட்டமாக வாழும் வரை ஆடுகள் எனப்படும் மலையாடுகள் மின்னலை விட விரைவாகத் தாவிச்செல்லக்கூடிய ஆற்றல் உடையன. எதிரொலிக்கும் மலையைச் சிலம்பு என்பர்; எதிரொலிக்கக் கூடிய மலைகளில் வாழும் வரையாடுகள் விரைந்து ஓடி தங்கள் பகையிட மிருந்து தப்பிப் பிழைக்கக் கூடியன. எனவே வரை—உயர்வரை எனப்பட்டது.

இக்கோயில் உள்ள இடம் நெடுவேள் குன்றம் என்றும் குறிப்பிடப்படுகிறது. 'சித்தன் இருப்பு' என்ற பெயருடன் விளங்கிய மலை ஆவினன் குடியாகி, பொதினி மலையாகி அதுவும்

திரிந்து பழனி மலை என்று ஆனதுபோல, நெடுவேள் குன்றம் என்ற பெயர் மலையிலிருந்து சுருண்டு விழும் அருவியின் பெயரால் சுருளிமலை என்று மாறியிருக்கிறது.''

குச்சனூர்

கம்பத்திலிருந்து இவ்வூரை அடையலாம். சுருளி ஆற்றிலிருந்து பிரியும் ராஜா வாய்க்காலின் மேற்குக் கரையில், இவ்வூர் அமைந்திருக்கிறது. முன்காலத்தில், செண்பக நல்லூரர் என்ற பெயரே இவ்வூருக்கு இருந்து வந்தது. நெடுங்காலம் சேர நாட்டிலிருந்து, பின்னர்ப் பாண்டிய நாட்டில் இவ்வூர் இணைந்ததாகக் கூறுவர். இங்குள்ள சனீசுவரர் கோயில் புகழ் பெற்றது. தல விருட்சம் – விடத்தலை, கறுப்பணசாமி முதலிய பரிவாரத் தேவதைகள் உள்ளன. ஆடி மாதத்தில் எல்லாச் சனிக்கிழமைகளிலும் இங்கே பெரிய திருவிழா நிகழும்.

வண்ணாத்திப்பாறை

சந்தன மரங்கள் நிறைந்தது. கம்பத்திற்கு அருகே உள்ளது.

அனுமந்தன்பட்டி

பெரியாற்றின் கரையில், கம்பத்துக்கும் உத்தமபாளையத்துக்கும் இடையே அமைந்த சிற்றூர். பல கோயில்கள் இங்கு உள்ளன. 'சீருலவு சஞ்சீவி அனுமந்தராயன்' கோயிலே இவ்வூரில் தோன்றிய முதற்கோயில் என்பர். இறைப்பற்றிலும் புலமையிலும் சிறந்த சான்றோர் பலர் இவ்வூரில் தோன்றியுள்ளனர்.

சுருளிமலை

திருக்குற்றால அருவிக்கு அடுத்த சிறப்பு, இந்த மலையிலுள்ள அருவிக்கு உண்டு. இது முருகன் தலமும் ஆகும்.

ஊமைத்துரைக்கு, இந்த மலை பாதுகாப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

நீராட வரும் மக்கள் கூட்டத்தை நாள்தோறும் இங்கே காணலாம். (பார்க்க ப. 418–419)

காமயக்கவுண்டன்பட்டி*

கம்பத்திலிருந்து 4 கி. மீ. சுருளிமலையிலிருந்து 10 கி. மீ.

இவ்வூர் பெரியாற்றுப் பாசனத்தால் வளப்பம் பெறுவது. கம்பத்திலிருந்து செல்லும்போது, பெரியாறு, காமயக்கவுண்டன் பட்டியை ஒட்டித் தென்வடலாக ஓடுகிறது. அவ்வாற்றிலிருந்து பிரியும் வாய்க்கால் ஒன்றும் ஊரருகே உள்ள நிலங்களுக்குப் பாய்கிறது.

இவ்வூர்க்குச் செல்லும் வழியில் இரு மருங்கிலும் பசுமையான வயல் வெளிகளும் தென்னந்தோப்புகளும் உள்ளன. பொன் விளையும் பூமி என்பார்களே அப்பூமி இவ்வூருக்கே சொந்தம். நன்செய்ச் சாகுபடி என்னும் போது நெல்லும், வாழையும் கரும்பும்பயிரிடப்படும். இருபோகம்சில இடங்களிலும் முப்போகங்கள் சில இடங்களிலும் செய்வதுண்டு. தண்ணீர்ப் பஞ்சம் என்பது பெரும்பாலும் இவ்வூருக்கு ஏற்படுவதில்லை. கம்பத்திலிருந்து கிழக்கே உள்ள இவ்வூர்தான் அப் பள்ளத்தாக்கின் கிழக்கு எல்லை. சுற்றுக்குச் சுற்று வானையளாவிய மேற்குத்தொடாச்சிமலைகள். ஊரை ஒட்டித் 'திப்பிலிமேடு' என்று ஒரு சிறு மலையும் 'சங்கிலிக் கரடு' என்னும் மலையும் உண்டு.

புன்செய் நிலம் என்று எடுத்துக் கொண்டால் இம்மண் செக்கச்செவேலென்று இருக்கும். இதனில் வரகு, சாமை, தினை, கம்பு, போன்ற வானம் பார்த்த பயிர்களும் தோட்டத்துச் சாகுபடிகளாகச் சோளம், கேழ்வரகு, மிளகாய், 'பீட்ரூட்டு' 'முட்டைக்கோசு' போன்ற பொருள்களும் ஏராளமாகப் பயிரிடப் படுவதுண்டு. கடலை, இவ்வூர் மண்ணுக்கு வானின் மழைத்துளி போலமுளைக்கிறது.

பட்டிவிரன்பட்டிக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் திராட்சைப் பழச் சாகுபடிக்குத் தலைமை பெற்ற ஊர் இதுவே.

சுருக்கமாகச் சொன்னால் இந்த மண்ணில் விளையாத பொருள் இல்லை. காசைப்போட்டால் காசு முளைக்கும் வளப்பம் நிறைந்தது.

---

*இவ்வூரைப்பற்றிய தகவல்களை ஆர்வத்துடன் வழங்கியவர் இவ்வூரின்ராஜ் தமிழ்ப் பேராசிரியர் மு. உலகநாதன் அவர்கள் ஆவார்கள்.

இவ்வூர்த் தோப்புகளில் புளியும் தென்னையும் மாவும் பலாவும் மிகுதியும் உண்டு. பருவ காலங்களில் அப்பொருள்கள் இவ்வூர் மக்களின் தேவைபோக எஞ்சியது வெளியூர்களுக்கு விற்பனையாகிறது. தக்காளி, முட்டைக்கோசு, திராட்சைப்பழம் ஆகியவையும் குறிப்பிடத்தக்க ஏற்றுமதிப் பொருள்களாக உள்ளன.

ஊரின் வடக்குப்பகுதியில் 'வறட்டாறு' என்னும் ஆறுஒன்று ஓடுகின்றது. அது மழைக்காலங்களில் நீர்ப்பெருக்கெடுத்தும் மற்றகாலங்களில் வறண்டும் கிடப்பதால் அப்பெயரைப் பெற்றது.

இவ்வூரின் தென் கிழக்கே கூத்தனூட்சி மலை என்று ஒரு மலைஉளது. அதில் தோன்றி சலசலத்து ஒரு சிற்ருறு ஓடுகிறது. ஆடு மாடுகளை மேய்க்கச் செல்வோர் இப்பகுதிக்குத்தான் ஓட்டிச் செல்வர்.

சில சமயங்களில் மலையில் இருந்து யானைகள் இறங்கி ஊரின் எல்லைவரை வந்து விடும். இம்மலையின் உச்சியில் நெல்லியும் நாவற்பழமும், ஈச்சம்பழமும், களாப்பழமும், கடுக்காயும், மூங்கிலும், ஈத்தையும் நிறைய உண்டு. அவ்வக்காலங்களில் அம் மலைபடுபொருள்கள் ஊருக்கு விற்பனைக்கு வருவதுண்டு.

இம்மலையில் 'கூத்தனூட்சி அம்மன்' என்று ஓர் இடிந்து பட்ட கோயிலும் உண்டு. அதுபற்றி ஒரு வரலாறு நெடுங்கால மாக மக்களிடையே கூறப்படுகிறது.

இம்மலைப் பகுதி ஒருசமயம் மக்கள் கூடுகின்ற சந்தையாக இருந்ததென்றும்; இங்கே தயிர் விற்பதற்காக ஒரு பெண் வந்த தாகவும்; அவளது அழகில்மயங்கிய தூர்த்தன் ஒருவன் குதிரையில் இருந்தே அவளைத் துரத்தியதாகவும்; தன் கற்பினைக் காத்துக் கொள்வதற்காக அம்மங்கை தன் தயிரெல்லாம் தெறித்துச் சிந்துமாறு இங்கு மங்கும் ஓடி வேறு வழியில்லாது அங்கிருந்த ஒரு பெரிய மரத்தை நோக்கி ''யான்பத்தினியே'' ஆமாகில் ஏ! மரமே எனக்கு இடங்கொடு என்று வேண்டியதாகவும்; உடனே அம்மரம் இரண்டாகப் பிளந்து அவளை ஏற்றுக்கொண்டதாகவும் கூறுவர். இது உண்மைதானு என்றுஎண்ணுவதற்கேற்ப அவளின் தயிர் சிந்திய இடமெல்லாம் அம்மண்ணில் சுண்ணும்புக் கட்டி போலத் தயிர்க்கட்டிகள் விளைகின்றன. இத்தயிர்க்கட்டி வழு

விழும்பும் இலேசான புளிப்புச் சுவையுடையதுமாய் இன்னும் விளைந்து கொண்டிருக்கிறது. அறியவேண்டுவார் அவ்விடம் வந்து அக்கட்டியினை உண்டு உண்மையறியலாம்.

இப்பகுதியில் முதுமக்கள் தாழிகளும் காணப்படுகின்றன.

காமயக்கவுண்டன்பட்டி, மதுரைமாநகரின் அமைப்பைப் போலச் சதுரவடிவினதாக அமைந்துள்ளது. தேரோடும் அகன்ற தெருக்கள் உள்ளன. இவ்வூரின் மேற்கே ஊரை ஒட்டி ஓடும் வாய்க்காலின் கிழக்குக்கரையில் ''சுப்பிரமணியர் கோயில்'' என்று முருகன் ஆலயம் ஒன்று உள்ளது. கிழக்கே கறுப்பண்ண சாமிகோயிலும் முகமதியர்களுக்கான ஒரு மசூதியும் கிறித்தவர் களுக்கான ஒரு மாதாகோயிலும் உண்டு.

இவ்வூர் காக்களின் (சோலைகளின்) மையத்தில் இருப்பதாலும் ஒரே சோலை மயமாக இருப்பதாலும், அத்தோடு கவுண்டர்கள் என்னும் சாதியார் மிகுந்திருப்பதாலும் 'காமயக்கவுண்டன்பட்டி' என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம், அல்லது 'காமயக்கவுண்டன்' என்ற ஒருவர் பெயரால் தோன்றி யிருக்கலாம்.

இவ்வூர்ப் பெருமக்களுக்குக் கேரளத்து மலைகளில் ஏலத் தோட்டங்கள் மிகுதியாக இருப்பதால் இவ்வூரில் பணத்திற்குப் பஞ்சம் இருப்பதில்லை.

ஏலத் தோட்டங்களால் நிறைந்த செல்வர்கள் ஆனவர்கள் இவ்வூரில் பலபேருண்டு.

இவ்வூரார் கறுப்பணசாமி திருவிழா, முத்தாளம்மன் திருவிழா, சுப்பிரமணியசாமி திருவிழா என்னும் திருவிழாக்களை நடத்துகின்றனர்.

உரிய காலத்தில் மழை பெய்வதால், ஊர் எப்பொழுதும் 'குளுகுளு' என்று இருக்கும். தேவைப்படின், புலவர்கள் இவ்வூர் இராமாயணச்சாவடியில் கூடி மழை வேண்டி விரிவுரை நிகழ்த்துவர்.

இவ்வூர்ப் புலவர்களான முத்துச்சாமி முதலியார் குடும்பத்தார் வருவிருந்து பேணி புலவர்களை ஆதரிப்பவர்கள். பெரும்புலவர் பலர் இவ்வூருக்கு வந்து முத்துச்சாமி முதலியாரின் தமிழ் அவையில் பங்கெடுத்துப் பல நாட்கள் இருந்து

சென்றதுண்டு. இம்முதலியார் வீட்டில் இருந்து நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட ஏட்டுச்சுவடிகள் தமிழ்நாடு தொல் பொருள் துறையின் மேற் பார்வையிலுள்ள சென்னை கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்திற்கு அனுப்பப் பெற்றன. அவை பெரும்பாலும் அச்சேருதவை.

கேரளம்

தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள கடைசி ஊர், கூடலூர். அதற்கப்பால் புதிதாகத் தோன்றியுள்ளவை கீழ் முகாம் (Lower camp), அடுத்து மேல் முகாம் (Upper camp). அவற்றுக்கு மேல், மலைமீது வளைந்தும் நெளிந்தும் சென்ருல் குமிழி (குமிளி) என்னும் ஊரை அடையலாம். அது கேரளத்தைச் சேர்ந்தது. அங்குதான் பெரியாற்றின் மின் உற்பத்தி நிலையமும் தேக்கடி அணைக்கட்டும் உள்ளன.

பெரியாற்றுத் திட்டம், பொறியியற் கலை வரலாற்றில் தனிச்சிறப்பினை உடையது. 1887-இல் தொடங்கி 1895-இல் இந்தவேலை முடிவடைந்தது. உலகிலேயே மிகவும் துணிச்சலுடன் நிறைவேற்றப்பட்ட திட்டம் என்று, தக்கார் பலர் கூறுவர்.

பெரியாறு, மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி, கேரள மாநிலம் வழியாக மேற்கே பாய்கிறது. 175 அடி உயரமுள்ள அணையைக்கட்டி, பிறகு 5700 அடி தொலைவுக்கு மலையைக் குடைந்து அதன் வழியாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைக்குத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. மலேரியா நோய் பரவியிருந்த ஒரு காட்டில் 3,000 அடி உயரமுள்ள இடத்தில் பெரு மழை பெய்ததையும் பொருட்படுத்தாது பெரியாற்றுத் திட்ட வேலை தொடங்கிற்று. 76 மைல் (120 கி. மீ.) தொலைவிலுள்ள மதுரை மாநகரிலிருந்து எல்லாப் பொருள்களும் அனுப்பப் பெற்றன. அணைக்கட்டுக்கு அடித்தளம் போடப் போட அதை வெள்ளம் அடித்துச் சென்றது. எனினும் அதனுல் மனம் சோர்வடையாது, தளராத உறுதியுடன் பொறியியல் அறிஞர்கள் பணிபுரிந்து எடுத்த காரியத்தை நிறைவேற்றினர். அதன்விளைவாக மதுரை மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி கிடைத்தது.

1955-இல் பெரியாறு அனல் மின் நிலையம் தொடங்கப் பெற்று, தமிழ் நாட்டின் முக்கியமான மின் உற்பத்தி நிலையங்களுள் ஒன்ருக விளங்கி வருகிறது.

அணை, மின் நிலையம் ஆகிய பகுதிகள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவை. தேக்கடி அணை தமிழ் நாட்டிற்கு 1886 முதல் 999 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி, கடல் மட்டத்திற்கு மேல் 2709 அடி உயரத்தில் அமைந்தது. பெரிய அணையின் நீளம் 1200 அடி. சிறிய அணையின் நீளம் 400 அடி. நீர்ப்பரப்புப் பகுதியின் அளவு 16 சதுர கி. மீ.

அணையருகே கேரள அரசுக்கு உரிய ஆரண்ய நிவாஸ் என்னும் வசதியான தங்கும் விடுதியும் உணவகமும் உள்ளன.

33. போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம்

நாயக்கர் ஆட்சியில் ஏற்பட்ட பாளையங்களை யொட்டி உருவான 18 ஊராட்சிகள் அடங்கிய ஒன்றியம் இது. இங்குள்ள மீனாட்சி புரமும் மேலச் சொக்கநாதபுரமும் திருமலைநாயக்கர் மீனாட்சியம்மன் கோயிலுக்கு முற்றூட்டாக வழங்கியவை. திருமலை நாயக்கர் பெயரால் ஏற்பட்ட திருமலபுரம் என்னும் சிற்றூரும் இங்கு இருக்கிறது.

ஒன்றியத்தின் சில பகுதிகளில் காப்பி, தேயிலைத்தோட்டங்கள் உள்ளன. மதுரை மாநாகருக்கு இவ்வொன்றியத்து ஊர்களிலிருந்து நாள்தோறும் காய்கறிகள் செல்கின்றன.

இவ்வொன்றியத்தில் மீனாட்சிபுரம் சொக்கநாதபுரம் என்னும் ஊர்கள் இருப்பது போல, இம்மாவட்டத்தில் 300க்கு மேற்பட்ட ஊர்கள் உள்ளன. மணியம்பட்டி, கொட்டகுடி என்னும் ஊர்ப்பெயர்களை வேறு சில வட்டங்களிலும் காண்கிறோம்.

டொம்பரச்சேரி

இங்கிருந்த கோயில் அழிந்துவிட்டது. கோயிலில் இருந்த கல்வெட்டு, ஊர்க் கண்மாய்க் கரையில் காணப்படுகிறது. இவ்வூரின் பழைய பெயர் திருவடியாப்புத்தூர் என்றும் வீரபாண்டிய கட்ட பொம்மனின் தளபதிகளுள் ஒருவன் இவ்வூரினன் என்றும் தெரிகிறது.

XII கோடைக்கானல் வட்டம்

இந்த வட்டம் மதுரை மாவட்டத்திலேயே மக்கள் நெருக்கம் மிகக்குறைவாக உடையது. இயற்கை வளத்தாலும்

அழகாலும் நீலகிரி மாவட்டம் தமிழ் நாட்டிற்குப் பெருமை தருவது போல, மலைப் பகுதியாக அமைந்த கோடைக்கானல் வட்டம் சிறப்பாக மதுரை மாவட்டத்துக்கும் பொதுவாக தமிழ் நாட்டுக்கும் புகழைத் தருகிறது.

இந்த வட்டத்தின் தலைநகராக இருப்பது, கோடைக்கானல் நகரம். இங்கு 1899-இல் நகராண்மைக்கழகம் அமைக்கப்பட்டது. 1960 முதல் அதற்குப் பதிலாக ஒரு நகரியம் இயங்கிவருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர், நகரியத்தின் தலைவராக இருந்து வருகிறார். 1981-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை புள்ளி விவரக் கணக்கு வெளியிடப் பெற்றதும் மீண்டும் கோடைக்கானல் ஒரு நகராண்மைக் கழகமாக அறிவிக்கப்படக் கூடும்.

இந்த நகரம் தவிர, வட்டத்தின் எஞ்சிய பகுதி முழுவதும் கோடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியிருககிறது.

இனி இந்நகரின் சிறப்புகளையும் ஊராட்சி ஒன்றியத்தின் பகுதிகளைப் பற்றிய விவரங்களையும் கூறுவோம்.

கோடைக்கானல் நகரம்

மேற்குத்தொடர்ச்சிமலையிலிருந்து பிரிந்து கிழக்குநோக்கித் திண்டுக்கல் வரை நீண்டு தொடர்ந்து நிற்கும் மலைமேல் உள்ள நகரமே கோடைக்கானல் எனப்படுவது. இமமலையை ஆங்கிலேயர் பழனிமலைத் தொடர் என்பர். கோயமுத்தூருக்கு மேறகில நிற்கும் மலைத்தொடரின் முடிமேல் அமைந்த தடவின்கண் விளங்கும் உதகை நகரம் போல், இது மதுரை மாவட்டத்தில் உள்ளது. உதகை செல்லுவதற்கு மலைச் சாலை இரயில் பாதை ஆகிய இரண்டும் உண்டு. கோடைக்கானலுக்கு மலைச் சாலை மட்டுமே இருக்கிறது. அம்மைய நாயக்கனூர் (கோடைக்கானல் ரோடு) இரயில் நிலையத்திலிருந்து நிலக்கோட்டை, வத்தலக்குண்டு என்னும் பேரூர்களின் வழியாக இச்சாலை கோடைமலைக்குச் செல்லுகிறது. கோடைக்கானல் நகரம் கடல் மட்டத்துக்குச் சுமார 7000அடி(2133மீட்டரு)க்குமேல் உள்ளது. இஙகே, வானிலை ஆராய்ச்சி நிலையம் இருக்குமிடம் கடல்மட்டத்துக்கு மேல் 7209அடி உயரமாகும். சராசரி மழை, ஆண்டுக்கு 165 செ. மீ. அளவினது.

இங்கே பெருஞ் செல்வர்களுடைய வளமனைகள் பல உள்ளன. இங்குள்ள தடவு ஒன்றில் ஓடிய சிற்றாற்றைத் தடுத்து

அழகிய ஏரியை அமைத்துள்ளனர். இதனைச் சுற்றிலும் கவினுறு சாலை போடப்பட்டுள்ளது. இதனைச் சூழ்ந்து நிற்கும் மலைச்சரிவில் சோலைகளுக்கிடையே செல்வப் பெருமனைகள் திகழ்கின்றன. வேலைப்பாடும் இயற்கையமைதியும் கண்கவர் வனப்பும் கொண்ட இந்த மாளிகைகளிலிருந்து நோக்கினுல் மலை முகடுகளால் சுவர் வைத்தது போல் காட்சிதரும். மரஞ்செடிகளின் செறிவின்றி வானுற ஓங்கி நிற்கும் பெருமாமலையும் அதனையடுத்து இருமருங்கிலும் இடையிலும் சிறுசிறு குன்றுகளும் மேடுபள்ளங்களும் பரந்து கிடக்கின்றன.

நினைத்த நேரமெல்லாம் மக்கள் சிறு படகுகளில் ஏறி ஏரியைஉலாவருவர். கரைமருங்கில் சுற்றிவரும்சாலையில் ஆடவரும் மகளிரும் உள்ளம் கவரும் உயரிய ஆடையணிகளால் தம்மை ஒப்பனை செய்துகொண்டு உலவிஇன்புறுவர். இருள் மாலையில் நகரமெங்கினும் மின் விளக்குகள் வரிசை வரிசையாக நின்று பொருளுடைச் செல்வரின் பொன்மேனியின் பொலிவையும் போக வாழ்வின் பொற்பையும் மேம்படுத்திக் காட்டும். வெண்ணிற முடைய மேலை நாட்டவரும், அவர் தொடர்பால் தோன்றிய வெண்கிளைகளும் (Anglo Indians), மாநிறம் கொண்ட தமிழர்களும் மயங்கு நிறமுடைய பிறரும் கோடைமலையில் கூடி உறைவர். இக்காட்சி, கண் பெற்றுர் கண்டு இன்புறத்தக்கது. பொருளுடையார்க்கே இவ்வுலகு என்பதை இங்கே உணரலாம்.

1781-இல் ஆங்கிலேயருக்கு மதுரைச் சீமையில் ஆட்சித் தொடர்பு உண்டாயிற்று. ஜார்ஜ்புரோக்டர் என்பவர்தான் முதல மாவட்டக் கலெக்டர் ஆனுர்; நாளடைவில் பெருகிவந்த ஆங்கிலராட்சியில் கி. பி. 1821-இல் பழனிமலைப் பகுதியில் நில அளவு செய்தற்பொருட்டுச் சென்ற பி. எஸ். உவார்டு என்பவர் கோர்டைக்கானலில் முதலில் கால்வைத்த வெள்ளையராவர். அவர்க்குப்பின் 1834-இல் ஜே. சி. ராப்டன், சி. ஆர். காட்டன் என்ற இருவர் செண்பகனூர் வரை சென்று திரும்பினர். 1836-இல் உவைட் என்பவர் அடுக்கமலை வழியாகச் செண்பகனூர் வரைக்கும் சென்றுர்.

அந்நாளில் மதுரையில் அமெரிக்கக் கிறித்தவப் பாதிரிமார் தங்கிச் சமயத் தொண்டு புரிந்தனர். அவர்களால் மதுரையின் வெம்மையைத் தாங்க இயலவில்லை. அவருள் சிலர் நோயுற்றனர். சிலர் கப்பலேறி யாழ்ப்பாணத்துக்குப் போயினர். அந்நிலையில் சிறுமலையின் முகடு குளிர்ச்சியுடையதென்று அறிந்தோர் கூறவே

யாழ்ப்பாணச் செலவைக் கைவிட்டுச் சிறுமலையில் தங்குவதென முடிவு செய்தனர் சிறுமலையிலும் அவர்களைக் காய்ச்சல் நோய் வருத்திற்று. அப்போது அவர்கட்குக் கோடைமலையின் தட்ப வெப்பநிலையின் இயல்பு தெரிய வந்தது 1845இல் அவர்கள் கோடைமலைப் பகுதிக்குச் சென்று இரண்டு வள மனைகளைக் கட்டிக் கொண்டனர். அவர்கட்குப் பின்னர், ஜான் பிளாக்பான் தாமஸ் கிளார்க் சி ஆர். பேயினஸ் ஆர். டி. பார்க்கர் ஆகியோர் வீடுகள் கட்டினர். இவருள் கிளார்க் கட்டிய வளமனையில் தான் திராவிட மொழியியல் அறிஞர் கால்டுவெல் பாதிரியார் பல நாள் தங்கி உயிர் நீத்தார். 1852 - இல் மேஜர் பார்ட்டிரிட்ஜ் என்பவர் கோடைக்கானல் ஏரியின் கரையில் ஒரு பெரு வீடு கட்டினார். இதற்கிடையே அமெரிக்கப் பாதிரிமார்களும், ஆர்சலி என்பவரும் வீடுகள் கட்டிக் கொண்டனர் இவ்வகையில் அந்நாள் (1860) சென்னை மாநிலத்தை யாண்ட கவர்னர் சர் சார்லஸ் டிரெவிலியான் என்பவர், கிருஷ்ணமநாயக்கன் தோப்பு வழியாகக் கோடை மலைக்குச் சென்றார். 1871-இல் லார்டுநேப்பியர் கோடைமலைக்கு வந்தார் 'நேப்பியர்வில்லா' என்பது அவர் நினைவாகத் தோன்றியதே.

மதுரை மாவட்டக் கலெக்டர் (1860-67) வி. எச். லீவிஞ்சு என்பவர், பதவியினின்று விலகி 1885 வரை கோடைமலையில் தங்கியிருந்தார், அவர் இருந்த வீடு 'பாம்பாறு அகம்' என்று அவர் வரலாறு கூறுகிறது. அவர் காலத்தில் கோடைக்கானல், நல்ல பல திருத்தங்கள் பெற்றது. பெரியகுளத்திலிருந்து பாம்படிச் சோலைவரையில் சாலை அமைத்தனர். மேனாட்டுப் பூ வகைகளையும் பழவகைகளையும் கோடைமலையில் பயிரிட்டனர். கோடைக்கானல் உள்ள தடவில் வீணாக ஓடிய ஒரு சிற்றாற்றை அணையிட்டுத் தடுத்து நீர் நிலையாக்கியவர் அவரேயாவர். மலைச் சாலை ஓரளவு திருத்தம் பெற்றதும் அவர் காலத்தே தான். அவர் வாழ்ந்தபோது கத்தோலிக்கக் கிறித்தவப் பாதிரியாரான அருள் திரு. கயர், கத்தோலிக்க மாதாகோயிலுக்கு அடிகோலினார். அந்நாளில், மாதாகோயில் கூரைக்கு வேண்டிய தகரம் கிடைக்க வில்லையாம். ஹண்ட்லி அண்டு பால்மர்ஸ் ரொட்டி (பிஸ்கட்) தகரங்களை வளைத்தே கூரை போட்டனராம்.

1899-இல் கோடைக்கானலிலிருந்து பூம்பாறைக்குப்போகும் வழியில் உயர்ந்ததோர் இடத்தில் வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.

பெயர்க் காரணம்

கானல் என்பது காணல் என்னும் ஒரு வகைக் கொடியின் பெயர். அக்கொடிகள் இம்மலைப் பகுதியில் மிகுதியாக உள்ளன. எனவே கோடை மலைக்காடு கோடைக்காணல் எனவழங்குகிறது என்று சிலர் கூறியுள்ளனர். மலச்சிக்கலால் வருந்தும் ஆன்கன்று. எருமைக்கன்று, மான்கன்று ஆகிய இவற்றுக்கு இக்காணற் குழையை ஊட்டுவது வழக்கம். காணற்குழையை கானலங்குழை காணுங்குழை என்றும் அங்குள்ள மலைவாழ்நர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய கானல்கள் இம்மலைப்பகுதியில் பல உண்டு. அவற்றுள் கொச்சிக்கானல், வஞ்சன்கானல், கடியங்கானல், தாமற்கானல் என்பன இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன. இவற்றுள், கடியங் கானல் பெருநன்கானல் என்றும், தாமற்கானல் தாமிரக்கானல் என்றும் பெயர் மருவி வழங்குகின்றன.

வரலாற்றுக் குறிப்பு

கடலோரப் பகுதிகளில் புன்னை, ஞாழல் முதலிய மரங்கள் செறிந்த குளிர்ந்த சோலைகள், கானல் என்ற பெயரால் வழங்கு கின்றன. இக்கானல்களைப் போலக்கோடைமலைக் காடுகள்குளர்ச்சி தந்து இனிய பூக்கள் நிறைந்து விளங்குவது பற்றிக் கானல் எனப்பட்டன போலும். கடற்கரைக் கானற் சோலைகள் போலவே கோடைமலைக் காடுகள் சில. கானல் எனப்படுகின்றன. புலிச்சோலை பெருமாள்சோலை, குண்டன்சோலை, கூகல்சோலை என்று கூறப்படுவது, ஒப்புநோக்கத்தக்கது.

இக்கோடைப் பகுதியில் பெருமாள்மலையின் தென்மேற்கி லுள்ள இடங்களிலும், பழனிமலைப் பகுதியிலும், பண்ணைக்காடு, தான்றிக்குடி, காமனூர், பாச்சலூர் ஆகிய இடங்களிலும் புதை பொருள்கள் பல காணப்படுகின்றன. தான்றிக்குடிக்கு அண்மை யுள்ள காமனூர் பழையோரால் தாமனூர் என்றும் சொல்லப் படுகிறது. இவற்றை நோக்கும் போது ஒரு காலத்தே இங்கே மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. இருநூறு இருநூற்றைம்பது ஆண்டுகட்குமுன் நாயக்க மன்னர்கள் முஸ்லிம் தலைவர்கள் ஆகியோரிடம் மதுரை இருந்து வந்தது. இடுக்கணும் இன்னலும் தோன்றிய போது நாயக்கக் குறுநிலத் தலைவர்கள் இம்மலைப்பகுதிக்குள் புகுந்து மறைந்து கொள்வதும், வாய்ப்பு உண்டான போது வெளியே வந்து போர் செய்வதுமாக இருந்தனர்.

சங்க இலக்கியச் சான்று

சங்க நூல்களில் கோடைமலையையும் தான்றிக் குடியையும் பற்றிய குறிப்புகள் அகப்படுகின்றன.

அந்த நூல்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை.

நீலமலை சங்ககாலத்தில் பாயல்மலைக்குரிய சேரமான் வஞ்சனுக்கு உரியதாகும். அவனைத் திருத்தாமனார் என்னும் சான்றோர் பாடியிருக்கிறார் பாயல்மலையிலுள்ள அவனது "பெரும் பெயர் மூதூர்" வஞ்சன் குன்று என்பதாகும் அஞ்சன் குன்று எனத்திரிந்து பிற்காலக் கல்வெட்டுகளில் அஞ்சன கிரி என மாறி இப்போழுது நீலகிரி என மொழி பெயர்க்கப்பட்டு விளங்குகிறது. வஞ்சன் ஆட்சியிலிருந்த வஞ்சனாடு அஞ்சனாடாகித் திருவிதாங்கூர் மன்னராட்சியில் இருந்தது. இப்பகுதி, கோடைமலையின் வடமேற்கில் இருக்கிறது. அவன் பெயரால் இப்பகுதியில் உள்ளதொரு கானல் வஞ்சன் கானல் என்ற பெயருடன் இன்றும் உளது. இதனால் கோடைக்கானல் சங்க காலத்தே தமிழ் வாழ்க்கையில் தொடர்பு கொண்டிருந்தது தெளிவாகிறது.

மேனாட்டவர் முதன் முதலாகக் கோடைமலைப் பகுதிக்குச் சென்ற போது இப்போதைய கோடைக்கானல் நகரம் இருக்கும் பகுதி வேடப்பட்டியைச் சார்ந்திருந்தது. பெருமாமலையின் அடியில் உள்ள பெரு நன் கானலை, கடியங் கானல் என்று அங்கு அந்நாளில் வாழ்ந்தோர் கூறிவந்ததாகத் தெரிகிறது. வேடப்பட்டி வேட்பட்டியென்றும் வேல்பட்டியென்றும் திரிந்து இன்று வில்பட்டி என மருவி வழங்குகிறது. வேடப்பட்டி என்றது அங்கே வேட்டுவர் வாழ்ந்தனர் என்பதையும், கடியக்கானல் என்றது கடியன் என்பவன் ஒரு காலத்தே அங்கே வாழ்ந்தான் என்பதையும் சுட்டுகின்றன. சங்க நூல்கள் அங்கே கடியன் நெடு வேட்டுவன் என்றொரு தலைவன் கோடைமலைக்குரியவனாய் வாழ்ந்தான் என்று கூறும். அவனைக் கோடைப் பொருநன் என்பதால் அவன் பொருநன் குடியைச் சேர்ந்தவன் என்பதும் தெரிகிறது. அவனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியிருக்கிறார். கோடைவெம்மையால் தீய்ந்தது போல் மிகவுயர்ந்து தோன்றும் மாமலைதான் பண்டை நாளில் கோடைமலை எனப்பட்டது. அது பொருநர்க்கு உரியதாய்ப் பொருநர் மாமலை என வழங்கியது பின்னர்ப் பெருமாமலை என மருவி இன்றும் அப்பெயருடன் நின்று நிலவுகிறது. அதன் உயரம் 7326அடி. பெருமாமலையான பின், பழம் பெயரான

கோடைமலை என்பது கோடைக்கானல் பகுதியில் காணப்படும் முகடுகள் எல்லாவற்றிற்கும் பொதுப் பெயராய் மாறிவிட்டது. பொருநனை கடியனுக்குரிய கடியங் கானல் பொருநன் கானலாகியது. பின்பு பெருநங்கானல் என்ற பெயரும் கோடைக்கானலுக்கு வடகிழக்கில் உண்மையான கோடைமலைக் குத் தெற்கில் அதன் அடியில் இன்றும் இருந்து வருகிறது. எனவே கோடைக்கானல் நகரம் இருக்கும் பகுதி சங்க காலத்தில் கோடை மலைப் பொருநனை கடியன் நெடு வேட்டுவன் என்ற தலைவனுக்கு உரியஇடமாகத்திகழ்ந்தது. அவனும் அவன் சுற்றத்தாரும் வாழ்ந்து சிறந்ததை பழம் பொருளும் புதைபொருளும் காட்டுகின்றன.

கோடைமலைத் தலைவன்

கோடைமலையாகிய பொருநன்மாமலைக்கு வடமேற் கிலுள்ளது முதிரமலை. அதற்கு அந்நாளில் உரிமை பூண்டிருந்தவன் பெருவள்ளலான குமணன். அவன்பால் பெரு நட்புக் கொண்டிருந்தவர் பெருந்தலைச் சாத்தனார். அவர் கொங்கு நாட்டிலுள்ள பெருந்தலையூர் என்னும் ஊர்க்கு உரியவர். அவர் ஒருகால் கடியன் நெடு வேட்டுவனைக் காண, அவனது கடியங் கானலுக்கு வந்தார். கடியன் பரிசிலரான புலவர் பாணர் முதலியோர்க்குத் தேரும் களிரும் சிறக்கக் கொடுத்தார். கடலுக்குச் சென்ற மேகம் நீர் முகவாமல் திரும்பாதது போலக் கோடைமலைக்குரிய நெடு வேட்டுவனைக் காணும் பரிசிலர், "தேரொடு ஒளிறு மருப்பு ஏந்திய செம்மல், களிறு இன்றிப்", பெயர் வதிலர் என்று புறநானூறு (205) கூறுகிறது. அவன் எக்காரணத்தோலோ சாத்தனார்க்குரிய பரிசிலை உடனே தராது காலம் தாழ்த்திக் கொடுத்துச் சிறப்பித்தான்.

காலம் தாழ்த்தமைக்கு அவன் வருந்தினன். அதைக்கண்ட சாத்தனார், "நோன் சிலை வேட்டுவ! நோயிலையாகுக" என்று தேறுதல் கூறிவிடைபெற்றுச் சென்றாராம். அவர் நெடுவேட்டுவன் இயல்பைக் கூறுவது நம் சிந்தனைக்கு உரியது. பகைவர் செய்யும் இன்னலுக்கு அஞ்சி அவனை வந்து புகல வேண்டுபவர்க்கு அவன் ஆதரவு தந்தான் எதிர்த்து வந்த பகைவரை வாட் போர் செய்து வென்று விரட்டினன் என்றும் சாத்தனார் கூறியுள்ளார். எனவே கோடைமலை பண்டை நாளில் பகைவர்க்கு அஞ்சி வருபவர்கட்குப் புகல் அளித்துப் போற்றும் புகழுடன் விளங்கியது. ஒட்டியரும் கன்னடரும் பங்களரும் கொங்கரும், இஸ்லாமியரும் வெள்ளையரும் புகுந்து போர் புரிந்த காலத்தில் மலையடியில் வாழ்ந்த குறுநிலத்

தலைவர்களும் கோடைமலைப் பகுதியில் புகல் பெற ஓடினர். பகைவர்க்கு அஞ்சினோர்க்கு புகலிடமாய் அந்நாளில் கோடைமலை திகழ்ந்தது. இன்று வேனில் வெம்மைக்கு உடைந்தோடுபவர்க்கு வேனில் விடுதியாய் இன்பநிலையமாய் இம்மலை விளங்குகிறது.

இன்றைய கோடைக்கானலின் சிறப்புக்கள்

கோடைக்கானலில் நம்மைக் கவருவது, நிறைந்து காணப்படும் தாவரச் செல்வம். வகை வகையான மரங்கள் அங்கு உள்ளன.

மேடுபள்ளம் இல்லாத இடங்களில் வளரும் செடிகொடிகள் இயல்பாகப் பூத்துக்காய்க்கும் தன்மையுடையன. கோடைக் கானல் மலைப் பகுதிகளில் விதைமூடாத தாவரங்களும் உள்ளன. இந்த இனத்தைச் சேர்ந்த ஜிங்கோ பிலோபா என்ற சிறு மரம் இப்போது அருகி வருகிறது. கோடைக்கானல் நகரத்துப் பிரியண்ட் பூங்காவில் இம்மரம் ஒன்று பாதுகாக்கப்பட்டுவருகிறது.

இந்த மலைக்கு உரிய குறிஞ்சிப் பூவைப் பற்றி இந்நூலின் 17-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். இது, ஒரு மீட்டர் முதல் நான்கு மீட்டர் வரை உள்ள உயரத்துக்கு வளரும். சில செடிகள்வெண்மை செறிந்த நீலநிறத்திலும் வயலெட் நிறத்திலும் கனகாம்பரம் போன்ற அமைப்புடன் அடுக்க்டுக்காய்ப் பூக்கும். பூ அடுக்கில் கீழே காம்பு திரண்டு கரிதாக இருக்கும். இலைகள் குறைவாக இருக்கும் இந்த இயல்புகள், சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பத்துப்பாட்டு என்றசங்கஇலக்கியத் தில் கபிலர் பாடிய 'குறிஞ்சிப் பாட்டு' எனும் 261 அடிப்பாடல், எட்டாவதாக இலங்குகிறது.

குறிஞ்சித் திணை என்பது தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. மலைப்பகுதி வாழ்மக்களுக்கு உரிய குறிஞ்சிப்பண், அகநானூற்றில் குறிப்பிடப்படுகிறது. இவற்றிலிருந்து, குறிஞ்சிப் பூ நெடுங்காலமாகப் பூத்து வருகிறது என்று கருதலாம்.

இம்மலையில் குறிஞ்சிப்பூ பூக்கத் தொடங்கும் முதலாவது இடத்தில் குறிஞ்சி ஆண்டவர் என்ற பெயருள்ள ஒரு தெய்வத் திற்கு, மிகப் பழங்காலத்திலேயே கோயில் இருந்து வந்திருக்கிறது. இக் கோயில், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லேடி இராமநாதன் என்ற ஆஸ்திரேலியப் பெண்மணியாரால் கல்திருப் பணியாகக் கட்டுவிக்கப் பெற்றிருக்கிறது.

ஏராளமான கல்வி நிலையங்கள் கோடைக்கானலில் உள்ளன. எனினும் இத்துறையில் உதகைக்கு இருந்துவரும் பெருமையில் ஒரு சிறு பங்குதான் கோடைக்கு உண்டு. சர்வதேசக் கல்வி நிறுவனம் ஒன்று விரைவில் கோடையில் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

இங்குள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் உலகில் உள்ள சிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாக இருக்கிறது.

Astrophysics எனப்படும் வான பௌதிகத் துறையில் இந்த ஆராய்ச்சிக் கூடம் பெரும் புகழ் பெற்றுள்ளது.

ஆப்பிள் ஆராய்ச்சி நிலையமும் கொக்கோ ஆராய்ச்சி நிலையமும் கோடைக்கானலில் உள்ளன.

கால்ப் என்பது ஐரோப்பியர் ஆடும் ஒருவகைப் பந்து விளையாட்டு. டிரைவர், கிளீக், புட்டன், பிராஸி என்றபலவகையான தடிகள் இந்த ஆட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் உதவியால், கால் பந்தை 9 அல்லது 18 குழிகளில் வரிசையாக அடித்துத் தள்ளிக் கொண்டே போகவேண்டும். இதில் குறைந்த அளவு அடித்து குழிகள் அனைத்திலும் பந்தைத் தள்ளி விடுபவர், வெற்றிபெற்றவர் ஆவார். குழிகளுக்கு இடையே இயற்கை யாகவோ செயற்கையாகவோ தடங்கல்கள் ஏற்படுவதால், குழிகளில் பந்தைத் தள்ளுவது எளிதன்று. நடைப்பயிற்சியும் உடற் பயிற்சியும் இந்த விளையாட்டால் ஏற்படுகின்றன. பல வகைத் தடிகளை தூக்கிக் கொண்டு செல்ல, கால்ப்விளையாடுபவர் சிலர், வேலையாள் ஒருவரையும் உடன் அழைத்துச் செல்வர். கோடைக் கானலில் உள்ள கால்ப் மைதானம், உலகத்திலேயே சிறந்த இத்தகைய மைதானங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சுற்றுலாச் செல்லும் வழக்கம் மக்களிடையே பெருகி வருவதாலும் வெளி நாட்டு மக்களை நம் நாட்டுக்கு ஈர்க்க தமிழ் நாடு சுற்றுலாவாரியம் உறுதி கொண்டிருப்பதாலும், கோடைக்கானல் பகுதி பெரிதும் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஏரி, கோக்கர்ஸ் வாக், பில்லர் ராக்ஸ், மற்றும் சில்வர் கேஸ் கேடு, பெய்ரி பால்ஸ் எனப்படும் மோகினி அருவி முதலிய சுற்றுலாத் தலங்களும் பூங்காக்களும் நன்கு பேணப்பட்டு வரு கின்றன. தமிழ் நாடு சுற்றுலா வாரியத்தாலும், தனியார்துறை யினராலும் வசதி மிக்க தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் மே திங்களில் பல நாட்களுக்கு சுற்றுலா விழா என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகளும் படகுப்போட்டி. முதலிய பொழுது போக்குகளும் அரசினரால் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இந்நகரில் தொலைக்காட்சி நிலையமும் உருவாகி வருகிறது,

கோடைக்கானல் கதம்பம்

மக்கள் தொகை	-	ஏப்ரல் முதல் ஜூன் வரை 50,000 பிற மாதங்களில் 18,000
இருப்பவை	-	அழகு, ஆடம்பரம், கவர்ச்சி, கண்ணியும்
இல்லாதது	-	ஈ, கொசு, தேள், பாம்பு, காக்கை.
இவ்வூரை விட்டுப் போகாதது	-	குளிர்.
பார்க்கவேண்டியது	-	கோக்கர்ஸ் வாக் அருகேயும் குறிஞ்சி ஆண்டவர் கோயில் அருகேயும் பொருத்தப்பட்டுள்ள தொலை நோக்கிக் கருவிகள் வழியாக மதுரை மாநகர், பெரியகுளம், பழநிக் கோயில் மற்றும் பள்ளத்தாக்குகளின் காட்சிகள்.
அருவிகள்	-	மோகினி ஊற்று, பால் பொங்கி ஊற்று, கரடிச்சோலை ஊற்று, வண்ணான் ஊற்று.

34. கோடைக்கானல் ஊராட்சி ஒன்றியம்

கோடைக்கானல் நகர் தவிர வட்டம் முழுவதும் இந்த ஒன்றியத்தில் இருக்கிறது. எனவே, மதுரை மாவட்டத்தில் பரப்பளவால் பெரிய ஒன்றியம் இதுவே. பழனி வட்டத்தைச் சேர்ந்த வடகவுஞ்சியம் இந்த ஒன்றியத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

கோடைக்கானல் மலையின் உயர்ந்த பகுதிகளில் காப்பியும் கொக்கோவும் கோதுமையும் பார்லியும் வெள்ளைப் பூண்டும் வால்பேரி, சர்க்கரைப்பேரி ஆகிய பழங்களும் இங்கிலீஷ் காய்கறி களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மலையின் தாழ்ந்த பகுதிகளில் உயர்ந்த ரக வாழையும் அரபிகா காப்பியும் ஏலம், இஞ்சி, மஞ்சள் ஆகியவையும் பயிரிடப் படுகின்றன. மலைச்சரிவுகளில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது' மட்டரக நெல் விதைகளைத்தான் போடுகின்றனர். பழவகைகளுள் குறிப்பிடத்தக்கன. மா, பலா ஆரஞ்சு எலுமிச்சை, மாதுளை, பிளம், கொடிதிராட்சை, ஆப்பிள், செர்ரி என்பன.

இம்மலைகளில் வாழும் மக்கள் இனங்களுள் குன்னுவரும் புலையரும் பளியரும் மண்ணுடியரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

வில் பட்டி

வில்லிவாக்கம், வில்லியனூர் போன்று வில்லில் வல்ல இனத்தவர் வாழ்ந்தமையால் இவ்வாறு பெயர் பெற்றிருக்க வேண்டும். இங்குள்ள சிலர் தாங்கள் அர்ஜுனனுடைய பரம்பரை என்று சொல்லிக் கொள்கிறார்கள். வில்பட்டியைச் சுற்றிப் பல ஊர்கள் உள்ளன. அவ்வூர்களில் வாழ்பவர்கள் இவ்வூரைத் தாய்க் கிராமம் என்று குறிப்பிடுகின்றனர்.

இங்கு ஓர் ஊற்றில் மோர் போன்ற தண்ணீர் ஊறுகிறது.

பாண்டிய அரசர்கள் இங்கே தங்கியிருந்ததாக நம்பப்படு கிறது.

பெருமாமலை

தோற்றத்தின் காரணமாக மிகப் பெரியமலை என்று பெயரிடப் பெற்றது. இப்போது பெருமாள்மலை என வழங்கு கிறது. சுவை மிகுந்த ஆரஞ்சுக்கு இந்த மலைப்பகுதி புகழ் பெற்றது.

சோலைக்காடு

மிகப் பழங்காலத்து முதுமக்கள் தாழிகள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பண்ணைக்காடு (ம. தொ. 5,000)

வத்தலக்குண்டிலிருந்து கோடைமலைக்குச் செல்லும் வழியில் உள்ளது. பளியர்கள் 30 குடும்பத்தார் இங்கு வாழ் கின்றனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நினைவுக்கறகள்

(பெருங்கற்களாலான சின்னங்கள்) இவ்வூரில் உள்ளன. பேரி, பலா, ஆரஞ்சு, எலுமிச்சை, சிட்ரஸ் எனப்படும் கடாரங்காய் ஆகிய மரங்கள் அடர்ந்த சோலைகளுக்கும் வாழைத்தோட்டங் களுக்கும் பண்ணைக்காடு புகழ்பெற்றது.

பூம்பாறை (ம. தொ 2,500)

கோடைக்கானல் நகரிலிருந்து 18 கி. மீ. தொலைவிலுள்ளது. குழந்தை வேலப்பர் கோயில் என்ற சுப்பிரமணியர் கோயில் இவ்வூரில் புகழ் பெற்றது. இக்கோயிலில் காணப்படும் (2-ஆம் நூ.) கல்வெட்டு, பூம்பாறை நாட்டுப் பூம்பாறை என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறது. 12-ஆம் நூற்றுண்டினது எனக் கருதப்பெறும் முருகனுடைய செப்புத் திருமேனி இக்கோயிலில் உள்ளது. அருணகிரியார் திருப்புகழ் இக்கோயிலுக்கு உண்டு.

மண்ணுடி என்ற சாதியார் பூம்பாறை நாட்டில் வாழ் கின்றனர். ஒரு மரத்துக்கு வளையல் பூட்டிய பிறகே, ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் செய்யும் பழக்கம் இவர்களிடையே நிலவுகிறது.

பூம்பாறைப் பள்ளத்தாக்கின் இருபுறச் சரிவுகளும் சம அளவில் உள்ளன. எங்கு நோக்கினும் இளமரக்காடுகளும் செங்குத்தான மேடுகளும் கண்ணுக்கு விருந்தாக உள்ளன.

செண்பகனூர்

கோடைக்கானல் நகரின் புறப்பகுதியில் சற்றுத் தாழ்வான நிலையில் உள்ள ஊர். இரைச்சலோ ஆர்ப்பாட்டமோ இல்லாது, அமைதியும் கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளும் உடையது கத்தோலிக்கர் இங்கே கட்டியுள்ள தேவாலயமும் பல மாடிக் கட்டிடங்களும் அவர்கள் நடத்திவரும்தோல் தொழிற்சாலையும் மருத்துவ நிலையமும் தச்சுப்பட்டறையும் காய்கறித் தோட்டமும் காணத்தக்கவை.

80 ஆண்டுகளுக்குமேல் இங்கு நடைபெற்ற ஆன்மீகக் கல்லூரி (தூய நெஞ்சுக் கல்லூரி) 1980-இல் சென்னை திருவான்

மியூருக்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் கற்பிக்கப்படும் மொழிகளைப் பற்றிய ஒரு பாடல் இது.

"திருச்சபையின் தாசர் பேசும்
    ரோமர் ஆண்ட இலத்தினும்
கரடு முரடு என்று கூறும்
    ஹோமர் கொண்ட கிரேக்கமும்
அருமைத் தமிழோ டாங்கிலமும்
    சீர் பெற்றிரு சாத்திரம்
கரவு நீக்கிப் பரிவுடனே
    ஊட்டித் தாங்கும் நங்கையே"

செண்பகனூரில் அருங்காட்சிக் கூடம் ஒன்று உளது.

கோடை மலையைப் பற்றி நன்றாக அறிய விரும்புவோர் இக்காட்சிக் கூடத்தைக் கண்டேயாக வேண்டும். மலையின் அமைப்பும் ஆங்காங்கு காணப்படும் உயிரினங்களும் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. தாண்டிக்குடியில்* காணப்படும் முதுமக்கள் தாழி, செப்புவளையங்கள் ஆகியவற்றையும் மாதூர், பழமலை, பெருமாள் ஆகிய ஊர்களில் கி. மு. 5,000 முதல் கி. மு. 3000 வரையுள்ள காலத்தில் அமைக்கப்பட்டிருந்தகல் அரண்கள் ஆகியவற்றையும் வெள்ளைக்காரப் பாதிரிமார்கள் கண்டு ஆராய்ந்து போற்றிப் பேணி வைத்து வரலாறும் வரைந்துள்ளனர்.

இந்த மலையில் காணப்படும் மரங்களையும் கற்களையும் வகைப்படுத்தினால் கணக்கிலடங்காது. இவை அனைத்தையும் இங்கே வைத்துள்ளனர்.

செண்பகனூர் அஞ்சல் நிலையம்

இது இந்தியாவிலேயே சிறந்த முறையில் நடத்தப்படும் அஞ்சலகம் என்று இந்திய அரசாங்கத்தால் பல முறை பாராட்டப் பெற்றது.

---

*பண்ணைக்காட்டிலிருந்து 11 கி. மீ. நடந்து தாண்டிக்குடியை அடையலாம். தாண்டிக்குடி, கடல் மட்டத்திலிருந்து 1800 மீட்டர் உயரத்திலுள்ளது. வத்தலக்குண்டிலிருந்து தாண்டிக்குடிக்குப் பேருந்து செல்லுகிறது.

பிற் சேர்க்கை

பாண்டியர்–பெயர்க்காரணம்

கி. மு. நான்காம் நூற்றுண்டைச் சார்ந்தவராகக் கருதப் படும் காத்தியாயனர் பாண்டியரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பழைய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் பாண்டியரைப் பற்றிப் பேசுகின்றது. மகா அலெக்ஸாந்தருக்குப் பின் வந்த செல்யுகஸ் நிகேடார், சந்திரகுப்த மௌரியரது அவைக்கு அனுப்பிவைத்த தூதுவரான மெகஸ்தனீஸ் என்பவர், தாம் எழுதியுள்ள 'இண்டிகா' எனும் நூலில் பாண்டிய நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

> "ஹெர்க்கிளிசுக்குப் பண்டேயா என்று ஒரு பெண் பிறந்தாள். அப்பெண்ணிற்கு, தெற்கில் கடலைச் சார்ந்துள்ள ஒரு நாட்டை அவன் அளித்தான். அவளது ஆட்சிக்குட் பட்டவர்களை 365 ஊர்களில் பகுத்து வைத்து, ஒவ்வோர் ஊரினரும் ஒவ்வொரு நாளைக்கு, அரசிக்குத் திறை கொணர வேண்டுமென்று கட்டளையிட்டான்."[1]

இதே கருத்தினை, கி. பி. 77-இல் பிளினி எனும் மற்றொரு மேனுட்டு வரலாற்று அறிஞரும் குறிப்பிடுகிறார்:

> "இந்தியாவில் பண்டோ வென்ற ஒரே சாதி பெண்ணரசுக் குட்பட்டது. ஹெர்க்கிளிசுக்கு ஒரே பெண்ணிருந்தமையின் அவன் மிக்க அன்புடன் ஒரு பெரிய நாட்டை அவளுக்கு அளித்ததாகச் சொல்லுகிறார்கள். அவள் வழியினர் முந்நூறு ஊர்களை ஆட்சிபுரிந்தனர். அன்னோர் பெருஞ் சேனைகளை உடையவராயுமிருந்தனர்."[2]

ஆகவே, இவ்விரு ஆசிரியர்களின் கூற்றுக்களிலிருந்தும் மலையத்துவச பாண்டியனுடைய புதல்வியாகிய மீனாட்சியம்மையின் வழித் தோன்றல்களாய்ப் பாண்டியர் விளங்கியிருக்கக்கூடும் என்பது செவிவழிச் செய்தி.

1, 2. பாண்டியர் வரலாறு: முன்னுரை — டி. வி. சதாசிவப் பண்டாரத்தார்.

பாண்டியர்கள்

கடுங்கோன்	:	590–620 களப்பிரர்களைத் தோற்கடித்து பாண்டிய குலத்தை நிலை நிறுத்தியவன்.
மாறவர்மன் அவனி சூளாமணி	:	620–645 நெல்வேலி வென்றவன். ஞானசம்பந்தரால் சமணத்திலிருந்து, சைவ மதத்திற்கு மாற்றப் பெற்றவன். இவனுடைய பட்டத்தரசி சோழ குலத்துதித்த மங்கையர்க்கரசி அமைச்சர் குலச்சிறை. நெல்வேலி வென்ற நெடுமாறன் என்று சுந்தரரால் போற்றப் பெற்றவன். கூன்பாண்டியன் எனவும் பெயர் பெற்றவன்.
சேந்தன்	:	645–670 இவன் காலத்தில் மலையடிக் குறிச்சிக் குகைக் கோயில் தோற்றுவிக்கப்பட்டது. சேரநாட்டைக் கைப் பற்றியவன்.
அரிகேசரி மாறவர்மன்	:	670–700 செந்நிலம், பாழி, விழிஞம், கோட்டாறு, புலியூர், குறுநாடு, சேலூர், ஆற்றுக்குடி முதலிய இடங்களில் சோழனோடு போர் புரிந்து வெற்றி கண்டவன். இவன்மீது பாண்டிக்கோவை பாடப்பட்டது.

நெல்வேலி வென்ற நெடுந்தகைக் என்று பட்டம் பெற்றவன். பராங்குசன், அரிகேசரி, விசாரி, கன்னிப்பெருமான் என்று பட்டப்பெயர்கள் பெற்றவன்.

கோச்சடையன் இரணதீரன் : 700–730
மருதூரில் கடற்படையை வென்றவன். ஆய்வேளைவெற்றி கொண்டவன். மங்கலபுரத்து (மங்களூர்) மகாரதரைத் தோற்கடித்தவன். கொங்கு நாட்டை வென்றவன்.

மாறவர்மன் ராஜசிம்மன் : 730–765
நந்திவர்மன் பல்லவ மல்லனைப் பல இடங்களில் வென்றவன். மண்ணிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர் முதலிய இடங்களில் வெற்றி கண்டவன்.

குழும்பூரில் பல்லவ மல்லனைத் தோற்கடித்தவன். மழகொங்கம் அடிப்படுத்தியவன். கங்க இராஜனோடு சம்பந்தம் செய்தவன். கூடல், வஞ்சி, கோழி ஆகிய இடங்களில் மதில் புதுக்கியவன். தேர்மாறன் என்ற பட்டம் பூண்டவன்.

பராந்தக நெடுஞ்சடையன் : 765–815
முதலாம் வரகுணன் என்று பெயர் பெற்றவன். பெண்ணாகடத்தில் நந்திவர்ம பல்லவ மல்லனைவென்றவன். ஆய்வேளையும்குறும்பரையும் வென்றவன். பண்டிதவத்சலன் என்றபட்டம் பூண்டவன். வேள்விக்குடி

சீவரமங்கலம், சின்னமனூர் முதலிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளை அளித்தவன் இவனே.

ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் : 815–862

ஈழத்தின்மீதுபடையெடுத்தான் பல்லவர் நாட்டின் சில பகுதியைக் கைப்பற்றினான். ஸ்ரீ மார ஸ்ரீ வல்லபனின் பட்டத்தரசி அக்களநிம்மடி. தெள்ளாற்றில் மூன்றும் நந்திவர்மனுடன் போரிட்டுத் தோற்றான்.

குடந்தையில் நடந்த போரில் தெள்ளாறெறிந்தநந்திவர்மனை தோற்கடித்தான். அரிச லாற்றங்கரையில் நிருபதுங்க வர்மனுடன் தோற்றான்.

பரச்சக்கர கோலாகலன் என்ற பட்டம் பூண்டவன்.

இரண்டாம் வரகுணவர்மன் : 862-885

சோழநாட்டு இடவை என்ற இடத்தினைக் கைப்பற்றினான். இவனுடைய காலத்தில் மாணிக்கவாசகர் வாழ்ந்ததாக சிலர் கருதுகின்றனர். திருப்புறம்பயம் போரில் அபராஜித மன்னனால் தோற்கடிக்கப்பட்டான்.

பராந்தக வீரநாராயணன் : 900–905

மாறவர்மன் இராஜசிம்மன் : 905–920

இவன் காலத்தில் மதுரையைப் பராந்தக சோழன் கைப் பற்றினான். இவன் ஈழத்திற்குச்

சென்று தன்னுடைய முடியை யும் மற்றச் சிறந்த பொருள் களையும் அங்கு விட்டு வந்தான். ஈழத்திலிருந்து கேரள நாட்டிற்குச் சென்றான்.

குறிப்புகள் கொள்ளப்பட்ட நூல்:

நன்றி: கையேடு (Hand Book) கலைக்காட்சிக் குழு, இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு சென்னை (1968) பக். 132-133.

வரலாற்றில் மதுரை மாவட்டம்

கி. மு.

302 மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க நாட்டவர் பாண்டிய நாட்டைப்பற்றி எழுதிவைத்துள்ளார்.

250 புத்தருடைய கல்வெட்டுக் கட்டளைகளில் பாண்டிய நாடு இடம்பெறுகிறது.

கி. பி.

20 பாண்டிய அரசன் ரோமாபுரி அரசுக்குத் தூதுவரை அனுப்பினான்.

70 பெரிப்புளூஸ் என்ற நூலின் ஆசிரியர் பாண்டிய நாட்டின் முத்துச் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடு கிறார்.

77 பிளினி என்னும் அறிஞர் மதுரையின் வாணிகச் செழிப்பை வியக்கிறார்.

140 மதுரையில் ரோமாபுரி நாணயங்கள் கிடைத்தன.

300 சங்ககாலத்தின் இறுதி.

300–600 களப்பிர ஆட்சி சமணசமயம் ஏற்றம்பெற்றது.

7-ஆம் நூ. மீண்டும் பாண்டியர் செல்வாக்குப் பெற்றனர். தேவார நாயன்மார் காலம், சமணர்கள் மதுரையி லிருந்து வெளியேற்றப்பட்டனர்.

710 கோச்சடையன் இரணதீரன் பட்டத்துக்கு வந்தான்.

9-ஆம். நூ. இடைக்காலப் பாண்டியரின் பொற்காலம்.

920 பாண்டியர் வீழ்ச்சி. மதுரைச் சீமை, சேதுப் பேரரசருக்குக் கட்டுப்பட்டது.

1216–1238 மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி. இவன் சோழ நாட்டின்மீதுபடையெடுத்துத்தஞ்சையைப்பிடித்தான்.

1251–1270 சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலம். இவன் பாண்டிய அரசர்களுள் பெரும் புகழ் பெற்றவன். இலங்கையையும் சேர்த்து ஆட்சி செய்தவன்.

1268–1309 மாறவர்மன் குலசேகரன் ஆட்சி. இவன் சோழர், ஒய்சாளர் ஆகியோரையெல்லாம் தோற்கடித்து வெற்றிக்கொடி நாட்டினன்.

1310 மதுரையை மாலிக் கபூர் படையெடுத்தான்.

1334–1378 மதுரையில் முஸ்லீம் சுல்தான்களின் ஆட்சி.

1377 விஜயநகரப் பேரரசு தோன்றியது.

1509 விஜயநகரப் பேரரசராக கிருஷ்ணதேவராயர் முடிசூட்டிக் கொண்டார்.

1559 மதுரையில் நாயக்க மன்னரின் ஆட்சி தொடக்கம்.

1559–1564 மதுரையில் விசுவநாத நாயக்கரின் ஆட்சி.

1565 தலைக்கோட்டைப் போர். விஜயநகரப் பேரரசின் அழிவு.

1564–1572 மதுரையில் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சி.

1600 தளவாய் அரியநாத முதலியார் இறந்தார்.

1606 தெ. நோபிளி என்ற இத்தாலியப் பாதிரியார் மதுரைக்கு வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினார்.

1623–1659 திருமலைநாயக்கர் ஆட்சி. மதுரையின் பொற்காலம்.

1689–1706 ராணி மங்கம்மாள் ஆட்சி.

1736 நாயக்கர் ஆட்சி சீரழியத்தொடங்கியது.

1755 ஹைதர்அலி திண்டுக்கல் பகுதியைப் பிடித்து அங்கு கோட்டை கட்டினார்.

1781 கர்நாடக நவாபு ஆங்கிலேயருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டார்.

1781 நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

1786 மதுரை மாவட்டம் ஏற்பட்டது.

1790 பிரிட்டிஷ் ஆட்சி மதுரை மாவட்டத்தில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டு முதல்கலெக்டர் நியமனமானார். (மூன்றுவதுமைசூர்ப்போர் முடிவடைந்து ஆர்க்காட்டு நவாபிடமிருந்து நாட்டை ஒப்புக்கொண்டு ஆங்கிலேயர் ஒரு பிரகடனம் வெளியிட்டனர்)

1802 மதுரையில் மாவட்ட நீதிமன்றம் ஏற்பட்டது.

1838 மதுரையிலும் கோடைக்கானலிலும் சமய, மருத்துவ கல்விப்பணிகள் புரிய அமெரிக்க மிஷன் ஏற்பட்டது.

1840 மதுரை, இதுவரை நான்குவெளிவீதிகளுக்கு உள்பட்ட ஒரு கோட்டை நகராக இருந்தது. கோட்டைச் சுவர்கள் அழிக்கப் பட்டு, மதுரை நகரின் எல்லைகள் விரிவாக்கப்பட்டன.

1845 கோடைக்கானலில் அரசாங்கத்துக்குச் சொந்தமான இடங்கள் ஒரு காணி (ஒரு ஏக்கர் 32 சென்டு) ரூபாய் 5/25 விலைக்கு விற்கப்பட்டன.

1866 மதுரை நகராண்மைக் கழகம் அமைக்கப்பட்டது.

1867 கோடைக்கானல் ஏரி வெட்டப்பட்டது.

1875 திருச்சி-மதுரை இரயில் போக்குவரத்து தொடங்கிற்று. அடுத்த ஆண்டில் தூத்துக்குடிவரை இரயில் போக்குவரத்து ஏற்பட்டது.

1876–1877 தாது வருஷப் பஞ்சம்.

1879–1884 நிலங்கள் அளக்கப்பட்டு அந்த அடிப்படையில் தரம் வாரியாக நிலவரி வசூலிக்கப்பட்டது.

1885 வைகைப் பாலம், மதுரைக்கும் தல்லாகுளத்துக்கும் இடையே கட்டப்பட்டது.

1886 பெரியாற்று நீரை 999 ஆண்டுகள் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாட்டுக்கு இசைவு தந்து திருவாங்கூர் அரசுடன் ஒப்பந்தம்.

1889 ஹார்வி குடும்பத்தார் மதுரை மில் என்ற பெரிய ஆலையைத் தொடங்கினர். கோடைக்கானல் தாலுகா ஏற்பட்டது.

1895 பெரியாறு வாய்க்கால் வெட்டப்பட்டது.

1899 கோடைக்கானலில் வானிலை ஆராய்ச்சிக்கூடம் ஏற்பட்டது.

1900 மேலூர் வட்டத்துக்குப் பெரியாற்று நீர்விடப்பட்டது.

1902 மதுரையிலிருந்து பாம்பன் வரை இரயில் பாதை நீட்டப்பட்டது

1913 சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேரகராதி வேலை மதுரையில் தொடங்கிற்று

1921 மகாத்மா காந்தி, மதுரைக்கு வந்து தம் ஆடைகளைக் குறைத்துக் கொண்டார்.

1928 காந்தியடிகள் மதுரை வருகை.

1934 காந்தியடிகள் மீண்டும் மதுரை வருகை.

1942 வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1945 திருப்பரங்குன்றம் அரசியல் மாநாடு. ராஜாஜி, 1942 இயக்கத்தின்போது ஒதுங்கியிருந்ததைக் கண்டிக்கும் வகையில், திருச்செங்கோடு தொகுதி ஒன்றில் அவர் த. நா. காங்கிரஸ் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டது செல்லாது என்று திரு. காமராசர் தலைமையில் முடிவு செய்யப்பெற்றது. 'ஒரு கும்பல் தமிழ்நாட்டு அரசியலை ஆட்டிப் படைப்பதாக' இதைப்பற்றி காந்திஜி குறிப்பிட்டார்.

1947 இந்தியா, அரசியல் விடுதலை பெற்றது. முதல் தமிழ் விழா மதுரையில் நடைபெற்றது.

1958 சுருளி அருவி சீர்திருத்தி அமைக்கப்பட்டது. வைகை அணை திறக்கப்பட்டது. பெரியாறு மின்சார நிலையம் கட்டப்பெற்றது.

1963 மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு.

1965 வேளாண்மைக் கல்லூரி தொடங்கப் பெற்றது. ஒட்டன்சத்திரம் வட்டம் தோற்றம்.

மதுரையில் பல்கலைக் கழகம் ஏற்பட்டது.

1971 மதுரை ஒரு மாநகராக அறிவிக்கப்பெற்றது.

1977 வேடசந்தூரில் குடகனாற்றில் திடீர்வெள்ளம் ஏற்பட்டு அணை உடைந்து, பலநூறு மக்கள் உயிரிழந்தனர்.

1981 மதுரையில் உலகத் தமிழ் மாநாடு.

மதுரை பற்றிய பழைய சுவடிகள்

தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சேர்ந்த தமிழக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் மதுரை தொடர்பான சுவடிகள் ஏறத்தாழ 30 உள்ளன. அவற்றில் சில வருமாறு:

1. மதுரை மீனாட்சியம்மன் கோயில் சாசனம்:—

இதில் மதுரைக் கோயிலுக்குப் பிறர் அளித்த சில அறக் கொடைகளும், கோயிலின் அன்றாட நிகழ்ச்சிகள் சிலவும் சொல்லப்பட்டுள்ளன.

2. மதுரைச் சொக்கேசர் பயங்கர மாலை:—

மதுரையில் நிகழ்ந்த திருவிளையாடல்கள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாட்டிலும், 'சொக்கேசர் பயங்கரனே' என்னும் இறுதிச் சொல் வருகிறது.

3. மதுரை வீரன் கதை அம்மானை:—

வீரய்யன் எனும் பெயரோடு திருச்சியில் அரச ஊழியம் செய்து கொண்டிருந்தவன் திருமலைநாயக்கருக்கு உதவியாக மதுரைக்கு வந்து திருடர் பயத்தை ஒழித்து மதுரை வீரன் ஆன கதை 'அம்மானை' எனும் சிற்றிலக்கிய வடிவத்தில் பாடப் பட்டுள்ளது.

4. மதுரைச் சங்கத்தார் சரித்திரம்:—

இதில் வள்ளுவரின் பிறப்பு பற்றிய செய்திகள் சொல்லப் பட்டுள்ளன. ஆதி எனும் தாழ்த்தப்பட்ட பெண்ணிற்கும் பகவற்கும் பிறந்தவர் என்றும், கபிலர் என்று அழைக்கப்படுவர் இவரே என்றும் இவருடன் பிறந்தவர் பற்றியும் சொல்லப் பட்டுள்ளது.

5. மதுரைப் பாண்டிய மன்னர் சரித்திரம்:—

இதில் முதல் குலசேகர பாண்டியன், அவன் மகன் மலையத் துவச பாண்டியன் என்று பாண்டியர்களின் பரம்பரையைப் பற்றியும் அவர்கள் ஆண்டகாலக் கணக்குப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இச்சந்ததி வரிசை சந்திரசேகர பாண்டியனுக்குப் பிறகு அற்றுப் போகவே அவன் தத்து எடுத்து வளர்த்தான் என்றும் கூறப் பட்டுள்ளது.

6. மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி
7. மதுரையமக அந்தாதி

} மாணூர் அனந்தரங்கக் கவிராயர் மதுரைக் கடவுளின் பெருமைகளைப் பாடியுள்ளார். அவை இத்தலைப்புகளில் இடம் பெற்றுள்ளன.

மதுரையும் கோவையும்

கோவைக்கிழார் திரு. ம. இராமச்சந்திரன் செட்டியார்

மதுரையில் பஞ்சாலைகள், நூற்பாலைகள், நெசவாலைகள் ஓங்கியிருக்கின்றன. கோவையிலும் இம்மூன்று ஆலைகளும் சிறந்து வளர்கின்றன. இந்தத் தொழில் வளர்ச்சிக்குக் காரணம் மதுரைக்குத் தெற்கே கருமண் நிலங்களில் பருத்தி விளைவும், கோவைக்கு அருகே சுற்றிலும் கரிசல் மண்ணில் பருத்தி விளைவுமே அடிப்படை என்க. மேலும் பல நூற்றாண்டுகளாகக் கைத்தறி நெசவும் இரண்டிடங்களிலும் சிறந்த கைத்தொழிலாக இருந்து வந்திருக்கிறது. மதுரையில் சௌராஷ்டிரர்களும், கோவையில் தேவாங்கர்களும், நெசவையே தம் பிழைப்புத் தொழிலாகக் கொண்டும் அவ்வாறு நெய்த துணிகளை விற்பனை செய்து வாணிபத்தில் சிறந்தும் விளங்குகிறார்கள். நாளாவட்டத்தில் கைத்தறி விசைத்தறியாகவும், விசைத்தறி யந்திரத் தறியாகவும், வளர்ந்து பெருத்த வாணிபத்திற்கு அடிகோலி வந்திருக்கிறது. இந்த வகையில் இரண்டு நகரங்களிலும் தொழில் அபிவிருத்தியும் செல்வமும் செல்வாக்கும் முன்னேறிக்கொண்டு வந்திருக்கிறது.

மதுரையைச் சுற்றிலும் வைகை யாற்றின் செழிப்பால் நன்செய் விளைவுகள் நிரம்ப ஏற்பட்டு, உழவர்களுக்கு நல்ல பிழைப்பு தருகின்றன. அது போலவே கோவையைச் சுற்றிலும் நொய்யல் ஆற்றின் நன்னீராலும் பலபல குளங்களின் நிறைவு நீராலும் உழவர்களுக்குப் பிழைப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும் கொங்கு நாட்டில் வடக்கே பவானியும், தெற்கே அமராவதியும் பல அணைகளின் மூலம் நன்னீர் பாய்ச்சி உழவுத் தொழிலை முன்னேறச் செய்கின்றன. இனி ஏனைய கைத்தொழில்களும் இயந்திர தொழில்களும் நாளுக்குநாள் முன்னேறிக் கொண்டுவருகின்றன. அண்மையில் சிறு கைத்தொழில்கள் பல ஏற்பட்டுச் சின்னஞ் சிறு கருவிகளைச் செய்ய முற்பட்டு இரண்டு நகரங்களிலும் பொதுமக்களுக்கு ஊதியமும் தந்து உணவுப் பண்டங்களை அடைய வாய்ப்புகளும் தருகின்றன.

செந்தமிழ் வளர்ச்சியிலும் தமிழ்ச் சங்கங்கள் இரண்டிலும் ஏற்பட்டுத் தமிழை ஆராய்வதோடு தமிழ்க் கல்லூரிகளும் மதுரையிலும் பேரூரிலும் ஏற்பட்டு நல்ல வேலை செய்கின்றன.

எல்லாவற்றிலும் மேலாக, சமயச் சார்பிலும் இரண்டு நகரங்களும், பல புனித நிலையங்களைத் தம்முள் கொண்டிருக்கின்றன. மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலும் அதில் நடந்து வரும் திருவிழாக்களும் அந்நகரை புனிதம்வாய்ந்த சிவலோகமாக்கிவிடுகின்றன. அதைப் போலவே கோவைக்கடுத்த திருப்பேரூரோ கோவையைப் புதின ஊர் ஆக்கிவிடுகிறது. பேரூர்ப் பட்டீசர் கோயிலும், மருதமலை முருகன் கோயிலும், வெள்ளிமலை ஆண்டவர் கோயிலும், கொங்கு நாட்டு மக்களைப் புனிதமுக்களாக்கி வருகின்றன.

தமிழ் வளர்த்த தலைநகர் மதுரை ஆகும். அங்கே பாண்டியர் அரசவையில் மூன்று சங்கங்கள் இருந்து கணக்கற்ற புலவர்கள் தமிழை ஆராய்ந்தார்கள். பல பல நூல்களை இயற்றி அரங்கேற்றினார்கள். அவைகளில் மறைந்தவை போகலாக பிழைத்த நூல்கள் மூன்று பகுதிகளாக இன்றைக்கும் இருக்கின்றன. அவைதான் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென் கீழ்க்கணக்கு என்ற முப்பத்தாறு தொகைநூல்கள். அவை மதுரையில் அரங்கேற்றப் பட்டாலும் இயற்றிய புலவர் பெருமக்கள் பலநாடுகளிலிருந்தும் மதுரைக்கு வந்தவர்களேயாவர். செங்குன்றூர்க் கிழார், அந்திரனார், கருவூர்க் கந்தப்பபிள்ளை, கருவூர் பெருஞ்சதுக்கத்து பூதநாதனார், கருவூர்க் கோசனார், வீராடகத்துக் கந்தரத்தனார் என்ற புலவர்கள் கொங்குநாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கொங்கு நாட்டிலிருந்து மதுரை சென்று நூலாராய்ந்தார்கள். ஆகவே மதுரைக்கும் கொங்குநாட்டிற்கும் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே தொடர்பு இருந்தது.

மேலும், சங்கப் புலவர்களில் முடமோசியார், கோவூர்க் கிழார், காரிக்கண்ணனார், மாங்குடி மருதனார், அரிசில்கிழார் நக்கீரனார், பரணனார், கௌதமனார், இளநாகனார் முதலிய நல்லிசைப் புலவர்கள், கொங்குநாடு, கொங்குப் பெருமக்கள், கோசர் முதலியோர்களைப் பற்றிப் பாடியுள்ளார்கள். அக்காலத்திலேயே கொங்கப் பெருமக்களைப்பற்றி மதுரை மக்கள் அறிந்திருந்தார்கள்.

மதுரையில் சிலப்பதிகாரத் தலைமகன் கோவலன்வெட்டுண்டு கிடக்கக் கண்ணகி பாண்டியனைக் குற்றஞ்சாட்டி நீதிகேட்டு வஞ்சியில் விண் ஏறிய நாளில் கண்ணகிக்குக் கோயில் கட்டிச் சாந்தி செய்யப்பட்டது. எல்லா நாட்டார்களைப் போலவே அப்போது கொங்கு நாட்டில் ஆண்ட கொங்கிளங்கோசர் நங்கைக்கு விழாவோடு சாந்தி செய்தார். அதனால் தமிழையும்

செய்ததெனச் சிலப்பதிகாரக் கட்டுரை கூறுகிறது. இதனால் அக் காலத்திலேயே மதுரைச் செய்திகள் கொங்குநாட்டிற்கு எட்டின, இருதலைநகர்களுக்கும் தொடர்பும் இருந்தது என அறியலாம்.

மதுரையில் சங்ககாலத்துப் பழைய பாண்டிய அரச பரம் பரைக்குப் பிறகு 5-ம் நூற்றாண்டு முதல், முதற் பாண்டியப் பேரரசு தொடங்கியது. அதன் வரலாற்றைப் பாண்டியச் செப் பேடுகளால் அறிகிறோம். அவர்களில் சடையன் இரணதீரன் (680-710) கொங்கர் கோமான் என்ற பட்டம் வகித்தான். ஆகவே அவன் கொங்குநாட்டுத் தொடர்பு வைத்திருக்கவேண்டும். அவன் மகன் அரிகேசரி மாறவர்மன் (700-740) பாண்டிக்கொடுமுடிக்கு வந்ததாக வேள்விக்குடிச் சாசனம் கூறுகிறது. அவன்மகன் நெடுஞ் செழியன் (740-770) கொங்கு அரசன் அதிகமானை ஐவியூர் புகலியூர், ஆயிரவேலி என்ற இடங்களில் நிகழ்ந்த போர்களில் வென்றதாகக் கூறப்படுகின்றன. பிறகு "மேல் கொங்கு நாட்டில் காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத் திருமாலுக்குக் குன்றம் அன்னதோர் கோயில் கட்டின" தாக கூறப்படுகிறான். இப்பேரூர் கோவைக்கு மூன்று கல்லில் உள்ள ஒரு புனித வைப்புஸ்தலம். அதற்குச் சிறிது பின்னர் கொங்குநாட்டில் விஜயம் செய்த சுந்தரமூர்த்திகள் "மீ கொங்கில் பேரூர்பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே" என்றுபாடியுள்ளார். ஆகவே இந்த இரண்டு கூற்றுக் களும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இதனால் பாண்டிய மன்னர் கள் கோவைக் கருகில் தொடர்பு வைத்துக் கொண்டது தெளிவாகும்.

13-ம் நூற்றாண்டில் கொங்குநாட்டை ஆண்ட கொங்கு சோழர்கள் பலவீனமடைய, மதுரைப் பாண்டியர்கள் கொங்கு நாட்டின் சில பகுதிகளை வென்று தங்கள் பிரதிநிதிகள் மூலமாக ஆண்டார்கள். அப்பிரதிநிதிகள் கொங்கு பாண்டியர்கள் எனப் பட்டார்கள். சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்ற கொங்கு பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. ஆகவே 13-ம் நூற்றாண்டில் மதுரைக்கும் கொங்குநாட்டிற்கும் தொடர்பு இருந்தது.

பிறகு 1559–1670 வரை விஜயநகரத்து கருநாடக சாம்ராச் சியத்தின் சார்பாக நாயக்க மன்னர்கள் பெரும் புகழோடு மதுரையில் ஆண்டார்கள். அவர்களில் விசுவநாத நாயக்கன் 1559-ல் கோவை, ஈரோடு, தாராபுரம் வரை படையெடுத்தான். அவன், தான் ஆண்டுவந்த நாடுகளைப் பாளையப்பட்டுக்களாகப்

பிரித்துக் குறுநில மன்னர்களை வைத்தான். அவன் கீழ் இருந்த பாளையப்பட்டுகளில் கொங்கு நாட்டில் சில இருந்தன. திருமலை நாயக்கன் காலத்தில் (1623-59) கோவை நகர் அவன் ஆதிக்கத்தில் இருந்தது. அவனுடைய உறவினன் அளகாத்திரி நாயக்கன் கோவையில் தங்கி பேரூர்த் திருப்பணி செய்தான். பேரூர்க் கோவிலில் உள்ள நடனசபை அவனால் கட்டப்பட்டது. சிற்ப வேலையில் கொங்கு நாட்டிலேயே அதைப்போல வேறெதுவும் இல்லை.

அந்த நாயக்கன் வடிவங்களும் கோவிலில் இரண்டு தூண்களில் உள்ளன. அப்போது மதுரைக்கும் பேரூர்க்கும் மிக்க தொடர்பு இருந்தது.

1672-ல் ஈரோடுப் பெரும் போரில் மதுரைக்கும் மைசூருக்கும் பகைமை உண்டாக, மதுரையார் கொங்கு நாட்டை மைசூருக்கு விட்டுச் சென்றார்கள்.

இந்த வகையில் மதுரைக்கும் கொங்குநாட்டிற்கும் தொடர்பு இருந்துகொண்டே இருக்கிறது. தற்போது கொங்கு நாட்டிற்குச் சேர்ந்த பழனி வட்டமும் திண்டுக்கல்லில் ஒரு பகுதியும் மதுரை மாவட்டத்தில் சேர்ந்திருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இரண்டு தலைநகர்களுக்கும் இன்று வரை நட்பும் கூட்டுறவும் இருந்துவந்திருக்கிறது.

குறிப்பிடத்தக்க அம்மன் கோயில்கள்

மதுரை	...	மீனாட்சியம்மன்
மதுரை	...	செல்லத்தம்மன்
திண்டுக்கல்	...	காளியம்மன்
திண்டுக்கல் கோடைக்கானல் பழனி ஆண்டிப்பட்டி	}	மாரியம்மன்
மேலக்கோட்டை திருமங்கலம்	}	பத்ரகாளியம்மன்

வீரபாண்டி	...	கௌமாரியம்மன்
கோம்பை	...	அங்காளம்மன்
அகரம்	...	முத்தாளம்மன்

இவை தவிர மாவட்டமெங்கும் ஏராளமான கிராம தேவதைக் கோயில்களும், 300க்கும் மேற்பட்ட மீனாட்சியம்மன் கோயில்களும் சின்னஞ்சிறு ஊர்களில் உள்ளன.

சராசரி மழை

(ஒரு சதுரமைல் பரப்பளவில்)
மாவட்டத்தின் சராசரி மழை 81 செ. மீ.

		இலட்சம் கன அடி
1.	பெரியாறு	439
2.	கோடைக்கானல்	168
3.	உசிலம்பட்டி	95
4.	சத்திரப்பட்டி	94
5.	நிலக்கோட்டை	73
6.	திண்டுக்கல்	73
7.	பெரியகுளம்	69
8.	மேட்டுப்பட்டி	61
9.	கூடலூர்	50
10.	போடிநாயக்கனூர்	41

எங்கள் மதுரை மாவட்டம்

டாக்டர் தமிழண்ணல்
தமிழ்ப் பேராசிரியர்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

திரு மருத முன்துறையின்
பொழிலடர்ந்த சிறப்பினாலோ
தித்திக்கும் மதுரமொழிச்
சிறப்பி னாலோ
திகழ்கின்ற மாமதுரைப்
பெயர்மருவு தலைநகரச்
சிறப்புடைய மாவட்டம்!

சங்கம் வைத்துப்
பெருமைபெற்ற பாண்டியர்கள்
தமிழ்வளர்த்த சீர்மையினால்
பேச்சுமொழி யுட்சிறந்த
செந்தமிழ் நின்று ஓங்குவட்டம்!
வான்மீகி கௌடில்யர்
மெகஸ்த னீசுபோல்
பிறநாட்டார் புகழ்ந்துரைத்த
சிறந்த வட்டம்!

திருமலை நாயக்கருடன்
மங்கம்மாள் வகுத்தமைத்த
சிற்பங்கள் மண்டபங்கள்
மகால் நற் கோயில்
தெய்வமகன் காந்திநிதி
நினைவுநிலை மண்டபமும்
சிறந்தொளிரும். கலைவளங்கட்கு
எல்லை உண்டோ?

அருமைமிகும் மதுரைப்
பல்கலைக்கழகம் அமைந்ததனால்
அக்காலச் சங்கமுறும்
வாழ்வை மீண்டும்
அடைந்திட்ட மாவட்டம்
மீனாட்சி கடைக்கண்ணின்
அருள்பொழிய நலங்கொழிக்கும்!
எழில்நின் றோங்கும்!

II

பாலசாறும் தேனூறும்
பாவைஇதழ் எழில்காட்ட
மணிமுத்து முறுவலுடன்
சுருளி பாய
மஞ்சள் ஒளிர் முகத்தாளாய்
வையைப்பெண் மேற்குமலை
வளர்ப்புப்பெண் புகுந்தஇடம்
மதுரை வட்டம்!

சேலாடும் மீன்விழிவாழ்
வை, கை, அணைக் கட்டுஉண்டு

சீர்பெருகிக் காதலர்கள்
சிரிக்கச் செய்வாள்!
செம்மாந்து களிறுபல
காதன்மடப் பிடிகளுடன்
சிறந்துலவு பெரியாற்றின்
அலைகள் பாட

நூலாடும் இடைதழுவும்
காதலர்கள் களித்துமகிழ்
தேக்கடியோ தேக்கடியென்று
இன்பம் தேக்கி
நுவலரிய மின்சக்தி
பிறப்பிக்கும் நீர்த்தேக்கம்
நுட்பமுறை உலகிதனுக்கு
ஒளியை ஊட்டும்!

ஏலமலை வளஞ்சுரக்க
சிறுமலைப் பழஞ்சிறக்கக்
கோடைமலை கனிகாய்கள்
நல்க, நல்கும்
இயற்கைவளம் இல்லாத
நாகமலை பல்கலைகள்
எடுத்துணர்த்தும். ஆனைமலை
வேளாண்மை நல்கும்!

III

வானோங்கும் கோபுரங்கள்
வரவேற்புக் காட்சிநல்கும்
வையைநதி வறட்சியினால்
தண்ணீர் இன்றி
வாழ்குடிசை மக்களுடன்
சித்திரை விழாவருங்கால்
மக்கள்வெள்ளம் பாய்கின்று
காட்சி நல்கும்!

தேனோங்கும் இயற்கைவளப்
பயிர்சிலிர்க்கும் பெரியகுளம்!
திண்டுக்கல் பூட்டந்தத்
திருவைக் காக்கத்

திகழ்கின்ற பெட்டகமும்
சிறு தொழிற்குவிளக்கேற்றத்
தீப்பெட்டி (திரு)மங்கலத்தில்
சிறந்து நிற்கும்!

கானோங்கு நிலவளமும்
கதிரோங்கு வயல்வளமும்
கருத்தோங்கு மனவளமும்
கொண்ட தாலே
கலையோங்கு புகழ்வளரும்
கல்வி நலப் பாங்கொளிரும்
கருதும்உயர் வாணிகமும்
சிறப்புற் றோங்கும்!

தானோங்கி நிற்பதனால்
தமிழகத்தின் தென்பகுதித்
தலைநகரச் சிறப்புடைய
மதுரை தன்னைச்
சார்ந்தோங்கும் மாவட்டம்!
தமிழோடும் சமயத்தோடும்
தலைநிமிர்ந்தே என்றென்றும்
சிறக்கும் வட்டம்.

IV

கோடையிலே இளைப்பாற்றிக்
கொள்ளுதற்குப் புகழ்படைத்த
குறிஞ்சிமலர் பூக்கின்ற
கோடைக் கானல்
குமரனிருந்து அருள்புரியும்
பழநிமலை, பரங்குன்றம்,
பழமுதிர் சோலைபடை
வீடு மூன்று!

நாடுபுகழ் மாமதுரை,
திண்டுக்கல், பெரியகுளம்,
பழநி, திரு மங்கலம், நற்
கோடைக் கானல்,
நிலக்கோட்டை, மேலூரும்
உசிலையுடன் வேடசந்தூர்

உத்தமபா ளையமாய்
உரைக்கும் வட்டம்

ஏடுபுகழ் இவையுளநல்
எழில்வளர்க்கும் பழம்புகழை
எடுத்துரைக்கும்! தமிழுக்கும்
எழுச்சி நல்கும்!
இடரகற்றும் விடுதலைப்போர்
எண்திசையும் பரவுதற்கும்
இடம்தந்த மாவட்டம்
தலைமை வட்டம்!

ஆடைகளின் வகைசிறக்கும்
ஆலைகளும் கைத்தறியும்!
சர்க்கரை, சிமிந்தியாலை*
அமைந்திருக்கும்!
அன்னையெனும் பாரதத்தின்
முத்தாரத் தென்னாட்டின்
அன்புவளர் இதயமிந்த
மதுரைமா வட்டம்!

மற்றொரு பாடல்

(பாடியவர் பெயர் தெரியவில்லை)

ஆனைமலை நாகமலை அழகர்மலை எழிற்
சோலைமலை ஏலமலை பழனிமலை
மானைநிகர் கண்ணகியாள் நடந்தே சென்ற
வானை நிகர் சுருளிமலை மேகமலை!

கொட்டாத 'தேனீ' யுண்டு; சீறாத 'நாக'முண்டு;
குறையாத 'பெரியகுளம்' 'சிலைமான்' உண்டு;
வட்டாகக் 'கருப்பட்டி' யுண்டு; பட்டுடனே
போட்டியிடும் 'சின்னாளப்' பட்டியுண்டு!

---

* கவிஞர் பாடியது 1974-இல். பிறகு திருத்தம் அனுப்பினர். ஆனால் நாம் அவர் அனுப்பிய திருத்தத்தை வெளியிடவில்லை. கவிஞர் வாக்குப் பொய்ப்பதில்லை. மாவட்டத்தின் வடகோடியிலுள்ள பாளையத்தில் சிமிண்டுஆலை அமைக்க தமிழக அரசு 1980 இறுதியில் முடிவு செய்திருக்கிறது.

முட்டாத 'பசு'வுண்டு; மூவர் பாடாத் 'தேவாரம்' உண்டு
கட்டோடு கரும்புண்டு; கார்நெல்லுண்டு
பார்முட்டும் திண்டுக்கல் பூண்டுண்டு; திகட்டாத்
தேனுண்டு; தெம்மாங்குப்பாட்டுண்டு.

மதுரை மாவட்டத்தில் குடைவரைக் கோயில்கள்

அரிட்டாப்பட்டி
ஆனைமலை
திருப்பரங்குன்றம்
குன்னத்தூர்

மதுரை மாவட்டத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய புதைகுழிகள்

[முதுமக்கள் தாழிகள், கல் வட்டங்கள் முதலியன காணப் படும் 40 ஊர்கள்]

மதுரை
விளாங்குடி
பழங்காநத்தம்
சாமநத்தம்
பரவை
அனுப்பானடி
வண்டாரி
பாறைப்பட்டி
திருமாணிக்கம்
திருமங்கலம் கல்லுப்பட்டி
மேலம்பூர்
கோபால்சாமி பறம்பு
வடகரை
மதிப்பனூர்
சிவரக்கோட்டை
கோட்டைமேடு
அமத்தியப்பட்டி
பெரியகோட்டை
சங்கப்படை
புதூர்கோட்டைப்பட்டி
கிரிசல்கலம்பட்டி
சென்னம்பட்டி
குண்டலநாயக்கன்பட்டி
குருயூர்
கோடைக்கானல்
பண்ணைக்காடு
பெருமாள்மலை
தாதன்பட்டி
ரிஷபன்திடல்
கறுப்பணசாமிகோயில்மேடு
பொதும்பசிகந்தர் சாவடி
தேனூர்
சமயநல்லூர்
மேலக்குயில்குடி
வேடர்புளியங்குளம்
செங்குளம்
தாதனேனைமேடு
பெரியகுளம்
திருமங்கலம்
வருஷநாடு.

மதுரை மாவட்டத்தில் கற்காலக் கருவிகள் கிடைத்துள்ள ஊர்கள்

(அ) பழங்கற்காலம் (OLD STONE AGE)

அவியூர்
தி. புதுப்பட்டி

(ஆ) கடைக் கற்காலம் (PRE-HISTORIC STONE AGE)

போடிநாயக்கனூர்
கொல்லம்பட்டறை
தாதனேடைமேடு
திருமங்கலம்
பெரியகுளம்
தி. கல்லுப்பட்டி
சிவரக்கோட்டை
கருவேலம்பட்டி
சென்னம்பட்டி

(இ) புதிய கற்காலம் (NEOLITHIC STONE AGE)

சமயநல்லூர்
துவரிமான்

துவரிமானில் கி. மு. 5,000 இலிருந்து தமிழர்கள் பயன்படுத்திய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள.

மதுரை மாவட்டத்தில் தமிழ் பிராமி கல்வெட்டு உள்ள ஊர்கள்

[கி. மு. 2-ஆம் நூற்றுண்டு முதல் கி. பி. 2-ஆம் நூற்றுண்டு வரை]

மேலூர் வட்டம்

மாங்குளம் மீனுட்சிபுரம்
அரிட்டாபட்டி
கிடாரிப்பட்டி
திருவாதவூர் (?) க்ருங்காலக்குடி

நிலக்கோட்டை வட்டம்

விக்கிரமங்கலம்

கீழவளவு	மதுரை வட்டம்
திருவாதவூர்	
யானைமலை-நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு மேலே.	நாகமலை
	திருப்பரங்குன்றம்
	குன்னத்தூர் (வரிச்சூர் அருகே)
	கொங்கர் புளியங்குளம் (பல்கலைநகர் அருகே)

முற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் உள்ள ஊர்கள்
[கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரை]

யானைமலை-நரசிங்கப்பெருமாள் கோயில்
யானைமலை லாடன் கோயில்
திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில்
தேனூர்
திருமால் நத்தம் (சோழவந்தான் அருகே)
நாகமலை அருகே அமணமலை
கீழ்மாத்தூர் (துவரிமான் அருகே)
நின்ற சீர் நெடுமாறன் கல்வெட்டு (மீனாட்சி அம்மன் கோயில் அருங்காட்சியகம்)

பிற கல்வெட்டுகள்

மேலூர் வட்டம்

அழகர்மலை, யானைமலை, தருக்காகுடி, திருச்சுனை, கல்லங்காடு, அருவிமலை (வஞ்சி நகரத்திற்கு அருகேயுள்ள அருகன் குன்றம்), திருமோகூர், ஆமூர், நத்தம்.

மதுரை வட்டம்

மீனாட்சி அம்மன் கோயில், மதனகோபாலசாமி கோயில், கூடலழகர் கோயில், எழுகடல், செல்லத்தம்மன் கோயில்.

காந்தி மியூசியத்தில் சில கல்வெட்டுகள் பேணப்பட்டு வருகின்றன.

குன்னத்தூர், கீழடி (சிலைமான் அருகே), திருப்பரங்குன்றம்,

நிலக்கோட்டை வட்டம்

தேனூர், திருவேடகம், சோழவந்தான், தென்கரை, குருவித்துறை, விக்கிரமங்கலம், நிலக்கோட்டை, அம்மையநாயக்கனூர்.

பெரியகுளம் வட்டம்

பெரியகுளம் தென்கரை, வீரபாண்டி, சின்னமனூர், கம்பம், மேல்மங்கலம், குள்ளபுரம், மங்களா தேவி கோயில் (கேரளம்).

உத்தமபாளையம் வட்டம்

உத்தமபாளையம்

கோடைக்கானல் வட்டம்

பூம்பாறை

பழனி வட்டம்

தண்டாயுதபாணி சுவாமி கோவில்
சூரனூர்
அய்யம் பாளையம்

திண்டுக்கல் வட்டம்

திண்டுக்கல் மலை,
தாடிக்கொம்பு

திருமங்கலம் வட்டம்

புதுவன்

மதுரை மாவட்டத்துக் கோட்டைகள்.

சங்க காலத்திலேயே மதுரை மாநகரில் கோட்டைகள் இருந்தன. இந்த நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களாலும் பெருமக்களாலும் கட்டப்பெற்ற இந்த மண் கோட்டைகள் காலத்தால் அழிந்துவிட்டன,

கல்லுமிழ் கவண்பொறி, கருவிரல் குரங்குகடிக்கும் பொறி, பாம்புப்பொறி, புலிப்பொறி என்ற கருவிகள் பாண்டியநாட்டு மதில் சுவர்களில் பாதுகாப்புக் கருவிகளாக இருந்தன என்பதைச் சிலம்பு கூறும்.

பிற்காலப் பாண்டியர் எடுத்த கோட்டைகளும் அழிந்து விட்டன. கி. பி. 15-ஆம் நூற்றாண்டு தொடங்கி 17, 18-ஆம் நூற்றாண்டு வரை மதுரைப் பகுதியில் வாணாதிராயர், நாயக்கர், பாளையத்தலைவர் ஆகியோர் ஏராளமான கோட்டைகளைக் கட்டினர். இவற்றை மூவகைப் படுத்தலாம்.

மலைமீது கட்டப் பெற்றவை
தரைமீது கட்டப் பெற்றவை
ஆற்றோரங்களில் கட்டப் பெற்றவை

இவையாவும் தமிழக வரலாற்றோடு இரண்டறக் கலந்தன.

இவற்றில் போர்க்கலைப் பயிற்சியாளர் இருந்தனர். போர் வீரர்களுக்குத் தேவையான கருவிகள், உணவு முதலியன யாவும் சேகரித்து வைக்கப்பட்டன. மதுரை மாநகர், கோட்டை நகரமாக ஆங்கிலேயர் ஆட்சிவரையில் திகழ்ந்தது. ஆங்கிலேயக் கலெக்டர் ஒருவர், கோட்டைச் சுவர்களால் விரிந்துவரும் மதுரையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதை உணர்ந்து அவற்றை இடித்தார். ஏற்கெனவே இருந்த கோட்டையின் வாயில்களான கீழவாசல், மேலவாசல், தெற்குவாசல், வடக்குவாசல் என்னும் பெயர்கள் இன்றும் நிலவுகின்றன. சுவர்களை இடித்த பெருமாள் மேஸ்திரி தன் பெயரை நான்கு திக்குகளிலும் பொறித்திருப்பதையும் தெருப் பெயர்கள் உணர்த்தும்.

திண்டுக்கல் கோட்டை

மதுரை மாவட்டத்திலுள்ள கோட்டைகள் பலவற்றுள், திண்டுக்கல்கோட்டை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது.

திண்டு [தலையணை] போலத் தோன்றுவதால் இம்மலைக்குத் திண்டுக்கல் எனப்பெயர் பெற்றது போலும்.* மலையின் நீளம் 360 மீட்டர். அகலம் 180 மீட்டர். உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 400 மீட்டர். தரை மட்டத்திற்கு மேல் 200 மீட்டர்.

---

*திண்டி + கல் = திண்டுக்கல் திண்டி என்பது சமணர்களைக் குறிக்கும். பண்டு சமணர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருக்கக் கூடுமெனத் தெரிகிறது.

முதன்முதலாகக் கோட்டைச்சுவர்கள் சிலவற்றைத் திருமலைநாயக்கர் எழுப்பினார். அதன் பின்னர், இக் கோட்டை பல தடவை கைமாறிற்று.

மைசூர் மன்னன் திண்டுக்கல்லைப் படையெடுத்தபோது திருமலையின் தளபதி இராமப்பய்யன் மைசூரானை முறியடித்தான். சந்தாசாகிப் 1736-ல் திண்டுக்கல்லைத் தனதாக்கிக் கொண்டான். உடனே உத்தமபாளையம் பாளையக்காரனாயிருந்த ராமாநாயக்கன் சந்தாசாயபுவின் படைகளைத் திண்டுக்கல் கோட்டையினின்றும் விரட்டினான்.

1745-ல் மைசூர்த் தளபதி பிர்கி வெங்கட்ராவ் திண்டுக்கல் மீது படையெடுத்து ராமா நாயக்கனை வென்று கோட்டையைப் பிடித்துக் கொண்டான்.

1755-ல் திண்டுக்கல் பகுதிப் பாளையக்காரர் பலரும்திரண்டு வெங்கட்டராவ் மீது போர் தொடுத்தனர். வெங்கட்டராவிற்கு உதவியாக, ஹைதர் அலி மைசூரிலிருந்து வந்து கிளர்ந்தெழுந்த பாளையக்காரர்களை அடக்கினான்.

மதுரையை ஆண்ட யூசுப்கானின் படை 1757-ல் சோழவந்தானிலும் 1760-ல் வத்தலக்குண்டிலும் ஹைதர் அலியை வென்றது.

1767-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் படை ஹைதர்அலியிடமிருந்து திண்டுக்கல் கோட்டையை மீட்டது. மீண்டும் ஹைதர்அலி கைக்கு இக்கோட்டை மாறிற்று. 1783-வரை இந் நிலை நீடித்தது.

மங்களூர் உடன்படிக்கைப்படி திண்டுக்கல் 1784-ல் திப்புவுக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டது. அவனுடைய தளபதி சையத் இப்ரகீம் [1784-1790] இக் கோட்டையைப் பழுது பார்த்துச் செம்மையாக்கி, இன்று நாம் காணும் நிலையை உருவாக்கினான். 1792-ல் திண்டுக்கல் மீண்டும் கிழக்கிந்தியக் கம்பெனியார் வயப்பட்டது.

ஹைதரும் திப்புவும் தங்கள் பகைவர்களைத் துன்புறுத்த இக்கோட்டையில்அமைத்தஇருட்டறைகள்உள்ளன. 1799-அளவில் இக்கோட்டையிலிருந்து கோபால நாயக்கர் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.

இங்குள்ள அபிராமியம்மன் கோயிலில் பாண்டியன் கோனேரிக் கொண்டான், விசயநகரவேந்தர் ஆகியோரின் கல் வெட்டுகளைக் காணலாம். நாணயச்சாலை ஒன்றுஇங்கு இருந்ததாக ஹைதர் அலியின் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது.

திண்டுக்கல் வட்டம்-சித்தியன்கோட்டை

17-ஆம் நூற்றுண்டில் சித்தியன் என்ற பாளையத்தலைவன் இக்கோட்டையைக் கட்டினுன். இன்று பெரும்பகுதி அழிந்து விட்டது. சித்தையன் கோட்டை என்று இவ்வூர்ப் பெயர் வழங்குகிறது.

வேல்வார் கோட்டை

இக்கோட்டை 17.18 ஆம் நூற்றுண்டுகளில் எழுப்பப் பெற்றது. அழிந்த மதில் சுவர்கள் மட்டுமே இன்று உள்ளன. அழிந்த பகுதியில் சிறுகிராமம் ஒன்று கோட்டையின் பெயரால் வழங்கப்படுகிறது. அகழிகள் இருந்த இடம் மண்மேடிட்டுக் காட்சியளிக்கிறது.

வடமதுரைக் கோட்டை

நாயக்கர்களின் கீழ் பணியாற்றிய படைத்தலைவர்கள் இவ்வூர்க்கோட்டையைக்கட்டினர். கோட்டையின்நடுவே உள்ளது சௌந்தர ராஜப் பெருமாள் கோவில். கோட்டை மதில்களின் சிதைந்த சின்னங்கள் புதைபாடுகளுக்கிடையே வெளிப்படு கின்றன. 1975-இல் பொதுதுப்பணித்துறையினர் மாற்று வழிச் சாலை அமைத்தபோது, இடிந்த மதில் சுவர்கள், செங்கற்கள் கிடைத்தன. கோட்டைக் கருப்புசாமி கோவில் ஒன்றும் இங்கு உளது.

வேடசெந்தூர் கைத்தியன் கோட்டை

கைத்தியன் என்ற பாளையக்காரன் இதனை உண்டாக்கி ஞன், கோட்டை மேடு என்ற இடம் இன்று அழிந்து காட்சியளிக்கிறது. கோட்டைக் கருப்புசாமி கோவில் ஒன்று வழிபாட்டில் இருந்து வருகிறது. அழகாபுரி அணைக்கட்டு கட்டு வதால் கோட்டையும் ஊரும் அழியும் நிலையில் உள்ளன.

1977-இல் ஏற்பட்ட கொடுமையான வெள்ளப்பெருக்கால் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டம்-நிலக்கோட்டை

கோட்டையின் சுற்றுச் சுவர்கள் சிதைந்துவிட்டன. கோட்டை நடுவில் உள்ள அரண்மனையில் நாயுக்கர் வழியினர் வசிக்கின்றனர்,

பச்சைமலையான் கோட்டை

பச்சைமலையான் கட்டிய இக் கோட்டையின் சுவடுகள் முற்றிலும் அழிந்துவிட்டன.

பழைய வத்தலக்குண்டு

16,17-ஆம் நூற்றுண்டினது. 1764-ல் யூசுப்கான் நடத்திய போர் வரலாற்று உணர்வினது. நான்கு கொத்தளங்களும் மதில் களும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கம்வரை இருந்தன என்பர்.

தொட்டியன் கோட்டை

தொட்டியன் என்ற நாயக்கர் தலைவன் இதனை உண்டாக்கினான். அழிந்த தடயங்களை இன்றும் காணலாம். ஏற்பட்ட காலம் பதினேழாம் நூற்றுண்டின் இறுதி.

குலேசேகரன் கோட்டை

13, 14 ஆம் நூற்றுண்டுகளில் பாண்டிய மன்னர்கள் இக் கோட்டையைக் கட்டினர். நாயக்கர்கள் செப்பனிட்டுத் திருத்தியமைத்தனர். கோட்டைச் சுவர்கள் மண்ணில் புதைந்தும் காலத்தால் அழிந்தும் போயின. இதன் நடுவே (1) குலசேகர ஈசுவரமுடையார் கோவில், (2)செல்வி அம்மன் கோவில், (3)கருப்பர் கோவில் மூன்றும் எஞ்சியுள்ளன. அகழிகள் இப்போது சிற்றோடையாக மாறியுள்ளன. இவ்வோடைகளை வெட்டும்போது, சுவர்களும் செங்கற்களும் கிடைத்தன. இங்கு வெட்டியெடுக்கப்பட்ட செங் கற்களை வண்டி வண்டியாக ஏற்றி அவற்றைக்கொண்டு வாடிப் பட்டியில் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பெரியகுளம் வட்டம் இராஜதானிக் கோட்டை

நாயக்கர்கள் ஏற்றம் பெற்றிருந்தநாளில் கண்டமனூர் குறுநில மன்னரால் இக்கோட்டை அமைக்கப் பெற்றது. கண்டமநாயக்கன் வழியினர் 19-ஆம் நூற்றாண்டு வரை இங்கு வசித்தனர். முற்றிலும் அழிந்து விட்ட இக்கோட்டைக்குள் பள்ளிக் கூடமும், கருப்புச்சாமி கோவிலும் உள்ளன.

மேலூர் வட்டம்—லிங்கப்ப நாயக்கன்கோட்டை [நத்தம்]

தொந்திலிங்கப்ப நாயக்கன் மகன் முத்துலிங்கப்ப நாயக்கனால் இக்கோட்டை 18-ஆம் நூற்றாண்டு அளவில் கட்டப்பெற்றது. அரண்மனைப் பகுதிகளாக இருந்த வசந்த மண்டபம், நீராவி மண்டபம் ஆகியவற்றின் சிதைவுகள் இன்று உள்ளன.

அழகர் கோவில்

15-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட நின்றான் மாவலி வாணாதிராயன் சமர கோலாகலன் என்ற மன்னன் ஒரு கோட்டையைக் கட்டினான். இக்கோட்டையின் மதில் சுவர்களை அழகர் கோயிலைச் சுற்றி இன்றும் காணலாம். 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இதனைத் திருத்தியமைத்தனர். இப்போது கோவிலும், கோபுரமும், வசந்த மண்டபமும், நந்தவனமும் கோட்டைக்குள் அடங்கி உள்ளன.

I திருமலைநாயக்கர் திருவுருவம் உள்ள இடங்கள்

1. அழகர் கோயில் : 1) பெருமாள் கோயில் திருச்சுற்றில்.
   2) திருமலை நாயக்கர் மண்டபம்.
2. கூத்தியார் குண்டு
3. திருப்பரங் குன்றம்
4. திருப்புவனம்
5. மீனாட்சியம்மன் கோயில் ; 1) அம்மன் கோவில் திருச்சுற்று

		: 2)	முக்குறுணிப்பிள்ளையார் திருவாச்சி
		: 3)	அஷ்டசக்தி மண்டபம்
		: 4)	ராயகோபுரம்
		: 5)	புதுமண்டபம்
6	ஸ்ரீரங்கம்	:	ஆலய அருங்காட்சியகத்தில் தந்தத்திலான உருவம்.
7.	ஸ்ரீவில்லிபுத்தூர்	: 1)	ஆண்டாள் கோவில் மகா மண்டப வெள்ளிக்குரடு.
		2)	வசந்த மண்டபம்.

II திருமலை நாயக்கர் ஆண்ட பகுதிகள்

1. மதுரை மாவட்டம்.
2. இராமநாதபுர மாவட்டம்.
3. திருநெல்வேலி மாவட்டம்.
4. திருவாங்கூர் பகுதிகள்.
5. திருச்சி மாவட்டம்.
6. புதுக்கோட்டை மாவட்டம்.
7. சேலம் மாவட்டம்.
8. கோவை மாவட்டம்.

III திருமலை நாயக்கரின் திருப்பணிகள்

1. அழகர்கோயிலில்

   1 திருமலை நாயக்கர் மண்டபம்.
   2. திருமலை நாயக்கர் உருவச் சிலைகள் உள்ள திருச்சுற்று.
   3. தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட பள்ளியறை-விமானம்.
   4. இராய கோபுரம்.
   5. இடிந்த அரண்மனை.

2. திருப்பரங்குன்றத்தில்

   1. சுப்பிரமணிய சுவாமி கருவறை முன்மண்டபம்.
   2. தங்கமுலாம் பூசப்பட்ட கொடிக் கம்பம்.

3. திருப்புவனத்தில்

1. இப்போது சிதைந்துவிட்ட திருமலை நாயக்கர் மண்டபம்

4. மதுரையில்

1 திருமலை நாயக்கர் மகால்.
2. புது மண்டபம்.
3. புதுமண்டபத்திற்கு எதிரேயுள்ள ராய கோபுரம்.
4. வண்டியூர்த் தெப்பக்குளம்.
5. முக்குறுணிப் பிள்ளையாரும், திருவாச்சியும்.
6 சுவாமி, அம்மன் சந்நிதி வாயிலிலுள்ள துவாரபாலகரின் செப்புத்திருமேனிகள்.
7. விலை மதிப்பற்ற கற்கள் பதித்த கிரீடங்களும் ஆபரணங்களும்.
8. தங்க முலாம் பூசப்பட்ட கொடிக்கம்பங்கள்.
9. திருமலை நாயக்கரின் பெயரால் பல அறக்கட்டளைகள்.
10. நவராத்திரி கொலு மண்டபம்.
11. அஷ்ட சக்தி மண்டபம்.
12. கிளிக் கூண்டு மண்டபம்.
13. இரண்டு பெருந்தேர்கள்
14. மதுரை மாநகர் வீதிகள் திருத்தியமைக்கப் பட்டன.
15. மதுரைக் கோட்டை புதுப்பிக்கப்பட்டது.

5. ஸ்ரீவில்லிபுத்தூரில்

1. ஆண்டாள் கோயில் மகாமண்டபத்திலுள்ள வெள்ளிக் குரடு.
2. திருமலை நாயக்கர் அரண்மனை.
3. வசந்த மண்டபம்.

IV திருமலை நாயக்கரின் கலைப்பணிகள்

1. ஊர்த்துவ தாண்டவர்-புதுமண்டபம்.
2. கிராத மூர்த்தி-மீனாட்சியம்மன் கோயில்.
3. நடனமாடும் காளி-புதுமண்டபம்.
4. குதிரை வீரன்-புதுமண்டபம்.
5. குதிரை வணிகன்-ஆயிரக்கால் மண்டபம்.

6. மீனாட்சி சொக்கர்-தங்கத் திருமேனிகள்.
7. குதிரை வாகனம் (தங்க முலாம்)-மதுரை.
8. வெள்ளை யானை உருவம்-மீனாட்சியம்மன் கோவில்.

V ஆடையும் அணிகலன்களும்

1. முத்தங்கிகள் - நாயக்க மன்னர்கள் கோவிலுக்கு வழங்கியுள்ளனர்.
2. ஸ்ரீரங்க நாதர்க்கு விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அளித்த முத்தங்கி
3. விஜயரங்க சொக்கநாதர் அளித்த தங்கக் கிண்ணம்.
4. மீனாட்சியம்மனுக்கு நாயக்க மன்னர்கள் அளித்த மணி மகுடங்கள்.

VI திருமலை மன்னர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள்

1) குமரகுருபரர்.
2) பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்.
3) சுப்ரதீபக் கவிராயர்.
4) நீலகண்ட தீட்சிதர்.
5) இராபர்ட்-டி-நோபிலி.

இராணி மங்கம்மாள்

திருமலை நாயக்கரின் பேரரான சொக்கநாதரின் மனைவியே மங்கம்மாள். தன்பேரனுகிய விஜயரங்க சொக்கநாத நாயக்கர் சிறு குழவியாக இருந்தமையால் அச்சின்னஞ்சிறு குழந்தைக்கு முடிசூட்டி அதன் சார்பாக நாட்டை ஆண்டாள். கி. பி. 1689-ல் இருந்து 1706 வரையில் இவள் ஆட்சி நடத்தினுள். மதுரை நாட்டில் முதன்முதலில் ஆட்சிபுரிந்த பெண்ணரசி என்ற பெருமை மங்கம்மாளையே சாரும்.

இராணி மங்கம்மாளின் உருவச்சிலை அங்கயர்க்கண்ணி ஆலயத்திற்கு முன்பாகவுள்ள நகரா மண்டபத்திலும், திருப்பரங்குன்றத்திலும் காணப்படுகின்றன. மங்கம்மாளின் வண்ண ஓவியம் மீனாட்சியம்மன் ஆலயத்தில் கிளிக்கூண்டு

மண்டபத்திற்கு எதிரேயுள்ள மண்டபத்தின் விதானத்தில் வரையப்பட்டுள்ளது. இவ்வோவியத்தில் மங்கம்மாள் மீனாட்சி யின் திருக்கல்யாணத்தைக் கண்டு களிப்பதும், அவளிடமிருந்து செங்கோலைப் பெறுவதும், மீனாட்சியம்மை திசைக்காவலருடன் போர் புரிவதும் அழகிய முறையில் தீட்டப் பெற்றுள்ளன.

திருப்பரங்குன்றத்தில் நுழைந்தவுடன்காணப்படும்மண்டபம் மங்கம்மாளால் கட்டப்பட்டது. மீனாட்சியம்மன் கோயிலின் முன் பாகவுள்ள நகராமண்டபமும் மங்கம்மாளால் கட்டப்பட்டதேயா கும். இவை தவிர மதுரையில் தெற்குக் கோபுர வாசலில் உள்ள பழைய கட்டிடமும், மத்திய காய்கறிவிற்பனைக் கூடமும், அதன் அருகே இப்போது பொதுப் பணித்துறை அலுவலகங்கள் உள்ள பெரிய கட்டிடமும் மதுரை பள்ளிக் கட்டிடமும் இன்று காந்தி மியூசியமாக விளங்கும் தமுக்கமும் மங்கம்மாளால் கட்டப்பட்ட கட்டிடங்கள் என்பர்.

நவராத்திரி கொலு:

மகாலில் திருமலைபூபன் நவராத்திரியின் போது ஒன்பது இரவிலும், தன்னைச் சிறப்பாக அலங்கரித்துக் கொண்டு இரத்தின சிம்மாசனத்தில் அமர்வார். சித்திரைத் திருவிழாவின் 8-ம் நாள் மீனாட்சியம்மைக்கு முடிசூட்டு விழா நடத்தி அங்கிருந்துசெங்கோல் பெற்று மகாலுக்குக் கொணர்வார். பின் அதனை அரியணையின் மேல் வைத்து வழிபட்டு மறுநாள் கோவிலுக்கு எடுத்துச் செல்வது வழக்கம். இங்குதான் மாலைநேரங்களில் பணியாளர் களிடம் திருமலை மன்னர் திவர்த்தி வணக்கம் பெறுவதும் வழக்கம். சிற்றரசர்கள் எல்லோரும் இவ்விடத்தில்தான் திருமலை மகீபனுக் குத் திறை செலுத்துவர்.

திருமலை நாயக்கர் அரண்மனை

கி. பி. 1623-ல் இருந்து 1659 வரை மதுரையைத் தலை நகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆண்ட திருமலைநாயக்கரால் இவ்வரண்மனை கட்டப்பட்டது. தென்னிந்தியாவில் எஞ்சியுள்ள பண்டைய அரண்மனைகளில் மிகவும் எழில் வாய்ந்தது இதுவே. இவ்வரண்மனையை திருமலைமன்னர் 1636-ல்கட்டி முடித்தார். இதில் தம் 75-ம் வயதுவரை மனைவியருடன் வசித்தார். திருமலை மன்னர் கட்டியபோது இப்பொழுது உள்ளதைக்காட்டிலும் நான்குமடங்கு பெரிதாக இவ்வரண்மனை திகழ்ந்தது. இவ்வரண்மனையின் பல பகுதிகளைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இங்கு சொர்க்க

விலாசம், ரங்கவிலாசம் என்று இரண்டு முக்கியபகுதிகள்இருந்தன. இவை தவிர பதினெட்டுவித இசைக்கருவிகள் இசைக்கும் இடம் பல்லக்கு வைக்கும் இடம், படைக்கலன்கள் வைக்கும் இடம். பூசை செய்யும் இடம், அரியணை மண்டபம், தேவியரின் அந்தப் புரம், நாடகசாலை, உறவினர்களும் பணி செய்பவர்களும் வசிக்கும் இடம் வசந்தவாவி, மலர்வனங்கள் முதலியன இருந்தன. திருமலை நாயக்கர் சொர்க்க விலாசத்திலும், அவர்தம்பி முத்தியாலு நாயக்கர் ரங்கவிலாசத்திலும் வசித்தனர். இப்பொழுது எஞ்சி யுள்ள பகுதியே சொர்க்க விலாசம் ஆகும்.

சொர்க்க விலாசத்தின் பின்புறம் அந்தப்புரம் இருந்தது. வடக்கில் எழில் வாய்ந்த நாடகசாலை உள்ளது. இதன் மேற்கே ஆயுதசாலையும், வசந்த வாவியும், உற்றார் உறவினர் வசித்த கட்டிடங்களும், வடகிழக்கில் இராஜராஜேஸ்வரி கோவிலும் இருந்தன. நாடகசாலையின் வடக்கில் ஒரு சந்தில் பத்து நெடிய தூண்கள் இன்றும் உள்ளன. இவையும் மறைந்த கட்டிடங்களின் பகுதியே. இவற்றின் மேற்கில் ரங்கவிலாசமும் அந்தப்புரமும் இருந்தன. கிழக்கில்தான் இவ்வரண்மனையின் எழில் வாய்ந்த நுழைவாயில் இருந்தது. அங்கேயே பதினெட்டு வகை இசைக் கருவிகள் இசைக்கும் பகுதிகள் இருந்தன. இவ்வரண்மனையின் பல பகுதிகள் திருமலை மன்னருக்குப் பிறகு அவர் பேரன் சொக்கநாத நாயக்கரால் இடிக்கப்பட்டன. காலப் போக்கில் இன்னும் பல பகுதிகள்அழிந்தன. இருப்பினும் 19-ஆம் நூற்றாண்டு வரை இவ்வரண்மனையின் சுற்று மதில் எஞ்சி நின்றது. அதன் நீளம் 900 அடி உயரம் 40 அடி அகலம் 660 அடி. 1868-ல் சென்னையில் கவர்னராயிருந்த லார்டுநேப்பியார் இவ்வரண்மனையின் எழிலைக் காக்க வகைசெய்தார். 1882-ல் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் சுதைவேலைப் பாடுகளும், வண்ண ஓவியங்களும் தீட்டப்பெற்று சிதைந்த பகுதிகள் பழுதுபார்க்கப்பட்டன. பல ஆண்டுகளாக மதுரை நீதி மன்றங்கள் இங்கு செயல்பட்டுவந்தன. இப்பொழுது தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை இவ்வரண்மனை யின் தொன்மையையும், எழிலையும் பாதுகாத்து வருகிறது.

நாடக சாலை

இவ்வெழில் வாய்ந்த சாலையே நாடகசாலை ஆகும். இங்கு மாலைநேரங்களில் திருமலைமன்னன் தன்மனைவியருடனும் உற்றார் உறவினருடனும், நாட்டிய மகளிர் ஆடும் பலவகைக் கூத்துக்களை தீவர்த்தி வெளிச்சத்தில் கண்டுகளிப்பது வழக்கம். இதன்மேற்கில் இருபுறமும் மேலே செல்வதற்கு மாடிப்படிகள் உள்ளன. இதற்கு மேற்கில் வசந்த வாவியும் வடக்கில் ரங்க விலாசமும், வடகிழக்கில் இராஜ இராஜேஸ்வரி கோயிலும் இருந்தன. இந்நாடக சாலையின் தூண்களையும், மேல் பகுதிகளையும் அழகிய சுதை உருவங்கள் அலங்கரிக்கின்றன.

Extract From W. Somerset Maugham's "The Razor's Edge" re: MADURAI.

"I stayed in Madura for some time. I think it's the only temple in India in which the white man can walk about freely so long as he doesn't enter the holy of holies. At nightfall it was packed with people. Men, women and children. The men, stripped to the waist, wore dhoties, and their foreheads, and often their chests and arms, were thickly smeared with the white ash of burnt cow dung. One saw them making obeisance at one shrine or another and sometimes lying full length on the ground, face downwards, in the ritual attitude of prostration. They prayed and recited litanies. They called to one another, greeted one another, quarrelled with one another, heatedly argued with one another. There was an ungodly row, and yet in some mysterious way God seemed to be near and living.

"You pass through long halls, the roof supported by sculptured columns, and at the foot of each column a religious mendicant is seated; each has in front of him a bowl for offerings or a small mat on which the faithful now and again throw a copper coin. Some are clad; some are almost naked Some look at you vacantly as you pass; some are reading, silently or aloud, and appear unconscious of the streaming through. I looked for my friend among them; I never saw him again. I suppose he proceeded on the journey to his goal".

"And what was that?"

"Liberation from the bondage of rebirth. According to the Vedantists the self, which they call the atman and we call the soul, is distinct from the body and its senses, distinct from the mind and its intelligence; it is not part of the Absolute, for the Absolute, being infinite, can have no parts, but the Absolute itself. It is uncreated; it has existed from eternity and when at last it has cast off the seven veils of ignorance

will return to the infinitude from which it came. It is like a drop of water that has arisen from the sea and in a shower has fallen into a puddle, then drifts into a brook, finds its way into a stream, after that into a river, passing through mountain gorges and wide plains, winding this way and that, obstructed by rocks and fallen trees, till at last it reaches the boundless sea from which it rose."

"But that poor little drop of water, when it has once more become one with the sea, has surely lost its individuality."

Larry grinned.

"You want to taste sugar, you don't want to become sugar. What is individuality but the expression of our egoism? Until the soul has shed the last trace of that it cannot become one with the Absolute."

"You talk very familiarly of the Absolute, Larry, and it's an imposing word. What does it actually signify to you?"

"Reality. You can't say what it is; you can only say that it isn't. It's inexpressible. The Indians call it Brahman. It's nowhere and everywhere. All things imply and depend upon it. It's not a person. It's not a thing it's not a cause. It has no qualities. It transcends permanence and change; whole and part, finite and infinite. It is eternal because its completeness and perfection are unrelated to time. It is truth and freedom."

"Godly!" I said to myself, but to Larry: "But how can a purely intellectual conception be a solace to the suffering human race? Men have always wanted a personal God to whom they can turn in distress for comfort and encouragement".

"It may be that at some far distant day greater insight will show them that they must look for comfort and encouragement in their own souls. I myself think that the need to worship is no more than the survival of an old rememberance of cruel gods that had to be propitiated. I belive that God is within me or nowhere. If that's so, whom or whatlam I to worship-myself? Men are on different levels of spiritual development, and so that imagination of India has evolved the manifestations of the Absolute that are known as Brahma, Vishnu, Siva and by a hundred other names. The Absolute is in Isvara, the creator and ruler of the world, and it is in the humble fetish before which the peasant in his sun-baked field places the offering of a flower. The multitudinous gods of India are but expedients to lead to the realization that the self is one with the supreme self."

தகவல் தந்த அன்பர்கள்

1. திரு. அன்னகாமு, காந்திகிராம்.
2. திரு. தேனிநாதன், பட்டிவீரன்பட்டி.
3. புனித சகோதரர் அந்தோனி எட்வர்டு, இயேசு சபை,
தூய இருதயக் கல்லூரி, செண்பகனூர்.
4. திரு. மா. சந்திர மூர்த்தி எம். ஏ.,
பதிவு அலுலவர், தொல்பொருள் ஆய்வுத்துறை,
திருமலைநாயக்கர் அரண்மனை, மதுரை.
5. திரு. வேதாசலம்,
காப்பாளர், அருங்காட்சிக்கூடம்,
திருமலைநாயக்கர்மகால், மதுரை.
6. திரு. J. இராசரத்தினம்,
தமிழ் வளர்ச்சித் தனிஅலுவலர்,
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மதுரை.
7. திரு. பு. மனோகரன்,
தலைவர், எழுத்தாளர் மன்றம், மதுரை.
8. டாக்டர். திரு. சேஷாத்திரி,
(வரலாற்றுப் பேராசிரியர்)
மதுரைக் கல்லூரி,
ஸ்ரீ முருகன் நடுநிலைப்பள்ளி அருகே,
1, இரத்தினபுரம்–மதுரை-11.
9. பேராசிரியர். திரு. தி.அழகியசொக்கலிங்கம் எம்,ஏ,.எம்,லிட்
உயர் அலுவலர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
10. திரு. க. அருணாசலம்,
தலைவர், காந்தி சமரக் நிதி,
காந்திமியூசியம், மதுரை-20
11. புலவர், வெ. அ. முத்துக்கண்ணன்,
அண்ணா இல்லம், பாரதியார்புரம், மேலூர்-625106
12. திரு. குப்புசாமி, எம், ஏ.
ஆராய்ச்சியாளர், காந்திமியூசியம், மதுரை-20

13. திரு குருசாமி,
தலைவர், காந்தி நிகேதனம்,
கல்லுப்பட்டி.

14. திரு. ஜி. ராஜாராம்,
ஓய்வுபெற்ற அஞ்சல் நிலைய அலுவலர்,
சித்திரக்காரத்தெரு, மதுரை–1.

15. பெரியகுளம். புலவர். திரு. அருளாளன்,
மே/பா. பாலு சைக்கிள் கடை,
தென்கரை, பெரியகுளம்.
(இவருடைய உதவி பெரிதும் பாராட்டத்தக்கது)

16. திரு. ஏ. வி. ஜெயச்சந்திரன்,
இயக்குநர்,
கோயில் கலை அருங்காட்சிக்கூடம், திருப்பதி.

17. திரு. க. லோகநாதன், பி. ஏ,.
பொறுப்பாளர்,
பூதான்நிலங்களை மேம்படுத்துவதற்கான சர்வசேவாபண்ணை,
தமிழ் நாடு சர்வோதய மண்டலம்,
8-மின்சார நிலையச்சாலை,
மதுரை–1.

18. கவிஞர் அரங்க. சீனிவாசன்,
கோவிலூர், (வழி) திண்டுக்கல்.

19. திரு. எஸ். ஆர். பூபதி,
தலைவர், தமிழ்நாடு பூதான யக்ஞ வாரியம் (தமிழக அரசு)
10-குமாரசாமி ராஜா தெரு,
ஷெனாய் நகர், மதுரை.

20. திரு. முத்துக்கோனார்,
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்.

21. திரு. சக்திமோகன்,
ஆசிரியர், "கண்ணகி"
அறிஞர் அண்ணா நகர், மதுரை.

22. திரு முத்துத்தேவர்,
ஓய்வுபெற்ற சீனியர் இன்ஸ்பெக்டர்,
கூட்டுறவுத்துறை, கருமாத்தூர்.

23. திரு. கருப்பையா,
மேலாளர், தமிழ்ச்சங்கம், மதுரை.

24. டாக்டர் ஜெயராமன்,
தமிழ் இயல் பள்ளி,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

25. டாக்டர். இரா. ஜெயராஜன் பி. எச் டி.
பயிர் நோயியல் வல்லுநர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்-626501.

26 திரு. லாசர் அந்தோணிசாமி துரை, பி. ஈ.,
4 ஏ, சப்பாணிகோயில் தெரு,
மதிச்சியம், மதுரை–20

27. பண்டித வித்துவான், மு. உலகநாதன்,
(தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி)
129 தெற்கு வெளி வீதி, மதுரை–1.

28. பேராசிரியர் டாக்டர் சொல் விளங்கும் பெருமாள்,
(வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை)
அண்ணா நகர், மதுரை–18

29. திரு. லெ. பழநியப்பன் எம். ஏ.
'லே-செக்ரடரி', ஐ. ஐ. டி. மருத்துவமனை, சென்னை.

30. திரு. முத்துச்சோணை, நிர்வாக அதிகாரி,
ஹைவேவிஸ் நகரியக்குழு.

31. பேராசிரியர் கோ. சங்கரராசன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசினர் கல்லூரி, கரூர்.

32. திரு. கே. ஆர். சேதுராமன், பி,எஸ்சி, பி. லைப். சயி.
நூலகர், சௌராஷ்டிரக் கல்லூரி, மதுரை.

33. திரு. ஆர். ரெங்கராஜன், எம், ஏ,. பி, டி.
(துணைப்பேராசிரியர், மதுரைக்கல்லூரி)
34-35 பாண்டிய வேளாளர் தெரு, மதுரை-1.

34. திரு. A. அவையன் எம், ஏ,.
செயலர், சர்வோதய ஆசிரமம்,
கணவாய்ப்பட்டி, (வழி) கங்குவார்பட்டி,
மதுரை மாவட்டம்.

35. தியாகி சுப்பிரமணியமுதலியார்,
முதலியார் கோட்டை, சோழவந்தான்-624 214

36. திரு. O. S. சுப்பிரமணியன்,
H. G. A, L. I. C., மேற்குவெளி வீதி, மதுரை-1

37. திரு. டி. ஆர். கோபாலன்,
ஜனசங்கத்தின் தமிழ்நாடு மாநிலக் கூட்டுச்செயலர்,
மதுரை.

38. டாக்டர் பாண்டுரங்கன்,
தமிழ்த்துறை, அ. அ. கல்லூரி, காரைக்கால்.

39. திருமதி, சுகிர்தம் ஜான் அவர்கள்
கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்,
வேதாரண்யம்.
(மதுரை மாவட்டத்துப் படம் வரைந்து உதவியவர்.)

40 திரு. எம். சி. நாராயணசாமி சித்திரலேகா (Artist) அவர்கள்,
2 மாசிலாமணி குடியிருப்பு, மைலாப்பூர். சென்னை-4
(மேலட்டைப்படம் வரைந்த ஓவியர்)

41. திரு. எஸ். இராமன்,
31, சுப்பிரமணிய முதலிதெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15

42. திரு. எஸ். சரவணன்,
சண்முகநாதபட்டணம்-623405

இவர்கள் அனைவர்க்கும் நூலாசிரியரின் நன்றி உரியது.

அகர நிரல்

(எண்கள் பக்கங்களைக் குறிப்பன)

அ

அகரம் 354
அகோபிலமடம் 42
அம்பலகாரன்பட்டி 284
அம்பாத்துறை 8, 361
அம்பலத்தாடி 258
அம்மையநாயக்கனூர் 334-5
அம்மன்பட்டி 328
அம்மாபட்டி 335
அழகர்கோயில் 40, 254, 286
அனுமந்தன்பட்டி 414, 421
அனுமந்தக்குடி 49
அனல்வாதம் 50
அச்சுத்தொழில் 139
அவ்வைதுரைசாமிப்பிள்ளை 116
அரசன் சண்முகனூர் 146
அரசனூர் 18
அரசியல் கட்சிகள் 184
அரக்குப்பண்ணை 7
அலங்காநல்லூர் 339
அய்யம்பாளையம் 359
அய்யலூர் 373
அப்பனூத்து 388
அரியநாதமுதலியார், பார்க்க தளவாய்
அம்மன்கோயில்கள் 452
அச்சம்பத்து 272
அண்டர்வானம் தண்ணீர்ப் பந்தல் 239
அவனியாபுரம் 267
அட்டப்பட்டி 301
அறவாணன், க. ப. 45
அமராவதி 14
அத்திக்கொம்பு 390
ஆடிவீதி 452
ஆவணிமூலத்திருவிழா 57
ஆண்டார் கொட்டாரம் 255
ஆண்டிப்பட்டி 2
ஆலவாய் அண்ணல்கோயில் 2
ஆலயப்பிரவேசம் 178
ஆனைமலை 41, 47, 250
ஆனையூர் 259
ஆயத்தப்பட்டி 254
ஆயிரவைசியர் 90
ஆறுகள் 109
ஆப்பிள் 116
ஆடைக்கலை 132
ஆலைத்தொழில் 135
ஆட்சிப்பிரிவுகள், (மாவட்டத்தின்) 11, 13
ஆங்கிலேயர் ஆட்சி 33
ஆத்தூர் 363, 390
ஆலங்குளம், ஜோசியர் 320
ஆர்க்காட்டுநவாபு 58
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் 21
ஆமூர் 296
ஆறுகள் 13–15
ஆயக்குடி 384
ஆண்டிப்பட்டி 395-6

இராமன், ஓ. பி. 77
இராமானுஜம் 5
இராமநாதபுரம் 3
இராமாயணம் 19
இராமகிரி 376-8
இராமச்சந்திரன், எம். ஜி. ஆர் 161
இராதா, எம். கே. 162
இராஜகம்பீரம் 255
இராமப்பையன் 273
இங்கிலாந்து 2
இராயப்பன்பட்டி 414
இரும்புப்பெட்டித்தொழில் 140
இந்திய அரசின் அலுவலகங்கள் 10
இரயில்போக்குவரத்து 123
இரயில்பாதைகள் 124, 125
இரத்தினம், என். 162
இளையான்குடி 49
இசுலாம் 57
இலக்குவனார் 146
இடப்பெயர்கள் 150
இடையக்கோட்டை 390
இசை 152
இசை ... தூண்கள் 153
இசைக்கல்லூரிகள் 159
இயற்கை மருத்துவம் 169
இலைகளும் தழைகளும் 6
இலவம்பஞ்சு 405
உக்கிரப்பெருவழுதி 20
உரம் 110
உத்தமபாளையம் வட்டம் 401
உத்தமபாளையம் 59, 412-414
உத்தங்குடி 257
உசிலம்பட்டி 64, 312
உயர்நிலைப்பள்ளிகள் 187
உயர்கல்வி 187
உறங்காம்பட்டி 286
ஊராட்சிஒன்றியங்கள் 12
எழுகடல்அக்கிரகாரம் 75
எழுமலை 314
எல்லைகள், மாவட்டத்தின் 10-11
எமக்கலாபுரம் 367
எரியோடு 370
ஏத்தென்ஸ் 1
ஏலக்காய் 3, 112, 405
ஐராவதநல்லூர் 272
ஐராவதேசுவரர்கோயில் 239
ஐவர்மலை 386
ஒட்டர்கள் 104
ஒத்தக்கடை 256
ஒட்டன்சத்திரம் 388-9

க

கக்கன் 77
கரடிப்பட்டி 4, 273
கரடிக்கல் 4, 321
கரந்தமலை 5
கருப்பட்டி 343-4
கருங்காலக்குடி 48, 306
கடம்பவனம் 15
கடம்பமரம் 16
கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி 40
கட்டக்கருப்பன்பட்டி 316
கடல்வாணிகம் 16
கத்தோலிக்கர் 63
கண்ணகிகோயில் 238, 419-421
கண்ணகி வழிபாடு 37
கண்ணனூர் 16
கச்சனம் 38
கரிசல்பட்டி 364
கருணானந்தமுனிவர் 171
கருணாநிதி 174

கருமாத்தூர் 62, 316, 322
கரும்பு 114
கருமுத்து தியாகராசர் 74, 75 134, 136, 146, 149
கருப்பாயிஊரணி 254
கருங்காலக்குடி 5
கருங்கல் 376
கருப்பணசாமி மலை 415
கற்காலக்கருவிகள் 459
கவுண்டர் 91
கலப்பைகள் 110
கல்வெட்டுகள் 4, 53, 56, 142 308, 459-461
கல்தச்சர் 89
கல்லாட்டுப்பட்டி 313
கலைமகள் 55
கலைவிழாக்கள் 163
கல்லுப்பட்டி 315, 323-328, 355
களப்பிரர் 55
கள்ளம்பட்டி 283
கள்ளிக்குடி 322-3
கன்னிவாடி 364
கண்டமநாயக்கனூர் 397
கம்பம் 59, 406-408
கம்பளத்துநாயக்கர் 101
கம்பம் பள்ளத்தாக்கு 416, 417
கம்பன்கழகம் 148
கம்பிரயில், கயிற்றுப்பாதை 125, 405
கபாடபுரம் 20
கடமலைக்குண்டு 398
காட்டெருமை 7
காதக்கிணறு 43, 256
காடுகள் 6
காசிபாளையம் 370
காமயக்கவுண்டன்பட்டி 422-425
காப்பி 111
காப்பீட்டுக்கழகம் 134
காட்டுநாயக்கன்பட்டி 336
கான்சா 31, 32
கான்சாகிப்மரூதி 32
கான்ஸ்டாண்டிநோபிள் 1
காய்கறி 115
கார்காத்தவேளாளர் 86
கார்மேகக்கோனார் 43, 146
காரைக்கேணி 329
காளிமுத்து 162
காந்தியடிகள் 176-8
காந்திகிராமம் 361
காந்திகிராமம்,கானகோஷ்டி 160
காந்திகிராமம் நிறுவனங்கள் 180
காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் 213
காந்திகிராமம் பிற கல்வி நிறுவனங்கள் 218
காந்தி நிகேதனம் 99, 180
காந்தி சேவாசங்கம் 181
கிருஷ்ணதேவராயர் 23
கிருஷ்ணப்ப நாயக்கர் II 27
கிரம்ஸ்புரம் 32
கிருஷ்ணசாமி, டாக்டர் எஸ். 107
கிரேக்க நாடு 19
கிராமதேவதை 64
கிராமதானம் 183
கிரிஸ்டலைன் 18
கிடாரிப்பட்டி 283
கிழவனேரி 321
கிறிஸ்தவம் 9, 33
கிழவளவு 49, 296
கிழக்குயில்குடி 273
கீரனூர் 387
குலசேகரன்கோட்டை 344
குலச்சிறையார் 51
குலசேகரபாண்டியர் 56, 255
குலிமங்கலம் 259
குறிஞ்சி 3

குறிஞ்சிமலர் 17, 427-435
குருவித்துறை 344
குருஞானசம்பந்தர் 37
குங்கிலியம் 7
கும்பக்கரை 394-5
குன்னூர் 401
குச்சனூர் 421
குமரகுருபரர் 37
குமரப்பா, ஜே. சி 177
குடகனுறு 14
குட்டையையசுவாமிகள் 39
குதிரைச்சாணிக்குளம் 321
குப்ளநத்தம் 315
குடைவரைக் கோயில்கள் 458
கூடல் 20
கூடலழகர்கோயில் 43, 239
கூடலூர் 417 418
கூன்பாண்டியன் 52
கூத்தியார் குண்டு 273
கெங்குவார்பட்டி 394
கேரளம் 425, 426
கொங்கு நாடு 3
கொங்கம்பட்டி 284
கொண்டைகட்டி 85
கொடிக்குளம் 253
கொடிமங்கலம் 273
கொடுக்கம்பட்டி 302
கொட்டாம்பட்டி 304
கொற்றவன் கழுகுமேடு 271
கொழக்கொண்டான் 388
கோடைக்கானல் 16. 116. 427-435
கோட்டநத்தம்பட்டி 286
கோட்டையூர் . 311
கோபாலசாமி மலை 331-2
கோபிநாயக்கன்பட்டி 332
கோதைமங்கலம் 386
கோவையும் மதுரையும் 449. 452
கோட்டைகள் 461, 464
கோக்கோ 3, 111. 112
கோவலன் பொட்டல் 228
கோயிலாங்குளம் 316
கோரிப்பாளையம் 60
கோம்பை 415
கோச்சடை 267
கோச்சடையன் இரணதீரன் 267
கோழிப்பண்ணைகள் 117
கோட்டங்கள் 11
கோவில்பட்டி 370

சண்முகம் சகோதரர்கள், டி. கே. எஸ். 162
சண்முகநாதபட்டணம் 49
சங்கநூல்கள் 145
சங்கமித்திரை 56
சங்கரதாச சுவாமிகள் 157
சந்தைகள் 133
சந்தையூர் 330. 338
சக்திவழிபாடு 35
சருகுவலையப்பட்டி 285
சர்க்கரைஆலைகள் 138
சர்வோதய ஆசிரமம் 181
சடாவர்மன் சுந்தரபாண்டியன் 41, 42
சத்திரப்பட்டி 181
சதுரகிரி 314
சந்திரகுப்தன் 19
சடையவர்மன் குலசேகரன் 22
சடையவர்மன் சுந்தரபாண்டியன் I 22
சண்முகநதி 14
சமணர் } 8, 36, 37,40, 44, 45,47,
சமணம் } 49-54, 257, 291, 297

சமண தீர்த்தங்கரர் 252
சமயநல்லூர் 259
சமுத்திராப்பட்டி 311
சாமர்சட் மாம் 245
சாம்பர் 7
சாம்பல்நத்தம் 274
சாது செட்டியார் 104
சாதி இதழ்கள் 165
சாத்தமங்கலம் 285
சாத்தம்பாடி 310
சாணார்பட்டி 367
சாபடூர் 314
சிறுதெய்வவழிபாடு 37
சிறுவாலை 259
சிறுகுடி 311
சிறுபாணாற்றுப்படை 2,
சிறுமலை 117, 5, 6, 357-8
சிற்றண்ணவாசல் 49
சிலப்பதிகாரம் 6
சிலைமான் 274
சிலைமலைப்பட்டி 330
சிரவண பெலகோலா 45, 52,
சிங்கராயர் 63
சிந்துபட்டி 315
சின்னப்பா, பி. யு. 162
சின்னுளப்பட்டி 359-60
சின்னக்கலயம்புத்தூர், 387
சின்னமனூர் 409, 410
சிடிசினிமா 167
சித்தரேவு 362
சித்த மருத்துவம் 172
சித்த மருத்துவநூல்கள் 173
சித்த மருத்துவ ஆராய்ச்சி 173
சித்தையன்கோட்டை 360
சிவலிங்கம் 256
சிவகிரிப்பட்டி 387
சிவாஜி
சீவர மங்கலச் செப்பேடு 41
சீனமங்கலம் 49
சுக்காம்பட்டி 282, 373
சுருளிமலை 6, 421
சுருளியாறு 15
சுற்றுலாவசதிகள் 129
சுருளிப்பட்டி 418, 419
சுப்பராமன், ந. ம. ரா, 77, 83
சுப்பிரமணிய அய்யர், எஸ் 76
சுப்பிரமணிய தாசு 146
சுப்பிரமணிய பாரதியார் 146
சுப்புலட்சுமி, எம். எஸ். 157
சுதந்திர-இந்தியாவில் மதுரை 33-34
சுப்புலாபுரம் 396
சூரக்குண்டு 282
செகவீரபாண்டியர் 146
செக்காணூரணி 321
செல்லம்பட்டி 315
செல்லத்தம்மன்கோவில் 238
செங்கற்பட்டு மாவட்டம் 44
செங்குந்தர் 85
செந்துறை 311
செண்பகனூர் 62, 437-8
செம்பட்டி 362
சேடப்பட்டி 313
சேது சமுத்திரத்திட்டம் 123
சேர்வைக்காரர் 65
சைவம் 36, 40
சைமன் பாதிரியார் 63
சொக்கலிங்கபுரம் 302
சொக்கநாத நாயக்கர் 29
சோதிடக்கலைச் சுவடிகள் 147
சோமசுந்தரபாரதியார் 146
சோழவந்தான் 340-1
சோலைக்காடு 436
சௌராஷ்டிரர் 78
ஞானசம்பந்தர் 54

த

தமிழ்மொழி 1
தமிழர் நாகரிகம் 1
தமிழ்ச்சங்கம் 145
தமிழ்ப்பாவை 148
தமிழ்விழா 149
தமிழ் இசை 160
தமிழ்நாடு வேளா. பல்கலை. 213
தல்லாகுளம் 258
தருக்காக்குடி 305
தளவாய் அரியநாதர் 24–26, 85
தஞ்சாக்கூர் 147
தஞ்சைவாணன்கோவை 147
தத்துநரி 260
தவசிமடை 368
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 21
தாலமி 20
தாடிக்கொம்பு 355–357
தாதுண் பறவை 2
தாண்டிக்குடி 5, 386-7
தாமரைப்பட்டி 253
திராட்சை 116
திராவிட சங்கம் 50
திண்டுக்கல் 81, 345–354
திருப்பரங்குன்றம் 179
திருமங்கலம் 48, 318
திருமலைநாயக்கர் 9, 27–30
திருமலைநாயக்கர் மகால் 242
திருஞானசம்பந்தர் ஆதீனம் 9 37, 41, 55
திருவாசகம் 36, 57
திருப்புறம்பயம் 38
திருமோகூர் 42, 252
திருவாதவூர் 47, 48, 293
திருவள்ளுவர் கழகம் 147
திருவிளையாடற் புராணம் 226, 260
திருஆப்பனூர்க்கோயில் 239
திருப்பாலை 261
திருக்கானை 286
திருச்சுனை 306
திருவேடகம் 341–3
திருவாலயவாய நல்லூர் 344
திரைப்படங்கள் 167
திடியன் 316
தியாகிகள் 178
தியாகராசன், என், ஆர், 99
திப்புசுல்தான் 32–33, 345–54 463
திண்டுக்கல்கோட்டை 462–463
தீபங்குடி 52
துயில் கஞ்சனூர் 38
துளசிராம் 83
துறைமுகங்கள் 123
தும்பைப்பட்டி 301
தும்மலப்பட்டி 338
தூயபீட்டர்பேராலயம் 2
தென்னரசு, எஸ், எஸ். 247
தென்னவன் 6
தெருக்கள், தெருப் பெயர்கள், 131, 244
தெலுங்குபேசுவோர் 91
தெலுங்குச் செட்டியார் 92, 104
தெற்குத்தெரு 285
தென்கரை 394
தேனி 133
தேனிமலை 49
தேனி ஆறு 15
தேனூர் 260
தேரி 3
தேவதானப்பட்டி 394
தேவாரம் 414

தொழில் வளர்ச்சி 244
தொழில்பேட்டை 140
தொடக்கக்கல்வி 186
தொந்திலிங்கபுரம் 305
தொப்பையசாமிமலை 378-9
தொப்பம்பட்டி 387-8
தோல்பதனிடுதொழில் 139
தோடனேரி 260
தோப்பூர் 274

ந

நத்தம் 5, 309
நரசநாயக்கர் 29
நரசிங்கம் 250
நடனகோபாலநாயகி சுவாமிகள் 43 83
நடராசன், வி. கே. சி. 67
நகரத்தார் 74
நக்கீரர் 144, 145
நவ்பத்கானு தெரு 161
நவாப்இராசமாணிக்கம் 162
நல்லமரம் 330
நங்காஞ்சி ஆறு 14
நல்தங்கியாறு 14
நாயக்கர் 92, 94
நாகமநாயக்கர் 23
நாகமலை 276
நாடார் 71
நாட்டுப்பாடல் 6, 106
நாதசுரக்கல்லூரி 159
நாடகத்தமிழ் 161
நாடகக்குழுக்கள் 161
நாள் இதழ்கள் 149, 164
நாயத்தான்பட்டி 284
நாவினிப்பட்டி 286
நிலக்கோட்டை வட்டம் 333
நிலக்கோட்டைநகரம் 334
நிலையூர் 273
நூலக இயக்கம் 150
நூலகங்கள் 244
நெடுநல்வாடை 21
நெடுமதுரை 276
நெடுமாறன் 164
நெடுஞ்சாலை 119
நெய்க்காரப்பட்டி 98, 385-6
நெடுமாறன், பாண்டியன் 21

ப

பல்கலைநகர் 322
பல்கலைக்கழகம் பார்க்க: மதுரை காமராசர்
பல்கணூற்று 18
பட்டிவீரன்பட்டி 71, 116, 338-9
பட்டிமண்டபம் } 34, 55
பட்டிமன்றங்கள் }
பன்னிதெரு 38
பதிற்றுப்பத்து 16
பண்ணைக்காடு 436
பரளி 310
பரிதிமாற் கலைஞர் 76,
பரிபாடல்- 1, 2, 14, 130
பறம்புமலை 5
பழமுதிர்சோலை 46, 292
பழனி 379
பழத்தோட்டங்கள் 107
பழமொழிகள் 152
பன்றிக்குண்டு 4
பன்றிமலை 365-6
பசுமலை 3
பஞ்சப்பட்டி 18
பஞ்சம்பட்டி 363
பஞ்சு 114

பழமையின் சுவடிகள்
மதுரையைப் பற்றி 448
பள்ளபட்டி 303
பள்ளிமடம் 49
பள்ளித்தம்பம் 49
பளியர் 86
பக்கிரி சுவாமிபிள்ளை 162
பரதன் குமரப்பா 177
பரவை 258
பாண்டியர் 19, 143, 440-44
பாண்டியன்நெடுஞ்செழியன் 45
257
பாண்டியன்முடத்திருமாறன் 20
பாண்டித்துறைத்தேவர் 65
பாங்குகள் 134
பார்வை இழந்தோர் 174
பாரபத்தி 275
பாரதம் 19
பாலமேடு 339
பால சமுத்திரம் 385
பாம்பாறு 13
பாக்சைட் 17
பாஸ்கரசேதுபதி 65
பாளையம் 373 - 6
பாளையங்கள் 93
பாளையப் பட்டுகள் 25, 26
பால்வளம் 110
பாலிஜா நாயுடு 99
பாலைவனம் 3
தீபம், பார்த்தசாரதி 245
பாரிஸ்-2
பாறைப்பட்டி 361
பிளினி 20
பிரம்மானந்த சுவாமிமடம் 39
பிராமணர்கள் 75
பிரான் மலை 65
பிரான்ஸ் 2
பிறமலைக்கள்ளர் 65
பிசிராந்தையார் 145
புதுக்குளம் 275
புதுக்கோட்டை 67
புதுமண்டபம் 240
புதுப்பட்டி 260
புகையிலை 113
புலவர்கள் 144
புலையர் 88
புல்லூத்து 275
புளுகம் 16
புதைகுழிகள் 458
புவியியல் பொருள்கள் 141
17, 18
பூ 115
பூம்பாறை 6, 437
பூமிதானம் 182
பூலாம்பட்டி 16
பெரியகுளம் 390–394
பெரியாறு 15
பெரியாழ்வார் 41, 55
பெருந்தொகை 14
பெருமாமலை 436
பேகம்பூர் 59
பேரையூர் 102, 331
பேருந்துப் போக்குவரத்து 121
பேச்சுத்தமிழ் 150
பேரிஜம் ஏரி 17
பொற் கொல்லர் 90
பொதும்பு 260
பொன் மேனி 272
போடிநாயக்கனூர் 94, 401-406
போடி காமன்வாடி 361
போகர் 5
பௌத்தம் 55-6

ம

மங்கம்மாள் 30, 120
மங்கையர்க்கரசி 21, 51
மகரிஷி ஆக்க அறிவு நிலையம் 221
மகாத்மா காந்தி, பார்க்க காந்தியடிகள்
மண்பாண்டங்கள் 139
மண்டலேஸ்வரர் 23
மணவாள மாமுனிவர் 42
மலைகள் இணைப்பு 126
மலையாளத்தான்பட்டி 255
மலம்பட்டி 286
மணப்பச்சேரி 303
மலைத்தொடர் 3
மருதிகள் 9, 22, 23
மஞ்சளாறு 13
மடூர் 367
மருனூத்து 368
மயிலாடும் பாறை 397
மதுரை வீரன் 40
மதுரைக் காஞ்சி 45
மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 61, 74, 107, 146, 166, 188
மதுரைச் சாயம் 82
மதுரைச் சுங்குடிப் புடவை 82
மதுரைத் தாவணி 82
மதுரைத் துப்பட்டா 82
மதுரை ஆலை 135
மதுரை சபாபதி முதலியார் 146
மதுரைக்கோயிலதிருமுறை 153
மதுரை என்னும் பெயரால 223
மதுரை மாநகராட்சி 224
மதுரை நகரின் அமைப்பு 225
மதுராபுரி தெய்வம் 230
மக்கள் தொகை 35
மகிபாலன்பட்டி 49
மஞ்சு விரட்டு 66
மதிச்சியம் 68, 254
மரத்தச்சர் 89
மருத்துவமனைகள் 16, 174
மருத்துவக்கல்வி 175
மருதூர் 300
மதனகோபாலசாமிகோயில் 240
மரஞ்செடி கொடிகள் 15
மகாவம்சம் 21
மழை 453
மாறவர்மன் சுந்தர பாண்டியன் I, 22
மாறவர்மன் சுந்தர பாண்டியன் II
மாலிக்காபூர் 22, 57
மாங்குளம் 56, 256
மாட்டுத்தாவணி 133
மாதவன், செ 164
மாடக்குளம் 272
மாநகராட்சிகள் 13
மாவுத்தம்பட்டி 335
மீனாட்சிபுரம் 257
மீனாட்சிநாயக்கன் 30–31
மீனாட்சியம்மன்கோயில் 3, 147, 230
முத்துவீரப்பநாயக்கர் 39
முத்துக்கிருஷ்ணப்பநாயக்கர் 21
முகமதுயூசுப்கான் 31
முக்குலத்தோர் 64
முதுவர் 87
முத்துச்சாமிபட்டி 284
முளையூர் 310
முஸ்லிம்கள் 59
முதிரைமலை 4
முஸ்லிம்ஆட்சி 31
மூன்றும்குலோத்துங்கன் 24
மூவரைவென்றான் 333
மெகஸ்தனீசு 19
மெய்காட்டுப் பொட்டல் 44

மேலூர் 280
மேலவளைவு 301
மேலக்குயில்பட்டி 276
மேல்நிலைப்பள்ளிகள் 187
மேட்டுப்பட்டி 336
மேலக்கால் 344

வ

வஞ்சிநகர் 305
வருஷநாடு 5, 398–400
வடுகப்பட்டி 394
வண்ணாத்திப்பாறை 7, 421
வரதராசனார், மு. 85
வரகுணபாண்டியன் 22, 41
வத்தலக்குண்டு 76, 336–8
வளையல் வியாபாரம் 100
வண்டியூர் 256
வல்லாளப்பட்டி 285
வன்னிவேலம்பட்டி 330
வட்டங்கள் 11, 12
வக்கம்பட்டி 363
வடமதுரை 371–2
வரலாற்றில் மதுரை மாவட்டம் 444-447
வாணாதிராயர் 24
வாழை 116
வாணிகம் 130
வார, திங்கள் ஏடுகள் 149
வாலாந்தூர் 316
வாகைக்குளம் 322
வாக்ப் வாரியம் 9
வாட்டில் பட்டை 6
விசயநகரஅரசு 23
விசுவநாத நாயக்கன் 25
விருபாட்சி 5, 389
விராலிப்பட்டி 344
வில்பட்டி 436
விளாங்குடி 62, 261
விமானப் போக்குவரத்து 129
விட்டவாசல் 241
விரகனூரர் 275
விளாச்சேரி 275
விவேகானந்தர் பாறை 305
விக்கிரமங்கலம் 320
வீரமாமுனிவர் 9, 145
வீரக்கல் 363
வீரப்பநாயக்கர் 27
வீரபாண்டி 400
வெள்ளாளப்பட்டி 32,
வெலமாநாயக்கர் 103
வேள்ளலூர் 283
வெள்ளரிப்பட்டி 285
வெற்றிலை 115–8
வெள்ளியங்குன்றம் 255
வெம்பரளி 311
வெள்ளோடு 355
வெளிவீதி 2
வெஸ்ட் மினிஸ்டர் அபே 2
வெம்பாடிச்சோலை 4
வேதாரண்யம் 52
வேளாளர் 85
வேளாண்மை 106, 109
வேடசந்தூர் 113, 368-9
வேலப்பர் கோவில் 396
வெளவால் தோட்டம் 255
வைகை 3
வைகை அணை 120, 397
வைத்தியநாத ஐயர், ஏ 76
வைசியச் செட்டியார் 104

ய, ர, ல, ட

யாதவர் 67, 68, 69
யோகாசனப்பள்ளி 221
ராணி மங்கம்மாள், பார்க்க; ம
ராஜம் அய்யர் 76
ராஜநாராயணன் கி. 98
ராஜூக்கள் 105
ராஜாக்கள் 105
ராசன் பி. டி. 146
ருஸ்பீட்டர் 33
ரெட்டியார் சத்திரம் 363–4
ரெங்கமலை 371
லாரிப் போக்குவரத்து 123
லிங்கவாடி 310
டாலமி: பார்க்க தாலமி
டபேதார் 259
டில்லி சுல்தான் 58
டி. வி. எஸ். 122
டொம்பாச்சேரி 426

ஹ, ஜ, ஸ

ஹரிஜனங்கள் 76
ஹார்விபட்டி 276
ஹைதரலி 58
ஹைவேவீஸ் நகரியம் 410–412
ஜலாலுதீன் அஹசன்ஷா 58
ஜார்ஜ் ஜோசப் 63, 177
ஸ்டுடியோ 168

எமது வெளியீடுகள்:

1.	[illegible] உப்புசத்தியாக்கிரகம் (ராஜாஜி, T. R. பத்மநாபன்)	ரூ.	[illegible]
2.	[illegible] பாடல்கள்	ரூ.	2-50
3.	காந்திஜி ஒரு [illegible] (P. [illegible] ஜானகி M. A., B. T.,)	ரூ.	7-00
4.	நேரு [illegible] (அ. லெ. நடராஜன்)	ரூ	10-00
5.	[illegible] (அ. லெ. நடராஜன்)	ரூ	7-00
6	நஞ்சு[illegible] (நெ. [illegible] சுந்தரவடிவேலு)	ரூ.	5-50
7.	விவசாய முதலமைச்சர் (சோமலெ)	ரூ.	20-00
8.	[illegible] வளரும் குழந்தை ([illegible] துரன்)	ரூ	3-00
9.	[illegible] சாரதாதேவி வரலாறு (அ. லெ. நடராஜன்)	ரூ.	15-00
10	பவவேந்திரி (திருமுருக கிருபானந்தவாரியார்)	[illegible]	3-50
11.	தமிழக வரலாறு (பா. மாசிலாமணி M. A.,)	ரூ.	18-00
12	தாயுமானவர் வாழ்வும் வாக்கும் (அ. லெ. நடராசன்)	ரூ	[illegible]
13	மழை வேண்டல் பதிகம்	ரூ	1-25

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம், போன்: 27.